இரா. முருகவேள்

மிளிர் கல்


இரா. முருகவேள்
மிளிர் கல்

மிளிர் கல்

இரா.முருகவேள்

634, லாலிசாலை,

கோவை 641003

94430 14445,

iramurugavel@gmail@com

நன்றி. . .

காங்கேயத்தின் அற்புதமான மாணிக்கம், மரகதம், போன்ற ரத்தினக் கற்களையும், அவை வணிகப்படுத்தப்படும் முறையையும் எனக்கு அறிமுகப்படுத்திய கல்வி மேம்பாட்டுக் கூட்டமைப்பைப் சேர்ந்த ஆசிரியர் சு.மூர்த்தி, மூத்ததோழர் பொடாரன் மற்றும் பெயர் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட அனைத்து நண்பர்களுக்கும் இந்த கற்கள் குறித்த முதல் அறிமுகத்தை வழங்கிய திரு. ஞானபாரதி அவர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள்.

புகாரிலிருந்து கொடுங்கலூர் வரை நானும், நண்பர்கள் அசோக்கும், சிவசுப்பிரமணியனும் மேற்கொண்ட பயணம்தான் இந்த நவீனத்தை எழுதத் தூண்டியது. இந்தப் பயணத்தில் பேருதவியாயிருந்த கும்பகோணம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிற்சங்க நிர்வாகி தோழர் மதியழகன், தமிழ் பேராசிரியர் வி.பாரி, தர்மக்குளம் வள்ளலார் மன்ற கிருஷ்ணமூர்த்தி, ஆகியோருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமணர் குகைகளையும், மதுரையையும் எனக்கு அறிமுகப்படுத்திய தோழர் எழுத்தாளர், வழக்குரைஞர் கனகவேல், எண்ணற்ற கேள்விகளுக்கு பொறுமையுடன் விடையளித்த பேராசிரியரும், தொல்பொருள் ஆய்வுத்துறை நிபுணருமான சாந்தலிங்கன் ஐயா ஆகியோருக்கு எனது நன்றிகள்.

கடக்கவே முடியாததாகத் தோன்றிய நெருக்கடிகளைக் கடக்க உதவிய டாக்டர் குணசேகரன், வழக்குரைஞர் தோழர் மனோகரன், நண்பர்கள் வனத்துறை விஞ்ஞானி சேகர், பனைரவி என்கிற ரவிச்சந்திரன் எனது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு எழுதுவதற்கு நேரம் வழங்கிய பத்ரி என்று நாங்கள் அழைக்கிற பழனிச்சாமி மற்றும் திரு. தேவராஜு ஆகியோருக்கு எனது நன்றிகள். மிகக்குறுகிய காலத்தில் அற்புதமாக முகப்போவியம் தீட்டிய தோழர் கார்த்திக்கும், பேசபப்டும் பொருள் வாக்கிய அமைப்பு, முகப்போவியம், அட்டைவடிவமைப்பு வரை ஒவ்வொரு அம்சத்திலும் அக்கறை எடுத்துக் கொண்டு, ஆலோசனை வழங்கிய தோழர் ஆதவனுக்கும் ஆளுக்கொரு

மூட்டை மிளிர் கல்லைக் கொடுக்க மனது துடித்தாலும் நன்றியுடன் நிறுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இறுதியாக எனது எழுத்து முயற்சிகள் அனைத்திலும் உறுதுணையாக இருக்கும் இருவரைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒருவர் இந்நூலைத் தொடங்கியதிலிருந்து பதிப்பிப்பது வரை ஒவ்வொரு கட்டத்திலும் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்ட தோழர் குணா. தொடர்புகளாக இருந்தாலும், புத்தகங்களாக இருந்தாலும், வேறென்ன தேவையாக இருந்தாலும் குணாதான். இன்னொருவர் முதல் வாசகரும், ஆலோசகரும், இரக்கமற்ற விமர்சகருமான என் மனைவி பானுமதி.

நாட்டுப்புறப் பாடல்களில் சிலப்பதிகாரம் என்ற தலைப்பில் தாயம்மாள் அறவாணன் அவர்கள் தொகுத்த பாடல்களே இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. நூலில் கொடுக்கப்பட்டுள்ள சிலப்பதிகாரக் கதைப்பகுதிகள் புலியூர் கேசிகன் உரையின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்களே.

CSIR national Institute of Science and Communication and Information resources வெளியிட்ட Precious minerals in everyday life என்ற நூலும், Traditional gemstone cutting technology of Kongu region, tamilnadu என்ற கே. ராஜன், என்.அதியமான் எழுதிய கட்டுரையும் ரத்தினக்கற்கள் குறித்து பல நல்ல தகவல்களை அளித்தன. மயிலை சீனி வேங்கட சாமியின் துளுநாட்டு வரலாறு மற்றும் அவரது பல கட்டுரைகள் இந்நூலை எழுத உதவியாக இருந்தன. Heart of darkness-National labour committe Pitsburg-ன் அறிக்கைகளும் இந்நூலுக்கு பேருதவி புரிந்திருக்கின்றன.

இரா.முருகவேள்

1

கடந்த இரண்டு மாதங்களாக ரூபாய் மதிப்பு குறைந்து வருவதால் அரசு தங்கம் இறக்குமதிக்கு எதிரான நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. இது தங்க வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைப் பாதித்துள்ளது. கீதாஞ்சலி டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ் இன் பங்குகள் 650 ரூபாயிலிருந்து 89 ரூபாயாகக் குறைந்துள்ளன.

-டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி 26.10.2013

கடந்த இருபது ஆண்டுகளில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு ஒரு உருப்படியான வைரம் கூட கண்டெடுக்கப்படவில்லை. உலக வைர உற்பத்தியில் கணிசமான சதவீதத்தை தந்துவரும் ஐவரிகோஸ்ட், கானா, சியாராலியோன் ஆகிய நாடுகள் உள்நாட்டுப்போரால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே மக்கள் வைரத்தைவிட்டு மாணிக்கம், மரகதம், நீலம், கோமேதகம் போன்ற விலையுயர்ந்த கற்களுக்கு மாறி வருகின்றனர் என்று பிஸினஸ் ஸ்டாண்டர்டு இதழ் கூறியுள்ளது.

இப்போது பன்னாட்டு நிறுவனமான எமரால்டு ஃபீல்டு நெருக்கடிக்குள்ளாகியுள்ள ஜே.கே டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ்ஸில் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. இந்தியாவில் மாணிக்கம், மரகதம் போன்ற விலையுயர்ந்த கற்களின் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எமரால்டு ஃபீல்டு மேலும் இந்த கற்களின் விற்பனையை உயர்த்த முயலப்போவதாக அறிவித்துள்ளது.

ஜே.கே. டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ் இணையதளத்திலிருந்து

பல்கலைகழக அரங்கு ஏறக்குறைய முக்கால் பாகம் நிறைந்திருந்தது. தமிழ்த்துறைத் தலைவரின் பெருமிதம் நிறைந்த புன்முறுவல் இந்தக் கூட்டம் அவருக்கு நிறைவளித்தது என்பதைக் காட்டியது. பேராசிரியர் ஸ்ரீகுமார் நேமிநாதன் பண்டை தமிழகத்தின் வணிகம் பற்றி தனது உரையைத் தொடங்கினார். வாரிவிடப்படாத அடர்த்தியான தலைமுடி கருமையாக இருக்க, தாடி நரையோடியிருந்தது. வெளுத்துப்போன ஜீன்சும், ஏறக்குறைய அதே நிறத்தில் சட்டையும் அணிந்திருந்தார். சட்டைக்கை கவனக்குறைவாக மடிக்கப்பட்டு முழங்கை

வரை பின்னால் தள்ளப்பட்டிருந்தது. தொந்தியோ, ஊளைச்சதையோ இல்லாத அவரது நடுத்தர உடல்வாகுக்கும், ஆழ்ந்த முகத் தோற்றத்துக்கும் இந்த உடை ஏதோ ஒருவிதத்தில் பொருத்தமானதாகத் தோன்றியது. நீளமாகவும், தெளிவாகவும் இருந்த அவரது கண்கள் பதற்றமின்றி கூட்டத்தை நோட்டம் விட்டன. நன்றி, வணக்கம் என்று எந்த சடங்கும் இல்லாமல் நேரடியாகப் பேசத்தொடங்கினார்.

“இந்த தமிழ்நாட்டோட வெளிநாட்டு வணிகம்ங்கிறது எப்போ தொடங்கிச்சுங்கிறதை தெளிவா சொல்லமுடியாது. ஆனா கிடச்ச பொருள்களை வெச்சு சில முடிவுகளுக்கு வரலாம்.” லேப்டாப்பை இயக்கிக் கொண்டிருந்தவரை நோக்கி கையசைக்க, திரையில் கறுப்பு நிறத்தில் கட்டையை போல் ஒரு பொருள் தெரிந்தது.

“இதன் பெயர் ஆன்ட்டனா வாள். மெசபடோமியாவைச் சேர்ந்தது. தமிழ்நாட்டில நாலு இடங்கள்ல இது கெடச்சிருக்கு.”

திரையில் அந்த வாளின் பளிச்சிடும் உண்மை வடிவம் அனிமேஷனில் காட்டப்பட்டது.

“இந்த வாள் வெண்கலத்தால் செய்யப்பட்டது. ஆன்ட்டனா என்ற பூச்சியின் மீசை மாதிரி இருக்கறதால இப்படிப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கு. சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த வெண்கல யுகத்தைச் சேர்ந்தது. அதாவது அந்தக் காலத்துல இரும்பு பயன்பாட்டுக்கு வரல. அதே சமயம் மெசபடோமியாவில இருந்த ஒரு பழம் கோவில்ல கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தேக்குமரம் மலபார் பகுதியைச் சேர்ந்ததா இருக்கலாம்னு சொல்றாங்க. சமீப காலம் வரைக்கும் இந்தியாவத் தேடி வந்தவங்களுக்கு முக்கியமானதா இருந்தது தேக்குமரம். அப்புறம் மிளகு. கூடவே இன்னும் ஒண்ணு” பேராசிரியர் கொஞ்சம் இடைவெளி கொடுத்ததும் திரையில் கண்ணைப் பறிக்கும் சிவப்பு, பச்சை, நீல வண்ணங்களில் சதுரமாகவும், உருண்டையாகவும் செதுக்கப்பட்ட கற்கள் தோன்றின.

“இதுக்கு பிரெஷ்யஸ், செமி பிரெஷ்யஸ் ஸ்டோன்ஸ்னு பேரு. தமிழ்ல மாணிக்கம், மரகதம், கோமேதகம்னு சொல்றோம் இல்லையா அதுதான். ஆங்கிலத்துல ச஻பையர், ரூபி, எமரால்டு, அக்வாமெரைன். இந்த மாதிரி

கற்களுக்குப் பொதுவான பெயர் ரத்தினம். புறநானூறு மாதிரி நமது இலக்கியங்கள் இந்த வகைக் கற்களை மிளிரமணிகள்-ன்னு சொல்லுது. அதாவது மிளிரும் கற்களை சிறியதாக வெட்டிப் பட்டைதீட்டிச் செய்யப்பட்ட மணிகள். கிராமப்புற வழக்குல நீலக்கல், பச்சைக்கல்- னு சொல்வாங்க. இதுவும் ஒருவகைக் கல்தான். ஆனால் ஒளி ஊடுருவக்கூடியது. சிவப்பு, நீலம், பச்சைன்னு பல நிறங்கள்ல இருக்கும். சாதாரணப்பாறையை விடக் கடினமானது. பட்டை தீட்டினா, சிற்பமாச் செதுக்கினா அற்புதமான அழகோட இருக்கும். வைரம் மாதிரி இதுவும் ரொம்ப அரிதாகவே கெடைக்குது. இதனோட விலை தங்கத்தை விட அதிகம், வைரத்தைவிடக் குறைவு. ரூபி எனப்படும் மாணிக்கக் கற்களின் விலை சில சமயம் வைரம் அளவுக்கே இருக்கும். இந்தியாவில ஒரிஸா, தெலங்கானா அப்புறம் தமிழ்நாட்டில கொங்குநாட்டிலயும் தான் இது கிடைக்குது. இந்தக் கற்கள் பாறை மாதிரியும் கிடைக்கும். உருளை வடிவத்திலும் கிடைக்கும். இதை சின்னச் சின்னதா வெட்டி பட்டை தீட்டி நகைகள்ள பதிச்சுக்குவாங்க. இப்பவும் இந்த வழக்கம் இருப்பது உங்களுக்குத் தெரியும். சில சமயம் கல்லோட அளவை வெச்சு அதில் கடவுள் உருவங்கள் மாதிரி சிற்பங்கள் செய்வாங்க. சில கோவில்ல மரகத லிங்கம் இருக்கு, அது பலகோடி பெறும்னு சொல்லப்படுவதைக் கேள்விப்பட்டிருப்பீங்க. அது இந்தக் கற்களால செய்யப்பட்டதுதான். இந்த கற்களுக்கு கி.மு.முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டு வரைக்கும் ரோம்ல பெரிய மார்க்கெட் இருந்தது. ரோமானியப் பெண்கள் இந்தக் கற்கள் மேல பைத்தியமா இருந்தாங்க. அதிலும் பெரில் என்கிற கடல் நீலக் கற்கள் அவங்களுக்கு ரொம்பப் பிடிக்குமாம். உலகம் முதன்முதலா இந்த கற்களைப் பார்த்தது கொங்குநாட்ல இருக்கற காங்கேயத்திலதான். இந்தக் கற்களுக்காக ரோமானிய வணிகர்கள் தென்னிந்தியர்களுக்கு மிகவும் பிடித்த மத்தியத் தரைக்கடல் பவழங்களையும், தங்க நாணயங்களையும் கொண்டுவந்து கொட்டினாங்க. ரோமுடைய செல்வங்கள் இந்த வியாபாரத்தில் விரயமாவதாக பிளினி என்கிற வரலாற்று ஆசிரியர் சொல்கிறார். இந்த கற்களுக்காகத்தான் நாகபட்டினத்திலிருந்து வஞ்சி துறைமுகம் வரைக்கும் ராஜகேசரி பெருவழிங்கிற பெரிய ஹைவேயே இருந்தது. ராஜகேசரிப்

பெருவழிங்கிறது பின்னாடி கொடுத்த பெயரா இருக்கலாம். இந்த பெருவழி ஓரம்தான் தமிழ்நாட்டிலயே அதிகமான ரோமானிய நாணயங்கள் கிடைச்சிருக்கு....இன்னைக்கு வரைக்கும் அமெரிக்கா, ஐரோப்பால மக்கள் இந்தக் கற்கள் மேல தீராத காதலோட இருக்காங்க.. . ”

“கண்ணகி கால் சிலம்புல இருந்த மாணிக்கப் பரல் இதுதானா?” ஒரு இளைஞன் கேட்டான்.

“இதேதான். ”

சொற்பொழிவு முடிந்தவுடன் பேராசிரியரை வழக்கம்போல் ஒரு கூட்டம் சூழ்ந்து கொண்டது. ஸ்ரீகுமார் வெளியே சாலைக்கு வந்து பாக்கெட்டிலிருந்து ஒரு கோல்ட் ஃபில்டரை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார். தும்பைப்பூ போன்ற வெள்ளை வேட்டியும், ஜிப்பா போன்ற சட்டையும் பின்னோக்கி வாரிவிடப்பட்டிருந்த வெள்ளி முடிகளும் கொண்டிருந்த ஒரு தமிழாசிரியர் இந்த மரபு மீறலால் அதிர்ச்சியடைந்தார். ஸ்ரீகுமார் கூறிய செய்திகள் பெரும்பாலும் ஏற்கெனவே அவருக்குத் தெரிந்தவைதான். மிளிரமணி பற்றிப் பேசும் ஏராளமான சங்க இலக்கிய செய்யுட்கள் அவருக்கும் மனப்பாடம். என்றாலும் தமிழகத்தின் பழம் வணிகச்சிறப்பை இன்னொருமுறை பேசக்கேட்பது அவருக்கு மகிழ்ச்சியளித்தது. ஆனால் ஸ்ரீகுமாரின் பேச்சுவழக்குத்தமிழ் குறித்து அவருக்கு விமர்சனங்கள் இருந்தன. கொச்சைவழக்கு என்பது தமிழின் அழகையும், கம்பீரத்தையும் சிதைக்கக்கூடியது என்ற எண்ணம் கொண்டிருந்தார் அவர். அது குறித்து நட்பார்ந்த முறையில் பேசலாம் என்று நினைத்தவருக்கு ஸ்ரீகுமாரின் விட்டேற்றியான தன்மை விரும்பிய நெருக்கத்தைத் தரவில்லை. தவிர சிகரெட் .

சற்று நேரத்தில் கூட்டம் கலைந்தது. அமைப்பாளர் ஒருவர் அவருக்கு ஆட்டோ பிடிக்க நகர்ந்தார். அப்போது கரும்பச்சை சட்டையும், கருப்பு ஜீன்ஸும் அணிந்திருந்த முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன் அமைப்பாளரை அணுகினான். தான் பேராசிரியரை எங்கே கொண்டு போய்விட வேண்டுமோ அங்கே கொண்டு சென்று விட்டுவிடுவதாகக் கூறினான்.

“என்ன வண்டி வெச்சிருக்கீங்க?”

“இனோவா போதுமா?”

இளைஞன் காரின் கதவைத் திறந்து டிரைவர் சீட்டில் ஏறிக்கொண்டு ஸ்ரீகுமாருக்கு மறுபுறக் கதவைத் திறந்துவிட்டான். ஸ்ரீகுமார் கதவருகே வந்தார். தமிழாசிரியர் அவரது பேச்சுவழக்குத் தமிழ் குறித்துக் கொஞ்சம் பேசவேண்டும் என்றார்.

“இன்னொருநாள் பேசலாமா?” என்றார் ஸ்ரீகுமார். எப்படிப் பேச வருகிறதோ அப்படிப் பேசிவிட்டுப் போகவேண்டியதுதானே என்ற எண்ணம் கொண்டிருந்த பேராசிரியருக்கு பேச்சு நடை குறித்த விவாதங்களில் அவ்வளவு ஆர்வமில்லை.

“இன்றே முகநூலில் பேசலாம்” என்று தீர்மானகரமாகச் சொன்னார் தமிழறிஞர். இரை தப்பிச் செல்கிறதே என்ற வருத்தமும், சினமும் அவரது கண்களில் தெரிந்தன.

“ ஏதாவது பிரச்சனையா சார்?” டிரைவர் சீட்டிலிருந்த இளைஞன் சிரிப்புடன் கேட்டான்.

“வழக்கம் போலத்தான். அது வந்து....” இது பற்றிப் பேச பேராசிரியர் தயாராவது அவரது புருவ நெரிப்பிலிருந்து தெரிந்தது.

டக்கென்று பின்புற சீட்டிலிருந்து முளைத்ததுபோல் தோன்றிய ஒரு உருவம் “ சார், ஐ அம் ஜெயக்குமார்” என்று கைநீட்டியது. குளிர்சாதனப்பெட்டியிலேயே பிறந்து வளர்ந்ததுபோல் பளபளப்பாகத் தோன்றிய இருவரையும் பேராசிரியர் குழப்பத்துடன் பார்த்தார்.

“ஸ்டூடன்ஸா?”

டிரைவர் சீட்டிலிருந்த இளைஞன் திரும்பவும் சிரித்தான்.

“ஒருவிதத்தில் அப்படித்தான். ஜே.கே.டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ்ல வேலை செய்யறோம். எங்களோட முக்கியமான ஏரியா காங்கேயம். இப்ப கம்பெனியோட மேனேஜ்மென்ட் மாறிடுச்சு இல்ல. பக்கத்திலிருக்கிற மினரல் ரிச் ஏரியாக்களைப் பத்தி தெரிஞ்சுக்க விரும்புறோம். வி வாண்ட் சம்படி வித் புரொஃபஷனல் வியூஸ். நாங்க கொஞ்சம் டிரை பண்ணினோம். ஆனா பேசறவங்க எல்லாம் கல்ச்சர், ப்ரேவரி பத்திதான்

பேசறாங்க. வி ஆர் ஃபெட் அப் வித் திஸ் ஸ்டஃப்”

ஜே.கே. டைமண்ட்ஸ் ஒரு பகாசுர நிறுவனம். உலகமயமாக்கலுக்குப் பிறகு சங்கிலித் தொடராக இந்தியாவெங்கும் ஏராளமான நகைக் கடைகளைத் தொடங்கியது. தற்போது ஏதோ காரணத்தால் அது சிக்கலுக்குள்ளாகி வந்தது.

பேராசிரியர் அவர்களை உற்று நோக்கினார். “எங்கிட்டருந்து உங்களுக்கு என்ன வேணும்?”

“அப்சொல்யூட்லி நத்திங். நீங்க உங்க ஆய்வை தொடர்ந்து செஞ்சாப் போதும்.”

2

நுங்கம்பாக்கம் மெட்ரோ ஸ்டேஷனிலிருந்து முல்லை வெளியே வந்த போது மாலை வெயில் சுள்ளென்று அடித்துக் கொண்டிருந்தது. கூட்டம் வியர்வை கசகசப்பும், அவசரமுமாக தெருவில் பாய்ந்து கொண்டிருந்தது. அவள் தன்னை முந்திச்செல்ல முயன்ற அனைவருக்கும் வழிவிட்டபடி மெதுவாக நடந்தாள். நவீனுக்கு போன் செய்யலாமா என்று நினைத்தவள் உடனே முடிவை மாற்றிக் கொண்டாள். நிதானமாக வேடிக்கை பார்த்தபடி நடந்தவள் மீது சில இளைஞர்கள் கண்ணோட்டிவிட்டு நகர்ந்தனர். முல்லைக்கு எப்போதுமே தனது நிறம் குறித்து கொஞ்சம் தாழ்வு மனப்பான்மை உண்டு. பஞ்சாபிகள், உ.பி.காரர்கள் நடுவிலேயே பிறந்து வளர்ந்ததாலோ என்னவோ. இப்போது தமிழ்நாட்டில் தான் சிவப்பாகி அழகிப் பட்டியலில் சேர்ந்துவிட்டது போலத் தோன்றியது. டெல்லியில் பலமுறை அம்மா தலையில் குட்டி சொல்லியிருக்கிறாள். “கலர் கலருங்கற, நிறத்துல என்னடி இருக்கு? இந்த மூஞ்சிகளைப்பாரு. ஒருத்தியாவது திருத்தமா மூக்கும் முழியுமா இருக்காளா?”

கண்ணகி கூடக் கருப்புத்தான் என்று ஏதோ ஒருபாட்டில் கேட்டது நினைவுக்கு வந்தது. ஆனால் சிலப்பதிகாரத்தில் அப்படி எதுவும் இல்லை. . . அவள் சிரித்துக் கொண்டாள். என்ன நினைத்தாலும் எங்கே சென்றாலும் இந்த நினைவு வந்து கொண்டே இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று நாட்கள்தான். தன் கனவு நனவாகிவிடும். . . தமிழ்நாட்டின் பழம் பெரும் நகரங்கள் வழியே கண்ணகியும், கோவலனும் சென்ற வழியில் பயணம் . . . இது உண்மையிலேயே தொடங்கிவிட்டது என்று இப்போது கூட அவளுக்கு நம்பமுடியவில்லை.

முல்லை ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் ஜர்னலிஸம் படிக்கும் போது நவீன் அவளுக்கு சீனியர். அங்கே படிக்கவரும் தமிழர்களுடன் பழக்கம் செய்து கொள்ள முல்லை எப்போதும் விரும்புவாள். ஆனால் தமிழ்நாட்டையும் தமிழையும் பற்றிப் பேச விரும்புபவர்கள் சிலர்தான். தமிழ் மீதான முல்லையின் பற்றுக்கும், தமிழர்கள் மீதான நவீனின் அன்புக்கும் நிறைய வேறுபாடு இருந்தது.

இருந்தாலும் இருவரும் நண்பர்களாகிவிட்டார்கள். நவீன் பின்பு புனா திரைப்படக் கல்லூரி என்றெல்லாம் சுற்றிவிட்டு சமூக செயல்பாட்டாளனாக மாறிவிட்டான் என்று கேள்விப்பட்டிருந்தாள். இப்போது சிலப்பதிகாரத்தில் கூறப்படும் இடங்களைப் பற்றி ஆய்வு செய்யவும், ஆவணப்படமெடுக்கவும் முடிவு செய்தபோது முதலில் நினைவுக்கு வந்தவன் நவீன்தான். அவன் பார்வைக்கும், தான் எடுக்க விரும்பும் ஆவணப்படத்துக்கும் ஒத்துப்போகுமா என்றெல்லாம் சந்தேகம் இருந்தாலும் அவளால் வேறு யாரையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. வலிந்து தன் அரசியலைத் திணிக்க அவன் ஒருபோதும் முயன்றதில்லை என்ற நம்பிக்கையில்தான் கேட்டாள். முதலில் சற்றுத் தயங்கியவன் பின்பு ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற ஒப்புக்கொண்டான்.

தான் இன்று சென்னையில் வந்து சந்திப்பதாகச் சொன்னதும் அவன் சற்றுக் குழம்பிப் போனதுபோல முல்லைக்குத் தோன்றியது. இதெல்லாம் எங்கே நடக்கப் போகிறது என்ற எண்ணத்தில் ஒப்புக்கொண்டவன் மாட்டிக்கொண்டான் என்று நினைத்தவளுக்கு சிரிப்பு வந்தது.

ஏதோ போராட்டத்தை படமெடுப்பதாக அவன் சொல்லியிருந்தான். அவனை தொந்தரவு செய்யக்கூடாது என்பதோடு தமிழ்நாட்டு போராட்டம் எப்படி இருக்கும் என்று பார்க்கும் ஆசையும் அவளுக்கு இருந்தது. இரண்டாயிரத்துப் பனிரெண்டு டிசம்பரில் நிர்பயா பாலியல் பலாத்காரத்தை ஒட்டி டெல்லி இந்தியா கேட், ரைசினா ஹில்லில் தொடங்கி பாராளுமன்றத்துக்கும் ராஷ்ட்ரபதிபவனுக்கும் இடம் பெயர்ந்த போராட்டங்கள் அனிச்சையாக நினைவுக்கு வந்தன. அப்போது சண்டே கார்டியனில் வேலை செய்து கொண்டிருந்த முல்லை செய்தி சேகரிப்பவளாக மட்டுமல்லாமல், உணர்வுபூர்வமாகவும் போராட்டங்களில் கலந்து கொண்டாள். எலும்பைத் தொடும் குளிரில் போலீஸ்காரர்கள் பீச்சியடித்த பனிக்கட்டி போலக் குளிர்ந்திருந்த நீரில் நனைந்தாள். டெல்லி விழித்தெழுந்த அந்த நாட்கள் . . . அந்த நாட்களுக்கும் தனது இந்தப் பயணத்துக்கும் ஏதாவது தொடர்பிருக்குமா? தன் வாழ்க்கையில் இதுவரை நடந்திருந்த எல்லாச் சம்பவங்களும் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பயணத்தை நோக்கியே நகர்த்தி வந்திருப்பதாகத் தோன்றியது. அவள் மெதுவாக வழிகேட்டுக்

கொண்டே நடந்தாள். யாரோ இருவரது கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் என்று கையால் எழுதப்பட்ட ஒரு சில சுவரொட்டிகளும் வழிகாட்டின. வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் நிறைய போலீஸ் தலைகள் தென்பட்டன. போலீஸ்காரர்களைவிட கொஞ்சமே கொஞ்சம் அதிக நபர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். பொழுது சாய்ந்துவிட்டாலும் வெக்கை இன்னும் மீதியிருந்தது. கூட்டத்திற்கு முன்பு ஒருவர் வியர்த்து வழிய ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

முல்லை ஏமாற்றமடைந்தாள். இவ்வளவு சிறிய கூட்டத்தில், முடியும் நேரத்தில் தனியாகப் போய் கலந்து கொண்டு எல்லாருடைய கவனத்தையும் கவர அவள் விரும்பவில்லை. ஒரு இருபதடி தொலைவில் சுவரில் சாய்ந்து நின்றுகொண்டாள். கருப்பு சட்டையும், நீலநிற ஜீன்ஸும் அணிந்திருந்த ஒரு உயரமான இளைஞன் கூட்டத்தை சுற்றிச்சுற்றி வந்து படமெடுத்துக் கொண்டிருந்தான். சற்றே சுருண்ட தலைமுடி கலைந்திருந்தது. நவீனின் முகத்தில் எப்போதும் ஒரு தீவிரம் தெரியும். இந்த எதிர் வெயிலில் அது அதிகமாகி அவன் முகத்தை சுழித்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. இருக்காதா பின்னே, ஊர்க்கவலை எல்லாம் இவனுக்குத்தானே! என்று நினைத்து முறுவலித்துக் கொண்டாள்.

முல்லையைத் திரும்பிப் பார்த்த அந்த இளைஞன் கூச்சமே படாமல் கூட்டத்தை விட்டு விலகி அவளை நோக்கி வந்தான்.

“ என்ன இப்படி வந்திட்ட? கூட்டத்தை முடிச்சிட்டு வா. நா காத்திட்டிருக்கேன். ஏதாவது நினைக்கப் போறாங்க.” என்றாள் கொஞ்சம் சங்கடத்துடன்.

நவீன் சிரித்தான். “கூட்டத்திற்கு போலீஸ் குடுத்த டைம் எப்பவோ முடிஞ்சு போச்சு. தோழரையும், மைக்கையும் பிரிக்கிறதற்கான போராட்டம்தான் இப்போ நடந்திட்டிருக்கு. அப்புறம் நாங்க எல்லாம் ரெண்டு நாளா ஒண்ணாத்தானே இருக்கோம்”

முல்லை பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு “அப்ப போலாமா?” என்றாள்.

“போயிட்டே இருக்கோம்.” என்ற நவீன் கூட்டத்தில் யாரையோ பார்த்து கையசைத்துவிட்டு நடக்கத் தொடங்கினான்.

அவள் கூந்தல் கழுத்தில் படாமல் இருப்பதற்காக தூக்கி கட்டியிருப்பதைப்பார்த்து “சென்னையில் வெயில்

அதிகமா? “ என்றான்.

“சென்னை என்ன எனக்குப் புது ஊரா?. ” என்றவள் சற்று யோசித்துவிட்டு “வருஷம் முழுக்க இப்படியே இருக்கறதுதான் கொஞ்சம் கஷ்டமா இருக்கு.” என்றாள்.

இருவரும் மெதுவாக நடந்து ஒரு ஐஸ்கிரீம் பார்லருக்குள் நுழைந்தார்கள். வெளியிலிருந்த வெக்கைக்கும், பிசுபிசுபிற்கும் உள்ளிருந்த ஏசி சொர்க்கம் போல தோன்றியது. சற்று ஒதுக்குப்புறமாக இருந்த டேபிளைத்தேடி உட்கார்ந்தனர்.

“இரண்டு ஸ்பானிஷ் கசாட்டா” என்று சொல்லிவிட்டு முல்லை நவீனை சற்று சந்தேகத்துடன் பார்த்தாள்.

“என்ன?”

“ஏங்கிரி யங் மேன், புரட்சிக்காரன் ஐஸ்கிரீம் பார்லருக்கு வர்றதுக்கு ஒத்துக்குவியான்னு சந்தேகமாயிருந்தது. ஒத்துகிட்டது ஆச்சர்யமாயிருக்கு.” முதலில் சீனியரான நவீன் தன்னை ஒருமையில் பேசியதும் அதுதான் வழக்கம் போலிருக்கிறது என்று இவளும் அவனை ஒருமையில் அழைக்கத் தொடங்கி விட்டாள். அவன் கண்டு கொள்ளாததால் அதுவே பழக்கமாகிவிட்டது.

“புரட்சிங்கிறதெல்லாம் பெரிய வார்த்தை. கையில பணம் இருக்கும் போது அதை பயன்படுத்தாம எளிமையாயிருக்கேன்னு சொன்னா அதுக்குப் பேரு நடிப்பு இல்லையா?”

“இதுவும் சரியாத்தானிருக்கு” முல்லை தலையை சாய்த்து சிரித்தாள். படிக்கும்போது அவள் உணர்ச்சிமயமாகவிருப்பாள். கண்கள் அலைபாய்ந்து கொண்டேயிருக்கும். இப்போது அவள் சற்று வளர்ந்துவிட்டது போலத் தோன்றியது. பேச்சிலும், நடவடிக்கைகளிலும்

ஒரு முதிர்ச்சி தெரிந்தது. பத்திரிக்கையாளராக அலைந்து திரிந்த அனுபவம் போலும். ஆனாலும் கண்கள் மலரச் சிரிக்கும் இந்தச் சிரிப்பு அதே பழைய முல்லையை நினைவுபடுத்தியது.

“கொஞ்சம் மழலை மிச்சமிருந்தாலும் உன்னோட தமிழ் நல்லாவே இம்ப்ரூவ் ஆயிருக்கு. ஓகே அதிருக்கட்டும். எனக்கு நம்பவே முடியல. ஜர்னலிஸம் முடிச்சிட்டு மீடியால முழ்கியிருப்பேன்னு நினைச்சேன். சிலப்பதிகாரம்ங்கிற, கண்ணகிங்கிற, கண்ணகி போன வழியில பயணம்ங்கிற, சீரியஸாத்தான் சொல்றியா? வேலை என்னாச்சு?”

“ஒவ்வொண்ணாச் சொல்றேன். முதல்ல கண்ணகி. சில குழந்தைகளுக்கு சிண்ட்ரெல்லா பிடிக்கும், சில பேருக்கு ஸ்னோ வொயிட் பிடிக்கும். அது மாதிரி எனக்குக் கண்ணகி. கண்ணகி கதையை என்னைக்கு கேட்டேனோ அன்னையிலிருந்து என் ஃபேவரிட் ஹீரோயின் அவதான். பெரிசாக ஆக அது அதிகந்தான் ஆச்சு. குறையவேயில்லை. வேலை . . . போரடிச்சுப் போன டிப்ளமேட்ஸோட வைஃப்களையும், மாடல்களையும் எத்தனை நாள்தான் பேட்டி எடுத்துட்டே இருக்கறது? அதான் அதை விட்டுட்டு கொஞ்சம் உருப்படியா இருக்கறமாதிரி நேஷனல் மேகஸின்களுக்கு முயற்சி பண்ணிட்டிருக்கேன். இடைல கிடைச்ச நேரத்தில் இந்த ரொம்ப நாள் கனவை நிறைவேத்திக்கலாம்னு முடிவு செஞ்சேன். முதல்ல யாராவது ஃபிரண்டை கூட்டிட்டு போலான்னு நினச்சேன். அப்புறம் அதை டாக்குமெண்டரியா எடுத்திடலான்னு தோணிச்சு. அதான்.....” என்றவள் கொஞ்சம் இடைவெளிவிட்டுவிட்டு

”கண்ணகியும் கோவலனும் வாழ்ந்த இடம், நடந்து மதுரைக்குப் போன வழி, அப்புறம் தன்னந்தனியா மலைமேல அவ நடந்த கடைசிப்பயணம் எல்லா இடத்தையும் பார்க்கணும்.” என்று சொல்லிவிட்டு நவீனை உற்று நோக்கினாள்..

அவள் விழிகளில் சுடர்விட்ட ஆர்வத்தைக் கண்ட நவீனுக்கு ஆச்சரியமாகவிருந்தது. திட்டம் கவர்ச்சிகரமானதாகத் தோன்றினாலும் இதெல்லாம் சாத்தியமா என்ற சந்தேகம் அவன் பார்வையில் தெரிந்தது.

“ரொம்ப யோசிக்காத, ஏற்கெனவே நிறையப்பேர் செஞ்சிருக்காங்க. எஸ்.ராமகிருஷ்ணன் கூட கண்ணகி போன வழில போயிருக்கார். அத எழுதப்போறேன்னு சொன்னார். ரொம்ப ஆவலா நிறையப் பேர் காத்திட்டிருந்தோம். ஏன் எழுதலைன்னு தெரியல. சொல்லப்போனா கோவிந்தராசனார் மாதிரி சிலர் தங்கள் வாழ்க்கையையே இதுக்காக அர்ப்பணிச்சிருக்காங்க”

“இப்படியெல்லாம் கூட தமிழ்நாட்ல நடந்திருக்கா” என்றவன் “நான் ஒண்ணு கேட்டா கோபப்படக்கூடாது?”

“கண்டிப்பா கோபப்பட மாட்டேன். சொல்லு”.

“சிலப்பதிகாரம் ஒரு அற்புதமான இலக்கியம். ஒரு கிரேட் போயட் தான் சொல்ல விரும்புறத ஒரு கதையா சொல்லியிருக்கான். அவன் சொல்ல வர்றது என்னன்னு மட்டும் பார்த்துட்டு நிகழ்கால உலகத்தைப் பார்க்கலாம் இல்லையா?”

“சிலப்பதிகாரத்தை வெறும் கதைனு மட்டும் சொல்லிட முடியாது. அப்புறம் வேர்களை தேடிப்போறது உலகத்துல எல்லா எடத்துலயும் இருக்கறதுதான். உங்க எங்கல்ஸ் ஆதிமனிதன் வரை தேடினாரே அது எந்த புத்தகத்துக்கு. . . ஆரிஜின் ஆஃப் . . . ” முழுப்பெயர் நினைவுக்கு வராமல் சிரித்தாள்.

“குடும்பம், அரசு, தனிச்சொத்து ஆகியவற்றின் தோற்றம்”.

“ம், இதே மாதிரி இலியட் ஒடிஸில வர்ற இடங்களைத்தேடி, பைபிள்ல வர்ற இடங்களைத்தேடி எவ்வளவு ஆராய்ச்சி நடந்திருக்கு தெரியுமா?.

“ஓக்கே அக்ரீட். ஸ்கிரிப்ட் எழுத்திட்டியா?”

முல்லை கையிலிருந்த புத்தகத்தைச் சுருட்டி ஒரு சாத்து சாத்தினாள்.

“ரொம்ப வெளயாடினா கொன்னுடுவேன். டாக்குமெண்டரிக்கு மொதல்லயே எதுக்கு ஸ்கிரிப்ட்...”

“ஏய் இல்ல இல்ல விடு. ப்ளான் என்னங்கறதத்தான் கொஞ்சம் தப்பாக் கேட்டுட்டேன்”.

“சாந்தோம் அத்தை வீட்டுக்கு வா. பேசலாம்”

“அங்கேயா? உங்க கம்ப்யூட்டர்க்கார அத்தை பையன்களைப் பார்த்தாலே எனக்கு அலர்ஜியாச்சே!”

“எல்லாரும் அமெரிக்கா போயிட்டாங்க, தைரியமா வாப்பா” முல்லை கைப்பையைத் தோளில் போட்டுக் கொண்டே கேட்டாள். “ சுரேஷ் சபாபதி வருவான்ல?”

“கண்டிப்பா. அவனில்லாம டாக்குமெண்டரி எப்படி சாத்தியம்?”

முல்லையின் அத்தை வீடு சாந்தோமில் ஒரு அடுக்கு மாடிக் கட்டடத்திலிருந்தது. முல்லை பால்கனியில் உட்கார்ந்து லேப்டாப்பில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள். இடையிடையே அவள் கண்கள் கதவையும் ஒருபார்வை பார்த்துக் கொண்டிருந்தன. நவீன் கட்டாயம் வருவதாகச் சொல்லியிருந்தும், புது விஷயங்களை அவனால் புறக்கணிக்க முடியாது என்பது தெரிந்திருந்தும் அவள் சற்றுப் பதற்றத்துடன்தான் இருந்தாள். காலிங்பெல் அடித்தது. நீள வாக்கிலான டன்லப் பில்லோ போலிருந்த அத்தை கதவைத் திறக்க அடிமேலடி வைத்து நடந்து வருவதைப் பார்த்துப் பொறுமையிழந்து துள்ளி எழுந்து கதவைத் திறந்தாள். எதிர்பார்த்தபடியே நவீனும், சுரேஷும் தான். அவர்களை சோபாவில் உட்கார வைத்ததும் அத்தையும் வந்து எதிரே கொண்டாள்.

அத்தை “மத்தவங்கெல்லாம் எப்போ வருவாங்க? என்று கேட்டாள்.

நவீன் குழப்பத்துடன் முல்லையைப் பார்த்தான். அவள் சிரித்துக் கொண்டே அத்தைக்கு தெரியாமல் கண்ணடித்தாள்.

“மத்தவங்கன்னா உன்னோட கேமரா அசிஸ்டெண்ட், ஸ்கிரிப்ட் ரைட்டர் இவங்களத்தான் ஆண்ட்டி சொல்றாங்க”.

“ அவங்க நேரா ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்திடுவாங்க ஆன்ட்டி”

அத்தை கோபமில்லாமல் மூவரையும் உற்றுப் பார்த்துவிட்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கத் தொடங்கினாள். சத்தமில்லாமல் உடல்மட்டும் குலுங்குவதையும், கண்கள் கன்னத்துக்குள் மறைந்துவிட்டதையும் பார்க்க

ஏதோ தக்காளியைப் பிழிவது போலிருந்தது.

“இவ எங்கண்ணனை விட விட பெரிய லூசா இருப்பா போலிருக்கு நவீன். ஏதோ ஃபேமஸ் காலேஜில விஸ்காம் படிக்கிறேன்னா. சரி மீடியான்னு நினைச்சிட்டோம். இப்ப கல்ச்சர், வேர்கள்ன்னு என்னென்னமோ புரியாம பேசறா. அப்புறம் படம் எடுக்கப் போறேன்னு சொல்றா. ஏதோ நல்ல படம் பீட்ஸா மாதிரி எடுப்பான்னு பார்த்தா கண்ணகி, கோவலன் போன வழிங்கறா. ஒண்ணுமே புரியல. நீங்கெல்லாந்தான் இவளை உசுப்பேத்தி விடுறதா?”

நவீன் அவசரமாக மறுத்தான். “இல்லை ஆன்ட்டி. இவதான் எங்களையெல்லாம் கடத்திட்டு போறா. இவ ரைட்டருமில்ல. டைரக்டருமில்ல. தமிழ் புரொபஸர் ஆக வேண்டியவ.”

“ஆனாதான் பரவாயில்லையே. புரொபசருக்கு என்ன சம்பளம் இப்ப! சரி உங்கம்மா ரிட்டயர்ட் ஆயிட்டாங்களா? டீச்சர்தானே?”

“அம்மா இன்னும் ஆகல ஆன்ட்டி. அப்பாதான் ரிட்டயர்ட் ஆயிட்டார். அக்காவும் அங்கிளும் சென்னைலதான் இருக்காங்க. ஒரு பையன்” மேற்கொண்டு கேள்விகளுக்கு இடம் கொடுக்காமல் இருக்க நவீனே எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

அத்தையை டி.வி பார்க்கவிட்டுவிட்டு முல்லை இருவரையும் பால்கனிக்கு அழைத்துச் சென்றாள். தொட்டிகளில் வைக்கப்பட்டிருந்த குரோட்டன்களும் சிவப்புப் பூக்கள் பூத்திருந்த கள்ளிகளும் ஈரவாடையுடன் பச்சைப் பசேலென்றிருந்தன.

ஒரு டீப்பாயும் இரண்டு பிரம்பு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. முல்லை அவர்கள் இருவரையும் அதில் அமரச்செய்துவிட்டு தனக்கு டைனிங் டேபிளில் இருந்து ஒரு நாற்காலியைக் கொண்டுவந்தாள்.

லேப்டாப்பை ஆன் செய்து டேட்டாகார்டு பொருத்தி கூகுள் மேப்பிற்குச் சென்றாள். பசுமையும் நீலமும் கலந்த வண்ணத்தில் கடலோரத் தமிழகம் தெரிந்தது. அவள் அம்புக்குறியை நகர்த்தி பூம்புகாரில் கொண்டுவந்து நிறுத்தினாள்.

“இதோ இது தான் பூம்புகார். 1800 வருஷங்களுக்கு முன்னால்

தென்னிந்தியாவோட மாபெரும் துறைமுகம் இது. அந்த கால நியூயார்க். தமிழ்நாட்டோட நியூயார்க். இங்கிருந்துதான் சிலப்பதிகார கதை தொடங்குது. நம்ம பயணமும் இங்கிருந்துதான் தொடங்குது.

பூம்புகார் இளங்கோவடிகளுக்கு மிகவும் பிடித்த நகரம். அதோட ஒவ்வொரு பகுதியையும் அவர் வர்ணிக்கிறதைக் கேட்டா ஏதோ கனவு உலகம் மாதிரி இருக்கு.

காவிரியும், கடலும், கலக்கிற இடத்தில் இருந்ததுதான் பூம்புகார். கடலோரமா இருந்தாலும் கப்பல் நிறுத்தும் இடம் காவிரி ஆத்திலதான் இருந்திருக்கும் போலிருக்கு. பாய் மரங்களை இறக்காமலேயே கப்பல்கள் ஆத்துக்குள்ள வருமாம். அவ்வளவு ஆழம், அகலம்."

நவீன் சிரித்தான். " நம்ம காவிரியா? நீ இப்ப பார்த்திருக்கிறாயா?"

முல்லை சிரிக்காமல் அதே தீவிரத்துடன் தொடர்ந்தாள், "பார்க்கத்தானே போறோம். வடக்கு கரையில தான் காவிரிப்பூம்பட்டினம் இருந்திருக்கு. பீச்சுக்கு ஒரு அழகான பேர் குடுத்திருக்காங்க. நெய்தலங்கானல். பீச்சை ஒட்டி மருவூர் பாக்கம் இருந்தது. அங்க சோல்ஜர்சும், மீன் விற்பவர்களும், மற்ற தொழில் செய்யறவங்களும் இருந்தாங்களாம்.

பெரிய அந்தஸ்தில்லாத மக்கள் இந்த மருவூர் பாக்கத்தில் இருந்ததா சொல்றார். அதுக்கு மேற்கே கோட்டை இருந்தது. கோட்டையை சுத்தி அகழி இருந்தது. தெற்கே காவிரி ஆறு இருந்தது. கோட்டைகுள்ள தான் சோழனோட அரண்மனையும் , கோவலன் கண்ணகி வாழ்ந்த மாளிகையும் இருந்ததாம். இந்தப் பணக்காரங்க வாழ்ந்த பட்டினபாக்கத்திற்கும், சாதாரண மக்கள் வாழ்ந்த மருவூர்பாக்கத்திற்கும் நடுவில நாளங்காடி என்கிற பெரிய மார்க்கெட் இருந்தது. வரிசையா மரங்கள் இருந்ததாம், மரங்களை ஒட்டி கூரை போட்டு கடைகள் இருந்ததாம்.

"2000 வருஷமா சந்தைனா இப்படிதான் இருக்கும் போல."

"நாளங்காடி சந்தை இல்ல நவீன், நிரந்தரமான கடைவீதி. அங்கே வைரமும், ரத்தினமும் தங்கமும் கொட்டிக் கிடந்ததாம். பேசிட்டே போறாரு இளங்கோவடிகள். இந்திர விழாவைப் பத்தி அவர் பேசறதைப் பாக்கணுமே, இந்த நகரமே ஏதோ ஒரு ட்ரீம் வோல்டைப் போல

மாறிடுச்சாம். பாட்டும், கூத்தும், கலைகளும், மக்களோட உற்சாகமும்... !. பெரிபுளஸ், டாலமி மாதிரி வெஸ்டர்ன் ரைட்டர்ஸும் இதைப் பத்தி எழுதியிருக்காங்க. சுத்தியிருந்த 60 கிராமங்களுக்கு இந்த நகரம் பரவி இருந்ததாம். 2 லட்சம் பேர் அங்க இருந்தாங்களாம். டாலமி இதை கபேரிஸ் எம்போரியம் என்கிறாரு.

முல்லை எழுந்து கிரில் மீது சாய்ந்து நின்று கொண்டாள். “கிராண்டான சிட்டியில்ல? இப்பவே கிளம்பிப் போகணும் போல இருக்கு.”

“சரி இப்ப அங்க என்ன இருக்குன்னு தெரியுமா?” இதுவரை வாயே திறக்காமல் இருந்த சுரேஷ் சபாபதி கேட்டான்.

“அந்த காவிரிப்பூம்பட்டினம் இப்ப அங்க இல்ல. அதுதான் எல்லாருக்கும் தெரியுமே. இப்போ ஒரு சின்ன கிராமம் இருக்காம். நிறைய அகழ்வாராய்ச்சி நடந்திருக்கு.”

முல்லை பதில் சொல்லிவிட்டு பூம்புகார் என்ற ஃபைலைத் திறந்தாள். கடலாய்வுக் காட்சிகளும், கடலினுள் மூழ்கியிருக்கும் கட்டிடங்களும் மங்கலாகத் தெரிந்தன.

”எட்டு கிலோமீட்டர் தூரத்தில கடலுக்குள்ள முழுகியிருக்கற கட்டிடங்களை இன்னும் பார்க்கமுடியுமாம். இந்த பூம்புகாரிலிருந்து நாமளும் புறப்படறோம்.”பென்சிலால் திரையில் தெரிந்த தமிழக வரைபடத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டே சொன்னாள்.

”நாம பூம்புகாரிலிருந்து காவிரிக் கரையோரமா கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் நடந்த பாதையில ஸ்ரீரங்கம். அங்கிருந்து மதுரை. அதுக்கப்புறம், எல்லாத்தையும் பறி கொடுத்திட்டு தன்னந்தனியா வலியும் வேதனையும், தாங்கமுடியாத கோபமுமா மலைமேல் நடந்த பாதை வரைக்கும் போறோம். வழி கேக்கறது மாதிரி வழில நடக்கற எல்லாச் சம்பவங்களையும் சேர்த்து இயல்பான காட்சிகளோட ஒரு ட்ராவல் ஃபிலிமா இந்த ஆவணப்படத்தை எடுக்கணும். இடையிடையே சிலப்பதிகாரத்துல வர்ற காட்சிகளையும் காட்டலாம்னு நெனைக்கிறேன். அந்தக் காட்சிகள் ரவிவர்மா ஓவியங்கள்ல வர்றமாதிரி அழகியலோட

இருந்தா நல்லாருக்கும். . .” என்றவள் பேச்சை நிறுத்திவிட்டு கீழே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளையே சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் பேச்சு என்ன பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று அவள் அறிய முயல்வது போலத் தோன்றியது.

“அவ்வளவுதானா?” நவீன் தூண்டினான்.

”பின்னே பணமும் சூழ்நிலையும் இடங்கொடுத்தா கண்ணகி வழிபாடு பரவின கொடுங்கலூருக்கும், இலங்கையில மட்டக்களப்புக்கும், வன்னிக்கும் போறோம்”.

”இலங்கைக்கா?”

”ஏன் உன்னை மாதிரி ஆக்டிவிஸ்ட் எல்லாம் வெளிநாடு போக போலீஸ்காரங்க விடமாட்டங்களா?”

”போய்த் தொலஞ்சா நல்லதுன்னுதான் நினைப்பாங்க.” எழுந்து நின்று அவள் கையை குலுக்கினான்.

“கிரேட் வொர்க் முல்லை. கேட்கறதுக்கே ஃபேஸினேட்டிங்கா இருக்கு. கிளம்புறோம். பூம்புகாருக்குப் போய் சதுக்கபூதம் அங்க இருக்கா, சென்னைக்கு வருமான்னு கேட்கணும் போல இருக்கு”.

சுரேஷ் சபாபதி சற்று தயங்கி நின்றான். பேசிக் கொண்டிருந்த நேரம் முழுவதும் அவன் தன்னை உற்றுப் பார்ப்பதையும் பின்பு தயங்கி கண்களைத் திருப்பிக் கொள்வதையும் முல்லையும் கவனித்துத் தானிருந்தாள். சென்னைப் பையன்களுக்குக் கூச்சம் அதிகம் என்று அவளுக்கு இங்கே வரும்போதெல்லாம் தோன்றும். ஆனால் சினிமாவில் இருப்பவர்கள் கூட கூச்சப்படுவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. நல்ல பையன் என்று நினைத்திருந்தாள். இடையில் தேனீர் கொண்டுவரப்போன போது டீவி ஸ்டாண்ட் கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை ஒருமுறை பார்த்துக் கொண்ட போது கட்டம் போட்ட சட்டை ஜீன்ஸில் சற்றே ஒடிசலாகத் தெரிந்த அவள் உருவம் திருப்தியளிக்கும்படிதானிருந்தது.

“ம்” அவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

“ஒரு ஷார்ட் ஃபிலிம் இருக்கு. ஹீரோயின் கேரக்டர். பண்றீங்களா?”

நவீன் குபுக்கென்று சிரித்துவிட்டு அப்பால் நகர்ந்தான். முல்லை இதை எதிர்பார்க்கவில்லை. நவீனிடம் பேசாமல் உடனடியாக வெட்டிவிடவும் விரும்பவில்லை. “இத முடிச்சிட்டு அப்புறமா யோசிக்கலாமா?”

1971ல் தமிழகக் காவல்துறை கம்ப்யூட்டர் பிரிவைத் (போலிஸ் கம்ப்யூட்டர் விங்) தொடங்கியது. அந்த ஆண்டுதான் தீவிர வாத நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்த குற்ற விசாரணைத் துறையில் ஒரு சிறப்புப் பிரிவும் தொடங்கப்பட்டது. இதுவே பின்பு க்யூ பிரிவு என்று அழைக்கப்பட்டது. முதலில் இடதுசாரிப் புரட்சியாளர்களை இலக்காக வைத்துத் தொடங்கப்பட்ட இப்பிரிவு பின்பு ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட தனித் தமிழ் இயக்கங்கள், இஸ்லாமிய இயக்கங்களையும் விரிவு படுத்தப்பட்டது. மற்ற மாநிலங்கள் ஆயுதப்போராட்டங்களால் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் போது தமிழகம் அனைத்து போராளி இயக்கங்களையும் முளையிலேயே கிள்ளி விட்டது. நூற்றைம்பது ஆண்டு அனுபவம் வாய்ந்த காவல்துறையையும் போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியையும் சரியாகப் பயன்படுத்தி இந்தியாவிலேயே மிகவும் இராணுவ மயமான மாநிலமாக தமிழகம் மாறியுள்ளது.

-பொதுவுடமை கட்சியின் கொள்கை அறிக்கையிலிருந்து

சுரேஷ் சபாபதிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு புகைப்பிடிக்க வசதியான பெட்டிக் கடை ஏதாவது இருக்கிறதா என்று தேடியபடி நவீன் நடந்தான். கடந்த சில நாட்களில் சிகரெட்டும், இலக்கில்லாமல் அலைவதும் வழக்கமாகி விட்டிருந்தது. பின்னால் அவர்கள் இல்லை என்பதை நூறுமுறை உறுதிப்படுத்திக் கொண்டே நவீன் முல்லையின் வீட்டுக்கு வந்தான். இருந்தாலும் யாரோ பின் தொடர்ந்து வருவது போல அவனுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. இந்த உணர்வு அவனுக்கு முற்றிலும் புதிது. புரட்சிக்கு பல்வேறு தியாகங்கள் அவசியம் என்பது கட்சியில் பாலபாடம். இருந்தாலும் வேட்டையாடப்படும் விலங்கைப் போன்ற உணர்வைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அவன் கட்சிக்கு அறிமுகமான புதிதில் சில ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், விடிய விடிய சிகரெட்டுகளோடு விவாதங்கள் என்று எல்லாமே நன்றாக நம்பிக்கை ஊட்டும் விதமாகத்தான் இருந்தன. காவிரி நீரிலிருந்து முள்ளிவாய்க்கால், புலிகள் காப்பகம், கூடங்குளம் என்று

அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. கூட்டங்கள் இல்லாத ஞாயிற்றுக் கிழமைகள் அற்புதமானவை. மூத்த, இளைய தோழர்கள் அறையில் குழுமியிருப்பார்கள். அரசியல் விவாதங்களும், அனுபவப் பகிர்வுகளும், தோழர்களின் காதல்கதைகளுமாக பேச்சு நேரங்காலமில்லாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

சில நாட்களுக்கு முன்பு அப்படியொரு மதியப் போதில் சமைக்கத் தெரியாத நவீனும், மற்றொருவரும் கண்ணீரும் கம்பலையுமாக வெங்காயமும், மிளகாயும் அறுத்துக் கொண்டிருந்தார்கள். யாரோ ஃபேஸ்புக்கில் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. பிரம்மச்சாரிகள் அறையில் சமைக்கத் தெரியாமல் இருப்பது பெரிய கொடுமை. வெங்காயம் அறுக்க வைத்தே கொல்கிறார்கள்!.

அப்போதுதான் அந்த விவாதம் தொடங்கியது. பாத்திரத்தை அடுப்பில் வைத்துவிட்டு வந்து உட்கார்ந்த ஜோஸப் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். "அடுத்தவாரம் இந்நேரம் புதுநகரம்" என்றார். ஒரு அரசு திட்டத்திற்காக மக்களை வெளியேற்றுவதற்கு எதிராக கூட்டம். "போலிஸ் நமது ஆட்களை கிராமங்களுக்குள்ளேயே நுழைய விட மாட்டேனென்கிறது. அங்கே ஒரு கூட்டம் கூட நடத்த முடியவில்லை" என்றார்.

ஜோஸப்தான் நவீனுக்கு கட்சியையும், மார்க்சீயத்தையும் அறிமுகப்படுத்தியவர். பத்தாண்டுகளுக்கு முன்பு நல்ல அரசு வேலையை உதறிவிட்டு முழுநேர ஊழியரானவர். இந்த ஆண்டுகளில் கட்சி பல பின்னடைவுகளையும், பிளவுகளையும் சந்தித்தது. ஆனால் ஜோஸபின் உறுதி கொஞ்சமும் மாறவில்லை. கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி கட்சி போகச் சொன்ன இடத்திற்குச் செல்ல அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. ஜோஸப் வேலை செய்யப் போகாத இடம் வங்காள விரிகுடாதான் என்று கேலியாகச் சொல்வார்கள். நவீன் உலகைப் பார்க்கத் தொடங்கியது அவரது கண்கொண்டுதான் என்றாலும் இப்போது அவனுக்குச் சந்தேகங்கள் வரத் தொடங்கியிருந்தன.

"நாம் ஏன் அந்தத் திட்டம் செயல்படத் தொடங்கி மக்களை வெளியேற்றும் சூழ்நிலை வரும் போது அங்கே போய் நிற்கிறோம்?

இப்படியொரு சூழ்நிலை வரப்போவதை முன்பே ஊகித்து அறிந்து அமைப்பாக்கும் வேலைகளைத் தொடங்கியிருக்க வேண்டாமா? நாம் எப்போதும் பிரச்சினை வந்த பின்பே அங்கே போய் நிற்கிறோம். அதாவது கரண்ட் இஷ்யூஸ் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறோம்."

தோழர் அதிர்ந்து போனார். 'பிரச்சினை இருக்கிறது. ஆனால் பல இடங்களில் நான் முன்னே இருந்திருக்கிறோம், சாதித்திருக்கிறோம்' என்றார். "சில நேரங்களில் . . .

"அது சாதனை அல்ல நமது கடமை. ஒரு கம்யூனிஸ்ட் கட்சி இப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் தமிழகத்தைப் பொருத்தவரை நாம் சம்பவங்களின் பின்னேயே ஓடிக் கொண்டிருக்கிறோம். முதல் உலகப் போர் வரப்போகிறது என்று 1890லியே எங்கெல்ஸ் சொன்னார். 1933,34லிலேயே ஸ்டாலின் இரண்டாம் உலகப் போர் வரும் என்றார். தமிழகத்தின் அரசியல் பொருளாதாரம், முதலாளித்துவம் இயங்கும் முறை பற்றிய நமது புரிதலில் ஏதோ பிரச்சினை இருக்கிறது . . . "

"ஆள்பற்றாக்குறைதான் தோழர். நாம் ஓடிக்கொண்டே இருக்கிறோம். தொடர்ந்து பிளவுகள், நெருக்கடி, கூடவே அடக்குமுறை . . . விரைவில் இந்த சூழலைக் கடந்து முன்னேறத் தொடங்கிவிடுவோம் . . ." ஜோஸப் நவீனை ஒரு பொருள் பொதிந்த பார்வை பார்த்துச் சிரித்தார்.

கட்சி சில தயாரிப்புகள் செய்து வருவது நவீனுக்கும், மற்ற தோழர்களுக்கும் அரசல் புரசலாகத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் அது பற்றித் தெரிந்து கொள்ள யாரும் வெளிப்படையான ஆர்வம் காட்டிக் கொள்ளவில்லை. இப்போதைக்கு இதைவிடப் பெரிய ரகசியம் கட்சியில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. இந்த பலவீனமான மக்கள்திரள் அமைப்புகளை வைத்துக் கொண்டு இவ்வளவு பிரச்சினைகளை வைத்துக் கொண்டு போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது சாத்தியமா என்பது குறித்து நவீனுக்குச் சந்தேகங்கள் இருந்தன. ஆனால் கட்சி முழுவதும் பற்றிப் படர்ந்து வந்த உற்சாகம் நவீனையும் தொற்றிக் கொண்டது. தோளில் துப்பாக்கியோடு முதுகில் கெரில்லாப் பையோடு மலைகளில் சுற்றி திரியும் கற்பனை அவனது கற்பனைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. விவாதம்

ஆரோக்கியமானதாக, ஒருவரை ஒருவர் முறியடிக்கும் நோக்கம் இல்லாததாகத்தான் தொடங்கியது.

ஆனால் பின்பு நடந்த ஒரு சம்பவம் நவீனை நிதானமிழக்க வைத்துவிட்டது. நவீனின் அமைப்பைச் சேர்ந்த ஒரு தோழர் ஒரு சிறு நகரிலிருந்து சேலம் செல்ல பஸ் நிலையம் வந்தார். அங்கே மாற்றுக் கருத்துகளும், வேறு அரசியலும் கொண்ட இன்னொரு அமைப்புத் தோழரைப் பார்த்தார். இருவரும் நலம் விசாரித்த அடுத்த கணம் அரசியல் விவாதத்தில் இறங்கினர். எந்தக் கட்சியுடைய அரசியல் பாதை சரி என்பது பற்றிக் கடும் விவாதம் ஒரு மணிநேரம் தொடர்ந்தது. கீழே இறங்கியதும் அரசுக்கு எதிராகக் கூட்டுச் சதி செய்வதாக இருவரையும் உளவுத்துறை கைது செய்தது.

நவீனுக்கு க்யூ பிராஞ்ச் அலுவலகத்திலிருந்து விசாரணைக்கு வரும்படி அழைப்பு வந்தது. விசாரணை ஏதோ வேலைக்கான நேர்முகத் தேர்வைப் போலத்தானிருந்தது. அந்த இடமும் காவல்நிலையக் கட்டடம் போலில்லாமல் தாசில்தார் அலுவலகம் போலிருந்தது. எந்தப் பெயர்ப்பலகையும் இல்லை. காவலர்கள் வட்டாட்சியர் அலுவலக எழுத்தர்கள் போலத்தான் உடையணிந்திருந்தனர். பதவியையோ பெயரையோ கண்டுபிடிக்க எந்த வழியுமில்லை. சாதாரண உடையிலிருந்த அந்த அதிகாரி நவீன் உட்பட எல்லாத் தோழர்களின் ஜாதகத்தையும் கையில் வைத்திருந்தார். கண்களில் தெரிந்த கடுமையை மறைக்க முயன்றபடி, மிரட்டலில்லாத தொனியில் நவீனே மறந்து போனவற்றை நினைவு கூர்ந்தார். சட்டென்று "வேலாயுதத்தைக் கடைசியாக எப்போது பார்த்தீர்கள்?" என்றார். நவீன் திடுக்கிட்டான்.

வேலாயுதத்தை கட்சி மிகக் கவனமாக, பல ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்திருக்கிறது. வேலாயுதம் கட்சி அனுதாபி. சேலத்துக்கு அப்பால் ஏதோ ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். அருகில் உள்ள பத்துப் பனிரெண்டு கிராமங்களில் இருந்த இளைஞர்கள் அவரால் சமூக உணர்வுள்ளவர்களாக உருவாக்கப் பட்டிருந்தார்கள். ஆனால் கட்சி அந்தப் பகுதியை நெருக்கடி ஏற்படும் போது தங்குமிடமாகப் பயன்படுத்தலாம் என்று வெளிப்படையான அமைப்புகள் கட்டாமல்

வைத்திருந்தது. வேலாயுதமும் கட்சியுடனான நெருக்கத்தை ஒருபோதும் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. அவரை சிலசமயம் கட்சித் தோழர்கள் சந்தித்தாலும் எல்லோரையும் சந்திப்பது போலத்தான் அவர்களையும் சந்திக்கிறார் என்ற தோற்றத்தை அவர் கவனமாகக் காத்து வந்தார். நவீனுக்கு அது தற்செயலாகத்தான் தெரிந்திருந்தது.

அவன் விழிப்பதைப் பார்த்து அதிகாரி " சரி தெரியாட்டிப் பரவாயில்ல. வேலாயுதம் நல்ல மனுஷன்" என்று சமாதானப்படுத்தினார். 'இதெல்லாம் உனக்குத் தெரியாது நீ சின்னப் பையன் தானே' என்ற தோரணை அதில் தெரிந்தது. இது ஒரு வழக்கமான விசாரணைதான் என்று டீ, பிஸ்கெட்டுடன் அனுப்பி வைத்தார். அவ்வளவுதான் என்று அவன் நினைத்திருந்தபோது அவனது வீட்டுக்குப் பக்கத்து வீடுகளுக்கு இரண்டு பேர் வந்து போலிஸ்காரர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு அவனைப் பற்றி விசாரித்து சென்றார்கள் என்று கடைக்கார அண்ணாச்சி சொன்னார். ஒரு காவலர் நவீன் இல்லாத போது வீட்டுக்கு வந்து அம்மாவிடம் சொந்த வீடா, எப்படி வாங்கினீங்க என்றெல்லாம் நட்பார்ந்த முறையில் விசாரித்துவிட்டு "நல்ல பையந்தாம்மா ஆனா சேர்க்கதான் சரியில்ல. சீக்கிரம் கல்யாணம் பண்ணி வைங்க" என்று இலவச ஆலோசனையும் அளித்துவிட்டுச் சென்றார்.

இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று நவீன் தோழர்களிடம் சொன்னான். கைது செய்யப்பட்டவர்கள் சட்டவிரோத செயல் எதுவும் செய்யவில்லை. ஆனால் ஏன் கைது செய்யப்பட்டார்கள்?. தன்னைப் பற்றி எல்லாமே போலீஸ்காரர்களுக்குத் தெரிந்துள்ள நிலையில் ஏன் விசாரிக்கிறார்கள். தன்னைக் குறித்து பக்கத்து வீடுகளில் இருப்பவர்களிடம் பயம் ஏற்படுத்துவதுதான் நோக்கமா அல்லது தன்னையே மிரட்டி கட்சியிடமிருந்து விலக்கி வைப்பதா? அரசு தங்களைப் பற்றிப் புரிந்து வைத்துள்ள அளவுக்கு நமக்கு அதைப் பற்றிய புரிதல் உள்ளதா?

கொஞ்சம் பிரச்சினை இருந்தாலும் நவீன் அதைப் பூதாகரப் படுத்துகிறான் என்று மற்ற தோழர்கள் நினைத்தார்கள். மத்தியதரவர்க்க மனநிலை. கொஞ்சம் பயம் கூட இருக்கலாம் என்று எல்லாக்

கஷ்டங்களையும் பட்டுத்தேறிய அவர்களுக்குத் தோன்றியது. இதெல்லாம் அவர்களுக்குச் சர்வ சாதாரணம். கட்சி தனது உள்முரண்பாடுகள், நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்ளும் போது அரசைவிடப் பலபடி முன்னேறிவிட முடியும் என்ற நம்பிக்கை ஏறக்குறைய எல்லோருக்கும் இருந்தது. பல நேரங்களில் கட்சியின் முன்னறிவிப்புகள் திகைப்பூட்டும் அளவுக்கு சரியானவையாக இருந்திருக்கின்றன. நவீனைவிட அபத்தமான சந்தேகங்களை எழுப்பிய தோழர்களையும் அவர்கள் பார்த்திருக்கிறார்கள்.

தோழரின் கைதும், வேலாயுதம் பற்றிய கேள்வியும் அவர்களுக்கும் குழப்பமாகத்தானிருந்தது. வெளிப்படையாக வேலை செய்யும் ஒரு ஊழியர், எந்தத் தவறும் செய்யாதவர் ஏன் காரணமில்லாமல் கைது செய்யப்பட வேண்டும்? அவர்களால் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிந்தது. மாற்றுக் கட்சியைச் சேர்ந்த தோழர் ஏதேனும் வில்லங்கத்தில் ஈடு பட்டு அவரை தொடர்ந்த போலிஸ் இவரையும் சேர்த்துக் கைது செய்திருக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்துவிடும், அவசரப்பட வேண்டாம் என்று முடிவு செய்தார்கள்.

நவீனுக்கு சர்வ வல்லமை வாய்ந்த அரசு இயந்திரத்துக்கு எதிராகத் தானும், தனது அமைப்பும் பலவீனமாக நிற்பது போலத் தோன்றியது. ஜூலியஸ் பியூஸிக் சொன்னது போல நாமெல்லாம் முயல்களா எப்போது வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் தூக்கிச் செல்ல? இரண்டாவது முறை தனது தெருமுனையில் உளவுத்துறை போலிஸ்காரரை பார்த்ததும் நவீன் நேராக அவனிடம் சென்றான்.

“உங்களுக்கு என்ன வேண்டும்?.”

அந்தப் போலீஸ்காரன் பதிலில் மலையாள வாசனை கலந்திருந்தது. “ நான் என்னசார் செய்யறது?.மேலதிகாரிக ரிபோர்ட் வேணுங்கறாங்க. யாரை எதுக்குக் தெரிஞ்சுக்கணும்னு புதுசா வந்த அதிகாரிகளுக்குத் தெரிய மாட்டேங்குது”.

இந்தப் போலிஸ்காரர்கள் சீருடை அணிந்திருப்பதில்லை. சிலசமயம் தாடிகூட வைத்திருக்கிறார்கள். மரியாதையாகப் பேசுகிறார்கள். மிரட்டுவதில்லை. தங்களை மறைத்துக் கொள்ள ஒரு போதும்

முயல்வதில்லை. ஆனால் தன்னை விடாது தொடரும் இந்த முகங்கள் லட்டியை வைத்து மிரட்டும் போலிஸ்காரர்களை விடச் சங்கடப்படுத்தின. ஒரு உளவுத் துறைக் காவலர் அவனைத் தொலைபேசியில் அழைத்து ஒரு குறிப்பிட்ட தோழரின் தொலைபேசி எண் கிடைக்குமா என்று நட்புடன் கேட்ட போது நவீன் வெடித்தே விட்டான்.

"நான் என்ன உங்கள் உளவாளியா?" என்றான். அவர் அலட்டிக் கொள்ளவே இல்லை. "ஒரு ஃபிரண்டு என்ற முறையில் கேட்டேன் தெரிந்தால் சொல்லுங்கள்" என்றார்.

அதன் பின்புதான் நவீன் முல்லையின் அழைப்பை ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்தான். நாளைக்கே ஒன்றும் புரட்சி வந்துவிடப் போவதில்லை. ஒரு நாலைந்து நாள் எங்காவது சுற்றிவிட்டு வந்தால் ஒன்றும் பெரிய நஷ்டமில்லை என்று நினைத்தான். இந்த எரிச்சலூட்டும் சூழலிலிருந்தும், தனிமையுணர்ச்சியிலிருந்தும் தப்பி வெளியேறி தென்தமிழகத்தில் சுற்றித் திரிய வேண்டுமென்று தோன்றிய ஆவலை அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. அரசு விரும்புவதும் இதைத்தானே? கட்சியிலிருந்து விலகிச் செல்லும் எண்ணம் நவீனுக்குக் கிடையவே கிடையாது. ஆனால் தனக்குள் தோன்றியிருந்த பல சந்தேக முடிச்சுகளைப் பற்றி சிந்திக்கவும், இன்னும் தமிழ் நாட்டைப் பற்றி ஆழ்ந்து தெரிந்து கொள்ளவும், சுருக்கமாகச் சொன்னால் பயணம் செய்யவும் விரும்பினான்.

கட்சியில் சொன்னபோது அவர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. ஆனால் வெளிப்படையாக மறுக்கவில்லை. 'நல்லதுதான். தொடர்பில் இருங்கள், முடிந்தவரை குறிப்புகளோடு வாருங்கள்' என்றார்கள். ஒருதோழர் மட்டும் 'பார்த்து தோழர் ஏதாவது புல்லரிப்பு டாக்குமெண்டரியாக இருக்கப் போகிறது' என்றார்.

"நான் அதில் வேலை செய்யத்தான் போகிறேன். டைரக்டரின் பார்வைக்கு நான் பொறுப்பு அல்ல" என்றான் நவீன். இது சரியான பதில் இல்லை என்றாலும் அவர் வெறுமனே தலையசைத்துவிட்டு அமைதியாகிவிட்டார்.

தன்னால் முல்லைக்கு ஏதாவது பிரச்சினை வருமா, அவளிடம் இந்த

விவகாரங்களையெல்லாம் முன்பே சொல்ல வேண்டுமா என்ற குழப்பம்தான் இப்போது அவனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது.

சிகரெட் பிடிக்கும் எண்ணம் வரும்போது அதை ஆழ்ந்து அனுபவித்து உணர வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால் பற்ற வைத்ததும் சிகரெட் பிடித்துக் கொண்டிருப்பதே மறந்து போய் வேறு நினைவுகள் மனதை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. நவீன் சிகரெட்டை வீசி எறிந்தான். தனக்கே பிரச்சினை என்று சொல்லிக் கொள்ளும் படி எதுவும் வந்துவிடவில்லை. தவிர இதில் மறைப்பதற்கு எதுவுமில்லை. தன்மீது வழக்கு எதுவுமில்லை. தான் காணாமலும் போகவில்லை. தன்னிடம் எந்த ரகசியமும் இல்லை. அவர்கள் போன் செய்தால் பார்த்துக் கொள்ளலாம். அதற்கு முன்பே முல்லையிடம் கண்டதைப் பேசி அவள் உற்சாகத்தைக் கெடுக்க வேண்டாம். இன்னொரு சிகரெட் பற்ற வைக்கலாமா என்று நினைத்தவன் வேண்டாம் என்று முடிவு செய்து நடக்கத் தொடங்கினான்.

. “ரெண்டாயிரம் மூவாயிரம் கிலோமீட்டர் தள்ளியிருந்து வர்றவங்களுக்கு எதைக் கேட்டாலும் இல்ல இல்ல. ஒரு ஒழுங்கான பதில் சொல்லக் கூடாது . ... .ஒரு பொறுப்பான ஆள இங்க உக்கார வைக்க மாட்டாங்களா?” பொரிந்து தள்ளினாள். மழை போல் வாரிக் கொடுப்பவன் மாநாய்க்கன்

அவன் குலம் தழைக்கவந்த பூங்கொம்பினைப்

போன்றவள் கண்ணகி. பனிரெண்டு வயதுடையவள்.

திருமகளின் வடிவினையுடையவள்.

தீதற்ற வடமீனின் திறம் இவள் திறம்

என்று பெண்கள் போற்றும் நற்குணம் உடையவள்.

குடிப் பெருமையோடு நாளும் உயர்ந்து

ஓங்குகின்ற செல்வத்தையுடையவன்

மாசாத்துவான். அவன் மகன் கோவலன்

பதினாறு வயதுடையவன். வணிகத்துக்காக

பல நாடுகள் சென்று வந்தவன். செவ்வேள்

என்று பெண்கள் புகழ்ந்து காதல் கொள்ளும் அழகன்.

இவ்விருவரையும் பெற்றோர் திருமணத்தால்

ஒன்று படுத்தினர். ஏழு மாடங்கள் கொண்ட

தங்கள் மாளிகையில் நான்காவது

மாடத்தில் தங்கள் வாழக்கையைத் தொடங்கினர்.

இருவரும் இன்பத்தில் திளைத்து

இல்லறம் பேணி வாழ்ந்தனர்.

ஒரு நாள் கோவலனின் தாய் மருமகள்,

தானே விருந்தினரைப் பேணுவதையும்,

அறநெறியாளரைப் போற்றுவதையும்,

சிறப்புற்று வாழ்வதையும் காணவிரும்பி

அவர்களைத் தனிக் குடும்பமாக அமர்த்தினாள்.

இப்படி இன்ப மயமாகக் கழிந்தன ஏழு ஆண்டுகள்.

- சிலப்பதிகாரம்

மனையறம் படுத்த காதை

குளிரூட்டப்பட்ட வால்வோ பஸ் கிழக்குக் கடற்கரை சாலையில் விரைந்து கொண்டிருந்தது. பஸ்ஸின் உட்புறம் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டு இருளில் மூழ்கியிருதது. ஒரு பயணியின் மெல்லிய குறட்டை, செல்போனில் யாரோ கிசுகிசுக்கும் குரல் தவிர வேறு சத்தமே இல்லை. பஸ்ஸில் கொடுத்த கம்பளியில் புதைந்த படி முல்லை ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதேதோ வெளிச்சங்கள் விரைவாக பின்னோக்கி விரைந்து கொண்டிருந்தன.

அவளுக்கு ரயிலைவிட பஸ் பயணம் பிடிக்கும். ரயிலில் நீட்டிப் படுக்க முடியும், நினைத்த போது எழுந்து நடக்கமுடியும் என்றாலும் சிந்திப்பதற்கும், கற்பனை செய்வதற்கும், இடையூறு இல்லாத தனிமை பஸ் பயணங்களிலேயே கிடைப்பதாகத் தோன்றியது. இன்று இரண்டு நாள் பரபரப்பிற்குப் பின்பு நீண்ட தூரம் பஸ்ஸில், இரவில் பயணம் செய்ய வேண்டியிருக்கும் என்றதும் தனது ஆவணப்படம் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும் என்று நினைத்திருந்தாள். ஆனால் எல்லாமே சரியாக அமைந்தும் அவளது நினைவுகள் ஓரிடத்தில் நிற்காமல் நழுவிச் சென்று கொண்டே இருந்தன. பனி கொட்டும் இரவுகளில் மொட்டை மாடியில் இதேபோல் கம்பளியைப் போர்த்துக் கொண்டு அப்பாவிடம் கதை கேட்டது நினைவுக்கு வந்தது.

பெரும்பாலும் வடஇந்தியாவில் ஊர் ஊராக மாற்றி செல்லும் வங்கி மேலாளரான அப்பாவிற்கு அந்த மக்களோடு ஒட்டவேயில்லை. தற்கால

தமிழ்நாட்டோடும் ஒட்டவில்லை. எனவே பழைய தமிழ் இலக்கியங்களைப் படிப்பதிலும், அது குறித்து மகளுக்கு கதைகதையாய் சொல்வதிலும் அவர் தனது தனிமையை தீர்த்துக் கொண்டதுபோலத் தோன்றியது.

முல்லைக்கு காய்ச்சல் வந்தால் டாக்டரிடம் போவது உள்ளிட்ட அனைத்து கடமைகளையும் தவறாமல் செய்துவிட்டு இரவில் அவள் படுக்கை அருகே அமர்ந்து, மயிலிறகால் வருடி நோய்களைக் குணப்படுத்திய சமண முனிவர்களைப் பற்றி கதை கதையாய் சொல்வார்.

சாகும் நேரத்திலும் 'பாலும் கசக்கல துணியும் கசக்கல' என்று சிலேடை பேசிய தமிழ் புலவனைப் பற்றி பேசுவார். கண்ணகியைப் பற்றி சொல்லி அம்மாவைப் பார்த்து கண்ணடிப்பார். 'இந்த மாதிரி சப்ஜி, சப்பாத்தின்னு இருந்திருப்பா செட்டிச்சி, அதுதான் அவன் அப்படி போயிட்டான்' என்பார்.

பாட்னாவில் உட்கார்ந்து கொண்டு பழம்பெருமையில் தமிழகத்திற்கு இணையானது எதுவும் இல்லை என்று கூசாமல் சொல்லுவார். காலையில் எதுவுமே நடக்காதது போல் வங்கிக்குச் சென்றுவிடுவார்.

தன்னால் அது முடியாது என்று நினைத்துக் கொண்டாள். அப்பாவையும், அம்மாவையும் நினைத்தபோது லேசான ஒரு குற்ற உணர்ச்சி தோன்றியது. இந்த மாதிரி ஒரு விஷயத்திற்கு இரண்டாயிரம் மைல்கள் கடந்து வருவதை அவர்கள் விரும்பவில்லை. சரி அதனால் என்ன, பத்திருபது நாள், அவ்வளவு தானே என்று சமாதானப்படுத்திக் கொண்டாள். இப்படி ஒரு இளைஞனோடு தான் தனியாக பஸ்ஸில் போய்க் கொண்டிருப்பது அம்மாவுக்கு தெரிந்தால்..., என்று நினைத்த போது அவளுக்கு சிரிப்பு வந்தது. ஓரக் கண்ணால் நவீனைப் பார்த்தாள். அவன் வழக்கமான முகச் சுழிப்போடு உறங்கிக் கொண்டிருந்தான். கேமராப்பையை மடியில் வைத்து கவனமாக இறுகப் பற்றியிருந்தான்.

முல்லைக்கு எப்போதுமே தொழில்நுட்ப விவகாரங்களில் ஆர்வம் கிடையாது. ஆனால் தற்போது 5டி, 7டி கேமராக்களில் திரைப்படங்கள் தமிழ்நாட்டில் எடுக்கப்படுவதை அறிந்திருந்தாள். ஆவணப்படத்தையும் 5டி கேமராவில் எடுக்க வேண்டும் என்ற அவள் விருப்பத்தைக் கேட்டு

நவீனும், சபாபதியும் சிரித்தார்கள். “ஆவணப்படம் எடுக்க ஆசைப்படற எல்லாருமே இப்படித்தான் பேசுவீங்களா?’ என்ற நவீன் குழந்தைக்குச் சொல்வது போல அவளுக்கு 5டி பற்றி விளக்கியிருந்தான். இந்தக் கேமராக்கள் அடிப்படையில் ஸ்டில் கேமராக்களாம். படம் அருமையாக வந்தாலும் நான்கு ஐந்து நிமிடங்களுக்கு மேல் தொடர்ந்து படமெடுக்க முடியாது. சூடாகிவிடும். அதுவும் வெயில் காலத்தில் நான்கு நிமிடம் கூடத்தாங்காது என்றவன் ஹேண்டிகேம்தான் ஆவணப்படத்துக்கு பெஸ்ட் என்றான். சுரேஷ் சபாபதியிடம் சோனி ஹெச் எக்ஸ் ஆர் 1500 கேமரா இருப்பதாகவும் அது எச்டி தரம் உள்ளது, தொலைக்காட்சிகள் கூட இதில் எடுத்த படங்களை ஏற்றுக் கொள்கின்றன என்றும் சொல்லியிருந்தான். சின்னஞ்சிறியதாக கைக்கு அடக்கமாக இருந்த அந்தக் கேமராவைப் பார்க்க அவளுக்கு சந்தேகமாகத்தானிருந்தது. இருந்தாலும் இந்த விவகாரங்களையெல்லாம் நவீன் பார்த்துக் கொள்ளட்டும், படம் நன்றாக வந்தால் சரி என்று விட்டு விட்டாள். நவீன் சிலப்பதிகாரக் காட்சிகளைப் படமாக எடுக்கும் போது 5டில் எடுக்கலாம் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தான். இப்போது தூக்கத்திலும் அவன் கேமராவை விடாமல் பிடித்திருந்த விதத்தைப் பார்த்தபோது நல்ல கேமராவாகத்தானிருக்க வேண்டும் என்று நம்பிக்கை தோன்றியது.

இந்தக் கண்ணகியின் மீதான காதல் சரியாக எவ்வளவு நாட்களாகத் தனக்கு இருந்து வருகிறது என்று முல்லை கணக்குப் போட முயன்றாள். அப்பாவுக்குத் தமிழ் பிடிக்கும், தமிழுணர்வை ஊட்டினார் என்பதெல்லாம் சரிதான். ஆனால் இடையில் ஒரு இடைவெளி இருந்தது. அதை நினைத்து அவள் சிரிப்பதும் உண்டு சங்கடப்படுவதும் உண்டு. பள்ளியிறுதி நாட்களில் முல்லை வெறி பிடித்தது போல ஃபேஸ் புக்கில் மூழ்கிப்போனாள். அப்பாவிற்குப் பதவியுயர்வு கிடைத்து அவர் வீட்டிலிருக்கும் நேரம் குறைந்ததும்,

அம்மாவின் நேரம் பொறாமைகாரியும், கோள்மூட்டியுமான தங்கையுடன் போராடுவதிலேயே கழிந்ததும் முல்லைக்கு வசதியாகப் போயிற்று.

வங்காளியான சாகரிகா ராய்தான் முல்லைக்கு முதல் முதலாகக் காதலை அறிமுகப்படுத்தினாள். அதுவரை அவளுக்குக் காதல் என்பது

சற்றே பயமூட்டும் கெட்ட சொல்லாகத்தானிருந்தது. டிவியில் காதல் காட்சிகள் வந்தால் கூட சேனல் மாற்றிவிடுவாள். ஆண்கள் அவளைப் பொறுத்தவரை வேறு கிரகத்து ஜந்துக்கள்.

சாகரிகா தான் அவளிடம் பையன்களைப் பற்றிப் பேசத் தொடங்கினாள். லேசான தாடி மீசையுடன் ரன்பீர் கபூர் போலிருக்கும் பக்கத்து வீட்டுப் பையனைப் பற்றிப் பேசுவாள். அவனது பெற்றோர் விவாகரத்துச் செய்து கொண்ட சோகக் கதையைச் சொல்லித் தானும் சோகத்தில் மூழ்கிப் போவாள். சில நேரங்களில் கண்ணீர் விடுவதும் உண்டு. குயிலின் குரலைக் கேட்டால் தனது சோகம் அடி மனதிலிருந்து மேலெழும்பி வருகிறதாம். தோழிகள் அவளுக்கு சோகக் குயில் என்று பெயர் வைத்திருந்தார்கள். ஆனால் சாகரிகா அவ்வப்போது படபடக்கும் பட்டாம் பூச்சியாகவும் மாறிவிடுவாள். ஒரு சம்பவத்திற்குப் பிறகு அவள் பெயர் வெட்டுக் கிளி என்று மாறியது. தொல்லை கொடுக்கும் வெட்டுக் கிளி என்ற காரணப் பெயர் அவளுக்கு வந்தது ஒரு தனிக் கதை. இந்த வெட்டுக் கிளியின் ஆண் நண்பர்கள் சிலரை முல்லைக்கும் தெரியும்.

அந்த சம்பவத்தின் போது முல்லை ஒருநாள் வசமாக அம்மாவிடம் சிக்கினாள். அது பள்ளி இறுதியாண்டுப் பரிட்சை நெருங்கிக் கொண்டிருந்த நேரம். எல்லோரும் படிப்பு படிப்பு என்று ஓடிக் கொண்டிருந்த போது வெட்டுக் கிளியின் திருவிளையாடல் அரங்கேறியது. வெட்டுக்கிளிக்கும் கல்லூரியில் படிக்கும் ஒருவனுக்கும் காதல். ஆனால் சிலநாட்களில் அவன் வேறு ஒரு பெண்ணோடும் சுற்றிக் கொண்டிருப்பது தெரியவந்தது. வெட்டுக் கிளி பயங்கர சோகமடைந்தாள். தனது சோகங்களை ராகேஷிடம் பகிர்ந்து கொண்டாள். ராகேஷ் அதை ஆழ்ந்த வேதனையோடு முல்லையிடம் தெரிவித்தான். இருவரும் கிடைத்த நேரத்தில் எல்லாம் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று சேர்ந்து சிந்தித்தனர்.

இந்த நேரத்தில் வெட்டுக் கிளி சுஷ்மிதாவின் நண்பனான ஒருவனிடம் அடிக்கடி செல்பேசியில் தொடர்பு கொள்வது வெளியானது. சுஷ்மிதா கடுங்கோபமடைந்து தான் கட்டுப்பெட்டியல்ல, நல்ல புரிதலும், நாகரீகமும் உடையவள் மற்றும் இன்னபிற தனது நல்லியல்புகளைப் பட்டியலிட்டு,

ஆனால் இந்த துரோகத்தைத் தன்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று ஸ்டேட்டஸ் போட்டு குடும்ப சண்டையை வீதிக்குக் கொண்டுவந்து விட்டாள். ராகேஷும், முல்லையும் மனித மனதின் இயல்புகள் குறித்து அடிக்கடி ஆழமாக விவாதித்துக் கொண்டனர். அப்போதுதான் விவகாரம் அம்மாவுக்குத் தெரிய வந்தது. பஞ்சாயத்து அப்பாவிடம் சென்றது. முல்லை நேர்மையுடன் நடந்த அனைத்தையும் அவரிடம் சொன்னாள். அவர் தலை சுற்றிப் போனார்.

முல்லையிடம் மிக ஆழ்ந்த முறையில் விடலைப் பருவ காதல் எத்தனை பிரச்சினைகளைக் கொண்டுவரக் கூடியது . . . வாழ்க்கை எவ்வளவு இனிமையானது, எப்படி எல்லா வாய்ப்புகளும் உரிய காலத்தில் கிடைக்கும் என்றெல்லாம் பேசினார். முல்லை கதறி அழுது அறைக்குள் அடைந்து கிடந்தாள். பிரச்சினையும் பன்னிவிட்டு தான் ஏதோ பாதிக்கப்பட்டவள் போல அவள் செய்யும் அழிச்சாட்டியத்தைப் பார்த்து அம்மாவுக்கு ரத்தக் கொதிப்பே வந்து விட்டது. அப்பா திரும்பவும் நட்பார்ந்த முறையில் லெக்சர் அடித்தார். வாழ்க்கை, லட்சியம், காதல். . . அவள் மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கை . . .

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட முல்லை திட்டவட்டமான ஒரு முடிவு எடுத்தாள். இனிமேல் தனது தொடர்புகளை ஒருபோதும் அம்மா அறியும்படி வைத்துக் கொள்வதில்லை என்று.

முல்லை கல்லூரியில் ஒருமுறை கண்மூடித்தனமாகக் காதல் வசப்பட்டாள். அனில். அனில் சொந்தமாக எஸ்.யு.வி வைத்திருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த பஞ்சாபி. உடலெல்லாம் கரடியைப் போல முடி அடர்ந்திருக்கும். போதாததற்கு தலைமுடியை வேறு நீளமாக வளர்த்திருப்பான். முல்லைக்கு அவனோடு பேசாத, அவனைப் பார்க்காத நாளெல்லாம் வீண் என்று தோன்றியது. தங்களைவிட பரஸ்பரம் புரிந்து கொண்ட ஜோடி வேறு யாரும் இருக்க முடியாது என்று அவள் உறுதியாக நம்பினாள். தன் குடும்பத்தையும், அனில் குடும்பத்தையும் நினைத்தும் பார்க்கும் போது இரண்டும் எப்படி ஒட்டும் என்று அவளுக்கு மலைப்பாக இருந்தது. சப்பாத்தி மாவைக் கூட முனீர்க்காவின் தென்னிந்திய ரமா ஸ்டோரில் மட்டுமே வாங்கும், மாதம் தவறாமல் மலைமந்திர் முருகன்

கோவிலுக்குச் செல்லும் அம்மா அப்பாவுக்கும், சுத்தப் பஞ்சாபிகளான அனில் குடும்பத்துக்கும் அவ்வளவு இடைவெளி இருந்தது. ஆனால் தங்கள் காதல் நிறைவேறாது போக வாய்ப்பே இல்லை என்றும் ஏனோ அவளுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. காதலுக்காக எதுவும் செய்யத் தயாராக இருக்கும் தங்களைப் பிரிப்பது சாத்தியமே இல்லை என்று உறுதியாக நம்பினாள்.

முல்லை எந்த அளவுக்கு திருமணம், கனவு இல்லம் தேனிலவு, நிலாமுற்றம் என்றெல்லாம் பேசினாளோ அதே அளவுக்கு அனில் அவளது உடைகள், ஆண் நண்பர்கள் பற்றியே பேசத் தொடங்கினான். அனிலுக்கு ஒருநாள் முல்லை நவநாகரீகமாக இருக்க வேண்டும் என்று தோன்றும். மறுநாள் அவள் ஜலந்தருக்குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் இருக்கும் சித்தி போல மாற வேண்டுமென்று விரும்புவான். போதாக்குறைக்கு முல்லைக்கு அட்டிட்யூட் பிரச்சினை வேறு இருப்பதாக விமர்சனம் செய்வான். அனிலின் கட்டுப்பாடுகள் அவளுக்கு மூச்சுத் திணறினாலும் அதில் ஏதோ சந்தோஷம் இருப்பதாக நினைத்துக் கொண்டாள்.

ஒருநாள் அனில் வெள்ளை வெளேரென்று தந்தத்தால் செய்த பொம்மை போல ஒருத்தியை கூட்டி வந்து தனது நியூ ஜெர்சி கஸின் என்று அறிமுகப்படுத்தினான். முல்லைக்கு தான் அவள் முன் ஏதோ பட்டிக்காட்டிலிருந்து வந்தவள் போன்ற உணர்வு வந்தது.

ஒரு விடுமுறையில் முல்லை அனிலின் செல்பேசிக்குத் தொடர்பு கொண்டாள். செல்லை எடுத்து கொழகொழ ஆங்கிலத்தில் பேசியது நியூஜெர்சி கஸின்.

“அனில் ஈஸ் ட்ரைவிங்”

“வேர் . . .வேர் ஈஸ் ஹி கோயிங்?” தன் கேள்வி ஏடாகூடமாக இருப்பதாக அவளுக்கே தோன்றியது. இதை எப்படி நாகரீகமாகக் கேட்பது என்று அவளுக்குத் தெரியவில்லை. தன்னிடம் சொல்லாமல் எங்கே போகிறான் இந்த பிசாசை அழைத்துக் கொண்டு?.

“ ஆக்ரா . . .” முல்லையின் அமைதியைக் கேட்டு அவளே தொடர்ந்தாள். “ வில் ஆஸ்க் ஹிம் டு கால் யூ. . .”

முல்லை நொறுங்கிப் போனாள். அறையை விட்டு வெளியே வரவே இல்லை. கண்ணாடி முன் நின்று தனது துயரம் தோய்ந்த முகத்தையும், கண்களில் இருந்து கண்ணீர் நிரம்பி வழிவதையும் பார்த்துக் கொண்டேயிருப்பது அவளுக்குப் பிடித்த பொழுது போக்கானது. அப்பாவும், அம்மாவும் படாத பாடுபட்டு அவளை மீட்டனர். தங்கைகூட தனது சண்டையை எல்லாம் தற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு அவளுக்கு கையால் செய்தும், கடையில் வாங்கியும் பரிசுப் பொருட்கள் வழங்கி உற்சாகப் படுத்த முயன்றாள். அப்பா அவளைத் தனது தழிழ் வேர்களின் மீது கவனம் செலுத்தச் சொன்னார். தமிழனின் காதல் அற்புதமானது. அதை இந்த இந்திகாரர்களால் புரிந்து கொள்ள முடியாது என்றார். முல்லைக்கு சிலப்பதிகாரம் மட்டுமே பிடித்தது. கூடவே சில அற்புதமான அகநானூறு பாடல்களும். தான் கண்ணகி போல அனிலுக்காகக் காத்திருப்பதாக நினைத்துக் கொள்ள முயன்றாள். ஆனால் என்னவோ இப்போது அந்த கிழிந்த ஜீன்ஸையும், வி நெக் டி ஷர்ட்டையும் செம்பட்டைத் தலையையும் நினைத்தால் எரிச்சல்தான் வந்தது.

ஆனாலும் தான் சோகத்தில் மூழ்கியிருப்பதாகக் கற்பனைச் செய்து கொண்டவள் தன் வாழ்க்கையில் இனிமேல் காதல் இல்லை என்று முடிவு செய்தாள். நாட்களை மற்றவர்களுக்கு உபயோகமாகக் கழிக்க வேண்டும் என்று கல்லூரியில் பொது விவகாரங்களுக்காக நடக்கும் போராட்டங்களில் கலந்து கொள்ளத் தொடங்கினாள். அப்படித்தான் பேராசிரியர் சர்மா அறிமுகமானார். அவர் வீட்டில் நடந்த சூடான விவாதங்கள், கருத்து மோதல்கள் எல்லாம் முல்லைக்கு பிடித்தது போலவும் தோன்றியது, தான் அன்னியமாக இருப்பது போலவும் தோன்றியது. தனது இடம் இதுதான் என்று முல்லையால் முடிவுக்கு வரமுடியவில்லை. புரொபஸர் அப்பா போலவே இருந்தார். அப்பா தமிழ் என்பார், இவர் ஏழைகள் என்கிறார். வேறு என்ன . . . முதுகலை ஜர்னலிசம் சேர்ந்த போது நவீன் அறிமுகம் ஆனான்.

நவீன் பேசிய பெண்ணியம், எவ்லின் ரீட், அலெக்ஸாண்ட்ரா கொலந்தாய் எல்லோரையும் விட நீலப்படங்களை எதிர்த்துப் போராடிய ஆண்ட்ரியா ட்வார்க்கினையும், கத்தோலிக்கக் கன்னியாஸ்திரியான

பாட்ரிஷியா பெர்ட்லெட்டையும் தான் அவளுக்குப் பிடித்தது. நவீன் சொல்வது போன்ற வர்க்கப் போர் நடத்தி சமத்துவ சமூகம் அமைத்து அதில் பெண்ணுரிமைகளைக் காப்பதைவிட இப்போது பெண்கள் மீது ஏவப்படும் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவது நடைமுறையில் சரியானதாகத் தோன்றியது.

"நீலப்படங்கள் வந்து கொண்டே இருக்கும். ஆண்ட்ரியா ட்வார்க்கின்கள் எதிர்த்துப் போராடிக் கொண்டே இருப்பார்கள். இதற்கு வழியே இல்லாத, மனிதனை மனிதன் சுரண்டாத சமூகம் வேண்டும். அடுத்த படிக்கு வா" என்றான் நவீன்.

முல்லை தேர்ந்தெடுத்த படி வேறு விதமானதாக இருந்தது. ஒரு பெருநகரத்தை மன்னனோடு சேர்த்து சுட்டுப் பொசுக்கிய கண்ணகி . . . என்ன லாஜிக் . . . ஒருவிதத்தில் நவீன் சொல்வது போல இருண்மைவாதமா அல்லது தனது வளர்ப்பா. . .

பெண்களின் போர்க்குணத்தின் மொத்த உருவம் கண்ணகி என்று அவள் உறுதியாக நம்பினாள். கண்முன்னால் இருக்கும் அநீதிகளை எதிர்த்துப் போராடுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வேர்களைத் தேடிப் போவது. . .

இதுதான் தன்னை பூம்புகார் வரை இழுத்து வந்து விட்டது. இருளில் விரையும் பஸ்ஸின் அமைதியில் எல்லாவற்றையும் அசைபோட வைக்கிறது.

சுரேஷ் சபாபதி பூம்புகாருக்கு வரவில்லை. ஏதோ சினிமா சம்மந்தப் பட்ட வேலையாக ஹைதராபாத் கிளம்பிப் போய்விட்டானாம்.

"ஷார்ட் ஃப்லிம் என்னாச்சு?"

"அதெல்லாம் அந்த நிமிஷம்தான். இவங்க தலையைச் சாய்த்து சிரிக்கறது அந்த கதையோட ஹீரோயின் மாதிரியே இருக்குன்னு புலம்பிக்கிட்டே வந்தான். திடீர்னு வேற வேலை வந்ததும் ஓடிட்டான். நீ காக்கா மாதிரி தலையைச் சாய்ச்சு சிரிக்கறேன்னு எனக்கு அவன் சொல்லித்தான் தெரிஞ்சது."

முல்லைக்கு ஒருபுறம் அப்பாடா என்றிருந்தது. அவளுக்கு முதலில்

இருந்தே இந்த சுரேஷோடு ஒட்டவில்லை. ஆவணப்படம், வரலாறு இவற்றிலெல்லாம் அவனுக்கு ஆர்வமில்லை என்று அவளுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. இவனை வைத்துக் கொண்டு தன்னால் நவீனோடு இயல்பாக இருக்க முடியாது என்றும் நினைத்துக் கொண்டிருந்தாள். அதே நேரம் அவன் இருப்பது ஒரு பாதுகாப்புணர்வையும் கொடுத்தது. ஒரு இளைஞனோடு தனியாகச் செல்வதைவிட ஒரு குழு நன்றாக இருக்கும் என்று நினைத்திருந்தாள்.

இப்போது அந்த நினைவு வந்ததும் 'சே' என்று தனக்கு தானே மறுத்துக் கொண்டாள். எங்கள் இருவருக்குமே இதைவிட முக்கியமான நோக்கங்கள் இருக்கின்றன. இந்த பயணத்தில் மற்றவற்றிற்கெல்லாம் இடமில்லை. முல்லை திரும்பவும் ஜன்னலுக்கு வெளியே பார்க்கத் தொடங்கினாள். உண்மையிலேயே பயணம் தொடங்கிவிட்டது என்பது அவளுக்கு நம்ப முடியாததாக இருந்தது. ஆவணப் படத்தில் என்ன சொல்லப்போகிறோம், கண்ணகி ஒரு புரட்சிக்காரி என்றா? அப்பாவி என்றா? இப்படி ஒரு விஷயத்தை பேசும் அளவிற்குத் தனக்கு தமிழ் இலக்கியத்தில் போதுமான அறிவு உண்டா? ஏதேதோ கற்பனைகளில் மூழ்கியிருந்தவள் அப்படியே தூங்கிப் போனாள்.

காலையில் கண் விழித்தபோது சீர்காழியில் இறங்கியது பஸ்மாறியது எல்லாமே கனவு போலத்தானிருந்தது. நவீன் படிக்கட்டில் நின்று படமெடுத்து கொண்டிருந்தான். வெளியே உழப்படாத வயல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. மரங்களில் அந்தக் கோடையிலும் டெல்டாவின் பசுமை மிச்சமிருந்தது. குறுகிய சாலையின் இருபுறமும் கவிழ்த்துப் போடப்படும் பழங்கால ஓடுகள் வேய்ந்த வீடுகள். . . மிக, மிக மிருதுவான மண். . . மழைமேகங்கள் வானத்தை மறைத்திருந்தன. அவள் விழித்துவிட்டதைப் பார்த்ததும் நவீன் 'குட் மார்னிங்" என்றான்.

"நான் வேலையை ஆரம்பிச்சிட்டேன்".

ஓரிடத்தில் பஸ் நிற்பது போல வேகத்தைக் குறைத்தது. தொலைவில் கடல் மேகமூட்டத்தில் வெளிறித் தெரிந்தது. தார்ச்சாலை கொஞ்சதூரம் சென்று மணலில் காணாமல் போயிருந்தது. இடது புறம் சில சங்கு விற்கும் கடைகள் ஒழுங்கற்ற வரிசையில் தென்பட்டன. பஸ்

ஸ்டாண்டிற்கு அருகிலேயே பாழடைந்ததுபோல் தோன்றிய ஒரு அரங்கம் இருந்தது. கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு பூங்காவும், சாம்பல் வண்ணத்தில் சினிமா செட் போலத் தோன்றிய சில விசித்திரமான பழைய கட்டிடங்களும் இருந்தன. இடதுபுறம் வரிசை வரிசையாகச் கான்கிரீட் போடப்பட்ட சிறுவீடுகளிருந்தன. மீனவர் காலனி போலும்!. ஊர் மொத்தத்தையும் பார்த்தால் கிராமம் போலவும் இல்லை, நகரம் போலவும் இல்லை, சுற்றுலாத்தலம் போலவும் இல்லை. . . இதுதான் பூம்புகார் என்று உள்ளுணர்வு சொல்லியது. முல்லைக்கு கருக்கென்றிருந்தது. பஸ் திரும்பி நின்றது. பூம்புகாரே தான்.

ஒரு அடையாளப் பலகைகூட இல்லை. முல்லை திகைப்புடன் விழிப்பதைப் பார்த்து நவீன் சிரித்தான்.

"உனக்கு எல்லாமே கைக்கெட்டும் தூரத்தில் தான் இருக்கணுமா? முதல்ல கெஸ்ட் ஹவுஸ் எங்கே இருக்குன்னு பார்க்கலாம்" என்றான். சொன்னாலும் அவனுக்கும் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது. மணலில் கால்புதைய நடந்து ஒரு கடைக்காரரை அணுகினான். எந்தக் கடையிலும் ஒரு வாடிக்கையாளரும் இல்லை. தொலைவில் தெரிந்த ஒரே டீக்கடையில் லுங்கிகளுடன் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருப்பவர்கள் மீனவர்களாக இருக்க வேண்டும். தூங்கி வழிந்து கொண்டிருந்த சங்குக் கடைக்காரர் இவர்களை உற்சாகமாக வரவேற்றார்.

"கெஸ்ட் ஹவுஸில் ரூம் போட்டிருக்கீங்களா?" என்றார்.

"உங்களுக்கு எப்படித்தெரியும்?"

"இங்கே தங்க வேறு இடம் இல்லையே. ஹனிமூனா சார்?"

இது போன்ற கேள்விகள் எதிர்பார்க்கக் கூடியவைதான். ஆனாலும் சற்று நெளிய வைத்தது. வேறு வழியே இல்லை.

"இந்த ஊரை படம் எடுக்க வந்திருக்கிறோம்".

"டீவியா? டாக்குமெண்டரியா?"

கொக்காமக்கா... நவீன் அவர் கையைப் பிடித்து உற்சாகமாகக்

குலுக்கினான். அதே உற்சாகத்தை இம்மியளவும் குறையாமல் அவரும் திரும்ப வெளிப்படுத்தினார். ஒரு டிவி சேனலின் பெயரைச் சொல்லி அவர்களோடு தான் இணைந்து வேலை செய்துள்ளதாகக் கூறினார். பிசினஸை துச்சமாகவும், இந்த புது நட்பை பெரிதாகவும் அவர் மதித்ததாகத் தெரிந்தது.

"வாங்க கெஸ்ட் ஹவுஸ் போகலாம்" என்று உடன் வரத் தயாரானவர் ஒப்புதலுக்காக முல்லையைப் பார்த்தார்.

"பழைய கட்டிடங்கள் எல்லாம் எங்கே இருக்கு சார்?" முல்லை நின்ற இடத்திலிருந்தே கேட்டாள்.

"இதோ இருக்கே" அவர் ஒரு நூறு அடி தொலைவில் தெரிந்த அந்த செட் போன்ற கட்டிடத்தைக் காட்டினார்.

"இதுதான் எழுநிலைமாடம் . . ." பின்பு வடபுறம் திரும்பி எதையோ

"இதுதான் இலஞ்சிமாடம்" என்றார். அவர் எழுநிலைமாடம் என்று சொன்ன இடம் பார்த்தாலே வெறுமையூட்டியது. சாம்பல் வண்ணத்தில் அட்டைகளை அடுக்கி வைத்தது போலத் தெரிந்தது அது. துருவேறிய கேட், முன்னால் தெரிந்த புல் மட்டும் பசுமையாக புத்துணர்வூட்டும் வண்ணம் இருந்தது. கட்டிடம் இருளோடி சங்கடப்படுத்தியது.

"2000 வருஷத்துக்கு முந்தய கட்டிடமா? கோவலன் கண்ணகி குடியிருந்ததா சிலப்பதிகாரத்துல சொல்ற மாளிகையா?" முல்லையின் சந்தேகத்தைப் பார்த்து கடைக்காரர் கடகடவென்று சிரித்தார்.

"2000 வருஷமா? இல்லம்மா. கலைஞர் பீரியட்ல கட்டியது. நீங்க சொல்ற அளவுக்குப் பழைய கட்டிடம் எதுவும் இல்லையே," என்றவர் சற்று யோசித்து "ஆமாம், மணிக்கிராமம் பக்கம் இருக்கு" என்றார்.

முல்லையின் முகம் சற்று மலர்ந்தது. ஏதோ இருக்கிறது. "காவிரி எங்கே . . .?"

"அதோ" சற்று தொலைவில் வெள்ளியாகத் தெரிந்த நீர்த்திட்டை சுட்டிக் காட்டினார் அவர்.

"முதலில் காவேரி" முல்லை பைகளை அங்கேயே வைத்துவிட்டு

பாய்ந்தோடினாள். நவீன் அவசரமாகக் கேமராவை எடுத்துக் கொண்டு தொடர்ந்தான். முல்லை கடைக்காரரோடு பேசுவதை படம்பிடிக்காமல் விட்டுவிட்டோமே என்று அவனுக்குத் தோன்றியது. கடற்கரையில் துள்ளியோடும் ஒரு இளம்பெண்ணும், திடீரென்று தோன்றும் காவேரியும் எவ்வளவு அழகியலான காட்சியாக இருந்திருக்கும். விட்டுவிட்டோமே என்று வருந்தியவன், இந்தப் பிசாசுக்கு இப்படித் திடீரென்று பைத்தியம் பிடிக்கும் என்று எப்படித் தெரியும் என்று சமாதானப்படுத்திக் கொண்டான்.

காவேரி தோன்றியது. கோவலனும் கண்ணகியும் வழிநடந்த காவேரி, அவன் மாதவியோடு களித்திருந்த காவேரி... பாய்மரக்கப்பல்கள் மிதந்து கொண்டிருந்த காவேரி. . . சோழவளநாட்டின் உயிரான பொன்னிநதி . . . கடலுக்கு 200 அடி தூரத்தில் நின்று போயிருந்தது. காவேரி என்று சொல்லப்பட்ட அந்தப் பெரிய குட்டைக்கும், கடலுக்கும் இடையே மண் நிரப்பப்பட்டு துறைமுகம் அமைக்கும் பணி நடந்து கொண்டிருந்தது. மண் கொட்டப்பட்டிருக்காவிட்டாலும் ஆறு கடலுக்கு வந்திருக்கும் என்று தோன்றவில்லை. அதில் மருந்துக்கு கூட தண்ணீர் ஓடவில்லை. அசைவற்ற தண்ணீரில் பிளாஸ்டிக் குப்பைகள் மிதந்து கொண்டிருந்தன.

யமுனையையும், ஹூக்ளியையும் கற்பனை செய்து கொண்டிருந்த முல்லை விக்கித்து நின்றாள். கோவை போகும் வழியில் காவிரியைப் பார்த்திருந்த நவீன் குறைந்தது அதைப் போன்ற ஒன்றை எதிர்பார்த்திருந்தான். வரும் வழியில் பார்த்த டெல்டா பிரதேசத்தின் பசுமை வேறு அவனுக்கு நம்பிக்கையூட்டியிருந்தது.

“இதுதான் காவிரியா?”

துறைமுக வேலைக்காகக் குவித்து வைக்கப்பட்டிருந்த கற்களுக்குப் பின் சிறுநீர் கழித்து விட்டு வந்த ஒருவர் இதைக் கேட்டு நெளிந்து சிரித்தார். ஏற்கெனவே இந்த கண்ணகி சென்ற வழி, சிலப்பதிகாரம் குறித்தெல்லாம் நவீனுக்குப் பெரிய நம்பிக்கை இல்லையென்றாலும், முல்லையின் முகத்தில் அப்பட்டமாக எழுதி ஒட்டியிருந்த ஏமாற்றத்தைப் பார்த்து வருத்தமடைந்தான். இரண்டாயிரம் வருடம் பின்னோக்கிப் போகும் இந்தப் பயணத்தில் இன்னும் இதுபோல எத்தனை ஏமாற்றங்கள்

காத்திருக்கின்றனவோ என்று மலைத்தவன் அவளுக்கு இப்போதைக்கு ஏதாவது சொல்லி சற்று உற்சாகமூட்டலாம் என்று முடிவுசெய்தான். கேமராவை எடுத்து அவளைப் பார்த்து "டாக்குமெண்டரி தொடங்கிவிடலாம், ஏதாவது பேசு" என்றான்.

"என்ன பேசுவது?"

"உனக்கு என்ன தோணுதோ அதை!". முல்லை நவீனே எதிர்பாராதவிதமாக மடமடவென்று பேசத்தொடங்கினாள்

"காவிரியில் தண்ணீர் இல்லை என்று தெரியும். ஆனால் இப்படி இருக்கும் என்று நினைக்கவில்லை. கப்பல்கள் பாய்மரங்களை இறக்காமலேயே நேராக ஆற்றுக்குள் வரும் அளவு ஆழம், அகலம் – என்று இளங்கோவடிகள் கூறுகிறார். இப்போது ஆறு கடலுக்கே வரவில்லை."

"முதல் ஷாட்டே புலம்பலா! அவநம்பிக்கை கூடாது அம்மணி. இப்ப காவிரியில எவ்வளவு அணை இருக்கு. கடைசி சொட்டு வரை மக்கள் பயன்படுத்துகிறார்கள். அவர் காலத்துல இவ்வளவு கால்வாய்கள் இல்லை. இதெல்லாம் இல்லாட்டி இப்பவும் காவிரி ஒரு கிலோமீட்டர் அகலத்துக்கு ஓடி வந்து கடல்ல கலக்கத்தான் செய்யும்."

"காவிரிக் கரையில் அறுபது கிராமங்களில் பரவியிருந்த பூம்புகார்... தங்கமும் , வைரமும், மரகதமும் கொட்டிக் கிடந்த பூம்புகார்...."

மனம் பொறுக்காமல் அவள் புலம்பிக்கொண்டே இருந்தாள். முதலில் கெஸ்ட்ஹவுஸ் போகலாம். பின்பு யாராவது விஷயம் தெரிந்தவர்களைப் பார்த்து கேட்டால் இந்த இடத்தைக் கொஞ்சம் புரிந்து கொள்ளமுடியும் என்று நவீன் அவளைத் தேற்றி அழைத்துச் சென்றான். அரசு விருந்தினர் மாளிகை பளிச்சென்று விசாலமாக இருந்தது. ஒரு பதிவேட்டைப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்ட பொறுப்பாளர் முதல் மாடியிலிருந்த அவர்களது அறைக்கு அழைத்துப் போனார். அது அறை அல்ல. இருபதுக்கு பதினைந்து அளவுள்ள ஒரு படுக்கையறை, அதே அளவுள்ள ஒரு வரவேற்பறை, பிரம்மாண்டமான குளியலறை . . . அனைத்தும் சேர்ந்த சூட். இது எல்லாமா என்று வியப்புடன் கேட்ட நவீனைப்

பார்த்து அழைத்து வந்தவர் நமட்டுச்சிரிப்பு சிரித்தார்.

“இது அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும் தங்கற சூட். ஏஸி அறை கூட இருக்கு”.

“ஓ ஆள்பவர்கள் தங்குமிடம் இப்படித்தான் இருக்குமா? மந்திரிகள் அடிக்கடி வருவார்களா?”

“எங்க சார் உங்களை மாதிரி ஏதாவது டூரிஸ்ட் வந்தாத்தான். இதுக்குத்தான் துரதிஷ்டம் இருக்குதுன்னு சொல்றாங்களே?”

“இந்த கெஸ்ட் ஹவுஸுக்கா?”

“இல்லல்ல பூம்புகாருக்கு. மொதல்ல கலைஞர் வந்து இதைத் திறந்து வெச்சார். எமர்ஜென்ஸில அவர் ஆட்சி டிஸ்மிஸ் ஆச்சு. பின்னால் ஏதோ அமைச்சர் வந்தார். அவருக்கும் பதவி போச்சுது. அப்புறம் யாரும் பயந்துட்டு இங்க வர்றதில்ல. போன தி.மு.க ஆட்சியில கூட பூம்புகாரை யாரும் கண்டுக்கல.”

நவீன் முல்லையைப் பார்த்தான். “நீ எதிர்பார்த்த மாயத்தன்மை கொண்ட மிஸ்டிக் இடம்!”

இப்படி ஏதாவது ஒன்று இந்த இடத்தில் இருந்தே ஆகவேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அந்த மாபெரும் நகரமும் நாகரீகமும் அழிந்து இப்படி வெறும் மணல்வெளிப்பரப்பாக மாறிப் போயிருக்க வாய்ப்பே இல்லை. இங்கு ஏதோ ஒன்று இருந்தே ஆகவேண்டும். கண்ணுக்குப் புலப்படாத இந்த நகரின் ஆன்மா இங்குதான் எங்கோ இருக்கவேண்டும். . . அது துடித்துக் கொண்டிருக்கிறதா? தன்னோடு பேச முயல்கிறதா? தனக்குத்தான் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லையா? ஓயாது அடித்துக் கொண்டிருக்கும் இந்த காற்றும், அலைகளும் சொல்வதைப் புரிந்து கொள்ளும் நிதானமும், கூர்மையும் தனக்கு இல்லையா?

குளித்துவிட்டு அவர்கள் முதலில் சென்ற இடம் அருங்காட்சியகம். அது எழுநிலைமாடம் என்ற பெயரில் எழுபதுகளில் கட்டப்பட்ட கட்டிடத்திலிருந்தது. அது ஏழு மாடி உயரமும் இல்லை. பழம் தமிழ் கட்டிடக்கலையை நினைவுபடுத்தும் விதத்திலும் இல்லை. சாம்பல் வண்ணத்தில் பொருட்காட்சி தொடங்கும் போது முன்னால் வைக்கப்படும்

கார்டு போர்டு செட் போலத்தான் தெரிந்தது. ஆனால் இருளோடியிருந்த இந்தக்கட்டிடம் முல்லைக்குப் பிடித்துப் போயிருந்த மாயத்தன்மை என்ற சொல்லை நினைவு படுத்தியது.

“ஏன் இப்படி? இன்னும் கொஞ்சம் ரசனையோடு அழகியலோடு கட்டியிருக்கக் கூடாதா?” என்றாள்.

“வள்ளுவர் கோட்டம் போல கருணாநிதி கட்டிய மற்ற கட்டிடங்கள் நல்லாத்தான் இருக்கும். ஆனால் எழுபதுகளில் தமிழன் ரசனை பளபளப்பின் மீது, ஈஸ்ட்மென் கலரின் மீது அதீத ஆர்வம் கொண்டதாக இருந்திருக்கும் போலிருக்கிறது. ராஜராஜ சோழன் படம் பார்த்திருக்கிறாயா?”

”இல்லை”

“படம் முழுக்க ஏழு நிறங்களும் பளபளவென்று முகத்திலடித்துக் கொண்டே இருக்கும். வீடுகளுக்குக் கூட பச்சை, சிவப்புன்னு விதவிதமான கலர்களில்தான் பெயிண்ட் அடிச்சிருப்பாங்க. எங்கள் தாத்தா வீட்டில் கதவு கட்டம் கட்டமா இருக்கும். ஒவ்வொரு கட்டத்திற்கும் உள்ளே வட்டங்கள் செதுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு கலர். . . . தமிழன் கலர்மேல பைத்தியமாக இருந்திருக்கிறான். . .”

முல்லை சிரித்துவிட்டு தனக்குப் பிடித்த விஷயத்திற்குத் திரும்பினாள். “பூம்புகார்ல இருக்கும் எல்லாமே தி.மு.க ஆட்சியில் கட்டியதா . . .ராஜாஜி கண்ணகிக்குச் சிலை வைத்ததாகக் படித்தேனே? அப்பொழுதே சிறிய கிராமமாக இருந்த காவேரிப்பட்டினம் என்ற கிராமம்தான் பூம்புகார் துறைமுகம் என்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது தானே?”

“உன்னளவுக்கு இதைப்பற்றி எனக்குத் தெரியாது முல்லை. காங்கிரஸ் காலத்தில் இந்த நகரம்தான் பூம்புகார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம். ஒரு சிலையும் வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தி.மு.க வுக்கு ஒரு தேவை இருந்தது அல்லவா? தாங்கள்தான் தமிழனின் பழம் பெருமைக்குச் சொந்தக்காரர்கள் என்று காட்டும் அவசியம் . . .காங்கிரஸ் முன்னிறுத்திய ராமாயணம், மகாபாரதம்

பகவத்கீதைக்கு மாற்றாக திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்று தமிழகத்திற்கே உரிய இலக்கியங்களை, மாற்று அடையாளங்களை முன்னிறுத்த வேண்டிய தேவை . . . தி. மு.க.வுக்கு இருந்தது. அதனாலதான் அவர்கள் காவிரிப்பூம்பட்டினம் போன்ற புதிய பண்பாட்டு மையங்களை ஏற்படுத்த முயன்றிருக்க வேண்டும்." இது போன்ற தமிழை முல்லையால் புரிந்து கொள்ள முடியுமா என்று சந்தேகத்துடன் பார்த்தான். ஆங்கிலத்தில் பேச அவன் தயாராக இருந்தான் என்றாலும் முல்லை புரிந்து கொண்டாள். ஆர்வத்துடன் கவனிக்கவும் செய்தாள்.

நவீனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவள் சென்னையில் பார்க்கும் கவிஞர்களையும், அரசியல் இயக்கப் பெண்களையும் அடிக்கடி நினைவு படுத்துகிறாள். இவளுக்கு ஆண்நண்பர்கள், டேட்டிங், மவுண்ட் அபு எதுவுமே இருந்திருக்காதா? அதெப்படி இல்லாமல் இருக்க முடியும்? சமூக செயல்பாட்டாளர்களுக்குக் கூட இந்த எல்லா விருப்பு வெறுப்புகளும் இருக்கத்தானே செய்கின்றன. அவர்களும் சட்டென்று ஒருநாள் திருமணம் செய்து கொள்வது நடக்கத்தானே செய்கிறது!. எங்கோ நழுவிக்கொண்டிருந்த அவனது நினைவுகளை முல்லை பூம்புகார் அருங்காட்சியக வளாகத்திற்கு இழுத்தாள்.

"ராமாயணம், மகாபாரதத்தில் நம்பிக்கை இல்லையென்றால் ஏன் இந்த மூடநம்பிக்கை? இங்கு வந்தால் பதவி போய்விடும் என்கிறார்களே?"

"அந்த காலத்துத் தி.மு.க.வினர் எல்லோரும் பெரியாரின் தி.க.விலிருந்து வந்தவர்கள் தான் என்றாலும் இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. தி.க. சிலப்பதிகாரம், மணிமேகலையையும் கூட மூடநம்பிக்கை இலக்கியங்கள் என்றுதான் சொன்னது. இன்றைய தி.மு.க.வினரும் அப்போது அப்படித்தான் பேசியிருக்க வேண்டும். ஆனால் தேர்தல் அரசியலுக்கு தி.மு.க. வந்த பிறகு தனக்கென தனி அடையாளங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்திருக்கும் அல்லவா?. இந்த மூடநம்பிக்கை குறித்து எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. ஆனால் பதவியளிக்கும் அபரிமிதமான வசதிகளைப் பார்த்த பிறகு அது இல்லாமல் இருப்பதா என்ற நினைவு தரும் பயம் எல்லாவற்றையும் கொண்டு வரத்தானே செய்யும். அதில் மூட நம்பிக்கை மட்டும் என்ன விதிவிலக்கு?"

இதற்குள் அவர்கள் அருங்காட்சியகத்திற்கு உள்ளே வந்துவிட்டிருந்தனர். வெளியே படிக்கட்டில் உட்கார்ந்து கண்ணாடித் தம்ளரில் டீ குடித்துக் கொண்டிருந்த காப்பாளர் "உள்ளே போங்க வர்றேன்" என்று சைகை காட்டினார். வெளிர் மஞ்சள் நிறத்தில் கோடுபோட்ட சட்டையும் கருப்புநிறக் கால்சட்டையும் அணிந்திருந்தார். அவரது வழுக்கைத் தலையில் மீதியிருந்த முடிகள் எப்போதோ டை அடித்ததைக் கட்டும் விதத்தில் பழுப்பும் வெளுப்புமாகவிருந்தன. கட்டிடம் ஒருமாதிரி இருந்தாலும் உள்ளே இருந்த சிலப்பதிகாரக் கதைகூறும் சிலைகள் திருத்தமாக அழகாகவே இருந்தன. காஞ்சனை சீனிவாசனின் 'பூம்புகார் போற்றுதும்' ஆவணப்படத்தில் கோவலனும், கண்ணகியும் என்று ஒரு அழகான சிலையைக் காட்டியிருந்தார்கள். முல்லையால் அதை மறக்கவே முடியவில்லை. அவ்வளவு அற்புதமாக இருந்தது அது. கோவலன் இருபது இருபத்திரண்டு வயது இளைஞனாக, அழகனாக, கண்ணகி அழகே, அடக்கமே உருவான இளம் பெண்ணாக இளங்கோவடிகள் சொல்வது போலவே தத்ரூபமாக வடிக்கப்பட்டிருந்தார்கள். இருவரும் பயணம் போகும் நிலையில் தோன்றினார்கள். முல்லை அந்தச் சிலையைத் தேடினாள். இங்கேயும் அதேபோல ஒன்று இருக்கத்தான் செய்தது. ஆனால் அவ்வளவு அழகாக இல்லை. இரண்டும் ஒன்றுதானா அல்லது வேறு வேறா? சீனிவாசன் வேறு எங்கே இப்படியொரு சிலையைப் படம்பிடித்திருக்க முடியும்? ஆவணப்படத்தில் பார்த்த சிலையின் அற்புதமான அழகு சீனிவாசனின் திறமையா அல்லது தனக்குத்தான் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விதமாகத் தோன்றுகிறதா?

"பூம்புகார் போற்றுதும் பார்த்திருக்கிறாயா?" பதில் ஓரளவு முல்லை எதிர்பார்த்ததுதான்.

"இல்லை"

"காஞ்சனை சீனிவாசனைத் தெரியுமா?"

"தெரியும் . . ." படமெடுத்துக் கொண்டிருந்த நவீன் இழுத்தான். ஏதோ சொல்லவருவது போலத்தோன்றியது. அரசியல் ரீதியிலான விமர்சனங்களாக இருக்கும். முல்லை சிரித்துக் கொண்டே துண்டித்தாள்.

“எனக்கு அவரை அறிமுகப்படுத்து” அவள் சிலைகளையும் உத்தேசமாக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருந்த பழங்கால இசைக்கருவிகளையும் பார்த்தபடி மெல்ல நடந்தாள். அவளுக்கு சீனிவாசனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள பல கேள்விகள் இருந்தன. கோவிந்தராசனார் என்பவர்தான் பூம்புகாரைக் கண்டுபிடித்தார். கண்ணகி சென்ற வழியில் சென்று பார்த்தார். கண்ணகி கோவிலைக் கண்டுபிடித்தார் என்று பல இதழ்களில் எழுதப்பட்டிருப்பதை முல்லை படித்திருந்தாள். ஆனால் ‘பூம்புகார் போற்றுதும்’ தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக எடுக்கப்பட்ட படம். அதில் பூம்புகார் கண்டுபிடிக்கப்பட்டது பற்றி விரிவாக, நேரடியாகத் தொடர்புடைய தொல்பொருள் அறிஞர்கள் பலர் பேசினார்கள் என்றாலும் கோவிந்தராசனார் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எது உண்மை அல்லது இரண்டுமே உண்மைதானா? இருவரும் அவரவர் வழியில் இதைக் கண்டடைந்தார்களா?

காப்பாளர் டீ கிளாஸை ஒரு ஓரமாக வைத்துவிட்டு எழுந்தார்.

”காப்பாளர் இப்படி இருக்கிறாரே” என்றாள் முல்லை.

“டாவின்ஸி கோட் படித்த பாதிப்பா?”

முல்லை மரியாதை காட்டும் விதத்தில் முன்னால் சென்று அவரை எதிர்கொண்டாள். அவரும் புன்னகைத்து அதை ஏற்றுக் கொண்டார்.

“சென்னையிலிருந்தா மேடம்?” மேடம் என்ற சொல்லுக்கு காப்பாளர் இன்னும் பழக்கமாகவில்லை. ஆனால் இது போன்ற சின்னப் பெண்களை பழைய வழக்கப்படி ‘மெட்ராஸிலிருந்தாம்மா’ என்று கேட்க ஏதோ அந்நியத்தன்மை தடுத்தது. பழகுவதைப் பார்த்து முடிவு செய்து கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டார்.

“பழைய பூம்புகார் அகழ்வாராய்ச்சி நடந்த இடங்கள் எங்கே சார் இருக்கு? கடலுக்குள்ள ஆராய்ச்சி நடந்த இடங்களைப் போய்ப்பார்க்க முடியுமா?” அத்தனை கேள்விகளுக்கும் பதில் சொல்லக் கூடியவர் அவர் ஒருவர் மட்டும்தான் என்று இந்த அத்துவானக் காட்டில் அவளுக்குத் தோன்றியது. தான் எதிர்பார்த்து வந்த மாபெரும் நகரின் வரைபடத்தை அவர் எடுத்து முன்னால் வைப்பார் என்று அவள் எதிர்பார்ப்பதைப்

போலத்தெரிந்தது. ஆனால் காப்பாளர் கேள்விகளை வேறுவிதமாக அணுகினார்.

“ஒண்ணும் பிரச்சினையில்லம்மா. மணிக்கிராமம் என்கின்ற இடத்தில் ஒரு பழங்கால படகுத்துறை இருக்கு. அப்புறம் சம்பாதி கோவில் பக்கத்துல ஒரு பழைய புத்த விஹாரத்தோட அஸ்திவாரம் மட்டும் தெரியும். அப்புறம் சம்பாதி கோவில் . . . அவ்வளவுதான். ஒரு ஆட்டோ எடுத்துட்டு ரவுண்ட் அடிச்சீங்கன்னா ரெண்டு மணிநேரத்துல எல்லாத்தையும் பார்த்திடலாம்.”

“அவ்வளவுதானா?” தெப்பக்குளம் போன்ற ஒரு பிரம்மாண்டமான இடத்தில் குழி தோண்டப்பட்டு நூற்றுக்கணக்கான பேர்கள் மும்முரமாக இயங்கிக் கொண்டிருக்கும் புதைபொருள் ஆய்வுகள். . .

“அதெல்லாம் மொதல்ல நடந்ததும்மா. . .” காப்பாளர் இயல்புநிலைக்குத் திரும்பினார். இரக்கமே இல்லாமல், “இப்ப இவ்வளவுதான்” என்றார்.

“கடலுக்குள் ஆராய்ச்சி நடந்தது, உள்ளே கட்டிடங்கள் தெரியும் என்று படித்தேனே?”

”புகாரின் சில பகுதிகள் கடலுக்குள் எட்டு கிலோமீட்டர் தொலைவில் மூழ்கியிருக்குன்னு சொல்றாங்கம்மா. ஆனா அங்க போக வழியில்லயே! யாராவது மீனவரோட போனாலும் கடலுக்கு அடியில இருக்கறது எப்படித்தெரியும்?”

“தெரியாதா?”

“தெரியவே தெரியாது”

“வேறு யாராவது ஆர்க்கியாலஜி பற்றி சொல்றவங்க. . புரொபஸர்ஸ்...” முல்லை இதைக் கேட்டிருக்கக் கூடாது. காப்பாளர் புண்பட்டார்.

“என்னைத் தவிர இங்க வேற யார் இருக்காங்க?, இது தவிர சிலப்பதிகாரத்தின் வரலாற்றுச் சின்னங்கள்னு பார்த்தால் மதுரையில் உள்ள கோவலன் பொட்டல், கம்பம்; பக்கத்துல மலைமேல; இருக்கற கண்ணகி கோவில் தவிர/ வேறொண்ணும்; எனக்குத் ; தெரிஞ்சு

இல்லை. பிரமிட் இருக்கும் தாஜ்மகால் இருக்கும்னு கற்பனை பண்ணிட்டு வந்தா யார் பொறுப்பு?" என்றபடி திரும்பி நடக்கத் தொடங்கினார்.

முல்லை அதைவிட அதிகக் காயம் பட்டிருந்தாள்

நவீனுக்கு சிரிப்பு வந்தது. சிரித்தால் அவள் கோபம் தன்மீது திரும்புமோ என்ற பயமும் தோன்றியது.

"லூசுத்தனமா பேசாதே. அவருக்கு அவ்வளவுதான் தெரியும் இல்லாட்டி அவ்வளவுதான் இருக்கு. அவர்மேல கோபப்பட்டு என்ன ஆகப்போகுது? சொல்லப்போனா இவர் பரவால்ல. சென்னைல எந்த மியுஸியத்திலயும் செல்போன்ல கூட ஒரு ஸ்நாப் அடிக்க முடியாது. இங்க வீடியோவே எடுத்தோம்."

"அந்த லட்சணத்துல அட்மினிஸ்ட்ரேஷன் இருக்கு" முல்லையின் பேச்சில் லாஜிக்கே இல்லை. புகாரிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் தர்மக்குளம் என்ற சிறிய ஊர் இருந்தது. பதினான்கு மணிநேர மின்வெட்டில் கடைவீதியில் இருந்த கடைகள் எல்லாம் இருண்டு கிடந்தன. வேறு சந்தர்ப்பமாக இருந்திருந்தால் கரிப்பிடித்த ஓட்டலும், சற்று அழுக்கான மேஜையும் முல்லைக்கு இத்தனை அருவெறுப்பாக இருந்திருக்காது. நவீன் முன்னால் வைக்கப்பட்ட அழகான கெட்டியான அடர் பச்சை வாழை இலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். " இலை பார்த்தியா!"

"வெங்காயம்"

சாப்பிட்டால் அவள் மனநிலை சற்று மாறும் என்று நினைத்தான். ஆனால் அரைகுறையாகக் கொறித்த உணவு அவள் எரிச்சலை இன்னும் அதிகமாக்கத்தான் செய்தது. அவன் முடிப்பதற்காகக் கூடக் காத்திருக்காமல் இலையை மூடிவைத்துவிட்டு வெளியே வந்து நின்றாள். நவீன் அவள் இலையையும் சேர்த்து எடுப்பதைப் பார்த்து ஓடி வந்து வாங்க முயன்றாள். நவீன் சிரித்து மறுத்துவிட்டான். டெல்லியிலிருந்து ஆவணப்படமெடுக்கத் தனியாகக் கிளம்பி வந்துவிட்டதாலேயே அவளால் எல்லா இடத்திலும் சமாளிக்க முடியும், எதை வேண்டுமானாலும் சாப்பிடவும், எங்கு வேண்டுமானாலும் படுக்கவும் முடியும் என்று

நினைத்திருந்தது பெரிய தவறுதான்.

பெண் நண்பர்கள் உறவினர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் அவனுக்குத் தெரிந்ததுதான். அவர்களைப் பட்டினி போடுவதைவிட சாப்பிட வைப்பது சிரமம் என்று தோழர்கள் கிண்டலாகச் சொல்வார்கள். மத்தியதர வர்க்கப் பழக்கவழக்கங்களில் இருந்து விடுபடுவது ஆண்களைவிடப் பெண்களுக்குச் சிரமமாக இருக்கிறதா அல்லது தாங்கள் விடுபட்டுவிட்டதாக ஆண்கள் கலைத் தேர்ச்சியுடன் நடிக்கிறார்களா என்று பட்டிமன்றமே நடந்திருக்கிறது. கண்ணகியைத் தவிர வேறு எந்த அரசியலும் இல்லாத முல்லையை இங்கு அழைத்து வந்தது தவறுதான். ஆனால் வேறு ஓட்டலை எங்கு தேடுவது? ரூம் பாய் யாராவது இருந்தால் அறைக்கே கொண்டுவரச்சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அவனுக்குத் தூக்கம் கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. "அறைக்குப் போகலாமா?" என்று கேட்டான். முல்லை "அங்கே போகலாம்" என்று மூன்று மாடியில் நீளமாகத் தோன்றிய அரசு லாட்ஜைக் காட்டினாள். வழக்கமான புகார் கட்டடங்களைப் போலவே அதுவும் பாழடைந்து கிடந்தது. ஒரு ஈ காக்கை இல்லை.

அரசு இந்த நகரை ஒரு வரலாற்றுச் சுற்றுலாத்தலமாக வளர்த்தெடுக்கும் நோக்கில் கட்டிய பல கட்டிடங்களில் இந்த லாட்ஜும் ஒன்று. ஆனால் போதுமான பராமரிப்பின்றியும், கடல் காற்றிலும் சிதைந்து போயிருந்தது. அதனால் இங்கு யாரும் தங்குவதில்லை போலிருக்கிறது. ஏராளமான மதுபாட்டில்களும், சிகரெட் பெட்டிகளும் கிடந்தன. எல்லா இடங்களிலும் குப்பை அப்பிக் கிடந்தது. நாய்கள் விரோதமாகப் பார்த்தபடி விலகிப் போயின. வானில் மழை மேகங்கள் தென்பட்டாலும் வெக்கை அனலாகக் காந்தியது. வராந்தாவில் உட்கார மனமின்றி முல்லை மேலும் கீழும் நடந்தாள்.

"பூம்புகாரே இப்படியிருக்கும் போது இந்த ஹைவே காலத்தில 2000 வருசஷத்துக்கு முன்னாடி கண்ணகி போன வழியில என்னத்தைப் பார்க்கமுடியும்! என்ன மிச்சமிருக்கும்? நல்லா ஏமாந்துட்டோம்... இங்க ஒண்ணுமே இல்ல, கிளம்பலாம். நைட் பஸ் ஏதாவது இருக்கா பாரு"

“வெறுப்புல முடிவு பண்ணாதே முல்லை. க்யூரேட்டர் சொன்ன இடங்களை நாளைக்கு பார்த்துட்டு முடிவுசெய்யலாம். அவசரப்படாதே”.

“ அந்த இடங்களை நான் நூறு தடவை நெட்ல பார்த்திருக்கேன் . . . போகலாம்”

விருந்தினர் மாளிகையினுள் நுழைந்ததும் வாட்ச்மேன் சிரிப்புடன் வரவேற்றார். அவருக்கும் ஆட்களைப் பார்த்தால் மகிழ்ச்சியாக இருக்கும் போலிருக்கிறது.

‘வாங்க’ எல்லாம் பார்த்தீங்களா? எப்படியிருக்கு? ரொம்ப டயர்டா?” என்றார். நவீன் “நாளைக்குப் பார்த்துக்கலாம்னு வந்துட்டோம்” என்றான்.

வாட்ச்மேனுக்கு இங்கிதமே இல்லை. “ஏன் நாளைக்கு? ஒரு ரவுண்ட் அடிச்சிருந்தீங்கன்னா முடிச்சிருக்கலாமே மணிக்கிராமம் படகுத்துறை... சம்பாதி கோவில்...”

முல்லை ‘ஷிட்’ என்றது நவீனுக்குக் கேட்டது. அவன் அப்போதுதான் அருகே ஒரு சோபாவில் உட்கார்ந்து ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்த ஸ்ரீகுமாரைப் பார்த்தான். அவருக்கும் அது கேட்டிருக்க வேண்டும். சற்று ஆச்சரியத்துடன் தலையைத் தூக்கிப்பார்த்தார்.

“கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு, காலைல பார்த்திட்டு சென்னைக்குக் கிளம்பலாம்னு . . . “

முல்லை எழுந்து அறைக்குள் சென்றாள். பின் தொடர்ந்த நவீன் வாட்ச்மேனிடம் எதிரே உட்கார்ந்திருந்தவர் யார் என்று சைகையில் கேட்டான். அந்த மனிதரையும் அவர் உடைகளையும், புத்தகத்தையும் பார்த்தால் ஏனோ பொதுப்பணித்துறை அதிகாரி போலத் தோன்றவில்லை.

“ஸ்ரீகுமார் நேமிநாதன்னு பேர். ரெண்டு மூணுநாளா இங்கதான் தங்கியிருக்கார். எங்கியோ போவாரு, வருவாரு, படிப்பாரு, எழுதுவாரு, தோணினா ஏதாவது சாப்பிடுவாரு. விசித்திரமான ஆள்” கிசுகிசுத்தபடியே வாட்ச் மேனும் அறைக்குள் நுழைந்து விட்டான்.

“ஜன்னலத் தொறந்து விட்டீங்கன்னா கடல் காத்து சும்மா சொகமா வீசும்.

ஏதாச்சும் வேணும்னா கூப்பிடுங்க சார். நான் கீழ தான் இருப்பேன்;" அவன் கிளம்பியதும் முல்லை தொப்பென்று கட்டிலில் விழுந்தாள்.

"நான் முன்னாடி ரூமில ;படுத்துக்கறேன். நீP ரெஸ்ட் எடுத்துக்கோ. எதுவா இருந்தாலும் காலைல முடிவு பண்ணலாம். அவசரப்பட வேண்டாம்." என்றான் நவீன். அவன் சொன்னது எதையும் அவள் முழுமையாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அந்த நாளில் அதற்குப் பின்பு நடந்தவற்றை நினைவுபடுத்திப் பார்க்க முல்லை பலமுறை முயன்றும் அவளால் ஒருபோதும் முழுமையாகக் கோர்வைப்படுத்த முடிந்ததேயில்லை. வெளியே வானம் இருண்டது. அறையும் இருண்டு போனது. மழை கொட்டி கும்மென்ற மண் வாடை அறையில் நிறைந்தது. மழைத்துளிகளுடன் வீசியடித்த காற்று அறையையும் கொஞ்சம் நனைத்தது. எதுவும் அவள் மனதில் பதியவே இல்லை. நவீன் திடீரென்று உள்ளே நுழைந்து விளக்கைப் போட்டு புரோட்டா, சப்பாத்தி இரண்டையும் நீட்டி "டின்னருக்கு எது வேணும்? கண்ணை மூடி ஏதாவது ஒண்ணைத் தொடு" என்றவன் திரையை விலக்கிப் பார்த்து "மழை சுத்தமா நின்னுடுச்சு" என்றான்.

"மழை பெய்ஞ்சுதா?"

"சரியான கும்பகர்ணி." "

"மணி என்ன?"

"ஒன்பது"

."நீ என்ன செய்திட்டிருந்தே?"

"பால்கனியில் நான் ஒரு சிகரெட், எதிரே இருக்கும் தாடிக்காரர் ஒரு சிகரெட். கொஞ்ச நேரத்துல பார்த்துச் சிரிக்கற அளவுக்கு முன்னேறிட்டோம். இரண்டு பேருக்கும் அவரவர் யோசனை அதனால் சேர்ந்து ஒரு சிகரெட் கூடக் குடிக்கவில்லை".

"ரொம்பக் கவலை" என்றாள் முல்லை.

"சரிம்மா தூக்கத்தைக் கண்டினியூ பண்ணு. காலைல பார்க்கலாம்" என்றபடி வெளியே சென்றான்.

முல்லை சற்று நேரம் ஜன்னலருகே நின்று கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வரவேற்பறைக்கும், படுக்கையறைக்குமான கதவு திறந்திருந்தது. அதை மூடினால் இவன் பாத்ரூமுக்கு என்ன செய்வான், அது தவிர கதவை மூடுவது நாகரீகமானதா? கதவைத் திறந்து வைத்துக் கொண்டு எப்படித் தூங்க முடியும்? நவீன் வெளிக்கதவை திறந்தே வைத்திருந்தான்.

“ஏதாவதுன்னா எழுப்பு” என்றபடி முல்லை கதவைத் தொட்டாள்.

நவீன் “பரவால வெளிய பாத்ரூம், தண்ணீர் எல்லாம் இருக்கு நீ சாத்திக்கோ!” என்று அவள் பிரச்சினையைத் தீர்த்து வைத்தான். ”தேங்க் காட்’ நிம்மதிப் பெருமூச்சுடன் அவள் கதவை மூடித் தாளிட்டாள்.

நான்கு ஐந்து மணிநேரம் தூங்கியது போலவே இல்லை. தூக்கம் இன்னும் விழிகளில் மிச்சமிருந்தது. அறையிலிருந்து மொட்டை மாடிக்குச் செல்லும் கதவைத் திறந்தால் கடலையும் அலைகளின் முகத்தில் தெரிந்த வெள்ளை நுரைகளையும் பார்க்க முடிந்தது. எல்லையற்ற ஓய்வற்ற கடல். காலையில் போகத்தான் வேண்டுமா? எல்லாம் அவ்வளவுதானா? தனது பலவீனமும், திடீரென்று மாறிய மனமும் அவளுக்கே அதிர்ச்சியளித்தது. நினைத்து நினைத்து முடிவெடுப்பதும் திடீரென்று தூக்கிவீசிவிட்டுப் போய்விடுவதுமாக இருக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவளா தான்? எவ்வளவு நிதானமாகத் திட்டமிட்டு போராடி இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்தாள் . . . எல்லாம் சரிதான். ஆனால் யதார்த்தத்தைப் புறக்கணித்துவிட்டு இல்லாத ஒன்றைத் தேடி தன்னை வதைத்துக் கொள்வது சரியா? கண்ணகியைப் பற்றி வேறுவிதமாக ஆய்வைத் தொடரலாம்தானே?

உடலும் மனமும் சோர்ந்து வந்தது. எப்போது படுத்தாள் என்று அவளுக்கு நினைவில்லை. எவ்வளவு நேரம் தூக்கமா விழிப்பா என்று புரியாத நிலையில் கழிந்தது என்றும் தெரியவில்லை. கடல் அலைகளின் இரைச்சல் சற்று அதிகமாகிவிட்டதாகத் தோன்றியது. இல்லை. இது அலைகளோ, காற்றோ, மழையோ இல்லை. . . இவ்வளவு இனிமையாக ஏதோ ராகம் போல . . . யாரோ வீணை வாசிக்கிறார்கள். . . இல்லை யாழ் . . . இப்போது ஏது யாழ்? . .அருகில் எங்கோ சிலம்பு அணிந்த

கால்கள் துள்ளி ஓடுகின்றன. கலகலவென்று சிரிக்கும் சத்தம். சிறிது நேர அமைதிக்குப் பின்பு சோகம் ததும்பும் இரண்டு கண்கள் தோன்றுகின்றன. அந்தப் பெரிய கரிய விழிகளில்தான் எவ்வளவு துயரம்!

முல்லையின் காதருகே மென்மையும் துயரமும் நிறைந்த ஒரு குரல்; தெளிவாகக் கேட்கிறது. ”முல்லை நீ தேடி வந்தது வெறும் கட்டிடங்களையா? புதைந்து கிடக்கும் இந்த நகரத்தின் ஆன்மா இங்கேதானே இருக்கிறது, நானிருப்பது தெரியவில்லையா உனக்கு?”

முல்லை துள்ளி எழுந்தாள். முன்னறையிலிருந்து; நவீன் சீராக மூச்சுவிடும் ஓசை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. தான் கண்டது கனவா நனவா என்ற குழப்பத்துடன் கனவில் மிதப்பது போல், மொட்டைமாடி கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.. தொலைவில் ஆளரவமற்ற விசாலமான மணல்பரப்பில் கடலை நோக்கி உடைகள் காற்றில் படபடக்க ஒரு பெண்ணுருவம் சென்று கொண்டிருந்தந்தது. நள்ளிரவில், வெட்டவெளியில், இருளில் ஒரு பெண் தனியாக கடலை நோக்கிச் செல்வது திகைப்பூட்ட நவீனை அழைக்க உள்ளே திரும்;பினாள். அந்த அரை நொடியில் கடற்கரை வெறுமையாகக் காட்சியளித்தது.

நவீனும் சரியாகத் தூங்கவில்லை. இந்தப்பெண் இப்படி எல்லாத்திட்டத்தையும் போட்டு உடைப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. முடிவற்ற விவாதங்கள், சந்தேகங்கள், குழப்பங்களுக்கு இடையில் ஒரு வாரம் சுற்றித்திரிய மனம் ஏங்கித்தான் முல்லையோடு வர ஒப்புக் கொண்டிருந்தான். அவனுக்கு கண்ணகி, சிலப்பதிகாரம் மீதெல்லாம் பெரிய ஆர்வம் இல்லை. ஆனாலும் இந்தப் பயணம் பிடித்திருந்தது. ஒப்புக்கொள்ள மறுத்தாலும் முல்லையின் அண்மையும் அவனுக்குப் பிடித்துத்தானிருந்தது. சொல்லப்போனால் முல்லை அளவுக்கே அவனும் காவிரிக்கரைப் பயணத்தை எதிர்பார்க்கத் தொடங்கியிருந்தான். தமிழகத்தின் வரலாற்று மையங்கள் வழியாகச்செல்லும் இந்தப் பயணம் மக்களுக்கு இன்னும் நெருக்கமாகத் தன்னை கொண்டு செல்லும். தனது சந்தேகங்கள் சரியா, தனக்குச் சொல்லித்தரப்பட்டவை சரியா என்று உறுதிப்படுத்திக் கொள்ள இந்தப் பயணம் உதவும் என்று நினைத்திருந்தான். இப்போது இப்படி. . .

சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றான். காலை நேர ஈரக்காற்றில் மழைத்துளிகள் கலந்திருந்தன. எதிர் அறை மூடியிருந்தது. குழப்பத்திற்கு முடிவு காண திட்டவட்டமான கேள்விகளை உருவாக்கி விடைகாண வேண்டும் என்று ஜோஸப் சொல்வார். நவீனுக்கு எப்போதுமே கருப்பு வெள்ளை ஆசாமிகள் மீது ஒரு மரியாதை உண்டு. உண்டு அல்லது இல்லை என்று திட்டவட்டமாக முடிவெடுக்கும் இத்தகையவர்களை 'புரட்சிகர இயந்திரங்கள்' என்று கட்சியில் அழைப்பார்கள். அவர்கள் நவீன் போன்றவர்களை மத்தியதரவர்க்க அறிவு ஜீவிகள், ஊசலாட்டப் பேர்வழிகள் என்பார்கள். ஆனால் பு.இ.க்களுக்கு அந்தப் பட்டம் பிடித்திருந்தது என்ற சந்தேகம் நவீனுக்கு எப்போதும் உண்டு.

பு.இ. பாணியில் இப்போது முடிவெடுக்க வேண்டும் என்று நினைத்தான். தனது விருப்பம் தமிழக மக்களின் வாழ்வைத்தேடும் பயணம் மேற்கொள்வதா? அல்லது முல்லைக்கு உதவுவதா? முதலாவது என்றால் முல்லை வந்தாலும் வராவிட்டாலும் பயணத்தைத் தொடரத்தான்

வேண்டும். இல்லை என்றால் அவளோடு சென்னை திரும்பி கட்சியோடு விவாதத்தைத் தொடர வேண்டும்.

மக்களைத் தெரிந்து கொள்வது என்ற எண்ணம் தற்செயலாகத் தோன்றியது. அத்தகைய பயணம் மேற்கொள்ள தனது தேவைகள் குறித்து திட்டவட்டமான முடிவுகள் தேவை. தன்னிடம் அவை இல்லாத நிலையில் இப்போது போனால் அது அரசியல் பாதை குறித்த தேடலாக இல்லாமல், ராகுல்ஜி ஊர்சுற்றிப் புராணத்தில் சொல்வது போல பயணம் செய்யும் விருப்பத்தின் அடிப்படையிலான பயணமாகவே இருக்கும். நவீன் முல்லையோடு திரும்புவது என்று முடிவு செய்தான். பின்பு கேமராவை எடுத்துக்கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றான்.

கரையில் படகுகள் எதையும் காணவில்லை.. துறைமுக வேலைக்காக குவித்து வைக்கப் பட்டிருந்த கருங்கல் குவியல்களின் மீது சிலர் கூட்டமாக உட்கார்ந்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மீனவர்களாக இருக்க வேண்டும். ஒரு வயதானவர் நண்டுகளைப் பிடித்துக் கொண்டிருந்தார். வானத்தை மேகங்கள் மூடியிருந்தன. விசாலமான கடற்கரையில் அவர் தனியாக நடந்து கொண்டிருந்தது விசித்திரமாகத் தோன்றியது. நவீன் அவரை நோக்கி நடந்தான். இரண்டாவது பிளாஷ் வந்ததும் அவர் திரும்பிச் சிரித்தார். கருத்து சுருக்கம் விழுந்த முகம், ரத்தநாளங்கள் புடைத்த கரங்கள் . . .

“சென்னையா?”

“ஆமாம்”

“டூரிஸ்டா?”

“இல்லீங்க, டாகுமெண்டரி. ஆவணப்படம் எடுக்கிறோம்”

அவர் பீடியை பற்ற வைத்து கொண்டே “என்ன படம் எடுக்குறீங்க? மீனவர் பத்தியா?” என்றார்.

“சிலப்பதிகாரம் கண்ணகி சம்மந்தமா .....” நவீன் சற்றுக் குற்ற உணர்ச்சியுடன்தான் சொன்னான்.

“இங்க பழைய படகுத்துறை , சம்பாதி கோவில் எல்லாம் இருக்கு

போய்ப் பாருங்க, நல்லா இருக்கும்."

"ம், இன்னிக்கு போறோம்.

நவீன் சரி என்று தலை ஆட்டியவாறே அங்கிருந்து கிளம்பினான்.

இரண்டு அடி நகர்ந்தவனை மீனவர் அழைத்தார்.

"தம்பி, பக்கத்தில கோடியக்கரையிலயிருந்து மீன் பிடிக்க போன நம்ம ஆளுங்க இருபது பேர புடிச்சுட்டு போயிட்டாங்க. அதபத்தியும் எதாச்சும் படம் எடுங்க உங்களுக்கு புண்ணியமா போகும்."

நவீன் செயலற்று நின்றான். மேற்குத் தொடர்ச்சி மலை மக்களுக்கும் இந்த வங்கக் கடல் மீனவர்களுக்கும் இடையில்தான் தமிழகமே இருக்கிறது. கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவனும், காட்டில் ஆடு மேய்க்கும் பழங்குடியும் கைது செய்யப்படுவதுதான் நாகரீக சமூகமா? இந்த இருவரையும் மற்றவர்கள் எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருக்கிறார்கள்?

ஒரு முறை புயலின் போது மீனவர்களுக்கு தயிர்சாதம் அளிக்கப்பட்டது. மீன் இல்லாத உணவைத் தின்ன முடியாமல் வீசியெறிந்த மீனவர்கள் எள்ளி நகையாடப்பட்டார்கள். மத்தியதர மக்களோடு சுவரில் முட்டி கொள்வதைப் போல போராடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக இந்த மக்களிடம் இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். . .

அதற்குள் ஏதோ பேச்சு நடப்பதைப் பார்த்து சிலர் கூடிவிட்டனர். 'கண்ணகி படமாம்' என்று ஒரு குரல் கேட்டது. அதில் கொஞ்சம் எள்ளல் இருப்பது போலத் தோன்றியது.

"துறைமுகம் வருகிறதே பரவால்லயா?" நவீன் நட்புக் கரம் நீட்ட முயன்றான்.

"ரொம்பப் பரவால்ல" என்றான் அந்தக் குரலுக்கு உரியவன். உயரமும் ஒடிசலுமாக உரமேறிய மூங்கில் போலிருந்தான் ஒளிவு மறைவற்ற வெறுப்புடன் நோக்கிய அந்த இளைஞன்.

"துறைமுகம் வந்து கடலை ஆழம் பண்ணிட்டா பெரிய கப்பல் வரும்.

கடல் ஊருக்குள்ள வரும். தடுக்க கல்லு போட்டா சாக்கடை கடலுக்குப் போகாம ஊரே நாறும். கப்பல்காரன் ரொம்ப நல்லவன். . .கடல்ல இருக்கிறத சரிசமமா பிரிச்சுக்கலாம்னு சொல்லப்போறான்."

"சண்ட போடணும் பாஸ், அடிக்கணும். . . "

இளைஞன் சட்டென்று சினேகிதமாகிச் சிரித்தான். "தலைவர் இருக்காரா இல்லையா?"

நவீனுக்கு இதற்கு மேல் எந்தச் சுமையையும் தாங்க முடியாது என்று தோன்றியது. இவ்வளவு பிரச்சினைகளுக்கு இடையில் சென்னையில் போய் உட்கார்ந்து கொள்வதா? அடையாளக் கூட்டங்கள் நடத்திக் கொண்டு . .. தன்னைப் போன்ற ஆட்களோடு விவாதம் நடத்திக் கொண்டு. . .

அவன் அறைக்குள் நுழைந்தபோது முல்லை நாற்காலியில் உட்கார்ந்து ஜன்னல் வழியாகக் கடற்கரையையே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நவீனை பார்த்தவுடன் சிரிப்புக்கு மாறினாள்'

'அட சிரிப்பு கூட வருதே! சும்மா கடலையும் ,மீனவர்களையும் ஷூட் பண்ண போயிருந்தேன் , டாக்குமென்டரிக்கு பயன்படும்ல..."

" நவீன், நைட் அவள பார்த்தேன்."

" யார?..".

"அதுதான் கண்ணகி, மாதவி, இல்ல . . . மணிமேகலா தெய்வம். .கோவலனுடைய குலதெய்வம். என்கிட்டே பேசினா" .

நவீன் குழம்பிப் போய் அவளை உற்றுப் பார்த்தான். "அது . . . நேத்து கொஞ்சம் அதிகமா வெயில்ல சுத்திட்டோம் ,அதுதான் . என் கனவுல கூட மாதவி வந்து டான்ஸ் ஆடினா."

" ஸ்டாப் இட். விளையாடாத, நான் சொல்றத நம்பு"

"ஹே, நீ ரொம்ப இன்வால்வ்மென்டோட ஒரு விஷயம் செய்யும்

போது அதை பத்தியே தான் உன் மைண்ட் யோசிச்சிட்டே இருக்கும் . அதோட வெளிப்பாடு தான் இந்த மாதிரி கனவெல்லாம்".

"ஆனா இது கனவு இல்லையே, நான் மாடிக்கு போய்ப் பார்த்தேன் ,அவ கடற்கரையில நடந்துபோனா"

" அப்புறம் . ." .

"சார் ஆட்டோ சொல்லீருந்திங்கள்ள வந்துடிச்சு" ,என்று வாட்ச்மேன் தலையை நீட்டிச் சொன்னான்.

" இதோ ,கிளம்பி வந்திடறோம்"

வாட்ச்மேன் முல்லையிடம் திரும்பினான்.

"ஏம்மா,நைட் 1 மணிக்கு மொட்ட மாடிக்கு போயி என்ன பண்ணிட்டு இருந்தீங்க. நான் கீழ இருந்து பார்த்து கூப்பிட்டேன் ... நீங்க திரும்பவே இல்ல. கடலயே பாத்துட்டு இருந்தீங்க... சரி சார் நான் கீழ இருக்கேன் ,கிளம்பி வாங்க"

முல்லை நவீனை பார்த்தாள். திகைப்பு அவன் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. பூம்புகார் எத்தனை அதிர்ச்சிகளைக் கொடுக்கிறது. "ஸாரி நவீன். கொஞ்சம் பலவீனமாயிட்டேன். போலாம்"

"'எங்க?"

"மேற்குக் கடற்கரையை நோக்கி. கண்ணகி சிலையா நிக்கற கொடுங்கலூர் வரை. இனி பலவீனம் வராது." வரவே வராது என்று நவீனுக்கும் உறுதியாகத்தோன்றியது. இருவரில் அவள் முடிவெடுக்கக் கூடியவளாக இருக்கிறாள். பு.இ அல்லது வேறு ஏதாவது இ! நவீனின் மனம் லேசானது.

6

வணிகக் கிராமம் என்ற சொல்தான் மணிக்கிராமம் ஆகியதாம் . மணிக்கிராமம் என்ற வணிகக் குழுவின் தளமாக இருந்ததால் அந்தப் பெயர் என்று ஒரு கருத்தும் இருக்கிறது. அங்கே இப்போது எந்த வணிகமும் நடப்பதாகத் தெரியவில்லை. வரிசையாக சின்னஞ்சிறிய காலனி வீடுகள் காணப்பட்டன. பெண்கள் அடிபம்ப்பில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சின்ன சண்டை கூட நடந்து கொண்டிருந்தது. சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்கள் ஆட்டோ வந்ததைப் பார்த்து விட்டு பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் திரும்பித் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். ஆட்டோ டிரைவர் பம்ப்புக்கு சற்று தொலைவில் ஆட்டோவை நிறுத்தி ஒரு இரும்பு ஷெட்டைக் காட்டி "இதுதான்" என்றார். உள்ளே பத்தடி ஆழத்தில் குறுகலான லாடம் போன்ற கட்டுமானம் காணப்பட்டது. முல்லை படங்களில் பார்த்திருந்ததைவிட நேரில் பார்க்க படகுத்துறை பெரிதாகத் தோன்றியது. ஆனால் மருந்துக்குக் கூட அருகில் குளமோ, குட்டையோ, ஆறோ, வாய்க்காலோ இல்லை. இருந்ததற்கான அறிகுறியும் இல்லை. சுற்றிலும் களை மண்டிய வயல்கள்தான் தென்பட்டன. வேடிக்கைதான். .

ஆனால் ஏதோ ஒன்று இருந்திருக்க வேண்டும். இந்தப் படகுத்துறைகூட மண்ணில் புதைந்திருந்ததாம். யாரோ ஒரு விவசாயி எதற்கோ நிலத்தைத் தோண்டும் போது பெரிய பெரிய செங்கற்களால் கட்டப்பட்டிருந்த இதைப் பார்த்துத் தகவல் கொடுத்தாராம்.

"இந்தச் செங்கற்கள் சாதாரண செங்கற்களைவிட மூன்று நான்கு மடங்கு பெரியவை. படகுகள் இந்தப் படகுத் துறையோரம் வந்து நின்று பொருட்களை இறக்கும். வணிகர்களும், பெரும் பணக்காரர்களும் அவற்றைக் கொண்டு செல்வார்கள். காவிரிப்பூம்பட்டினம் முழுவதும் குறுக்கும் நெடுக்குமாக கால்வாய்கள் இருந்தன. அதுவே முக்கிய சரக்குப் போக்குவரத்து வழியாக இருந்திருக்கலாம்னு சொல்றாங்க" முல்லை நவீன் படம் பிடிக்கும் உணர்வே இல்லாமல் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் பேசிக்கொண்டே போனாள். பரவாயில்லை, தமிழ் நன்றாகத்தான் இருக்கிறது என்று நவீன் நினைத்துக் கொண்டான்.

துருவேறிப்போன தொல்பொருள் ஆய்வுத்துறையின் பச்சை போர்டு முல்லை சொன்னதை அப்படியே ஒப்பித்தது. படகுத்துறை என்றதும் நவீன் வேறு ஏதோ கற்பனை செய்திருந்தான். பிரம்மாண்டமான கற்படிக்கட்டுகள் வரிசையாக இறங்கும். ஆறு கீழே தெரியும் என்று நினைத்திருந்தான். நிறைந்தோடும் தண்ணீர், வந்து நிற்கும் படகுகள் . . . ஆனால் படகுத்துறை ஒரு குமிழ் பல்பு போல நீண்டிருந்தது. நடுவே நீளமான குறுகிய குழிபோல விட்டு இருபுறமும் கட்டப்பட்டிருந்தது. எவ்வளவு சிறிய படகாக இருந்தாலும் இரண்டு படகுதான் நிற்க முடியும். இது துறைமுகம் அல்ல. படகுத்துறை. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தக் கட்டுமானம் அனைத்தையும் தாங்கி நின்று கொண்டிருக்கிறது. நவீன் அதன் பழமையை சுற்றிலும் படர்ந்திருந்த பாசிகளோடு, ஈரவாடையோடு பதிவு செய்ய முயன்றான்.

புத்த விஹாரத்தின் சிதைவுகள் முல்லை எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும் அரை ஏக்கர் பரப்பளவில் நேர்த்தியான பராமரிப்புடனிருந்தது. சுற்றிலும் க்ரில் கொண்டு அழகான வேலியமைக்கப்பட்டிருந்தது. புத்த விஹாரம் ஒரு செங்கல் கட்டிடம் அஸ்திவாரத்துடன் நிறுத்தப்பட்டது போலிருந்தது. மணிக்கிராமம் படகுத்துறையைப் போலில்லாமல் இந்த செங்கற்கள் சிறியவையாக, காலத்தால் கருமையேறிப் போயிருந்தன. அந்த அஸ்திவாரச்சுவர்களை வைத்து அது என்னவிதமான கட்டிடம், எப்படியிருந்திருக்கும் என்று கணிக்க முடியவில்லை. தவிர இந்த இடம் குடியிருப்புப் பகுதிகளுக்குள் பளிச்சென்ற வெளிச்சத்துடனிருந்தது வித்தியாசமாகத் தோன்றியது.. வானம் சற்று வெளிவாங்கியிருந்ததால் வியர்க்கக் கூடச் செய்தது.

வழக்கமான தொல்பொருள் ஆய்வுத்துறையின் துருவேறிய பச்சை போர்டுக்கு பதில் அழகான சிறிய மியுஸியம் வளாகத்தின் உள்ளேயிருந்தது. லுங்கிகட்டிக் கொண்டு அப்போதுதான் தூங்கி எழுந்தது போன்ற தோற்றத்துடன் ஒரு காப்பாளரும் இருந்தார். “சும்மா பாத்துட்டு வாங்க, அப்புறம் எக்ஸ்பிளைன் பண்றேன்” என்றார்.

“பிரண்ட்லியா இருக்கார்” என்றாள் முல்லை.

நவீன் குபுக்கென்று சிரித்தான். “அந்த மியுஸியத்துக்காரரும்

பிரண்ட்லியாத்தான் வந்தார். நீதான். . . “ முல்லை வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“இந்த இடம் மண்ணில் புதைந்திருந்தது. வேறு எதற்கோ தோண்டும் போது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது”.

அது பார்த்தவுடன் தெரிந்தது. இடத்துச் சொந்தக்காரரை நினைத்தால் நவீனுக்கு பாவமாக இருந்தது. அவருக்கு உரிய இழப்பீடு அரசு கொடுத்திருக்குமா அல்லது கோர்ட்டுக்கு அலைய விட்டிருக்குமா?

“இந்த எடத்துல மொதல்ல யார் இருந்தாங்க?”.

காப்பாளர் குரலைத் தாழ்த்திக் கொண்டு “எஸ்ஸிக இருந்தாங்க” என்றார். அவர் சொன்ன விதத்தில் தான் எஸ்.ஸி அல்ல, இவர்களையும் எஸ்.ஸியாகக் கருதவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. மேற்கொண்டு அரசையும், இழப்பீட்டையும், மக்களையும் பற்றி அவன் கேட்டிருப்பான். முல்லை இடையில் புகுந்தாள்.

“இது சிலப்பதிகாரத்தில் வரும் ஏழு தெய்வங்களுக்குக் கட்டப்பட்ட கோவில்களில் ஒன்றா சார்? அது ஒன்னு தானே சிலப்பதிகாரத்தில் வரும் புத்த விஹாரம்?’

“மணிமேகலை என்று ஒன்று இருக்கிறது அல்லவா?” காப்பாளர் சிரித்தார். முல்லைக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. மணிமேகலை கதை அவளுக்கு மொத்தமாகத்தான் தெரியும். ஆழமாகப் படித்ததில்லை. தவறுதான்.

“உத்தேசமாக சிலப்பதிகாரம் எழுதப்பட்டு இருநூறு ஆண்டுகள் கழித்து மணிமேகலை எழுதப்பட்டிருக்கலாம் என்று சொல்கிறார்கள். இந்தக் கட்டிடமும் சிலப்பதிகாரக் காலத்திற்குப் பிற்பட்டது. மணிமேகலையில் வரும் அறவாணடிகள்.. அதுதான் மாதவியின் குருவான புத்த பிட்சு இங்குதான் வாழ்ந்தார் என்கிறார்கள். இதுதான் தியான மண்டபம், இதுதான் . . . “

“இதைப்போன்ற பெரிய மண்டபங்கள் கட்டிடங்கள் ஏன் நிறையக் கண்டுபிடிக்கப்படவில்லை? அவையெல்லாம் இதே மண்ணில் புதைந்துதானே இருக்கும்? தேடினால் கிடைக்கும்தானே?”

“கிடைக்கலாம். இங்கிருக்கும் ஒரு மேட்டை மருவத்தூர் மேடு என்கிறார்கள். அது மருவூர்பாக்கமாக இருக்கலாம் என்று மயிலை சீனி வேங்கட சாமி எழுதியிருக்கிறார். தோண்டிப் பார்க்கவில்லை.”

“இது என்னவிதமான பதில்? ஏன் தோண்டிப்பார்க்கவில்லை?” முல்லையால் புரிந்து கொள்ளமுடியவில்லை. “சீனி வேங்கட சாமி பல பொறுப்புகள்ள இருந்தார். ஆனால் அவர் தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சேர்ந்தவர் இல்லை. ஆய்வுத்துறை தோண்டுவதற்கான அவசியம் இருக்கிறதென்று நினைத்தால் கட்டாயம் ஆய்வு நடத்தும்”.

“அப்படியானால் அவரது ஆய்வை தொல்பொருள் ஆய்வுத்துறை ஏற்றுக் கொள்ளவில்லையா?”

“தெரியவில்லை. அது பற்றி விவாதங்கள் நடை பெற்றதாகத் தெரியவில்லை. பல இடங்களில் ஆய்வுத்துறையின் கருத்தும், மற்ற தமிழறிஞர்களின் கருத்தும் வேறுபடும்”

“ஏன்?” இந்தக் கேள்வி சரியா என்று தெரியவில்லை. ஆனால் அவள் யோசிக்கும்முன்பே கேள்வி வந்து விழுந்து விட்டது. காப்பாளர் அரசியல் பேசும் ஆர்வமுள்ளவராக இருந்தார். “படம் பிடிக்க வேண்டாம். கவர்ன்மெண்ட் எம்பிளாயி’ என்று சிரித்தார். ”தொல் பொருள் ஆய்வுத்துறை எல்லாத்தையும் ஆதாரத்தின் அடிப்படையில் பார்க்கும். தமிழறிஞர்கள் தமிழுக்கு எது நல்லதென்று மட்டும்தான் பார்க்கிறார்கள் என்று துறை கருதுகிறது. அதனால் இவர்களை புரொபஷனல்களாகப் பார்ப்பதில்லை. தமிழறிஞர்கள் ஆய்வுத்துறையை பிராமணியமயமானதாகப் பார்க்கிறார்கள். ஒட்டவே ஒட்டாது.”

“பார்ப்பனியம் என்பது உண்மையா?”

“கொஞ்சம் உண்மை.. . தான். ஆனால் பார்ப்பனரல்லாத பல தமிழறிஞர்களும் ஆய்வுத் துறையின் பார்வையை ஒத்துட்டிருக்காங்க. அப்பறம் இது கவர்மெண்ட் தான...”“

“சரி வேறொன்று சொல்லுங்கள். எல்லாமே இங்கே இருக்கிறதென்றால் கடலில் பத்து கிலோமீட்டர் தொலைவில் புதைந்திருப்பது என்ன?

அங்கிருந்து உள்ளே ஐந்து கிலோமீட்டர் வரை அவ்வளவு பெரிய நகரமா புகார்?'

" வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்கள் மண்ணில் புதைந்திருக்கலாம். மக்கள் கடற்கரையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே நகர்ந்திருக்கலாம். காமன் சென்ஸ் தானே?"

புதையுண்ட புத்தவிஹாரத்துக்கு அருகில் இருக்கும் பிரம்மாண்டமான பல்லவநீஸ்வரம் கோவிலுக்குப் பின்புறமாக சம்பாபதி அம்மன் கோவிலுக்குப் போகும் வழி நீண்டது. இருநூறு முன்னூறு மீட்டர் தூரத்தில் சூழ்நிலை முற்றிலும் மாறிப்போனது. இருபுறமும் மரங்களடர்ந்த தார்சாலை. வீடுகள் பழமையானவையாக பெரிய முற்றங்களுடனும், மர வேலிகளுடனும் காணப்பட்டன. ஒரு சந்தில் ஆட்டோ திரும்பியது.

"நிறுத்துங்க" என்று ஏறக்குறைய நவீன் கத்திவிட்டான். பத்தடி அகல மண்பாதையில் துளி வெயிலும் விழவில்லை. அற்புதமான நிழல் பாதை நெடுகிலும் நீண்டு படர்ந்திருந்தது. ஓரத்தில் வளர்ந்திருந்த மரங்களும், செடிகளும், புற்களும் அப்படியொரு பசுமை பூசியிருந்தன. பர்ணசாலை போல பாதையோரம் இருந்த ஒரே ஒரு ஓலைக் கூரை போட்ட வீட்டில் ஆளரவமே இல்லை. எங்கிருந்தோ விட்டுவிட்டுக் கேட்ட பறவைகளின் குரல்கள் ஒரு போர்வைபோல அந்த இடத்தைப் போர்த்திருந்த நிசப்தத்தை இன்னும் அதிகப்படுத்திக் காட்டின. இந்தப் பறவைகளின் குரல்கள் கரகரப்பில்லாமல் ஏதோ ஒரு விதத்தில் பெண்களின் குரல்களை ஒத்திருந்தன. அதனால்தான் இரண்டும் இனிமையாக இருப்பதுபோலத் தோன்றுகின்றன. ஆண்குரல் போலிருப்பதால்தான் காக்கையின் குரல் நாராசமாக இருக்கிறதா? காக்கையைவிட கரகரப்பான ஆண்குரல்கள் மயக்கும் வசீகரத்துடன் தமிழகத்தைக் கட்டிப்போட்டனவே . . . நவீன் முல்லையைப் பார்த்தான். அவள் லயித்துப் போய் பாதையையே பார்த்துக் கொண்டிருந்தாள். யுகங்கள் கடந்து பின்னோக்கிச் செல்லும் பாதை இப்படித்தான் இருக்கும் போலும்.

பாதையின் முடிவில் விரிந்தன காலம் உறைந்து நிற்கும் சம்பாபதி

அம்மன் கோவிலின் சிதைவுகள். பாசிபடர்ந்து சற்றுக் கருமையேறி உடைந்து, சிதைந்து புதர் மண்டிக் கிடந்த கோவில் சுவர்கள் பிரம்மாண்டமான மரங்களின் நிழல்களால் முழுமையாகப் போர்த்தப்பட்டிருந்தன. முன்புறம் தெரிந்த கட்டடத்தைக் கோவில் என்று கண்டு கொள்ள முடிந்தது. பின்னால் இருந்த கட்டுமானம் இன்னதென்றே தெரியாத அளவுக்குச் சிதைந்து போயிருந்தது. கட்டடங்கள் சின்னஞ்சிறிய செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. சுற்றிலும் வயல்கள் விரிந்திருந்தன. மனித நடமாட்டமே இல்லை. கோவிலுக்குப் பின்னே தூர்ந்து போன ஒரு மிகப்பெரிய கிணறு தெரிந்தது. கிணற்றுக்கு அருகில் உட்கார்ந்து குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்த ஸ்ரீகுமாரை இருவருமே பார்க்கவில்லை. ஆனால் சத்தம் கேட்டுத் நிமிர்ந்த அவர் இவர்களை வியப்புடன் பார்த்தார்.

முன்புறம் தெரிந்த கோவில் கோபுரம் மிகக் குட்டையானதாக இருந்திருக்க வேண்டும். உள்ளே ஏதோ வழிபாடு நடப்பது தெரிந்தது. சில படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியே இரண்டு பூதங்களின் சிலைகள் காணப்பட்டன.

“பூத சதுக்கம். . .” என்றாள் முல்லை கிசுகிசுப்பாக.

“பொய் சொன்னால் முழுங்கும் பூதமா?” நவீனும் பதிலுக்குக் கிசுகிசுத்தான்.

“ஆமாம் ஆனால் இரண்டு இருக்கிறதே. . .”

“இரண்டாயிரம் வருஷத்துல குட்டி போட்டுடுச்சா?”

குழம்பிய முல்லை பின்புறம் ஆளரவம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். கெஸ்ட் ஹவுஸில் பார்த்த தாடிக்காரர் நட்புடன் சிரித்தபடி நின்றிருந்தார். “நான் ஸ்ரீ குமார்” என்று முல்லையைப் பார்த்துச் சொல்லிவிட்டு நவீனிடம் கை நீட்டினார். அவனிடம் அறிமுகம் தேவையில்லை என்று நினைத்தார் போலிருக்கிறது.

“நேற்று உங்களால் இரண்டு சிகரெட் அதிகமாகப் பிடித்தேன். புகை டெம்ட் பண்ணிவிட்டது”

“நேத்துக் கொஞ்சம் . . .’நவீன் இழுத்தான்.

“டிஸ்டர்ப்பா இருந்தீங்களா?” முல்லைக்கு வெட்கப்படுவதா, கோபப்படுவதா என்று முடிவெடுக்க முடியவில்லை. இந்த இடத்தில் அவரைப் பார்த்தது அவளது தனிமையைப் பாதித்தது போலத் தோன்றவில்லை. நவீன் மனதுக்குகந்த தோழன்தான், தேடல் உள்ளவன்தான் என்றாலும் முல்லைக்கு ஆர்வமூட்டக்கூடிய விஷயங்களில் அவனுக்கு ஆர்வமோ குறைந்தபட்ச புரிதலோ இல்லாதது தொடர்ச்சியாக அவளைச் சங்கடப்படுத்தி வந்தது. ஸ்ரீகுமார் வெட்டிப்பேச்சுப் பேசுபவரல்ல என்று அவரைப் பார்த்தவுடனேயே தோன்றியது.

“இது பூத சதுக்கம் இல்லை. மணிமேகலையில் வரும் சம்பாபதியம்மன் கோவில். நீங்கள் சொல்லும் பூத சதுக்கம் நகரின் மையத்தில் நாளங்காடியின் நடுவே இருந்தது.”

“மணிமேகலா தெய்வமும் சம்பாபதி தெய்வமும் வேற வேறயா?”.

“மணிமேகலா தெய்வம் கடல் தெய்வம். கடல் பயணம் போறவங்க வணங்கற தெய்வம். கோவலன் கடல் பயணம் போனதா சிலப்பதிகாரத்துல வருதில்லையா! அந்த தெய்வத்தோட பெயரைத்தான் தன் மகளுக்கு வைக்கிறான். சம்பாபதி பூம்புகார் நகரத்தோட இன்னொரு பெயர். அந்த நகரத்தோட காவல் தெய்வம் இந்த சம்பாபதி அம்மன். நிலத்தோட தெய்வம் . . . இந்தக் கோவில் அந்தக் கால சுடுகாட்டுக்குப் பக்கத்துல இருந்ததால இதுக்கு சுடுகாட்டுக் கோட்டம்னு பெயர். சக்கர வாளக் கோட்டமும் இதுதான். இந்தப் பூதங்களுக்குப் பெயர் துவதிகன், சித்திர சேனன்னு மயிலை சீனி வேங்கட சாமி சொல்றார். அதனால் இங்கே தாராளமா பொய் சொல்லலாம்”

“கோவலனும் கண்ணகியும் இங்கே வந்திருப்பாங்களா?”

“கண்ணகி எந்தக் கோவிலுக்கும் போனதா சிலப்பதிகாரத்துல இல்ல. பத்தினிப் பெண்கள் கோவிலுக்குப் போய் கடவுளை வணங்க மாட்டார்கள். கோவலன் ஒருவேளை வந்திருந்தாலும் வந்திருப்பான். ஆனால் அவந்தான் பிஸியான ஆளாச்சே, அதுக்கெல்லாம் எங்கே அவனுக்கு நேரம் இருந்திருக்கப் போகுது. . .”

“ரொம்ப. . .பிஸிதான் ..” முல்லை சற்று இழுத்து அழுத்திச் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தாள். சங்கடப்படுத்தும் அப்பட்டமான சொற்களை நாகரீகமாகத் தவிர்க்கும்போது இனிமையாக இருப்பது போலத் தோன்றுகிறது என்று நினைத்துக் கொண்ட நவீன் வழக்கத்திற்கு மாறாக அவளைச் சற்று அதிகமாக உற்றுப் பார்த்துவிட்டோமோ என்ற குற்ற உணர்வுடன் திரும்பிக்கொண்டான். தனக்கு ஏற்பட்ட பொறாமை ஸ்ரீகுமாரிடமா, முல்லையிடமா என்று அவனுக்குப் புரியவில்லை.

“இப்பத்தான் தரைக்கே வந்த மாதிரி இருக்கு. இங்க வந்ததிலிருந்து ஏதோ ஒரு மாய உலகத்துல இருக்கற மாதிரி தான் இருந்தது. ஆமா சிலப்பதிகாரம் உண்மையிலேயே நடந்திருக்கும்னு நம்பறீங்களா?”

“நான் இந்த பீல்ட்ல வொர்க் பண்ணதில்லை. ஆனா எந்தக் கற்பனையும் ஆகாயத்திலிருந்து குதிக்காது. அவ்வளவு பெரிய காவியத்துக்கு மாடல்ஸ் இல்லாம இருந்திருக்காது”.

“மாடல்ஸ் . . .! நெஜக்கதை இல்லீங்கறீங்களா? மாடல்ஸ்ஸைப் பார்த்து உருவாக்கின கேரக்டரையா மக்கள் கோவில் கட்டிக் கும்பிடறாங்க?”

“டோண்ட் கெட் எமோஷனல்! நீங்க ரெண்டு விஷயத்தை மறக்கக் கூடாது. ஒண்ணு நான் அந்தத் துறையில் ஆய்வு செய்தவன் கிடையாது. இரண்டாவது வரலாற்று ஆய்வு இரக்கமற்றது”.

பேச்சு முடிந்து விட்டது என்று உணர்த்தும் விதத்தில் தொலைவில் கிடந்த பையைக் காட்டிவிட்டு அவர் கிணற்றடியை நோக்கி நடக்கத் தொடங்கினார்

“சார்.....எனக்கு ஒரு கேள்வி’ நவீன் இழுத்தான். “காவிரிப்பூம் பட்டினத்தில் பணக்காரர்கள் வாழும் பட்டினப்பாக்கம் இருந்தது. ஏழைகள் வாழும் . . .மருவூர் பாக்கம்...” அவன் முடிப்பதற்குள் “சாதாரண மக்கள். . .” முல்லை திருத்தினாள்.

“சரி, சாதாரண மக்கள் வாழும் மருவூர்ப்பாக்கம் இருந்தது. இரண்டுக்கும் நடுவே நாளங்காடி இருந்த்தது. அதன் நடுவே பூத சதுக்கம் இருந்தது என்கிறார்கள். . . “

" . . . ம்" ஸ்ரீகுமார் கேள்விக்குறியுடன் பார்த்தார்.

"அங்கே நரபலி நடந்ததா? போர் வீரர்கள் தங்கள் தலைகளை வெட்டிப் பலி கொடுத்துக் கொண்டார்கள் என்று சொல்லியிருக்கே அது உண்மையா இருக்குமா?"

"அதெப்படி பொய் சொல்பவர்களை தின்னும் பூதம் இருக்கும்?" முல்லை அவசரமாக குறுக்கே புகுந்தாள். முதல்முதலாக நவீன் கேட்ட கேள்வி இப்படியா இருக்க வேண்டும் என்று அவள் பதறுவது தெரிந்தது. நவீன் வேறு எப்படி இருப்பான் என்றும் தோன்றியது.

"உன்னோட புலியூர் கேசிகனைக் கொஞ்சம் படிச்சுட்டிருக்கேன். . பூத வழிபாடு என்ற தலைப்பில் வரும் பாட்டுகள்ள அது பொய் சொல்பவர்களைத் தின்னும்னு சொல்லவேயில்லை. மக்கள் வழிபட்டாங்க. வீரர்கள் தங்கள் தலைகளைத் தாங்களே அறுத்து பூதத்திற்குப் படைத்தாங்கன்னுதான் சொல்றார்."

ஸ்ரீகுமார் கனைத்துக் கொண்டார். "நாளங்காடில மட்டுமில்ல. இப்ப நாம நின்னுட்டிருக்கற சம்பாபதியம்மன் கோவிலைச் சுத்தி இருந்த சுடுகாட்ல கூட மயானத் தெய்வங்களுக்குப் பலிகொடுக்கற தூண்கள் இருந்திருக்கு. உடன்கட்டை ஏறின பெண்களுக்கு அவங்கவங்க அந்தஸ்த்துக்குத் தகுந்தபடி கோட்டங்கள் கட்டி வெச்சிருந்திருக்காங்க. நரபலி இல்லாத பழங்கால நாகரீகம் உலகத்தில் கிடையாது. பழங்குடி சமூகங்களிலும் நரபலி இருந்தது .. ."

இப்போது நவீன் பதறினான். "பழங்குடி மக்கள் வர்க்கமற்றவர்கள் அல்லவா. அங்கு வெறுப்பு, பொறாமை இதற்கெல்லாம் இடமில்லை . . . "

"அதெல்லாம் கட்டாயம் இல்லை. ஆனால் நரபலி இருந்தது. பழங்குடி மக்களில் சிலர் பஞ்சம் மாதிரி சில நெருக்கடிகளின் போது பொது நன்மைக்காக மனமுவந்து தங்களைப் பலி கொடுத்துக் கொள்வது வழக்கம். இந்த வழக்கம் ஐரோப்பாவிலும், பழைய அமெரிக்காவிலும், இந்தியத் துணைக்கண்டத்திலும் பரவலாக இருந்தது. சிலப்பதிகாரத்தில் இரண்டு இடங்களில் நரபலி பற்றிப் பேசப்படுகிறது. இந்த இடம் ஒன்று.

பின்பு ஒரு எயினர் கோவிலுக்கு கோவலனும், கண்ணகியும், கவுந்தியடிகளும் போகும் போது அங்கு இந்த வழக்கம் இருந்ததாகவும், நல்ல கொள்ளை கிடைப்பதற்காக கொள்ளைத் தொழில் செய்யும் எயினர் தங்களைப் பலிகொடுத்துக் கொண்டதாகவும் இளங்கோ கூறுகிறார்"

"இது எப்பவாவது ரேராக நடந்திருக்கலாம் ?'முல்லை கேள்விக்குறியுடன் பார்த்தாள்.

"இல்லை, தமிழ்நாட்டில் ஏராளமாக நரபலி கொடுக்கப்பட்டது. அது சிலப்பதிகார காலத்திற்குப் பிந்தைய காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளிலும் சிற்பங்களிலும் பதிவாகியிருக்கு. முதலில் குலத்தின் நன்மைக்காக பழங்குடிகளில் சிலர் தங்களைத் தாங்களே பலி கொடுத்துக் கொண்டார்கள். பின்பு பெரிய அரசுகள், மன்னர்கள் உருவானதும் மன்னர்களின் நலனுக்காக பலர் தங்களைப் பலிகொடுத்துக் கொண்டார்கள். போரில் வெற்றிக்காகவும் பலி கொடுத்துக் கொண்டார்கள். இதற்குப் பெயர் நவகண்டம் அல்லது தலைப்பலி. தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொள்வது. அல்லது பல கத்திகளை அவனிடம் கொடுப்பார்கள். அவன் அவற்றை தன் தொடைகளிலும், தோள்களிலும், மார்பிலும், கழுத்திலும் குத்திக் கொண்டு உயிர்விடுவான். உயிர் போகவில்லை என்றால் அவனுக்கு யாராவது உதவவும் கூடும். வயிற்றைக் கிழித்துக்கொண்டு சாவதைக் காட்டும் சிலைகளும் உள்ளன."

"பலி கொடுத்துக் கொண்டவர்கள் எல்லோரும் ஆண்கள் தானே?" முல்லை பயத்துடன் கேட்டாள்.

"ஏராளமான பெண்களும், குழந்தைகளும் கூட பலி கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். சிறு குழந்தைகளை புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களுக்கும், ஏரிகளுக்கும், கோவில்களுக்கும் பலி கொடுப்பது சர்வ சாதாரணம். இதற்கு பட்டயங்களில் நிறைய எக்ஸாம்பிள்ஸ் இருக்கு. குழந்தைகளைப் பலிகொடுப்பதை சிற்பமாக வடித்திருக்கிறார்கள். இந்தச் சிற்பங்களுக்கு சாவாரக்கல் சிற்பங்கள் என்று பெயர். தேரோட்டக் கூட பலி கொடுத்தது நடந்தது. பலி கொடுக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் தலித்துகள். உடன்கட்டை எனப்படும் தீப்பாய்தல் தனிக்கணக்கு"

"உயிர்விட்டவர்கள் விரும்பி இதைச் செய்திருக்க வாய்ப்பிருக்கிறதா

சார். . .?” நவீன் கேட்டான். பதில் ஓரளவு அவனுக்குத் தெரிந்தே இருந்தது.

“குழந்தைகள் எப்படி விரும்பி பலிக்கு உடன்படும்? பலிக்கு உடன் படாமல் தப்ப பலர் விரும்பியதற்கும் ஆதாரங்கள் இருக்கிறன. தலைப்பலி விரும்பியே கொடுக்கப்பட்டது. பயங்கர விசுவாசம் உள்ள அல்லது தன் குடும்பத்துக்கு அரசனின் உதவியை எதிர்பார்த்த ஆட்கள் இப்படி செய்திருக்கலாம்.”

“இதனால் கட்டாயம் நோய் குணமாகாது. வெற்றி கிடைக்காது. உண்மைகாரணம் என்னவாக இருந்திருக்கும் சார்?”

“ ஒரு எக்ஸ்ட்ரீம் தியாகத்திற்கு வீரர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்த அரசுகள் இதை ஊக்குவித்திருக்கலாம். தலித்துகளைப் பொருத்தவரை உங்கள் உயிர்கூட, உடல்கூட உங்களுக்குச் சொந்தமில்லை. எப்போது ஆண்டை கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்த நரபலிகள் கொடுக்கப்பட்டிருக்கலாம். தவிர பின்னிருந்த அரசியல் எதுவாக இருந்திருந்தாலும் பழக்கத்தின் அடிப்படையில் மன்னர்களும், உயர்குலத்தினரும் இதைத் தொடர்ந்தே வந்திருக்கலாம். போதும் நிறுத்திக்கலாமா?” என்றார் பேராசிரியர்.

“இப்போதைக்கு” என்றாள் முல்லை. இருவரும் சிரிக்க நினைத்தனர். ஆனால் மனநிலை அதற்குச் சரியாக அமையவில்லை. அவர் திரும்பி நடக்கத்தொடங்கினார்.

வாய்ப்புக் கிடைக்கும் போது இது பற்றி விரிவாகப் பேச வேண்டும் என்று நவீன் நினைத்துக் கொண்டான். ஏழை மக்களை ஏதோ ஒன்றுக்கு பலி கொடுப்பது தொடர்ந்தே வருகிறது. முல்லை இப்படி ஏதாவது படம் எடுத்தால் நன்றாக இருக்கும். ஸ்ரீ குமாரை அவரது அறையில் பார்த்து அவரது அரசியல் பற்றிக் கேட்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

“ஷார்ப். ஆனா எல்லாப் புரொபஷனல்ஸையும் மாதிரியே உணர்ச்சியில்லாத ஜீவன். இப்படி மொட்டையா ஒரு அறிமுகம்.

மொட்டையா ஒரு எக்ஸிட்” முல்லையும் அறைக்குத் திரும்பியதும் அவரோடு நன்றாக அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். பிறகு மனதை மாற்றிக் கொண்டு அவரிடம் ஓடினாள். “என் பெயர் முல்லை. சிலப்பதிகாரம் பற்றி டாக்குமெண்டரி எடுக்கிறோம்” என்றபடி கை நீட்டினாள்.

ஸ்ரீகுமார் தாடிக்குள் சிரித்தபடி அவள் கையைப் பற்றிக் குலுக்கினார். “நேற்று திட்டத்தை இடையில் நிறுத்திவிடுவது போலப் பேசிட்டு இருந்தீங்க?”

முல்லைக்கு உண்மையாகவே நாணம் வந்தது. “நேற்று கொஞ்சம் டிப்ரஷன்.... எதைக் கேட்டாலும் இல்ல இல்ல என்கிறார்கள் ....!”

“‘எதைக் கேட்டீங்க?”

“ரூமுக்கு வந்து உங்களிடம் விரிவாகக் கேட்கட்டுமா?” முல்லை விழிகள் விரியக் கேட்டாள்.

ஸ்ரீகுமார் திரும்பவும் தாடிக்குள் சிரித்தார். “என்னையும் ஆவணப்படத்திற்குள் இழுக்கிறீர்கள்” என்று ஆங்கிலத்தில் சொன்னவர் “அக்ரீட்” என்றார். முல்லை நவீனிடம் பறந்தோடி வந்தாள். “என்ன அழகான ஒரு உரையாடல் தெரியுமா?”

’ஒரு தேவதையும், ஹாண்ட்ஸம் புரபஸரும் உரையாடினால் அழகாகத்தானிருக்கும்’. நவீன் சொல்லவில்லை. சிரித்தபடி கட்டை விரலை உயர்த்தினான். பின்பு தன் வேலையில் ஆழ்ந்தான். ஒவ்வொரு புகைப்படக் கலைஞனுக்கும் கனவு இந்த இடம். இந்த இடத்தின் தொன்மையை, அமைதியை, உறைந்து கிடக்கும் மர்மங்களை, சின்னச் சின்ன சத்தங்களை, நிழல்களை, வட்டவட்டமாக விழும் ஒளியை, எல்லாவற்றையும் . .. கேமராவில் அடக்கிவிட அவன் முடிவு செய்துவிட்டது போலிருந்தது. அவன் முடித்தபோதுதான் முல்லையும், ஸ்ரீகுமாரும் அருகே நின்றிருப்பதை உணர்ந்தான்.

“சார் தமிழ்நாட்டு டிரேட் ரூட்ஸ் பத்தி ஆய்வு செய்யறார். திருச்சி வரைக்கும் நம்ம வேலையும் அவர் வேலையும் ஒண்ணுதான்” முல்லையின் ஆர்வத்தை ஸ்ரீகுமார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

தாடிக்குள் அவர் முறுவலித்ததைப் பார்க்கும் போது நவீனுக்குத் தன் நண்பனான ஒரு குறும்புக்காரச் சிறுவனின் நினைவு தோன்றியது. அவர் விடைபெற்றுக் கொண்டு தான் வந்த இனோவாவை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அகத்திய முனிவரின் சாபத்தால் ஊர்வசி புகாரில்
மாதவியாக வந்து பிறந்தாள். இவள் பழைய மாதவி.
இவள் மரபில் வந்த சித்திராபதி மகள் மாதவி
பனிரெண்டு வயதானவள். வானுலக தேவதைகளுக்கு
எந்த விதத்திலும் குறைவில்லாதவள். மலர்கள்
சூடிய சுருண்ட கூந்தலையடையவள்.
நாடக மகளிருக்குரிய
கூத்து, பாடல், ஒப்பனை ஆகிய மூன்று கலைகளிலும்
ஏழு ஆண்டுகாலம் பயிற்றுவிக்கப்பட்டவள்.
அகக்கூத்து, புறக்கூத்து ஆகியவற்றை நன்கு அறிந்த
ஆடலாசான் அவளுக்கு கூத்தையும், தமிழ் மொழியின்
அமைவு முழுவதையும் அறிந்தவனும், இனிய
சொற்களால் கவியியற்றும் நாவன்மையும்
நல்ல நூலறிவும் உடையவனான நன்னூல்
புலவன் அவளுக்குத் தமிழையும் கற்றுக் கொடுத்தனர்.
மத்தளம் இசைப்பவன், குழலிசைத்தலில் புலமை
படைத்தவன் போன்ற வேறு பல ஆசிரியர்களும்
அவளுக்கு கலைகளைக் கற்றுத் தந்தனர். இவளுடைய
பனிரெண்டாவது வயதில் இவள் தாயான சித்திராபதி
இவளுடைய கலைத்திறனை வீரக்கழல் புனைந்த
மன்னனுக்கு எடுத்துக் காட்ட விரும்பினாள்.
பகைவரிடமிருந்து பறிக்கப்பட்ட வெண்கொற்றக்
குடையின் காம்பை சிதைவின்றி எடுத்து கணுக்களுக்கு
இடைப்பட்ட பகுதியை சாம்புநதம் என்னும் பொன்
தகட்டால் மூடி உருவாக்கப்பட்டது தலைக்கோல்.
மாதவியின் அற்புதமான நடனத்தைக் கண்ட
காவல் மன்னன் பசுமையான இலைகளால் ஆன
மாலையையும் தலைக்கோலி என்ற பட்டத்தையும்
மாதவிக்கு அளித்தான்.

நாடக கணிகையருக்கு தலைவரிசை
என்னும் நூல்கள் விதித்த முறைமையின்படி
1008 களஞ்சு பொன்னை ஒரு முறையாகப்
பெறும் பெருமை பெற்றாள் மாதவி.
அந்த மாலை 1008 களஞ்சு பசும்பொன் பெறுவது.
இதைக்கொடுத்து வாங்குபவர் மாதவிக்கு மணமகன்
ஆகலாம் என்று கூறச்சொல்லி ஒரு கூனியை
நகரத்து இளைஞர்கள் திரியும் தெருவில் நிறுத்தினாள்.
கோவலன் உரிய பொன் கொடுத்து மாலையை
வாங்கினான். கூனியுடனே தானும் மாதவியின்
மணமனைக்குச் சென்றான். அவளுடன் தழுவிக் கூடி
மகிழ்ந்தான், அவள்பால் மயக்கமுடையவன் ஆனான்.
அவளைவிட்டுப் பிரிவதென்பதையே அறியாத
பெருவிருப்புடன் தன் வீட்டை, கண்ணகியை
அறவே மறந்து மாதவி வீட்டிலேயே
தங்குவானுமாயினான்.
மாதவி அழகிய புகார் நகரிலே நடனமிடும்
தலையரங்கில், எண்ணும், எழுத்தும், இயல் ஐந்தும்,
பண் நான்கும், பண்ணுக்கு இசைந்த பதினோரு
வகையான கூத்தும், ஆடியும் பாடியும் காட்டி
உலகு போற்றும் சிறப்பு பெற்றனள்.

அரங்கேற்று காதை, சிலப்பதிகாரம்

முல்லை கடற்கரை இருளில் தனியாக கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். நேற்றுப் பெய்த மழையில் மணல் இறுகி நடக்க நன்றாக இருந்தது. அதிகம் கடலைப் பார்க்காமல் வளர்ந்தவள் அவள். பெரும் பெரும் நதிகளைப் பார்த்திருந்தாலும் கடல் வித்தியாசமானது. அற்புதமானது. இருளில் அலைகளின் முகத்தில் தெரிந்த வெள்ளை நுரைகளைத் தவிர அவளால் எதையும் பார்க்க முடியவில்லை. இரண்டு நாட்களில் இந்தக் கடற்கரை அவளுக்குப் பழக்கமாகிவிட்டது. நாளை கிளம்ப வேண்டும். பின்பு கொடுங்கலூர் வரை கடல் கிடையாது. முல்லையின் மனம் உற்சாகத்தில் பரபரத்துக் கொண்டிருந்தது. அதே

நேரம் இனம்புரியாத மெல்லிய சோகமும் மனதிலிருப்பதை உணர்ந்தாள். இப்படி இரண்டு நாளில் விட்டுப் போகக் கூடிய ஊரல்ல பூம்புகார். இங்கு தங்கி சுற்றுப் புற ஊர்களை ஆய்வு செய்ய ஒரு வாழ்நாள் காலம் வேண்டும். இன்னும் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. ஆனால் கண்ணகி வழிநடந்த காவிரிக் கரையும், பாலை வழியும் மதுரையும் அவளை வலிந்து இழுத்தன.

பூம்புகாரில் அதன் பழம் பெருமை காட்டும் சின்னங்களாவது ஒரு துளி இருந்தன. ஆனால் கோவலனும், கண்ணகியும் வாழ்ந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை. இந்த மண்ணில்தான் இந்தக் கடற்கரையிலிருந்து ஒரு நாலைந்து கிலோமீட்டருக்குள் எங்கோ கண்ணகியும், கோவலனும் வாழ்ந்த வீடு இருந்திருக்கும். அதை எழுநிலை மாடம் என்கிறார்கள். ஏழு மாடியாக இருந்திருக்காது ஏழு பகுதிகளாக இருந்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. கோவலன் மாதவியின் அரங்கேற்றத்தில் அவளைப் பார்த்து மயங்கி அவளுடனேயே தங்கி விட்டான். கோவலனும் மாதவியும் ஒரு வேளை இந்தக் கடற்கரையில் தான் யாழிசைத்து மகிழ்ந்திருப்பார்கள். ஒரு வேளை அந்த இடம் இன்று கடலுக்குள் முழுகி விட்டதோ என்னவோ? கண்ணகி வேதனையுடன் தனித்திருந்தாள். அவனைத் திட்டித் தீர்க்கவே இல்லை. அவள் சரி. மற்றவர்கள் உறவினர்கள் ஏன் கோவலனை இப்படியே விட்டு விட்டார்கள்? இது வழக்கம்தான் என்பதாலா? இந்த மாதிரி ஆட்கள் திருந்தமாட்டார்கள் என்று விட்டுவிட்டார்களா?

அவர்கள் சம்பாபதி கோவிலில் ஸ்ரீகுமாரைப் பார்த்ததற்கு மறுநாள் அதாவது இன்றைய தினம் நிற்க நேரமில்லாமல் கழிந்தது. திரும்பிப் போக முடிவு செய்த முட்டாள் தனத்தை எண்ணி எண்ணிச் சங்கடப்படும் படி அமைந்தது இன்றைய பகல் பொழுது.

காலையில் அவளும், நவீனும் மாதவி வாழ்ந்ததாகச் சொல்லப்படும் திருக்கடையூருக்குச் சென்றார்கள். அது புகாரிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. ஊர் என்பது இந்தப் பெரிய கோவிலைச் சுற்றி இருந்த பழமை பூசிய சில தெருக்கள் தான். கோவில் இவ்வளவு பெரிதாக இருக்கும் என்று அவர்கள் நினைத்திருக்கவில்லை. வழியெல்லாம்

பிச்சைக்காரர்கள். கந்தல்களும், ஊனங்களும், அழுக்கும், வறுமையும் கோவிலிலிருந்து மனம் பதறிப் பின்வாங்க வைத்தன. எளிமையும், பசுமையும், அழகுமான புகாரின் சுற்றுப் புறங்களுக்கு மாறாக இந்தக் கோவில் யதார்த்தத்தின் கோர முகத்தை அப்பட்டமாகக் காட்டியது. மாதவிக்குளம் என்று அழைக்கப்பட்ட ஷன்மதிக் குளத்தைத் தேடிக் கண்டுபிடித்தார்கள். அது எல்லா டெல்டாக் குளங்களையும் போலவே நீள்சதுரமாக இருந்தது. கொஞ்சமே கொஞ்சம் தண்ணீர் இருந்தது. மணிக்கிராமத்திலும், சம்பாதி கோவிலிலும் கண்ட அமைதியும், பசுமையும் ஓரளவு இங்கும் இருக்கத்தான் செய்தது.

இந்த இடத்தில் மாதவியின் வீடு இருந்ததாகச் சொல்கிறார்கள். இதை தொல்பொருள் ஆய்வுத்துறை ஒப்புக் கொள்ளவில்லை என்று காட்டும் விதமாக அந்த துருவேறிய பச்சை போர்டு காணப்படவில்லை. திருக்கடையூரை பூம்புகாரின் கடைக்கோடி என்று சொல்லலாம். இங்கே போன நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை கணிகையர்கள் இருந்திருக்கின்றனர். எனவே மாதவி இந்த ஊரில் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இந்தக் குளம்தான் அவள் வீடு என்று எதை வைத்து நம்புவது? நல்லது. இது மாதவி வீடா இல்லையா என்பதல்ல பிரச்சினை. கணிகையர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதே பிரச்சினை என்று முல்லை மனதுக்குள் முடிவு செய்து கொண்டாள்.

சிலப்பதிகாரத்தில் வரும் கணிகையர்கள் கட்டாயம் உணவுக்குக் கஷ்டப்படவில்லை. வசதியாகவே வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் எல்லாக் கணிகையரும் அவ்வாறு வாழ்ந்திருந்தனரா? பிரான்ஸிஸ் புகானன் என்ற ஆங்கிலேயர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோவைப் பகுதி தாசிகள் பற்றி எழுதியுள்ளது வேறு விதமாக இருக்கிறது என்றான் நவீன். அவன் தன்னுடனான நட்புக்காக அல்லாமல் முழுமனதுடன் இந்தப் பயணத்தில் வரவேண்டும், தன்னைப் போலவே ஆவணப்படத்தில் முழுமையான ஆர்வம் காட்ட வேண்டும் என்று முல்லை விரும்பியதால் அவன் முதல் முறையாக ஆழமாக இந்த விஷயத்தைப் பற்றிப் பேசியது முல்லைக்கு மகிழ்ச்சியளித்தது.

“கோவில்களை அண்டி வாழும் தாசிகள் சதிராட்டம் ஆடுகிறார்கள்.

அது அசிங்கமாக இருக்கிறது. பார்க்கச் சகிக்கவில்லை. ஊருக்கு வரும் முக்கியஸ்தர்களை ஊர் தொடக்கம் வரை சென்று மேளதாளத்துடன் அழைத்து வருகிறார்கள். இஸ்லாமிய அதிகாரிகள் இவர்கள் வீடே கதியென்று கிடக்கிறார்கள். சில வெள்ளை அதிகாரிகளும் இவர்களிடம் அடிமைப்பட்டுக்கிடப்பது வேதனையாக இருக்கிறது. இவர்களில் பலருக்கு நோய் இருக்கிறது. . . என்ன நோய் என்று புக்கானன் சொல்லவில்லை. வி.டியிலிருந்து தொழுநோய் வரை இருக்கலாம்". என்றான் நவீன்.

முல்லைக்கு வயிற்றைப் பிசைந்தது. பேரழகியும், ஒப்பற்ற நாட்டியக்காரியும், அறிவாளியுமான மாதவி . . .இல்லையே மாதவி கணிகையாக இருக்கவிரும்பவில்லை என்பதை சிலப்பதிகாரம் சந்தேகத்திற்கிடமின்றி முன் வைக்கிறது. கோவலனை அவள் காதலித்துத் தேர்ந்தெடுக்கவில்லை. மாதவி பனிரெண்டு வயதில் தமிழும் கலைகளும் கற்றுத் தேர்ந்து மன்னன் முன் அரங்கேற்றம் செய்கிறாள். சிறந்த நடனத்துக்காக தலைக்கோல் எனப்படும் மரியாதையைப் பெறுகிறாள். அவள் விற்பனைக்கு அனுப்பும் மாலையை பெரும்பணம் கொடுத்து வாங்குவதால் கோவலனோடு வாழத் தொடங்குகிறாள். வேறு யாராவது வாங்கியிருந்தாலும் அவனோடு வாழ்ந்திருப்பாள். ஆனால் மாதவி கோவலனிடம் உண்மையான அன்புடனும், நேர்மையுடனும் இருக்கிறாள். அதன் பிறகு வேறு யாருடனும் அவள் வாழவில்லை. கணிகையர் அப்படி இருக்க வேண்டும் என்ற மற்றவர்களின் விருப்பத்தை இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறாரா? மாதவி ஒரு விதிவிலக்கு அல்லவா? எல்லாக் கணிகையருக்கும் இப்படியொரு வாய்ப்புக் கிடைத்திருக்குமா?

முல்லையின் அமைதி நவீனைச் சங்கடப்படுத்தியது. "புக்கானன் சமீபத்தில் இருந்தவர், ஒரு இருநூறு வருஷம் முன்பு. அதுவும் கோவை போன்ற ஒதுக்குப் புறமான பகுதியில். இந்த மாதிரி கலர்ஃபுல்லான அதிகார மையங்களில் வேறுவிதமாக இருந்திருக்கலாம்."

"எந்த இடமாக இருந்தாலும், காலமாக இருந்தாலும் இந்த மாதிரி பெணகளின் வாழ்க்கை ஒரே மாதிரி தானே?"

"சரிதான்"

“ஒரு சின்னப் பெண், அழகி, அறிவாளி, திறமைசாலி தன் உடல் மீது கூட உரிமை இல்லாத குலத்தில் பிறந்து எத்தனை பாடுபட்டாள். எல்லாப் பொற்காலங்களிலும் பிராஸ்டிட்யூட்ஸ் இருந்திருக்கிறார்கள். ஆண்கள் நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள்?”

“எங்கெல்ஸ் அதைத்தான் சொல்கிறார். தனக்குப் பிறகு தனது சொத்து தன் மகனுக்குப் போகவேண்டும் என்ற ஆண்களின் வெறியே பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டதற்குக் காரணம். சொத்துடமை இல்லாத பழங்குடி சமூகங்களில் ஆணாதிக்கம் இல்லை. உடமைச் சமூகத்தில் பெரும்பான்மை பெண்களை தனியுடமை ஆக்கி வீடுகளில் அடைத்துவிட்டு சில பெண்களை நுகர்வுக்கு பொதுவுடமை ஆக்கி கணிகை, தாசி . . .என்று பெயரும் கொடுக்கிறார்கள்!”

“தமிழிலக்கியத்திலும் மனைவிகளை உடமை மகளிர், மற்றவர்களை பொது மகளிர்னுதான் சொல்றாங்க . . .” முல்லை யோசனையுடன் கூறினாள்.

பொது மகளிரிலும் சேரிப்பரத்தை, காதல் பரத்தை என்று இரண்டுவிதமான பரத்தைகள் தமிழ்நாட்டில் இருந்ததாக பழைய இலக்கியங்கள் சொல்வது அவளுக்குத் தெரியும். சேரிப்பரத்தை அந்தக் காலப் பாலியல் தொழிலாளி. அவளிடம் யார் வேண்டுமானாலும் போகலாம். டெல்லியின் ஜி.பி ரோடு பால்கனியில் நிற்கும் பெண்கள் போல. போன வருடம் முல்லை வேலை செய்த இதழின் ஆசிரியர் குழுவில் இருந்த ஒரு அறிவாளிக்கு செல்போன் போன்ற நவீன தகவல் தொடர்பு சாதனங்களால் ஜி.பி சாலை பாலியல் தொழிலாளிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றி கட்டுரை எழுத வேண்டும் என்று தோன்றிவிட்டது. முல்லை விரும்பி இந்த வேலையை ஏற்றுக் கொண்டாள். அவளும் போட்டோகிராபரும் விடுதிகளுக்குள் செல்வதற்காக ஸ்திரிவாகினி என்ற தொண்டு நிறுவனத்தைப் பிடித்தனர்.

அசியாவின் மிகப்பெரிய ஹார்டுவேர் மார்க்கெட்டின் ஒருபகுதி இந்தத் தெரு. கீழே தரைத் தளத்தில் ஹர்ஜாய் அண்ட் கம்பெனி, பதம் சிங் ஜெய்ன் அண்ட் கோ, நேஷனல் மார்பிள்ஸ் என்று கடைகள் இருந்தன.

மேலே முதலாவது, இரண்டாவது தளங்களில் கோதாக்கள் எனப்படும் பாலியல் விடுதிகள் செயல்பட்டன. கீழுள்ள கடைகள் மூடப்பட்டதும் மேல்தளங்கள் உயிர்ப்பெறும். பால்கனிகளில் நின்று கோதாவாலிப் பெண்கள் கார்களிலும், ஸ்கூட்டர்களிலும், ரிக்ஷிக்களிலும் வரும் வாடிக்கையளர்களைக் கவர முயல்வார்கள்.

தொண்டு நிறுவன ஊழியர் அவர்களைச் சிதிலமடைந்த கட்டடங்களின் இருண்ட படிக்கட்டுகளில் வழியே அழைத்துச் சென்றார். சில பெண்கள் போட்டாகிராபரைப் பார்த்து ஆபாசமாகத் திட்டி செருப்பைக் கழற்றிக் காட்டினர். எலிகள் ஓடிக் கொண்டிருந்தன. அதைப் போலவே சில குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருந்தன. பாடி லோஷன், பவுடர், அடைசலான இடத்தில் வீசும் வாடை எல்லாம் சேர்ந்து முல்லைக்குக் குமட்டல் எடுத்தது. எல்லாப் பெண்களின் கதைகளும் ஒன்று போலவேதான். காதலனோ கணவனோ இங்கே கொண்டுவந்து விற்றுவிட்டுப் போயிருந்தார்கள். எவ்வளவு ரூபாய்க்கு என்றுகூட சில பெண்கள் சொன்னார்கள்!

ஊழியரிடம் எண்ணற்ற புள்ளிவிவரங்கள் இருந்தன. இந்த சாலை எண்ணூறு மீட்டர் நீளமுள்ளது. இருபத்திநான்கு கட்டடங்களில் உள்ள தொண்ணூற்று மூன்று விடுதிகளில் குறைந்தது மூவாயிரம் பாலியல் தொழிலாளிகள் வாழ்ந்து வருகின்றனர். ஐந்து சதவீதம் பேருக்கு எய்ட்ஸ் இருக்கிறது, அறுநூறு பேர் போதை மருந்துகளுக்கு அடிமையானவர்கள். அறுபது சதவீதப் பெண்களுக்கு பால்வினை நோய்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் எட்டாயிரத்து ஐம்பத்து இரண்டு வாடிக்கையாளர்கள் வருகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியும் நாளொன்றுக்குச் சராசரி நான்கு வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறார். தினமும் எட்டாயிரத்தி நானூற்று நாற்பத்தி ஒரு ஆணுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. டெல்லி ஸ்டேட் எயிட்ஸ் கண்ட்ரோல் சொஸைட்டி ஆணுறைகளை வழங்குகிறது. இந்தி தெரியாத பகுதிகளைச் சேர்ந்த பெண்களையே குறிவைத்து இங்கே கொண்டு வருகின்றனர். ஓடிச் சென்றால் எளிதில் பிடித்துவிடலாம் அல்லவா?. நேபாளிப் பெண்கள் சிவப்பாக இருப்பதால் அவர்கள் இருக்கும் விடுதிகளில் தொழில் நன்கு நடக்கிறது . . .

முல்லைக்கு மனதில் பாறாங்கல்லை வைத்தது போலாகிவிட்டது. தனக்கு வயிற்றைப் பிரட்டியது அந்தச் சூழலைக் கண்டா அல்லது இந்த புள்ளி விவரங்களைக் அள்ளிவிட்டவரின் ஆர்வத்தைப் பார்த்தா என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

புகாரின் சேரிப் பரத்தைகள் வாழ்ந்த இடமும் இப்படித்தான் இருந்திருக்குமா? தங்கமும் வைரமும் கொட்டிக் கிடந்த புகாரில் இப்படியும் மக்கள் வாழ்ந்திருப்பார்களா? செல்வம்தான் அளவுகோல் என்றால் புது டெல்லியில் இல்லாத பணமா? ஒரு வேளை பணம் கொட்டிக் கிடக்கும் எல்லா இடங்களுக்கும் இப்படியொரு இருண்ட பக்கம் இருக்கத் தான் செய்யுமா? நரபலிகள் பற்றி நேற்று நடந்த பேச்சுக்கள் அவள் நினைவுக்கு வந்தன.

இன்னொருவகை பரத்தை காதல் பரத்தையாம். அவள் ஒருவனோடு சேர்ந்து வாழ்ந்து விடுவாளாம். மாதவி என்னவிதமான பரத்தை என்று சொல்லப்படவில்லை. ஆனால் மாதவி மிக வசதியாக வாழ்வதாகச் சொல்லப்பட்டாலும் அவள் தாய் அவளை வேறு ஆட்களோடு வாழச் சொல்கிறாள் அல்லவா . . .

முல்லைக்கு கோவிலில் பார்த்த பிச்சைக்காரர்கள் நினைவு திரும்பத் திரும்ப வந்தது. சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் தாசிகளின் வாழ்வு பற்றி தனது ஆவணப்படத்தில் என்ன இருக்கும்? சிலப்பதிகாரத்திற்கு இன்னொரு உரை எதற்கு? அதைத்தான் புலியூர் கேசிகனும், சுஜாதாவும், இன்னும் பலரும் மிக அழகாகச் செய்து விட்டனரே? உரை எழுதுவதைத் தாண்டி இன்னும் ஊடுருவிப்பார்ப்பது அல்லவா தனது வேலையாக இருக்க வேண்டும்?

இதைப் பற்றி அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தனர். மனதுக்கு இனிமையளிக்காத இந்தப் பேச்சிலிருந்து வெளியே வருவதற்கு அவர்கள் வழிதேடிக் கொண்டிருந்தபோதுதான் ஸ்ரீகுமாரின் அழைப்பு வந்தது. “நாட்டுப் புற வழக்கில் இருக்கும் சிலப்பதிகாரக் கதையைச் சொல்லக் கூடியவர்கள் சிலர் இருக்கிறார்களாம். ஆறு மணிக்கு வரமுடியுமா?” என்று கேட்டார். இரண்டு காரணங்களால் முல்லையின்

முகம் மலர்ந்தது. இந்த வலியிலிருந்து தப்ப முடிந்தது ஒரு காரணம். ஸ்ரீகுமாரைப் பார்க்கப் போவது இன்னொன்று.

முல்லை இன்னும் கொஞ்சம் சமநிலையோடு இருந்தால் பரவாயில்லை என்று நவீன் நினைத்தான். விலைமகளிர் பற்றி மேற்கொண்டு பேசுவதற்கு அவனிடமும் விவரங்கள் இல்லைதான். ஆனாலும் அதுபற்றி தொடர்ந்து பேச விரும்பினான். மக்களின் வாழ்க்கை, பெண்களின் துயரங்கள் என்று பேச்சு சரியான பாதைக்கு வந்தது போல அவனுக்குத் தோன்றியது. முல்லையைக் கொஞ்சம் அரசியல் படுத்த வேண்டும் என்று நினைத்திருந்தான். . . ஸ்ரீகுமாரின் அழைப்பு இடையூறாகத் தோன்றினாலும் கண்ணகி பற்றிய மக்களின் கதை என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள அவனுக்கும் ஆவலாகத்தான் இருந்தது. இந்தச் சிலப்பதிக்காரம் தான் எத்தனை பரிமாணங்களைக் காட்டுகிறது!.

கூத்து பற்றி ஆய்வு செய்து வரும் ஸ்ரீகுமாரின் நண்பர் அரங்கநாதன் தற்செயலாக புகார் வந்திருந்தார். அவரையும், ஸ்ரீகுமாரையும் சுற்றி கடற்கரையில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. சில ஆண்களும் பெண்களும் பல்வேறு கோணங்களில் உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டும் இருந்தார்கள். ஸ்ரீகுமார் அறிமுகப்படுத்தியவர்கள், மீனவர்கள் மத்தியில் இருக்கும் ஒரு கதை, ஆதிதிராவிடர்கள் நடுவே புழங்கி வரும் இன்னொரு கதை என்று இரண்டுவிதமான கதைகள் சொன்னார்கள். ஒருவர் கூல்டிரிங்க்ஸ் கடை வைத்திருப்பவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். மீனவர் ஆனால் கடலுக்குச் செல்வதில்லை. அவர் தடுமாறி குழப்பிய போது உடனிருந்த அவரது கல்லுரி மாணவியான அவரது மகள் மடமடவென்று பேசத்தொடங்கினாள்.

“எங்க கதைப்படி கண்ணகி பூம்புகார்க்காரி இல்ல. அவள் பாண்டிய மன்னனோட மகள். அவ பொறந்தப்ப அப்பனுக்காகாதுன்னு ஜோசியன் சொன்னதால குழந்தையை ஒரு பெட்டியில் வெச்சு ஆத்துல விட்டுட்டாங்களாம். அந்தப் பெட்டி பூம்புகார் வந்து சேருது. மாநாய்க்கனும், மாசாத்துவானும் காவிரில குளிச்சிட்டிருக்கும் போது

அந்தப் பெட்டியைப் பாக்கறாங்க. மாசாத்துவானுக்கு ஏற்கெனவே கோவலன் இருக்கறதால மாநாய்க்கன் எடுத்து வளர்க்கிறான். கண்ணகிக்கும் கோவலனுக்கும் கல்யாணம் நடக்குது. கோவலன் மாதநல்லிங்கற தாசி வீடே கதின்னு கெடக்கறான். கண்ணகி வீட்டுக்குத் திரும்ப வரலாம்னு நெனக்கறப்ப தாசி 18 களஞ்சு பொன் கொடுத்துட்டுப் போன்னு சொல்றா. அதுக்காகத்தான் கோவலன் சிலம்போட மதுரைக்குப் போறான். பாலிஷ் போட பொற்கொல்லன் கிட்ட கொடுக்கறான். அதுக்கு முன்னால அந்த ஊரு அரசியோட சிலம்பை கருடன் தூக்கிட்டுப் போயிருச்சு. பொற்கொல்லன் தான் தப்பிக்க சிலம்பை கோவலன் திருடிட்டான்னு சொல்றான். கோவலன ராஜா கொன்னுடறான். கண்ணகி செய்தி கேள்விப்பட்டு காளியாக மாறி கிளம்பி வந்து மன்னனை அழிச்சுட்டா. மாத நல்லி உடன்கட்டை ஏறிட்டா. கண்ணகிதான் பூம்புகார் துறைமுகத்துக்கு காவல்தெய்வம்”

அரங்கநாதன் தனது லேப்டாப்பிலிருந்து தாயம்மாள் அறவாணன் தொகுத்த சில பாடல்களைக் காட்டினார்.

ஒரு கப்பல் ஏலேலோ ஓடிவர
ஒன்னரைக் கப்பல் ஏலேலோ -ஒதுங்கிவர
கப்ப வந்து ஏலேலோ நிக்குதடி
கண்ணகிய(ள்) ஏலேலோ உன்ன நம்பி
தோணி வந்து ஏலேலோ -நிக்குதடி
துறைமயில் ஏலேலோ- உன்ன நம்பி

கண்ணகி இந்த மக்களைப் பொருத்தவரை பூம்புகார் துறைமுகத்தின் காவல் தெய்வம்.

பாண்டி மக்கள் குலம்
கண்ணகித்தாயாரே காப்பாத்து மாதாவே
எந்த ஊரு எந்த நாடு
கண்ணகித்தாயாரே காப்பாத்து மாதாவே
எங்கிருந்து இங்க வந்த
கண்ணகித் தாயாரே காப்பாத்து மாதாவே

கூட்டத்தில் வாட்டசாட்டமாக, நரைத்த தாடியுடனிருந்த ஒரு பெரியவரைப் பேசும்படி எல்லோரும் தூண்டினார்கள். அவரது தாடி மார்புவரை அடர்ந்திருந்தது. தன்னை வள்ளலார் மடம் வைத்து நடத்தும் துறவி என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். பஞ்சாயத்துப் பிரசிடெண்ட் ஆகவும் இருந்தாராம். "பாட்ட நீங்க சொல்லுங்க, கதைய நான் சொல்றேன். அந்தம்மா வந்தப்ப பாடறவங்க நிறைய பேர் இருந்தாங்க, இப்ப இல்லை" என்றார்.

"வாடா வட மதுரை வடமதுரை தென்மதுரை
ஐயாயிரம் பாண்டியர்க்கு பிள்ளை இல்லை என்று சொல்லி
வரமோ வரம் கிடந்து வந்தமடி தான் இருந்தா
அப்படியும் பிள்ளை இல்லை பாண்டியர்க்கு
கடுவ நிருத்தி வைத்து கனபூச செய்து வந்தா
பத்தரகாளி கோவிலுக்கு பாத பூச செய்து வந்தா
அப்படியும் பிள்ளை இல்ல ஐயாயிரம் பாண்டியர்க்கு"

அரங்கநாதனுக்கு சுட்டுப் போட்டாலும் பாட்டோ, ராகமோ வராது என்பது அவர் படிப்பதிலேயே தெரிந்தது.

"பாண்டிய மன்னனுக்கு குழந்தை இல்லியாம். எத்தன தவம் இருந்தும் குழந்தயே பிறக்கலயாம். பத்தரகாளிக்கு வேண்டுதல் செஞ்சும் பொறக்கலயாம். அதனால் கோவில இழுத்துப் பூட்டிடானாம் ராசா. யாரும் வெளக்கேத்தக் கூடாதுன்னுட்டானாம்.

அப்ப பூம்புகாரிலிருந்து ஒரு செட்டியும், அவன் பொஞ்சாதியும் மதுரைக்கு பொழப்புக்கு வந்தாங்களாம்".

பூம்புகாரு செட்டியாரு இலவாணி செட்டியாரு
பொழப்புக்கு இடமில்லாது மதுரைக்கு சென்றார்
இலவாணி செட்டியாரு பத்திரகாளி கோயிலைக்
கண்டு கொண்டார்
எண்ணெயத்தான் இறக்கி வெச்சு பாத பூச செய்துவர
தாயே எண்ணெய்விலை ஆகிப்போனா
ஆயிரந்தான் சரவிளக்கு

அன்புடனே ஏத்திடுவேன் நான் – னு

வேண்டிக்கிட்டாராம். எண்ணெய் நல்லா வித்துப் போச்சாம். அதனால் கோவில்ல வெளக்கேத்தினாராம். ராசாவுக்கு கோவம் வந்து செட்டிய கொன்னு போட்டாராம். செட்டி மனைவி அதிர்ச்சில செத்துப் போனாளாம். செட்டி கோவலனாவும், செட்டி மனைவி மாதவியாவும், காளி கண்ணகியாவும் பொறந்து ராசவைப் பழி வாங்கினாங்களாம் . . . “

கதை சொல்லி முடித்த தாடிக்கார சாமியார் அருகிலிருந்த மீனவரைப் பார்த்தார். “பாட்டுத்தான் பாடத் தெரியல. ஒரு டான்ஸ் ஆடுய்யா. ஐயா பாடுவார்” என்றார்.

“சும்மா எப்படி சாமி ஆடமுடியும்? விசியம் இருந்தாதான?”

“என்ன விசியம்” முல்லை கேட்டாள்.

அவரது மனைவி சுட்டு விரலைக் காட்டி மிரட்டினாள். “என்னது சின்னப் பொண்ணுகிட்ட விசியம் அது இதுன்னுட்டு. . .”

வேறு சிலரும் வந்துவிட கூட்டம் கேலியும் கிண்டலுமாக களை கட்டத் தொடங்கியது. முல்லை மெல்ல ஸ்ரீ குமாரை நெருங்கினாள்.

“ஏன் இந்த மக்களோட கதை கொஞ்சம் வேற மாதிரி இருக்கு?”

“மன்னனை எதிர்த்துப் பழிவாங்கினவள் மன்னன் மகளாத்தான் இருக்கணும்னு நெனச்சாங்களா? அல்லது மன்னன் தன் மகளுக்குக் கூட நன்மை செய்யாதவன்னு காட்டறாங்களா? சிலப்பதிகாரத்துலகூட போகிற போக்கில் ஒரு குறிப்பு வரும். மதுரை எரிந்து கண்ணகி வானுலகம் சென்ற பிறகு அங்கே அவள் பாண்டியனின் மகளாக இருப்பதாகவே சொல்லப்படுகிறது. என்னால புரிஞ்சுக்க முடியல. ஒருவேளை உங்க பயணத்தோட முடிவில விடை கிடைக்கலாம். ஆனா ஒவ்வொருத்தரும் தங்களுக்கு வேண்டியதை இந்த இலக்கியத்திலிருந்து எடுத்திட்டிருக்காங்க. இலக்கியமும் வேறவேற எடத்திலிருந்து தனக்கு வேண்டியத எடுத்துத்தான் இருக்கும்”.

“திரும்பவும் உங்க பாயின்ட்டுக்குத்தான் வர்றீங்க. சரி இளங்கோ

எங்கிருந்து எதை எடுத்தார்?"

"பேகன் என்கிற வள்ளலோட மனைவி பெயர் கண்ணகி. பேகனும் கோவலன் மாதிரியே பரத்தைகிட்ட போய் மனைவியை மறந்துட்டானாம். கபிலர்,பரணர் மாதிரி புலவர்கள் அவர்களைச் சேர்த்து வைக்க முயற்சி செய்யறாங்க".

"மயிலுக்கு. . ."

"ஆமாம். மயிலுக்குப் போர்வை கொடுத்த அதே பேகன்தான். பஞ்சதந்திரத்துலகூட இது மாதிரி ஒரு கதை இருக்கு. ஒரு புலி மன்னனோட மகனை அடிச்சுச் தின்னுட்டு அவனோட சிலம்பை எடுத்து வெச்சிருந்ததாம். அது ஒரு நாள் கிணத்துல விழுந்தப்ப ஒருத்தன் காப்பாத்தறான். அவனுக்குப் பரிசா அந்த சிலம்பை புலி கொடுத்ததாம். அவன் ஊருக்கு வந்து சிலம்பை விற்க முயற்சி செய்யும் போது இளவரசனைக் கொன்னதா குற்றம் சாட்டி சிறைல போட்டிடறாங்க. புலி வந்து காப்பாத்துது., இளங்கோவடிகள் பஞ்சதந்திரத்திலிருந்து இந்தக் கதையை எடுத்திருக்கார்னு பேராசிரியர் நாகசாமி சொல்றார்".

"ஏன் பஞ்சதந்திரம் சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்திருக்கக் கூடாது?"

"எனக்கும் அப்படித்தான் தோணுது. நான் சொல்றது என்னன்னா எந்த இலக்கியமானாலும் ஒண்ணை ஒண்ணு என்ரிச் பண்ணிக்கறது வழக்கம்தான். அதை பத்திப் பேசறது தப்பில்ல. ஆனா பார்க்க வேண்டியது என்னன்னா இந்த மக்களோட கதைகள்ல வர்ற பாண்டியன், இளங்கோவடிகளோட பாண்டியன் மாதிரி பத்தரை மாற்றுத் தங்கமில்ல. எல்லாவிதமான அடக்குமுறைகளையும் சந்திக்கிற மக்கள் மன்னனை அடாவடியானவனாகவும், கொலைகாரனாகவும் தான் பார்ப்பாங்க".

"நவீனுக்கு உங்க பேச்சு ரொம்ப பிடிச்சிருச்சு"

கேட்டுக் கொண்டிருந்த நவீன் அவர் சரியாகத்தான் சொல்கிறார் என்று ஆமோதித்தான்.

முல்லை அரங்கநாதனிடம் திரும்பி "இளங்கோவடிகள்

சிலப்பதிகாரத்துல நாட்டுப்புறக் கலைகளை அதிகம் பயன்படுத்தியிருக்கார்னு சொல்றாங்களே அது சரியா?" என்று கேட்டாள்.

"அந்தக் காலத்துல அது நாட்டுப் புறக் கலை இல்லம்மா. சிலப்பதிகாரத்துக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த இலக்கியங்கள்ல துணங்கைக் கூத்து, குரவைக்கூத்து மாதிரி பல கூத்துக்களை மக்கள் ஆடினது சொல்லப்பட்டிருக்கு. இவை எல்லாமே இனத்திலிருக்கிற எல்லா மக்களும் இணைந்து கூட்டமா ஆடற கூத்துக்கள். பழங்குடி மக்களோட நடனம்தான் இது. இன்னைக்கும் பழங்குடி மக்கள் ஒருத்தர் ஆட ஒருத்தர் உக்கார்ந்து பார்க்கமாட்டாங்க. எல்லோரும் ஆட்டத்திலயும் பாட்டிலயும் கலந்துக்குவாங்க.

சிலப்பதிகாரத்துலயும் கூட்டமா ஆடற ஆய்ச்சியர் குரவை மாதிரி கூத்துக்கள் வருது. மதுரைல கண்ணகிய இடையர் சேரில விட்டுட்டு கோவலன் சிலம்பை விற்கப் போறான். அப்ப கெட்ட சகுனங்கள் தெரியுதாம். அதனால ஆயர் பெண்கள் எல்லாம் கூட்டமா சேர்ந்து கெட்ட சகுனத்தைப் போக்க ஆய்ச்சியர் குரவை ஆடறாங்கன்னு வருது.

ஆனா அதே சிலம்புல புகார் நகரத்துல மாதவி அல்லியம், குடக்கூத்து, மல்லாடல், கொடுகொட்டி, பாவைக்கூத்துன்னு 11 கூத்துக்கள் ஆடறதா வருது. சமுதாயம் கொஞ்சம் முன்னேறி அல்லது பின்னேறி நடனத்தை கேளிக்கையா ஆக்கிருச்சு. . .மாதவி ஆடறா... மத்தவங்க பார்த்து ரசிக்கறாங்க . . . கணிகையர் குலம் உருவாயிருச்சு ".

"அந்தக் கூத்தெல்லாம் இப்ப இருக்கா சார்?"

"இந்தமாதிரி பெண்கள் ஆடின கூத்துதான் பின்பு சதிராட்டமா மாறி அப்புறம் பரதநாட்டியம் ஆச்சுன்னு ஒரு ஆய்வு இருக்கு. அப்புறம் நாட்டுப்புறக்கலைகளை மக்கள் வேறு வேறு வடிவங்கள்ள இன்னும் காப்பாத்தி வெச்சுட்டுத்தானிருக்காங்க. எவ்வளவு நாளைக்குன்னு தெரியல"

இருள் முழுமையாகக் கவிந்ததும் பெண்கள் கலைந்து சென்றார்கள். கடலிலிருந்து வீசியடித்த காற்று தலைமுடியைக் கலைத்து

விளையாடியது. ஸ்ரீகுமாரும், அரங்கநாதனும் கிளம்பினர். பேச்சு பிரபாகரனையும், இலங்கை கடற்படையையும், திருமாவளவனையும், ராமதாஸையும் நோக்கித் திரும்பியது. நவீன் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து விட்டான்.

முல்லைக்கும் தமிழ்நாட்டு அரசியல் பற்றி மக்கள் பேசுவதை கேட்க ஆசைதான். ஆனால் அவள் மனதில் அலைமோதிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தது. பின்பு நவீனிடம் கேட்டுக் கொள்ளலாம் என்று சைகை காட்டிவிட்டு எழுந்து நடந்தாள்.

"பனிரெண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை சிலப்பதிகாரம் எங்கோ மறஞ்சு கிடந்தது. அப்போதிருந்த உரை அதிகமா கவனிக்கப்படல. அடியார்க்கு நல்லார் சிலம்பை மறுகண்டுபிடிப்புச் செஞ்சு உரை எழுதினார். அதுக்கப்புறம் அது தமிழ் மடங்களிலும், சில தமிழறிஞர் வீடுகளிலும் மட்டும் படிக்கப்பட்டு வந்தது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட தமிழ்நாட்டின் கல்வி நிலையங்களில் சிலப்பதிகாரம் இல்லை. உ. வே. சா. மீட்டெடுக்கும் வரை இந்தமக்கள் தான் அந்த இலக்கியத்தை மறக்காமல் வைத்திருந்தார்கள்" என்ற ஸ்ரீகுமாரின் குரல் காதருகில் ஒலித்தது.

எத்தனையோ இலக்கியங்களை இந்த மக்கள் தங்களுக்குச் சம்பந்தமில்லாதவை என்று புறங்கையால் ஒதுக்கித் தள்ளியுள்ளார்கள். இதை மட்டும் ஏன் காப்பாற்றி வைத்தார்கள்! இவர்கள் இதில் என்ன தேடினார்கள்? எதைக் கண்டு கொண்டார்கள்? தான் தேடுவதும், இவர்கள் தேடுவதும் ஒன்றுதானா?

கடலில் கால் நனைக்கும் தூரத்திற்கு வந்ததும் நின்று சுற்றிலும் பார்த்தாள். காற்று விர்விர்ரென்று அடித்துக் கொண்டிருந்தது. கருண்ட கடலின் அலைகள் வெண்மை ஒளிர்வுடன், இரைச்சலுடன் கரையை நோக்கி விரைந்து வந்தன. தொலைவில் தெரிந்த கலங்கரை விளக்கமும், நவீன எழுநிலை மாடமும் இந்த இரண்டு நாட்களில் மிகவும் பழக்கமாகிவிட்டன. முல்லை திரும்பி நின்று மணற்பரப்பைக் கண்களால் தேடினாள்.

அன்றிரவு வந்த அவள் மீண்டும் வருவாளா? இப்போது இன்னும் நெருக்கமாகிவிட்ட அவளிடம் கேட்க முல்லைக்கு ஆயிரம் கேள்விகள் இருந்தன.

சற்றுத் தொலைவில் வெண்மையாக ஏதோ அசைவது தெரிந்தது. இல்லை அது அவளை நோக்கித்தான் வந்து கொண்டிருக்கிறது. அவள்தான். இந்த மாயத்தன்மை கொண்ட இருளும், மணல் வெளியும், காற்றும், அலைகளும் அவள் வருவதற்கான சூழலைத்தான் காட்டுகின்றன. முல்லையின் இதயம் வெளியில் வந்துவிடுவதைப் போலத் துடிக்கத் தொடங்கியது. அவள் மூச்சைப் பிடித்துக்கொண்டு காத்திருந்தாள்.

வந்தது நவீன். “எங்க திடீர்னு காணாமல் போயிட்ட?”

”நீயா”

நவீன் உல்லாசமான மனநிலையிலிருந்தான். “நீயா ஒரு பழைய தமிழ்ப்படம். கமல் நடிச்சது”

முல்லை சிரித்துவிட்டு பதில் பேசாமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“உன் பிரண்டுன்னு நெனச்சியா?”

"சிலப்பதிகாரத்தையும், பூம்புகாரையும் கட்டடங்களில் தேடியது எவ்வளவு முட்டாள்தனம். இந்த மக்கள்கிட்ட அது வாழ்ந்திட்டிருக்குது. இதைத் தேடி வாழ்நாள் எல்லாம் அலைந்தவங்க வடிவத்தில இந்த நகரமும், காவியமும் வாழ்ந்திட்டிருக்கு. இதை சொல்லத்தான் அவள் வந்தாள் போலிருக்கிறது”

“அப்ப காரியம் முடிஞ்சதும் போய்ட்டா ?”

“முடியலையே. இப்பதானே தொடங்கிருக்கு! கண்டிப்பா திரும்பி வருவா, என்னைப் பார்ப்பான்னு மனசு சொல்லுது"

மீண்டும் ஒருமுறை பார்வையால் இருண்டு கிடக்கும் கடலையும் ,

மணற்பரப்பையும் கண்களால் துழாவிவிட்டு விடுதி நோக்கி இருவரும் நடக்கத் தொடங்கினர்.

8

நவீன் எழுந்த போது இருள் இன்னும் கொஞ்சம் மீதியிருந்தது. இன்று காலைப்பொழுது மேகமூட்டம் இல்லாமல் பளிச்சென்று இருக்கப் போவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இந்த இரண்டு நாட்களில் எடுத்த காட்சிகள் எல்லாமே சற்று இருளோடி இருப்பதாக அவனுக்குத் தோன்றிக்கொண்டே இருந்தது. பளீரென்று ஒரு உற்சாகமூட்டும் அதிகாலையை படமெடுக்க அவனுக்குள் ஆவல் பொங்கியது. கேமராவை எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு ஓடினான். அதற்குள் செக்கச் செவேலென சூரியன் தலை காட்டத் தொடங்கியிருந்தது. கண்கூசாத ஒளி அந்த இடத்தை முற்றிலும் வேறுவிதமாகக் காட்டியது.

இன்னும் இருள் விலகவில்லை. விருந்தினர் மாளிகையின் சுற்றுச் சுவரோரம் இருந்த மரத்தில் காக்கைகள் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருந்தன. ஒரு குயில் விட்டுவிட்டு இனிமையாகக் கூவிக் கொண்டிருந்தது.

அதை அருகிலிருந்து படம் பிடிக்கும் நோக்கில் நவீன் இறங்கிச் சென்றான். மரத்தை ஒட்டினாற்போல் கழுத்து உயரத்திற்கு விருந்தினர் மாளிகையின் சுவர் சென்றது. மரத்திற்கு நேர் பின்னே ஸ்ரீகுமாரின் ஓட்டுநரின் தலை தெரிந்தது. தன் பக்கம் திரும்பினால் ஒரு ஹாய் சொல்லலாம் என்று நவீன் ஒருநிமிடம் காத்திருந்தான். யாருடனோ மும்முரமாகச் செல்லில் பேசிக்கொண்டிருந்த ஓட்டுநர் அதைக் கவனிக்கவில்லை. அவன் அடிக்கடி கெஸ்ட் ஹவுஸ் பக்கம் திருட்டுப் பார்வை வேறு பார்த்துக் கொண்டிருந்தான்.

“இவருக்கு மனைவியுடனோ, பிள்ளைகளுடனோ இரண்டு வார்த்தை நிம்மதியாகப் பேசமுடியவில்லை. எஜமானனைக் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது” அனுதாபத்துடன் நினைத்துக்கொண்டு மரத்தை நோக்கித் திரும்பியன் ஓட்டுநர் தங்களைப் பற்றி ஏதோ சொல்வதை கேட்டு திடுக்கிட்டான்.

“ஆமா சார். இன்னும் கொஞ்ச நேரத்துல ஸ்ரீரங்கம் கெளம்பிடுவோம். . . இல்ல சார் திருச்சி இல்ல, ஸ்ரீரங்கம் அப்படித்தான் சொன்னாங்க . . .

ஏதோ பழைய பாதைல போகணுமாம் . . . கூட ரெண்டு பேர் வர்றாங்க . . . ஒரு பையனும் பொண்ணும் . . .”

ஓட்டுநர் ஒளிந்து நின்ற விதமும், பேசிய விதமும் ஸ்ரீகுமாரைப் பற்றி அவருக்குத் தெரியாமல் யாரிடமோ தகவல் சொல்கிறான் என்று எண்ணத் தோன்றியது. மரத்துக்குப் பின்னால் மறைந்துகொண்டு கேமராவை பேருக்கு நோண்டியபடி அவனது பேச்சில் கவனம் குவிக்க முயன்றான்.

“அந்த இரண்டு பேரும் யாருன்னு தெரில. ஏதோ படமெடுக்கறாங்க. கண்ணகி அது இதுன்னு பேசறாங்க. . . நம்ம விஷயத்தைப் பற்றி எதுவும் பேசல . . . எல்லாத்தயும் கவனிச்சுட்டுத் தான் இருக்கேன் . . . இல்ல இல்ல அங்க வரைக்கும் வரல ஸ்ரீரங்கம் வரைக்கும்தான் . . .”

“ஹாய் நவீன் . . .” மாடியிலிருந்து ஸ்ரீகுமாரின் குரல் கேட்டு டிரைவர் சுவருக்குப் பின்னே மறைந்தான். நவீன் பதிலுக்கு ஹாய் சொல்லிவிட்டு கெஸ்ட் ஹவுஸை நோக்கி நடக்கத் தொடங்கினான். மனதில் எண்ணற்ற கேள்விகள் குமைந்து கொண்டிருந்தன. இந்த ஸ்ரீகுமார் என்ன வேலையில் ஈடுபட்டிருக்கிறார். எதற்காக நாம் பேசுவதையும் ஸ்ரீகுமாரின் செயல்களையும் கண்காணிக்கிறார்கள் . . .?

எமரால்டு என்கின்ற மரகதக்கல் வழக்குகளை ஜெயிக்க உதவும் என்றார் அரிஸ்டாட்டில். நீரோ மன்னர் எமரால்டு கண்பார்வையை கூர்மைப்படுத்தும் என்று நம்பினார். கிளியோபாட்ரா ஏராளமான ரத்தினங்களைச் சேகரித்து வைத்திருந்தாள். இரண்டு காரட் எமரால்டின் விலை 5,00,000 ரூபாய் ஆகும்.

இந்தியாவில் மத்திய தெற்குப் பகுதிகளில் இந்தவகைக் கற்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனால் முறையான சுரங்கங்கள் இல்லை. தரப்பரிசோதனை இல்லை. மாணிக்கக் கற்கள் பதித்த ஒரு நெக்லஸை ஒரு வணிகர் செய்ய விரும்பினால் உரிய தரம் நிறைந்த கற்கள் எப்போது கிடைக்கும் என்பதற்கு ஒரு உத்திரவாதமும் இல்லை. ஏராளமான இடைத்தரகர்கள் உள்ளனர்.

ஜே.கே.ஜெம்ஸ் சுரங்கத்திலிருந்து நேரடியாக சந்தைக்கு என்ற கோட்பாட்டை அறிமுகப்படுத்த உள்ளது. இதன் மூலம் இடைத்தரகர்களை விலக்க வாய்ப்புள்ளது. தோண்டி எடுக்கப்பட்ட கற்களை இந்நிறுவனம் தானே வருடத்திற்கு மூன்று நான்கு முறை ஏலம் விடும். நிபுணர்கள் இதை வாங்கி பட்டை தீட்டுவார்கள். இவற்றை எங்கே விற்கலாம் என்று நிறுவனமே ஆலோசனையும் வழங்கும்.

ஜே.கே டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸின் இணையதளத்திலிருந்து

பனாஜியிலிருந்து சிறிது நேரப் பயணத்தில் ஒரு குளக்கரையோரம் பிரம்மாண்டமாக நின்றது அந்தப் புதுப்பிக்கப்பட்ட பழைய கோவா பாணி பங்களா. நரசிம்மன் ஹாலில் போடப்பட்டிருந்த மஹோகனி சோஃபாவில் உட்கார்ந்து டீப்பாயில் கிடந்த பிசினஸ் லைனைப் புரட்டிக் கொண்டிருந்தார். இடையிடையே அவரது கண்கள் குறுக்கும் நெடுக்கும் அலைபாய்ந்து கொண்டிருந்த இன்சைட் அவுட்சைட் பத்திரிக்கையாளர்களையும், அவர்களோடு கம்பீரமாக நடை போட்டுக் கொண்டிருந்த ஆர்கிடெக்ட் மல்ஹோத்ராவையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. மல்ஹோத்ரா பெருமை பொங்க நிருபருக்கு வீட்டைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

“இந்த வீட்டை நாங்கள் முதலில் பார்த்தபோது பாழடைந்த மாளிகை போல் தான் இருந்தது. இடையில் யார் யாரோ இஷ்டத்திற்குச் சுவர்கள் எழுப்பி ஒரிஜனல் வடிவத்தையே சிதைத்திருந்தனர். இதை பழுது பார்ப்பதைவிட புதிதாக ஒன்றைக் கட்டிவிடலாம் என்று சொன்னோம். உரிமையாளர் பழைய கட்டிடம் தான் வேண்டும் என்று பிடிவாதமாக நின்று இந்த வீட்டை வாங்கினார். நானும், என் மனைவியும் இதை புதுப்பிக்கும் பணியை சவாலாக எடுத்துக் கொண்டோம். வயதான தச்சர்களையும், கொத்தனார்களையும் அழைத்து வந்தோம். அவர்கள் வீட்டின் கூரையையும் சுவர்களையும் பழமை மாறாமல் புதுப்பித்தார்கள். இடையில் இருந்த தடுப்பு சுவர்கள் நீக்கப்பட்டதும் வீடு விசாலமானதாக வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ளதாக மாறிவிட்டது. உரிமையாளரின் மனைவி பழமையோடு புதுமையும் இணைந்திருக்கவேண்டும் என்று கருதியதால் வீட்டின் முன்புறத்தோட்டத்தை அகன்ற புல்வெளியாக மாற்றினோம். ஹாலின் சுவற்றை அகற்றிவிட்டு அந்த இடத்தில் பிரம்மாண்டமான கண்ணாடிகளை பொருத்தினோம். இது வெளியே இருந்த புல்வெளியும் ஹாலும் ஒன்றாகிவிட்டது போன்ற தோற்றத்தைக் கொடுத்தது. சுவர்களில் பதம்ஸி, கனேரியா, கே.ஜி. சுப்பிரமணியத்தின் ஓவியங்கள் மாட்டப்பட்டன. நடு ஹாலில் காஷ்மீர விரிப்பு இடம் பெற்றது. உரிமையாளர் கானாவில்லிருந்து கொண்டு வந்த மரச்சிற்பங்களும் மற்ற நாடுகளிலிருந்து கொண்டுவந்திருந்த கலைப் பொருட்களும் உரிய இடங்களில் அமர்த்தப்பட்டதும் வீடு புதுமையும், பழமையும் அற்புதமாக கலந்ததாக மாறிவிட்டது. ……”

நரசிம்மன் மல்ஹோத்ராவின் உற்சாகத்தை லேசான முறுவலோடு ரசித்துக் கொண்டிருந்தார். வெளியே தெரிந்த புல்வெளியை பார்த்தபடி இனி ஒரு வேளை இந்த வீடுதான் தன் நிரந்தர இல்லமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டார். பெல்ஜியத்திலும், ஆப்பிரிக்காவிலும் கழித்த முப்பது ஆண்டுகளுக்கு பிறகு, குழந்தைகள் வளர்ந்து வேறு வேறு நாடுகளில் செட்டில் ஆனபிறகு, அவருக்கும், அவர் மனைவிக்கும் இந்தியா சென்றுவிடவேண்டும் என்ற எண்ணம் வந்து கொண்டேயிருந்தது. அதற்கு ஏற்றாற்போல் அவர் பணிபுரிந்த எமரால்ட் ஃபீல்டு நிறுவனம்

ஜே.கே டைமண்ட்ஸ் அண்ட் ஜுவல்ஸில் பெரிய அளவு முதலீடு செய்து இயக்குனர் குழுவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அதன் நிர்வாகத்தை மாற்றியமைக்க ஆலோசகராக இந்தியா செல்ல விருப்பமா என்று கேட்டபோது மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்.

நரசிம்மன் ஜே.கே.டைமண்ட்ஸை ஓராண்டு ஆய்வு செய்து ஒரு அறிக்கை தயாரித்தார். அவர் காங்கோவிலும், கானாவிலும், ஐவரி கோஸ்டிலும் வேலை செய்தவர். வைரச் சுரங்கங்களை கைப்பற்றுவதற்காக ஐரோப்பிய நிறுவனங்கள் உள்ளூர் கலகங்களை உருவாக்குவதையும் பழங்குடியினங்களை ஒன்றோடொன்று மோதவிடுவதையும், கிராமங்களையும், நகரங்களையும் சின்னாபின்னமாக்குவதையும் நேரில் பார்த்தவர். இதே நிறுவனங்கள் ஆப்பிரிக்க குழந்தை போராளிகளுக்கும், குழந்தை தொழிலாளர்களுக்கும் குரல் கொடுக்கும் வேடிக்கையையும் பக்கத்திலிருந்து பார்த்தவர். வைரச் சுரங்கங்களைக் கட்டுப் படுத்துவதற்காக பன்னாட்டு நிறுவனங்கள் நாடுகளால் தூண்டப்படும் போர்களை, பழங்குடியின ரத்தப்பகை, ஆப்பிரிக்கர்களின் காட்டுமிராண்டித்தனம் என்று அமெரிக்க மீடியாக்கள் பேசுவதும் அவருக்குத் தெரியும்.

அவருக்கு ஜே.கே.டைமண்ட்ஸ் நடத்தப்படும் முறை பாமரத்தனமாகத் தோன்றியது. சொந்தக்காரர்கள் மட்டுமே டைரக்டர்கள், சாதி, மதம், விரதம், நல்ல நாள், கெட்ட நாள் என்று மார்வாரிகளின் வியாபாரம் ஏதோ ஆசிரமம் போலிருந்தது. கணக்குபிள்ளைக்கு பதில் கம்ப்யூட்டர். வேறெந்த நவீனத்துவத்திற்கும் இடம் கொடுக்காத பழைய பாணி நடைமுறைகள். ஒருவிதத்தில் இவர்கள் ஆண்ட் வெர்ப் யூத வியாபாரிகள் போலவே இருந்தார்கள். பெயரில் ஜெம்ஸ் இருந்ததாலும் வைரம் தவிர்த்த மற்ற மாணிக்கம், மரகதம் போன்ற விலையுயர்ந்த கற்களின் வணிகத்தின் மதிப்பை இந்த நிறுவனம் அறிந்து கொள்ளவேயில்லையென்று அவர் முடிவு செய்தார்.

பெல்ஜியத்தின் ஆண்ட்வெர்ப் வைர விற்பனையின் மையமாக இருந்தாலும் உலகில் கிடைக்கும் வைரத்தில் தொண்ணூறு சதவீதம் இந்தியாவில் பட்டை தீட்டப்படுகிறது. இந்தியாவிலும் வைரத்துக்கு நல்ல

சந்தை இருக்கிறது. ஆனால் வைரத்தை பணக்காரர்கள் மட்டுமே வாங்க முடியும். அது கிடைப்பதிலும் உலகம் முழுவதும் ஏராளமான பிரச்சினைகள். உலகில் கிடைக்கும் வைரத்தில் அறுபது சதவீதத்தை உற்பத்தி செய்யும் போட்ஸ்வானா, தென்னாப்பிரிக்கா, காங்கோ, நமீபியா நாடுகள் தங்கள் நாடுகளிலேயே அதைப் பட்டை தீட்ட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கத் தொடங்கியுள்ளன. அதனால் சுவாசிஷ் டைமண்ட்ஸ், மஹேந்த்ரா பிரதர்ஸ், கேஜிகே ஆசியன் ஸ்டார் மாதிரி நிறுவனங்கள் அந்த நாடுகளில் கடை திறந்து வருகின்றன. தங்கம் இறக்குமதிக்கும் இந்திய அரசு தடை விதித்து வருகிறது.

ஜே.கே டைமண்ட்ஸின் உயிர்நாடியே வைரமும், தங்கமும் தான். இப்போது இரண்டுக்குமே பிரச்சினை. இந்த மிகப்பெரிய நிறுவனத்தால் வெளிநாட்டுக்கும் செல்ல முடியாது. எனவே தங்களுக்குத் தெரிந்த குறுக்கு வழியில் இறங்கினார்கள். ஒரு பெரிய அரசுநிறுவனம் இதன் பங்குகளில் முதலீடு செய்தது. அதனால் நன்மையை விட தீமைதான். பங்குவிலை உயரவேயில்லை. ஆனால் இதில் ஊழல் இருக்கிறது என்று ஒரே அல்லோலகல்லோலம். ஷேர்மார்க்கெட் சூதாட்டத்தில் வேறு ஈடுபட்டு பெயரைக் கெடுத்துக் கொண்டது நிறுவனம். மாற்றி யோசிக்கும் திறனே இல்லாத இந்த வியாபாரிகளை நினைத்தால் அவருக்கு வேடிக்கையாகவும் இருந்தது. ஆயாசமாகவும் இருந்தது.

திறமையான தந்திரமான வியாபாரிகள்தான். அறிவுகூர்மை உடையவர்கள்தான். ஆனால் குடும்ப வியாபாரத்தில் முழுகிப்போய் உலகமயமாக்கலைப் புரிந்து கொள்ளவே இல்லை. பல் குத்தும் குச்சி உன்னால் நன்றாகச் செய்ய முடியுமென்றால் அதைச் செய்து நூறு நாடுகளுக்கு அனுப்பு. இலங்கையில் சியக்காய் மூன்று ரூபாய்க்குக் கிடைக்கிறது. இங்கே செய்ய ஐந்து ரூபாய் ஆகும் என்றால் செய்யாதே. இலங்கையில் வாங்கி இந்தியாவில் விற்பனை செய். இங்கேயேதான் செய்வேன் என்றால் அந்த இடத்தில் முட்டாள்தனம் தானே முன்னால் நிற்கிறது!.

தென்னிந்தியாவில் ஏற்கெனவே ரத்தினக் கற்களுக்கு ஓரளவு மார்க்கெட் இருக்கிறது. அது விரைவாக வளர்ந்தும் வருகிறது. இந்தக்

கற்களை நகைகளில் பதித்துக் கொள்ளும் வழக்கமும் இருக்கிறது. இங்கே கலகங்கள் இல்லை. குறிப்பாக தமிழ்நாட்டில் இல்லை. வலிமையான மத்திய, மாநில அரசுகளால் தாங்கள் நினைத்ததை செய்யமுடியும். ஆனால் வேடிக்கை என்னவென்றால் அந்த காங்கேயம் பகுதி முழுவதிலும் ஒரு உருப்படியான சுரங்கம் கூட இல்லை. யாராவது விவசாயிகள் கற்களை கண்டெடுப்பார்களாம். அவற்றை உள்ளூர் வியாபாரிகள் வாங்கி வைப்பார்களாம். பின்பு இந்தக் கம்பெனிக்காரர்கள் வாங்கி ஜெய்ப்பூருக்கு கொண்டு வந்து பட்டை தீட்டி விற்பார்களாம். இது என்ன தொழில்! உள்ளூர் நெட்வொர்க் எதற்கும் ஆகாததாக இருக்கிறது. இந்த வீட்டை புதுப்பித்து கட்டியது போல ஜே.கே.டைமண்ட்ஸையும் மாற்றியமைக்க வேண்டும். ரிக்கன்னிசன்ஸ் பர்மிட் வாங்கியாகிவிட்டது. பத்தாயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பில் சுரங்கம் தோண்ட வாய்ப்புள்ள பகுதிகளைத் தேட நிபுணர்களை அனுப்ப ஏற்பாடுகள் நடந்து வந்தன. அரசில் லாபி செய்து சுரங்கம் தோண்ட கனிம வளத்துறை அனுமதி பெறுவதற்கான ஆரம்ப கட்ட வேலைகளும் நடந்து வருகின்றன. சுரங்கங்கள் தோண்டப்பட்ட பின்பு ராஜஸ்தான், பெங்கால் தொழிலாளர்களை திருப்பூருக்கோ, கோவைக்கோ கொண்டு வந்து கற்களை அங்கேயே பட்டை தீட்டலாம். ஏர்போர்ட் இருப்பதால் கோவை சரியானதாக இருக்கும். இது அடிப்படை வேலை.

நிர்வாகத்தில் பாமரத்தனம் இருப்பதாகத் தெரிந்தாலும் இந்தியாவில் முக்கியமாக சூரத், ஜெய்ப்பூரில் பட்டை தீட்டும் தொழில் நடக்கும் விதம் அவருக்கு பிரமிப்பூட்டுவதாக இருந்தது. ஆண்ட்வெர்ப் என்னதான் உலக வைரத் தலைநகராக இருந்தாலும் ஒருசில தெருக்களில்தான் வணிகம் நடைபெறும். இஸ்ரேலும் இப்படித்தான். இந்தியாவில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வைரத்தையும், ரத்தினக்கற்களையும் பட்டை தீட்டும் பணியில் இருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் வைரங்களை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு தனிநபராக ரயிலில் செல்கிறார்கள். வெறும் துண்டுச்சீட்டில் மட்டுமே வியாபாரம் நடக்கிறது.

ஆண்ட்வெர்பில் இந்தியாவிலிருந்து வரும் மார்வாரி, பனியா வியாபாரிகளை நரசிம்மன் பார்த்திருக்கிறார். ஆண்ட்வெர்பின்

முதன்மையான யூத வியாபாரிகளின் முன் பார்க்கும் போது இவர்கள் மேல் அவருக்கு அவ்வளவு உயர்வான அபிப்பிராயம் ஏற்பட்டதில்லை. ஆனால் இந்தியா வந்து பார்த்த பிறகு அதிர்ந்து போனார்.

கிம்பர்லி புரோஸஸ் சர்டிபிகேட் பற்றி இங்கே யாரும் பெரியதாக அலட்டிக் கொள்வதில்லை. மத்தியத் தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள கலகக் குழுக்கள் போர்களுக்குத் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளில் கிடைக்கும் வைரங்களைப் பயன்படுத்துகின்றனவாம். இதற்காக தங்கள் மக்களைக் கொடுமைப்படுத்தி அடிமையுழைப்பில் ஈடுபடுத்துகின்றனவாம். இதனால் மார்க்கெட்டுக்கு வரும் ஒவ்வொரு வைரமும் எங்கிருந்து எடுக்கப்பட்டது, எங்கே பட்டை தீட்டப்பட்டது என்று கண்காணிக்கப்பட்டு ரத்த வைரம் அல்ல அதாவது அங்கீகரிக்கப்பட்ட அரசுகளால் மட்டுமே எடுக்கப்பட்டது என்று சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும். ஆண்ட் வெர்ப் நிறுவனங்களும் இந்தக் கட்டுப்பாடுகளை ரகசியமாக மீறுவது அவருக்குத் தெரியும். அதனால் தாங்கள் என்னவோ உலகை உய்விக்க வந்தவர்கள் போலவும் மனித உரிமையைக் காப்பதே தங்கள் கடமை போலவும் வெள்ளைக்காரர்கள் அலட்டிக் கொள்வது அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது.

இந்த சான்றிதழ் அளிக்கும் முறை அங்கோலாவின் யூனிடா குழுவைக் கட்டுப்படுத்தத் தான் கொண்டுவரப்பட்டது. இதே குழு அங்கோலாவின் சோவியத் ஆதரவு அரசை எதிர்த்துப் போரிட்ட போது அது விடுதலை இயக்கமாகக் கருதப் பட்டது. அப்போதும் இந்தக் குழு வைர வியாபாரத்தில் ஈடுபட்டுத்தான் வந்தது. ஆப்பிரிக்காவிலேயே வலிமைவாய்ந்த கெரில்லா இயக்கமாக இது இருந்தது. அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் யூனிடாவை ஆதரித்தன, உதவின. சோவியத் யூனியன் சிதறி அங்கோலா அரசு மேற்குலகின் பக்கம் சாய்ந்ததும் யூனிடா அவர்களுக்குத் தேவையற்றதாகிவிட்டது. அதை அரசோடு சமாதானமாகப் போகும்படி வற்புறுத்தினார்கள். மறுத்ததும் அதன் முக்கிய நிதியாதாரமான வைர வணிகத்தில் கை வைக்கிறார்கள்.

ஜிம்பாப்வே வெள்ளையர்களுக்கு எதிராக இருக்கிறது. எனவே ஐ.நா சொல்லாவிட்டாலும் எந்தப் போரும் நடக்காத ஜிம்பாப்வேயிலிருந்து

வரும் வைரம் 'ரத்த வைரம்' என்று பத்திரிக்கைகள் கத்துகின்றன. போஸ்ட்வானா மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவு அரசு. எனவே கலஹாரி பாலைவன பகுதியிலுள்ள ரிசர்வ் காடுகளில் இருந்து ஆதிவாசிகளை அடித்துத் துரத்தி டீபீர்ஸ் வைரக் கம்பெனிக்கு வைரச்சுரங்கம் தோண்டக் கொடுத்தாலும் அது ரத்த வைரம் அல்ல.

மார்வாரிகள் இந்த அரசியலைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. பட்டை தீட்டப்பட்டுவிட்டால் எல்லா வைரமும் நல்ல வைரம்தாம். எது எங்கேயிருந்து வருகிறது என்று யார் கண்டது? ஆயிரம் பேர் கடத்தினால் இரண்டு பேர் மாட்டுகிறார்கள்.

சட்டங்களில் இருந்து தப்பும் இவர்களது சாமார்த்தியத்தைப் பார்த்துத்தான் பெரு நிறுவனங்கள் இங்கே வருகின்றன போலும். எட்டு லட்சம் பேரிலிருந்து பத்து லட்சம் பேர் வரை வேலை செய்யும் வைரத்தொழில் குடிசைத்தொழில் என்று இவர்கள் சாதிக்கிறார்கள். பாக்டரி சட்டத்தின்கீழ் வராதாம். இவர்கள் கொடுக்கும் கூலியை பார்த்தால் நரசிம்மனுக்கு சிரிப்பே வந்தது. பேசாமல் சாப்பாடு போட்டு சும்மா வேலை வாங்கிவிடலாம். குஜராத் உயர்நீதி மன்றம் வைரம் பட்டை தீட்டும் தொழில் பாக்டரி சட்டத்தின் கீழ் வரும் என்று தீர்ப்பளித்தது. ஆனால் இருக்கும் 10,000 தொழிச்சாலைகளில் 600 மட்டுமே இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ளன. . . தீர்ப்பு பாட்டுக்கு இருக்கிறது. அரசு தன்போக்கில் போய்க்கோண்டே இருக்கிறது. வியாபாரம் தன் வழியே நடந்து கொண்டே இருக்கிறது. இந்தியா. . . எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஒரே பிரச்சினை என்னவென்றால் இவர்கள் எளிதில் மாறவே மாட்டேனென்கிறார்கள். அதை மட்டும் செய்து விட்டால் இவர்களை யாராலும் அடித்துக் கொள்ளவே முடியாது. நிதானமாக அசைபோட்ட நரசிம்மனின் நினைவுகள் ரத்தினக் கற்களுக்குத் திரும்பின.

இங்கே கிடைக்கும் மரகதம், மாணிக்கம், கோமேதகம் கற்களுக்கு இந்தியாவின் மற்ற பகுதிகளில் மார்க்கெட் இல்லை. ராசிக்கற்கள் என்றே இந்த வண்ணக்கற்களை மக்கள் அறிந்திருக்கிறார்கள். பெரும்பாலான கற்கள் வெளிநாட்டுக்குத்தான் போகின்றன. எத்தனை கற்கள் எடுக்கப்படுகின்றன, என்ன விலை என்பதற்கு எந்தக் கணக்கும் இல்லை.

வெளிநாட்டு வியாபாரம் ஒரு சதவீதம் நேரடியாக நடந்தால் பத்து சதவீதம் வேறு வழியில் நடக்கிறது. அதை குருவி என்கிறார்கள். குருவி காலில் கட்டி விட்டால் உலகில் எங்கு வேண்டு மானாலும் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுமாம். பார்க்கலாம்.

வெளிநாடுகளில் முக்கியமாக அமெரிக்காவில் இந்தக் கற்களுக்கு நல்ல சந்தை இருக்கிறது. அதிலும் ரத்தச் சிவப்பு மாணிக்கம் அதாவது ரூபி என்றால் அவர்களுக்கு அப்படியொரு மோகம். கிருத்துமஸா, புத்தாண்டா, பிறந்தநாளா, காதல் பரிசுகளா எதுவாக இருந்தாலும் முதலில் அவர்கள் தேர்ந்தெடுப்பது ரூபியைத்தான். ஆனால் பிரச்சினை என்னவென்றால் தேவை இருக்கிற அளவிற்கு இந்தியர்களால் இந்த வண்ணக்கற்களைத் தேடி எடுக்க முடிவதில்லை. எனவே கிடைக்கும் தரங்குறைந்த கற்களை நல்ல கற்கள் என்று ஏமாற்றி விற்கும் ஒரு பெரிய கோஷ்டியே ஜெய்ப்பூரின் ஜோஹ்ரி பஜாரில் இருக்கிறது. இந்தக் கும்பல்கள் வெளிநாட்டும் பயணிகளை விதவிதமான முறைகளில் ஏமாற்றும் கதைகளை நரசிம்மன் ஏறக்குறைய தினமும் கேள்விப்பட்டார்.

நல்ல தரம் வாய்ந்த வண்ணக்கற்களில் வெடிப்புகள் இருக்காது. கல் நட்சத்திரம் போல ஒளிவிடும். இதை அஸ்டெரிஸம் என்கிறார்கள். ஆனால் பெரும்பாலான கற்களில் வெடிப்புகள் இருக்கும். தரைமட்டத்தில் கிடைக்கும் கற்களே கண்டெடுக்கப்படுவதால் இது தவிர்க்க முடியாதது. ஆனால் வியாபாரிகள் வெடிப்புகளை ரெஸினாலும், லெட்கிளாஸாலும் நிரப்பி மூடி மறைத்து நல்ல கல் என்று விற்றுவிடுகிறார்கள். தவிர கற்களை நிலக்கரி அடுப்பில் 1600 டிகிரி செல்ஷியஸ் அளவுக்குச் சூடுபடுத்தினால் நிறம் மங்கிய கல்கூட அற்புதமான நிறமுள்ளதாக மாறிவிடும். பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட இந்த முறை இப்போது இந்தியாவில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பர்மாவின் மோகோக் சுரங்கங்களில் மிகவும் விலையுயர்ந்த பளிச்சிடும் மாணிக்கக் கற்கள் கிடைக்கின்றன. ஆனால் சுரங்கங்கள் இராணுவ அரசின் கடுமையான கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இதே பர்மாவில் கட்டுப்பாடு குறைந்த மோங்ஹூசூ என்ற இடத்திலும் மாணிக்கங்கள் கிடைக்கின்றன. ஆனால் அவ்வளவு தரமானவை அல்ல.

இவற்றைச் சூடுபடுத்தி பளிச்சிடும் வண்ணம் கொண்டவையாக மாற்றுகிறார்கள்.

சூடுபடுத்துவதாவது பரவாயில்லை. ஓரளவு இயற்கையாக கற்கள் உருவாகும் முறையை ஒத்திருக்கிறது. ஆனால் வெடிப்புகளை நிரப்பும் ஏமாற்றுதான் படுமோசமானது. தொடக்கத்தில் இவை உண்மைக்கற்கள் போலவே மாறிவிட்டாலும் போகப்போக நிறமிழந்து மங்கிவிடும். இதில் பலகோடி ரூபாய்களை இழந்தவர்கள் உண்டு. ஹெ.சி.எல் நிறுவனத்தில் பெரும் பொறுப்பில் இருக்கும் ஒருவரின் மனைவி இந்தக் கற்கள் சேகரிப்பதில் ஆர்வம் கொண்டவர். அவரிடம் இப்படிப்பட்ட மட்டமான கற்களை விற்று கோடிக்கணக்கில் ஏமாற்றி விட்டதாக செய்திகள் வெளியாகின.

ஜெய்ப்பூர் நகை வியாபாரிகள் சங்கமே வருடத்திற்கு 200 கோடி ரூபாய்க்கு இந்த மோசடி நடப்பதாகக் கணக்கிட்டுள்ளது. எனவே கற்களை விற்கும்போது அதை மெருகேற்ற ரெஸின் அல்லது ஏதாவது எண்ணெய் பயன்படுத்தப் பட்டுள்ளதா என்று சொல்ல வேண்டும் என்று விதியே கொண்டு வந்துள்ளது. ஆனால் ஜெம்மாலஜிகல் ஆய்வகத்தால் ஒரு ரத்தினம் உண்மையா போலியா, ரெஸின் நிரப்பப்பட்ட ஹைபிரிட் அல்லது கம்போஸிட் கல்லா அல்லது இயற்கையானதா என்றுதான் சொல்லமுடியும். தரம் குறித்து அதனால் எதுவும் சொல்ல முடியாது. ரத்தின வணிகம் ஒரு கடல் என்றால் ஆய்வகத்தின் பார்வைக்கு வருவது ஒரு துளிதான்.

வெள்ளைக்காரர்களின் ரத்தின மோகத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் சித்து விளையாட்டுகள் பற்றி ஒரு புராணமே எழுதும் அளவுக்கு அறிக்கைகள் நரசிம்மனின் மேஜையில் குவிந்துவிட்டன. டெல்லியிலோ, ஜெய்ப்பூரிலோ வெளிநாட்டுப் பயணியை 'ரத்தின வியாபாரி' அணுகுவார். சுற்றுலாப்பயணிக்கு உள்ள வரிச்சலுகையைப் பயன்படுத்தி சில உயர்தர ரத்தினக்கற்களை வாங்கி தங்கள் ஊருக்கு அனுப்பும் படியும் தங்கள் பங்குதாரர் அங்கே வந்து கற்பனையே செய்யமுடியாத விலைக்கு கற்களை வாங்கிக்கொள்வார் என்றும் லாபத்தை பயணியே வைத்துக்கொள்ளலாம் என்றும் சொல்வார்.

எப்படியிருந்தாலும் ரத்தினக்கல்தான் தங்களிடம் இருக்கிறதே என்ற நம்பிக்கையில் பயணியும் ஒப்புக் கொள்வார். ஊருக்குப் போனபிறகுதான் தெரியும் அது அற்ப விலையே உள்ள செயற்கை சிந்தெடிக் ரத்தினம் என்று.

நரசிம்மன் குடியிருக்கும் கோவாவிலேயே இப்படியொரு சம்பவம் நடந்தது. ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தின் அதிபுத்திசாலியான பெண் அதிகாரி விடுமுறையில் கோவா வந்திருந்தார். அவர் தங்கியிருந்த நட்சத்திர ஓட்டலின் பாரில் ஒரு ரத்தின வியாபாரி 'தற்செயலாகப்' பழக்கமானார். இதய வடிவில் செதுக்கப்பட்ட கண்ணைப் பறிக்கும் ரத்தச் சிவப்பு மாணிக்கக் கற்களைக் காட்டினார். இவற்றை அந்த பன்னாட்டு நிறுவன அதிகாரி தன்னுடையது என்று கூறி ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பினால் 24,000 யூரோ கிடைக்கும் என்றார். அந்தப் பெண் அதிகாரி இதற்காக ஒரு பைசாகூடச் செலவிட வேண்டியதில்லை. இதை எப்படி ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியும் அந்தப் பெண்ணால்? ஒப்புக் கொண்டார். இதுவரை எல்லாம் சரியாகவே நடந்தது.

ரத்தின வியாபாரி விடைபெறும்போது போகிற போக்கில் சுங்க இலாகாவிலிருந்து தொலைபேசி அழைப்பு வரும். அதிகாரி தனது கிரெடிட் கார்டைக் கொண்டு எவ்வளவு ரூபாய் வரை செலவழிக்கலாம் என்பதைச் சொன்னால் போதும், அது ஒரு பார்மாலிட்டிதான் என்று கூறிவிட்டுச் சென்றார்.

வியாபாரி சொன்னபடி அழைப்பு வந்தது. ஆனால் ஒரு பார்மாலிட்டி என்பதற்கு பதிலாக ஒரு அதிகாரக்குரல் பணம் கொடுத்து ரத்தினம் வாங்கியதற்கு ஆதாரம் காட்டு, இல்லாவிட்டால் இந்த நொடியில் கைது செய்வோம் என்று மிரட்டியது. பெண் வியாபாரியைத் தொடர்பு கொண்டார். அவர் பதறித் துடிப்பதுபோல் நடித்து பணத்தைக் கொடுத்துவிடுங்கள். கல் ஆஸ்திரேலியா போய்ச் சேர்ந்ததும் திருப்பித் தந்துவிடுகிறேன் என்றார். பெண் கல்லுக்காக நாற்பதாயிரம் யூரோவும் காப்பீட்டுக்காக எட்டாயிரத்து ஐநூறு ரூபாயும் கொடுத்தார். பின்பு நடந்தவை எளிதாகப் புரியும்தானே?

வியாபாரத்தில் கொஞ்சம் மோசடி என்பது சாதாரணம்தான். ஒருவிதத்தில் தவிர்க்க முடியாததும் கூட. ஆனால் இந்தியாவில் இந்த ரத்தினக்கல் வியாபாரத்தில் நடக்கும் மோசடி எல்லா எல்லைகளையும் தாண்டிவிட்டது. இன்று சந்தையில் இருக்கும் மாணிக்கக் கற்களில் தொண்ணூறு சதவீதம் தரம் வாய்ந்தவை அல்ல என்ற புள்ளி விவரம் அவரை அதிரவைத்தது.

விஷயம் ஒன்றே ஒன்றுதான். உண்மையான கல் போதுமான அளவிற்குக் கிடைப்பதில்லை. ரத்தினக் கற்களைத் தொடர்ச்சியாகத் தோண்டியெடுக்க முறையான சுரங்கங்கள் இருந்தால் இந்தப் பிரச்சினையை எளிதாகச் சமாளித்துவிடலாம். ஒருவிதத்தில் இவ்வளவு மோசடி இருப்பது நல்லதுதான். நல்ல வாடிக்கையாளர்களை இதுதான் ஜே.கே டைமெண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸை நோக்கி இழுத்துவரும்.

இந்த மோசடி குறித்த பிரச்சாரத்தில் தனிக்கவனம் செலுத்தவேண்டும். பிராண்டட் கற்களின் தரம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ரத்தினம், மாணிக்கம், மரகதம் பற்றி மக்களிடம் நேரடி விளம்பரத்திற்கு முன்பு இன்னொரு பிரச்சாரமும் செய்யப்படவேண்டும். ரத்தினங்களை, அணிவது தங்கள் பாரம்பரியம், தங்கள் முன்னோர்கள் இதை செய்தார்கள் என்று இந்த மக்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். அதற்குப் பிரபல பத்திரிக்கைகளில் ஒன்றிரண்டு ஆய்வுக் கட்டுரைகள், டிவி. ஷோக்கள் , டாக்குமென்ட்ரிகள் ஏற்பாடு செய்யலாம்.

பின்பு மின்னல் வேகத்தில் ஒரு நேரடி விளம்பரத் தாக்குதல். மர்லின் மன்றோவை வைத்து டி.பீர்ஸ் செய்ததே, அதே போல. அந்த படத்தில் என்ன படம் அது . . . எ கேர்ல்ஸ் பெஸ்ட் ஃபிரண்ட், ம்... மர்லின் மன்றோ வைரம் அணிந்து நடித்ததை பார்த்து மேற்குலகைச் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும் தனக்கும் வைர நகை வேண்டுமென்று துடித்தாளாம். அது போல. தீபிகா படுகோன் அல்லது ஐஸ்வர்யா ராய். விளம்பர வரிகள் கூட நரசிம்மனின் மனதில் ஓடின. கலர் டி.வி. குறைந்த விலையில் கிடைக்கும் போது அதிக விலை கொடுத்து பிளாக் அண்ட் ஒயிட் டிவி வாங்குவீர்களா! கண்ணை பறிக்கும் வண்ணங்களில் குறைந்த விலையில் ரூபியும், சஃபையரும், எமரால்டும் கிடைக்கும் போது ஏன்

வண்ணமில்லாத வைரம்?. வண்ணங்களை நேசியுங்கள். பாரம்பரியத்தை தொடர்ந்திடுங்கள்!.

போதாக்குறைக்கு இவற்றில் அதிர்ஷ்டம் இருக்கிறது என்ற கருத்து வேறு பரவிக் கிடக்கிறது. கொஞ்சம் தள்ளிவிட்டால் போதும். வியாபாரம் பிடித்துக் கொள்ளும். தனது திட்டம் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது அவருக்கு மகிழ்ச்சியளித்தது.

ஒரிஸ்ஸாவிலும், அராகுப் பள்ளத்தாக்கிலும் ரத்தினங்கள் ஏராளமாகக் கிடைப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அராகு பள்ளத்தாக்கில் மட்டும் 160 இடங்களில் ரத்தினக்கற்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாம். ஆனால் பழங்குடிகள், மாவோயிஸ்டுகள் எதிர்ப்பு காரணமாக விரும்பியபடி செயல்பட முடியாத நிலை இருக்கிறது. அதனால் காங்கேயத்திலிருந்து கரூர் வரை, தாராபுரத்திலிருந்து பெருந்துறை வரையுள்ள பகுதிதான் தாங்கள் முதலில் செயல்பட வேண்டிய பகுதி என்று அவரும், மற்ற அதிகாரிகளும் முடிவு செய்திருந்தார்கள். நிறைய ஜாதிக்கல் கிடைக்கும் வாய்ப்புள்ள நிலங்களை விலைக்கு வாங்க வேண்டும். அரசு மூலமாகக் கையகப்படுத்த வேண்டும். அரசு நிலங்களை குத்தகைக்கு எடுக்க வேண்டும். இந்தப் பகுதியிலிருப்பவர்கள் பெரும்பாலும் சிறு அல்லது நடுத்தர விவசாயிகள். நல்ல விலை கொடுத்தால் நிலத்தை விற்றுவிடக் கூடியவர்கள் தான். ஆனாலும் பிரச்சினை வந்தால் எங்கிருந்து யார் மூலமாக வரும் என்று முடிந்தவரை துல்லியமாகத் தெரிந்துகொள்ள கம்பெனி விரும்பியது.

ஏராளமான சர்வேக்களும் வந்துவிட்டிருந்தன. அதில் ஒரே ஒரு அறிக்கைதான் அவரைச் சங்கடப்படுத்திக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியில் செயல்படும் அரசியல் கட்சிகள் பற்றிய அறிக்கை அது. கம்யூனிஸ்ட் கட்சிகளும் மற்ற பிரச்சினை செய்யக் கூடிய ஆட்களும் இங்கே பலமாக இல்லை. அவர்கள் திருப்பூரிலும், சத்தியமங்கலத்திலும், கோவையிலும்தான் குவிந்திருந்தனர். எனவே அவர்களால் உடனடிப் பிரச்சினை இல்லை. ஆனால் நாமக்கல்லுக்கு அருகில் பத்திருபது கிராமங்களில் ஒரு அமைப்பை சேர்ந்தவர்கள் இருப்பதாகக் கூறிய அறிக்கைதான் அவரது குழப்பத்திற்குக் காரணம்.

அந்த அமைப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு அரசால் கடுமையாக நசுக்கப்பட்ட அமைப்பு. இப்போது வெவ்வேறு பெயர்களில் ஆங்காங்கே தலைகாட்டுகிறது. சுரங்கம் தோண்ட வாய்ப்புள்ள இடத்திலேயே இப்படியொரு அமைப்பு இருப்பது உறுத்தலாக இருந்தது.

நரசிம்மனுடன் பேசிய அந்த உயர்மட்ட அதிகாரி வாய்விட்டுச் சிரித்தார். "இதுக்கா இத்தனை கவலை? அவனுக மொத்தப் பேரையும் உட்கார வெச்சாகூட உங்க ட்ராயிங் ரூம்ல கொஞ்ச இடம் மீதியிருக்கும். நீங்க உங்க ஆப்பிரிக்கா ஞாபகத்துல பீரங்கி, டாங்கி எல்லாம் வெச்சிருக்கற டெரரிஸ்ட கற்பனை பண்றீங்க. தமிழ்நாடு சார் தமிழ்நாடு. எங்களுக்கு இப்ப இருக்கற பலம் எல்லாம் இல்லாதப்பவே அடிச்சு நொறுக்கினோம். இன்னிக்கு. . ." என்றார்.

செய்யக் கூடியவர்கள்தான். வெளிநாட்டு மூலதனம் இருக்கும் இடங்களில் இந்திய அரசு ஈவிரக்கமில்லாமல்தான் நடந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு பிரச்சினை இருந்தும் சட்டிஸ்கரிலும், ஒரிஸ்ஸாவிலும் சுரங்கம் தோண்டும் வேலை நடந்து கொண்டுதானிருக்கிறது. இருந்தாலும் எல்லாவற்றையும் முன்பே உறுதிப்படுத்திக் கொள்ள நரசிம்மன் விரும்பினார்.

அவரது கவலையைப் பார்த்து மேலிடத்தில் பேசிவிட்டு அந்த அதிகாரி மீண்டும் தொடர்பு கொண்டார். தயங்க வேண்டாம். தொடர்ந்து முன்னேறுங்கள். எதுவும் பிரச்சினை வராமல் பார்த்துக் கொள்கிறோம் என்று உறுதி கிடைத்ததாகச் சொன்னார். அந்த அமைப்பின் மீது ஏற்கெனவே நடவடிக்கை தொடங்கிவிட்டதாகவும், எந்த மட்டத்தில் வேண்டுமானாலும் அதிகாரிகளோடு கலந்துரையாடல் நடத்த ஏற்பாடு செய்யச்சொல்லி சிக்னல் கிடைத்திருப்பதாகவும் கூறினார். அவ்வளவுதான். இதற்கு மேல் என்ன வேண்டும்?

மல்ஹோத்ரா நிருபர்களுடன் வந்து சேர்ந்தார். "ஷெல் வி ஹேவ் எ ட்ரிங்க்? என்னுடைய டர்க்கி சில்வர் கப் கலெக்ஷனைப் பார்க்கிறீர்களா?" நரசிம்மன் எழுந்தார். கண்ணைப் பறிக்கும் வெள்ளி துருக்கி ஸ்பூன்களும், முள்கரண்டிகளும் மற்ற பாத்திரங்களும் எவர் மனதையும் கொள்ளை

கொண்டுவிடும் என்பதில் அவருக்குச் சந்தேகமே இல்லை.

10

இந்திர விழாவில் பலரும் காண மாதவி ஆடியதைக் கண்டு கோவலன் அவள்பால் ஊடல் கொண்டிருந்தான். ஊடல் தீர்ந்ததும் அவர்கள் கடற்கரைக்குச் செல்கின்றனர். அங்கே பிரிவுத் துயரால் வருந்துபவள் போல மாதவி பாடிய பாடலைக் கேட்டு சந்தேகம் கொண்டு கோவலன் அவளை விட்டுப் பிரிகிறான். அவனைத் திரும்பவரக் கோரி வசந்தமாலை மூலமாக மாதவி அனுப்பிய ஓலையை வாங்க மறுக்கிறான். நேராக வீடு திரும்பி உடலும் உள்ளமும் வாடிப் போயிருந்த கண்ணகியைக் காண்கிறான். மலை போன்ற பெரும்செல்வம் தொலைந்து போனது அவனுக்கு வேதனை அளிக்கிறது. கண்ணகி இன்னும் தன் சிலம்புகள் மீதி உள்ளன என்கிறாள்.. கோவலன் அச்சிலம்புகளைக் கொண்டு மதுரை நகர் சென்று இழந்த பொருட்களை மீட்க முடிவு செய்கிறான். இருள் பிரியும் முன்னே அவர்கள் தங்கள் மாளிகையை விட்டு வெளியேறி திருமாலின் கோவிலையும் ஏழு இந்திர விகாரங்களையும் அருகதேவன் கோவிலையும் வணங்கி வலம் செய்துவிட்டு புகாரின் கோட்டை வாயிலைக் கடந்து நகர் விட்டு வெளியேறுகின்றனர்.

காவிரியின் வடகரை ஓரம் மேற்கு திசை நோக்கி நடக்கின்றனர்.. ஒரு காத தூரம்(பத்து கிலோமீட்டர்) நடந்த கண்ணகி களைத்துப் போய் புன்சிரிப்போடு மதுரை மூதூர் எங்கே என்கிறாள். அங்கிருந்த ஒரு பள்ளியில் தங்கியிருந்த கவுந்திஅடிகள் இவர்கள் நிலைகண்டு வருந்தி திரும்பிப் போகச் சொல்கிறார். அவர்கள் மறுக்கவே தானும் அவர்களோடு செல்லமுடிவு செய்கிறார். பிச்சைப்பாத்திரத்தையும் தோளிலிடும் உரியையும் மயில் தோகையையும் எடுத்துக் கொண்டு அவர்களோடு கிளம்புகிறார். காவிரி பேரியாற்றின் ஓரம் காவிரிப் புதல்வர்களான உழவர்களின் வாழ்க்கையையும் கரும்பாலைப் புகை மண்டிய ஊர்களையும், கடந்து மிக மெதுவாக பல நாட்களாக நடந்து நடந்து அவர்கள் மதுரையை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

-சிலப்பதிகாரம்

முல்லை குளித்துவிட்டு வந்த போது நவீன் ஏறக்குறைய பேக்கிங்கை முடித்து விட்டிருந்தான். ரவுண்ட் நெக் பனியனும், த்ரீ போர்த் ஷார்ட்ஸுமாக அவனைப் பார்த்தால் சின்னப் பையன் போலத் தெரிந்தது. மாறாக முல்லை வெள்ளை நிற காட்டன் சுடிதார், துப்பட்டா என்று அக்மார்க் சிறுநகர யுவதி போலிருந்தாள். சுருண்ட முடி தோள்களிலும் முதுகிலும் அலையலையாகப் படிந்திருந்தது.

நவீன் அவளை சற்றே ஆச்சிரியத்துடன் பார்த்துவிட்டு "வெள்ளிக்கிழமை குளிச்சமாதிரி முடிய பின்னல் போட்டிருந்தா உன்ன எங்க ஊர்ப் பொண்ணுன்னு நம்பிடுவாங்களா? "என்றான்.

"ஏன் நம்ப மாட்டாங்களா?"

"உன் கண்ல பயம் இல்லை!"

‘

"உங்க ஊர்ப் பொண்ணுங்க அவ்வளவு பயந்தாங்கொள்ளிங்களா?"

"எங்க ஊர்ப் பொண்ணுங்க மாதிரி தைரியமானப் பொண்ணுங்க யாரும் கிடையாது. பாய்பிரண்டோட தனியா அணைக்கட்டுக்கும், காட்டுக்கும் போவாங்க. ஒத்தப் பொண்ணா நாலஞ்சு பசங்களோட பிக்னிக் போவாங்க. ஆனா என்னவோ கண்ல ஒரு பயம் இருக்கும். பூனை மாதிரி, பழகாம ஒளிஞ்சு போற ஒரு தன்மை இருக்கும்"

"தமிழ்நாட்ல மட்டுமில்ல, நார்த் ஈஸ்ட் தவிர துணைகண்டத்துல இருக்கற அத்தனை பெண்களும் இப்படித்தான். சரி ஸ்ரீகுமார் எங்கே?"

நவீன் கீழே பார்த்தான். ஸ்ரீகுமாரின் இனோவாவை டிரைவர் சாதுவாகத் துடைத்துக் கொண்டிருந்தான். இவன் யாருக்கோ உளவு சொல்வது ஸ்ரீகுமாருக்குத் தெரியுமா? இப்போதைக்கு இதைப்பற்றிப் பேசவேண்டாம். வாய்ப்புக் கிடைக்கும் போது அவரிடம் மெதுவாகச் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தான். "நம்மைத் தயாராகக் இருக்க சொல்லிவிட்டு பெரிசு எங்கியோ போயிருச்சு!"

"ஏன் அவர அப்படி சொல்ற?"

"என்னதான் ஸ்மார்ட்டா இருந்தாலும் பெரிசு பெரிசு தானே? அது

தம்மடிக்கற முறை எனக்குப் பிடிக்கவே இல்லை. ஸ்மோக் பண்ணணும். இல்லாட்டி பண்ணாம இருக்கணும். பெரிசு சிகரெட் ஆபர் பண்ணினா சில சமயம் வாங்குது. சில சமயம் வேண்டாங்குது. எனக்குக் குடுக்காம தானே அடிக்குது. இது தம்மடிக்கிற மென்டாலிட்டியே இல்ல"

"ஒருத்தரை வெறுக்கறதுக்கு நல்ல காரணம் கண்டுபிடுச்சே"

நவீன் பதில் சொல்வதற்குள் ஸ்ரீகுமார் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார். எப்பொழுதும் அணியும் வெளிர்நீல ஜீன்ஸ்ஷும், கருப்புக் கோடுகள் போட்ட சட்டையும் அணிந்திருந்தார். தலை கடல் காற்றில் அலைப் புரண்டிருந்தது. அவரது செங்கல் நிற முகத்தைப் பார்த்தால் இந்த நிதானத்தைத் தவிர அவருக்கு வேறு எந்த உணர்ச்சியுமே கிடையாது போலத் தோன்றியது.

பைகளை எடுத்துக்கொண்டு புறப்பட்ட முல்லை ஏதோ நினைத்துக் கொண்டு மொட்டைமாடிக்கு சென்றாள். வெறிச்சோடிய கடற்கரை கடலின் அத்தனை இரைச்சலிலும் மோனத்தில் ஆழ்ந்திருப்பது போலத் தோன்றியது. 'அன்றிரவு வந்த அவளைப் பார்க்க முடியுமா?' இன்றும் கொஞ்ச நேரம் நின்றால் அவள் வருவாள் என்று முல்லை நினைத்துக் கொண்டாள். எவ்வளவு நேரம்....

கீழிருந்து "முல்லை.." என்று குரல் கேட்டது.

அவள் படிகளில் தாவியிறங்கினாள். ஸ்ரீகுமாரும், நவீனும் பைகளை காருக்குள் வைத்துக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீகுமார் டிரைவரை சுப்பிரமணியம் என்று முல்லைக்கும், நவீனுக்கும் அறிமுகப்படுத்தினார். சுப்பிரமணியம் முல்லையிடம் "ஹைவேல போயிரலாம்மா. ஐயா சொல்ற வழி ரொம்ப தூரமாயிருக்கும்." என்றான். ஏதோ காரணத்தினால் முடிவெடுக்க வேண்டியவள் அவள்தான் என்று நினைத்தான் போலிருக்கிறது.

முல்லை தலையாட்டி மறுத்தாள், "காவிரியோட வட கரைதான் போகணும் கருநாகப்பள்ளி, கருங்குயில் நாதம், திருவையாறு வழியா கல்லணை, ஸ்ரீரங்கம் போகணும் ..."

“லேட்டாயிரும்...”.

“பரவாயில்லை....”

ஸ்ரீ குமார் சுப்பிரமணிக்கு அருகில் உட்கார்ந்தார். முல்லை நவீனை உள்ளே தள்ளிவிட்டு தான் அவருக்கு நேர் பின்னால் அமர்ந்து கொண்டாள்.

மேற்கு நோக்கிக் கார் சீரான வேகத்தில் செல்லத் தொடங்கியது. கடலைவிட்டு விலகிச் செல்லச்செல்ல இரண்டு நாட்களுக்கு முன் பெய்த மழை செய்த மாயாஜாலம் அற்புதமாகக் கண்முன் விரிந்தது. மரங்கள் மேலும் பசுமையாக மாறிவிட்டிருந்தன. சாலையோரத்தில் புற்களைக் கூடக் காணமுடிந்தது. முப்பது அடி அகலம் கூட இல்லாத சாலையின் இருபுறம் இருந்த பழையகால ஓடு வேய்ந்த, தின்னை வைத்த வீடுகள், மின்வெட்டால் இன்னமும் இருண்டு போய் ஒரு ஐம்பது ஆண்டுகள் பின்னால் போய்விட்டதைப் போலிருந்தன. நெரிசலாகத் தோன்றிய கடைகளுக்குப் பின்னால் இடைவெளிகளில் அறுவடை முடிந்து எதுவும் விதைக்கப்படாத வெற்று நிலங்கள் தோன்றிக் கொண்டேயிருந்தன.

முல்லை எவ்வளவுதான் கழுத்தை வளைத்துப் பார்த்தும் இடதுபுறம் காவிரி தெரியவில்லை.

”காவிரியையே காணோமே. கோவலனும், கண்ணகியும் இந்த வழியாகத்தான் போயிருப்பார்களோ?” என்று ஸ்ரீகுமாரிடம் கேட்டாள்.

“இதுதான் இரண்டாயிரம் வருடமா பூம்புகாரையும், ஸ்ரீரங்கத்தையும் இணைக்கிற வழி. கண்ணுக்குத் தெரியாவிட்டாலும். கொஞ்சம் தள்ளி காவிரி வந்துகிட்டுதான் இருக்கு, இத்தனை வருஷத்தில காவிரியும் பாதையை மாத்திட்டிருக்கு, சாலையும் கொஞ்சம் நகர்ந்திருக்கு. ஆனால் வழி இதுதான்”.

ஒரு பத்து கிலோமீட்டர் போனதும் காவிரி கடைமடைப் பகுதி என்ற ஒரு போர்டைப் பார்த்ததும் ஸ்ரீகுமார் காரை நிறுத்தச் சொன்னார். நவீன் ஹேன்டி கேமராவை எடுத்துக்கொண்டு இறங்கினான். காவிரி வடக்கேயிருந்து தெற்கே சாலையைக் கடந்து சென்றது. முல்லை

தவித்துப் போனாள். “அப்படியானால் இவ்வளவு தூரம் காவிரியின் தென்கரையிலா வந்து கொண்டிருந்தோம்?”

சுப்பிரமணியம் உதவிக்கு வந்தான். “வேற வழி இல்லம்மா. இது ஒண்ணுதான் வழி. இனிமேல் திருச்சி வரைக்கும் வடக்கேயேதான் போவோம்” என்றான்.

சிறிய கால்வாய் போல, ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாத காவிரி அடர்ந்த மரங்கள், புதர்கள் வழியாக தெற்கு நோக்கிச் சென்றது. மஞ்சள் வண்ணம் அடிக்கப்பட்டிருந்த அரசு கட்டுமானங்கள் கருமையேறி ஏதோ புராதனச் சின்னங்கள் போலத் தோன்றின.

ஸ்ரீகுமார் திகைத்து நின்று கொண்டிருந்த முல்லையின் அருகே வந்தார். “அந்தக் காலத்துல ஒரு கிலோ மீட்டருக்கு ஓடின பழைய காவேரி இல்லம்மா இது. சுருங்கிப் போச்சு. கடைசி சொட்டுத் தண்ணீர் வரை பயன்படுத்துறாங்க. தவிர காவிரி ஒரு தடவை பாதை மாற்றியிருக்குன்னு சொல்றாங்க. ஆனா ஒண்ணு, நிச்சயம் கோவலனும் கண்ணகியும் நடந்து போனது இதே வழிதான்”.

“இதே தானா?”

“இதே தான்”. அவர் தாடிக்குள் சிரித்தார்.

இனோவா திரும்பவும் புறப்பட்டது. சுட்டெரிக்கும் கோடையிலும் அங்கங்கு திட்டுத் திட்டாக சில இடங்களில் பசுமை போர்த்திய வயல்கள் தென்பட்டன. ஒரு கிலோ மீட்டருக்கு ஒருமுறை அழகான நீள்சதுரக் குளம் வந்தது. சில குளங்களில் ஓரளவு நீர் இருந்தது. பல குளங்கள் நீர் இருந்ததற்கு அடையாளமாகச் சேறும் சகதியுமாயிருந்தன.

நடவு நடும் இயந்திரங்களையும் ஆங்காங்கே காணமுடிந்தது. காற்றில் ஒரு கிளர்ச்சியும், கரும்பின் வாசமும் கலந்திருந்தது

முல்லை முன்னால் தலையை நீட்டி ஸ்ரீகுமாரின் தோளைத் தொட்டாள். இரண்டு நாள் அனுபவத்தில் அவள் ஏதோ கேட்கப்போகிறாள் என்று உணர்ந்து கொண்டு பேராசிரியர் திரும்பி உட்கார்ந்தார்.

“சார், கண்ணகி கோவலன் ஸ்ரீரங்கத்திலிருந்து மதுரை போன வழி, அதுக்கப்புறம் மலைமேல் கண்ணகி போனவழி, எல்லாத்தையும் அவ்வளவு விரிவா எழுதறார் இளங்கோவடிகள். வெய்யில், கால்வலிச்சதைக் கூட விடாமல் எழுதறார். . ஆனால் இந்தப் பூம்புகாரிலிருந்து ஸ்ரீரங்கம் போன வழியைப் பத்திப் பேசும்போது வெறும் காவிரியையும், விவசாயத்தையும் பத்தி மட்டுமே பேசுறார். இவங்களைப் பத்தி ஒண்ணுமே சொல்றதில்ல. ஏறத்தாழ 150 கிலோமீட்டர் நடக்கறாங்க. மொதமொதலா வீட்டை விட்டு வெளியே வந்த கண்ணகிக்கு எப்படியிருந்துச்சு. எங்க சாப்பிட்டாங்க, எங்க தூங்கினாங்க எதுவுமே சொல்றதில்ல. ஏன் சார் இப்படி?

“சோழ நாடு அவங்க ஊர். கோவலன் ஊர்சுற்றிப் பழக்கப்பட்டவன், கூட கவுந்தியடிகள் வேற இருக்காங்க. அதனால நடக்கிறதில பிரச்சனை வந்திருக்காதுன்னு நாம புரிஞ்சுக்கணும்னு நெனச்சிருக்கலாம். ஆனா அதவிட முக்கியமான காரணம் ஒண்ணு இருக்கு”. ஸ்ரீகுமார் இந்த இடத்தில் நிறுத்தினார்.

“என்ன சார் அது?”

“நீங்க கோடியக்கரை போயிருக்கீங்களா?”

“இல்லை”

“மாமல்லபுரம் மலைக்கோவில் போயிருக்கீங்களா?”

நவீன் தலையசைத்தான்

“என்ன தெரியும்?”

“குளமா ஆறான்னே தெரியாம திட்டுத்திட்டா தண்ணீர் தெரியும். பச்சை பசேல்னு இருக்கும்.”

“அதேதான். தமிழகத்தோட கிழக்குக் கடற்கரை முழுக்க சதுப்புநிலமும், புல்தரைகளுமா இருந்துச்சு. காவிரி டெல்டா முழுவதும் பிச்சாவரத்திலிருந்து கோடியக்கரை வரை மாங்குரோவ் காடுகள் அடர்ந்திருந்தது. கொஞ்சம் கடினமான பூமியா இருந்த உறையூர்லதான் முதல் சோழ அரசு உருவாச்சு. பூம்புகார் துறைமுக நகரம். இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதி சதுப்பு நிலங்களும், புல்வெளிகளும், ஆறுகளும், ஓடைகளுமா இருந்தது. காவிரி ஏறக்குறைய தரைமட்டத்துல ஓடிச்சு. நிலம்

அவ்வளவு தாழ்வானது, எப்ப வேணா வெள்ளம் வரும்.

உறையூர் சோழ அரசு வளரணும்னா காவிரிக்கு கடிவாளம் போட்டே ஆகணும், அது மேற்குப்புறம் வளர முடியாது. ஏன்னா முழுவதும் வறண்ட நிலங்கள். அதால ஒரு பேரரசைத் தாங்க முடியாது. கிழக்குப்புறம்தான் வளரணும். பெருநகரான பூம்புகாரோட இணைஞ்சே ஆகணும். இல்லாட்டி வளர முடியாம அழிஞ்சு போகணும். வேற வழி இல்ல. தவிர பெண்ணாற்றங்கரை மூன்று நான்கு லட்சம் வருஷங்களுக்கு முன்னாடியே மனிதர்கள் குடியேறிய பகுதி. பழைய கற்காலத்திலிருந்து மக்கள் அங்கே வாழ்ந்து வந்தாங்க. பெண்ணார் பேஸின் என்பது தொல்பொருள் ஆய்வில் முக்கியமான ஒண்ணு. அதனால அங்கிருந்து ரொம்பகாலம் முன்னாடியே மக்கள் இங்கே அதாவது காவிரி வடிநிலத்துக்கு வந்திருக்கணும். இரும்பைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னாடி விவசாயம் வளர்ந்துச்சு. கிராமங்களையும், வயல்களையும் காப்பாத்தணும்னா காவிரியைக் கட்டுப்படுத்தியே ஆகணும்.

அந்தக்கால மக்கள் இந்தச் சேலஞ்சை ஏத்துக்கிட்டாங்க காவிரிக்குக் கரை எடுக்கத் தொடங்கினார்கள். பல்லாயிரம் பேர் நூறு நூறு ஆண்டுகளாகச் செய்த முயற்சி. மௌரியப் பேரரசுக்கு வெளியில் இந்தமாதிரி முயற்சி வேறெங்கும் இல்ல. டெல்டா பொன்விளையும் பூமியா மாறிச்சு. அது ஒரு மன்னன் செயல் இல்லை. காவிரிக்குக் கரை எடுத்தது பற்றியோ, கல்லணை பற்றியோ சிலப்பதிகாரத்தில் ஒரு சொல்கூட இல்லை. மற்ற சங்க இலக்கியங்களிலும் பேசப்படவில்லை. ஆனால் கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த, நாகபட்டினம் அருகே இருக்கும் கீழ் வேளூரில் உள்ள ஒரு கல்வெட்டில், ஒரு குறிப்பிட்ட தப்புப் பண்ணினால் காவிரிக்கரையை உடைத்த பாவம் வந்து சேரும்னு எழுதப்பட்டிருக்கு. எனவே அதுக்கு முன்பே காவிரிக்குக் கரை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னால பிற்காலச் சோழர் காலத்தில் செங்கற்களால கட்டப்பட்டிருந்த கரை கருங்கற்களைக் கொண்டு புதுப்பித்துக் கட்டப்பட்டது. இந்த மாபெரும் சாதனை இளங்கோ காலத்துல துண்டு துண்டா, கொஞ்சம் கொஞ்சமா நடந்திருக்கலாம்.

இந்த மாதிரி ஒரு இருநூறு கிலோ மீட்டர் தூரத்துக்கு ஒரு முறைப்படுத்தப்பட்ட விவசாயத்தை அவர் தென்னிந்தியாவில் வெறெங்கும் பார்த்திருக்க முடியாது.

அதனாலதான் ஒரு பையனும், பொண்ணும் நடக்கறதை விட தன்னை பிரமிக்க வைக்கிற இந்த சாதனைகளைப் பத்தி எழுதியிருக்கார்."

"சரிதான்" முல்லை திரும்பி ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

இப்போது நவீனின் முறை. "நானும் படித்தேன். அந்தக் காலத்தில் வறுமையே இல்லயா?"

"சிலப்பதிகாரத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் நற்றிணை, புறநானூறு போன்றவற்றில் வறுமை பற்றிச் சொல்லப்பட்டிருக்கு. போரடிக்க மாடுகள் இல்லாமல் தந்தையும், மகன்களுமே காலால் மிதித்து நெல் பிரித்ததாவும், ஒரு பெண் தந்தை வீட்டின் செல்வத்தைவிட கணவன் வீட்டின் வறுமையையே மேல் என்று கருதியதாகவும் . . . தவிர நகரில் வறியவர்கள் இருந்தார்கள் என்று சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சொல்கிறதுதானே? மணிமேகலையே அதுதானே? தமிழிலக்கியம் மாதிரி வறுமையைப் பேசிய பழங்கால இலக்கியம் வேறேதாவது இருக்கா என்ன?"

"இல்லை சார். நான் கேக்கறது இது இல்லை. காவிரி வழியில் விவசாயிகளிடம் . . . வறுமை பெரிய அளவுக்கு இல்லையா?"

ஸ்ரீகுமார் சிந்தித்தார். "இதற்கான பதிலை கோசாம்பியிடம் தான் தேட வேண்டும். நீங்கள் சொல்வது போன்ற வறுமை பெரிய புராணத்தில் வருகிறது. அதில்தான் நிலப்பிரபுக்களான வேளாளர்களும், நந்தனாரைப் போன்ற பண்ணையடிமைகளும் வருகிறார்கள். ஆனால் பெரியபுராணம் சிலப்பதிகாரத்திற்கு எண்ணூறு ஆண்டுகள் பிந்தையது. சிலப்பதிகாரகாலத்தில் பெரிய நிலக்கிழார்கள் உருவானது போலத் தெரியல. அதில் சொல்லப்படும் பணக்காரர்கள் வணிகர்கள்தான். காவிரிப்பகுதி முழுமையான பயன்பாட்டுக்கு வந்த பிறகுதான்

விவசாயிகளிடமிருந்து பண்ணையார்கள் உருவாகியிருக்க வேண்டும். அதாவது சில விவசாயிகள் தங்கள் பலம், குடும்ப பலம், நிலங்களின் செழுமை போன்ற காரணங்களால் மற்றவர்களைவிட வளர்ச்சிபெற்று மற்றவர்களைக் கட்டுப் படுத்தத் தொடங்கியிருக்க வேண்டும், ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்க வேண்டும். அவர்கள் வாழ பண்ணையடிமைகள் வேண்டுமல்லவா? அதற்கு இளங்கோவடிகள் காலத்திலிருந்து இன்னும் ஒரு இருநூறு ஆண்டுகாலம் ஆனது. சிலப்பதிகாரத்தில் நாம் பார்ப்பது ஒருவிதமான நகர அரசு. நகர நாகரீகம். அரசுகள் சின்னஞ்சிறியவை. நிலங்கள் பெரும்பாலும் தனியுடமையாக இருந்தன போலிருக்கிறது".

"தமிழ்நாட்டில் அடிமைகள் இல்லையா?"

"நீங்கள் சிக்கலான இடத்திற்கு என்னை இழுத்து விடுகிறீர்கள். சிலப்பதிகாரத்தில் அடிமைகள்னு நேரடியாகச் சொல்லப்படல. ஆனால் சேடிகள், கணிகையர் போன்ற சொற்களெல்லாம் அதைப் போன்ற ஏதோ ஒன்று இருந்ததைக் காட்டுது. பிற்காலத்துல அடிமைகள் வைத்திருக்கும் வழக்கம் இருந்தது. கிரேக்க, ரோமானிய அடிமைகள் போல் இல்லாவிட்டாலும் வீட்டு அடிமைகள் இருந்தனர். சுந்தரர் கதை தெரியும்தானே? ஆனால் சமூகம் சாதிமுறையைத்தான் அடிப்படையாகக் கொண்டிருந்தது."

நவீனுக்கு சுந்தரரைவிட நந்தனார்தான் மனதை ஆக்கிரமித்துக் கொண்டார். இங்கிருந்து சற்று தொலைவில்தானே தில்லை?. அன்றிலிருந்து இன்று வரை எத்தனை நந்தனார்கள். இந்தக் கொடுமையை ஒழிக்க எத்தனை தியாகங்கள் எத்தனை உயிர்பலிகள்? இன்றுவரை எத்தனையோ யுத்தங்கள், போராட்டங்கள் எல்லாவற்றுக்குப் பின்பும் சாதியும், வறுமையும் தொடர்ந்துதான் வருகிறது. இந்தப் பசுமை கொஞ்சும் தஞ்சை மக்கள் வறண்ட திருப்பூரில் கேம்ப் கூலியாக இருக்கிறார்கள். விசைத்தறி நிலையங்களில் வதைபடுகிறார்கள். . . இந்தக் கண்கவரும் பசுமைகூட இன்னும் எவ்வளவு நாள் தாக்குப்பிடிக்குமோ? காவிரிப்பிரச்சினை, பெட்ரோலியம், இப்போது மீத்தேன் . . .

முல்லை வேறு சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தாள். சிற்சில நகரத் திட்டுகளையும் சுற்றிலும் இருந்த வயல்களையும் தவிர காடுகள் மண்டியதாகவும், பழங்குடிகள் வசித்துவந்ததாகவும்,. இருந்த காலத்தில் இவ்வளவு பிரம்மாண்டமான நிலப்பரப்பு பண்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுவது பிரமிக்கத்தக்க விஷயமாகத்தானிருந்திருக்கும். அப்படியிருந்தால் ஏன் காவிரிக்குக் கரையெடுப்பது பற்றியோ கல்லணை பற்றியோ எதுவும் எழுதவில்லை? ஒருவேளை ஸ்ரீகுமார் சொல்வது போல காவிரிக்குக் கரை எடுப்பது என்ற பொதுவான சொல்லுக்குள் அந்த நடவடிக்கைகள் வரவில்லையோ? அப்படியானால் கல்லணை? அவளுக்கு ஏதோ புரிவது போலவும், புரியாதது போலவும் குழப்பமான உணர்வுகள் தோன்றின.

“சார்...”.

“ம்....”

“கோவலனும், கண்ணகியும் இரவோடு இரவா பூம்புகாரை விட்டு வெளியே போறாங்க. எல்லாரும் போற ஹைவேலதான் போறங்க. நடந்துதான் போறாங்க. ஏன் யாரும் தேடிட்டு வரல...? நூறு கிலோமீட்டர் நடக்க ஒரு வாரம் ஆயிருக்குமில்ல...”.

“கான்ஸ்பிரசி தியரி” என்றான் நவீன்

“அதான் ஒரு பிராமின் மாதவியோட லெட்டரைக் கொண்டு வந்து கொடுக்கறான் இல்ல.....?”

“அது மதுரைக் கிட்ட.... ஏன் ஸ்ரீரங்கம் போறக்குள்ள தேடிட்டு வரல?”

தெரியவில்லை என்று ஒப்புக் கொண்டார். ஸ்ரீகுமார். “ஒரு வேளை இதில் ஸ்பெசி◌ஃபை பண்ணியவர்கள் யாராவது இருந்தால் பதில் சொல்லக்கூடும்.”

முல்லை திரும்பவும் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

“இது உங்க சொந்த வண்டியா சார்?” என்றான் நவீன்.

“இல்லை ஜே.கே டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ்ஸோடது”

“மல்டிநேஷனல் கம்பெனி. மை காட், உங்களுக்கும், அதுக்கும்

என்ன சார் சம்பந்தம்?"

"ஒரு சம்பந்தமும் இல்லை" பேராசிரியர் தோள்களைக் குலுக்கினார். "நான் என்னோட ஆய்வைச் செய்யறேன். அவங்க இந்த மாதிரி சின்னச் சின்ன ஸ்பான்சர் செய்யறாங்க..."

"அது ஊரையே அடிச்சு உலைல போடற கம்பெனி இல்லையா? அதுக்கு எதிரா எவ்வளவு போராட்டம் நடந்திட்டிருக்கு. தொழிலாளர்களை ஏமாத்தறதிலிருந்து ஷேர் மார்க்கெட் ஃபிராடு வரை எத்தனை குற்றச்சாட்டுகள்? உங்க ஆய்வுக்கு அவங்க எதுக்கு சார் ஸ்பான்சர் செய்யணும்? நீங்க ஏதோ புதைபொருள் ஆய்வுதானே செய்றீங்க?"

"அவங்களுக்கு மினரல்ஸ்ல இன்ட்ரெஸ்ட். என்னோட ஆய்வுல ஒரு பகுதி கோமேதகம், மரகதப் பச்சை கற்களோட வணிகம், ஸோ.... அப்புறம் இந்த மாதிரி ஸ்பான்சர் செய்யறது ஒரு பேஷன் தானே?"

"சார் மல்டிநேஷனல் கம்பெனிக்கு உதவற மாதிரி ஆய்வா உங்களோடது...?" முல்லை நவீனை நிறுத்தச் சொல்லி நறுக்கென்று கிள்ளினாள்.

பேராசியர் கொஞ்சம் சங்கடப்படுவது போலத் தோன்றியது. "ஸீ ..."

நவீன் கோபத்துடன் தலையைத் திருப்பிக் கொண்டான். "இந்த மாதிரி ஒரு துறை நிபுணர்கள் தான் பாஸிஸத்துக்கும் ஆணிவேரா இருந்தாங்க" என்று அவன் மெல்லிய குரலில் முனகியது முல்லைக்குத் தெளிவாகவே கேட்டது.

முல்லைக்கு அரசியலில் அப்படியொன்றும் தீவிர ஆர்வம் இல்லை என்றாலும் ஜே.என்.யூ வழக்கப்படி அவுட் லுக்கும், அருந்ததிராயும் அவளுக்கு அறிமுகமானவர்கள் தான். ஆனால் பேராசிரியர் ஸ்ரீகுமாரை ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்குப் பணி செய்பவர் என்று கருத அவளுக்கு மனம் வரவில்லை. காருக்குள் திடீரென்று தொற்றிக் கொண்ட இறுக்கம் அவளைச் சங்கடப்படுத்தியது. ஸ்ரீரங்கம் போனதும் அவரிடம் இதுபற்றி பேசி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

சாலையின் வலது புறம் ஒரு அழகான குளக்கரையில் ஒரு

குடும்பம் உட்கார்ந்திருந்தது. மனைவி போல் ஒரு பெண் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். இரண்டு குழந்தைகள் கரையில் விளையாடிக் கொண்டிருந்தன. தகப்பன் சின்னப் பையன் போலிருந்தான். முல்லை காரை நிறுத்தும்படி சுப்பிரமணியத்திடம் சொன்னாள். அவன் காரை சாலையோரம் ஒதுக்கிய போது பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு காவி நிற ஸ்விஃப்ட் இடிப்பது போல் வந்து கிறீச்சிட்டு தடுமாறி விலகி பின்பு சாலையில் பறந்தது.

சுப்பிரமணியத்தின் 'டேய்' என்ற கூச்சல் வீணாய் காற்றில் கரைந்து போனது.

"நான் இன்டிகேட்டர் போட்டு கை காட்டி நிறுத்திறேன், இவனுக பாருங்க" என்றான் சுப்பிரமணியம்.

"நாம இப்படி திடீர்னு நிப்போம்னு அவங்க எதிர்பார்க்கல போலிருக்கு. நான்தான் உங்களை உடனே நிறுத்தச் சொல்லிட்டேன். அவங்க பாவம் எதிர்பார்க்கல. தங்கமேல தப்புன்னு பயந்து ஓடிட்டாங்க" என்றாள், முல்லை.

இதையெல்லாம் பார்த்தபடி கல்மேல் உட்கார்ந்திருந்த அந்த இளைஞன் எழுந்து வந்தான். குழந்தைகளும் ஓடி வந்தன. அவன் மாடு வாங்கி விற்கும் வேலை செய்கிறானாம். அவர்கள் வீடு கிருஷ்ணகிரியில் இருக்கிறதாம், இந்த வழியில் தான் போய் வருவார்களாம், இப்போதைக்கு இந்த குளக்கரையில் தங்கியிருக்கிறார்கள். மூன்று நான்காண்டுகளுக்கு முன்பெல்லாம் ஏப்ரல், மேயிலும் குளங்களில் நிறையத் தண்ணீர் இருக்குமாம். இப்போதுதான் . . .

"ஆபீஸருங்கதான் ஹைவேல போவாங்க. நாங்க, அரிசி வியாபாரிகள் எல்லாம் இந்த வழியில்தான் போவோம். பழைய கால சத்திரங்கள், கோயில்கள் எல்லாம் திருவையாத்துலதானே இருக்கு. வேற எடங்கள்ள இல்ல."

முல்லையும் அந்தக் குழந்தைகளும் ஓடிப்பிடித்து விளையாடத் தொடங்கினார்கள். நவீன் ஹேண்டி கேமராவோடு வேலையில் இறங்கினான். ஸ்ரீகுமார் ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு

சுப்பிரமணியத்தை நெருங்கி,

'இந்த வண்டி யார் பெயரில் இருக்கிறது? அந்த இளைஞர்கள் என்ன பொறுப்பில் இருக்கிறார்கள்?' என்று கேட்டார். அவனுக்கு ஒரு மண்ணும் தெரியவில்லை. 'போன் பண்ணித் தரட்டுமா?' என்றான். அவர் யோசனையுடன் மறுத்துவிட்டார்.

கொஞ்ச நேரத்தில் நவீனும், முல்லையும் வந்து காரில் ஏறிக்கொண்டார்கள். "நம்ம படத்துல கமர்சியல் அம்சம் இல்லாமல் இருந்தது. அதைக் கதாநாயகி குழந்தைகளோட ஆடுற சீன் நிரப்பிடும்" என்றான் நவீன். அதோடு பேராசிரியரை ஓரக்கண்ணால் பார்த்தான்.

"பையனுக்குக் குற்ற உணர்ச்சி போலிருக்கிறது. இவள் வேப்பிலை அடித்திருப்பாள்.... நட்புக்கரம் நீட்டுகிறான்" என்று நினைத்துக் கொண்டு தன் வழக்கப்படி தாடிக்குள் சிரித்தார். "கோபக்கார இளைஞன்"

காருக்குள் இருந்த இறுக்கம் சட்டென்று தளர்ந்தது. இரண்டு மூன்று கிலோமீட்டர் சென்றதும் இடிப்பது போல் வந்த ஸ்விப்ட் சாலையோரம் நின்றிருந்தது. இவர்களது கார் கடந்ததும் அதை ஸ்டார்ட் செய்ததைப் போலத் தோன்றியது.

"சண்டை போட வர்றாங்க போலிருக்கு, வரட்டும் லிவர் எடுத்து சாத்துறேன்" சுப்பிரமணியத்தின் கோபத்தைப் பார்த்தால் செய்து விடுவான்தான் போலிருந்தது.

ஆனால் அப்படியொன்றும் ஸ்விப்ட் இவர்களைத் தொடர்ந்து வருவது போலத் தெரியவில்லை.

நெரிசல் மிகுந்த சிறு கிராமங்கள், நகரங்கள் வழியே கார் விரைந்து கொண்டிருந்தது. கடலோர குளிர்காற்று காணாமல் போய் வெளியில் வெக்கையடிப்பதை உணர முடிந்தது. திருவையாற்றைக் கடந்து கல்லணைக்கு முப்பது கிலோமீட்டர் தொலைவில் வந்ததும் காவிரி சாலையோரமாகவே வரத் தொடங்கியது. டெல்டாப்பகுதியில் நிலங்கள் உழப்படாமலிருந்தாலும் பசுமை மிஞ்சி இருந்தது. அது மேற்கே செல்லச் செல்லக் குறைந்து கொண்டே வருவது கண்கூடாகத் தெரிந்தது.

ஆற்றின் நடுவில் கொஞ்சமே கொஞ்சம் தண்ணீர் சென்று கொண்டிருந்தது வியப்பூட்டியது நல்ல வேளை இன்னும் முழுமையாக வறண்டு போய் விடவில்லை. இந்த ஆறு முழுவதும் நிரம்பி படகுகளும், பரிசல்களும் போய்க்கொண்டிருந்த காலத்தில் எப்படி இருந்திருக்கும்? என்றாவது ஒரு நாள் இப்படி நடப்பது சாத்தியமா? தன் மனதில் தோன்றியதை அப்படியே நவீனிடம் சொன்னாள் முல்லை.

"நானும் இதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் நவீன். "மலைகளை ஆக்கிரமித்திருக்கும் கொள்ளைக்காரர்களை எல்லாம் விரட்டிவிட்டு அவற்றுக்குச் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்தால், எல்லாம் நடக்கக் கூடியதுதான்' என்றவன் ஸ்ரீகுமார் என்ன சொல்கிறார் என்று பார்த்தான்.

அவர் கவனித்ததாக தெரியவில்லை. முல்லையும் இதிலிருந்த குத்தலைப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்திருந்தால் ஒருவேளை கண்டித்திருப்பாள். இந்த இனோவா விவகாரம் வந்ததிலிருந்து ஸ்ரீகுமாரை நவீன் புண்படுத்தி விடுவானோ என்று அவள் பயந்து கொண்டேயிருந்தாள்.

நவீன் காரை நிறுத்தச் சொல்லி கேமராவோடு இறங்கினான். புரொபஸர் கீழே இறங்கி சிகரெட் பற்ற வைத்தார். முல்லைக்கு கொஞ்சம் சங்கடமாய் இருந்தது. அவர் இந்த இரண்டு மூன்று நாட்களில் முல்லை முன் சிகரெட் பிடிப்பதை தவிர்த்தே வந்திருந்தார். இப்போது.... ஏன்? நவீன் பேசியதுதான் காரணமா?

"சார்...." முல்லை அழைத்தாள். எங்கோ பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீகுமார் திடுக்கிட்டுத் திரும்பினார். சற்று அசடு வழிந்து "தவறாக நினைத்துக் கொள்ள மாட்டாயே? என்றார்.

"இல்லை. கல்லணையையும், கரிகால் சோழனையும் பற்றி ஏன் இளங்கோ பேசவில்லை?"

அவர் கடகடவென்று சிரித்தார். "ஒரு வேளை கரிகாலன் கல்லணையைக் கட்டினான் என்பது இளங்கோவடிகளுக்கு தெரியாதோ என்னமோ?. கல்லணை அப்போது எந்த வடிவத்தில் இருந்ததோ?

கரிகாலன்தான் கல்லணையைக் கட்டினான் என்று பரம்பரையாக நாம் சொல்லிக் வருகிறோம். என்ன ஆதாரம்?"

"ஆதாரம் இல்லையா?"
"பட்டினப் பாலையில் அப்படி இல்லை"
"மை குட்னஸ்... அப்படியானால்..."

முல்லை தொடங்கும் முன்பே "எனக்கு இதற்கு மேல் தெரியாது" என்றார் பேராசிரியர். பரந்து விரிந்து இருந்த காவிரியின் மேற்பரப்பிலிருந்து வீசியடித்த காற்று மூவர் தலைமுடியையும் கலைத்து விளையாடியது.

நவீன் காவிரியை கரையில் நின்றிருந்த இருவரோடு சேர்ந்த்து ஃபோகஸ் செய்தான். முல்லை காற்றில் பறந்த துப்பட்டாவை பிடித்துக்கொண்டு அடக்கமே உருவமாக நின்று கொண்டிருந்தாள். தன்னம்பிக்கையும், பிடிவாதமும், தேடலுமான முல்லையாகத் தெரியாமல் இப்போது ஏனோ அவள் தோற்றத்தில் ஒரு சோகம் ததும்புவது போலவும், ஒரு மென்மையும், இனிமையும் நிறைந்திருப்பது போலவும் தோன்றியது அவனுக்கு.

இந்தப் பயணம் முடிவதற்குள் இவள் மீது காதல் கீதல் வந்து தொலைக்காமலிருக்க வேண்டும் என்று நினைத்து கொண்டான். சுரேஷ் சபாபதி வரவில்லை என்றதும் அவள் தடுமாறியது நினைவுக்கு வந்தது. அவள் தன்னைப் பற்றித் தவறாக நினைக்க வாய்ப்பிருக்கிறது என்ற எண்ணம் ஒரு குற்ற உணர்வைத் தொடர்ந்து ஏற்படுத்தி வந்தது.

அவளோடு முழுவதும் தோழமையுணர்வுடன் பழகுவதே தனது நேர்மையை வெளிப்படுத்தும் வழி என்று நினைத்திருந்தான். இப்போது... தலையை உதறி அந்த எண்ணத்தைப் போக்கிக் கொண்டு அவர்களோடு கலந்து கொள்ள நடந்தான்.

இந்த வழியில் யார் யார் போய்வந்து கொண்டிருந்தார்கள் என்று அவள் கேட்டிருக்க வேண்டும். பேராசிரியர் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

“பெரும் வணிகக் குழுக்கள் பின்னால்தான் உருவாகின. சிலப்பதிகாரக் காலத்தில் வணிகத்தை மையமாகக் கொண்டிருந்த நகர அரசுகள் தான் இருந்தன. மேற்குக் கடற்கரையையும், கிழக்கு கடற்கரையையும் இணைக்கும் சாலையில் உள்நாட்டில் கிடைக்கும் மிளகு, தந்தம், கொங்கு நாட்டில் கிடைத்த பச்சை, நீல வண்ணக் கற்களுக்கான வணிகம் பரபரப்பாக நடந்து வந்தது. இந்த வணிகத்தின் ஒரு பகுதி மேற்கு கடற்கரையில் சேர நாட்டின் வழியாகவும், இன்னொரு பகுதி பூம்புகார் வழியாகவும் நடந்து வந்தது. அதனால்தான் பூம்புகாரின் நாளங்காடியில் ரத்தினக் கற்கள் கொட்டிக் கிடந்தன என்று இலக்கியங்கள் சொல்கின்றன.”

பழமையின் எந்த அடையாளமும் இல்லாமல் ஒரு தடுப்புச் சுவர் போலத் தெரிந்த கல்லணையைக் கடந்ததும் தொலைவில் ஸ்ரீரங்கம் கோபுரம் தெரிந்தது. பழங்காலத்து தளத்தின் மீது இந்த புதிய கோபுரம் கட்டப்பட்டது தனக்குத் தனிப்பட்ட முறையில் இழப்பு என்பதுபோல சுஜாதா சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது.

ஸ்ரீரங்கம் கோபுரத்தின் தாக்கத்தால்தான் இலங்கைக்குக் கெட்டது நடக்கின்றது என்று விடுதலைப் புலிகளின் ஒரு பெரும் தாக்குதலுக்குப் பிறகு சந்திரிகாவோ யாரோ சொன்னதை நவீன் நினைவு கூர்ந்தான். பின்பு நடந்த படுகொலைகளும், பேரழிவும் இல்லாவிட்டால் சிரித்துக் கிண்டலடித்திருக்கக் கூடிய மூட நம்பிக்கைதான்.

“இந்தக் கோயில் எப்போது கட்டினார்கள்?” நவீன் கேட்டான்.

“சிலப்பதிகாரத்திலேயே இந்தக் கோவில் வருது. இது முதலில் சமணர் கோவிலாக இருந்தது என்று சொல்றாங்க. ஆனா சிலப்பதிகாரத்திலேயே இங்கு அரங்கன் இருப்பதாகத்தான் வருது. சமணர் தங்கும் இடங்கள் பக்கத்தில் எங்கோ இருந்திருக்கணும்”. முல்லை சொல்லிவிட்டு ‘சரிதானே’ என்பது போல் ஸ்ரீ குமாரைப் பார்த்தாள்.

“கோவில் வேறு வடிவத்தில் முன்பே இருந்திருக்கலாம். கருங்கற்களால் கட்டும் வழக்கம் பின்னால்தான் வந்தது.”

”எப்போது?”

“தாங்கள் தான் தொடங்கி வைத்ததாகப் பல்லவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அதற்குக் கொஞ்சம் முன்பே வந்திருக்கலாம்.”

“சமணர் பகுதிகள் ஏதாவது இருக்கான்னு பாக்கலாமா அல்லது ஏதாவது லாட்ஜில் ரூம் ஏற்பாடு செய்து விட்டு வரலாமா?” என்று முல்லை கேட்டாள்.

“மணி நாலு தானே ஆகிறதுச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகலாம்.’’

நவீன் நீண்டு சென்ற மதில்களைப் படம் பிடித்தான். முல்லையை ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் கொஞ்ச தூரம் சென்று விட்டு வரும்படி கூறினான். முல்லை கொஞ்சம் கூச்சத்தோடு ஏறி உட்கார்ந்தாள். நவீனுக்கு இது தவறோ என்ற எண்ணம் தோன்றியது. டிஸ்கவரி சேனலில் வெள்ளைக்காரர்கள் செய்வது போல செயற்கையாக இருக்கிறதோ? அதனாலென்ன? பின்பு பார்த்துக் கொள்ளலாம்.

கேமராவைப் பார்க்காதே என்று முல்லையை நோக்கி கூவினான். முல்லை இறங்கி வந்து ‘சமணர், ஜெய்ன் எதுவும் ரிக்ஷாகாரருக்குத் தெரியவில்லை’ என்றாள்

அகன்ற ஒழுங்கான தெருக்கள், பெரும்பாலும் சாலையை ஆக்கிரமிக்காத பழையகால வீடுகள். இவ்வளவு ஒழுங்கான அழகான பழைய நகரம் வேறு ஏதாவது தமிழ்நாட்டில் மிச்சம் இருக்குமா என்று தெரியவில்லை.

ஓட்டுக்கூரை போட்ட ஒரு மடத்துக்குள் சென்று நவீன் விசாரித்தான். அங்கே பட்டை பட்டையாகப் பூசியிருந்த ஒருவர் கோவிலுக்குள் சமணர் சின்னங்கள் எதுவும் இல்லை என்றும், திருச்சி நகரில் சமணர் வாழும் சாலை ஒன்று இருக்கிறது என்றும் கூறினார். இனோவா ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியேறி கிழக்கு நோக்கிச் சென்று தெற்கே திரும்பியது. நீண்ட பாலத்திற்குக் கீழே ஆழமற்ற, கண்ணாடி போன்ற தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

திருவரங்கத்தின் கண் மரங்கள் செறிந்த ஒரு

சோலையில் அருகதேவனால் செய்யப்பட்ட
அதிசயங்கள் மூன்றும் தப்பாத வாய்மையுடைய
தருமம் சாற்றும் சாரணர் சிலரும் வந்தனர்.
கவுந்தியடிகளும், கோவலனும், கண்ணகியும்
அவர்கள் கால்களில் விழுந்து வணங்கினர்.
சாரணர் தலைவன் அவர் மூவருக்கும்
வரப்போகும் துன்பத்தை தன் அறிவொளியால்
தெரிந்து கொண்டான். ஆனாலும் விருப்பும்
வெறுப்பும் அற்றவன் என்பதால் அமைதியோடு
இருந்தான்.

இது என்னவிதமான மதம்? துன்பம் வரப்போகிறது என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் திரும்பிப் போயிருப்பார்கள் அல்லவா? அல்லது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருப்பார்கள் தானே? இன்பத்தையும் துன்பத்தையும் எப்படி ஒன்றாகக் கருத முடியும்? ஏன் இப்படி ஊழ்வினை ஊழ்வினை என்று பேசுகிறார்கள், அதை வெல்ல முடியாது என்கிறார்கள்? இது பற்றி விரிவாகப் பேச வேண்டும் என்று முல்லை நினைத்துக் கொண்டாள்.

இந்த இடத்தில் தான் கோவலனும், கண்ணகியும், கவுந்தியடிகளும் ஓடத்தில் ஆற்றைக் கடந்திருக்க வேண்டும். இப்போது ஆற்றில் ஓடிய தண்ணீரில் காகிதக் கப்பல் கூட விடமுடியாது. முல்லை ஆற்றோரமாக நின்று என்ன விதமான உணர்வலைகள் தோன்றுகின்றன என்று தனக்குள்ளேயே தேடிக் கண்டுபிடிக்க முயன்றாள். ஆற்றின் மறுபக்கம் தென்னைமரங்கள் தென்பட்டன. ஆற்றின் தென்கரையில் உள்ள சோலைகள் என்றும், கவுந்தியடிகள் பரத்தையையும், குடிகாரனையும் நரிகளாக்கிய இடம் என்றும் கூறப்பட்ட இடங்கள் இங்கேதானிருந்திருக்க வேண்டும்.

கார் பாலத்தில் நகரத் தொடங்கியதும் பயங்கரமான நெரிசலில் சிக்கிக் கொண்டது. இரைச்சலும், நெரிசலும், வெயிலும் கொண்ட நகரம் ஏதோ மாயாஜாலம் போலச் சூழ்ந்து கொண்டது. மூன்று நான்கு மாடிக்கட்டிடங்கள், அணுவணுவாக நகரும் வாகனங்கள், கிடைத்த

இடைவெளிகளில் சாரிசாரியாகப் புகுந்து செல்லும் மக்கள், மாணவர்கள்... ஒருசில நிமிடங்களில் கழுத்திலும் கையிடுக்குகளிலும் உள்ளங்கையிலும் கூட வியர்க்கத் தொடங்கியது. மணி நான்கைத் தாண்டிவிட்டது என்றால் நம்பும்படி இல்லை. உறையூர்....

சமணர் வீதி என்று சொல்லப்பட்ட இடத்தில் முக்காடு போட்ட வட இந்தியப் பெண்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

“அடடா திகம்பர சமணர்களுக்குப் பதில் பைனான்ஸ் செய்யும் வட்டிக்கடை ஜெய்ன்கள்...”.நவீனின் சிரிப்பு முல்லையையும் தொற்றிக் கொண்டது.

நீலம், பச்சை, சிவப்பு ரத்தினக் கற்கள், ஜாதிக்கற்கள் என்று காங்கேயம் கரூர் பகுதியில் அழைக்கப் படுகின்றன. இவைகள் தரைக்கு அடியில் குத்துகளாகவோ, ஒரு குழாய் போல கிடைமட்டமாக அல்லது மேல்கீழ் வரிசையிலோ காணப்படும். உள்ளே ஒரு மயிரிழை இருப்பது போலக் காணப்படும் கற்கள் விலையுயர்ந்தவை.. கிணறு தோண்டும் போதோ, உழும்போதோ இந்தக் கற்களில் ஒன்றிரண்டு உடைந்து வெளியே வரும். அது வெயிலிலும் மழையிலும் அடிபட்டு துல்லியமான நிறத்தை அடையும். ஜாதிக் கற்களில் ரூபி எனப்படும் மாணிக்கம் ஒரு காரட் 50,000/- வரை விலை போவது உண்டு.

கிருஷ்ணசாமி கவுண்டருக்கு கரூர் ஐயாவிடமிருந்து போன் வந்த போது தாராபுரம் அருகே தனது புல்லட்டில் போய்க்கொண்டிருந்தார். அங்கே ஒரு தோட்டத்தில் பச்சைக்கற்கள் கிடைக்கின்றன என்று தகவல் வந்திருந்தது. இந்த இருபது ஆண்டுகளில் கற்களைத் தேடி காங்கேயத்திலிருந்து கரூர் வரை, நாமக்கல்லிலிருந்து தாராபுரம் வரை, பெருந்துறையிலிருந்து பல்லடம் வரை அவர் போகாத கிராமத்துச் சாலை இல்லை. இந்த மாதிரி அழைப்புகள் பெரும்பாலும் பொய்யாக இருக்கும். ஏமாற்றாகக்கூட இருக்கலாம். பல கற்கள் ஒன்றுக்கும் உதவாத மக்கடக் கல் அல்லது நிலவித்தாக இருக்கலாம். இந்த மட்டரகக் கற்களில் அங்கங்கே ஊதா அல்லது பச்சை அல்லது நீலநிற திட்டுக்கள் இருக்கும். நல்ல கற்கள் பட்டைகளோடு இருக்க வேண்டும். நீரோட்டத்தோடு இருக்க வேண்டும். முழுவதும் நிறமுள்ளதாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே விலை போகும். இல்லாவிட்டால் வியாபாரிகள் இரக்கமில்லாமல் ஆகாது என்று சொல்லிவிடுவார்கள். இப்படிப் பிரச்சினைகள் இல்லாத ஒரு கல்லைத் தேடித்தான் இருபது ஆண்டுகளாக அவர் அலைந்து திரிந்து வருகிறார்.

சுற்றுப் புறத்திலிலுள்ள அனைத்து தலித் வீட்டு விஷேங்களுக்கும் தவறாமல் சென்று விடுவார். அவர்கள்தானே நிலத்தில் வேலை செய்பவர்கள். கற்கள் கிடைத்தால் முதலில் அவர்கள் பார்வையில்தானே படும்! ஆனால் இப்போது அவர்கள் தேறி விட்டார்கள். முன்பெல்லாம்

கேலியும் கிண்டலுமாகப் பேசினாலும் அவர்கள் உடல் மொழியிலும், பார்வையிலும் ஒரு பணிவு தெரியும். இப்போது அது குறைந்து வருகிறதோ என்று அவருக்கு அடிக்கடி தோன்றுகிறது. பல பையன்கள் ஏதேதோ பெயர் தெரியாத தலித் அமைப்புகளில் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளில் கூட இருக்கிறார்கள். இந்தப் பையன்களிடம் ஒரு விரோதம் தெரிகிறது. சில பேரை அவர் அடித்து உதைத்ததுகூட உண்டுதான். ஆனால் உள்ளூர ஒரு சின்ன பயமும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. ரத்தத்தில் ஊறிய அந்த கெட்ட வார்த்தையைச் சொன்னதற்காகவும், பிடரியில் ஒரு தட்டு தட்டியதற்காகவும் வருடக்கணக்காக கோர்ட்டுக்கு அலைந்த பலரை அவருக்குத் தெரியும்.

அது கூடப் பரவாயில்லை. ஒருமுறை சோடா பாட்டிலின் அடிப்பகுதியை மட்டும் உடைத்து பச்சைக் கல் என்று காட்டி ஆயிரம் ரூபாய் ஒருவன் வாங்கிக் கொண்டான். கிருஷ்ணசாமி அந்தக் காட்டுக்காரரை நைச்சியம் செய்து உழவு ஓட்டுவதற்கு முன் காட்டைத் தோண்டிக் கல் தேட ஒப்புக் கொள்ள வைத்தார். கல் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் காட்டுக்கார கவுண்டருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்துவிட வேண்டும். ஜேசிபியும், ஹிடாசியும் வைத்துப் பனிரெண்டு மணிநேரம் காட்டைப் புரட்டிப் போட்டார். கல்லும் கிடைக்கவில்லை ஒரு மண்ணும் கிடைக்கவில்லை. ஒரே நாளில் ஒரு லட்ச ரூபாய் முடிந்தது. இப்படி எத்தனை எத்தனையோ ஏமாற்றங்கள். ஆனாலும் ஒரு போன் வந்தால் போகாமல் இருக்க முடியாது. இருபது வருடப் பழக்கம். ரத்த நாளங்கள் துடித்து விடும். போயே தீர வேண்டும். அவருக்குத் தெரியும் ஒரு கல் கிடைத்து விட்டால் போதும் வாழ்க்கையே மாறிவிடும். அப்படிக் கிடைத்தால் போனமுறை செய்த தவற்றை செத்தாலும் செய்துவிடக்கூடாது என்று திட்டவட்டமாக முடிவு செய்திருந்தார்.

அவர் ஒரே ஒரு முறைதான் ஒரு அற்புதமான கல்லைப் பார்த்திருந்தார். கிருஷ்ணசாமி, கிருஷ்ணசாமி கவுண்டராக ஆவதற்கு முன்பும் கவுண்டராகத் தானிருந்தார். ஆனால் இந்த புல்லட், அடியாட்கள், சின்னவீடு எதுவுமில்லாத குறி சொல்லும் கிருஷ்ணசாமியாகத் தான் ஊரார் அவரை அறிந்திருந்தார்கள். பகல் நேரங்களில் குறி சொல்வார். ஜோதிடம் சொல்வார். இரவு நேரங்களில்

ஒளிந்து வருபவர்களுக்கு பில்லி சூனியம் வைத்துத்தருவார், குட்டிச்சாத்தான்களையும், பேய், பிசாசுகளையும் ஏவி விடுவார். பரம்பரைத் துண்டு நிலத்தை விற்றுத் தீர்த்தவுடன் இப்படித்தான் அவர் பிழைப்பு ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் சுட்டெரிக்கும் வெயிலில் அவள் வந்து சேர்ந்தாள். இருபத்திநான்கு மணி நேரமும் குடித்து விட்டு காடுகளில் விழுந்து கிடக்கும் கணவனுக்கு ஒரு வழி பண்ணச் சொல்லி கேட்டாள். அடுத்த விநாடி கிருஷ்ணசாமி அவளைக் கையமர்த்திவிட்டு மடமடவென்று அவள் கணவனின் செயல்களைப் பட்டியல் போடத் தொடங்கினார்.

“நல்ல வெய்ய நேரத்துல வந்திருக்கிற. உன்ர புருஷன் மூச்சு எரியும், அவன் உடம்பும் எரியும். அவன் குடிக்கிற சாராயம் அப்படி. ராத்திரி வீட்டுக்கு வரானா? ”என்றார்.

அவருக்கு அவளையும் தெரியும், அவள் புருஷனையும் தெரியும். துயரத்தில் உணர்வுகள் மரத்துப் போயிருந்த அந்தப் பெண்ணுக்கு இதையெல்லாம் யோசிக்கும் மனநிலையில்லை.

“வருது. சில சமயம் தானா வரும். சில சமயம் யாராவது தூக்கிட்டு வந்து போடுவாங்க.”

“புத்திர பாக்கியம் இல்ல.”

அவள் பதில் பேசவில்லை.

“மூணு நாள் தோட்டத்தில ஏவல், சூனியம் ஏதாவது இருக்குதான்னு தேடி பாக்கோணும், கொஞ்சம் செலவாகும்.” கிருஷ்ணசாமி எந்த நாளை சொல்லலாம் என்று மனதுக்குள் தேடினார். ‘எப்போது ஊர்ப் பயல்களெல்லாம் எங்கேயாவது போய்த் தொலைவார்கள்’

குடிகாரன் பெரிதாக மாறவில்லை. ஆனால் கிருஷ்ணசாமி அந்தத் தோட்டத்திற்கு அடிக்கடி வந்து போகத் தொடங்கினார். இரண்டு பேருக்குமே போகிறவரை போகட்டும் என்ற எண்ணம் தான்.

ஒருநாள் வழக்கம்போல கிருஷ்ணசாமி அங்கே போனபோது அம்மிக்கல் ஓரம் குழவியளவுக்கே பெரிய ஒரு கரும் பச்சை நிறக் கல் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கல் கண்ணாடி போலப் பளபளத்துக் கொண்டிருந்தது. கிருஷ்ணசாமி வியப்புடன் அதை எடுத்துப் பார்த்தார்.

"காட்ல கெடந்துச்சு. சும்மாயிருக்கும் போது உருட்டி மொளு மொளுன்னு பண்ணலான்னு எடுத்துட்டு வந்தேன். அழகாயிருக்கில்ல" என்றாள் அவள்.

கிருஷ்ணசாமி அதை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார். பல்பு வெளிச்சத்தில் கல்லுக்குப் பின்புறம் பிடித்திருந்த விரல்களை ஊடுருவிப் பார்க்க முடிந்தது. அதன் மீது பட்டைகள் இருந்தன. உள்ளே எங்கோ ஆழத்தில் மயிரிழைபோல ஒரு கோடு தெரிந்தது. அதன் மேல்பகுதியில் நட்சத்திரம் போன்ற ஒரு குறி ஒளிர்ந்தது. பச்சைநிறத் தண்ணீர் நிறைந்திருக்கும் கண்ணாடிப் பாட்டிலைக் கையில் பிடித்திருப்பது போலிருந்தது. உள்ளே இருக்கும் தன்ணீர் இதோ குலுங்கப் போகிறது என்று தோன்றியது. அதன் மீது வைத்த கண்களை எடுக்க முடியவில்லை. இப்படிக்கூட அடர் பச்சை நிறத்தில் கல் இருக்க முடியுமா? அல்லது இது ஏதேனும் கண்ணாடியா என்று திருப்பித் திருப்பிப் பார்த்தார். சாதாரணப் பாறைகள், கண்ணாடிகளில் உடைந்த ஓரப்பகுதிகள் செதில் செதிலாக வரும். இந்தக் கல்லின் ஓரப்பகுதிகள் இரும்பைவிடக் கடினமாக இருந்தன.

"இதை எனக்கு தர்றயா? பூசைக்கு வேணும்."

"எதுக்கு? வர்றவன் தலையில மொளகா அரைக்கவா...? எடுத்துக்கோ. தோசை வாக்கட்டுமா பூசாரி."

தோசைக்காக கிருஷ்ணசாமி அங்கு வருவதில்லை என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். இருந்தாலும் தோசை சுட்டு அவரைத் தின்ன வைப்பதில் அப்படியொரு பிடிவாதம் காட்டுவாள்.

கிருஷ்ணசாமியின் வாழ்க்கை அதன்பின்பு அடியோடு மாறிவிட்டது.

வியாபாரிகள் அவரிடமிருந்து அந்தக் கல்லைக் கைப்பற்றப் படாத பாடு பட்டார்கள். ஒருவன் கல்லை வாங்கி பத்திரமாக வைத்துவிட்டு ஆயிரம் ரூபாய் கொடுத்தான். முகம் பார்த்துக் குறி சொல்வதில் தேர்ந்தவரான கிருஷ்ணசாமி கடைக்காரனின் உப்பிய முகம் ஒருவினாடி பளிச்சிட்டதை கவனித்துவிட்டார். ஒரு வார்த்தை பேசாமல் கல்லைத் தூக்கிக் கொண்டு வெளியேறினார். மாலையில் அந்த வியாபாரி அவர் வீடு தேடி வந்துவிட்டான். அவனோடு சேர்ந்து பம்பாய்க்கு சென்று அந்தக் கல்லை பத்து லட்சம் ரூபாய்க்கு விற்றார். கமிஷன் போக எட்டு லட்சம் ரூபாய் கிடைத்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு அது மிகப் பெரிய தொகை. காங்கேயத்திலேயே ஒரு அறையைப் பிடித்து வட்டிக்கு விடத்துவங்கினார்.

வட்டித் தொழிலில் வந்த பணத்தில் முதலில் புல்லட், பின்பு அம்பாசிடருக்கு மாறினார். நாள் முழுவதும் மாடுகளோடும், சாணியோடும், கழுநீரோடும் போராடிக் கொண்டிருந்த மனைவியை, அவள் போக்கில் விட்டுவிட்டு காங்கேயம் ஊத்துக்குளி வழியில் ஒரு தோட்டம் வாங்கி பாப்பாத்தி என்று அழைக்கப்பட்ட கோமதியோடு செட்டில் ஆனார். எல்லாம் சரியாகப் போய்க்கொண்டிருந்த போதுதான் பைத்தியம் முற்றியது.

அதோடு கல் வியாபாரத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆசை யாரை விட்டது.

குறிசொல்வதை குறைத்துக் கொண்டாலும் மக்கள் தொடர்புக்காக அதைத் தொடர்ந்து செய்தே வந்தார். அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில்

சுற்றுப்புறத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகளுக்கு அவர் அறிமுகமாகிவிட்டார். கல் தேடும் நபர்களும் அவருக்கு அறிமுகமாகிவிட்டார்கள். கற்களைத் தேடிதேடி வாழ்நாளெல்லாம் செலவழித்தவர்கள், நல்ல ஒரு கல்லுக்காக வாழ்நாளெல்லாம் காத்திருப்பவர்கள் என்று ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமான அனுபவம். காங்கேயம் வியாபாரிகள் சந்தைகளில் விவசாயிகள், விவசாயக் கூலிகள் கண்டெடுக்கும் கற்களை வாங்குவார்கள்.

தோட்டங்களுக்கே சென்று நைச்சியமாகப் பேசி விவசாயிகளிடம் வாங்கிவிடுவார்கள்.

கிருஷ்ணசாமியும் இந்த முறையைப் பின்பற்றத் தொடங்கியதும் அவரிடம் கடன் வாங்கியவர்கள் ஒற்றர்களாக மாறிவிட்டனர்.

விவசாயிகள் சில பேருக்கு இந்தக் கற்களைப் பற்றி அரைகுறையாகத் தெரியும். பலருக்குத் தெரியாது. தெரிந்து பேரம் பேசுபவர்களை லேசாக மிரட்ட வேண்டியிருக்கும். நிலத்தை அரசு பிடுங்கிக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது என்று சொன்னால் போதும். நிலத்தின் மீதி உயிரையே வைத்திருக்கும் விவசாயிகள் சுலபமாகக் கொடுத்து விடுவார்கள். தவிர புதுப்புது தந்திரங்கள் கல் வியாபாரிகள் வைத்திருப்பார்கள். ஒருவர் ஒரு கல் வைத்திருக்கிறார் என்றால் அது சுமார் பத்தாயிரம் பெறும் என்றால் கிருஷ்ணசாமி அதை ஆயிரம் ரூபாய்க்குக் கேட்பார். அவர் மறுத்துவிட்டால் இன்னொருவரை அனுப்பி எழுநூறு ரூபாய்க்குக் கேட்பார். பிறகு இன்னொருவர். விலை எழுநூறைத் தண்டாது. விவசாயிக்கு வேறு வழியில்லை. எல்லாம் சரிதான்.

ஆனால் அவர் எதிர்பார்த்த அந்த அற்புதமான, வாழ்க்கையையே மாற்றிய கல்தான் அகப்படவில்லை. இருப்பதிலேயே மிகவும் விலை மலிவான மூன் ஸ்டோன் பட்டை தீட்டும் தொழிலில் இறங்கினார். தெலுங்கு ஜங்கம தொழிலாளர்கள்தான் இந்தத் தொழிலில் இருந்தனர். இவர்கள் மைசூர் மகாராஜாவிடம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வேலையில் இருந்தார்களாம். மன்னருக்கு கற்களில் மிகுந்த ஈடுபாடாம். அவரது மரணத்திற்குப் பிறகு ஜங்கமர்கள் காங்கேயத்துக்கும், கேரளாவிற்கும் வந்துவிட்டார்கள். இங்கே அவர்கள் தங்களைக் கல் ஆண்டிகள் என்று அழைத்துக் கொண்டார்கள்.

அவர்களுக்குப் போட்டியாக கிருஷ்ணசாமி ஏராளமான வெங்கச்சங் கற்களை வாங்கி வீட்டின் பின்புறம் குவித்தார். இரண்டு பேரை வைத்து அதைப் பட்டை தீட்டும் தொழில் தொடங்கினார். பட்டை தீட்டப்பட்டு முட்டை வடிவத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு செண்டிமீட்டர் நீளமுள்ள ஒரு மூன் ஸ்டோன் ஒரு கேரட் வெறும் 5 ரூபாய்தான். இருந்தாலும் ரத்தினக் கற்களைத் தேடுவதற்கு மூன் ஸ்டோன் வியாபாரம் உதவியது.

சிறியதும் கொஞ்சம் பெரியதுமாக ஜாதிக்கற்கள் கிடைத்துக் கொண்டுதானிருந்தன. ஆனால். . . அவர் தேடி வந்த அந்த அற்புதமான கல். . . மயிரிழையில் நழுவிப் போய்க் கொண்டே இருந்தது. கிருஷ்ணசாமி ஒரு நாளாவது இருநூறு கிலோமீட்டர் கல் தேடிப் பயணம் செய்யாமல் இருந்ததில்லை. வட்டியில் வரும் பணமெல்லாம் இப்படியே கரைந்து கொண்டிருந்தது.

கோமேதகம் கிடைக்கிறது, வைடூரியம் கிடைக்கிறது என்று ஆனைக்கட்டியிலும், கொடைக்கானல் மலைமேலும் அலைந்தார். மா◌ஃபியாக்கள் மேலும் இரண்டு மூன்று லட்ச ரூபாயை அழித்தனர். கொடைக்கானல் மலைகளில் மஞ்சம் பட்டிக்கு அப்பால் ஒரு அடர்ந்த காட்டில் கல் தேடிப் போயிருந்தார்கள். கிருஷ்ணசாமி துணைக்கு பங்காளிகள் சிலரையும் அழைத்துப் போயிருந்தார். போகும்போதே காட்டில் குழி தோண்டுபவர்களுக்கும், ஆயுதங்களோடு பாதுகாப்பளிப்பவர்களுக்கும் முன்பே பணம் கொடுத்துவிட வேண்டும் என்று வழிகாட்டி ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் விழுங்கிவிட்டான். கல் இருக்கும் இடத்தைக் காட்டுவதாகக் சொன்னவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். கைகளில் நாட்டுத் துப்பாக்கிகள். இருளில் ஒரு அடர்ந்த காட்டிற்கு அழைத்துச் சென்று ஒருவன் ஒரு பையில் போட்டுச் சில கற்களைக் கொடுத்தான். கையில் உள்ள செல்லைக் கொண்டு கூட வெளிச்சம் அடித்துப் பார்க்கக் கூடாது. பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் பார்த்துவிடும் என்றான். அவன் குரலில் தெரிந்த மிரட்டல் என்னவோ செய்தது. வேறு வழியில்லை.

இருளில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் வண்ணக் கல்லாக இருந்தால் இருளிலும் கொஞ்சம் தெரிந்தே தீரும். அவன் நாற்பதாயிரம் ரூபாய் கேட்டான். கிருஷ்ணசாமி கொடுத்தார். உயிரோடு வீடு போய்ச்சேர்ந்தால் போதும் என்றாகிவிட்டது அவர்களுக்கு. அந்த நள்ளிரவில் நடுக்காட்டில் அவர்களை விட்டு விட்டு மாயமானார்கள் உடன் வந்த ஆட்கள். கிருஷ்ணசாமி எல்லோரையும் மரத்தின் மீது ஏறிக்கொள்ளச் சொன்னார். கடும் குளிர் எலும்பை ஊடுருவியது. கைகால்களெல்லாம் மரத்துப் போயின. கொஞ்சம் குளிர் அடித்தாலும் கூதல் என்று கம்பளி போர்த்துக் கொள்ளும் காங்கேயத்துக்காரர்களுக்கு

பைத்தியமே பிடித்தது போலாகிவிட்டது. எறும்புகள் ஓயாது கடித்தன. எங்கோ யானை பிளிறியது. மரம் முறிந்தது. வேட்டியால் உடலை மரத்தோடு கட்டிக் கொண்டு உயிரைக் கையில் பிடித்தபடி இரவைக் கழித்தனர். விடிந்ததும் முதல் ஒளியில் தொலைவில் ஒரு கிராமம் தென்பட்டது. உடலெல்லாம் கோடு கோடாக ரத்தம் வழிந்திருந்தது. அட்டைகள். ஒளி புகாத அடர்காடு அது. எப்படியோ தப்பி வந்தார்கள்.

கிருஷ்ணசாமி இன்னும் வெறியுடன் கல் தேடும் வேலையில் ஈடுபட்டார். தண்ணீராகப் பணத்தை இறைத்தார். அந்த நேரத்தில்தான் நாகமாணிக்கக் கல்லைத் தேடுவதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருந்த தாமோதரன் அறிமுகமானான். கோவையில் காந்திபுரத்தில் பஸ்ஸ்டாண்ட் பின்புறம் உள்ள ஒரு சந்தில் இருக்கும் செண்பகம் லாட்ஜின் முன் சிலவகையான விசித்திரமான ஆட்கள் கூடுவார்கள். நாகமாணிக்கக் கல் தேடுபவர்கள், அமெரிக்க அரசு எப்போதோ அடித்ததாகச் சொல்லப்படும் ஆயிரம் கோடி டாலர் நோட்டையோ அல்லது அப்படி ஏதோ ஒன்றையோ தேடுபவர்கள், என்.ஆர். ஐ பணம் நூற்றைம்பது கோடி டாலர் வருகிறது அதற்கு சில வேலைகள் செய்ய வேண்டும் என்று பரபரத்து திரிபவர்கள் . . . என்று அசுர வளர்ச்சி பெற்றுவரும் நகரம் உருவாக்கிய விசித்திரப் பிரகிருதிகள். யாரும் ஒரு கோடிக்குக் குறைவாகப் பேசுவதில்லை. அரைமணிநேரத்திற்கு ஒருமுறை டீ குடித்துக் கொண்டும், சிகரெட் பிடித்துக் கொண்டும் நாளொன்றுக்கு மூன்று மணிநேரம் நின்று கொண்டே பேசுவார்கள்.

கிருஷ்ணசாமியும் தாமோதரனோடு வந்து இந்தக் கூட்டத்தில் ஐக்கியமானார். நூறாண்டு காலம் யாரையும் கொத்தாமல் வாழ்ந்த நாகத்தின் விஷம் கெட்டிப்பட்டு நாகமாணிக்கக் கல்லாகிவிடுமாம். அதன் அடிமட்ட விலை ஆயிரம் கோடியாம். அதன் ஒளிபாயும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு கோடி ரூபாய்

கூடுதலாம். இந்த நாகமாணிக்கக் கல்லை விற்றுக் கொடுத்தால் முப்பது கோடி ரூபாய் கமிஷனாம். அந்த முப்பது கோடி ரூபாய் போதும் என்று ஒரு கல்லூரியில் நூலகராக வேலை செய்யும் பெரியவர் சொன்னார். அவர் ஏற்கெனவே சில லட்சங்களை நாகமாணிக்கக் கல் தேடும்

படலத்தில் விட்டு விட்டவர். அடுத்தநாள் மகளுக்குத் திருமணம், கையில் ஒரு பைசாகூட பைசா இல்லாமல் டவுன்ஹால் அருகே உட்கார்ந்திருந்தவரை உறவினர்கள் கண்டுபிடித்து அழைத்து சென்றனர். அவர் மீது சில செக் மோசடி வழக்குகளும் இருந்தன. எல்லாம் நாகமாணிக்கக் கல் வேட்டையில் நேர்ந்தவை. ஆனால் அவர் கல்லைப் பார்த்துவிட்டாராம். அந்த அதிர்ஷ்டம் சும்மா இருக்காதாம். யோகம் வந்தே தீருமாம்.

நாகமாணிக்கக் கல்லைத் தேடுபவர்கள் எத்தனை பேரோ அதே அளவு ஆட்கள் ஏமாற்று வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பேசிக்கொள்வார்கள். ஒரு பேப்பரில் சிவப்புக் கல்லை வைத்து கீழிருந்து நமக்குத் தெரியாமல் லைட் அடித்து அது ஒளிருவது போலக் காட்டுவார்களாம். ஏமாந்தால் லட்சக்கணக்கில் பணம் போய்விடும்.

ஒருநாள் என்.எம்-க்கு அதாவது நாகமாணிக்கக் கல்லுக்கு ஒரு நல்ல தொடர்பு கிடைத்து செண்பகம் லாட்ஜ் கோஷ்டி கும்பலாகக் கிளம்பியது. முப்பது கோடி கிடைக்கும் போது கூட்டுச் சேர்ந்தால் என்ன? எல்லோரும் கட்டாயம் கிருஷ்ணசாமி வர வேண்டும் என்று விரும்பினார்கள். அவரால் பொய் சொல்பவர்களை எளிதில் கண்டுபிடித்துவிட முடியும். கூடவே முரட்டுத்தனம் வேறு. சேலத்துக்கு அப்பால் ஏதோ கிராமம். ஒதுக்குப் புறமான ஒரு வீட்டுக்கு அவர்களை ஒருவன் அழைத்துப் போனான். கல் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடும் என்று சொல்லிவிட்டு ஆளுக்கொரு குளிர்பானம் கொடுத்தான். கிருஷ்ணசாமியும், மற்றவர்களும் விழித்த போது ஒரு நாள் முழுதாகக் கழிந்து விட்டிருந்தது. உடுத்தியிருந்த உடைகளைத்தவிர வேறு ஒன்றையும் விட்டு வைக்கவில்லை அவன்.

வெளியே வந்த போது எத்தனை பேர்தான் இப்படி வந்து ஏமாறுவீர்கள் என்றார்கள் மக்கள்.

ஊர் திரும்பியதும் கிருஷ்ணசாமி இந்த ஏற்பாட்டைச் செய்தவனைத் தேடோ தேடென்று தேடி கோவையின் புறநகர்ப்பகுதியொன்றில் கண்டுபிடித்தார். துணைக்கு இருவரை மட்டும் அழைத்துக் கொண்டு இரவு பனிரெண்டு மணிக்கு அவன் வீட்டுக் கதவைத் தட்டினார். கைக்கு

அடக்கமான கம்பிக் கடப்பாரை முழுக்கை சட்டைக்குள் ஒளிந்திருந்தது. தேடப்பட்டவன் ஏதோ பிரச்சினை என்று புரிந்து கொண்டு பின் கதவைத் திறந்து கொண்டு தப்பி ஓடினான். அவன் தம்பி பிடிபட்டான். கிருஷ்ணசாமி முறுக்கேறிய வலிய பெரிய கைகளால் அவன் முகத்தில் சரமாரியாக இரக்கமின்றிக் குத்தினார். அவன் தாடையிலிருந்து கடக் கடக்கென்று சத்தம் வந்தது. மேலுதடு கிழிந்து மூக்கு உடைந்து முகம் ரத்தக் களறியானது.

திருவிழா போலக்கூடிய கூட்டத்தைப் பார்த்து அவர் மூர்க்கம் இன்னும் உச்சத்திற்குப் போனது. "தடுக்க வர்றவன் யாரா இருந்தாலும் ரெண்டு லட்சத்தை வெச்சுட்டுப் பேசுங்கடா". அடிபட்டவன் முகத்தையும் கிருஷ்ணசாமியின் நீட்டிய கடப்பாரையையும் பார்த்து கூட்டம் திகைத்துப் பின்வாங்கியது. அவனை மாருதி ஆம்னியில் திணித்து அவர்களும் ஏறிக் கொண்டார்கள். காரிலும் கிருஷ்ணசாமி அவனை அடிப்பதை நிறுத்தவில்லை. அவன் கீழே உட்கார்ந்து முகத்தை முழங்காலில் மறைத்துக் கொண்டு 'விட்டுடுங்கண்ணா' என்று கெஞ்சிக் கொண்டிருந்தான். கிருஷ்ணசாமி கடப்பாரையை காரின் கூரை இடங்கொடுத்த அளவுக்கு ஓங்கி பலங்கொண்ட மட்டும் அவன் முதுகில் சுளீரென்று அடித்தார். முதுகு விண்ணென்று அதிர்ந்தது. ஒரு கணம் அவன் மூச்சு நின்றே விட்டது. கிருஷ்ணசாமி மூச்சு திரும்பவும் வரும்வரை பொறுமையுடன் காத்திருந்து திரும்பவும் தாக்கினார். அவனிடமிருந்து லேசாக சிறுநீர் வாடை வரத் தொடங்கியது.

அவன் "ஒரு... நிமிஷம் நிறுத்தங்கண்ணா.... போன் செஞ்சுக்கறேன்" என்று ஈனஸ்வரத்தில் மன்றாடினான். கார் நின்றதும் பூத்துக்குள் பாய்ந்தவன் "ரிவர்ஸ்ஸாயிடுச்சு. என்னப் பார்ட்டி பிடிச்சு வெச்சிருக்காங்க, காப்பாத்துங்க" என்று அலறினான்.

விடிவதற்கு முன்பே யாரோ வந்து எண்பதாயிரம் ரூபாயும், கம்மல் மூக்குத்தி மாதிரி சில நகைகளையும் கொடுத்து அவனை மீட்டுக் கொண்டு சென்றனர். அடுத்தநாள் ஓடிப்போன அண்ணன் தனது கோஷ்டியோடு கிருஷ்ணசாமியைத் தேடிக் கொண்டு வந்துவிட்டான். அவரால் காங்கேயத்தை விட்டு வெளியே வரவே முடியாமல் போனது.

விஷயம் அப்போது அரசியலில் கொடிநாட்டத் தொடங்கியிருந்த ஐயாவிடம் சென்றது.

அன்னன்காரன் திருப்பூர் மகாதேவன் கோஷ்டியைச் சேர்ந்தவன். பெயரில் திருப்பூர் இருந்தாலும் மகாதேவன் அரசியல் செய்வது கோயமுத்தூரில்தான். அவன் ஒரு கட்சி அலுவலகத்திலேயே குடியிருப்பான். அவனது எல்லா டீலிங்குகளும் அங்கேதான் நடக்கும். அவ்வப்போது அவனது மொட்டையான அறிக்கைகள் நாளிதழ்களில் வரும். 'புதிதாக வந்திருக்கும் ஓட்டுப் போடும் மெஷினை மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்' என்பது போல. ஆனால் அவனை யாரும் அரசியல் வாதியாகக் கருதுவதில்லை. அவனுக்குப் பல ரகசியத் தொடர்புகள் உண்டு, இருட்டுத் தொழில்கள் அத்துபடி என்ற தகவல்கள் உலாவிவந்தன. ஆனால் மகாதேவனின் தந்திரங்கள் நேரடியானவை. அவன் ஒருநாளும் கள்ள நோட்டு அடித்ததில்லை. எந்த ஜாதிக்கல்லையும் நேரில் பார்த்ததுமில்லை.

மகாதேவனின் ஆட்கள் செண்பகம் லாட்ஜ் முன் நிற்கும் ஆசாமிகள் போன்ற பேராசை பிடித்தவர்களுடன் பழக்கம் செய்து கொள்வார்கள். அதில் ஒருவரைத் தனியாகப் பிரித்து கள்ளநோட்டோ, ஜாதிக்கல்லோ, சந்தனக்கட்டையோ வாங்கித் தருவதாகச் சொல்வார்கள்.

சிறிய ஜாதிக்கல் போன்ற ஒன்றைக் காட்டுவார்கள். அல்லது ஒரு நல்ல ரூபாய் நோட்டின் மீது எண்ணெயோ ஏதாவது வேதிப் பொருளோ தடவி அதைக் கள்ள நோட்டு, இருட்டில் புழக்கத்தில் விட்டால் கண்டே பிடிக்க முடியாது என்பார்கள். சிலசமயம் அந்தக் 'கள்ளநோட்டைப்' புழக்கத்தில் விட்டும் காட்டுவார்கள். ஒரு லட்சம் கொடுத்தால் இரண்டு லட்சம் தருவதாகப் பேரம் பேசி படிய வைப்பார்கள். நோட்டைப் பார்த்துவிட்டுப் பணம் கொடுத்தால் போதும் என்று உறுதியளிப்பார்கள். லாட்ஜ் ஆசாமி எத்தனை பேரை வேண்டுமானாலும் துணைக்கு அழைத்து வரலாம் என்றுவேறு நம்பிக்கையூட்டுவார்கள்.

செண்பகம் லாட்ஜ் ஆசாமி இது போன்ற ஒரு சந்தர்ப்பத்திற்காகத்தானே யுகம் யுகமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்? அவரால் மறுக்கவே முடியாது. வழக்கமாக ஏதாவது ஒரு நெரிசலான

சாலையில் உள்ள லாட்ஜில்தான் நோட்டு மாற்றல் நடை பெறும். அறிமுகங்கள் முடிந்து சூட்கேஸ் மாற்றப்படும்போது கதவு நாடகபாணியில் விரியத் திறக்கும். 'போலீஸ்காரர்கள்' உள்ளே புகுந்து மகாதேவனின் ஆட்களைப் பிடித்துக் கொள்வார்கள். மகாதேவனின் ஆட்கள் போலீஸ்காரர்களிடம் லாட்ஜ் ஆசாமியைக் காட்டி 'இவரை விட்டுவிடுங்கள். அவருக்கு ஒன்றும் தெரியாது. அவர் எனது மாமன் மச்சான் சகலை' என்று கெஞ்சுவார்கள். இரக்கப்பட்ட போலீஸ்காரர்களும் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு மச்சானை விரட்டிவிடுவார்கள். இந்த ஆப்பரேஷன் ஜாதிக்கல், சந்தனக்கட்டை, நாகமாணிக்கம் அனைத்துக்கும் பொருந்தும். ஒரு சூட்கேஸ் நிறைய தங்க பிஸ்கட்டை வாங்கிக் கொண்டு போய் அது தங்க முலாம் பூசப்பட்ட ஈயம் என்று கண்டு அதிர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சிந்தெடிக் ரூபியை வைரத்திற்குச் சமமான மாணிக்கம் என்று வாங்கி ஏமாந்தவர்கள் உண்டு. மகாதேவனுக்கு பெரிய பாதுகாப்பு என்னவென்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருபோதும் போலீசுக்குப் போவதில்லை.

சரி. . . ஐயா மகாதேவனைப் பஞ்சாயத்துக்கு அழைத்தார். தும்பைப்பூ போன்ற வெள்ளுடை அணிந்து ஆர்ப்பாட்டமாக அடியாட்களுடன் டாட்டா சுமோவில் வந்திறங்கிய மகாதேவனைப் பார்த்து கிருஷ்ணசாமி அசந்து போனார். அவன் அலுவலக அறைக்குள் கால் வைத்ததும் ஐயா கூசாமல் ஓங்கி ஒரு அறைவிட்டார். ஸ்தம்பித்து நின்றவனிடம் இருந்ததைப் பிடுங்கிக் கொண்டு அவனை மட்டும் டிரைவரோடு விரட்டி விட்டார். மற்றவர்களுக்கு கிடா விருந்து வைத்து பஞ்சாயத்தை முடித்து வைத்தார். கிருஷ்ணசாமிக்கு ஐயாவுடனான நெருக்கம் இப்படித்தான் தொடங்கியது.

பிறகு கிருஷ்ணசாமி நாகமாணிக்கத்தை விட்டுவிட்டு தனது ஜாதிக்கற்களுக்குத் திரும்பினார். தோட்டத்தையும், புல்லட்டையும் தவிர பெரிதாக எதுவும் மிஞ்சவில்லை. ஒரு கல் இப்போது அவருக்கு அவசியம் தேவைப்பட்டது. அப்போதுதான் கரூர் ஐயா கூப்பிட்டு அனுப்பினார். ஐயா ஒரு விதத்தில் கிருஷ்ணசாமிக்குப் பங்காளியும் கூட. ஐயா மரத்தின் மீது அமைக்கப்பட்ட பரண்போல கலையழகுடன் அலங்கரிக்கப்பட்ட தனது பிரத்யேக அறையில் இவரைச் சந்தித்தார். கிருஷ்ணசாமி ஐயாவின் ஊழியராகிவிட்டார். ஐயாவுக்காக ஜாதிக்கல் தேடி அலைவது, தோட்டத்துக்

காரர்களை மிரட்டுவது, கூடவே ஐயாவின் ரியல் எஸ்டேட், வண்டி பைனான்ஸ் அனைத்திலும் கிருஷ்ணசாமி உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டார். ஆனால் என்றாவது ஒருநாள் தான் தேடிவரும் கல் கிடைத்துவிடும். தனக்கு விடுதலை கிடைக்கும் என்பதில் அவருக்குச் சந்தேகம் இல்லை. கல் கிடைத்துவிட்டால் ஐயாவிடமிருந்து தப்ப ஒரு வழி கிடைக்காமலா போய்விடும்?

அன்று கிருஷ்ணசாமி வந்து சேர்ந்தபோது ஐயாவின் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்திருந்தன. ஜாதிக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இரண்டு மூன்று பேரும் அங்கே உட்கார்ந்திருந்தனர். எல்லோரும் கிருஷ்ணசாமிக்குத் தெரிந்தவர்கள்தான். ஐயாவுக்குப் பல தொழில்கள் இருந்தாலும் ஜாதிக்கல் வியாபாரத்தில் அவர் மிக முக்கியமான புள்ளி. அவருக்குச் சொந்தமாக மூன்று குவார்ட்ஸ் சுரங்கங்கள் இருந்தன. இதற்கு லைசன்ஸ் வாங்கியிருந்தாலும் ஐயாவுக்கு அதன் மேல் எந்த ஆர்வமும் கிடையாது. ஜாதிக் கற்களுக்காக விருப்பம்போல் சுரங்கம் தோண்ட முடியாது. எனவே குவார்ட்ஸ் அதாவது வெங்கக் கல் சுரங்கம் தோண்ட உரிமம் பெற்று ஜாதிக்கல் தேடிவந்தார். கரூர், காங்கேயம் பகுதியில் ஜாதிக்கல் வியாபாரத்தின் ஒரு கணிசமான பங்கு இவரது கரங்களில் இருந்தது. இதை விரிவு படுத்த ஏராளமான திட்டங்களும் அவரிடம் இருந்தன. இப்போது. . .

ஐயா கிருஷ்ணசாமியை உட்கார வைத்து ஜே.கே. டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ் பற்றிச் சொன்னார். இதுவரை ஜெய்ப்பூர் வியாபாரிகளுக்கும் நமக்கும் ஒரு நல்ல உறவு இருந்தது. அவர்கள் கற்களை நம்மிடம் இருந்துதான் வாங்குவார்கள். இப்போது ஒரு வெளிநாட்டுக் கம்பெனி தானே சுரங்கம் தோண்டும் வேலையில் ஈடுபட முயன்று வருகிறது. ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், நாமக்கல் மாவட்டங்களில் ரத்தினக் கற்கள் இருக்கும் பகுதிகளைத் தேடிக் கண்டுபிடிக்க அரசிடம் உரிமம் பெற்றிருக்கிறது. விரைவில் அந்த வேலை தொடங்கிவிடும். அப்புறம் எதற்காகவோ இந்திப் பட வில்லனைப் போல இருக்கும் ஒரு தாடிக்கார வாத்தியாரை இந்தப் பகுதிகளுக்கு அனுப்பப் போகிறது என்று செய்தி வந்திருக்கிறது. அவர் ரகசியமாக ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்கிறார். இந்தக் கம்பெனிக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது

உள்ளூர் வியாபாரத்தை மொத்தமாக அழித்துவிடும்.

இந்தத் தாடிகாரரைப் பிடித்து விசாரிக்க வேண்டும், அவரிடம் அப்படி ஏதாவது மர்ம ஆராய்ச்சி முடிவு இருக்கிறதா? வெளிநாட்டுக் கம்பெனிக்காரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஐயாவும் அங்கேயிருந்த ஜாதிக்கல் வியாபாரிகளும் முடிவு செய்திருந்தார்கள். எதுவும் இல்லாவிட்டாலும் தாடிக்காரரைக் கடத்துவதன் மூலம் கம்பெனியைக் கொஞ்சம் மிரட்டி வைக்க வேண்டும் என்று நினைத்தார்கள். ஐயாவைத் தவிர அத்தனை பேரும் பயந்த ஆட்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணசாமியிடம் வேலை செய்த ஒருவன் ஒரு கல்லுக் குழியில் இறந்து கிடந்தான். கிருஷ்ணசாமியை எல்லோரும் சந்தேகப்பட்டாலும் எதுவும் நடக்கவில்லை. எனவே இப்போது ஸ்ரீகுமாரைக் கடத்தும் பொறுப்பு கிருஷ்ணசாமியிடம் ஒப்படைக்கப்பட்டது.

12

திருச்சியில் அவர்கள் தங்கிய அறைகள் புகாரின் அரசு விருந்தினர் மாளிகை அறையோடு ஒப்பிடும்போது சிறியனவாக இருந்தாலும் வெள்ளை வெளேரென்ற விரிப்புகளோடு பளிச்சென்றிருந்தன.

முல்லை கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் தனது அறைக்குச் சென்றதும் பேராசிரியர் சிகரெட்டோடு வசந்த் டி.வியில் மூழ்கினார். பி.சுசீலா பாட்டைத் தவிர வேறு பாடல்கள் வரும்போது ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் மெகா டி.வி.க்கும், ஜெயா டி.வி.க்கும் பட்பட்டென்று சேனல் மாற்றினார். ஹேண்டி கேமிராவின் மெமரி கார்டை லேப் டாப்பில் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த நவீனுக்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

"சார் நீங்க வேறெதுவும் பார்க்க மாட்டீர்களா?"

"நான் பி.சுசீலா ரசிகன்"

"அதுசரி, வேற சினிமா கினிமா ஜோக்ஸ்... ?"

"ஒரு படம் பார்த்தேன். எல்லோருக்கும் லவ் பெயிலியர்...."

"என்ன படம்?"

"கால்மேல கார் ஏறிடும்...!"

"நாடோடிகள்?"

"எல்லோருக்கும் லவ் பெயிலியர் ஆனபிறகு திரும்பவும் அதே வேல செய்யறோம்னு கௌம்பறாங்க..."

நவீனுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. "சார் உங்களுக்கு இப்படியெல்லாம் பேச வருமா"

டிவியில் சந்திரபாபு பாடல் ஓடியதும் பேராசிரியர் சேனல் மாற்றியவர் வேறு ஒரு டிவியில் சரோஜாதேவி 'தனிமையிலே இனிமை காணமுடியுமா' என்றவுடன் அதில் லயித்துப் போனார்.

"எவ்வளவு கிரேஸ்புல்லா இருக்கு பாருங்க?"நவீனுக்கும் அது அப்படி இருப்பது போலத்தான் தோன்றியது. காதலர்களின் ஏகாந்தமான தனிமையும், அது தரும் இனிமையான கனவு போன்ற மனநிலையும்

புதுப்பாடல்களை விட பழைய பாடல்களில் அழுத்தமாகத் தெரிவது போலத் தோன்றியது. கொஞ்சம் பொறுமையாக உட்கார்ந்து பார்த்தால் பிடித்துவிடும் போலத்தான் இருந்தது.

“நீங்க லவ் மேரேஜா சார்?” நவீன் கேட்டு விட்டானே தவிர ஏனோ மனதில் அவர் பிரம்மச்சாரியாக இருப்பார் என்று தோன்றியது

“ஆமாம்”

“கொஞ்சம் சொல்லுங்க சார்..”

ஸ்ரீகுமார் திரும்பி வழக்கம் போல் தாடிக்குள் சிரித்தார். “நான் அப்ப சில டிரைபல் ஏக்டிவிஸ்ட்டுகளோட நெருக்கமா இருந்தேன். வரலாற்றையும், மக்கள் வாழ்க்கையையும், பழக்க வழக்கங்களையும் ஆழமா புரிஞ்சுக்கணும்னா பழங்குடி மக்களோட வாழ்க்கையைப் புரிஞ்சுக்கணும்னு நெனைச்சிருந்தேன். ஜெயந்தி அப்படித்தான் பழக்கம். கொஞ்சநாள் பேசிப் பழகினோம். அப்புறம் சேர்ந்து இருக்க தொடங்கிடோம்.”

“கல்யாணம்...”

“ரெண்டு பேருமே அதப்பத்தி யோசிக்கல. வீட்டுக்காரங்கத்தான் வற்புறுத்திக் கல்யாணம் பண்ணி வெச்சாங்க”

“கிரேட். இப்ப அவங்க என்ன சார் பண்றாங்க”

“நர்ஸிங் காலேஜ் பிரின்சிபல்”

“குழந்தைகள்..”

“பொண்ணு கல்யாண்ணமாகி அமெரிக்காவில இருக்கா. பையன் எஞ்சினீரிங் படிக்கறான்”

“மை குட்னஸ். நீங்க ஒரு மாதிரி நாடோடி, பேச்சலர்னு நெனச்சேன்..?”

“ நான் டிஸிப்பினின்ட் ஆள் அப்பா. இந்தியக் குடும்பஸ்தர்களுக்குள்ள எல்லாத் தகுதிகளும் எனக்கும் இருக்கு”

நவீன் சிரித்துவிட்டு “உங்க அடுத்த பிளான் என்ன?” என்றான்.

“நான் போயிட்டே இருப்பேன்”

“அதான் எங்கே?”

“அந்தக் கால ராஜகேசரிப் பெருவழி. கிழக்குக் கடற்கரையையும், மேற்குக் கடற்கரையையும் இணைக்கும் சாலை. புகாரில் விற்பனையான பொருட்கள் இந்த வழியாத்தான் வந்தது. காங்கேயம் வழியாகப் போகுது இந்த வழி. காங்கேயம் போகணும்...”

“காங்கேயத்தில் என்ன சார். காளையா?”

“பிரஷியஸ் ஸ்டோன். மரகதம், கோமேதகம் என்றெல்லாம் சொல்றாங்க இல்ல. அது இன்னும் அங்க கிடைக்குது. என்னோட ஆய்வுல காங்கேயத்துக்கு முக்கியமான இடம் இருக்கு . ..”

நவீனுக்கு ஏதோ புரிவது போலிருந்தது. அந்த மல்டி நேஷனல் கம்பெனியின் வியாபாரத்துக்கும் இவரது இந்த ஆய்வுக்கும் ஏதோ தொடர்பிருக்கும் போலிருந்தது. இதைப் பற்றிப் பேசியதால் ஏற்பட்ட சங்கடமான மௌனம் அவனுக்கு நினைவுக்கு வந்தது. கொஞ்சம் தந்திரமாக இருப்பதென்று முடிவு செய்தான்.

“உங்க ஆய்வைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்க சார்.”

“அது...” அவர் புகையை ஆழமாக இழுத்து விட்டார். அவர் புகைப் பிடிப்பதைப் பார்த்தால் நவீனுக்கு ரத்தக் கொதிப்பே வந்துவிடும் போலிருந்தது. சிகரெட்டை பற்ற வைக்காமல் கையில் வைத்திருப்பதும், புகையும் சிகரெட்டை வாயில் வைத்து இழுக்காமல் அலட்சியப் படுத்துவதும்...

“அது... காங்கேயத்தில் கிடைக்கிற கற்களுக்காக பெரிய வாணிபம் நடந்தது. இது பழைய காலம். ஆனா எல்லாப் பழைய காலங்களும் நிகழ்காலத்தோடு இணைஞ்சிருக்கு. அந்தக் காலத்துல கோலார்ல கெடச்ச தங்கத்துக்காத்தான் மௌரியர்கள் தெற்கே வந்தார்கள். இப்பவரைக்கும் கோலார்ல தங்கம் கெடச்சுட்டுத்தானிருந்தது. அதே மாதிரித்தான் இந்தக் காங்கேயம் கற்களும் இன்னும் கெடச்சுட்டுத்தானிருக்கு. ரோம் இல்லை. புகார் இல்லை. ஆனால் அந்த வணிகம் வேறு விதமா ஒரு சிறிய அளவில் நடந்துட்டுதான் இருக்கு... இதுவும் என்னோட ஆய்வோட ஒரு பகுதி. அந்தக் கற்கள் கிடைத்த இடங்கள் எப்படியிருக்கும், இன்னும் கிடைக்குதா எல்லாத்தையும் தான் நான் தேடறேன்..”

“அதனாலதான் எம்.என்.சி காரங்க உங்களுக்கு உதவறாங்களா?”

“ஸீ நவீன், நான் இல்லாமலேயே அவர்களால் அதைக் கண்டுபிடிக்க முடியும். ஆய்வுகளுக்கு உதவுவது ஒரு பேஷன்.... பெரும் பணக்காரர்கள் வீட்டில் எவ்வளவு கலைப் பொருட்கள் இருக்கு தெரியுமா?”

நவீனுக்கு இந்த பதில் திருப்தியளிக்க வில்லை. ஸ்ரீகுமாரை அலங்காரப் பொருளாக ஷோகேஸில் வைக்க அவர்கள் வரவில்லை என்று தோன்றியது. ஆனால் மேற்கொண்டு அதைக் கிளர விரும்பவில்லை.

“காலையில் எப்ப சார் கிளம்புறீங்க?”

“ஒரு பத்து மணிக்கு மெதுவா போலாம். என்ன அவசரம்”

அவர் ஒரு லுங்கியைக் கட்டிக் கொண்டு நீட்டிப் படுத்தார். காலையில் அவர் பிரிந்து போகப் போகிறார் என்றதும் நவீனின் மனதுக்குள் அவர் மீது இருந்துவந்த எதிர்ப்புணர்வு மறைந்து ஒரு மெல்லிய வருத்தம் தோன்றியது.

இந்த மனிதனுக்கு இதுபோல ஏதாவது இருக்கிறதா என்று நவீனால் கண்டு கொள்ள முடியவில்லை.

நவீன் காலையில் எழுந்த போது ஸ்ரீகுமார் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். சிகரெட்டை நீட்டினார். புதுப் பழக்கம். புகைத்து முடிந்ததும் நவீன் கேமராவை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

“ரிமோட்டை எடுத்துக் கொடுங்க” என்றார் ஸ்ரீகுமார்.

“முரசு டி.வி.யா”

“நானும் சரோஜாதேவியும்”

“போகும் போது மறக்காம பிரின்ஸிபல் அம்மா போன் நம்பர் கொடுங்க சார். கொஞ்சம் பேச வேண்டியிருக்கு”

அவர் சிரித்தபடி சேனல் மாற்றத் தொடங்கினார்.

வெளியே வந்த நவீன் முல்லையின் அறையை பார்த்தான். மூடியிருந்தது. இன்னும் எழவில்லை போலிருந்தது. படியிறங்கி தெருவில் நடக்கத் தொடங்கினான்.

வண்ணக்கற்கள் இயற்கையிலேயே அழகானவை. தனித்துவமானவை. கலையழகுமிக்கவை. அரிதானவை. தலைமுறை தலைமுறையாக நீடித்து நிற்கக் கூடியவை. எந்த நெருக்கடியிலும் விலை குறையாதவை. புதுப்புது வகைகள் கண்டுபிடிக்கப்படுவதால் அண்மைக் காலங்களில் இதன் மீதான ஆர்வம் அதிகரித்து வருகிறது.

ஹோர்லசார் ஜூவெல்லர்சின் இணையதளத்திலிருந்து

ஸ்ரீகுமார் ரூம் சர்வீஸை அழைத்து காபி கொண்டு வரச் சொன்னார். லாட்ஜில் காபி, சிகரெட், டிவியுடனான நிதானமான காலை வேளைகள் அவருக்கு மிகவும் பிடித்தமானவை. முல்லையும், நவீனும் வந்தபிறகு உணவருந்தப் போகலாம்... அதுவரை....

காதருகில் சார்... என்று இழுக்கும் முல்லையின் குரலை நினைத்ததும் அவரையறியாமலேயே இளநகை அரும்பியது. பழம் பெருமை மேல் தீராத காதல் கொண்டவர்கள் மீது அவருக்கு அவ்வளவு உயர்வான எண்ணம் கிடையாது. ஆனால் இந்தப் பெண்ணின் தீவிரப் பிடிவாதம் அவரை ஈர்க்கத் தொடங்கிவிட்டது. இவளிடம் பேசலாம். உரையாடுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று நினைத்துக் கொண்டார். மின்னஸோட்டாவில் இருக்கும் மகளின் நினைவு வந்தது. அவள் வேலைக்கும், குடும்பத்திற்கும் வெளியே கண்களையும், காதுகளையும் திறந்து வைத்து எதையாவது கவனித்தால், நான்கு வரி எழுதினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஏதேதோ எண்ணங்களில் மூழ்கியிருந்தவர் கதவைத் திறந்து ஒருவன் உள்ளே தலையை நீட்டியதை கவனமில்லாமல் பார்த்தார். யாரோ அறை மாறி வந்து விட்டார்கள் என்றுதான் அவருக்கு முதலில் தோன்றியது.

மடமடவென்று மூன்றுபேர் உள்ளே வந்ததும் திடுக்கிட்டு எழுந்தார். இருவர் வெள்ளை வேட்டி சட்டையிலிருந்தாலும் கரடுமுரடாகத்

தோன்றினார்கள். உயரமாக வழுக்கைத் தலையுடன் இருந்த ஒருவன் பேண்ட் சர்ட் அணிந்திருந்தான்.

வழுக்கைத் தலையன் நேராக ஸ்ரீகுமாரிடம் வந்து "ஒருத்தர் உங்களைப் பார்க்கணுன்னு வந்திருக்கார் வாங்க"

பேராசிரியர் திகைப்புடன் பார்த்தார். அந்த முகங்களில் ஒளிவு மறைவற்ற பகைமையும், வெறுப்பும் தெரிந்தன. அழைப்பில் கோரிக்கை தெரியவில்லை. ஏதோ கட்டளை போலத் தோன்றியது. அவருக்கு என்ன செய்யவதென்று தெரியவில்லை கத்தலாமா, தள்ளிவிட்டு வெளியே ஓட முயற்சி செய்யலாமா?

"போலாம்" ஒருவன் அவரது கையைப் பிடித்தான்.

இன்னொரு கையால் லேசாக உந்தித் தள்ளவும் செய்தான். ஏதாவது பிரச்சினை பண்ணினால் அவர்கள் தாக்கவும் தயங்க மாட்டார்கள் என்று தோன்றியது. வெளியே நிழலாடியது. 'நவீனா, இல்லை!' இவர்களுடன் வந்தவன் ஒருவன் காவலுக்கு நிற்கிறான். வேறு வழியில்லை என்று முடிவு செய்தார். இவ்வளவு நெருக்கத்தில் வெறுப்பு நிறைந்த பார்வைகளையும், முரட்டுத் தனமான தீண்டல்களையும் எதிர்கொள்வது அவருக்கு விசித்திரமாகத் தோன்றியது.

"சட்டை போட்டுக்கட்டா?"

"ம்"

ஏதாவது ஓரிடத்தில் இந்தக் கடத்தல் முயற்சி பிசுபிசுத்து விடும் என்ற எண்ணம் நிழலாடியது. தன்னைக் கடத்துகிறார்கள் என்பதே அவருக்கு விசித்திரமானதாகவும், நம்ப முடியாததாகவும் தோன்றியது.

அவர்கள் காரிடாரில் நடந்தார்கள். படியிறங்கினார்கள், ரிசப்ஷன் கடிகாரம் 6.30 மணி என்று காட்டியது. வெளியே வந்தார்கள். புரபஸர் கத்த வேண்டும். அவர் மனம் படபடத்தது. தள்ளிவிட்டு ஓடிவிடலாம் அல்லது வெறுமெனே கூச்சல் போட்டால் கூடப் போதும். இப்படி ஊர் நடுவே ஒரு ஆளைக் கடத்த முடியுமா?

சீக்கிரம்... யாராவது ஆட்கள் தென்படுகிறார்களா என்று

ஸ்ரீகுமார் பதட்டத்துடன் தேடினார். கார்ப்பார்க்கிங்கில் ஒரு ஈ காக்கை இல்லை. அவரது இனோவா தொலைவில் சாதுவாக நின்றிருந்தது.

ஒரு போலிரோ உரசினாற்போல வந்து நின்றது. டிரைவர் சீட்டுக்கு அருகே உட்கார்ந்திருந்த ஒரு மீசைக்காரர் தலையை நீட்டி "உள்ள ஏத்து" என்றார்.

அவ்வளவுதான் தப்புவதற்கிருந்த வாய்ப்புகள் அனைத்தையும் தான் இழந்துவிட்டதை உணர்ந்தார். அவர் திமிறி வெளியேற ஒரு பலவீனமான முயற்சி செய்தார். அவர்கள் அவரை நடுசீட்டில் திணித்து இருபுறமும் உட்கார்ந்து கொண்டனர்.

பொலீரோ சீறிக் கொண்டு கிளம்பி கரூர் செல்லும் சாலையில் பறக்கத் தொடங்கியது. யாராவது ஏதாவது பேசுவார்கள் என்று ஸ்ரீகுமார் எதிர்பார்த்தார். யாரும் எதுவும் பேசவில்லை. யாரும் பதட்டத்துடன் இருப்பது போலவும் தெரியவில்லை. மீசைக்காரருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். அவரது வெள்ளைச் சட்டை நிறம் மங்கிப் போயிருந்தது. முழங்கை வரை மடித்து விடப்பட்டிருந்த சட்டைக்குக் கீழே முறுக்கேறிய கரிய கைகள் தெரிந்தன. காதுகளில் முடி அடர்ந்திருந்தது. மீசைக்காரர் பீடிக் கட்டை எடுத்தார்.

ஸ்ரீகுமார் அவர் தோளைத் தொட்டார்.

"என்ன?"

"பீடி"

"பீடி குடிப்பீங்களா?"

மரியாதைப் பன்மை புரபஸருக்கு அந்த நிலையிலும் மகிழ்ச்சியளித்து. ஒரு பாதுகாப்புணர்ச்சியையும் கூடக் கொடுத்தது. "சிகரெட் பாக்கெட்டை மறந்துட்டேன்"

மீசைக்காரர் ஸ்ரீகுமாருக்கு ஒரு பீடியைக் கொடுத்துவிட்டு தான் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

"டென்ஷன் போலிருக்கு" பின்னாலிருந்து அமுங்கிய சிரிப்பொலி கேட்டது. மீசைக்காரர் சிரிக்கவில்லை. அந்த முகத்தில் இயல்பாகவே ஒரு கடுமை உறைந்து போயிருந்தது.

கார் மேற்கே தொடர்ந்து விரைந்து கொண்டேயிருந்தது. குளித்தலையைக் கடந்து கரூரை நெருங்கியது. சின்னச் சின்ன கிசுகிசுப்புகளைத் தவிர காரில் எந்த சத்தமும் இல்லை. ஸ்ரீகுமாரையும், முன்னால் உட்கார்ந்திருந்த மீசைக்காரரையும் தவிர யாரும் புகைப்பிடிக்கவுமில்லை. வண்டி கரூரைத் கடந்தது. ஒரு நெடுஞ்சாலையோர ஓட்டலில் நிறுத்தி இரண்டிரண்டு பேராகச் சென்று உணவருந்திவிட்டு வந்தார்கள்.

"வாத்தியார் கேட்டதை வாங்கிக்குடு" என்றார் கிருஷ்ணசாமி .

சாப்பிட்டதும் பொலீரோ மீண்டும் கிளம்பியது.

"நம்ம எங்க போறோம்?" ஸ்ரீகுமார் மீசைக்காரரிடம் கேட்டார்.

"போகவேண்டிய எடத்துக்குத்ததான்"

"ஏதாவது சொல்லுங்க. எதுக்கு இப்படி? நான் ஒரு காலேஜ் புரொபஸர். என்னை எதுக்கு இப்படி புடிச்சிட்டு போயிட்டிருக்கீங்க?"

கிருஷ்ணசாமி திரும்பி ஸ்ரீகுமாரின் முகத்தை நேராகப் பார்த்தார். ஸ்ரீகுமார் அவர் கையிலிருந்த பீடிக்கட்டிலிருந்து உரிமையுடன் ஒரு பீடியை உருவி எடுத்துக் கொண்டார்.

"வாத்தியார் வேலையை ஒழுங்கா பாத்திட்டிருந்தா நாங்க ஏன் இந்த வேலையை செய்யப்போறோம். வெள்ளைக்காரனோட சேர்ந்திட்டு எங்க கல்லிருக்குது, கம்பியிருக்குதுன்னு தேடினா, அதிலிருக்கிறவன் வயித்திலடிக்கணும்ன்னு நினைச்சா..." அவர் வாக்கியத்தை முடிக்கவில்லை.

ஸ்ரீகுமாருக்கு ஏதோ புரிவது போலிருந்தது. இவர்கள் ஏதாவது ஏகாத்திபத்திய எதிர்ப்பு தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களா என்ற சந்தேகம் தோன்றியது. நவீன் வேலையாக இருக்குமோ என்றுகூட நினைத்தார்.

ஆனால் லேசாக வீசிய பிராந்திவாடை, முரட்டு கிராமத்து உருவங்கள் அப்படியில்லை என்று நினைக்க வைத்தது.

அப்படியானால் இவர்கள் யார்?

தமிழ்நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மாவோயிஸ்ட்

இயக்கம் இயங்குவதாக படித்திருந்தாலும் இது அவர்களில்லை என்று புரொபஸருக்குத் தோன்றியது. அவர் மனதிலிருந்த கோபக்கார படித்த இளைஞர்கள் என்ற நக்ஸலைட் பிம்பத்திற்கும், இந்த நபர்களுக்கும் ஒத்தே போகவில்லை.

புரொபஸர் முதுகில் ஒரு சிலிர்ப்பு ஓடியது. நக்ஸலைட்டுகளாக இருந்தால் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தானோ, தன் சார்பில் அரசோ, மற்றவர்களோ பேசக் கூடும். வாயே திறக்காத இந்த முரட்டு கும்பல் என்ன செய்யுமோ, லாட்ஜிலேயே கத்தி கூச்சல் போடாததற்குத் தன்னை நொந்து கொண்டார்.

நவீனும், முல்லையும் என்ன செய்வார்கள்? தன்னை அலட்சியப்படுத்திவிட்டு தங்கள் வழியே போவார்களா? அல்லது தேட ஏதாவது முயற்சி செய்வார்களா? கட்டாயம் செய்வார்கள். ஆனால் எங்கே, எப்படி, என்னவென்று தேடுவார்கள்?

டிரைவர் சுப்பிரணியம் தங்கள் மேலிடத்திற்குத் தகவல் கொடுத்தால் அவர்கள் ஒருவேளை ஏதாவது செய்யலாம். ஸ்ரீகுமார் தனக்கு பக்கத்தில் இருப்பவனை தள்ளிவிட்டு விட்டு தானும் வெளியே குதிக்கலாமா என்று நினைத்தார். 120 மைல் வேகத்தில் விரைந்து கொண்டிருக்கும் கார்!. தனது தோள்பட்டையோ, இடுப்போ அசுர வேகத்தில் தார்சாலையில் மோதுவதை நினைத்ததுமே அவருக்கு இடது தோள்பட்டை வலிப்பதுபோலத் தோன்றியது. சாத்தியமேயில்லை... பார்க்கலாம்.

கண்ணுக்குகெட்டிய தூரம் வரை வறண்ட நிலங்கள் வந்து கொண்டேயிருந்தன. வண்டி கோவை திருச்சி சாலையிலிருந்து வடக்கே திரும்பி காங்கேயத்தையும் கடந்து பறந்தது. பாதையோரம் காரை பூசிய தளமும், சுண்ணாம்படித்த சுவர்களும் கொண்ட கிராமத்துக் கடைகளும், நீண்ட கருங்கல் மதில் சுவர் கொண்ட பெரிய வீடுகளும், மில் போன்ற கட்டடங்களும் விடாமல் வந்து கொண்டேயிருந்தன. ஸ்ரீகுமார் அது ஓரத்துப்பாளையம் அணைக்குப் பின்புறமாகக் கொடுமணலைக் கடந்து ஊத்துக் குளி செல்லும் பாதை என்று கண்டு கொண்டார். தமிழ் நாட்டிலுள்ள எல்லா அகழ்வாராய்ச்சி நிபுணர்களையும் போலவே ஸ்ரீகுமாரும் கொடுமணலுக்கு வந்திருக்கிறார். எனவே இந்த இடத்தை

அவரால் சந்தேகத்திற்கிடமில்லாமல் அடையாளம் காண முடிந்தது. . . இதுபோல வேறொரு பகுதி தமிழகத்தில் இல்லை.

சாலையின் இருபுறமும் தெரிந்த நிலங்களைச் சுற்றி நெருக்கமாக வளர்க்கப்பட்ட மரங்களைக் கொண்டு வேலியமைக்கப்பட்டிருந்தது. சிலவற்றில் சோளம் பயிரிடப்பட்டிருந்தது. பெரும்பாலான வேலியிடப்பட்ட நிலங்களில் புற்களும் அவற்றுக்கு நடுவே வளர்ந்திருந்த வெள்ளை வேலாமரங்களும் மட்டுமே காணப்பட்டன. ஒவ்வொரு புல்வெளியும் இரண்டு மூன்று ஏக்கர் அளவிற்கு பரந்து விரிந்திருந்தது. இந்தப் புல்வெளிகள் ஆடுமாடுகள் வளர்க்கப்படும் பட்டிகள். காங்கேயம் கால்நடை வளர்ப்புக்கு பெயர்போன இடம் அல்லவா? இந்தப் பகுதியில் ஒவ்வொரு விவசாயியும் தனது நிலங்களில் ஒருபகுதியை இப்படி கால்நடை வளர்ப்பதற்கு ஒதுக்குவது வழக்கம். ஒருகாலத்தில் இந்தப் பட்டிகளில் எண்ணற்ற கம்பீரமான காங்கேயம் காளைகள் சுற்றித் திரிந்தன. இப்போது பெரும்பாலான புல்வெளிகளில் ஒருசில ஆடுகள் மட்டுமே மேய்ந்து கொண்டிருந்தன.

ஓரிடத்தில் ஒரு ஜெ.சி.பி. இயந்திரம் நின்று கொண்டிருந்தது. அருகில் ஒரு சிறு மைதானம் அளவுக்குக் குழி தோண்டப்பட்டு கல்லும் மண்ணும் குன்றாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன. நிலத்தை புரட்டிப் போட்டு கல் தேடுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டார். இங்கு அள்ள அள்ளக் குறையாமல் கிடைக்கும் வெங்கச்சகற்களுக்கு விலை உண்டு. அவற்றை சிறு மணிகளாக மெருகேற்றி விற்பார்கள் அல்லது பெரிய கற்களில் சிற்பங்கள் செய்வார்கள். ஆனால் தோண்டுபவர்கள் இதற்காகத் தோண்டுவதில்லை. இந்த கற்களுக்காக எதற்கு தோண்ட வேண்டும்?. அவைதான் தரை மட்டத்திலேயே ஏராளமாகக் கிடைக்கிறனவே. மாணிக்கம், மரகதம் கோமேதகத்திற்காகத் தான் தோண்டுகிறார்கள். தரை மட்டத்தில் அப்படி ஏதாவது கல் கிடைத்திருக்கும். எனவே உள்ளே நிறைய கல் இருக்கும் என்று நினைத்துத் தோண்டுகிறார்கள் போலிருக்கிறது. கிடைத்தால் புதையல். இல்லாவிட்டால் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு போகவேண்டியது தான்.

இந்த குவாரிக்கு அருகில் வேலி ஓரத்தில் நாலைந்தடி சுற்றளவு

கொண்ட மிகப்பெரிய கருப்பு நிற உருண்டைக் கற்கள் சில உருட்டித் தள்ளப்பட்டிருந்தன. அதைக் கண்ட பேராசிரியர் துடித்துப் போனார். காயிர்ன் சர்க்கிள்களில் இருந்த கற்கள்! இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புதைகுழிகளில் இருந்தவை. தமிழில் இந்தப் புதை குழிகளை வட்டக் கல் புதைகுழிகள் என்பார்கள். அந்த காலங்களில் இறந்தவர்களை தாழிகளில் வைத்து புதைத்து அவற்றைச் சுற்றி பல பெரும் பாறைகளை உருண்டையாகச் செதுக்கி வட்டமாக மண்ணில் புதைத்து வைப்பார்கள். இந்த வட்டங்கள் இருபது முப்பது அடி விட்டமுடையவையாக இருக்கும். இந்த புதைகுழிகள் மனிதன் புது கற்காலத்திலிருந்து இரும்பு காலத்திற்கு மாறியதை காட்டும் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

இரும்பு உளிகள் பயன்பாட்டுக்கு வந்ததும் மனிதனால் கற்களைச் செதுக்கவும் பிளக்கவும் தன் விருப்பப்படி மாற்றியமைக்கவும் முடிந்தது. இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் இக்குழிகளில் அவர்கள் பயன்படுத்திய பொருட்களும் சேர்த்துப் புதைக்கப்படும். தமிழகம் முழுவதும் இத்தகைய காயிர்ன் சர்க்கிள்கள் இருந்தாலும் கொங்கு பகுதியில் தான் அதிகம். கொடுமணலைச் சுற்றியுள்ள இந்த குழிகளில் ஏராளமான வேலைப் பாடு மிகுந்த பச்சை நீல கல் மணிகளும் ஆப்கானிஸ்தான், குஜராத்திலிருந்து கொண்டுவரப்பட்ட சிவப்பு மணிகளும் கண்டெடுக்கப்பட்டன. இந்த குழிகளில் தான் அக்கால மக்களில் வாழ்க்கை முறைகளைக் கண்டுபிடிப்பதற்கான அடையாளங்கள் தங்கி இருக்கின்றன. ஒவ்வொரு புதைகுழியும் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம். பேராசிரியருக்கு அவரது நிலைமை மறந்துபோய் நெஞ்சு வலிப்பது போன்ற வேதனை உண்டானது. அடுத்த தலைமுறை இங்கே இது போன்ற கற்குழிகள் இருந்தன என்பதைப் புத்தகங்களில் தான் படிக்கப் போகிறது!.

இந்த இடத்திற்கு சுமார் ஐம்பது கிலோமீட்டர் தெற்கே பெதப்பம்பட்டி என்ற கிராமத்தருகே பரம்பிக்குளம் ஆழியாறு பாசன வாய்க்கால் ஓரம் இருபது முப்பது காயிர்ன் சர்க்கிள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. கூகுள் எர்த்தில் பார்த்தாலே தெரியும் அளவிற்குப் பெரும் நிலப்பரப்பில் பரவியிருந்தன இந்த வட்டக் கல்

புதைகுழிகள்.

ஸ்ரீகுமார் ஒருநாள் நிதானமாக அங்கே சென்று பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்தார். அவையும் இதே போலப் புரட்டித் தள்ளப்பட்டிருக்குமா? உள்ளிருந்த தாழிகளாவது மிஞ்சியிருக்குமா? கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு இந்தத் தாழிகளை மிகவும் பிடிக்கும். அவை எளிதில் உடைவதில்லை என்பார்கள்.

மேற்குத் தொடர்ச்சி மலையோரமாக கோவையிலிருந்து மதுரை ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் பாதையும், காங்கேயம், பழனி வழியாகச் செல்லும் பாதையும் பல ஆயிரம் ஆண்டுகளாக கால்நடை மேய்ப்பவர்கள் போய்வந்த பாதைகள். கொடுமணல் பெரிய வணிகத்தலம் என்றாலும் கால்நடை மேய்ப்பவர்களும் இந்த வழியைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்தப் பாதை நெடுக இத்தகைய புதை குழிகளும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய இடையர்கள் விட்டுச் சென்ற அடையாளங்களான சாணத்தை எரித்த சாம்பல் மேடுகளும் நிறைய இருக்கின்றன. சாம்பல் களம் அல்லது சாமக்குளம் என்ற பெயருடைய ஊர்களை அடிக்கடி இங்கே காணலாம்.

இந்த வட்டக் கல் புதை குழிளைப் போலவே ஆளுயரக் கற்களைப் பலகை போல அறுத்து நான்குபுறமும் சுவர்போல வைத்து மேலே ஒரு கற்பலகையை வைத்து மூடியும் புதை குழி அமைப்பார்கள். இதை டால்மன் அல்லது கற்பதுகைகள் என்பார்கள். கல்லறை என்ற சொல்லே இதிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். இந்த வகைப் புதை குழிகள் இந்தப் பாதையோரமும் கிருஷ்ணகிரி, ஆனைமலையோரமும் ஏராளமாக இருந்தன. இவை தொண்ணூறு சதம் இப்போது அழிக்கப்பட்டுவிட்டன. காரணமே இல்லாமல் கூட இந்தக் கற்பலகைகள் பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன. . . இப்போது இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளாகத் தாக்குப் பிடித்த வட்டக் கற்குழிகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. டிராக்டர் ஓட்டும் விவசாயிக்கு வயலுக்கு நடுவே இருக்கும் இந்தக் கற்கள் இருப்பது இடைஞ்சலாகத்தானிருக்கும். அவர்கள் அப்புறப்படுத்தத்தான் விரும்புவார்கள். அரசுதான் விழிப்புணர்வு ஏற்படுத்தி ஏதாவது சன்மானம் கொடுத்து பாதுகாப்பு செய்து வைக்க வேண்டும் . . .

தஞ்சைப் பெரிய கோவிலைப் போலவே வரலாற்றுக்கு முந்தைய இந்தச் சின்னங்களும் முக்கியமானவைதானே? மற்ற நாடுகளில் இவற்றையும், குகை ஓவியங்களையும் எப்படிப் பாதுகாக்கிறார்கள்!

இவற்றையெல்லாம் அரசு அடியோடு அலட்சியம் செய்துவிட்டது. காப்பாற்ற ஒரு சிறு முயற்சி கூடச்செய்யவில்லை. இவற்றுக்கு வரலாற்றுச் சின்னங்கள் என்ற அந்தஸ்து கொடுக்கவே இல்லை. மன்னர்கள் கட்டிய கோவில் குளங்கள்தான் அவர்களுக்கு எல்லாம். மற்ற நாடுகளில் எல்லாம் இந்த மாதிரி வரலாற்றுக்கு முந்தைய சின்னங்களுக்கு எவ்வளவு மரியாதை கொடுக்கிறார்கள்? லண்டன் ஒலிம்பிக்ஸே இத்தகைய ஒரு பெருங்கற்கால கற்பதுகைப் புதைகுழி அருகேதான் தொடங்கப்பட்டது. இன்னும் கொஞ்ச நாட்களில் இந்தப் பழம் கல்லறைகள் எதுவும் மிஞ்ச்சியிருக்காது. பொறுப்பற்ற அரசுதான் கண்டுகொள்ளவில்லை என்றால், தான் உள்ளிட்ட தொல்பொருள் அறிஞர்களும் இவற்றைப் பாதுகாக்க எந்த முயற்சியும் செய்யவில்லை, இவை அழிகின்றன என்ற கூச்சல் கூடப்போடவில்ல என்ற குற்ற உணர்ச்சி அவருக்குள் தலை தூக்கியது.

வெப்பமான காற்று மெதுவாகத் தடவிச் சென்றது. வண்டியில் கூட சற்று இறுக்கம் குறைந்துவிட்டது போலத் தோன்றியது. சாலையை கடந்த மயில்களுக்கு வழிவிட்டு டிரைவர் மெதுவாகச் சென்றான். வயல்களில் நிறையப் பாம்புகளும் எலிகளும் இருக்கும் போலிருக்கிறது.

சுண்ணாம்பு அடிக்கப்பட்ட பெரிய ஓட்டுக் கூரை கட்டங்களைக் கடக்கும் போது கும்மென்று தேங்காய் எண்ணெய் வாசம் அடித்தது.

தார்சாலையில் சென்று கொண்டிருந்த வண்டி ஒரு வறண்டு போன ஓடையோரம் தெரிந்த மண் பாதையில் திரும்பியது. மழையையே காணாத மண் இறுகி வெள்ளை நிறமாக மாறிவிட்டிருந்தது. பாதையில் புதைந்திருந்த கற்களின் மீது கடகடத்துச் சென்ற கார் ஒரு நீளமான வீட்டின் முன் நின்றது. அந்த வீடு சுமார் 80, 90 அடி நீளம் இருக்கும். இவ்வளவு நீளமா என்று ஸ்ரீகுமார் வியந்தார். அங்கே மட்டும் ஒரு சிறிய பசுமைத் திட்டு காணப்பட்டது. சில தென்னை மரங்கள், வீட்டு உபயோகத்திற்காக ஒரு முருங்கை மரம், கருங்கல்லால் கட்டப்பட்ட

பிரம்மாண்டமான கிணறு . . சில கோழிகள்.... பின்புறம் பட்டியில் ஆடுகள் மேய்ந்து கொடிருந்தன. புற்கள் பெரும்பாலும் பழுப்பேறியிருந்தன. இந்தப் புல்வெளியில் மாலை நேரக் காற்றில் உட்கார்ந்து புகைப்பிடிக்க பேராசிரியர் எதை வேண்டுமானாலும் கொடுத்திருப்பார்.

வண்டியிலிருந்து இறங்கியவர்கள் பேராசிரியருக்குக் கிணற்றுக்கு பின்னே சென்று சிறுநீர் கழிக்கச் சிறிது நேரம் அளித்து விட்டு ஒரு அறையில் தள்ளிப் பூட்டினர்.

‘அடிச்சு கிடிச்சு போடாதே’ என்று மீசைக்காரர் சொன்னது அவரது காதில் விழுந்தது.

14

ஏழு மணிக்கு நவீன் வந்த போது முல்லை அவனது அறையில் உட்கார்ந்திருந்தாள். "எங்கே போயிட்டீங்க இரண்டு பேரும்?"

"ஏன் பெரிசு இருந்ததே?" நவீன் பாத்ரூம் கதவைப் பார்த்தான்.

"காலைல வழக்கம்போல அம்மாவுக்குப் போன்பண்ணிட்டு நான் வரும் போது கதவு திறந்து கிடந்தது. அவரைக் காணோம். உன்னையும் காணோம். போன் செய்யலாமான்னு யோசிச்சுட்டே இருந்துட்டேன்"

"எங்காவது போயிருப்பார். வந்திடுவார். சிகரெட் வாங்க இல்லாட்டி வாக்கிங், சுப்பிரமணியத்துகிட்ட பேசக்கூட போயிருக்கலாம். அவன் இங்கே படுத்துட்டு ஆறு மணிக்குதான் காருக்குப் போனான்."

முல்லைக்கு ஸ்ரீகுமாரிடம் பேச எவ்வளவோ இருந்தது. அவர் மதுரையில் சில முகவரிகள் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார். அதைத் தவிரவும். . . இந்த இரண்டு மூன்று நாட்களில் அவள் அவரோடு மனதளவில் மிகவும் நெருங்கிப் போயிருந்தாள். ஏதோ ஒரு வேகத்தில் ஆவணப்படம் எடுக்கக் கிளம்பிவிட்டாளே தவிர புகார் வந்து இறங்கியதும் சற்று திகைத்துத்தான் போனாள். ஸ்ரீகுமாரின் அண்மைதான் அவளுக்கு நம்பிக்கையளித்தது. புதிய பார்வைகளைத் அளித்தது. ஏதோ ஒருவிதத்தில் அவரை அப்பாவோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே இருந்தாள். எந்தவிதத்திலும் இருவருக்கும் ஒற்றுமை இல்லை. அப்பா தொந்தி, வழுக்கை சகிதம் வங்கி மேலாளர் போலவே இருப்பார். அப்பாவின் பார்வையும் ஸ்ரீகுமாரின் பார்வையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. அப்பாவிடம் ஒரு புல்லரிப்பு இருந்து கொண்டே இருக்கும். இவர் நிதானமாக ஆய்வுபூர்வமாகப் பேசுகிறார்.

அவரில்லாமல் பயணத்தைத் தொடர்வது அவளுக்கு மலைப்பாக இருந்தது. எனவே முடிந்தவரை அவரிடம் இனி தொடர உள்ள பயணம் குறித்த தனது சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அதோடு அவர் மீதான தனது நன்றியுணர்வை நேரடியாக வெளிப்படுத்த

வேண்டும். நவீன் பேசியதற்கு மன்னிப்புகூடக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்திருந்தாள். இப்போது தாமதமாக ஆக அவசர கோலத்தில் விடை பெற்றுக் கொள்ள வேண்டியிருக்குமோ என்ற பதட்டம் தொற்றிக் கொண்டது. எங்கேதான் போய்விட்டார்?

"வரட்டும். இதுவரை எடுத்ததைக் காமி" என்றாள் முல்லை நவீனிடம். இருவரும் லேப்டாப்பில் ஆழ்ந்து போய்விட்டனர். எட்டரை மணிக்கு சுப்பிரமணியம் வந்து ஸ்ரீகுமார் எங்கே என்று கேட்ட போதுதான் நேரம் போனது தெரிந்தது. இருவருக்கும் ஏதோ சரியில்லை என்ற எண்ணம் தோன்றத் தொடங்கியது. முல்லை அவருக்குப் போன் செய்தாள். அவரது செல்போன் அறைக்குள்ளேயே ஒலித்தது. அவரது பை, பேண்ட் எல்லாமே அங்கேயே இருந்தன. பர்ஸ்கூட. செல்லைக் கூட எடுத்துக் கொள்ளாமல் லுங்கியோடு எங்கே போயிருப்பார்?

'அவர் அப்படித்தான்" என்றான் சுப்பிரமணியம். "ஒரு வாரமா பட்டிக்காட்டிலேயே இருந்தாரில்ல, திருச்சி வந்ததும் யாரையாவது பார்க்கப் போயிருப்பார்."

இருவருக்கும் பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. மனதே இல்லாமல் ரெஸ்டாரண்டில் கிடைத்ததை அள்ளிப் போட்டுக் கொண்டார்கள். மணி பத்தையும் தாண்டிவிட்டது. ஸ்ரீகுமார் வரும் சுவடே இல்லை. சுப்பிரமணியம் மேலும் கீழும் அலை பாய்ந்து கொண்டிருந்தான். நவீன் அவரது செல்லை எடுத்து திருச்சி எண் என்று ஏதாவது இருக்கிறதா என்று கண்டு பிடிக்க முயன்றான். ரிசப்ஷனில், வாட்ச்மேனிடமும், மற்ற ஓட்டல் சிப்பந்திகளிடமும் விசாரித்தான். ஒருவன் அவர் நாலைந்து பேரோடு ஒரு பொலிரோவில் போனதாகச் சொன்னான். நவீனுக்குக் கருக்கென்றிருந்தது. பேண்ட் போடாமல் செல்லை எடுத்துக் கொள்ளாமல் . . . ஏதோ தோன்ற ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கார்பார்க்கிங்கை நோக்கிப் பாய்ந்தோடினான். எதுவும் புரியாமல் முல்லையும் பின்னே விரைந்தாள்.

நவீன் நேராக சுப்பிரமணியத்திடம் சென்று அவன் சட்டையைப் பிடித்தான். "நீ அவரைப் பத்தி யாருக்கோ தகவல் சொன்னயில்ல அது

யாரு?"

சுப்பிரமணியம் இதை எதிர்பார்க்கவில்லை. தடுமாறிபோனான். நவீனின் பிடி கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்தது. "விடு . . .விடு . . ." என்று குளறினான். நவீனின் கண்களில் தெரிந்த தீவிரம் அவனை பதிலுக்கு முரட்டுத் தனம் காட்டவிடாமல் செய்தது. "விடுங்க சார்" என்று கெஞ்சத் தொடங்கினான். முதலின் திகைத்துப் போன முல்லை "விடு நவீன்" என்று அவன் கையைப் பிடித்து விலக்க முயன்றாள். அதற்குள் பக்கத்தில் நின்றிருந்த ஓரிருவர் அருகில் வரத் தொடங்கினர். கூட்டத்தைப் பார்த்து நவீன் பிடி கொஞ்சம் தளரவே சுப்பிரமணியம் தன்னை விடுவித்துக் கொண்டான். அவனுக்கு பிரச்சினை என்னவென்று புரிந்துவிட்டது. ஏதோ தப்பு நடந்துவிட்டது. தான் ஏடாகூடமாக மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது என்ற நிலை வந்ததும் பயந்து போனான்.

முல்லையிடம் முறையிடத் தொடங்கினான். "ஐயாவுக்கு கம்பெனி பணம் கொடுக்குதுங்க மேடம். கம்பெனிக்காரங்க அவர் எங்கே போறார் வர்றார்ங்கறதை, காசுக்கு ஒழுங்கா வேல செய்யராரா இல்லியாங்கறதை பார்த்துச் சொல்லச் சொல்றாங்க. அதான் போன் பண்ணிச் சொன்னேன். என்னங்க தப்பு?"

"யாருக்கு போன் பண்ணினே?"

"வேற யாருக்கு சார்?. எங்க மேனேஜருக்குத்தான்" நவீன் அவன் செல்லைப் பிடுங்கி போன் செய்த நேரத்தைச் சரிபார்த்தான். மேனேஜர் என்றுதானிருந்தது. டிரைவர் சொல்வது மிகவும் சரியானதாகவும், இயல்பானதாகவும் தோன்றியது. வெறுப்புடன் செல்லை கொடுத்துவிட்டு நகர்ந்தான். முல்லை அவன் கையை பிடித்து இழுத்தாள். "வா ரூமுக்குப் போய் பேசிக்கொள்ளலாம்"

நவீன் டிரைவரை கோபம் குறையாமல் பார்த்து எச்சரிக்கும் தொனியில் சொன்னான். "உங்க கம்பெனிக்குப் போன் செய். அவரைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யணும். இல்லாட்டி உன் மேலதான் போலிஸ்ல கம்ளைண்ட் கொடுப்பேன்"

அறைக்குப் போகும் போது இது போலிஸ் வரைக்கும் போகும் என்று முல்லையால் நம்ப முடியவில்லை. அறையில் அவர் உட்கார்ந்திருப்பார் என்று நினைத்தாள். செல்லமாக ஒரு திட்டுத் திட்ட வேண்டும். . . ஆனால் அறை அவர்கள் விட்டுச் சென்ற விதத்திலேயே இருந்தது. ஸ்ரீகுமார் இல்லை. இந்த நிலையில் மதுரை செல்லும் பேச்சுக்கே இடமில்லை. பிரச்சினை சீரியஸாகிக் கொண்டிருக்கிறது. ஏதாவது செய்ய வேண்டும். வேறு வழியே இல்லை, போலிஸுக்குப் போகத்தான் வேண்டும்.

சுப்பிரமணியம் கம்பெனிக்குப் போன் செய்தான். விஷயத்தைக் கேட்டு திகைத்துப் போன மேனேஜர் சிறிது நேரத்தில் அழைப்பதாகக் கூறி அழைப்பைத் துண்டித்தான். யுகங்களாகக் கடந்த இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பிறகு செல்போன் ஒலித்தது. "ஒரு நிமிடம் கூட வேஸ்ட் பண்ணாதே. வண்டியை எடுத்துட்டு அங்கிருந்து கிளம்பிடு. நேரா ஆபீசுக்கு வந்துடு". சுப்பிரமணியம் அந்த நொடியில் முழு மனதுடன் செய்யத் துடித்ததும் இதேதான்.

ஆயிரம் கிலோமீட்டருக்கு அப்பால் இருந்த நரசிம்மன் ,'தொடங்கிவிட்டது' என்று நினைத்தார். எல்லாமே ரொம்ப எளிதாக இருக்கிறது என்று நினைத்தது எவ்வளவு தப்பு. மிகவும் நேரடியாக நெளிவு சுளிவு இல்லாமல் நடந்து கொண்டோமோ என்று அவருக்குத் தோன்றியது. இந்தப் பேராசிரியரின் கடத்தலால் கிடைக்கப் போகும் எதிர்மறையான விளம்பரம் அவரை சங்கடப் படுத்தியது. திட்டங்கள் தடம் புரள்வது எவ்வளவு சிக்கல்களை உண்டாக்கும் என்பது அவர் அனுபவத்தில் அறிந்ததுதான். எல்லாவற்றையும் முதலிலிருந்து தொடங்க வேண்டியிருக்கும்.

ஸ்ரீகுமாரைக் கடத்தியது யாராக இருக்கும்? ஜெய்ப்பூர் வியாபாரிகளா அல்லது உள்ளூரில் கல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள யாராவதா? பி.ஆர். ஓ.வுக்குப் போன் செய்து கரூர், காங்கேயம், திருப்பூர், கோவையில் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார் யார், அவர்கள் தொடர்பு என்ன என்று விசாரிக்கச் சொன்னார். பிரச்சினை வரும் என்பது ஓரளவுக்கு அவருக்குத் தெரியும் தான். ஆனால் இவ்வளவு சீக்கிரம் இந்த விதத்தில்

வரும் என்று எதிர்பார்க்கவில்லை. ஒருவிதத்தில் இது நல்லதுதான். ஸ்ரீகுமார் விஷயத்தில் கம்பெனி தப்பித்துக் கொள்ள முடியும். வேறு யாராவது கம்பெனியோடு நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்கள் என்றால் சிக்கலாகப் போயிருக்கும்.

இந்த முரடர்கள் ஏதாவது அவசரப்பட்டுச் செய்து தொலைக்காமல் இருக்க வேண்டுமே? தமிழகத்தில் உள்ள தொடர்புகளில் யாரைப் பயன்படுத்தலாம் என்று மனதுக்குள் துழாவியபடி புருவங்கள் நெறிய ஈரமான புல்தரையில் நரசிம்மன் மேலும் கீழும் நடை போடத் தொடங்கினார்.

15

கிருஷ்ணசாமி பீடிக்கட்டை எடுத்து தனக்கு மூன்று நான்கு பீடிகளை வைத்துக் கொண்டு மீதியை ஸ்ரீகுமாரிடம் கொடுக்கச் சொல்லி ஒருவனை அனுப்பிவைத்தார். பின்பு கிணற்று மேட்டில் உட்கார்ந்து ஒரு பீடியை பற்ற வைத்துக் கொண்டார். விடுவிடுவென்று அவரை நோக்கி நடந்து வந்த ஒரு பெண் எதிரே நின்று இடுப்பில் கை வைத்து முறைத்தாள்.

அந்தப் பொன்னிற முகம் அமைதி தவழ்வதாகவும், இனிமையானதாகவும் இருந்திருக்கும். இப்போது அதில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

ஓங்கி ஒரு அறைவிடலாமா என்று நினைத்தவர் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

அவள் கடுங்கோபத்துடன் அவரை உற்றுப்பார்த்தபடி "யாரந்த ஆளு? எதுக்கு அடைச்சு வெச்சிருக்க?" என்றாள்.

கிருஷ்ணசாமி அமைதியாக எழுந்து பளீரென்று ஒரு அறை விட்டார். தடுமாறி நகர்ந்தவளின் பிடரியில் இன்னொரு அறை விட்டார்.

"ஓடீரு" என்று அடிக்குரலில் உறுமினார். அவள் பெருங்குரல் எடுத்து கத்தத் துவங்கினாள்.

"ஆமா, யாரோ ஆபீசரைக் கொண்டு வந்து கொன்னு போட்டுட்டு நீ ஜெயிலுக்கு போயிருவே, இல்ல தூக்கில தொங்கிடுவே, எங்கதி என்னாகிறது? உம்பசங்க எனக்கு சோறு போடுவாங்கன்னா நெனக்கிற? இப்பவே தொறந்து வுடு அந்தாள"

கிருஷ்ணசாமியால் அவள் பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை. அடிப்பதற்கு கட்டை ஏதாவது கிடைக்குமா என்று தேடினார். இல்லாமல் போகவே காலில் போட்டிருந்த டயர் செருப்பை எடுத்து அவள் மீது வீசியெறிந்தார். ஆட்கள் சத்தம் கேட்டு நெருங்கி வந்து இறுகிய முகத்துடன் தலையிடாமல் நின்றார்கள்.

அவளும் ஒரு நிமிடம் பேசவில்லை. எங்கோ ஒரு காக்கை கரைந்தது. தொலைவில் தெரிந்த மேட்டுக்கப்பால் ஏதோ இருசக்கர

வாகனம் செல்லும் சத்தம் கேட்டது.

சுற்றிலும் இருந்தவர்களின் முகங்களில் 'எப்படியாவது இந்த கூச்சலை நிறுத்து' என்ற பாவமே தெரிந்தது. அவள் தானாகக் கத்துவதை நிறுத்திவிட்டு அமைதியாக நடந்து வந்து அவரது கையைப் பிடித்துக் கொண்டாள்.

"இது வேண்டா, தோட்டந்தொரவில வேலை செய்யறவங்களை வேலை தீர்த்து குவாரியில போடற மாதிரி இல்ல. யாரோ பெரிய மனசனாட்டா இருக்குது. எல்லாரும் உன்னை கைகாட்டிட்டு தப்பிச்சுக்குவாங்க. தொறந்து விட்டிரலாம்." அந்தக் குரலிலிருந்த அசாதாரணமான கெஞ்சல் அவரை என்னமோ செய்தது.

ஏற்கெனவே குழம்பியிருந்த கிருஷ்ணசாமியின் மனம் இன்னமும் குழம்பிப் போனது.

ஆட்களுக்கும் பயம் தொற்றிக் கொள்வதற்குமுன் சூழ்நிலையை மாற்ற வேண்டும். இப்போதைக்கு அதுதான் முக்கியம் என்று தோன்றியது.

'பேசக் கூடாது, பேசினால் தன் இவளுக்கு பலவீனம் தெரிகிறது.' என்று நினைத்தபடி அவள் கழுத்தில் கைவைத்து ஒரு தள்ளு தள்ளிவிட்டு கூடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

ஒருவிதத்தில் அவள் சொல்வது சரிதான். மற்றவர்கள் எல்லோரும் பெரிய இடத்துத் தொடர்புகள் உள்ளவர்கள். மூட்டை மூட்டையாக கற்களை ஷோரூமிலேயே அடுக்கி வைத்திருப்பவர்கள். சினிமாவிலிருந்து பல்வேறு தொழில்களில் கால் வைத்திருப்பவர்கள். ஐயா ரியல் எஸ்டேட் முதல் கல்வி வரை பல்வேறு வியாபாரங்களில் கொடிகட்டிப் பறப்பவர். ஆனால் அவருக்கு இந்தக் கல் விஷயத்தில்தான் நிறையப் பணம் வந்து கொண்டிருந்தது. தவிர தன்னுடைய பகுதியில் தனக்கு தெரியாமல் ஏதோ ஒரு கம்பெனி புகுந்து என்னென்னவோ சித்து வேலைகள் செய்வதில் உடன்பாடில்லாமல்தான் அவர் கிருஷ்ணச்சாமியை இந்த வேலையில் இறக்கிவிட்டிருந்தார்.

ஐயா நினைப்பது சரிதானே! இந்த ராட்சஸ நிறுவனம்

ஜாதிக்கல்லில் கவனம் செலுத்துகிறது என்றால் அது பிரச்சனைக்குரியதல்லவா? எல்லாவற்றையுமே அது கபளீகரம் செய்துவிடும். எல்லோருடைய பிழைப்பிலும் மண்ணை அள்ளிப் போட்டுவிடும். ஏதாவது செய்யத்தான் வேண்டும். யாராவது செய்துதானே ஆகவேண்டும்!.

தகவல் வரும்வரை ஸ்ரீகுமாரிடம் எதுவும் பேசக்கூடாது என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் அதையும் மீறி அவரிடம் பேசிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை கிஷ்ணசாமிக்குத் தோன்றியது.

ஸ்ரீகுமாரை அடைத்திருந்த அறை நன்றாகத்தானிருந்தது. ஈஸிசேர் போலிருந்த இரண்டு பிளாஸ்டிக் நாற்காலிகள் மூலையில் கிடந்தன. பாத்ரூம் இருந்தது. வீட்டுக்குள் திறக்கும் ஒருகதவு கூட இருந்தது. அது உள்பக்கம் தாளிடப்பட்டிருக்கும். அவர் மூலையில் கிடந்த கட்டிலில் படுத்து ஒன்றன் பின் ஒன்றாகப் பீடிகளை ஊதித் தள்ளிக் கொண்டே இருந்தார். உதட்டில் ஒட்டிய பீடிச் பசையைத் துடைத்துத் துடைத்து சட்டைக் கையெல்லாம் மஞ்சளாக படிந்துவிட்டது. சொல்லியிருந்தால் சிகரெட் வாங்கித் தந்திருப்பார்கள். தோன்றவில்லை.

தன்னை என்ன செய்யப் போகிறார்கள் என்று திரும்பத் திரும்ப சிந்தித்துப் பார்த்தும் அவரால் திட்டவட்டமாக ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. எல்லாமே புரிந்தது போலவும் இருந்தது. எதுவுமே புரியவில்லை போலவும் இருந்தது. காங்கேயமும் ஜேகே டயமண்ட்ஸும் சம்பந்தப்பட்டிருப்பதால், ரத்தினக்கற்களுக்கும் தான் கடத்தப் பட்டதற்கும் ஏதோ தொடர்பிருக்கும் என்று நினைத்துக் கொண்டார். தனக்கு உதவி செய்த நிறுவனத்திற்கு இவர்கள் போட்டியாளர்கள் போலிருக்கிறது. அதன் காரணமாகத்தான் தன்னைக் கடத்தியிருக்கிறார்கள்.

என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத்தான் அவரால் ஊகிக்க முடியவில்லை. ஒரு வேளை சித்திரவதை செய்வார்களோ? அல்லது கொன்று விடுவார்களோ? ஐம்பத்து நான்கு வயதில் விரல்களில் ஊசியெல்லாம் குத்தினால் தாங்க முடியுமா? ஒரே வெட்டில் கழுத்தை

வெட்டி விடுவார்களோ? தூக்கமாத்திரை கொடுத்தால் நன்றாக இருக்கும்...

சிறுவயதில் படுக்கையில் கோணல் மாணலாகப் கிடக்கும் மகன், மகளின் நினைவு வந்தது. மனைவி நினைவு வந்தது. எல்லோருமே தானில்லாமல் வாழ்ந்துவிடக் கூடியவர்கள்தான். ஆனால் பேச வேண்டும் என்று நினைத்து பேசாமல் விட்டுப் போன எத்தனையோ விஷியங்கள், தருணங்கள் அவர் தொண்டையைக் கம்மச் செய்தன. தன் வாழ்க்கையின் தீராத அலைச்சலில் இழந்தவை குறித்து அவருக்கு சகிக்க முடியாத குற்ற உணர்ச்சி தோன்றியது.

இப்போது என்ன நடந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டார். ஒன்றுமே நடக்கவில்லை. ஊரறிந்த ஒரு பேராசிரியரை அப்படியெல்லாம் வேலை தீர்த்துவிட முடியாது, பார்க்கலாம்.

அவர் கண்முன் பொழுது ஓடிக் கொண்டிருந்தது. கூரையின் கண்ணாடி ஓட்டுக்கு மேல் தெரிந்த மஞ்சள் வானம் மங்கி இருள் கவியத் தொடங்கியது. சட்டென்று அறை இருண்டு போனது. இந்த வீட்டிற்கு வரும்போது பார்த்த அந்த அமைதியான முகம் கொண்ட அழகிய பெண் உள்கதவு வழியாகக் காபியும், வடையும் கொண்டு வந்தாள். அவள் விளக்கைப் போட்டதும் டியூப் லைட் வெளிச்சத்தில் அறை வித்தியாசமானதாக, புதிதாகத் தோற்றம் பெற்றது.

அதுவரை அவர் கவனிக்காமலிருந்த கரும்பழுப்பு நிற விட்டங்களும், சிவப்புத்தரையும் ஏதோ பழைய காலத்திற்குக் கொண்டு போய்விட்டதைப் போலிருந்தது.

“வட சாப்பிடுங்க சார்” என்றாள் அவள். ஸ்ரீகுமார் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே வடையை எடுத்துக் கொண்டார்.

“ஒண்ணும் ஆகாது. தைரியமாகச் சாப்பிடுங்க!’ அவள் வடையையும் அவர் நிலையையும் சேர்த்தே சொன்னது போலிருந்தது.

“நீங்க..”

“அவுரு பொஞ்சாதிங்க. சொல்லியிருக்கேன்.விட்டுபோடுவாங்க.

பயப்படாதீங்க...” சற்று இழுத்தும் அழுத்தியும் சொன்னாள். பேச்சில் கொங்குதமிழ் கலந்திருந்தது அவருக்கு வசீகரமாகத் தோன்றியது. சட்டென்று அவள் கூறியதில் அவருக்கு மகிழ்ச்சியோ உற்சாகமோ ஏற்படவில்லை. நம்ப முடியாததுதான் காரணமா?

“இப்ப வருவாங்க, கேட்டுக்குங்க. ஒண்ணும் ஆகாது.” என்று திரும்பவும் சொல்லிவிட்டு வெளியேறினாள்.

‘இந்தப் பெண் சொல்வதை எவ்வளவு நம்பலாம்? ‘ ஸ்ரீகுமார் எழுந்து அறைக்குள் நடக்கத் தொடங்கினார். எவ்வளவு நேரம் நடந்திருப்பாரோ தெரியவில்லை. உள்கதவு மீண்டும் திறந்தது. மிக விலாசமாகத் தோன்றிய இருளோடிய கூடத்தின் ஒரு மூலையில் கிருஷ்ணசாமி உட்கார்ந்திருந்தார். அது டைனிங் டேபிள் போலிருக்கிறது. கம்மென்று கோழிக்கறியின் மணம் வந்து கொண்டிருந்தது.

“உட்காருங்க” என்றார் கிருஷ்ணசாமி. “கறி சாப்பிடுவீங்க இல்ல..?”

“சிக்கன்.....” என்று இழுத்தார் ஸ்ரீகுமார்.

“நீங்க திங்கற போண்டாக்கோழி இல்ல. வெடக்கோழி, சாப்பிடுங்க. ஒடம்புக்கு நல்லது”

“அப்ப என் ஒடம்புக்கு எதுவும் ஆகப் போறதில்லை....!”

கிருஷ்ணசாமி உற்றுப் பார்த்தார். தனது ஜோக் சரியாகப் புரிந்து கொள்ளப் படவில்லை என்பது ஸ்ரீகுமாருக்கு தெரிந்தது.

“சொல்லுங்க” ஸ்ரீகுமார் இரண்டு வாய் சாப்பிட்டதும் கிருஷ்ணசாமி தொடங்கினார். “கல்லைப்பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? எதுக்கு காங்கேயத்திற்கு வந்திருக்கிறீங்க?”

“நா காங்கேயத்திற்கு வரவேயில்லை. டாக்குமெண்டரி எடுக்கிறவங்களோட மதுரைக்குப் போயிட்டிருந்தேன்.”

“பொய் சொல்லாதீங்க. நீங்க ஒரு கம்பெனியோட சேர்ந்து கல்லைப்பத்தி ஆராய்ச்சி பண்றதாவும், அவங்க சுரங்கம் தோண்ட ஏற்பாடு பண்றதாவும் கேள்விப்பட்டுதான் உங்களை இங்க கூட்டிட்டு வந்தோம். ஜெய்ப்பூர் வரைக்கும் தெரிஞ்சிருக்கு. பொய் சொல்றீங்க. நான்

இவருக்கு வேலை செய்யறேன்" என்று கிருஷ்ணசாமி மந்திரியாக இருந்தவரும், ஏராளமான தொழில்கள் நடத்தி வருபவருமான ஐயாவின் பெயரைச் சொன்னார்.

ஸ்ரீகுமார் அவசரமாகக் குறுக்கிட்டார். "ஏதோ மிஸ்அன்டர்ஸ்டேண்டிங் இருக்கு. நான் பிஸினஸ் ஆளில்ல. நான் தமிழ்நாட்டோட பழைய டிரேட் பத்தி ஆராய்ச்சி பண்றேன். அதில இந்த காங்கேயம் கல்லும் ஒரு பார்ட்." ஸ்ரீகுமார் கிருஷ்ணசாமி புரிந்து கொள்கிறாரா என்று பார்த்து அவர் தலையசைத்தும் தொடர்ந்தார்.

"எனக்கு இந்த கல்லு மேல ஸ்பெஷ்ல் இன்ட்ரெஸ்ட் எல்லாம் கிடையாது. மிளகு, தந்தம்ன்னு எல்லா டிரேடையும்தான் நான் ஆராய்ச்சி செய்யறேன். அதுக்கு ஸ்பான்ஸர் பண்றதா இந்த கம்பெனிக்காரங்க சொன்னாங்க. பெரிய கம்பெனிகளுக்கு இது பெருமைங்கிறதால நான் இதுக்கு ஒத்துக்கிட்டேன். இந்த கல்லுக்கும் எனக்கும் இருக்கிற ஒரே சம்மந்தம் மதுரைக் காஞ்சியில, மதுரைக்காஞ்சி தெரியுமா? பழங்காலத்தில் எழுதப்பட்ட ஒரு புக்"

"திருக்குறள் மாதிரியா?"

"ம். அதே மாதிரிதான். அதில மான் குதிச்சாலே தரையிலிருந்து ஜாதிக் கல்லு வரும்னு ஒரு எடத்தைப் பத்தி சொல்றாங்க. டைம் கெடச்சா அந்த எடத்தைத் தேடி கண்டிபிடிக்கணும்னு நெனச்சிட்டிருக்கேன். இப்போ கண்ணகி போன வழியில நாங்க போயிட்டிருக்கோம். காங்கேயம் வர்ற ஐடியாவே எனக்கில்ல."

ஸ்ரீகுமார் கூசாமல் புளுகினார்.

"அப்போ உங்களுக்கு அந்த எடம் தெரியாது?"

"உறுதியாத் தெரியாது. ஆனா காங்கேயத்துக்கு வடக்கே நாமக்கல் பக்கமா இருக்கலாம்னு நெனக்கிறேன். தப்பா காங்கேயம்னு சொல்லிட்டிருக்காங்க. நா நெனக்கிறது தப்பா கூட இருக்கலாம். முறையா ஆய்வு பண்ணினாதான் தெரியும்."

"ஆமாம். இப்பகூட நாமக்கல் பக்கம் கல்லு கெடைக்குது."

கிருஷ்ணசாமி தனக்குள் சொல்லிக் கொண்டார்.

“நெனக்கிறேன். அவ்வளவுதான். தேடணும்” கிருஷ்ணசாமி அவரை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

மருந்துக்குக் கூடத் தண்ணீர் இல்லாத அந்த ஓடை சில இடங்களில் அகலமாகவும், சில இடங்களில் குறுகியும் இருந்தது. கரையில் வளர்ந்திருந்த புதர்கள் எதையோ ஒளித்து வைத்துக் கொண்டிருப்பது போன்ற மர்மத்துடன் நின்றிருந்தன.. அந்த இருளிலும் ஓடை செல்லும் வழி வெள்ளை நிறமாகத் தோன்றியது. இடையிடையே பாறைகள் தடுக்கினாலும் ஸ்ரீகுமார் முடிந்தவரை வேகமாக நடந்தார். பிரச்சினை இப்போதைக்குத் தீர்ந்துவிட்டது என்பது கொஞ்சம் நிம்மதியளித்தாலும் ஏதோ ஏடாகூடமான நெருக்கடியில் சிக்கிக் கொண்ட உணர்வு ஒருபக்கம் உறுத்திக் கொண்டே இருந்தது.

வெகு தொலைவில் ஏதோ பறவைகள் கீச் கீச்சென்று ஒலியெழுப்பியபடி பறந்து சென்று கொண்டிருந்தன. வெளவால்கள் போலும். எங்கோ ஒரு மயில் கோரமான குரலில் அகவியது. சற்று தொலைவில் ஒரு கருப்புநிறத் தடிபோலக் கிடந்த பாம்பு சரக்கென்று நெளிந்து சென்று புதரில் மறைந்தது. மயில்கள் இவற்றைத் தான் தேடுகின்றன என்று நினைத்தவர் கவனமாக அடிவைக்கத் தொடங்கினார். கிருஷ்ணசாமி பாலம் வரை ஓடையை விட்டு வெளியே வரவேண்டாம் என்றும் பின்பு ஒருவன் அவரை லாரியோ பஸ்ஸோ கிடைக்குமிடத்திற்கு பைக்கில் கொண்டு விடுவான் என்றும் சொல்லியிருந்தார்.

ஸ்ரீகுமாருக்கு இன்று நடந்த எல்லா சம்பவங்களையும் போலவே இதுவும் நம்ப முடியாததாகத்தானிருந்தது. அன்று இரவு நடந்த உரையாடலுக்குப் பிறகு கிருஷ்ணசாமி யாருடனோ தொலைபேசியில் நெடுநேரம் பேசினார். ஸ்ரீகுமார் சொன்ன சொற்களைத் திரும்பச் சொல்வது துண்டு துண்டாகக் கேட்டது. தன்னைப் பற்றிப் பேசி ஏதோ முக்கிய முடிவு எடுக்கிறார்கள் என்று புரிந்து கொண்டு அவர் மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தார். பின்பு நீண்ட நேரம் அமைதி

நிலவியது. அப்புறம் கிருஷ்ணசாமியின் செல் அடிப்பது இரவின் அமைதியில் தெளிவாகக் கேட்டது. மணி எத்தனை இருக்கும் பத்து? பதினொன்று. . .

கிருஷ்ணசாமி அறைக்கதவைத் திறந்து கொண்டு வந்து அவரை வீட்டினுள் அழைத்தார். கூடத்திற்குப் பின்னால் இன்னொரு கதவு இருந்தது. அதன் வழியாக ஸ்ரீகுமாரை ஓடைப் பள்ளம் வரை அழைத்து வந்து ஓடையில் இறங்கிப் போய்விடும் படி சொன்னார். ஐயா அவரை விட்டுவிடச் சொன்னாராம். ஸ்ரீகுமார் சொன்னதை அவர் நம்பினாரா இல்லையா தெரியாது, ஆனால் இப்போதைக்கு விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டாராம். அவரை கடத்தி வந்தவர்களில் ஜெய்ப்பூர்காரர்களின் ஏஜெண்டுகளும் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல்தான் விடுவிக்கிறோம். எனவே சாலையில் போக வேண்டாம் என்று சொல்லி வழியனுப்பினார். ஸ்ரீகுமாருக்கு ஏதோ சொந்தக்காரரை அனுப்பி வைப்பது போலத்தான் தெரிந்தது. சந்தேகமே ஏற்படவில்லை. அந்தப் பெண்ணிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று கூடத்தோன்றியது.

“நாங்க உங்களை தொடர்ந்து கண்காணிச்சிட்டுத்தான் இருப்போம். அப்படி எல்லாம் ஈசியா நம்புற ஆளுக கெடையாது. ஜெய்ப்பூர்காரங்களும் உங்களை விட்டுற மாட்டாங்க. நீங்க கண்ணகி, கோவலன்னு போற வரைக்கும் பிரச்சினையில்ல. ஏதாவது பொய் சொல்றமாதிரி தெரிஞ்சா அய்யா விடமாட்டாரு. நீங்க தமிழ்நாட்டிலயே இருக்க முடியாது. தேவையில்லாத பிரச்சனை எதுக்கு? அய்யாவுக்கு ஜெய்ப்பூர்காரங்களும், கம்பெனிக்காரங்களும் ஒண்ணுதான். யார்கூட வேணுமின்னாலும் சேருவாரு. நீங்கதான் மாட்டிக்குவீங்க. இப்ப ஜெய்ப்பூர்கார ஆளுங்களுக்கு தெரியாம போயிருங்க.” கிருஷ்ணசாமி தனது எக்காளம் போன்ற குரலைத் தணித்துக் கொண்டு கூறியது இன்னும் காதில் ஒலித்துக் கொண்டுதானிருந்தது. தொலைவில் கிருஷ்ணசாமி குறிப்பிட்ட பாலம் தெரிந்தது.

முல்லைக்குக் கோபமும், பயமுமாக நிலைகொள்ளவேயில்லை. களைத்துப் போயிருந்த உடம்பு தூங்க வேண்டுமென்று கெஞ்சியது. சுப்பிரமணியம் மாயமாக மறைந்துவிட்டான்.

அன்று பகல் பனிரெண்டு மணிவாக்கில் போலீஸ் ஸ்டேஷன் போவதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்தார்கள். காவல் நிலையத்தில் பொறுப்பான யாருமேயில்லை. எழுத்தரும், சீருடை அணியாத ஒரு காவலரும் மட்டுமே ஒரு அறையில் உட்கார்ந்து இருந்தனர். அறை முழுக்க விநாயகர் விவேகானந்தர் காலண்டர்கள் தொங்கிக் கொண்டிருந்தன. நான்கைந்து கடவுள் உருவங்கள் ஒன்றாக இருக்கும் பிரேம் போடப்பட்ட படம் சுவரில் மாட்டப்பட்டு அதன் கீழ் ஒரு ஸ்டாண்டில் ஊதிபத்தி போன்ற பூஜை சாமான்கள் வைக்கப் பட்டிருந்தன. பீரோக்களுக்குப் பின்னே படைபடையாக ஒட்டடைகள் தொங்கின. ஜே.கே டைமண்ட்ஸ் பற்றி நவீன் பேச்செடுத்ததும் எழுத்தர் பின்வாங்கினார். "காணாமல் போனவருடைய சம்சாரம், குழந்தைகள் யாரையாவது வரச் சொல்லுங்க" என்றார்.

"அவங்க வெளியூர்ல இருக்காங்க. அவங்ககிட்ட சொல்லி பயப்படுத்த வேண்டாம்னு பார்க்கறோம். பிரச்சினைன்னு உறுதியாத் தெரிஞ்சா சொல்லிக்கலாம்" என்றபோது "அவர் யார் வீட்டுக்கு வேண்டுமானாலும் போயிருக்கலாம், தெரிந்தவர்கள் யாரையாவது பார்க்கப் போயிருக்கலாம். இந்த மாதிரி பெரிசுகள், தண்ணியப் போட்டுட்டு கூட எங்கேயாவது சுத்திட்டு வந்தாலும் வந்திடலாம். வரலைன்னா ஆறு மணிக்கு வாங்க. எஸ்.ஐ, இன்ஸ்பெக்டரெல்லாம் இருப்பாங்க" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

யுகமாகக் கழிந்த நான்கைந்து மணி நேரத்திற்குப் பின்பு மீண்டும் காவல் நிலையம் வந்த சில வினாடிகளிலேயே நவீனுக்கும், முரட்டுப் பந்தயக் குதிரை போல இருந்த உதவி ஆய்வாளருக்கும் சண்டை மூண்டு விட்டது. எடுத்த எடுப்பில், "நீங்க யாரு?" என்று உதவி ஆய்வாளர் கேட்டான்.

“நாம இங்க வேல மெனக்கெட்டு தேடிட்டிருப்போம். ஊரில இருக்கற பெரிய மனுஷன் மேலெல்லாம் கம்ப்ளைண்ட் குடுப்பீங்க. அவன் போய் பொண்டாட்டி கூட கொஞ்சிட்டிருப்பான். நாலு பக்கம் போய் தேடற செலவ யாரு பாக்கறது?” என்ற போது பிரச்சினை வெடித்தது.

“செலவைப் பத்தி நீங்க எப்படிப் பேசலாம்?” என்றான் நவீன்.

எஸ்.ஐ கோபத்தின் உச்சிக்குச் சென்றான். ‘நீ யாருய்யா கம்ப்ளைண்ட் குடுக்கறக்கு? போய் பொண்டாட்டி புள்ளைய வரச்சொல்லு”

“எங்க கம்ப்ளைண்ட்க்கு ரசீது கொடுங்க, இல்லாட்டி வாங்க மாட்டேன்னு எழுதிகொடுங்க” நவீன் பிடிவாதமாக நின்றான். கடைசியில் ரைட்டரும், இன்னொரு எஸ்.ஐயும் தலையிட்டு சமாதானம் செய்தார்கள். நாங்கள் விசாரிக்கிறோம். ”இரவு வந்துவிடலாம். வராவிட்டால் அவரது மனைவியை ஒரு போனாவது பண்ணச் சொல்லுங்கள்” என்றார்கள்.

காலைவரை வராவிட்டால் கமிஷ்னரைப் போய்ப்பார்க்கலாம் என்றான் நவீன். முல்லைக்குக் கடுமையான தலைவலி வந்துவிட்டது. ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருக்கக் கூடாதா? அப்படி எங்கேதான் சென்றார்? அவளுக்கு ஒரு விபரீதமான எண்ணம் தோன்றியது. லாட்ஜுக்கு வந்ததும் அறைக்கு ஓடினாள். அது பூட்டியது பூட்டியபடி கிடந்தது. மீண்டும் ரிசப்ஷனுக்கு ஓடி வந்து பக்கத்தில் ஏதாவது விபத்து நடந்ததா என்று விசாரித்தாள். இல்லை.

ரிசப்ஷனில் கிடந்த மாலை பேப்பரை அவசரமாகப் பிரித்தாள். அறைக்குத் திரும்பிய போது பால்கனியில் நின்று நவீன் சிகரெட்டோடு யாருடனோ மும்முரமாக செல்லில் பேசிக் கொண்டிருந்தான்.

"அந்த மாதிரி டிப்ரஷன்ல காணாமப் போற வயசெல்லாம் இல்ல. 54 அல்லது 55 வயசுதான் இருக்கும். ஆக்டிவ்வான ஆளு. ஏதோ மல்டிநேஷனல்கிட்ட ஸ்பான்ஸர் வாங்கிட்டிருந்தாரு. எனக்கு அதுதான் சந்தேகமாயிருக்கு." சற்று நேரம் எதிர் முனையில் பேசியவருக்கு 'ம்' கொட்டிக் கொண்டிருந்தவன் அது முடிந்தவுடன் செல்லை பாக்கெட்டில் போட்டுக்கொண்டு கேள்விக்குறியுடன் பார்த்துக் கொண்டிருந்த

முல்லையிடம் திரும்பினான்.

“ஃப்ரெண்டு, அட்வகேட். போலீஸ்காரன், வக்கீல் எல்லாம் ஒரே மாதிரிதான் இருக்காங்க. ஆக்ஸிடன்ட் ஆயிருக்கும், இல்லைனா தானா வந்து சேருவாருங்கறான். ஃபேமிலிக்கு இன்பார்ம் பண்ணிடுங்கிறான். எங்கோ இருக்கும் ஸ்ரீகுமாரின் மனைவிக்கும், மகனுக்கும் இது எவ்வளவு பெரிய அதிர்ச்சியாயிருக்கும்."

முக்கியமான ஒரு வேலையாப் போனேன். லேட்டாயிருச்சு என்று சொல்லி அவர் வந்து நிற்கவேண்டும் என்று மனம் ஏங்கித் துடித்தது. அவரது மனைவிக்குச் சொல்லிவிடலாமா, ஏதாவது தப்பு செய்கிறோமா என்று இருவரும் குழம்பினர். இனிமேலும் அவர்களுக்குச் சொல்லாமல் இருப்பது தவறு என்று தோன்றியது. காலையில் முதல் வேலையாகச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்தனர். அவருக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது என்று மனது அடித்துக் கொண்டே இருந்தது. யார் அவரைக் கடத்தியிருக்கக் கூடும்? எதற்காக? ஸ்ரீகுமார் மீது யாருக்கு என்ன விரோதம் இருக்க முடியும்? ஒருவேளை ஜெ.கே டைமண்ட்ஸ்தான் ஏதாவது சதி செய்கிறதா?

நள்ளிரவு வாக்கில் முல்லை படுக்கையிலும் நவீன் நாற்காலியிலும் சரிந்து தூங்கிப் போனார்கள்.

சுமார் நான்குமணிக்கு ஏதோ சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட நவீனுக்கு முதலில் அது என்ன என்று புரியவில்லை. கதவு தட்டப்படுவதும், காலிங் பெல் அடிப்பதும் மாறி மாறி கேட்க கதவை நோக்கி பாய்ந்தான். களைத்துப் போனவராக ஸ்ரீகுமார் உள்ளே வந்தார். நவீனுக்கு ஒருவினாடி பேச்சே வரவில்லை. சட்டென்று அவர் கையைப் பிடித்துக் கொண்டான்.

"எங்க சார் போனீங்க? உங்க அட்டூழியத்துக்கு அளவே இல்லையா? என்னாச்சு சார்? சொல்லுங்க" பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக் கொள்ளாமல் கேட்டான்.

ஸ்ரீகுமார் பொத்தென்று படுக்கையில் உட்கார்ந்தார் . "ஸாரி,

ஸாரி, ஸாரி ஒரு நூறு தடவை மன்னிப்பு கேட்டுக்கறேன்" என்றார்.

விழிகள் விரிய முல்லை ஆவல் ததும்பும் கண்களால் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அட்வென்சர்" சுருக்கமாகத் தான் கடத்தப் பட்டதை விளக்கியவர் காலையில் விரிவாகச் சொல்வதாகக் கூறினார்.

முல்லை துள்ளிக் குதித்துக் கைதட்டினாள்.

"அப்ப எங்களோட வர்றீங்க"

"வேற வழி?"

"இவங்களை இப்படியே விட்டுடர்றதா?"

“யோசிக்கலாம். இப்போதைக்கு எனக்கு என்னோட ஆய்வைத் தொடர்றதுல நெறைய சந்தேகம் வந்துடுச்சு. நவீன் சொன்னதுல உண்மையிருக்கு. அடைபட்டுக் கெடந்தப்ப தான் நம்ம ஆய்வால யாருக்கு என்ன உபயோகம்? இந்த மாதிரி முதலைங்க ஏன் அடிச்சுக்கிறாங்கன்னு யோசிச்சேன். காலைல அந்த இனோவாவ அனுப்பிடறேன். கண்ணகி போன வழில போகலாம். மத்ததை அப்புறம் பார்க்கலாம்”.

“நீங்க என்ன அனுப்பறது? இனோவா தானாப் போயிடுச்சு”

புரொபஸர் படுக்கையில் படுத்தபடியே சிரித்தார். முல்லை மனமெல்லாம் உற்சாகம் பொங்க பக்கத்து அறைக்குச் சென்றாள்.

"வைரம் நிலக்கரியோட கடினப்பட்ட வடிவம். உலகத்தில் கிடைக்கும் தாதுக்களிலேயே விலையுயர்ந்தது. பூமிக்கு அடியில் 150 கிலோமீட்டர் ஆழத்தில் உருவாவது. எரிமலை வெடிப்புகளின் போது தரை மட்டத்திற்கு அருகில் கொண்டுவரப்படுவது. தங்கம் உங்களுக்குத் தெரியும். நல்ல பண்டமாற்று உலோகம். நகைகள் செய்யலாம், அழகு அந்தஸ்து எல்லாம் அதில் இருக்கிறது. இந்த இரண்டுக்கும் இடையில் வேறு சில மினரல்சும் இருக்கு. தெரியுமா?"

ஸ்ரீகுமார் கட்டிலில் சப்பணம் கட்டி உட்கார்ந்திருந்தார். அவர்கள் காலையில் எழுவதற்கு பதினோரு மணியாகிவிட்டது. மதிய உணவுக்குப் பிறகு மதுரை செல்லும் பஸ்ஸைப் பிடிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இடைப்பட்ட நேரத்தில் நேற்றைய சம்பவங்களில் பின்னணி குறித்துச் சொல்லிவிடலாம் என்று அவர் நினைத்தார். கேட்பதற்கு இருவரும் ஆவல் கொண்டு துடித்துக் கொண்டிருந்தனர்.

"பிளாட்டினம்" என்றான் நவீன்.

"நான் அதைச் சொல்லல. என்னுடைய ஆய்வு தமிழகத்தோட பழங்கால வாணிபம். அப்ப பிளாட்டினம் யாருக்கும் தெரியாது. நான் சொல்வது பிரஷியஸ், செமி ப்ரெஷ்யஸ் ஸ்டோன்ஸ். அரசு வெளியீடுகள்ள இதை பிரஷியஸ் ஸ்டோன்னும் சொல்றாங்க. அதாவது ரத்தினங்கள்-ன்னு சொல்லபடற விலையுயர்ந்த கற்கள். நாம் கற்பனையே பண்ணமுடியாத வண்ணங்களில் அற்புதமான அழகோட இருக்கும் இந்தக் கற்கள், வானம் போல நீல நிறத்திலும், கடல் போல பச்சை வண்ணத்திலும், ரத்தச் சிவப்பு நிறத்திலும் கிடைக்கும். தமிழ் நாட்டோட பண்டை வணிகத்தில் முக்கிய இடம் பிடிச்சது இந்தக் கற்கள் தான். இந்தக் கற்கள் இரண்டு மூன்று கிலோ அளவு வரை சிறிய பாறாங்கல் அளவுக்கு சாதாரணமாகத் தரையிலேயே கிடைக்கும். இந்தக் கற்களை மாணிக்கம் அதாவது ரூபி, மரகதம் எனப்படும் எமரால்டு, ஓனிக்ஸ் எனப்படும் பலநிறம் காட்டும் வைடூரியம், குவார்ட்ஸ் எனப்படும் பளிங்குக் கல் அல்லது வெங்கச்சங்கல், சபையர் எனப்படும்

நீலக்கல், பெரில் எனப்படும் பச்சைக்கல் என்று பல பெயர்களில் அழைப்பார்கள். ஒவ்வொரு வகையான கல்லுக்கும் ஒவ்வொரு தரமும் விலையும் உண்டு. ஏறக்குறைய இந்தக் கற்கள் எல்லாமே தமிழ்நாட்டில் காங்கேயம், கரூர் பகுதிகளில் மட்டுமே கிடைத்து வந்தன. இப்போது மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் கிடைப்பதாகச் சொல்றாங்க. இதில் பெரில் எனப்படும் பச்சைக் கற்களுக்கு அந்தக் கால ரோமில் மிகவும் நல்ல மார்க்கெட் இருந்ததுன்னு டாலமி சொல்றார்".

"குறைந்தது இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளா காங்கேயம் பகுதியில் மக்களுக்கு இந்தக் கல்லைப் பத்தித் தெரியும்ன்னு பல ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிச்சிருக்காங்க. பெருங்கற்காலப் புதைகுழிகள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?' ஸ்ரீகுமார் பொதுவாக இருவரையும் பார்த்துக்கேட்டார்.

இருவருமே அரைகுறையாக ஏதாவது சொல்லி அவர் பேச்சைக் குலைக்க வேண்டாம் என்று வாய் திறக்கவில்லை. அதிகம் பேசப்படாத தமிழக வரலாற்றின் ஒருபகுதி தங்கள் கண்முன் விரிவதை முல்லை உணர்ந்தாள். தனது தேடலும், ஸ்ரீகுமார் பேசும் விஷயமும் ஏதோ ஒரு புள்ளியில் இணையும் என்று அவளது உள்ளுணர்வு கூறியது. ஸ்ரீகுமார் கொஞ்சநேரம் தன்னை மிகவும் பாதித்த பெருங்கற்கால புதைகுழிகள் பற்றிப் பேசிவிட்டு விஷயத்துக்கு வந்தார்.

"சரி இந்தக் குழிகளில் ஏராளமான விலையுயர்ந்த பச்சை, நீலக்கல் மணிகள் கிடைச்சிருக்கு. அதாவது பெரிய வண்ணக் கற்பாறைகளை வெட்டி சிறிய வழுவழுப்பான உருண்டைகளாகச் செய்தால் அதுக்கு மணிகள்னு பேர். காங்கேயத்திலும், பக்கத்திலிருக்கற சிவன்மலை, பெருமாள்மலை, பாடியூர், கொடுமணல், சிவியார்பளையம், வைரமடை போன்ற ஊர்களிலும் இப்படிச் செதுக்கப்பட்ட கற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கு. கொங்கு நாட்டோட தாது வளம் அபாரமானது. அது வறண்டதா இருந்தாலும்."

"புதை குழிகளில் கிடைத்த பண்படுத்தப்பட்ட கல்மணிகள் கி.மு ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இதற்கு மூன்று நான்கு

நூற்றாண்டுகளுக்குப் பின்பு இந்தக் கற்களுக்காக ரோமிலிருந்து வணிகர்கள் வந்து குவிஞ்சாங்க. கி.பி. முதலாம் நூற்றாண்டில் ரோமப் பேரரசு தன்னோட வளர்ச்சியின் உச்ச கட்டத்திலிருந்தது. செல்வந்தர்களும் பெரும் அதிகாரிகளும் புதுப் புது செல்வங்களைத் தேடிச் சேர்க்கத் தொடங்கினாங்க. கொங்கு நாட்டில் ரோமானிய நாணயங்கள் கிடைச்ச இடங்களில் எல்லாம் இந்தக் கற்களும் கிடைச்சிருக்கு. இவை மூட்டை மூட்டையாக ரோமுக்கு அனுப்பப்பட்டன. அதாவது பெரிய கற்கள் மணிகளாகச் செதுக்கப்பட்டு அனுப்பப்பட்டன. இந்த மணிகளை மோதிரங்களிலும் கழுத்தணிகளிலும் பதித்துக் கொண்டார்கள். கோர்த்து மாலைகளாக அணிந்து கொண்டார்கள். இப்படி கற்களைச் செதுக்கிப் பட்டை தீட்டும் தொழில் கொடுமணலைச் சுற்றிய பகுதிகளில் பெரிய அளவில் நடந்து வந்ததற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கு. இன்னைக்கும் அன்று பயன்படுத்திய கருவிகளைக் கொண்டே அதே வேலையை காங்கேயத்திலும், திருப்பூரிலும் சில தொழிலாளர்கள் செஞ்சிட்டிருக்காங்க".

"இங்கேயே கிடைச்ச கற்களைத் தவிர ஆப்கானிஸ்தானையும், குஜராத்தையும் சேர்ந்த சிவப்பு மணிக்கற்களும் இங்கே கொண்டுவரப்பட்டு பட்டை தீட்டப்பட்டனங்கறதுக்குச் சாட்சியா அந்த வகைக் கற்களும் கொங்குநாட்டிலும், அரிக்கமேடு போன்ற பழைய துறைமுகங்களிலும் கிடைச்சிருக்கு.." சற்றே இடைவெளிகொடுத்த ஸ்ரீகுமார் கைவிரித்தபடி சொன்னார்,

"இப்போது ரத்தினக் கற்கள் காங்கேயத்திலிருந்து குஜராத்துக்கும், ராஜஸ்தானுக்கும் பட்டைதீட்ட அனுப்பப் படுகின்றன.!"

"இப்போதும் இந்தக் கல் கெடச்சுட்டுதான் இருக்கா சார்?' என்றான் நவீன்.

"ஒவ்வொன்றாக வரலாம். விலையுயர்ந்த, அந்நிய நாட்டவர்களை பைத்தியமாக அடித்த இந்த கற்கள் தரைமட்டத்திலேயே கொள்ளை கொள்ளையாகக் கிடைத்தது தமிழ் இலக்கியங்களில் நிறையச் சொல்லப்பட்டிருக்கிறது".

"மான்கள் துள்ளினாலேயே நீலக் கற்கள் வெளிவருதுன்னு புறநானூறு சொல்லுது. பளியர்னு ஒரு பழங்குடிகள் யானைத் தந்தத்தால தரையைக் குத்தி இந்தக் கற்கள் எடுத்தாங்க, காட்டுப் பன்றிகள் தரையைத் தோண்டும் போது இந்த கற்கள் வெளிவருது, கோவலர்ன்னு ஒரு பழங்குடிமக்கள் இந்தக் கற்களைத் தேடிச் சேகரித்தாங்கன்னு பதிற்றுப் பத்தில சொல்லப் பட்டிருக்கு.....மழைகாலங்கள்ல ஓடைகள்ல இந்த கற்கள் அடித்து வரப்பட்டனன்னு சொல்றாங்க. குறுந்தொகைல கானவர் கிழங்கு தோண்டும் போது இந்தக் கற்களைக் கண்டெடுத்தாங்கன்னு ஒரு பாடல் இருக்கு.”"

" கோவலர்னா சொல்றீங்க?" முல்லை ஆச்சிரியத்துடன் கேட்டாள்.

"ஆமாம். கோவலர் அது ஒரு ஆயர் குலத்தோட பெயர். அவர்கள் காங்கேயம் பகுதியில் சேரப்புமலை என்கிற மலைப் பகுதியில் வாழ்ந்தாங்களா. அந்த மலைதான் இப்ப சிவன் மலையா பெயர் மாறி இருக்கலாம்னு ஆராய்ச்சி செய்தவங்க சொல்றாங்க. பதிற்றுப் பத்து 21:20-23 ங்கற பாட்டுல கோவலர் பத்தி வருது”

"இது எப்படி நம்ம கோவலனுக்கு..?"

"தெரியல. கோவலன் என்கிற பெயர் கிருஷ்ணன், இடையன் என்பதை ஒட்டி வருதுன்னு சொல்றாங்க. ஆனா நச்சினார்க்கினியர், செங்குட்டுவன், சாத்தனார், மாநாயக்கன், கண்ணகி மாதிரி கோவலன் ஒரு தனிமனிதனோட பெயர் மாதிரி தெரியல. ‘தமிழன்’ - இந்த மாதிரி ஒரு பொதுப் பெயரா இருக்கு. அந்தப் பெயர்ல ஒரு இடையர் இனம் இருந்திருக்கு. அதுவும் கோவலன் சம்பந்தப்பட்ட கற்கள் வணிகத்துல இருந்திருக்கு"

"கண்ணகியோட சிலம்புல இருந்த மாணிக்கப் பரல்கள் தான் இந்த கோவலர் தோண்டி எடுத்த கற்களா?”. முல்லை கேட்டாள்.

"ஆமாம். மாணிக்கமும் பிரஷ்யஸ் ஸ்டோன்தான். ரத்தச் சிவப்பு நிறத்துல இருக்கும். காங்கேயத்துல கிடைக்கக் கூடியதுதான். ரத்தினக் கற்கள்ளயே ரூபி எனப்படும் மாணிக்கத்துக்கு தனி மரியாதை உண்டு.

இதை ரத்னராஜ் அதாவது ரத்தினங்களின் அரசன்னு சொல்றாங்க. ஒரு அழகான நல்ல தரமான மாணிக்கம் கிடைத்தால் அந்தக் காலத்துல மன்னர்கள் ஊர் எல்லைக்கே தன்னோட அதிகாரிகளை அனுப்பி அதை மரியாதையோட கொண்டுவரச் செய்வாங்களாம். அப்படிப்பட்டது மாணிக்கம். ரூபி."

“மைகாட் இதுவா கண்ணகி கால்ல இருந்தது?”

“ம்” ஸ்ரீகுமார் முதல் முறையாக தனது வழக்கப்படி தாடிக்குள் முறுவலித்தார்.

"கண்ணகிய கொங்கர் செல்வின்னு சொல்றாங்க... அது இந்தக் கொங்குநாடா?"

"தெரியலம்மா. நீங்கதான் கண்டு பிடிக்கணும்! வேற கொங்குநாடு இருக்கறதா எனக்குத் தெரியல. கோவலனுக்கு ஏன் ஒரு குறிப்பான பெயர் இல்ல, கண்ணகி திடீர்னு எப்படி கொங்கர் செல்வியா மாறினா... எல்லாம் உங்க ஏரியா!"

"சார் ரத்தினக் கற்களுக்காக ரோமானியர்கள் வந்தாங்க, சரி, இங்கே யார் அவங்களோட வணிகம் பண்ணினாங்க? கொங்குநாடு யாரோட ஆட்சியில இருந்தது?" நவீன் நினைவூட்டினான்.

“அது ஒரு ரத்தமயமான வரலாறு. கதை கேட்கத் தயாரா?” என்றார். அவர் கேட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏதாவது காரணத்தால் பேச்சு திசைமாறி விடுமோ என்றுதான் முல்லையும் நவீனும் பயந்து கொண்டிருந்தனர்.

”நான் ஏற்கனவே சொன்னது போல அக்கால வணிகத்தில் கொங்கு நாட்டின் ரத்தினக் கற்களும், தந்தமும், மிளகும், தேக்கும் முக்கிய இடம் வகித்தன. தமிழ்நாட்டிலிருந்து வேறு எதுவும் பெரிதாக ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கொங்குநாடு பெரும்பாலும் பழங்குடி மக்கள் வாழ்ந்த வறண்ட காட்டுப் பாங்கான நிலம். போதுமான தண்ணீரோ, மக்கள் தொகையோ இல்லாததால் இங்கே வலிமையான அரசுகள் உருவாகல. கொங்கு நாட்டைச் சுற்றியிருந்த சேர, துளு,

பாண்டிய நாடுகள்தான் கொங்குநாட்டில் கிடைத்த பொருட்களை வாங்கி வணிகம் செய்தன. இந்தக் கற்களையும் மற்ற பொருட்களையும் கொங்குநாட்டிலிருந்து மேற்குக் கடற்கரையின் தொண்டி, முசிறி, நாறாவித் துறைமுகங்களுக்கும், கிழக்குக் கடற்கரையின் காவிரிப் பூம்பட்டினத்துக்கும் கொண்டு போய் ரோமுக்கு ஏற்றுமதி செய்வாங்க. தங்கம் ஏற்றிவந்த ரோமானியக் கப்பல்கள் முசிறித் துறைமுகத்தில் மிளகையும், ரத்தினக் கற்களையும் வாங்கிச் செல்வதற்காகக் கொள்வதற்காகக் காத்திருந்தன என்று குறிப்புகள் இருக்கின்றன. ரோமானிய பணக்காரர்கள் ரோமின் தங்கத்தை இப்படி இந்தியாவுக்கு அனுப்பி விரையம் செய்கின்றனர் என்று பிளினி எழுதியிருக்கிறார்.

இவ்வளவு பெரும் செல்வத்தை அள்ளித் தரும் ரத்தினக் கற்கள் கிடைக்கும் பகுதிகளைக் கைப்பற்ற சுற்றியிருக்கும் அரசுகள் விரும்புவது இயற்கைதானே? மேற்குக் கடற்கரை அரசுகளான சேர நாடும், அதற்கு வடக்கே இருந்த துளுநாடும் கொங்குநாட்டின் கட்டுப்பாட்டுக்காகப் பல ஆண்டுகள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருந்தன. பாண்டிய நாடும் சில முயற்சிகள் செய்தது. சோழ அரசு அப்போது அத்தனை வலிமை பெற்றிருக்கவில்லை.

அந்தக் காலத்தில் ரோமிலிருந்து தமிழகம் வரவேண்டுமென்றால் எகிப்து அல்லது அரேபிய தீபகற்பம் வந்து அங்கிருந்து கடலோரமாகப் பயணம் செய்து மேற்குக் கடற்கரைப் பகுதிகளுக்கு வரவேண்டும். அப்படி வரும் போது துளுநாட்டையும், லட்சத்தீவுகளையும் கடந்து வரவேண்டும். லட்சத்தீவுகளை தமிழ் இலக்கியங்கள் கடல்துருத்தி என்ற பெயர் கொண்டு அழைக்கின்றன. அங்கு வாழ்ந்த மக்கள் கடம்ப மரத்தைத் தங்கள் குலச்சின்னமாகக் கொண்டிருந்தார்கள். கடல்துருத்தி துளுநாட்டின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. கொங்காணக் கடற்கரைதான் கடம்பர் வாழ்ந்த பகுதி என்று ஒரு கருத்தும் இருக்கிறது. இன்றும் அங்கே கடம்பா டிரான்ஸ்போர்ட் என்பதைப் போன்ற பெயர்கள் உண்டு. எதுவாக இருந்தாலும் சேரநாட்டுக்கு வந்த கப்பல்களை இந்தக் கடம்பர்கள் தொடர்ந்து கொள்ளையடித்து வந்தனர்.

இந்தக் கடற்கொள்ளையர்களை இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன்

தன் இளைய மகன் சேங்குட்டுவனின் தலைமையில் ஒரு கடற் படையை அனுப்பி அடக்கினான். வெற்றியின் அடையாளமாக அவர்களின் கடம்பமரத்தை அறுத்து முரசு செய்து கொண்டு செங்குட்டுவன் திரும்பினான் என்று பதிற்றுப் பத்து கூறுகிறது. தென்னிந்தியாவில் நடந்த முதல் கடற்போருக்கு ரத்தினக் கற்களும் ஒரு முக்கியக் காரணம்.

பிறகு ரத்தினக்கற்கள் கிடைக்கும் உள்நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியில் இந்த அரசுகள் இறங்கின. நீலக்கல் சுரங்கங்கள் இருந்த புன்னாடு என்ற பகுதியை துளுநாட்டு நன்னன் கைப்பற்றினான். இந்தப் புன்னாடு என்பது இப்போது கிட்டிபுரம் என்று பெயர் பெற்றிருக்கிறது. கபினி நதிக்கரையில் உள்ளது. டாலமி இதை பௌன்னாட என்கிறார். கடற்கொள்ளையர்கள் புன்னாட்டை ஆண்டனர் என்கிறார். கடப்பர்களோடு இருந்த உறவின் காரணமாக நன்னனையும் கடற்கொள்ளையன் என்று ரோமானியர்கள் நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது. புன்னாடு வடகொங்குநாட்டின் ஒருபகுதி.

சேரநாடு உம்பற்காடு என்ற கொங்குநாட்டுப் பகுதியைக் கைப்பற்றுகிறது. அதன் இப்போதைய பெயர் ஆனைமலை. வால்பாறை, டாப்ஸ்லிப் தெரியும்தானே?"

"சொல்லுங்க" முல்லை அவசரப்படுத்தினாள். சேரன் செங்குட்டுவனையும் அக்கால நிலைமைகளையும் பற்றி எவ்வளவு தெரிந்து கொள்ள முடியுமோ அவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமென்ற தவிப்பு அவள் முகத்தில் தெரிந்தது... முல்லைக்கு மிகவும் பிடித்தமான ஒரு இடத்தைத் தான் தொட்டுவிட்டதை ஸ்ரீகுமாரும் உணர்ந்தார்.

"பாண்டியநாட்டின் பசும்பூண்பாண்டியனும் தன் பங்கிற்கு கொங்குநாட்டைக் கைப்பற்றவும் துளுநாட்டைத் தாக்கவும் ஒரு படையை அனுப்பினான். அதற்கு கொங்குநாட்டைச் சேர்ந்த அதியமான் நெடுமிடல் அஞ்சி என்பவனையே தலைவனாக்கியிருந்தான். நெடுமிடல் அஞ்சி, நன்னனின் தளபதியான மிஞிலியால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அவன் சாவைக் கேட்டு கொங்குநாட்டு மக்கள் மகிழ்ந்து கொண்டாடினர், கொங்கர் ஆர்த்தனர் என்று குறுந்தொகையில்

ஒரு பாடல் இருக்கிறது.”

“ஏன் சார்? தங்கள் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதைக் கேட்டு அவர்களுக்கு சந்தோஷம்?”

“ அது பற்றி குறுந்தொகை எதுவும் சொல்வதில்லை. கொங்குநாட்டில் அப்போது பெரும்பாலும் பழங்குடி மக்களே வாழ்ந்து வந்தனர். அவர்கள் எந்த மன்னனின் அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளாத சுதந்திரமானவர்கள். ரத்தினக் கற்களுக்காக தங்கள் நாட்டை சுடுகாடு ஆக்கும் மன்னர்களுடன் சேர்ந்து கொண்டவனை அவர்கள் வெறுத்தது இயல்புதானே?”

“சேரன் செங்குட்டுவன்.. .” முல்லை தனக்குப் பிடித்த விஷயத்தை நோக்கி இழுத்தாள்.

“அவனைப் பற்றிப் பேசாமல் இந்தக் கதை முடியாது” என்று ஸ்ரீகுமார் அவளுக்கு உறுதியளித்துவிட்டு அவள் பதட்டத்தைப் பார்த்துச் சிரித்தார்.

“செங்குட்டுவனின் அண்ணன் நார்முடி சேரல் காலத்தில்...”

“சார்.. சார் இருங்க செங்குட்டுவனுக்கு அண்ணனா?” நவீன் இடையில் புகுந்தான்.

“ஆமாம்”

“அப்படியானால் இளங்கோவடிகள் அவன் தம்பி என்ற கதை?”

“நீ தான் சொல்கிறாயே அது கதை என்று. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இந்த இருவருக்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற இன்னொரு சகோதரனும் உண்டு”

“சரி அப்புறம் . . .” சண்டை போட்ட குழந்தை சமாதானமான பிறகு கேட்பது கேட்பது போல முல்லை கேட்டாள்.

“இந்த மூன்று சேர சகோதரர்களும் துளுநாட்டை மூன்று புறங்களில் இருந்து தாக்குகிறார்கள். நன்னனையும் மிஞிலியையும் கொல்கிறார்கள். நாறாவியைக் கைப்பற்றுகிறார்கள். தெற்கே சேரநாடு பாலக்காட்டுக்

கணவாய் வழியாக விரிவடைந்து கரூர் வரை பரவிவிடுகிறது அப்படியானால் இந்த வண்ணக் கல் வணிகத்தின் பெரும் பகுதியைச் சேரநாடு கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் சிலப்பதிகாரம் சொல்லும் கண்ணகிக்குச் சிலை எடுப்பது பத்தினிக் கோட்டம் எல்லாம். . . ”

“அப்படின்னா சிலப்பதிகாரம் பேசும் சம்பவங்கள் நடக்கும் காலத்தில் கொங்குநாடு செங்குட்டுவன் ஆதிக்கத்தில் இருந்தது இல்லையா சார்?”

ஸ்ரீகுமார் தலையசைத்தார். முல்லைக்கு ஏதோ பிடிபடுவது போலவும், அதே நேரம் நழுவிச் செல்வது போலவும் தோன்றியது. கொங்குநாட்டுப் பழங்குடியினத்தின் பெயர் கோவலனுக்கு வைக்கப்பட்டிருப்பது தற்செயலானதா? கண்ணகி எப்படி கொங்கர் செல்வியாக முடியும்? செங்குட்டுவனுக்கு ஏன் கண்ணகியின் மேல் இவ்வளவு அதீத அக்கறை? இதைப் பற்றி இன்னும் ஆழமாக யோசித்துவிட்டு அவரிடம் பேசலாம் என்று முடிவு செய்தாள்.

"இப்ப இந்தத் டிரேட் எப்படியிருக்கு சார்?" நவீன் கேமராவிலிருந்து தலையைத் தூக்கிக் கேட்டான்.

"இப்பவும் கற்கள் கிடைச்சுட்டுதான் இருக்கு. ஆனா இந்த வாணிபம் முழுவதுமே அன்ஆர்கனைஸ்டு செக்டாரா இருக்கு. தமிழ்நாட்ல கற்கள் எடுக்கப்படுது. ஆனால் இந்த டிரேட் குஜராத், ராஜஸ்தான்லதான் கொடிகட்டிப் பறக்குது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஐரோப்பாவிலும் இந்தக் கற்களுக்கு நல்ல மார்க்கெட் இருக்கு. குறிப்பா சிலப்பதிகாரத்தில வர்ற மாணிக்கம் என்கிற ரூபிக்கு. அவங்க ரூபில காதல் சின்னங்கள் அணிவதை விரும்பறாங்க. இதுவும் சபையர் எனப்படும் நீலக்கல்லும், பெரில் எனப்படும் பச்சைகல்லும் மோதிரங்களும், கீசெய்னும், பிரேஸ்லெட்டும் இன்னும் பலவகை நகைகளும் செய்யப் பயன்படுது. இப்ப இந்த வகைக் கற்கள் ஒரிஸாவிலும், ஆந்திரா, மாகாராஷ்ட்ரா மாதிரி இடங்களிலும் கெடக்குது. இந்தக் கல்லால செஞ்ச நகை இல்லாத ஒரு வீடுகூட அமெரிக்காவில இல்லேன்னு சொல்றாங்க. இந்தக் கற்களுக்கு

நல்ல மார்க்கெட் இருக்கு. இப்ப இந்த வணிகத்துல 100 சதவீதம் அன்னிய முதலீட்டை அரசு அனுமதிச்சிருக்கு. அதான் ....."

"அதான்....இனோவா." நவீன் சிரித்தான்.

"இனோவா...."

"நீங்க கற்கள் இருக்கிற எடத்தைக் கண்டு பிடிச்சுக் கொடுக்கணும்னு நெனைக்கறாங்களா சார்? ஏதாவது அக்ரிமென்ட் இருக்கா?"

"நான் புவியியல் நிபுணர் இல்லை. ஏதாவது கைக்காட்டினா நல்லதுதான். ஆனால் நான் இல்லாமலேயே அவர்களால் கண்டுபிடிக்க முடியும். அவர்களுக்குத் தேவை இப்படிப்பட்ட செல்வங்கள் கொட்டிக்கெடக்குன்னு ஒரு ஆய்வு. அதவெச்சு அவங்க பிரச்சாரம் பண்ணிக்குவாங்க. இந்த உள்ளூர்ப் பசங்க என்னவோ நான் மந்திரவாதி மாறியும்..." அந்த விஷயத்தைத் தொட்டதுமே புரொபஸருக்கு எரிச்சலடைவது தெளிவாகத் தெரிந்தது.

"அரசு இந்த பிஸினஸ்ல இல்லையா சார்?"

"அதான் சொன்னேனே, இது அன்ஆர்கனைஸ்டு. எந்த முறையும் இல்லை. கிடைப்பவர்கள் எடுத்து வித்துக்கலாம். மக்களுக்கு இந்தக் கற்கள் கொஞ்சம் ஸ்பெஷல்னு தெரியும். அவங்க இதை நீரோட்டக்கல்லு சொல்றாங்க. ஆனா கண்டு பிடிச்சு எடுக்கற விவசாயிகளுக்கு உரிய விலை கெடைக்குதான்னு தெரியல. இரண்டு எடத்துல குவார்ட்ஸ் சுரங்கம் தோண்டறாங்க. இருக்கிற கற்கள்லயே விலை குறைவானது குவார்ட்ஸ்,... வெங்கச்சங்கல்னு சொல்றோமே அதுதான்!"

"வெங்கச்சங்கல்னு தெருவுல கெடக்குமே அதா? அதுக்கா மார்க்கெட் இருக்கு?" நவீன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

" மத்த எடத்திலே கெடக்கிறதில்லையே"

"ஷிட், என்ன மாதிரி ஊர் இது. இங்க இத்தன பிச்சைக்காரங்க, வீடில்லாதவங்க, கடின உழைப்புத் தொழிலாளர்கள்....கொங்கு நாட்லதான் கேம்ப் கூலிகள்...!"

“இது உங்க ஏரியா” ஸ்ரீகுமார் நவீனைப் பார்த்து முறுவலித்தார்.

“ஏன் இதை உங்கள் ஏரியாவாக எடுத்துக் கொள்ளக் கூடாது? நீங்கள்தான் எம்.என்.சி.காரர்கள் எப்படிப்பட்டவங்கங்கறதை நேரிலேயே பாத்தீங்களே?”
அப்போ ரோமானியர்களுக்காக நம்மவர்கள் ஒருவரையொருவர் கொன்று குவித்தார்கள். இப்போ . . .”

ஸ்ரீகுமார் மறுக்கவில்லை.

-

கதிரவன் கடுமையாக எரிக்கத் தொடங்கினான். கண்ணகி நடுங்கித் துயர் எய்தினாள். அவள் சிற்றடிகள் சிவந்தன. வழிநடை வருத்தம் தீர மூவரும் கொற்றவை கோவிலுக்குச் சென்று பிறர் அறியாமல் ஓரிடத்தில் அமர்ந்தனர். அந்த நேரத்தில் மறக்குடி தேவராட்டிக்கு தெய்வம் வந்தது. மறவர்களுக்கு வழிப்பறியால் வளம் கிடைக்கவில்லை. கொற்றவைக்கு நேர்த்திக் கடனைத் தரவில்லை பலிக்கடனை தேவிக்குத் தாருங்கள் என்றாள். மறவர்கள் தம் தலையை தாமே கொய்து பலியிட்டு பிறர் இத்தனை என்று எண்ணும் படி செய்வர்.அவர்கள் ஒரு சிறு பெண்ணை புலித்தோலாலும் பன்றிப்பல்லாலும் பொன் கயிற்றாலும் அலங்கரித்து கொற்றவையாக வழிபட்டனர். அப்போது சாலினி என்ற பெண்ணுக்கு தெய்வம்வந்தது. அவள் கண்ணகியைக் காட்டி "இவளோ கொங்கர் செல்வி, குடமலையாடி தெந்தமிழ் பாவை செய்த தவக்கொழுந்து. ஒப்பற்ற மாமணியாக இவள் சிறந்து ஒளிவீசுவாள்" என்று ஆவேசமாக உரைத்தாள்.

-வேட்டுவவரி, சிலப்பதிகாரம்

திருச்சி பஸ் ஸ்டாண்டில் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. உடலெல்லாம் வியர்த்து வழிந்தது. ஸ்ரீகுமார் புகைப்பிடித்தே தீர வேண்டும் என்றார். சற்று ஓரமாக ஒதுக்குப் புறமாக நிற்கலாமே என்றான் நவீன்.

"இல்லை அவர்கள் நன்றாகப் பார்க்கட்டும்" என்றார் அவர்.

அவர்கள் லாட்ஜைவிட்டு வெளியே வரும்போது ஒரு டெம்போ கண்ணில் படும்படி நின்று கொண்டிருந்தது. முதலில் அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால் அது அவர்கள் ஏறிய ஆட்டோவைத் தொடர்ந்து வரத் தொடங்கியதும் ஸ்ரீகுமாருக்குப் புரிந்து விட்டது. இப்படி ஏதாவது நடக்கும் என்று அவர் எதிர்பார்த்துத்தானிருந்தார். முல்லைக்கு இது புது அனுபவம். தாங்கள் பின் தொடரப் படுகிறோம் என்பது வித்தியாசமாக இருந்தது. பின்னால் வருபவன் எவன் என்று பார்த்து

இரண்டு அறைவிட வேண்டுமென்று தோன்றியது. “ ஒரு பாதுகாப்புதான்” என்றார் ஸ்ரீகுமார்.

"நல்ல பாதுகாப்பு" முல்லை முணுமுணுத்தாள்.

பஸ்ஸில் ஏறியதும் முல்லை, ஸ்ரீகுமார் அருகில் உட்காரப் போன நவீனை நகர்த்திவிட்டுத் தான் அமர்ந்து கொண்டாள். சில நிமிடங்களில் பஸ் திருச்சியைக் கடந்து தெற்கு நோக்கி பரந்து விரிந்த நெடுஞ்சாலையில் பயணிக்கத் தொடங்கியது. புகாரிலிருந்து கிளம்பியதிலிருந்து இப்போதுதான் அவர்கள் நெடுஞ்சாலையில் பயணம் செய்கின்றனர். கண்கவரும் பசுமை மறைந்து போய் வறண்ட வெட்ட வெளிகளும், புதர்களும் வந்து கொண்டிருந்தன. நிலமே கொஞ்சம் கொஞ்சமாகப் பழுப்பாக மாறிவந்தது. சாலையில் தார் உருகி ஓடுவது போல கண் கூச வைத்தது. இருபுறமும் கிராமங்கள் எதையும் பார்க்கவே முடியவில்லை. பயணம் தடையின்றி பறப்பது போலிருந்தாலும் ஏதோ பாலைவனப்பிரதேசத்தில் போய்க்கொண்டிருக்கும் உணர்வே ஏற்பட்டது.

உறையூரைக் கடந்த சிறிது நேரத்தில் ஒரு சோலையில் இளைப்பாறும் போது கவுந்தியடிகளும், கோவலனும், கண்ணகியும் திருப்பதி எனப்படும் திருமலைக்குச் சென்று கொண்டிருக்கும் மாங்காட்டு மறையோன் எனப்படும் அந்தணனைப் பார்க்கின்றனர். கோவலன் அவனிடம் மதுரைக்கு வழி கேட்கிறான்.

அரசாங்கத் தொழிலாளரோடு அரசன் கருத்து மாறுபட்டு மனம் போனவாறெல்லாம் செயல்புரிய, அதனால் அரசியல் முறைமை இழந்துபோன நாட்டினைப் போல் கதிரவன் சுட்டெரிக்கும், நிலமெல்லாம் பாலையாக மாறியிருக்கும் இக்கொடிய காலத்தில் இக்காரிகையாளுடன் மதுரைப் பயணத்தினை மேற்கொண்டு இங்கு வந்திருக்கிறதே? இது தகுமோ?

கற்பாறையும் சிறுமலையும் வழியிடை மயக்கம் நிறைந்த கானல் நீர் வேலியும் அடைவுபடைகிடந்த இந்த நீண்ட பாலைவழியினைக் கடந்து கொடும்பாளூருக்கும், நெடுங்குளத்திற்கும் இடைப்பட்ட கரையினைச் சென்று சேர்ந்தால், பிறையினை முடியிலே

கொண்ட இறைவன் ஏந்திய முத்தலைச் சூலம்போலக் கடத்தற்கரிய வழியானது மூன்றாகப் பிரியும்.

வலப்பக்கமாகக் கிடக்கும் வழியினூடே சென்றால் தலைவிரித்த வெண்கடம்பும், பட்டுப் போயிருக்கும் ஒமையும், பொரிந்த அடியினையுடைய வாகையும், புங்காய்ந்த மூங்கிலும் ,புரியுடைய 'மரல்' என்னும் சுள்ளியும் கரிந்து கிடக்கும் இடங்களைக் காண்பீர்கள். தாகம் தாங்காத மான்கள் கானகத்தில் கதறும் கானகத்தையும், எயினர் குடியிருப்பையும் கடந்து செல்வீர்கள். அடுத்து தெங்கும், வாழையும் குலைத்தள்ளும் புதிய நிலப்பரப்பைக் கடந்தால் தென்னவரின் சிறு மலை விளங்கித் தோன்றும். அம்மலைக்கு வலப்புறமாக நடந்து போவீரானால் பேரூரான மதுரையை அடையலாம்.

இடபுறம் செல்லும் வழியிலும் செல்லலாம். கானகங்களையும், வயல்களையும் கடந்தால் திருமாலிருங்குன்றத்தை அடைவீர்கள். அங்கே ஒரு சுரங்கவழி இருக்கிறது. அதனுள் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி எனப் பெயர் பெற்றுள்ள மூன்று பொய்கைகளை நீவிர் காணலாம்.

..... அங்கே சிலம்பாற்றல் கரையில் கோங்க மரத்தின் அடியில் கார்மேகம் போன்ற கூந்தலினையுடைய பொற்கொடியாள் ஒருத்தி தொடிவளையணிந்த தோளினளாக வந்து தோன்றுவாள்.

அவள் இம்மைக்கு இன்பமும், மறுமைக்கு இன்பமும், இம்மையும் மறுமையும் என இரண்டும் இல்லாமல் ஒரு செம்மையில் நிற்பதும் ஆகிய நெறிகளைப் பற்றிக் கூறுவீர்.... சுரங்கக் கதவைத் திறந்துவிடுவேன் என்பாள்.

விடை கூறினால் பல கதவுகளுக்குப் பின்பு பூங்கொடி போன்ற ஒருத்தி எதிர்ப்படுவாள்....

....அந்தப் பேரின்பத்தைப் பெற்று நீவிர் மாண்புடைய பாண்டிய மரபினரின் மதுரைக்குச் செல்வீர்களாக!

இவையிரண்டிலும் செல்ல விரும்பவில்லை என்றால் நடுவழி

செம்மையானதாகும்.
கானுறைத் தெய்வம் ஒன்று எதிர்ப்படும்.

அது அவரவர் விரும்பிய வடிவில் தோன்றும். மேற்கொண்டு செல்வதைத் தடுக்கும்
கடந்து சென்றால் மதுரைப் பெருவழி....”

இந்தப் பயணம் புறப்படுவதென்று முடிவு செய்த பின்பு ஒவ்வொரு முறை சிலப்பதிகாரத்தைப் படிக்கும் போதும் இப்படிப்பட்ட மூன்று வழிகள் இருப்பது சாத்தியமா என்று முல்லை திகைப்படைவாள். க. பஞ்சாங்கம் எழுதிய ’சிலப்பதிகாரம் சில பயணங்கள்’ ஓரளவு விளக்கம் அளிப்பது போல அவளுக்குத் தோன்றியது. அதில் கவுந்தியடிகளின் பயணம் என்ற தலைப்பில் இது பற்றிப் பேசும் போது மாங்காட்டு மறையோன் சொல்லும் சரவணம், பவகாரணி, இட்டசித்தி எனப் பெயர் பெற்றுள்ள மூன்று பொய்கைகள் வைணவத்தைக் குறிப்பதாகவும் அதை மறுத்து கவுந்தியடிகள் சமணத்தை முன்வைப்பதாகவும் அவர் எழுதுகிறார்.

“புண்ணிய சரவணம் என்ற குளம் இந்திரன் எழுதிய ஐந்திரம் என்னும் நூலின் செறிவை குளிப்பவர்களுக்கு அளித்து அவர்களை தமிழ் வல்லுநர்களாக ஆக்குமாம். பவகாரணி என்ற குளம் முற்பிறவி நினைவுகளைக் கொண்டு வரும். இட்ட சித்தி குளம் நினைத்ததை கிடைக்கச் செய்யும். சுரங்கத்துள் செல்ல விரும்பினால் திருமாலை நினைத்து வலம் வந்தால் பொற்கொடியாள் ஒருத்தி தோன்றி....” என்று மாங்காட்டு மறையோன் தொடர்ந்து பேசுகிறான். “நமச்சிவாய, ஓம் நமோ நாரயணாய மந்திரங்களை ஓதி இட்டசித்தியில் முழ்கினால் கருடகொடி பறக்கும் அழகிய நீண்ட கொடிமரத்தின் உச்சி தோன்றும். அது பாவத் தொடர்பான பழவினைத் துயரையெல்லாம் போக்கும்.” என்கிறான். இது சந்தேகத்திற்கிடமில்லாமல் வைணவ பிரச்சாரம் தான். சுருக்கமாகப் பார்த்தால் வலப் பக்கம் செல்லும் வழி காடுகள் வழியே செல்லக் கூடியது. இடப் பக்கம் செல்லும் வழியில் ஒருவேளை வைணவத் தலங்கள் இருந்திருக்கலாம். மதுரைக்குப் போய் புது வாழ்வு தொடங்கும் முன் இந்த குளங்களில் குளித்து பழமையைப் போக்கி புதுமையை அடைந்தால்

அதாவது திருமாலின் திருவடியை அடைந்தால் மதுரையில் எல்லாம் நலமே நடக்கும் என்ற ஆசைகாட்டல் இதிலிருக்கிறது.

எனவேதான் கவுந்தியடிகள் இந்த இரண்டு வழிகளையும் மறுக்கிறார். எங்களுக்கு போன பிறவியை எந்த குளமும் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. எந்த குளமும் நினைத்தை நடத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறார். நாங்கள் செல்லும் ஆன்மீகவழியே, அதாவது சமணமே நல்ல வழியாக இருக்கும் போது வேறு எந்த வழியும் தேவையில்லை என்று அவர் சொல்கிறார். கவுந்தியடிகள் "இந்திரனின் ஐந்திர நூலில் மெய்மைகளையெல்லாம் அதைப் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற நிலைமை எங்களுக்கு இல்லை. அவையனைத்தும் இயற்கையிலேயே வெளிப்படுகின்றன. எனவே சுரங்கத்துக்குள் புக வேண்டிய நிலமையும், புண்ணிய சரவணம் பொருந்துதலும் எங்களுக்குத் தேவையில்லை. போனபிறவியில் நடந்தவற்றைக் காட்டும் பவகாரணியில் மூழ்க வேண்டியதும் இல்லை. காரணம் போனபிறவியில் செய்தவற்றின் பலன்களைத்தான் இந்தப் பிறவியில் நேரிலேயே காண்கிறோமே!. இட்டசித்தியில் மூழ்கினால் நினைத்தது நடக்குமாம். வாய்மையில் வழுவாது அனைத்து உயிர்களையும் பேணிக்காப்பவர்களுக்கு கிடைக்காதது ஏதாவது இருக்கிறதா. எனவே இட்டசித்தியில் மூழ்கி நினைத்ததை அடைய வேண்டியதில்லை" என்கிறார். எனவே இயல்பாகவே நடுவழியைத் தேர்ந்தெடுக்கிறார்.

நடுவழியில் சென்றால் ஒரு வனதேவதை அவரவர்களுக்குப் பிடித்தமான உருவத்தில் வந்து பயணத்தை நிறுத்த முயற்சிக்கும் என்ற மறையோனின் எச்சரிக்கையையும் மீறி அதே வழியில் அவர்கள் செல்கின்றனர். அதாவது ஊர் திரும்பு ஆசை. வேறு தத்துவத்தை வேறு வாழ்க்கை முறையை மேற்கொண்டால் புது ஊரில் புது வாழ்க்கை நன்றாக இருக்கும். பழைய வழியிலேயே தொடர்ந்தால் திரும்பிப் போகும் ஆசைதான் வரும் என்பதைத்தான் இப்படிச் சொல்கிறான் போலிருக்கிறது. திரும்பிப் போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருதிருக்கும்! ஆனால் தமிழுக்குச் சிலப்பதிகாரம் கிடைக்காமல் போயிருக்கும். . .

எண்ணங்களில் மூழ்கியிருந்த முல்லையை நவீனின் குரல் சுயநினைவுக்குக் கொண்டு வந்தது.

"நெடுங்குளம் வந்தால் கொஞ்சம் சொல்லுங்க" என்று நவீன் கண்டக்டரிடம் சொல்லிவிட்டு பின்னால் திரும்பிக் கண்ணடித்தான்.

"கொடும்பாளூர் வானதியைப் பார்க்கலாமா?"

"வானதி இருந்தால் அருள்மொழி வர்மனும் இருப்பான். முதுகுத்தோலை உரித்து விடுவான்" என்றாள் முல்லை.

இடதுபுறம் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டே வந்தவள் சட்டென்று அதிர்ந்து போனாள். ஒரு சின்னஞ்சிறிய குன்று சமவெளிக்கு நடுவே காணப்பட்டது. உச்சியில் ஒரு கோவில்....

"கற்பாறையும் சிறுமலையையும் வழியிடையே மயக்கம் நிறைந்த கானல்நீர் வேலியும்...."

முல்லை அதை அவசரமாக நவீனுக்கும், ஸ்ரீகுமாருக்கும் காட்டினாள். பின்பு புலியூர் கேசிகனை எடுத்து பரபரப்புடன் துழாவி அந்த வரிகளைக் காட்டினாள்.
"சிறு மலை" மை குட்னஸ் என்றான் நவீன் "அற்புதம் முல்லை மெக்கானஸ் கோல்டு மாதிரி இருக்கு!"

இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரே பாதை. இதே பாதையில் தான் கண்ணகி நடத்திருப்பாள். இளங்கோவடிகள் நடத்திருப்பார். சமணத் துறவிகள் பல்லக்கில் ஏறுவார்களா? இல்லை நடந்துதான் சென்றிருப்பார்.

"நெடுங்குளம்" ஹைவே ஓரமாக இடதுபுறம் ஒரு சிறிய சாலை பிரியுமிடத்தில் பஸ் நின்றது. இறங்கி நின்றதும் வரைபடத்தில் பார்த்தது போல எதுவும் தெரியவில்லை. ஒரு நூறு அடி நடந்தும் சாலை இரண்டாகப் பிரிந்தது.
அருகே மூங்கில் தட்டியடித்த கருமையேறிய சுவர்கள் கொண்ட ஒரு டீக்கடை தெரிந்தது. நவீன் “மூன்று டீ” என்றான்.

"சாலை இரண்டாகத் தானே பிரிகிறது?" முல்லை சற்று ஏமாற்றத்துடன் சொன்னாள். காலம் விழுங்கியிருக்கும் என்றபடி நவீன் ஸ்ரீகுமாரைப் பார்த்தான். சந்தேகம் வந்தால் பதில் சொல்லக் கூடியவர் அவர்தான் என்ற எண்ணம் வந்து விட்டிருந்தது. ஸ்ரீகுமார் தாடியைச் சொறிந்தபடி நெடிந்துயர்ந்து வளர்ந்திருந்த ஆலமரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“திண்டுக்கல் ரோட்டைச் சொல்றீங்களாம்மா?” என்று கடைக்காரன் கேட்டான்.

"ஆ" முல்லை ஆச்சரியத்துடன் விழித்தாள். "இந்த இடத்துல ரோடு மூணாப் பிரியும்னு மேப்ல இருக்கு...அதான்"

“ ஆமா கிழக்க போற வழி புதுக்கோட்டை இராமநாதபுரம் போகுது. மேற்க போற வழி திண்டுக்கல். நேராப் போனா மதுரை. இப்ப ஹைவே வந்துட்டதால திண்டுக்கல் வழி தெரியல"

திண்டுக்கல் சரிதான். மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அருகே செல்லும் வழி. மலைகள் ஓரம் செல்லும் வழியைத்தான் வலதுபுறம் செல்லும் வழி என்கிறார் போலிருக்கிறது. மான்கள், காடு, எயினர் குடியிருப்பு.. சரியாகத்தான் இருக்கிறது. அந்தக் காலத்தில் காடுகள் அடர்ந்திருந்திருக்கும். காடுகளினூடே இந்த திண்டுக்கல் வழி சென்றதால்தான் இதை கவுந்தியடிகள் தவிர்த்தார் போலிருக்கிறது. இப்போது இந்த பிரம்மாண்டமான ஹைவே இருக்கும் இடத்தில் தான் பழைய மதுரை வழி இருந்திருக்க வேண்டும்.

காற்று ஆலமரத்தின் இலைகளை மெல்ல அசைத்தது. அதன் இலைகளினூடே எங்கோ இளங்கோவடிகள் சிரிக்கும் சத்தம் கேட்பது போலத் தோன்றியது.
மூன்று வழிகள் பிரிவது உண்மைதான். நடுவழியில் அதாவது தாங்கள் செல்லப் போகும் வழியில் கோவலனை, வசந்தமாலை உருவில் வந்த வனதேவதை திரும்பிப் போகத் தூண்டுவது கதையில் நடக்கிறது.

கோவலனைத் திரும்பி புகாரிடத்தும், மாதவியிடத்தும் செல்லத் தூண்டும் கடைசி உந்துதல் அது. கோவலன் மதுரைக்குப் போகும்

உறுதியோடு அதைக் கடந்து செல்கிறான்..... அழிவை நோக்கி.

கடைக்காரர் மூன்று பிளாஸ்டிக் டம்ளர்களில் தேனீர் கொடுத்தார். நவீன் ஏன் அதில் தரமாட்டீர்களா என்று அடுக்கிவைத்திருந்த எவர்சில்வர் டம்ளர்களைக் காட்டினான். பதில் தயாராக இருந்தது. "ஆபிஸருங்க பிளாஸ்டிக் டம்ளர்லதான் வேணும்னு கேட்கறாங்க!" பிரச்சினை ஆபீஸர்களுக்கா அல்லது எவர்சில்வர் டம்ளர்களில் தேனீர் அருந்துபவர்களுக்கா? சாதி எப்படியெல்லாம் தந்திரங்கள் கண்டுபிடித்து உயிர் வாழ்ந்து வருகிறது....

நவீனுக்கு அந்த டீ யை கீழே வீசியெறிய வேண்டும் போலத் தோன்றியது. முல்லையும், ஸ்ரீகுமாரும் யோசனையில் மூழ்கியிருப்பதை பார்த்து மனதை மாற்றிக் கொண்டான். கடைக்காரரின் அருகில் சென்றான். "பார்த்துச் செய்யுங்க. யாராவது உண்மையிலேயே ஆபீஸரா இருந்து கோபப்பட்டுட்டாங்கன்னா கடைக்கு சீல் வெச்சுருவாங்க"

கடைக்காரனின் முகம் பேயறைந்ததைப் போலானதும் நவீன் திருப்தியுடன் முல்லையிடம் “கிளம்பலாமா” என்றான் “நேரா மதுரைக்குத் தானே?"

"இல்லை, பக்கத்தில் காளி கோவில் ஏதாவது இருக்குத்தான்னு பார்க்கலாம், எயினர்கள் ஐயை வழிபாடு நடத்தி கண்ணகியை கொங்கர் செல்வின்னு சொன்ன இடம் பக்கத்துலதான் எங்காவது இருக்கணும்."

ஸ்ரீகுமார் சற்று தொலைவில் சாலையோரம் நின்றிருந்த ஒரு டெம்போவையும் அதை நோண்டிக் கொண்டிருந்த இரண்டு ஆட்களையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். முல்லை அதை கவனிக்காமல் கடைக்காரரிடம் “பக்கத்தில் ஏதாவது காளி கோவில் இருக்குதா?” என்றாள்.

"ஒரு பத்துப் பதினஞ்சி கிலோ மீட்டர் போனீங்கன்னா மலையோரம் ஒரு கோவில் இருக்கும். ஐயர் இருக்காரு"

"பத்துப் பதினஞ்சு கிலோமீட்டர் எப்படிப் போறது? ஏதாவது பஸ் வருமா?"

ஸ்ரீகுமார் சட்டென்று திரும்பி "அதோ நம்மாளுகதான் இருக்காங்களே" என்றார்.

"யாரு சார், தெரிஞ்சவங்களா? ஓ பாடிகார்ட்ஸா" என்று முல்லை வியப்புடன் கேட்டாள்.

" கருப்புப் பூனைப் படை!"

ஸ்ரீகுமார் நேராக டெம்போ ஆட்களிடம் சென்று மிகவும் பழகியவர்போல "ரிப்பேர் சரியாக ரொம்ப நேரம் ஆகுமா? எங்களை கொஞ்சம் தள்ளி காளி கோவில்கிட்ட விடறீங்களா?"என்றார்.

அந்த ஆட்கள் கொஞ்சம் சங்கடத்துடன் நெளிந்தனர், "இதோ இப்ப ரெடியாயிரும் சார் போகலாம்" என்று கடன் வாங்கியவர்களைப் போல அவர்கள் உளறியதைப் பார்த்து மற்ற இருவருக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. டெம்போவி அவர்கள் பின்புறம் ஏறிக் கொண்டதும், கடைக்காரன் கூச்சலிட்டான். "ரைட்ல மலையோரம் கோயில். லெப்ட்ல ஒரு டீக்கடை இருக்கும்"

"ஆபீஸருக ஜாக்கிரதை" என்று பதிலுக்குக் கத்தினான் நவீன்.

"திருந்திடுவானா?" முல்லையும் டம்ளர் விவகாரத்தைக் கவனித்துத்தானிருந்தாள்.

"அதுசரி. இதுக்கெல்லாம் திருந்திடுவானா? அடுத்த சமுதாயக் கூட்டம் நடக்கிற வரைக்கும் கொஞ்சம் சங்கடப் படுவான். அவ்வளவுதான். பண்பாட்டுப் புரட்சி நடத்தணும்"

"சீக்கிரம் நடத்தித் தொலைங்க. தாங்க முடியலை" என்றாள் முல்லை. மேலே கூரை இல்லாத வாகனத்தில் விரைவது அவளுக்குத் தலைசுற்றுவது போலத் தோன்றியது. “ஓப்பன் வண்டில போனா இப்படித்தான் இருக்கும்” என்ற நவீன் “மேலே பார்க்காம வேறெங்காவது பார்” என்றான்.

ஸ்ரீகுமார் சிகரெட் பற்ற வைத்தார்.

"சார் ரொம்பதான் சிகரெட் பிடிக்கறீங்க..."

"வித்தியாசமான அனுபவங்கள். கொஞ்சம் அட்ரினலின் அதிகமாகச் சுரக்குது, நாளைக்குச் சரியாயிரும்"

"உங்களுக்கு ரொம்பதான் குறும்புசார்"

அவர் கண்களுக்குக் கீழ் தோன்றிய சுருக்கங்களைப் பார்த்துத் தான் அவர் சிரிக்கிறார் என்று ஊகிக்க முடிந்தது.

நவீன் "இப்ப நாம தேடறது என்ன இடம் முல்லை?" நவீன் கேட்டான்.

"கவுந்தியடிகளும், கோவலனும், கண்ணகியும் நடந்து களைத்துப் போன பின்பு ஐயை கோட்டம் என்கிற ஒரு கோவிலில் மறைவாக உட்கார்ந்து ஓய்வெடுக்கிறாங்க. அப்ப மறவர்கள் என்கிற கூட்டத்தினர் சாமி கும்பிடுறாங்க. . அவங்க ஊருக்கு நடுவில ஒரு இடத்தில கூட்டமா உட்கார்ந்து சாப்பிடுவாங்களாம். அங்கதான் ஒரு பெண்ணுக்கு சாமி வருது. கொற்றவைக்கு நேர்த்திக்கடன் செலுத்தல, அதனாலதான் சரியான கொள்ளை கெடைக்கல. பலி கொடுங்க என்கிறாள். அவங்க தங்கள் தலைகளைத் தாங்களே வெட்டிப் பலிகொடுப்பார்களாம். அவங்க ஒரு பெண்ணுக்கு கொற்றவை வேடம்போட்டு கலைமான் மேல் ஏற்றி ஐயை கோட்டத்திற்கு கூட்டிட்டு வந்து அவளையும் ஐயையும் கும்பிடுறாங்க.

அப்ப சாலினின்னு ஒரு பெண் சாமி வந்து கண்ணகியை "கொங்கர் செல்வி குடமலையாட்டி" அப்படீன்னு சொல்றா. இந்த எடத்துல எயினர் பற்றி நிறைய சுவாரஸ்யமான விஷயங்களை இளங்கோவடிகள் சொல்றார். ஒரு மறவன்கிட்ட காசில்லேன்னு கள் விற்கும் பெண் கள் தரமாட்டேங்கிறா. அவனுக்கு கோபம் வந்து ஆநிரை கவரப் போறான். கொற்றவையும் அவன் கூடப் போறாளாம்.

கொள்ளையடிச்சுட்டு வந்த ஆடுமாடுகளை மீட்க வந்தவங்கள துரத்தியடிக்கறாங்க. அந்த ஆடு மாடுகள், கள் விற்பவள், உளவு சொல்பவன், புள் நிமத்தம் சொன்னவன் வீடுகள்ள நெறஞ்சிருக்காம்."

“கொள்ளை அடிச்சாலும் என்ன பண்ணினாலும் கடைசில கள்ளுலதான் போகுமா?”

"அந்தக் காலக் குடிகாரர்கள் இவ்வளவு மோசமானவர்களா இருந்திருக்க மாட்டாங்கன்னு தோணுது"

"அப்புறம் ஏன் வள்ளுவர் கள்ளுண்ணாமை பேசறார்"

"நவீன் உனக்கு திருக்குறள் எல்லாம் தெரியுமா?"

"ஸ்கூல்ல படிச்சது, பஸ்ல பார்த்தது"

முல்லை சட்டென்று கத்தினாள், "நிறுத்துங்க கோவில் வந்துருச்சு."

நெடுஞ்சாலைக்கு அருகில் சிறு குன்றுகள் தெரிந்தன. ஒரு சிறிய குளம் வற்றிப் போய் சேறுடன் காணப்பட்டது. இரண்டு குடிசைகள் காணப்பட்டன. ஒரு பெரிய மரத்தோரம் சில வேல்கள் தரையில் நடப்பட்டிருந்தன. கோவில் என்பதற்குத் தவிர்க்க முடியாத அடையாளம். ஸ்ரீகுமார் டெம்போவிலேயே உட்கார்ந்து கொண்டு “நான் இங்கேயே இருக்கிறேன்” என்றார்.

நவீன் "இந்த வண்டில உங்களை எப்படி தனியா விட்டுட்டு போறது? வாங்க. இல்லாட்டி தூக்கிட்டுப் போவோம்" என்றான்.

ஹைவேயைக் கடப்பது ஒரு தனிக்கலை. எதிரில் எதுவும் வருவதற்கு வாய்ப்பில்லாத இடம் என்ற நம்பிக்கையில் வாகனங்கள் கண்மூடித்தனமான வேகத்தில் விரைந்து கொண்டிருந்தன. மாலையாகிவிட்டாலும் வீசிக்கொண்டிருந்த காற்று இன்னும் சூடாகத்தானிருந்தது. சுற்றிலும் வீடுகளே இல்லை. கோவில் போலிருந்த பந்தலுக்கு அருகிலிருந்த குடிசையிலிருந்து ஒரு பூசாரி இவர்களைப் பார்த்தவுடன் வெளியே வந்தார். அவர் பிராமணர்களைப் போலவே பூணூல் அணிந்திருந்தார். அவர்களைப் போலவே கரைவது போன்ற குரலில் இனிமையாகப் பேச முயன்றார். இன்னும் கொஞ்சம் முயற்சி செய்தால் வெற்றி பெற்றுவிடுவார் என்று தோன்றியது.

"இது என்ன கோவில்?"

"சிவன் கோவில். பசுபதீஸ்வரர்"
"காளி கோவில் இல்லையா?"
"ஆங்.... இது காளி கோவிலும் தான்."

என்றவர் தனது குடிசைக்குள் ஓடிச் சென்று சில வில்வ இலைகளைக் கொண்டுவந்து கொடுத்து மென்ற படியே ஆலமரத்தைச் சுற்றச் சொன்னார். வேறு வழியில்லாமல் முல்லை சுற்றத் தொடங்கியதும் சும்மா நின்ற நவீனிடம் சில போட்டோக்களைக் காட்டினார். ஒரு பாம்பு பால் குடித்துக் கொண்டிருந்தது சூரியனின் ஒளிகதிர்களில் ஒரு கிரீடம் தெரிந்தது.

அவர் நாக்பூர் அருகே ரயிலில் போய்க் கொண்டிருந்தாராம். இங்கே போகச் சொல்லி ஆண்டவன் ஆணையிட்டானாம், வந்துவிட்டாராம். இந்த இடத்தில் தனியாகக் குடியிருக்கும் அவரது துணிச்சலைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

முல்லை கோவிலைச் சுற்றி வந்துவிட்டுப் "பக்கத்தில் வேறு காளி கோவில் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டாள்.

" இல்லவே இல்லை"

சாலையைக் கடக்கும் சர்க்கஸ் வித்தைக்குப் பிறகு நவீன் ஸ்ரீகுமாரிடம் கேட்டான் "ஆர்க்கியாலஜிஸ்ட் சார், இது புதுக் கோவில்னு உங்களுக்குத் தெரியுமா?

"தெரியும்"

"அப்புறம் ஏன் சொல்லல?"

"ஏன் புதுக் கோவிலைப் பார்க்கக் கூடாதா?"

சரியான மொடை' என்று முணுமுணுத்தது அவருக்குக் கேட்டிருக்கலாம். அவர் அவன் தோளைத் தட்டிச் சிரித்தார்.

"இந்த மாதிரி கோவில்கள் பல நேரங்கள்ல ஏதாவது பழைய நடுகல், கல்வெட்டைச் சுற்றி கட்டப்பட்டிருக்கும். அப்படி ஏதாவது

இருக்கான்னு
பார்த்தேன்"

ஸ்ரீகுமார் தூரத்தில் தெரிந்த கடையைக் காட்டி டீ குடிக்கலாம் என்றார். முல்லை சற்று சங்கத்துடன் டெம்போக்காரர்களைப் பார்த்தாள். அவர்கள் ரொம்ப நேரமாக சும்மா நின்று கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை ஏதாவது நல்ல மனிதர்களாக இருந்துவிட்டால்?

"ஒண்ணும் கோவிச்சுக்க மாட்டாங்க" என்றவர் “பிரதர், டீ குடிக்கப் போறோம், நீங்க போறதுன்னா போங்க” என்றார்.

“பரவால்ல சார், இந்த எடத்தில உங்களுக்கு வேற வண்டி எப்படி சார் கெடைக்கும். வயசுப் புள்ளைய வேற வெச்சிருக்கீங்க” என்று பவ்யமாகக் கூறினான் டிரைவர்.

” பார்த்தீங்களா?” ஸ்ரீகுமார் நடக்கத் தொடங்கினார்.

டீக்கடை சாலையிலிருந்து சுமார் ஐம்பது அடி தள்ளி அமைந்திருந்தது. விசாலமான முற்றம், சில பிளாஸ்டிக் சேர்களும், மேசைகளும் போடப்பட்டிருந்தன. மாலை மயங்கும் இந்த நேரத்தில் வெளியே உட்கார்ந்து நெடுஞ்சாலையில் விரையும் வாகனங்களைப் பார்ப்பது அற்புதமாக இருந்தது. சாலை குன்றுகளுக்கிடையே வளைந்து சென்று மறைந்தது. குன்றுகள் ஏற்கெனவே இருளில் மறையத் தொடங்கியிருந்தன.

விளையாட்டு வீரனைப் போலத் தோன்றிய கடைக்காரரிடம் டீயும், பிஸ்கட்டும் சொல்லிவிட்டு ஸ்ரீகுமார் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அவர்களையும் அமரச் சொன்னார். ”துவரங்குறிச்சி பக்கத்திலயா” என்று கேட்டு உறுதிப் படுத்திக்கொண்டார்.

“காளி கோவிலைக் கண்டுபிடிக்க வாய்ப்பில்லையா சார்?" என்றாள் முல்லை.

"இல்லவே இல்லை"

"ஏன் சார்?"

"எயினர்களுடைய குடியிருப்புகள் அப்படியொன்றும் நிரந்தரமானவை அல்ல".

"யார் சார் இந்த எயினர்கள்? ஏன் கொள்ளையடிக்கறாங்க?".

"அது எப்படி சார் கொள்ளையடிப்பது தொழிலா இப்ப வரைக்கும் இருந்திருக்க முடியும்? இவங்களும் அவங்களும் ஒண்ணா?" நவீனும் பேச்சில் கலந்து கொண்டான்.

"பல பழங்குடியினங்களோட பெயர்கள் பழைய இலக்கியங்களில் சொல்லப்படுது. இந்த எயினர் மட்டும்தான் பொதுவான பெயரில் சொல்லப்படறாங்க. தென் தமிழ்நாட்ல எயினர் இருந்ததா சிலப்பதிகாரம் சொல்லுது. பெரும்பாணாற்றுப்படை மாதிரி பாட்டுக்கள்ல இவர்கள் காஞ்சீபுரம் போற வழில அதாவது வடதமிழ்நாட்லயும் இருந்ததாச் சொல்லப்பட்டிருக்கு. இவ்வளவு பெரிய பரப்புல ஒரே பழங்குடியினம் இருப்பது சாத்தியமாங்கறது கொஞ்சம் குழப்பமாயிருக்கு. ஒருவேளை ஒரேவகையான வாழ்க்கை முறையைப் பின்பற்றின மக்களை எயினர்ன்னு ஒரு பொதுப் பெயர்ல கூட அழைச்சிருக்கலாம். இவர்களுடையது திருட்டுத் தொழில் மட்டுமில்ல. மாடு மேய்ப்பதும், வேட்டையும் கூட இவர்களுடைய தொழில்தான். அதான் மாடுகளைக் குறிவெச்சுக் கொள்ளையடிக்கிறாங்க. கூட்டு வாழ்க்கை வாழ்ந்த ஒரு பழங்குடியினம் எயினர்கள். நகரங்கள்ல இருந்த நாகரீகமானவங்க, கண்ணகி மாதிரி உயர்குலப் பெண்களையெல்லாம் தூக்கிப் புருஷன் பொணத்தோட தீயில போட்டப்ப இந்தப் பெண்கள் சுதந்திரமா இருந்திருக்காங்க. இரண்டு முக்கியமான அரசுகளுக்கு பாண்டிய, சோழ அரசுகளுக்கு நடுவுல எயினர் வாழ்ந்ததா சிலப்பதிகாரம் சொல்ற இந்தப் பகுதி இருக்கு. வாழ்விடங்கள், மேய்ச்சல் நிலங்கள் இந்த அரசுகளால

கபளீகரம் செய்யப்பட்டதால வேற வழியில்லாம பழங்குடி மக்கள் இப்படி கொள்ளையை ஒரு வாழ்க்கை முறையாத் தேர்ந்தெடுத்திருக்கலாம்"

"இந்த இடத்திலிருந்துதான் கண்ணகியும், மற்றவர்களும் வெயில் தாங்காம இரவில் நடக்கறாங்க? அவங்கள ஏன் சார் கொள்ளையடிக்கல"

"அவங்களுக்குத் தேவை ஆடுமாடுகள். இந்த சிலம்பை வெச்சிட்டு என்ன பண்ணுவாங்க பாவம்? ஏறக்குறைய அநாதைங்க மாதிரி நடந்து போற மூணு பேரையும் பார்த்துப் பரிதாபப் பட்டு விட்டிருக்கலாம்."

"கொங்கர் செல்வின்னு ஏன் சொல்றாங்க? கொங்குநாட்டுப் இடையர்களோட பெயர் ஏன் கோவலனுக்கு? மாதவி அனுப்பிய ஆள் தேடிட்டு வரும்போது ஏன் கோவலன், கண்ணகி வீட்டிலிருந்து யாரும் வரல?"

" தெரியலயே! இதுக்கு மேலே என்னால யோசிக்க முடியல" ஸ்ரீகுமார் அலட்டிக் கொள்ளாமல் கை விரித்ததை முல்லையால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"எல்லாக் காலத்துலயும் ஒருத்தியைக் காணோம்னா தேடிட்டு வருவாங்க தானே? இதுல என்னமோ தவறா இருக்குன்னு எனக்குத் தோணுது சார்." என்றாள்.

ஸ்ரீகுமார் தோள்களைக் குலுக்கிக் கொண்டு அமைதியாக இருந்துவிட்டார். இரவு முழுமையாக கவிந்துவிட்டது. மலைகள் நிழலுருவங்கள் போலத் தோன்றின. டீக்கடையின் டியூப்லைட் ஒளியையும், விரைந்து கொண்டிருக்கும் வாகனங்களின் ஒளியையும் தவிர வேறெந்த வெளிச்சமும் இல்லை.

முல்லை தனக்குள் நினைத்துக் கொண்டாள், இந்த இடம் ஐயை கோட்டம் அல்ல. ஆனால் உத்தேசமாக இந்த இடமாக இருக்கலாம். அப்படியானால் இங்கிருந்துதான் இரவில் நடப்பது என்று அவர்கள் முடிவு செய்திருக்க வேண்டும். பூச்சிகள் மிதிபடலாம் என்பதால் இருளில் நடப்பது சமணத்துக்கு எதிரானது என்றாலும் எதார்த்தத்தைக் கணக்கில் கொண்டு கோவலன் இந்த முடிவை எடுக்கிறான் என்று பேராசிரியர் பஞ்சாங்கம் சொல்கிறார். சரியாகத்தானிருக்கிறது.

ஹைவேயில் இத்தனை கார்கள் போய்வந்து கொண்டிருக்கும் போதே முல்லைக்கு இருளில் நடப்பது அவ்வளவு நன்றாகத் தோன்றவில்லை. அந்தக் காலத்தில் எப்படியிருந்திருக்கும்? வெட்டவெளிகளில் இருள் அவ்வளவு அடர்த்தியாக பயமுறுத்துவதாக இருப்பதில்லை என்பது

கண்ணகிக்கு ஆறுதலாக இருந்திருக்குமோ? இந்த இடத்திற்கு வந்து சேர ஏறக்குறைய இரண்டு மாதங்கள் நடந்திருப்பார்கள். இரண்டு மாதத்தில் வேறொரு வாழ்க்கைக்கு அவ்வளவு தூரம் பழகிப்போயிருக்க முடியுமா? ஆனால் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் கண்ணகி தனது உடல் சிரமங்கள் குறித்த வாய்திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை. பாவம் அப்பாவிப் பெண் எவ்வளவு கஷ்டப்படுகிறாள் என்றுதான் தோன்றுகிறது. இவளா இவ்வளவு கோபப்பட்டது, பாண்டியனின் உயிரைப் பறித்தது, மதுரையை எரித்தது?

மேற்கே இருண்டு தெரிந்த குன்றுப் பிரதேசத்திலிருந்து காற்று வீசியடித்து. நவீன் சாலையோரம் நின்று காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தான். முல்லையும் மெல்ல நடந்து அவனருகே நின்று கொண்டாள். பகல் நேர வெப்பத்திற்குப் பிறகு வானம் இருண்டு வந்தது. முல்லையின் நினைவுகள் சிறிது அறுந்து திரும்பவும் கண்ணகிக்குத் திரும்பின. இல்லை அவள் அப்படியொன்றும் அப்பாவியாகத் தோன்றவில்லை. தேவந்தி வந்து கோவிலுக்குப் போகலாம் என்று கூப்பிடும் போது எவ்வளவு பிடிவாதத்துடன் மறுக்கிறாள். ”பத்தினிப் பெண்டிர் கோவிலுக்குப் போகமாட்டார்களாம்." அவ்வளவு உறுதியும் பிடிவாதமும் உடையவள்தான் அவள். பலவீனங்களுக்கு இடம் கொடுக்காதவளா அல்லது நுண்ணிய உணர்வுகள் இல்லாத பிளாக் அண்ட் ஒயிட் பெண்ணா?.

அந்தக் கேரக்டர் கொஞ்சம் அப்படித்தான் படைக்கப் பட்டிருக்கிறது. பின்பு அவள் செய்யக்கூடிய பிரம்மிக்கத்தக்க விஷயங்களுக்கு அவள் அப்படித்தான் இருக்கவேண்டும்.

பஞ்சாங்கத்தின் ”சிலப்பதிகாரம் சில பயணங்கள்’ என்ற நூலை நினைத்துக் கொண்ட முல்லையின் இதழ்களில் புன்னகை அரும்பியது. நவீன் அருகே வந்து ”ஏன் சிரிக்கிறாய்?” என்று கேட்டான். முல்லை அவனிடம் பஞ்சாங்கத்தின் புத்தகத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு ”அவர் ஒரு வித்தியாசமான ஆய்வை முன்வைக்கிறார். கவுந்தி அடிகளுக்கு வயது முப்பத்தி இரண்டுக்கும் குறைவாகத்தானிருக்கும் என்கிறார்.” என்றாள்.

‘ஓ நோ சாத்தியமே இல்லை’ நவீன் அவசரமாகத் தலையசைத்து மறுத்தான்.

“நீ ஏன் இவ்வளவு டென்ஷன் ஆகறே?” முல்லைக்கு அவன் பதற்றத்தைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

“கவுந்தியடிகள்ன்னா கே.பி சுந்தராம்பாள் ஞாபகம் வருது. கே.பி. சுந்தராம்பாள்ன்னா ஔவையார் ஞாபகம் வருது. வேற உருவம் மனசில வரவே மாட்டேங்குது. நீ திடீர்ன்னு வந்து கவுந்தியடிகள் இளம்பெண்ணுன்னு சொன்னா. . . “

“நான் சொல்லலப்பா” என்றாள் முல்லை சிரிப்புடன்.

ஸ்ரீகுமார் சீரியஸ்ஸான முகத்துடன் “முல்லை உனக்கு கே.பி சுந்தராம்பாள் தெரியுமா?” என்று கேட்டார்.

“இங்க வர்றதுக்கு முன்னாடி பூம்புகார் படத்தோட சிடி கஷ்டப்பட்டு பிடிச்சுப் பாத்தேன். கவுந்தியடிகளா வர்ற லேடி . . . “

நவீன் வாழ்க்கையென்னும் ஓடம் என்று பாடினான். ‘நம்ம புரபஸர் காங்கேயத்துக்கு உலா போறதுக்கு முன்னாடி இந்தப் பாட்டுத்தான் டி.வி.ல ஓடுச்சு. . . உடனே சேனல் மாத்திட்டாரு”

"அடுத்த பிளான் என்ன மதுரைதானா?" நவீன் கேட்டதை காற்று பாதி பறித்துச் சென்றது. முல்லை திரும்பி ஸ்ரீகுமாரைப் பார்த்தாள். அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராகப் புகை விட்டுக் கொண்டிருந்தார்.

"பெரிசு ரயில் இஞ்சின் மாதிரியே ஆயிடுச்சு" என்றான் நவீன். செல்லை எடுத்து மணி பார்த்துவிட்டு. “எட்டு. மதுரைக்குப் போய்ச்சேர பத்துக்கு மேல ஆயிடும். வழியில் எங்காவது தங்கிவிடலாம்” என்றான்.

முல்லை ஸ்ரீகுமாரை நெருங்கினாள். ஏதோ எண்ணத்தில் மூழ்கி உறைந்து போயிருந்த அவரை எழுப்ப மனமில்லாமல் அவர் அருகிலேயே நின்று கொண்டாள்.

அவர் சட்டென்று நிமிர்ந்து கேள்விக் குறியுடன் பார்த்தார்.

"அவங்க மதுரைக்கு எப்படி சார் போயிருப்பாங்க? இதே ஹைவேல நேராப் போனாங்களா? "

" இல்லை. ஐயை கோட்டத்தில் எயினர் சாமியாடுகிறாங்க. ஒரு கிராமத்தில் தங்கி இருக்கறப்ப மாதவி அனுப்பிய தூதன் கௌசிகனை கோவலன் பார்க்கிறான். அப்புறம் நேராக வைகை ஆற்றைக் கடந்து புறநகர் மதுரைப் போய்ச் சேர்ந்திடுறாங்க. வழியைப் பற்றி அவர் பேசறதில்லை. ஆனால் பழைய பெருவழி மாங்குளம், அழகர் மலை வழியாத்தான் மதுரைக்கு வருது. அழகர் ஆற்றில் இறங்கும் இடத்தில் தான் இவங்களும் ஆற்றைக் கடந்திருக்கணும். சிலர் அழகர் மலை வழி, மாங்காட்டு மறையோன் சொல்ற இடதுபக்கம் போகிற வழின்னு சொல்றாங்க. மூணு குளங்கள் அழகர் மலைல இருக்கு. சிலம்பாறுன்னு ஒரு ஆறும் அங்க ஓடுதாம். அழகர் மலைக்கு திருமாலிருஞ்சோலைன்னும் பேர் இருக்கு. அது வைணவத்தலமும் கூட. அதனால அந்த வழில அவங்க போகலன்னு ஒரு கருத்து இருக்கு. "

“நீங்க என்ன சார் நெனக்கிறீங்க?’

”நான். ..” ஸ்ரீகுமார் சிந்தித்தார். “அவர்கள் பெருவழியில்தான் போயிருக்கணும்னு நெனக்கிறேன். வேறு வழில போயிருந்தால் அது இயற்கைக்கு மாறான விஷயம். எனவே இந்தக் காரணத்தால் குறுக்கு வழில போனாங்கன்னு இளங்கோ சொல்லியிருப்பார்”

“மேலூரிலிருந்து மதுரை போகும் வழில முக்கியமா ஏதாவது இருக்கா சார்?” என்று முல்லை கேட்டாள்.

‘ஒண்ணுமே இருக்காது. ஹைவேல ஒரு முப்பது கிலோமீட்டர். அரைமணிநேரத்துல மதுரை வந்துரும்”

”அப்ப அழகர் மலை வழிலயே போகலாம். அதையும் பார்த்தமாதிரி இருக்கும்” என்றாள் முல்லை.

"இது சுற்று வழி" என்றான் நவீன்.

"சுற்று வழிதான். ஆனால் பழைய வழி இப்படித்தான் மலைகள்,

குன்றுகளோரம் போகும். மாங்குளத்திலிருந்து மீனாட்சி புரம் என்ற கிராமத்திற்குப் போனால் மலைமேல் சமணர் குகை இருக்கிறது. இப்படி சமணர் குகைகள் நெடுஞ்சாலை ஓரம் தான் இருக்கும்." அதிகமாகப் புகை பிடித்ததால் ஸ்ரீகுமாரின் குரல் கரகரப்பாகி அவர் மூக்கில் பேசுவது போலிருந்தது.

"பழைய வழியில் போனால் சமணர் குகைகளைப் பார்க்கலாமா?" முல்லை ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஒரு கிலோமீட்டர் மலை ஏறத்தயாராக இருந்தால்...."

முல்லை டெம்போவை நோக்கி ஓடினாள். ஏற நினைத்தவள் சற்றே தயங்கி நின்றாள். வயிற்றைப் பிரட்டியது நினைவுக்கு வந்தது. கர்ம சிரத்தையுடன் காத்துக் கொண்டிருந்த டிரைவர் அவளை முன்னால் ஏறிக் கொள்ளச் சொல்லி கிளீனரை பின்னால் தள்ளிவிட்டான்.

"மதுரைக்குத் தானேம்மா?"

"இல்ல மேலூர்."

"மேலூர்....?"

"ஆமாம் அங்கிருந்து காலைல மாங்குளம் போய் பழைய கால குகைகளைப் பார்த்துட்டு, அழகர் மலை வழியா மதுரைக்குப் போகலாம்!"

டிரைவர் அவளைக் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டே வண்டியை ஸ்டார்ட் செய்தான். கும்மிருட்டாகத் தெரிந்த குன்றுகளின் நடுவே வண்டி விரையத் தொடங்கியது.

இரைச்சல், நெரிசல், வெப்பம், தரையில் கால்வைக்க முடியாத சகதியோடு மேலூர் வந்தது. இங்கே மழை பெய்திருக்க வேண்டும். இது நல்ல ஓட்டல் என்று ஒரு பிரம்மாண்டமான ஐந்துமாடிக் காம்ப்ளெக்ஸ் முன் டிரைவர் வண்டியை நிறுத்தினான். இருண்டு போய் வெறுமையாகப் பார்க்கவே சங்கடம் ஏற்படுத்தியது அந்த ஓட்டல். மேலூர் ஒரு கிராமமாக இருக்கும் என்று முல்லை நினைத்திருந்தாள். இவ்வளவு பெரிய கட்டடம் வியப்பளித்தது.

ரூம் பாய் உலகத்தின் உச்சிக்கே அவர்களை அழைத்துப் போவது போலத் தோன்றியது. அனைத்துத் தளங்களும் வெறிச்சோடிப் போயிருந்தன. எல்லாவற்றிலும் ஷட்டர் இறக்கப்பட்ட கடைகளே காணப்பட்டன, இரவில் பூட்டிவிட்டுப் போய்விடுவார்கள் என்றான் அவன். ஐந்தாவது மாடியில் லாட்ஜ் இருந்தது. எல்லா அறைகளும் காலியாக இருந்தன. அவர்களுக்குக் காட்டிய அறை மிகப் பெரியதாக, பல தடுப்புகளுடனிருந்தது. மூடிவைக்கப்பட்ட இடங்களில் வீசும் மொக்கை வாடை சுர்ரென்று மூக்கில் ஏறியது. ரூம்பாய் கதவைத் திறந்து வைத்தால் வாசம் போய்விடும் என்றான். ஜன்னலின் வெளிப்புற விளிம்புகளில் அழுக்கும், தூசியும் அப்பிக் கிடந்தன. முல்லை ஓடிவிடலாமா என்று நினைத்தாள். ஆனால் ஓய்விற்காக உடல் கெஞ்சியது. ஒரு பத்து மணி நேரம்தானே பறந்துவிடும்....

இதுதான் கிடைத்தது என்று அவன் பரோட்டா வாங்கி வந்தான். பரோட்டாவைப் பற்றி எவ்வளவு குறை சொல்லப்பட்டாலும் இவர்கள் எந்த நேரமும் பரோட்டாவே சாப்பிடுகிறார்களே என்று முல்லை கவலையுடன் கேட்டாள்.

"ஒருவிதத்தில் புரோட்டா தமிழ்நாட்டின் தேசிய உணவு ஆகிவிட்டது. சேலத்தில் மூன்று நேரமும் அதையே தின்பவர்கள் உண்டு, டயர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். "

19

முல்லை காலையில் விழித்து வெளியே வந்த போது ஸ்ரீகுமார் “குட் ஆப்டர்நூன்” என்றார். ஆப்டர்நூனா? மணி ஒன்பதரை. நவீன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். இந்த அழுக்குப் பிடித்த அறையில் அவளுக்குச் சரியாகத் தூக்கம் வரவில்லை. வெறிச்சோடிப் போயிருந்த காம்ப்ளெக்ஸ் வேறு அவளுக்கு இனம்புரியாத பயத்தை ஏற்படுத்தியிருந்தது. இரவில் இரண்டு முறை எழுந்து ஸ்ரீகுமாரைப் பார்த்துக் கொண்டாள். உண்மையில் யாராவது வந்து கதவை உடைத்தால் கூட வெளியே தெரியாது. எப்படியோ அரைகுறைத் தூக்கத்தோடு இரவு கழிந்திருந்தாலும் காலை நேரம் புத்துணர்ச்சியுடனேயே இருந்தது. காலைக் குளிர் மறைந்து வெக்கை அடித்துக் கொண்டிருந்தது. எப்படி இந்த நவீனால் தூங்க முடிகிறது. ஒரு தலையணையை எடுத்து வீசலாமா என்று நினைத்தவள் ஸ்ரீகுமார் உட்கர்ந்திருப்பதைப் பார்த்து மனதை மாற்றிக் கொண்டாள்.

ரொம்பவும் உரிமை எடுத்துக் கொள்கிறோம் என்று அவர் நினைத்துக் கொள்ளக்கூடும். சுத்தமான ஷேவிங், கொஞ்சம் சிரித்த முகம் என்றிருந்தால் நவீன் லேடிகில்லர் ஆகியிருப்பான்.... தாடி வைத்த ஆண்களைப் பெண்களுக்குப் பிடிக்கும் என்று சிலர் நினைத்துக் கொள்வதைப் பார்த்தால் அவளுக்கு சிரிப்பாக வந்தது. தாடிக்கு எண்ணை போடும் சர்தார்ஜிகள்...

அவர்கள் கிளம்பி கீழே வருவதற்கு பதினோரு மணிக்கு மேலாகிவிட்டது. மீண்டும் படி ஏறப் பயந்து மூட்டை முடிச்சுகளோடு வந்தபோது கடமையுணர்வுடன் டெம்போக்காரர்கள் படிகட்டில் உட்கார்ந்திருந்தார்கள்.

"வணக்கம் சார்”, என்று அசட்டுச் சிரிப்புடன் அவர்கள் வரவேற்றது ஸ்ரீகுமாருக்குக் கடுங்கோபத்தை ஏற்படுத்தியது அவர் முகத்திலேயே தெரிந்தது. "நாங்களும் இங்கேயே தங்கிட்டோம்."

"மீனாட்சிபுரம் போகணும். வர்றீங்களா? பணம் தருகிறோம்!"

பணத்தைப் பற்றிப் பேசியே இருக்க வேண்டியதில்லை. அவர்கள் தயக்கமின்றி ஒப்புக் கொண்டார்கள். தமிழ் சினிமாக்கள் பார்த்து முல்லைக்கு அடியாட்கள் பற்றி வேறு பிம்பம் இருந்தது. நெற்றியில் குங்குமம் பொட்டு, சாதாரணமான காக்கி சட்டை, பேண்ட், கையில் கருப்புக் கயிறு இப்படி இருந்த நடுத்தர வயது டிரைவரை அடியாள் என்றோ ஒற்றன் என்றோ நினைக்க மனம் வரவில்லை. நேரடியாகக் கேட்டுவிட்டால் என்ன? எதற்கு இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு? என்று நினைத்தவள் வேண்டாம் மனதை மாற்றிக் கொண்டாள்.

"போகலாம்"

வண்டி ஹைவேயில் இருந்து மாங்குளம் போகும் பாதையில் திரும்பியதும் எங்கோ அத்துவானக்காட்டில் செல்வதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஒரு கிராமத்தில் ஓட்டல் போலவும் பேக்கரி போலவுமிருந்த ஓட்டுக் கூரை போட்ட கடையைக் கண்டு ஸ்ரீகுமார் நிறுத்திச் சொன்னார். கருமையேறிய மரங்களைக் கொண்ட பழங்கால கண்ணாடி ஷோகேஸ், பழைய பெஞ்சுகள், மேஜைகளுடனிருந்தது ஓட்டல். ஆனால் சுத்தமாகக் காணப்பட்டது. ப்ரிட்ஜில் தண்ணீரும், குளிர்பானங்களும் இருந்தது ஆச்சரியமளித்தது. சாப்பிட்டதும் ஸ்ரீகுமார் புரோட்டாவும், தண்ணீர் பாட்டில்களும் வாங்கிக் கொண்டார். நவீன் வியப்புடன் கேட்டதற்கு "நான் மலையில் இரவு தங்கப் போகிறேன். இவனுக சாகட்டும்" என்று கிசுகிசுத்தார். அவர் கண்கள் குறும்புடன் மின்னின.

நவீன் "நாங்களும்...." என்று தொடங்கியவன் முல்லையைப் பார்த்து நிறுத்திக் கொண்டான். அவனது உற்சாகம் முல்லையையும் தொற்றிக் கொண்டது. இந்தப் பயணத்தின் சாகசங்கள் முழுமையடையட்டுமே திறந்த வெளியில் நடந்து அல்லது உறங்கி ஒரு இரவையாவது கழிக்க வேண்டுமென்று முல்லையும் நினைத்துத்தான் இருந்தாள். இப்போது தானாக சந்தர்ப்பம் வருகிறது.

"நாங்களும் இருக்கோம்"
கடையிலிருந்த போண்டா, பஜ்ஜி, பிஸ்கெட் பரோட்டா எல்லாம் மூட்டை

கட்டப்பட்டன.

"தண்ணிதான் முக்கியம் நிறையத் தண்ணி வாங்கிக்கலாம்"

ஸ்ரீகுமார் வழிகாட்ட வண்டி ஏறக்குறைய பழங்குடி கிராமம் போலிருந்த ஒரு கிராமத்தைச் சுற்றிக் கடந்து தெற்கு நோக்கி மலையோரம் சென்றது.

"ஏதாவது ஆதிவாசி கிராமமா சார்?"

"இல்லை, இங்கே ஆதிவாசிகள் இல்லை."

மலையடிவாரத்தில் தொல் பொருள் ஆய்வுத் துறையின் போர்டு ஒன்று அனாதையாக நின்றது. அதற்குமேல் ஒரு தகரக் கூரை போடப்பட்டிருந்தது. அருகே புற்கள் ஆங்காங்கே வளர்ந்திருந்த ஒரு பெரும் மொட்டைப் பாறைமேல் படிக்கட்டுகள் காணப்பட்டன. இரும்புப் பைப்புகள் கொண்டு கைப்பிடியும் அமைக்கப்பட்டிருந்தது. . .

"போக வேண்டிய இடம் மலைக்குப் பின்னால் இருக்கிறது. மூன்று நாலு மணி நேரம் ஆகும். நீங்க கௌம்புங்க" என்று ஸ்ரீகுமார் டெம்போக்காரர்களிடம் சொன்னார்.

"அழகர் மலையில் ஒரு சின்ன வேலை இருக்கு, நாங்க அதுக்குள்ள போயிட்டு வந்துரவா அண்ணே!" விடாக் கண்டர்கள்.

"சரி போன் நம்பர் கொடுங்க"

"நீங்க கொடுங்க" டிரைவர் ஸ்ரீகுமாரின் எண்ணைப் பெற்றுக் கொண்டு ஒரு ரிங் விட்டுத் துண்டித்தான். "பேக்குகளை வண்டியிலேயே விட்டுடுங்க"

"கேமரா, கம்யூட்டர் எல்லாம் அதிலதான் இருக்கு. இது இல்லாம மேலே போய் நாங்க என்ன பண்றது?"

சொல்லிவிட்டார்களே தவிர மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு மலையேறுவது உண்மையிலேயே சிரமமாகத்தானிருந்தது. மூச்சு வாங்கிக் கொண்டு மலை உச்சியை அடைந்ததும் ஒற்றையடிப் பாதை தெற்கே திரும்பியது. மருந்துக்கும் பசுமையே இல்லை. புற்கள் காய்ந்து கிடக்க பாறைகள் கொதித்தன. ஸ்ரீகுமார் சிரமப்படுவார் என்று நவீன் நினைத்தான்.

ஆனால் ஆரம்பத்தில் சற்று மூச்சு வாங்கியதைத் தவிர அவர் பெரிதாகத் தளர்ந்து போனதாகக் தெரியவில்லை. மலைக்கு மறுபுறம் வந்த பிறகுதான் தெரிந்தது அது இரண்டு அடுக்குகளாக இருப்பது. உள்ளே ஒரு பெரிய சமவெளி தென்பட்டது. கல்லுடைத்துச் செல்லும் ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. ஒரு பத்து நிமிட நடைக்குப் பிறகு அவர்கள் முதலில் ஒரு சிறிய குகையைக் கண்டார்கள்.

அது முற்றிலும் மூடியதாக இல்லாமல் வெயில் மழைக்கு ஒதுங்கும் நிழற்குடை போலத் தோன்றியது. அதன் வழியாக ஏறியதும் ஒரு விசாலமான பாறை பரப்பு பெரிய முற்றம் போல் அமைந்திருந்தது.

முற்றம் போல் அமைந்திருந்த பாறையின் மீது இன்னொரு பெரும்பாறை குடைபோலக் கவிழ்ந்து குகையை உருவாக்கியிருந்தது. ஓட்டை, சந்து எதுமில்லாமல் அற்புதமாக அமைந்திருந்தது குகை. சுமார் இருபது அடி அகலம் முப்பது அடி நீளமிருக்கும். திறப்பு இருந்த பக்கத்தில் ஒரு கதவு வைத்துவிட்டால் போதும் கச்சிதமான வீடு போலவே ஆகிவிடும். அழகாக மனிதர்கள் தங்கலாம். உட்புறம் ஆங்காங்கே துருத்திக் கொண்டிருந்த பாறை செதுக்கப்பட்டு சமமான சுவர்போலச் செய்யப்பட்டிருந்தது. ஓரத்தில் மழை நீர் அல்லது சுனைநீர் வழிந்து செல்வதற்கு இரண்டு அங்குல அகலத்துக்கு ஒரு மிகச் சிறிய வாய்க்கால் வெட்டப்பட்டிருந்தது. தரையில் வரிசையாக நிறைய வழவழப்பான நீள் சதுரங்கள் செதுக்கப்பட்டிருந்தன.

"இவைதான் சமண முனிவர்களின் படுக்கைகள்" என்றார் ஸ்ரீகுமார்.

குகையின் தரையைவிட இந்தப் படுக்கைகள் இரண்டங்குலம் தாழ்வாக இருந்தன. இதில் படுத்து உயரமான தரைமீது தலைவைத்துக் கொள்வார்களாம்.. தலையணை! ஆனால் நீள் சதுரங்கள் இரண்டடி அகலம் கூட இல்லாமல் குறுகலாக இருந்தன. அவை ஒன்றோடொன்று ஒட்டியுமிருந்தன.

"இதிலெப்படி மனிதர்கள் படுக்கமுடியும்?"

ஸ்ரீகுமார் குகைக்கு வெளியே இயற்கையாக அமைந்திருந்த

விலாசமான முற்றத்தில் வசதியாக அமர்ந்து கொண்டார். தனது பையின் மீது ஏறக்குறைய சாய்ந்து கொண்டார். முற்றத்துக்கு மேற்கே பாறை செங்குத்தாகச் சரிந்திருந்தது. சரிவு இருந்த இடத்தில் பாதுகாப்புக்காக இரும்புக் கம்பிகள் அமைக்கப்பட்டிருந்தன. வெது வெதுப்பான காற்று வருடிச் சென்றது. சுற்றிலுமிருந்த வறண்ட நிலப்பரப்பிற்கு மாறாக பச்சைப் பசேலென்ற ஒரு காட்டுக் கொடி குறுக்காகச் சென்றிருந்தது. அது மேலிருந்து கீழே வருகிறதா அல்லது கீழிருந்து மேலே செல்கிறதா என்று அனுமானிக்க முடியவில்லை.

"நவீன் இந்தக் கொடியைப் பிடிச்சுட்டு அப்படியே டார்ஜான் மாதிரி தொங்கி கொஞ்ச தூரம் போயிட்டு வா பார்க்கலாம்" பேராசிரியர் உல்லாசமான மனநிலையில் இருப்பது தெரிந்தது.

"சார் உங்களைப் பார்த்தால் எனக்குக் குட்டன் நினைவு தான் வருது" என்றான் நவீன்.

"யாரது குட்டன்"

"நோயல் குட்டன், என்னோட ஃபிரண்ட். பர்ஃபெக்ட் ஜென்டில்மேன். அவனுக்கு மூணு வயசுதான் ஆகுது. ஒரு நாள் நானும் அவனும் மொட்டை மாடில நின்னு பேசிட்டு இருந்தோம். ரொம்ப டீஸென்ட்டான டிஸ்கஷன். திடீர்னு அங்க கிடந்த செங்கல்லை எடுத்து தொப்புன்னு பக்கத்து வீட்டு மேல போட்டுட்டு ஓடிட்டான். நான் எப்படி கெஞ்சி கதறி பக்கத்து வீட்டுக்காரரைச் சமாதானப் படுத்த வேண்டியிருந்தது தெரியுமா?"

"ஏய் சாரும், உன்னோட நோயல் குட்டனும் ஒண்ணா?"

"ரெண்டு பேரும் என்னோட எலும்பை ஒடைக்கத்தான் வழி பண்ணறாங்க."

"முல்லை நீ கூட முயற்சி பண்ணலாம்" என்றார் ஸ்ரீகுமார் சீரியஸ்ஸாக.

"நீங்க யங்கா இருந்தப்ப இப்படியெல்லாம் பண்ணியிருக்கீங்களா சார்?" முல்லை அக்கறையுடன் கேட்டாள்.

"மேடத்தை லவ் பண்ண....?" நவீன் சேர்ந்து கொண்டான்.

"இரண்டும் வேறவேற...நான் அப்ப ஏக்டிவிஸ்ட்"

"என்ன ஏக்டிவிஸ்ட்?"

"சி.பி.ஐ(எம்.எல்) ஏ லிருந்து இஸட் வரைக்கும் இருக்கிறதுல எதுவும் இல்லை. நான் கோசாம்பியோட சீடன். வரலாற்றைப் புரிஞ்சுக்கணும்னா பழங்குடி மக்களோட வாழ்க்கையைப் புரிஞ்சுக்கணும்னு நெனச்சேன். என்னோட ரூம்ல எப்பவும் டிரைபல் ஏக்டிவிஸ்ட்கள் இருப்பாங்க. ஜெயந்தியும் அப்படித்தான். நாங்க பேசிட்டே இருப்போம். ஒரு நாள் எல்லாரும் கெளம்பினாங்க. நான் ஜெயந்திகிட்ட நீ இரு பேசிட்டுப் போலாம்னேன். பேசிட்டே இருந்தோம். ரெண்டு மணிநேரம் ஆயிடுச்சு. இங்கியே இருந்திட வேண்டியது தானேன்னேன். உறுதியா மறுத்துவிட்டா." பேராசிரியர் வருத்தத்துடன் சொன்னார்.

" ஐயையோ அப்புறம்?"

"ஏன்னு கேட்டேன். ரொம்ப குப்பை, சிகரெட் நாத்தம். இங்க முடியாதுன்னுட்டா. சரின்னு வேறவழியில்லாம நான் அவ குவாட்டர்ஸுக்குக் குடி போயிட்டேன்."

"அவ்வளவுதானா சார்?"

"அவ்வளவு தான்"

"சிகரெட் நாத்தம்?"

"வீட்ல அடிக்க மாட்டேன், இரண்டு மாடி இறங்கிப் போய் ரோட்ல அடிச்சுட்டு வருவேன். அதனாலதான் நான் ஃபிட்டா இருக்கறேன். பார்க்கறயில்ல?"

"சிகரெட்னால ஆரோக்கியமா இருக்கேன்னு சொல்ற முதல் ஆள் நீங்கதான் சார்"

ஸ்ரீகுமார் சற்று சரிந்து படுத்து நவீனையும், முல்லையையும் பார்த்து தாடிக்குள் சிரித்தார். அது திரும்பவும் நவீனுக்குக் குட்டனை

நினைவுபடுத்தியது. முல்லை என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தாள். அவளைப் பார்த்து அவர் இன்னமும் உரக்கச் சிரித்தார்.

"சமண முனிவர்கள் எப்படிப் படுத்திருப்பாங்கங்கற கவலை முல்லையோட மண்டையைக் கொடையுது."

நவீனும் வாய்விட்டுச் சிரித்தான். "கொடஞ்சி அந்தப் பக்கம் வந்துடும் போலருக்கு சார்"

"பாவம் அனிச்சமலர்ப் பெண். முகம் வாடும்முன் எனக்குத் தெரிந்ததைச் சொல்லி விடுகிறேன்"

"கோசாம்பியுடைய இந்திய வரலாறு படிக்க வேண்டும். உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். அசோகன் ஏன் கலிங்கப் போருக்குப் பின் போர் புரிவதை நிறுத்திவிட்டான்?"

“போரில் நிறையப் பேர் இறந்ததைப் பார்த்து வருத்தப்பட்டதாக. . .” “ நவீன் தயக்கத்துடன் சொன்னான்.

“அப்படியென்றால் கலிங்கத்துக்கு விடுதலை கொடுத்திருக்க வேண்டும் அல்லவா? படையைக் கலைத்திருக்க வேண்டும் அல்லவா?”

“ஆமாம். ஏன் அப்படிச் செய்யல?” இருவருக்கும் அது ஆச்சரியமாகத்தானிருந்தது. “இதுவரை இது பற்றி யோசித்ததே இல்லையே சார்” என்று நேர்மையுடன் நவீன் ஒப்புக் கொண்டான். முல்லை வைத்த விழி வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“கலிங்கப் போர் அசோகனுக்கு ஒரு காஸ்ட்லி அனுபவம். அரசுக்கு, மரபு ரீதியான ராணுவம் இல்லாத பழங்குடி மக்களுடனான போர் எப்போது தொடங்குகிறது. எப்போது முடியும் என்பதே தெரியவில்லை. சொல்லப் போனால் பழங்குடி மக்கள் கடைசி ஆள் இருக்கும் வரை போரிடுவதிலிருந்து பின்வாங்குவதே இல்லை. எனவே அவர்களோடு சண்டை போடுவது ஒரு பெரும் செலவு பிடிக்கும் பலனளிக்காத விஷயம் என்பதை அசோகன் உணர்ந்து கொண்டிருப்பான். துணைக்கண்டத்தில்

நாகரீக மக்கள் வாழ்ந்த எல்லாப் பகுதிகளும் ஏற்கெனவே மௌரியர் ஆட்சியின் கீழ் வந்து விட்டன. இனி பேரரசை விரிவாக்க வேண்டும் என்றால் பழங்குடி மக்கள் வாழ்ந்த பகுதிகளைத்தான் கைப்பற்ற வேண்டும். அப்படிச் செய்திருந்தால் ஒவ்வொரு தாக்குதலும் ஒரு கலிங்கப் போராகத்தான் இருந்திருக்கும். அது நடைமுறை சாத்தியமில்லாதது.

ஆனால் பழங்குடி மக்களின் நிலங்களும் அங்கே இருக்கும் தங்கம் இரும்பு போன்ற இயற்கை வளங்களும் அரசுக்கு வேண்டும். எனவே அசோகன் வேறு வழி கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. அதுதான் பௌத்த சமண மிஷனரிகள். சமணமும் பௌத்தமும் காடுகளில் தன்னிச்சையாக வாழ்ந்த பழங்குடி மக்களை மௌரியர் ஆட்சிக்குள் கொண்டு வர அரசுக்கு உதவின. அரசு பதிலுக்கு இந்தத் துறவிகளுக்கு தங்கள் பணியைச் செய்ய எல்லா வசதிகளும் செய்து கொடுத்தது. இந்த முனிவர்கள் காடுகளுக்குள் ஊடுருவி பழங்குடி மக்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவார்கள். முதலில் வணிகர்கள் வருவார்கள். அதன் பின்பு பக்கத்திலிருந்த அரசுத் தலைவன் வந்து ஒரு ஸ்தூபத்தை நட்டு இது மௌரியர் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் என்று அறிவித்து விடுவான். அரசு, படை எல்லாம் என்னவென்று தெரியாமலேயே சுதந்திரமான பழங்குடி மக்கள் மௌரியக் குடிமக்களாகி விடுவார்கள். அந்தப் பகுதி ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்தப்படாமல் அரசோடு சேர்ந்துவிடும். எனவே அசோகன் இந்த புதிய எளிய முறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினான். அசோகனுக்கு முன்பும் இது ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டுத்தான் வந்தது. ஆனால் பழங்குடி மக்களை அரசாட்சியின் கீழ் கொண்டு வர மதங்களைப் பயன் படுத்தும் முறையை பெரிய அளவுக்கு விரிவு படுத்தியது அசோகன்தான். பின்பு சிரவண பெல குடா மௌரியர் ஆட்சியில் அதாவது அசோகன் ஆட்சியின் கீழ் வந்த கதையைப் பாருங்கள்.

சிரவணபெல குடாவையும், தங்கம் விளையும் கோலார் மலைகளையும் இப்படித்தான் மௌரிய அரசு கைப்பற்றியது. அது போலத்தான் இதுவும். வணிகப் பெருவழிகளோரம் சமணத் துறவிகளின் மடங்களும், பள்ளிகளும் குகைகளும் இருப்பது துணைக்கண்டம் முழுமைக்கும் வழக்கம்தான். இவற்றைத் தளமாக வைத்து பக்கத்திலிருந்த

பழங்குடி கிராமங்களுக்குச் சென்று மதம் பரப்புவார்கள். இப்படிப் பட்ட துறவிகள் நல்ல உணவு உண்டு கொழுத்திருக்க முடியாது அல்லவா? தவிர வாழ்நாள் முழுவதும் அலைந்து திரிந்து வந்த துறவிகளும் தங்கள் அந்திம காலங்களில் மரணத்தை எதிர்நோக்க இது போன்ற குகைகளை நாடியிருக்கலாம். இவர்கள் ஊருக்கு வெளியே இருக்கும் இப்படிப்பட்ட குகைகளில் இருந்து கொண்டு அரசுக்கு ஆலோசனைகளும், தேவைபட்ட உதவிகளும் அளித்து வந்தார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுதான் அதுவும் நின்றபடியே உண்பார்கள். அடுத்தவேளைக்குத் தண்ணீரைக்கூட சேமித்து வைக்க மாட்டார்கள்...

இப்படியிருந்தவர்கள் எலும்பும் தோலுமாகத்தானே இருந்திருக்க முடியும்? ஆடை அணிய மாட்டார்கள். படுக்கும் போது கூட உடலுக்கு சுகம் கொடுக்கக் கூடாது என்று கோணல் மாணலாகப் படுப்பார்கள். இப்படி சங்கடமான கோணங்களில் படுப்பதும் உட்காருவதும்தான் பின்பு யோகாசனங்களாக மாறியதாம். கோசாம்பி சொல்கிறார். இப்படிப்பட்டவர்களுக்கு இந்த இடம் போதாதா?"

"யோகா இப்படித்தான் தோன்றியதா?"

"நான் கோசாம்பியை நம்புகிறேன். அது விஞ்ஞானபூர்வமாகத் தோன்றுகிறது. சரி அது அப்படியிருந்தால் என்ன? எல்லாவற்றுக்கும் ஏதாவது ஒரு தொடக்கம் இருக்கும் தானே?"

"யோகாவால் உடலும் மனமும், அபரிமிதமான அமானுஷ்ய சக்திகளைப் பெறும் என்று சொல்கிறார்களே...."

"யோகா உடலுழைப்பில் ஈடுபடாதவர்களுக்கு ஒரு அற்புதமான பயிற்சி என்று கோசாம்பி கூறுகிறார். டாக்டர் கோவூரும் அவரது வாரிசான பிரேமானந்த் போன்றவர்களும் அதை மறுக்கிறார்கள். அதனால் மூட்டுவலிகளும், பிரச்சினைகளும் ஏற்படுகின்றன என்கிறார்கள். இப்போது யோகா என்று சொல்லித் தரப்படுவது யோகாவே அல்ல, மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட வடிவம் என்கிறார்கள். பழைய யோகா என்பது ஒரு குறிப்பிட நிலையிலேயே நீண்ட நேரம் இருப்பது. அதன் மூலம் மூளைக்கு ரத்த ஓட்டம் அதிகரித்து அல்லது குறைந்து தூக்கம் போன்ற நிலை

ஏற்படுகிறது. அதைத்தான் அமைதி கிடைக்கிறது என்கிறார்கள். கூடவே முதுகுவலி போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றனவாம். எனவே தான் ஆசிரமங்கள் அதை எளிமைப்படுத்திவிட்டன என்று பிரேமானந்த் கருதுகிறார். அமானுஷ்ய சக்திகளைப் பொருத்தவரை இதுவரை அப்படி எதுவும் நிரூபிக்கப்படவில்லை. எது உண்மை என்பது பற்றி என்னிடம் ஆய்வு இல்லை. நீங்கள் யோகா பற்றி ஆவணப்படம் எடுக்கும் போது படிக்கலாம்...."

"யோகா தியானம் பற்றி கட்டாயம் ஒரு ஆவணப்படம் எடுக்க வேண்டும்." என்றான் நவீன்.

"ஊழ்வினைகுறித்து இளங்கோவடிகள் அடிக்கடி பேசி எல்லாமே ஊழ்வினைப்படிதான் நடக்கின்றன என்று சொல்கிறார். ஊழ்வினைக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன் சார் தருகிறார்?" முல்லை தனக்குப் பிடித்த, தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்த ஒன்றை நோக்கி விவாதத்தைத் திருப்பினாள்.

"சிம்பிள். அவர் சமணர். பிரச்சினைகளுக்கு சமணம் தரும் காரணம் ஊழ்வினை. உங்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால் அதற்குக் காரணம் ஊழ்வினைதான் என்கிறது சமணம். அதாவது போன பிறவிகளில் நாம் செய்த பாவங்கள் அல்லது புண்ணியம்"

"ஊழ்வினையை யக்ஞவல்லியர் தான் உருவாக்கினார் என்கிறாரே ராகுல்ஜி? அது அவருடைய மிகப்பெரிய கண்டுபிடிப்பு. அதன் மூலம் ஆளும் வர்க்கங்களுக்கு மக்களை திசை திருப்ப ஒரு மிகச்சிறந்த ஆயுதம் கிடைத்தது என்று சொல்லியிருக்கிறாரே?." என்றான் நவீன்.

"ஆமாம் 'வால்காவிலிருந்து கங்கைவரை'யில் அப்படிச் சொல்கிறார். ஆனால் ஊழ்வினை மறுபிறவி பற்றிய கருத்துக்கள் யக்ஞவல்லியருக்கு முன்பிருந்தே காணப்படுகின்றன. ரிக்வேதத்தில் அனுசின ஜீவிதா அதாவது அடுத்தடுத்த பிறவிகள் பற்றிச் சொல்லபட்டிருக்கு.. ." ஸ்ரீகுமார் சற்று நேரம் பேசாமலிருந்தார். வரலாறு தத்துவம் பற்றிப் பேசுவது அவருக்குப் பிடிக்கும். ஆனால் தான் கவர்ந்திழுக்கக்கூடிய பேச்சாளன் அல்ல என்று அவர் நினைத்து வந்தார். எத்தனையோ கூட்டங்களில்

பேசியிருந்தாலும் குரலை ஏற்றி இறக்கி சமகால செய்திகளையும், நகைச்சுவையையும், அரசியலையும் அளவாகக் கலந்து பார்வையாளர்களைக் கட்டிப் போடும் சாமார்த்தியம் அவருக்குக் கை வந்ததே இல்லை. எனவே தான் பேசும் விஷயத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்களிடம் மட்டுமே பேசுவதை அவர் விரும்பினார். இப்போது இந்தக் குகை பேச அற்புதமான சூழலை கொடுத்திருந்தது. இன்னும் வெயிலின் சூடு தணியவில்லை என்பது கண்கூச வைக்கும் வானத்தைப் பார்த்தால் தெரிந்தது. ஆனால் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் பாறைகள் சூடாகவே இல்லை. குகைக்கு முன்புறம் முழுவதும் அழகாக நிழல் விழுந்து குளுமையாக இருந்தது. வெதுவெதுப்பான காற்று மெல்ல வருடிச் சென்றது. இவர்களின் கண்களில் உண்மையான ஆர்வம் தெரிந்தது. "பேசலாமா"

"பேசுங்க சார்' அதுக்காகத்தானே உங்களோட இங்க செட்டிலானோம்" முல்லை அவர் என்ன சொன்னாலும் கேட்கத்தயாராக இருப்பது போலத் தெரிந்தது. அவர் நவீனைப் பார்த்தார். அவன் சப்பணமிட்டு உட்கார்ந்து அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"தூக்கம் வரும் போது சொல்லுங்க நிறுத்திடுறேன் . . . ' என்று தான் வழக்கமாக கூட்டங்களில் சொல்லும் பீடிகையோடு தொடங்கினார் பேராசிரியர்.

"ரிக்வேதகாலம் ஆரியர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு முந்தைய காலம். ஆனால் பழங்கால இந்தியாவில் மட்டுமல்லாமல் பழங்கால பாரசீக, கிரேக்க நாடுகளிலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த சமூகங்களில் ஆன்மா பலபிறவிகள் எடுப்பது பற்றிய கருத்துகள் உண்டு. பருவகாலங்கள் ஒரு சுழற்சியாக மாறிமாறி வருவது போல வாழ்க்கையிலும் பிறப்பு, வாழ்க்கை, மரணம் மீண்டும் பிறப்பு என்று சுழற்சி இருப்பதாக நம்பினார்கள். இறந்தவர்கள் என்னவாகிறார்கள் என்பது தெரியாததாலும், பிறக்கும் குழந்தைகள் முன்னோர்கள் போலிருப்பதாலும் இப்படி நினைத்தார்கள் போலிருக்கிறது. ஆரம்பகால புத்தமத நூல்கள் கடுமையான தியானத்தின் மூலம் பழைய பிறவிகளை

அறியலாம் என்கின்றன. ஆனால் புத்தர் இந்த விவகாரங்களைக் கவனமாகப் பார்க்க வேண்டும் என்றார். யார் கேட்டது!"

"மற்ற நாடுகளில் எப்படி சார்?"

"கிரேக்க நாட்டிலும் முற்பிறவித் தத்துவம் பழமையானதுதான். அங்கும் இதற்கு மூவாயிரம் ஆண்டுகால வரலாறு உண்டு. பெரிசைடீஸ் என்பவர்தான் கிரீஸில் முதல்முதலில் இதைப் பற்றிப் பேசியதாகச் சொல்கிறார்கள். அவர் சொல்வதும் நம்மூரில் சொல்லப்பட்டதைப் போன்றே இருக்கிறது. ஆன்மா அழிவில்லாதது. விடுதலையை விரும்புகிறது. மரணம் ஆன்மாவை விடுவிக்கிறது. பின்பு அது திரும்பவும் உடலில் சிறைப்பிடிக்கப்படுகிறது என்றார். அங்கே இந்த மறுபிறவி விவகாரத்துக்கு மெடெம்சைக்கோஸிஸ் என்று பெயர். பின்பு பிளேட்டோவும் பித்தகோரஸூம் இதைப் பெரிய அளவுக்கு வளர்த்தெடுத்தார்கள்."

நவீனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "பித்தகோரஸ் தியரம் பித்தகோரஸா சார். . .? "

"அவரே தான்"

"அவர் ஏதோ கணித மேதை என்பது போல . . '

"அந்தத் தியரத்தை அவர் உருவாக்கியதாகச் சொல்கிறார்கள். உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அவர் மறுபிறவி குறித்து விரிவாகப் பேசுகிறார். ஏறக்குறைய புத்தர் காலம் இவர். ஆத்மா மனிதர்களாகவும் விலங்குகளாகவும், தாவரங்களாகவும் பல பிறப்புகள் எடுத்து இறவாத நிலையை அடைகிறது என்கிறார் அவர். ஒரு நாய் ஊளையிடுவதைப் பார்த்தவர் அது இறந்து போன தனது நண்பன் என்று கண்டு கொண்டு ரொம்ப வருத்தப்பட்டாராம்."

நவீனும் முல்லையும் முறுவலித்தார்கள்.

"நீங்கள் சிரிக்கிறீங்க. ஆனால் அந்தக் கால கீரீஸ்ல பித்தகோரஸை ஒரு தெய்வப்பிறவியாத்தான் நெனைச்சாங்க. அவரோட போதனைகளை

அடிப்படையா வெச்சு பித்தகோரியனிஸம்னு ஒரு மதம் கூட உருவாச்சாம். ஆனா கதாரிஸம்-னு ஒரு கிருத்துவ மதப்பிரிவுதான் சமணத்துக்கு ரொம்ப நெருக்கமா வருது"

"கதார்ஸிஸ்ன்னு சொல்றாங்களே மனம் போனபடி கத்தி கூச்சலிட்டு மனதை சுத்தப்படுத்திக்கறது . . . "

"மனதை இல்லை ஆத்மாவை. தேவையில்லாத உணர்வுகளை ஆன்மாவிலிருந்து களைதல்ன்னு லூகாஸ் சொல்றார்"

"அய்யோ சார் போதும். ஹிஸ்டரி புரொபஸர் செமினார்ல பேசறமாதிரி போகுது. கதாரிஸம் இல்லாட்டி கத்தார்ஸிஸம் . . .ஏதோ ஒண்ணு" முல்லை சிரித்தபடி தலையாட்டி மறுத்தாள்.

"ரொம்ப நன்றி. முல்லை. இப்படி யாராவது தடுக்காட்டி நான் போயிட்டே இருப்பேன். நான் சொல்லிட்டு இருந்தது கதாரிஸம். இது பனிரெண்டாம் நூற்றாண்டுக்கும், பதினான்காம் நூற்றாண்டுக்கும் இடையே மேற்கு ஐரோப்பால இருந்த ஒரு கிருத்துவ மதப்பிரிவு. இது நம்ம சமணம் போலவே பைசாண்டியப் பேரரசோட வணிக வழிகளோரம் வளர்ந்தது. சமணம் போலவே வணிகப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. ரோமன் கத்தோலிக்க சர்ச் இதை கிருத்துவ மதப்பிரிவாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் பிரிவு மேரி மகதலேனுக்கும், பெண்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்துச்சு. ஆனால் பெண்கள் ஆணாக மறுபிறவி எடுத்துத்தான் பிறப்பில்லாத நிலையை அடைய முடியும்னும் சொல்லுச்சு".

"சமணம் பெண்களுக்கு பெரிய முக்கியத்துவம் கொடுக்கற மாதிரி இல்லையே இது எப்படி சமணத்தோட . . . "

"சமணம் பெண்களை ஆணுக்குச் சமமாப் பாக்கல. ஆனால் ஒற்றுமை வேற இடத்திலிருக்கு. ஏறக்குறைய பதினொன்றாம் நூற்றாண்டில் செயிண்ட் டொமினிக்குக்கும், கதார்களுக்கும் தெற்கு பிரான்ஸ ஒரு விவாதம் வந்ததாம். ரெண்டு பேரோட மத நூல்களையும் தீயில் போட்டு சோதிக்கலாம்னு முடிவாச்சாம். கதார்கள் தங்கள் புத்தகத்தை தீயில்

போட்டாங்களாம். எரிஞ்சு போச்சு. டொமினிக் போட்டப்ப எரியல. மூணுதடவை போடறார். எரியவேயில்ல.. . “

“அப்புறம் என்னசார் கழுவேத்திட்டாங்களா?” நவீன் கசப்புடன் கேட்டான். “கழுவேத்தியிக்க மாட்டார்கள் என்றாலும் வேறு ஏதாவது விதத்தில் அழித்துத் தானே இருப்பார்கள்?” ஸ்ரீகுமாரும் அதை அங்கீகரித்தார்.

”கழுவேத்தவில்லை. ஆனால் பெஸியர்ஸ்னு ஒரு ஊர். அங்க மேரி மகதலேனுக்கு ஒரு சர்ச் இருந்தது. அங்க வந்து ஒளிஞ்சிருந்த இருபதாயிரம் கதார் பிரிவு மக்களைத் தாக்கிக் கொன்னுட்டாங்க. அப்புறம் பலர் எரிச்சுக் கொல்லப்பட்டாங்க”

ஒரு சங்கடமான மௌனம் பற்றிப் படர்ந்தது. யாரோ எங்கோ கொல்லப்பட்டது பெரிதாகத் தோன்றியிருக்காது. ஆனால் இந்த வித்தியாசமான சூழலும், குகையும், பயணமும், பழங்கால பிரம்மாண்டங்களுக்கும், படுகொலைகளுக்கும், தத்துவங்களுக்கும் தங்களை அருகில் கொண்டுவந்து விட்டது போலிருந்தது. ஒரு சரித்திர நாவல் படிக்கும் போது ஏற்படும் உணர்வு போல தாங்கள் பழமையோடு ஒன்றிப் போய்விட்டது போலிருந்தது அவர்களுக்கு. இந்தக் குகைகளில் வாழ்ந்திருந்த சமணத்துறவிகளுக்கு என்ன நேர்ந்திருக்கும்? திருஞான சம்பந்தருடனான விவாதத்தில் இவர்களும் கழுவேற்றப்பட்டிருப்பார்களா? முல்லையின் அப்பா அடிக்கடி இதைப்பற்றிப் பேசுவார். சமணர் குறித்த அவரது கருத்துகள் முல்லைக்கு எப்போதுமே குழப்பமாக இருக்கும். அவரது அனுதாபம் யார் பக்கம் என்பது . . . அவரிடமே ஒருநாள் கேட்டாள். ரெண்டுமே வேண்டும் என்றார் அவர்.

ஸ்ரீகுமாரின் குரல் அவளது சிந்தனையைக் கலைத்தது. “இப்படிப் பல பிரிவுகள் இருந்தாலும் மறுபிறவி தத்துவத்தையும் மிகப் பெரிய அளவுக்கு எடுத்துச் சென்றது சமணம்தான். பேசிப்பேசி மறுபிறவி ஏதோ பக்கத்தில் இருப்பது போல மறுக்க முடியததாக மாற்றியது அவர்கள்தான். ”

“இதனால் என்ன லாபம்?’ என்று முல்லை கேட்டாள்.

“என்ன லாபமா? மக்கள் தங்கள் கஷ்டங்களுக்குக் காரணத்தை சுரண்டல்காரர்களிடமும், கொடுங்கோல் மன்னர்களிடமும் தேட மாட்டார்கள். தங்கள் போன பிறவியில் செய்த பாவம் என்று நினைத்து சும்மா இருந்து விடுவார்கள். ஒருவன் உன்னை ஏமாற்றினால் அது உன்னுடைய ஊழ்வினைப்பயன். இந்தப் பிறவியில் நன்மை செய்தால் அதன் பலனும் உடனே கிடைத்துவிடாது. அடுத்த பிறவியில்தான் கிடைக்கும். எனவே ஒரு பிரச்சினையும் இல்லை. வாழ்க்கை நடந்து கொண்டே இருக்கும். அதே நேரம் மக்களுக்கு ஒரு நம்பிக்கையும் கிடைக்கும். மறுபிறவியில் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று”

முல்லைக்கு அவர் சொல்வது சரியாகத்தான் தோன்றியது. ஆனால் இளங்கோவடிகள் அப்படியொன்றும் ஊழ்வினையைக் காரணம் சொல்லப் பயன்படுத்தவில்லை என்று நினைத்தாள். கண்ணகி சமணப் பாரம்பரியத்தில் வந்தவளாக இருந்தாலும், கவுந்தியடிகளோடு அவ்வளவு நாள் ஊழ்வினை குறித்து பேசியிருந்தாலும் எந்த ஊழ்வினையையும் பற்றிக் கவலைப்படாமல் மதுரையை எரித்து விடுகிறாள். அப்புறம்தான் மதுராபதித் தெய்வம் வந்து அவள் கணவன் ஊழ்வினையால் போனபிறவியில் செய்த தவறால்தான் இறந்தான் என்கிறது. அதாவது பாண்டியனைக் குறைசொல்வது தவறு என்று மறைமுகமாகக் கூறுகிறது. பாண்டியன் உயிரை விட்ட பிறகு!. இளங்கோவடிகள் கண்ணகியின் செயலைக் கண்டிப்பது போலத் தெரியவில்லையே?. அப்புறம் இந்த ஊழ்வினை மூலம் மறை பொருளாக ஏதோ அவர் சொல்ல விரும்புவது போலத் தோன்றுகிறது. அது என்னவாக இருக்கும் . . . ?

“அரசுகளுக்கு இவ்வளவு சேவை செய்த சமணர்களை ஏன் சார் கூன்பாண்டியன் கழுவேத்தினான்? அது உண்மையா நடந்திருக்குமா?” என்று நவீன் கேள்வி எழுப்பினான்.

“மாற்று மதத்தவரை ஏதாவது காரணம் காட்டி ஒழித்துக் கட்டுவது இந்தக் காலத்திலும் கூட வழக்கத்திலிருக்கிறது தானே? தவிர சம்பந்தர் பாடல்கள், ஓவியங்கள் என சமணர் கழுவேற்றத்திற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகத்தான் தெரிகிறது”

”அதுதான் ஏன்?”

“இந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டு அதைப் பற்றி பேசாமல் இருந்தால் சரியாக இருக்காது அல்லவா? சமணம் வணிகர்களுடைய மதம். மகேந்திர பல்லவன் ஆட்சிகாலத்தில்தான் சமணம் தனது அரசு மதம் என்ற அந்தஸ்த்தை இழக்கிறது. ஏனென்றால் இன்னொரு புதிய வர்க்கம் உருவாகிவிட்டது. அதுதான் வேளாளர் வர்க்கம். அரசுகளின் வளர்ச்சியால் புதிய புதிய பகுதிகள் முன்பு காடாகவும், சதுப்பு நிலமாகவும் இருந்தவை விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன. எனவே தவிர்க்க முடியாத விதத்தில் பெரும் நிலஉடமையாளர்கள், நவீன் சொல்லில் நிலப்பிரபுத்துவ வர்க்கம் உருவானது. ஏராளமான நிலங்களையும் மக்களையும் தனது ஆதிக்கத்தில் வைத்திருந்த இந்த வர்க்கம் வணிக வர்க்கத்தோடு அதிகாரத்துக்காகக் போட்டியிட்டது. புதிதாக ஒன்று உருவாகி வரும்போது பழையது அழிந்தே ஆகவேண்டும் அல்லவா? ஊழ்வினையை மாற்ற முடியாது என்று சமணம் சொன்னால் சைவம் விதியை மதியால் வெல்லலாம் என்று எல்லாத் தரப்பு மக்களுக்கும் நம்பிக்கை அளித்து, இந்தப் போராட்டத்தில் தங்களோடு சேர்த்துக் கொண்டது.

இன்னொருபுறம் சமண பௌத்த மத நிறுவனங்கள் மிகப் பெரியவையாக வளர்ந்து அரசுகளுக்கு செலவு வைப்பவையாக மாறிவிட்டன. எனவே அரசுகள் அப்போது நிறுவனமாக இல்லாமல் இருந்த தனித்தனி பார்ப்பனர் குழுக்களை பழங்குடி மக்களிடையே வேலை செய்ய அனுப்பத் தொடங்கின என்கிறார் கோசாம்பி. எனவே இரண்டுவிதத்திலும் செல்வாக்கிழந்த சமணர்கள் புதிதாக வளர்ந்து வந்த, அதிகாரச் சுவை கண்டிருந்த நிலபிரபுத்துவ வர்க்கத்தாலும், சைவர்களாலும் அழிக்கப்பட்டார்கள். இதுபற்றி கைலாசபதி நிறைய எழுதியிருக்கிறார். பேரரசும் பெருந்தத்துவமும் என்ற அவரது கட்டுரை முக்கியமானது”. என்றவர் நவீனை உற்றுப் பார்த்தார். கைலாசபதியையும், கோசாம்பியையும் படிக்காதது தவறு என்று நவீனை குற்றம் சாட்டுவது போலிருந்தது அவரது பார்வை.

“தவறு தான்”. நவீன் ஒப்புக் கொண்டான்.

ஸ்ரீகுமார் ஒரு பாறை மறைவிற்குச் சென்று லுங்கி, டி ஷர்டுக்கு மாறி கையில் ஒரு பெரிய தடியோடு வந்தார். குகையை விட்டு தள்ளிச்செல்லும் போது அதை எடுத்துக் கொண்டு தரையைத் தட்டிக் கொண்டே போகச் சொன்னார்.

“மலைல பாம்பு இருக்குமா சார்?”

“ இது அப்படியொன்றும் பெரிய மலை இல்லை, எனவே இருக்கும்.”

“இரவு குளிர்?”

“மதுரை கிளைமேட்டுக்குத் பெரிய வித்தியாசம் இருக்காது. விடியக் காலையில் கொஞ்சம் குளிர் வரலாம்” என்று சொல்லி விட்டு அவர் நீட்டிப் படுத்தார். தான் உடை மாற்றுவது முல்லையைச் சங்கடப் படுத்துவதாக அமையும். சலுகைகள் பெற்ற ஆண் வர்க்கம் என்று காட்டுவதாக இருக்கும் என்று நவீன் உடை மாற்றவில்லை. ஒரு பிரச்சனையும் இல்லாவிட்டாலும் பெண்கள் இது போன்ற சுதந்திரங்களை எடுத்துக் கொள்வதில்லை. படமெடுக்கலாமா என்று யோசித்தான். இரவுக்காக பேட்டரியை மிச்சப்படுத்தலாம் என்று முடிவு செய்து லேப்டாப்பைத் திறந்தான்.

முல்லை சிலப்பதிகாரம் புலியூர் கேசிகன் உரையில் மூழ்கியிருந்தாள். சிவப்பதிகாரத்திற்குள் போகப் போக. அவளுக்கு என்னென்னவோ சந்தேகங்கள் வந்து கொண்டே இருந்தன.

அடைக்கலக் காதையில் மாதவியிடமிருந்து செய்தி கொண்டு வரும் கோசிக மறையோனிடம் கோவலன் பேசும் சொற்கள் அவளுக்கு விசித்திரமாகத் தோன்றின. ‘காவல் வேந்தனின் பெருநகரிலே ஒரு கீழ்மகனால் மணம் நாறும் ஐங்கூந்தலையுடையவளான இவள் நடுநடுங்கித் துயர் எய்தவும். யான் உடுத்த ஆடையும் பிறரால் கொள்ளையிடப்பட எருமைக் கடாவின் மீது ஊர்ந்து செல்லக் கண்டேன்... இப்படியொரு கனவைக் கண்டதாலேயே புகாரை விட்டு வந்தேன் என்கிறான்’ கானல்வரி மாதவியுடனான ஊடல் எதுவும் இங்கே

பேசப்படுவது இல்லை. புகாரை விட்டுப் புறப்பட்டதற்கு முற்றிலும் வேறுகாரணம் சொல்லப்படுகிறது.

பின்பு மதுரைக் கோட்டைக்குள் காவலாளிகளின் கவனத்தைக் கவராமல் சென்றதாகக் கூறப்படுகிறது. ஏன் அப்படிச் செல்ல வேண்டும்? ஏன் வணிகர்களையும், கடைகளையும் அணுகாமல் பொற்கொல்லனை அணுக வேண்டும்?

தவிர கோவலன் கொல்லப்பட்ட பின்பு கண்ணகி மதுரையை எரித்து அதன் தெருக்களில் சுற்றி வரும்போது மதுராபதி தெய்வம் கூறுவதும் கோவலன் கனவை ஒட்டியே இருக்கிறது. 'கலிங்க நாட்டில் சிங்கபுரம், கபிலபுரம் என்ற ஊர்களில் வசு, குமரன் என இரண்டு மன்னர்கள் இருந்தார்களாம். அவர்களுக்கு இடையே தொடர்ந்து போர்கள் நடந்து கொண்டே இருந்தனவாம். அப்போது கபிலபுரத்தைச் சேர்ந்த சங்கமன் என்ற வணிகன் தன் காதலியோடு பொருள் ஈட்ட சிங்கபுரம் வந்தானாம். முற்பிறப்பில் கோவலன் சிங்கபுர அரசனின் சேவகனாம். கபிலபுரத்தார் மீது வெறுப்பு கொண்டவன். அவன் சங்கமனை ஒற்றன் என்று குற்றம்சாட்டி கொலை செய்வித்தான். சங்கமனின் மனைவி நீலி பெரும் சோகத்தோடு பதினான்கு நாட்கள் கடத்திவிட்டு பின்பு கோவலனைச் சபித்துவிட்டு மலையுச்சியில் சென்று விழுந்து மாண்டாளாம். அவளது சாபத்தால்தான் இந்தப் பிறவியில் கோவலனுக்கு இந்த கதி நேர்ந்தது என்று அந்தத் தெய்வம் சொல்கிறது"

இப்படியொரு முற்பிறப்புக் கதை சொல்ல வேண்டிய அவசியம் என்ன? ஏதோ காரணத்தால் கோவலன் மன்னனைப் பகைத்துக் கொண்டானோ? புகாரிலும் மதுரையிலும் அவன் மீது ஒற்றன் என்ற சந்தேகம் இருந்ததோ? அதனால்தான் எங்காவது போய்ப் பிழைத்துக் கொள்ளட்டும் என்று உறவினர்கள் யாரும் தேடி வரவில்லையோ?

எத்தனையோ வணிகக் குழுக்கள் செல்கின்றன. படையினர், அரசு ஊழியர்கள் போகின்றனர். அப்படி ஏதாவது குழுவோடு இணைந்து போயிருக்கலாம். வேலைக்காரர்களோடு போயிருக்கலாம். கவுந்தியடிகள் அவ்வளவு எளிதில் தயாராக இருந்தது போல் உடன்வரக் காரணம்

என்ன?

எல்லாவற்றிற்கும் மேல் ஸ்ரீகுமார் சொன்ன கோவலர் என்ற பழங்குடியினம். அந்தப் பெயர் ஏன் கோவலனுக்கு வைக்கப்பட வேண்டும்? கடற்கரையில் பிறந்து வளர்ந்த கண்ணகி எப்படி கொங்கர் செல்வியானாள்? கண்ணகியின் சிலம்பிலிருந்த மாணிக்கப் பரல்களுக்கும், ஸ்ரீகுமார் சொல்லும் காங்கேயம் கற்களுக்கும் தொடர்பு இருக்குமா?

ஸ்ரீகுமார் எழுந்ததும் இது பற்றியெல்லாம் கேட்கலாம் என்று முடிவு செய்து கொண்டாள். அம்மா செய்யும் பூரிகிழங்கின் மணம் காற்றில் மிதந்து வந்து பசியைத் தூண்டியது. அவள் பூரியில் கைவைக்கும்போது பார்த்து கற்களை எல்லாம் ஜாக்கிரதையாக எடுத்துப் போடு என்றாள் அம்மா. டைனிங் டேபிள் மேல் நீலநிறத்தில் பெரிய பெரிய கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இதனால் தான் கோவலன் செத்தானாம் என்றாள் அம்மா. முல்லை திடுக்கிட்டு எழுந்தாள்.

நவீன் அவள் முகத்துக்கு நேரே ஒரு வடையை ஆட்டிக் கொண்டிருந்தான். ஸ்ரீகுமார் விருந்துபோல பாறையில் விரித்த பேப்பரில் உணவுப் பண்டங்களைப் பரப்பி வைத்திருந்தார். மாலையாகி விட்டது. “சீக்கிரம் இருட்டாகிவிடும். அதற்குள் முடிந்தவரை சாப்பிட்டுவிடலாம்.” என்றார் ஸ்ரீகுமார். ஆமாம். அவளுக்கு எதிரே சூரியன் மஞ்சள் நிறமாகி விட்டிருந்தது. மலைகள் ஏதோ புகையாலோ தூசியாலோ மூடப்பட்டிருப்பது போலத் தோன்றியது. குகையின் உட்பகுதிகள் ஏற்கெனவே இருண்டு போயிருந்தன. வித விதமான பறவைகளின் கூச்சல் எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம் கேட்டது.

இரவு எப்படியிருக்கும்? இதுவரை இல்லாத பயம் முல்லைக்கு லேசாகத் தோன்றியது. இந்த இருவரும் அதைப்பற்றி கடுகளவும் கவலைப் படுவது போலத் தோன்றவில்லை.

“ஏய் நவீன் உனக்கு கொஞ்சங்கூட பயமாவே இல்லையா?”

“பேய் பிசாசு ஏதாவது வந்துடும் என்றா?”

முல்லை பதில் பேசவில்லை.

“எனக்கு ஒரு பயம் இருந்தது. யாராவது குடிகாரர்கள். சமூக விரோதிகள் இந்த குகையில் தங்குவார்களோன்னு. ஆனால் அதுக்கான அடையாளம் பீடி, சிகரெட், பிளாஸ்டிக் எதுவும் காணல. ஒண்ணும் பிரச்சனையில்லே”

“நீங்க வேணா போயிருங்களேன். கொஞ்சம் வெளிச்சம் இருக்கும் போதே” என்றார் ஸ்ரீகுமார். போய்விடலாமா என்று நினைத்தாள் முல்லை. ஏன் போக வேண்டும். இருந்து பார்க்கலாம். இப்படியொரு வாய்ப்பு இனி கிடைக்கப் போகிறதா என்ன? நகரத்து பஸ்ஸில் ஏறுவதைவிட இது பாதுகாப்பானதுதான்.

ஸ்ரீகுமார் சற்று சங்கடப்பட்டது தெரிந்தது. முன்யோசனையில்லாமல் இந்தப் பெண்ணை இங்கே தங்க வைத்து விட்டோமே என்று அவர் தன்மீதே கொஞ்சம் கோபமும் கொண்டார். முல்லை முகத்தில் பயம் தெரிந்தது உண்மைதான். ஆனால் கீழே போக மறுத்துவிட்டாள். பிடிவாதக்காரி. நல்ல பெண் என்று நினைத்துக் கொண்டார். தனக்காக அவர்கள் காத்திருந்ததும், தன் வருகை கண்டு அவர்கள் மகிழ்ந்ததும் அவருக்கு அவர்கள் மீது இனம் புரியாத ஒரு அன்பையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தன.

தவிர செய்யும் வேலையில் முழுமையாக ஈடுபடும் அவரது இயல்பால் இப்போது கண்ணகியின் பயணத்தில் அவரும் ஆர்வம் கொண்டு விட்டார். முல்லையின் கேள்விகளும், தனது தேடலும் ஏதோ ஒரு புள்ளியில் இணைவது போலத்தான் அவருக்கும் தோன்றியது. வழக்கமாகத் தொல்பொருள் ஆய்வாளர்களுக்கும், தமிழறிஞர்களுக்குமான முரண்பாட்டில் ஸ்ரீகுமார் விருப்புவெறுப்பற்ற தொல்பொருள் ஆய்வுக்காக நிற்கக் கூடியவர். தமிழறிஞர்கள் தமிழர் நலன் காக்கும் அரசியலில் மூழ்கியவர்கள். தமிழர்களின் நலன், பண்பாடு அனைத்திற்கும் தங்களைப் பிரதிநிதிகளாகக் கருதக் கூடியவர்கள். அனைத்து தொல்பொருள் அறிவையும் கொண்டிருந்தாலும், தங்கள் தமிழ் அரசியலுக்காக சற்று வளைந்து கொடுக்க கூடியவர்கள் என்ற எண்ணம் அவருக்கு இருந்து

வந்தது.

எனவே சிலப்பதிகாரம் என்ற கதை உண்மையில் நடந்ததா? கண்ணகி, கோவலன் யார் என்பது போன்ற ஆய்வுகளில் இருந்தெல்லாம் சற்று விலகியே இருந்தார். இடதுசாரிகள் இதைச் செய்யட்டும் என்று நினைத்திருந்தார். நெருக்கடியால் தொடங்கிய இந்தப் பயணம் அவரை சிலப்பதிகாரம் குறித்தும் அதன் சமூகப் பின்னணி குறித்தும் சிந்திக்கத் தூண்டியது. எனவே ஸ்ரீகுமாரும் இதுபற்றி விவாதிக்க விருப்பம் கொண்டிருந்தார்.

கண்முன்னே சூரியன் மஞ்சளும் ஆரஞ்சும் கலந்த வட்டாக மாறி மளமளவென்று குன்றுக்குப் பின் இறங்கி மறைந்தது. குன்றின் பின்புறம் தீப்பிடித்து எரிவதுபோல வானம் ஆரஞ்சு வண்ணம் கொண்டது.

சற்று நேரத்தில் இரவு முழுதாகக் கவிந்து விட்டது. மருந்துக்கும் கூட எந்த வெளிச்சமும் இல்லை. வானம் கருமையாகத் தெரியாமல் கருநீலமாகத் தோன்றியது. மலைகளும், புதர்களும், பாறைகளும் கும்மிருளில் மூழ்கி கருப்புத் திட்டுகளாகத் தெரிந்தன. தனக்கு இடப்பக்கம் திரும்பிய முல்லை வியப்பால் வாயடைத்துப் போனாள். சற்று தொலைவில் நின்ற ஒரு உயரமான மரத்தைச் சுற்றி நட்சத்திரங்கள் பறந்து கொண்டிருந்தன. மின்மினிப் பூச்சிகள்! அவை பறப்பது ஒளிக்கதிர்கள் மரத்தைச் சுற்றி வருவது போலிருந்தது. கீழே கருப்புத் திட்டுகளாகத் தெரிந்த புதர்கள் ஒவ்வொன்றைச் சுற்றியும் ஒன்றிரண்டு மின்மினிப் பூச்சிகள் நேர் கோடுகளில் பறந்து கொண்டிருந்தன. இந்த மையிருளில் லேசாகத் தடவிச் சென்ற குளிர் காற்றில் அந்த மரமும் மின்மினிப் பூச்சிகளும் ஏதோ கனவு போன்ற மனநிலையைத் தந்தன. பூச்சிகளின் வெண்ணிற ஒளியில் இருள் இன்னும் அடர்த்தியாகிவிட்டது போலிருந்தது. செந்நிறத்தில் பிறைமதி அவர்களுக்கு நேர் மேற்கே தொடுவானத்துக்கு மேல் உதயமானது. ஒவ்வொன்றாக விண்மீன்கள் சுடர்விடத் தொடங்கின. அற்புதமான இரவு. வெளவால்கள் கூட்டங்கூட்டமாக எங்கோ பறந்து சென்று கொண்டிருந்தன. ஏதேதோ சிறுசிறு சத்தங்கள் இரவின் அமைதியையும், இருளையும் மேலும் அதிகரித்துக் காட்டின.

முல்லை கண்முன் விரிந்த இரவின் வசீகரத்தில் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தவள் எழுந்து சென்று குகை முற்றத்திற்கு விளிம்புபோல அமைக்கப் பட்டிருந்த கம்பி வேலியைப் பிடித்து நின்று கொண்டாள். வெளிச்சம் இருக்கும் போது இங்கிருந்து கீழே பார்க்கத் தலை சுற்றியது. இரவில் இருளில் அது போன்ற பயம் உண்டாகவில்லை. நிலவு பளீரென்று ஒளிவீசத் தொடங்கியது. அதைச் சுற்றிலும் வெளிச்சம் பரவிக் கிடக்க விண்மீன்கள் சற்றுத் தள்ளி மினுக்கிட்டுக் கொண்டிருந்தன. கீழே தெரிந்த சமவெளியிலிருந்த மரங்கள் வரப்புகள் எல்லாவற்றையும் துலக்கமாகக் காணமுடிந்தது. கொஞ்சம் கொட்டை எழுத்தில் இருந்தால் ஒரு பேப்பரைக் கூடப் படித்துவிடலாம் என்று தோன்றியது. மிக மெல்லிய காற்று வீசிக் கொண்டிருந்தாலும் கருப்புத் திட்டுகளாகத் தெரிந்த பாறைகளும், மரங்களும், புதர்களும் மோனத்தில் ஆழ்ந்திருப்பவை போலிருந்தன.

இப்படியொரு இரவுக்காக எவ்வளவு சிரமம் வேண்டுமானாலும் படலாம். மனது இறக்கை கட்டிப் பறந்தது. ஏதேதோ விவரித்துச் சொல்லமுடியாத இன்பமயமான எண்ணங்கள் . . . மகிழ்வான மனநிலையைக் கொடுத்தன.

உள்ளே நவீன் வைத்திருந்த செல்டார்ச்சின் மங்கிய ஒளியில் தெரிந்த குகையின் வளைவான கூரை அலிபாபா குகை போன்ற உணர்வை ஏற்படுத்தியது. காலம் நூறு நூறு ஆண்டுகள் பின்னால் சென்று விட்டது போலிருந்தது.

மூவரும் அவரவர் எண்ணங்களில் ஆழ்ந்திருந்ததால் நீண்ட நேரம் யாரும் பேசவில்லை. முல்லைதான் பேச்சைத் தொடங்கினாள்.

“கண்ணகியின் சிலம்பில் இருந்த மாணிக்கப் பரல் என்பது நீங்கள் சொல்லும் விலையுயர்ந்த கல்லா? அது காங்கேயத்தில் கிடைக்குமா?”

“அது ரூபி, பிரஷியஸ் ஸ்டோன் தான். ரத்தச் சிவப்பு நிறத்திலும், இளஞ்சிவப்பிலும் இருக்கும். காங்கேயம், கரூர் பகுதிகளில் கிடைத்திருக்க வாய்ப்புள்ளது. இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்து காங்கேயம் அல்லது கொடுமணல் கொண்டு வந்திருக்கப்படவும்

வாய்ப்புள்ளது. ஆப்கானிஸ்தானிலும், பர்மா, தாய்லாந்திலும் கிடைக்கிறது. கடினத்தன்மையை அளவிடும் மோலஸ் அளவீட்டில் வைரத்திற்குச் சமமான இடத்தில் உள்ளது. விலையும் வைரத்துக்குப் பக்கத்தில் வரும்”

“காங்கேயத்தைச் சேர்ந்த, இப்படிப்பட்ட வணிகத்தில் ஈடுபட்ட ஒரு குடும்பம் புகார் வந்து பெரும் பணக்கார குடும்பமாக மாறியிருக்க வாய்ப்புள்ளதா?”

ஸ்ரீகுமாரும், நவீனும் சற்று ஆச்சிரியத்துடன் முல்லையைப் பார்த்தார்கள். “கட்டாயம் வாய்ப்பிருக்கிறது.”

“அப்படியானால் கோவலன் குடும்பத்தின் வேர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். எனவே கோவலன், கொங்கர் செல்வி. எல்லாம் புரிகிறது.”

“சரிதான் முல்லை. கொங்கர் செல்வி என்பது வேண்டுமானால் பிற்காலத்து இடைச் செருகலாகத் தோன்றினாலும் கோவலன் தவிர்க்க முடியாத பெயர் அல்லவா. நீ சரியாகத்தான் சொல்வது போலத் தோன்றுகிறது”

முல்லைக்கு ஏராளமான கேள்விகள் தோன்றின. அவள் மனதுக்குள் திக்குமுக்காடிப் போனாள். மள மள வென்று டைரியில் தனது கேள்விகளைக் குறித்துக் கொண்டாள்.

“வியாபாரத்திற்கு வெளிநாடு போகிறவர்கள் பெண்களை உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் உண்டா?”

“தமிழகத்தில் கிடையவே கிடையாது”

“சேரன் செங்குட்டுவனுக்கு கண்ணகிமேல் அப்படி என்ன அக்கறை. சேரநாட்டுக்குப் பக்கத்தில் உள்ள கொங்கு நாட்டைச் சேர்ந்தவள் என்பதால் இருக்கலாமா?”

ஸ்ரீகுமார் சிரித்தார். “கொங்குநாடு சேரநாட்டுக்குப் பக்கத்தில் இல்லை. சேரநாட்டின் பகுதியாக இருந்தது. கரூர் அவர்களது

இரண்டாவது தலைநகரம்”

“அதனால்.....” முல்லை படபடப்பாகத் தொடங்கினாள்.

ஸ்ரீகுமார் அவளைக் கையமர்த்தி விட்டு மௌனமானார். ஏதேதோ காட்டுப் பூக்களின் மணத்தைக் கொண்டு வந்த காற்றை ஆழமாக உள்ளிழுத்தார்.

“கண்ணகியைப் பொருத்தவரை அவளைத் தன் நாட்டைச் சேர்ந்த பெண் என்று சேரன் கருதியதாக சிலப்பதிகாரத்தில் இல்லை.”

“சேரன் செங்குட்டுவனுக்குத் தமிழ் மீதும், பத்தினிப் பெண்டிர் மீதும் அபரிமிதமான பற்று இருந்தது என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா சார்?”

“ஒரு ஆதாரம் இருக்கிறது. அதை வைத்து பத்தினிகள் மீது அவனுக்கு எவ்வளவு பற்று என்று ஊகித்துக் கொள்ளலாம்.” ஸ்ரீகுமார் இதைச் சொல்லிவிட்டு ஏன் சிரிக்கி’றார் என்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

“மோகூர் என்று ஒரு ஊர் மதுரைக்கு அருகில் இருக்கிறது. மோகூர்ப் பழையன் என்ற சிற்றரசன் அந்த ஊரை ஆண்டு வந்தான். சேரன் செங்குட்டுவன் மோகூர் மீது படை எடுத்துச் சென்று பழையனைக் கொன்று அவன் மனைவிகளை மொட்டையடித்து அந்தக் கூந்தலைக் கொண்டு பழையனின் யானைகளைக் கட்டி இழுத்துச் சென்றானாம்”

“சேரன் செங்குட்டுவனா?”

“அவனேதான். மோகூர் பழையன் சுத்தத் தமிழன். அவன் மனைவிகள் பத்தினிகள் அல்ல என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை”.

“அப்புறம் என்ன சார் வஞ்சிக் காண்டம் முழுவதும் சேரன் செங்குட்டுவனின் தமிழ்பற்று பேசப்படுகிறது. கனக விசயர்கள் தமிழைப் பழித்தார்கள் என்பதற்காக வடநாட்டுக்கு படை எடுத்துச் சென்று கனக விசயர்களின் தலைமீது கல் எடுத்து வந்து..... எப்படி சார்?”

“ஒரு அரசுக்கு போர்கள் தொடுப்பதற்குப் பல காரணங்கள்

இருந்திருக்கலாம். பேரழிவு ஆயுதங்களை ஈராக்கில் தேடுகிறோம் என்று பொய் சொல்லி அமெரிக்கா படையெடுத்தது போல."

"மை குட்னெஸ், நீங்க அரசியல் பேசறீங்க...."

"ஏன் பேசக் கூடாது. அது நவீனுடைய மொத்தக் குத்தகையா...."

"எல்லோரும் அரசியல் பேச வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும்" என்றான் நவீன்.

"சரி. சேரன் செங்குட்டுவனின் தமிழ்ப்பற்றை சோழனும், பாண்டியனும் கூட பெரிதாகப் பாராட்டியதாகத் தெரியவில்லை. கனக விஜயர்களை அவர்களிடம் வெற்றிக் கோப்பையைப் போல் அனுப்பிய போது அவர்கள் பெரிதாக மகிழ்ந்ததாகத் தெரியவில்லை. கிண்டல்தான் செய்கிறார்கள்.

தவிர சேரன் செங்குட்டுவன் வரும் வஞ்சிக்காண்டம் சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதி அல்ல. அது பின்பு எழுதிச் சேர்க்கப்பட்டது என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள். மட்டக்களப்பில் உள்ள சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டம் கிடையாது".

"அப்படியானால் யார் எழுதிச் சேர்த்திருப்பார்கள்? ஏன்?"

"திராவிட இயக்க அரசியல்வாதிகள் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சீத்தலைச் சாத்தனார்தான் எழுதினார் என்று கூறுகிறார்கள். அதில் ஒரு பகுதி உண்மையாக இருக்கக் வாய்ப்பிருக்கிறது. சேரன் செங்குட்டுவன் வரும் பகுதிகளை சீத்தலைச்சாத்தனார் எழுதியிருக்க வாய்ப்பிருக்கிறது.

ஏனென்றால் சிலப்பதிகாரம் எழுதப்பட்டு குறைந்தது இருநூறு ஆண்டுகளாவது கழித்துத்தான் மணிமேகலை எழுதப்பட்டிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் வராத பல செய்திகள் மணிமேகலையில் வருகின்றன. முக்கியமாக மணிமேகலை மணிபல்லவத் தீவிலிருந்து திரும்பி வந்தபோது பூம்புகார் கடல்கொள்ளப்பட்டது என்று வருகிறது. கூடவே காஞ்சிபுரம் பற்றியும் மணிமேகலையில் பேசப்படுகிறது. எனவே சிலப்பதிகாரம்

எழுதப்பட்டு குறைந்தது இருநூறு வருடங்கள் கழித்து மணிமேகலை எழுதப்பட்டிருக்கலாம்.

இப்படியிருக்கும் போது மணிமேகலை எழுதிய சீத்தலை சாத்தனார் சிலப்பதிகாரத்தில் ஒரு பாத்திரமாகவே வருகிறாரே அது எப்படி முடியும்? எனவே சீத்தலை சாத்தனாரே சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டம் போன்றவற்றை எழுதி சேர்த்திருக்கலாம்"

"அப்படியானால் மணிமேகலை கி.பி.400 லிருந்து 500-க்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும். சேரன் செங்குட்டுவன் கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். எனவே அவனுடைய ஆட்சி முடிந்து பல காலம் ஆன பின்பு அவன் புகழ் பாடவேண்டிய காரணம் என்ன?" என்று முல்லை கேட்டாள்.

"அது கொஞ்சம் குழப்பமாகத்தான் இருக்கிறது. சேரநாடு எப்போதும் கொங்குப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று கொண்டேதான் இருக்கிறது. அவர்களது கல்வெட்டுகள் பழனி, கோவை போன்ற பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. கேரளாவில் கண்ணகி வழிபாடும் உண்டு. இந்த காரணங்களால் பின்னால் வந்த சேரமன்னர்கள் தங்கள் குல முதல்வனின் பெயரால் அதை செய்திருக்கலாம்".

"ஏன் செய்ய வேண்டும்?" என்றான் நவீன். "கண்ணகி எந்த விதத்தில் ஸ்பெஷல்?"

"சிலப்பதிகாரம் உண்மை என்று வைத்துக் கொண்டால் எல்லாவிதத்திலும் கண்ணகி ஸ்பெஷல் தான். உடன்கட்டை ஏற வில்லை. மன்னனையே பழிக்குப் பழி வாங்குகிறாள். இப்படி ஒரு பெண் இல்லையல்லவா? கண்ணகி மன்னர்களுக்கு ஏன் தேவை என்பது பற்றி நான் சிந்தித்ததில்லை" என்றார் ஸ்ரீகுமார்.

"சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட இத்தனை இடங்களை பார்த்தபின்னும் இன்னும் உங்களுக்கு சந்தேகமா?" என்று கேட்டாள் முல்லை.

“ஆய்வு இரக்கமற்றது” என்றார் ஸ்ரீகுமார்.

“என் கேள்விக்கு இன்னும் பதிலில்லை. சிலப்பதிகாரம் உண்மை என்றால் பூம்புகாரின் சோழமன்னன் தானே அவள் மீது அக்கறை கொண்டிருக்க வேண்டும். செங்குட்டுவனின் அக்கறை சற்று விசித்திரமாக இருக்கிறது. ஏதோ ஒரு அரசியலை இந்த கதை பேசுகிறது. அந்த முடிச்சை அவிழ்க்காமல் இந்தப்பயணம் முழுமையடையாது” என்றான் நவீன்.

ஸ்ரீகுமார் பேச்சு முடிந்து விட்டது என்று நினைக்கும் வண்ணம் புகைபிடிக்கத் தொடங்கினார்.

நவீனின் முகத்தில் தெரிந்த கெஞ்சலைப் பார்த்து “சரி பிடித்துத் தொலை” என்றாள் முல்லை.

குடிகாரர்கள் ஊதித்தள்ள, முல்லை பாறை இடம் கொடுத்த வரை நடந்து கைப்பிடிக்கு நிறுத்தப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு தனக்குப் பிடித்த இடத்தில் நின்றாள்.

மேகம் இல்லை, பனியில்லை, லேசான குளிர், அள்ளிக் குடிக்கலாம் போன்ற அமைதி. தான் எங்கிருந்து எங்கு வந்திருக்கிறோம். என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று ஆச்சிரியமாக இருந்தது.

டெல்லி, சென்னையின் பரபரப்புக்கும் இந்த வறண்ட அத்துவானக் காட்டின் அமைதிக்கும் எவ்வளவு வித்தியாசம்.

முல்லை திரும்பியபோது இருவரும் நீட்டிப் படுத்திருந்தனர். ஸ்ரீகுமார் முல்லையிடம் ஓடமோஸை நீட்டினார்.

“கொசு இல்லை. வேறு பூச்சிகள் வராமல் இருக்க இதைப் பூசிக்கொள். நான் ஆழமாகத் தூங்குபவன் அல்ல. அதனால் நீ தூங்கலாம்” என்றார்.

புரண்டு அவளைப்பார்த்த நவீன் சிரிப்பதை முல்லை கண்டாள்.

“எனக்கு தூங்கத்தெரியாதா? பாடிகாட்ஸ் வேணுமா?” என்றாள்

“ஒருவருக்கொருவர் பாதுகாப்புதானே? நோ ஈகோ ப்ளீஸ்” என்றான் நவீன்.

முல்லை பாதி குகைக்கு உள்ளேயும், வெளியேயுமாக தலைவைத்துப் படுத்துக் கொண்டாள்.

இப்படித்தான் படுத்திருப்பதைப் பற்றி என்றாவது ஒரு நாள் அம்மாவிடம் சொன்னால் அவளுக்கு எப்படியிருக்கும்!. நேற்று சொல்லி இருந்தால் தன்னால் கூட நம்பியிருக்க முடியாது.

யார் இவள்? யார் இந்த கண்ணகி? இத்தனை ஆண்டுகளாக இத்தனை பேரை கவர்ந்திழுக்கக்கூடியவளாக ஏன் இருக்கிறாள்? துயரத்தின் சின்னமாக, கற்பின் அடையாளமாக, இலக்கியமாக, வாய் மொழியாக வாழ்ந்து கொண்டே இருக்கிறாள் இவள்.

ராஜராஜ சோழனைத் தெரியாதவர்கள் தமிழ்நாட்டில் இருக்கலாம். கண்ணகியைத் தெரியாதவர்கள் இருக்க முடியுமா? கடற்கரையில் நின்ற கண்ணகி சிலை தி.மு.க.விற்கு ஒரு பண்பாட்டுச் சின்னம். அ.தி.மு.க.வுக்கு ஒரு வாஸ்து பிரச்சனை அல்லது சங்கடப்படுத்தும் உக்கிரகாளியின் வடிவம்.

கடவுள், புராண, இதிகாச மரபுகளில் அடைக்கலம் தேடமுடியாத அன்றைய தமிழக அரசு மாற்றுப் பண்பாட்டுச் சின்னங்களை முன்னிறுத்தியது.

அந்த அரசியல் நீர்த்துப் போகும்போது கண்ணகிக்கான தேவையும் நீர்த்துப் போகுமோ?

இதே போன்ற தேவைதான் அன்று சேரன் செங்குட்டுவனுக்கும் இருந்திருக்குமோ! முல்லை துள்ளி எழுந்தாள்.

ஸ்ரீகுமாரும், நவீனும் கூட எழுந்துவிட்டனர்.

“என்ன முல்லை, ஏதாவது கனவா?” என்றார் ஸ்ரீகுமார்.

“நான் கொஞ்சம் பேசட்டுமா?” என்றால், முல்லை.

“பேசு, இந்த அத்துவானக்காட்டில் நமக்கு வேறென்ன வேலை?” என்றான் நவீன்.

முல்லை எழுந்து குகையின் சுவரோரம் சாய்ந்து கொண்டாள். “கண்ணகி கதை நடந்திருக்கலாம் அல்லது நடக்காமலும் இருந்திருக்கலாம். ஆனால் அவள் அக்காலத்தில் தமிழ் பெண்மையின் வடிவம். தமிழ் பண்பாட்டை தங்கள் அடையாளமாகக் கொள்ள நினைக்கிறவர்கள் இன்றும் கூட கண்ணகியை உயர்த்திப்பிடிப்பதைப் பார்க்கிறோம். இதையேதான் அன்று சேரன் செங்குட்டுவனும் செய்திருக்கிறான். பூம்புகார் கண்ணகியை கட்டிய சேலையோடு விரட்டியது. மதுரை அவளை அழித்து தானும் சாம்பலானது. கண்ணகியை உன்னதமான இடத்திற்கு உயர்த்திச் சென்றவன் சேரன். தமிழ் பெண்மையின் காவலன். தமிழ் வணிகர் குலத்திற்கு நம்பகமானவன். தமிழ்ப் பெருமைக்காக போர் புரியத் தயங்காதவன் என்ற பிம்பத்தை சிலப்பதிகாரம் கட்டியமைக்கிறது. ஆனால் இந்தச் சேரன் தமிழ் பேசும் மற்ற பகுதிகளிலிருந்து வெறும் முப்பது கிலோமீட்டர் மட்டுமே அகலமுள்ள பாலக்காட்டுக் கணவாயால் இணைக்கப்பட்டிருந்தான். எனவே அந்நியனாகக் கருதப்பட வாய்ப்பிருந்தது. இப்படிப்பட்டவன் அல்லது அவன் பரம்பரையில் வந்தவர்கள் தமிழகத்தின் மையப்பகுதிகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட மற்றவர்களைவிட அதிகமாக தமிழர் பெருமையை உயர்த்திப் பிடிப்பதில் என்ன ஆச்சரியம்?”

“சரியாகத் தானிருக்கிறது. சேரநாட்டுக்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட மலைப்பகுதிகளில் ஏராளமான பழங்குடியினங்கள் வாழ்ந்து வந்தன. அவை பண்பாட்டியிலும், மொழியிலும் வேறுபட்டவை. எனவே சேரநாடு தமிழ் பேசும் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது என்று முல்லை சொல்வது சரி.” என்றார் ஸ்ரீகுமார்.

“அவ்வளவுதான். கிளைமேக்ஸ் முடிந்து விட்டது. ஊருக்குத் திரும்பலாமா?” என்றான் நவீன்.

“முடியவே முடியாது. கொடுங்கலூர் பார்க்காமல் திரும்பவே முடியாது. “முல்லையின் மனம் உற்சாகத்தால் நிரம்பி வழிந்தது. எழுந்து ஓடவேண்டும் போல் தோன்றியது.

ஸ்ரீகுமாரின் கையைப் பிடித்து குலுக்கினாள். “நீங்க இல்லைன்னா நாங்க என்ன பண்ணியிருப்போமோ தெரியல. சார்” என்றாள்.

“மணி ஒன்று” என்றார் ஸ்ரீகுமார். பாறை சற்றே குளிரத் தொடங்கியது. முல்லைக்கு தூக்கம் கண்களை சுற்றிக்கொண்டு வந்தது. தூங்கக் கூடாது என்று நினைத்தாள். தூங்கினால் இந்த அற்புதமான இரவு மறைந்துவிடும். இனியொரு இரவு இப்படி அமையப்போவதில்லை.

நவீனுடைய எண்ணங்கள் வேறுவிதமாக இருந்தன. பயணத்தின் நோக்கங்கள் நிறைவேறுகின்றன என்ற விதத்தில் சிலப்பதிகாரத்தின் விடுகதைகள் ஒவ்வொன்றாக அவிழ்க்கப்படுவதும் அரசியல், பொருளியல் நோக்கில் ஒரு பழம் பெரும் இலக்கியம் ஆய்வுக்குட்படுத்தப்படுவதும் அவனுக்கு மகிழ்ச்சியளித்ததுதான். தொடக்கத்தில் முல்லையிடம் இதையெல்லாம் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் தான் விரும்பியது என்ன, இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது? காடுகளில் நிறைந்திருக்கும் கெரில்லாக் குழுக்கள், வர்க்க உணர்வு கொண்ட மக்கள் . . . கெரில்லா முதுகுப் பை தாங்கி இடையறாது நகர்ந்து கொண்டிருக்கும் தான் என்று செய்து வந்த கற்பனை என்ன இப்போது நடப்பது என்ன? சமணர் குகையில் சிலப்பதிகாரம், கண்ணகி பற்றிய விவாதம்

ஆனால் தமிழகம் பற்றிய புரிதலில் தனக்கு இருந்த குறைபாட்டை இந்தப் பயணம் கொஞ்சம் சரி செய்து விட்டதாகத் தோன்றியது. தமிழகத்திலேயே வறண்ட பகுதி என்று கருதப் படும் கொங்குநாட்டில் இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்க, அதற்காக உள்நாட்டு வியாபாரிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் அடித்துக் கொள்கிறார்கள். சம்பந்தமே இல்லாத அறிவுஜீவிகளைத் தங்கள் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் தங்கள் பிள்ளைகளை கேம்ப் கூலிகளாக மில்களுக்கு அடிமையுழைப்பிற்கு அனுப்புகிறார்கள். இதை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு இதுவரை தனக்குக் கிடைத்ததில்லை.

இது போன்ற ஒரு ரொமான்டிக்கான இரவில் வறுமை பற்றி

நினைக்காமல், ஆயுதப் போராட்டத்தின் சாகசங்கள் பற்றி மட்டும் கற்பனை செய்வது இனிமையானதாக இருந்திருக்கும். நவீன் புரண்டு படுப்பதைப் பார்த்து ஸ்ரீகுமார் தலையைத் தூக்கிப் பார்த்தார். "என்ன நவீன் தூக்கம் வரலையா?"

"ஆமாம் சார். நீங்க ஏன் தூங்கல?"

"முல்லை சொன்னதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ?"
"நான் . . . " நவீனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

'சே குவேரா பற்றியா?" அவரே கேட்டார்.

அவர் சரியாக ஊகித்து விட்டது நவீனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"சே பற்றி மட்டும் இல்லை சார். மாவோ, ஹோசிமின், ஜியாப் பற்றியும் கூட"

மாணிக்கம் ஹிந்தியில் மானக் அல்லது லால் என்றும் சமஸ்கிருதத்தில் ரத்னராஜ் அதாவது , ரத்தினங்களின் அரசன் என்றும் அழைக்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் ரூபி.

மாதுளை மொட்டுகள் போல அடர்சிவப்பு நிறத்தில் ஒளி ஊடுருவக் கூடியதாக இருக்கும் மாணிக்கம் கொருண்டம் என்ற தாதுவினால் ஆனது. இந்த கொருண்டம் என்ற சொல் குருவின்டா என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது. ரூபி, சிவப்பு என்று பொருள்படும் ருபென்ஸ் என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது.

மாணிக்கத்தின் நிறம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தீயும், ரத்தமும் சிவப்பு அல்லவா? வேறெந்த கல்லையும் விட மாணிக்கம் கூர்மையாக உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாக கருதப்படுகிறது.

ஒளி ஊடுருவக் கூடிய மாணிக்கங்கள் வைரத்தை விட அரிதானவையாக உள்ளன. இந்தியாவில் ஆனந்தபூர், கிருஷ்ணா, கர்னூல், மண்பூம், காங்கேயம் ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன.

காங்கேயத்தில் கிடைப்பது facet grade rubi என்று சொல்லப்படுகிறது.

அழகர் மலை செல்லும் வழியில் டெம்போ விரைந்து கொண்டிருந்தது. டிரைவர் புலம்புவதும், முணுமுணுப்பதும், தலையை உதறிக் கொள்வதுமாக இருந்தான்.

சற்று நேரத்திற்கு முன்பு ஸ்ரீகுமார் போன் பண்ணியதும் ஒரு மணி நேரத்தில் வந்துவிட்டான். ஆனால் வந்தவுடன் கெஞ்சுவது போலவும், கொஞ்சுவது போலவும் நவரசங்களையும் காட்டி அவரைத் திட்டித் தீர்த்து விட்டான். ஸ்ரீகுமார் அலட்டிக் கொள்ளவில்லை. புகையாக ஊதித் தள்ளினார். செவிடன் காதில் ஊதிய சங்கு இதுதான் போலிருக்கிறது என்று முல்லை நவீன் காதில் கிசுகிசுத்தாள்.

அவர்கள் அழகர் கோவிலுக்குள் செல்லவில்லை. முன்பிருந்த இரண்டு குளங்களையும் பின்னால் காட்டினுள்ளிருந்த இன்னொரு குளத்தையும் பார்த்தார்கள். அதைப் பார்த்ததும் சிலம்பில் வரும் மூன்று பொய்கைகள் இவையாகவும் இருக்கலாம் என்று முல்லைக்குத் தோன்றியது. ஆனால் அதுதான் இதுவா என்பதையெல்லாம் கடந்து தனது தேடல் வெகுதூரம் சென்றுவிட்டது என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் மதுரைக்குச் செல்ல ஆவல் கொண்டு துடித்துக் கொண்டிருந்தாள். இந்தக் குளங்களைப் படமெடுத்துக் கொள்கிறேன் என்று நவீன் சொன்னதற்காகவே சற்றுத் தாமதித்தாள். பரந்து விரிந்த வைகை ஆறு. ஆங்காங்கே ஓடிக் கொண்டிருந்த சாக்கடையைத் தவிர துளி நீரும் இல்லாத ஆற்றுப் பரப்புக்கு அப்பால் மதுரையின் நெரிசலான குட்டைக் கட்டடங்கள் தெரிந்தன.

வைகைப் பாலத்திற்கு அருகில் முல்லை வண்டியை நிறுத்த சொன்னாள். சுட்டெரித்தது வெயில். தண்ணீர் இல்லையென்றாலும் ஸ்ரீரங்கம் காவேரி பரந்து விரிந்த ஒரு பீச்சைப்போலிருந்தது. அதற்கு முன்னால் வைகை கரடுமுரடான பெரிய வாய்க்கால் போலத்தான் தோன்றியது.

இந்த இடத்தில் தான் கண்ணகியும் கோவலனும் தெப்பத்தில் ஆற்றை கடந்திருக்க வேண்டும். ஏறக்குறைய சித்திரை மாதம் புறப்பட்ட கண்ணகியும், கோவலனும் ஆவணி மாதம் மதுரை வந்து சேர்கின்றனர். மூன்று மாதப் பயணம். கோவலன் அடையாளமே தெரியாமல் மாறிப் போய்விட்டான். மாதவியிடமிருந்து ஓலை கொண்டுவரும் கோசிகனால் அவனை அடையாளம் காணவே முடியவில்லை. கண்ணகியும் உருமாறித்தான் போயிருப்பாள். ‘வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள் கண்ணகியல்ல இவள்’.

வெயில்காலம் உச்சத்தில் இருந்தது. ஆனாலும் அடிக்கடி கோடை மழைப் பெய்யும் மதுரையில் அதற்கான அறிகுறி எதையும் காணவில்லை. வெயிலைப் பொருட்படுத்தாமல் முல்லை ஆற்றோரம்

நின்று அவர்கள் என்ன மனநிலையில் மதுரைக்கு வந்து சேர்ந்திருப்பார்கள் என்று சிந்தித்தாள். மதுரைக்கு அருகில் எங்கோ ஒரு கிராமத்தில் கோவலன் மாதவி அனுப்பிய கோசிகனைக் காண்கிறான். இல்லை. கோசிகன் தான் கோவலனைக் கண்டு பிடிக்கிறான். கோவலன் தாங்கள் பத்திரமாக இருப்பதாகவும், மதுரை வந்து சேர்ந்துவிட்டதாகவும் உறவினர்களுக்கு கோசிகன் மூலம் செய்தி அனுப்புகிறான். மாதவியின் மீதான சந்தேகம் கூட தீர்ந்து போயிருக்கும். நூறு நாள் நடைப்பயணம் முடிந்து மாபெரும் நகரான மதுரை எதிரே விரிந்து கிடந்தது.

இறுக்கம் தளர்ந்த மனநிலையில் தான் கோவலன் இருந்திருக்க வேண்டும். பாணர்களோடு அவன் ஆடிப்பாடுகிறான். கோவலன் தன் இனத்தார் தனக்கு உதவுவார்கள் என்று உறுதியாகச் சொன்னதால் கவுந்தியடிகளும், கண்ணகியும் கூட மிகுந்த நம்பிக்கையுடன் தான் இருந்திருக்க வேண்டும். இளங்கோவடிகள் தான் பதறித்துடிப்பது போல் தெரிகிறது. கொடிகள் கூட வர வேண்டாம் என்று மறித்ததாக எழுதுகிறார்.

ஸ்ரீகுமார் கடகடவென்று சிரித்தார். “எனக்கு உசிரு ஞாபகம் வருது.” என்றார். “அப்ப மனப்பாடம் பண்ணினேன். ‘ஆரயில் நெடுங்கொடி வாரல் என்பது போல் மறித்துக் கைகாட்ட’, பிரம்பக் கைகல பிடிச்சிட்டு மனப்பாடம் பண்ணச்சொல்லி பெஞ்சு பெஞ்சாப் போய் மிரட்டுவாரு. கிருஷ்ணசாமிக் கவுண்டனைப் பார்த்தப்பக்கூட எனக்கு அவ்வளவு பயம் வர்ல”.

“யாரு சார் உசிரு, உங்க தமிழ் ஆசிரியரா? உசிருங்கிறது என்ன பட்டப் பேரா?”

“ஆமாம். ஒரு கொட்டு வெச்சு முதுகில் ஒரு சாத்து சாத்தினாருன்னா எந்த சித்திரவதையும் பக்கத்துல நிக்க முடியாது.

‘யார் கொட்டும் கொட்டு கொட்டல்ல, உசிர்
கொட்டும் கொட்டே கொட்டு’- ன்னு கொட்டு வாங்கின பசங்க புது குறளே பாடிவெச்சாங்க”

ஸ்ரீகுமார் தன் இயல்புக்கு மாறாகத் தாடிக்கு வெளியேயும் சிரித்தார்.

டெம்போ டிரைவரைப் பார்த்து விட்டு மீண்டும் பொங்கிச் சிரித்தார்.

“உங்களை மாதிரி தமிழறிஞர்களை உருவாக்கியிருக்காரில்ல உங்க ‘உசிரு’”, தமிழாசிரியர்களை இப்படிக் கிண்டல் செய்வது முல்லைக்கு வருத்தமளித்தது.

“ஜெயகாந்தன் ஒருமுறை சொன்னது போல நான் அந்த வகையான தமிழறிஞன் அல்ல” என்றார் ஸ்ரீகுமார்.

நவீன் யாருடனோ மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்தவன், இவர்களிடம் வந்தான்.

“தோழர் வர்றாரு. கொஞ்சம் முக்கியமான இடத்தையெல்லாம் காட்ட வசதியா இருக்கும்னு கூப்பிட்டேன்” என்றான்.

சற்று நேரத்தில் ஒரு இளைஞன் டி.வி.எஸ் 50-ல் வந்து சேர்ந்தான். ஒரு வாட்டசாட்டமான கோபக்கார இளைஞனை எதிர்பார்த்துக் காத்திருந்த முல்லை அரும்பு மீசையும், லேசான தாடியும் முகம் நிறையச் சிரிப்புமாக கல்லூரி மாணவன் போல் வந்து நின்ற அந்த இளைஞனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு போனாள்.

கண்ணன் என்று அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். நவீனை விட இரண்டு மூன்று வயது குறைவாக இருக்கலாம்.

“மெயில் பார்த்தேன்” என்று சிரித்தபடி நவீனிடம் சொன்னான்.

நவீன் மற்றவர்கள் மீது கண்ணோட்டியபடி “அது பற்றி அப்புறம் பேசலாம்” என்று சொல்லி விட்டு அறிமுகப்படுத்த அவன் தோளைப் பற்றினான். அதற்குள் அவன் ஸ்ரீகுமாரை நோக்கி நகரத் தொடங்கியிருந்தான். ‘தாடியைப் பார்த்துட்டா உணர்ச்சி வசப்பட்ருவாங்களே”’ என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்ட நவீன் தானும் ஸ்ரீகுமாரை நெருங்கினான். முல்லையைக் கண்டு கொள்ளாமல் தன்னிடம் அவன் வந்தது ஸ்ரீகுமாருக்கும் ஆச்சர்யம் ஊட்டியது போல் தோன்றியது.

“கண்ணன், புரட்சியைத் தவிர வேறெதையும் யோசிக்காத புரட்சிகர

இயந்திரம்" என்றான், நவீன்.

ஸ்ரீகுமார் மனம்விட்டு சிரித்தார்.

"பார்த்தாலே தெரியுது"

முல்லையையும், டிரைவரையும் அறிமுகப் படுத்தினான்...

"அது என்ன இயந்திரம்?" முல்லை விளங்காமல் கேட்டாள்.

கண்ணன் சத்தம் வராமல் சிரித்தபடி நவீனைப் பார்த்தான்.

"நாங்க எங்க கட்சிக்காரங்களை ரெண்டு விதமாய் பிரிப்போம். எல்.ஐ.சி மேல ஏறி குதிங்கன்னு கமிட்டி சொல்லுச்சுன்னு வச்சுக்க. அடுத்த நிமிஷம் குதிச்சிட்டா புரட்சிகர இயந்திரம். அதாவது பு.இ. என்ன முழக்கத்தோட குதிக்கணும், தலைகீழ இருக்கணுமா? கால் கீழ இருக்கணுமான்னு கேட்டுத் தெளிவுபடுத்திட்டுக் குதிச்சா அதி புரட்சிகர இயந்திரம்.அ.பு.இ" என்றான் நவீன்.

"தோழரைப் பார்த்தால் அப்படியொன்னும் கண்டிப்பான, கோபக்கார இளைஞனை மாதிரி தெரியல" என்றாள் முல்லை. கண்ணனின் சிரிப்பிலும் குரலிலும் ஒரு அசாதாரண மென்மையை அவளால் உணர முடிந்தது.

"சரியாகச் சொன்னீங்க" என்று கண்ணன் அதை ஆமோதித்துவிட்டு சற்று தயங்கியே "தோழர்" என்றான்.

"நான் ஒரு ஷார்ட் ஃபிலிம்ல வேலை செஞ்சிருக்கேன். ஆன்டன் செகாவோட கதை" என்றான் அவன்.

"பச்சோந்தியா?" என்றார் ஸ்ரீகுமார்.

"இல்லை. வான்கா. கொத்தடிமையா இருக்கிற ஒரு பையனோட கதை. கனகவேல்னு ஒரு அட்வகேட் என்னோட சீனியர், நம்ம தோழர்தான், இந்தக் கதையை முத்துராசுங்கற பேர்ல எடுத்தாரு. கூட இருந்தேன்" என்றான்.

"நீங்க அட்வகேட்டா?" முல்லை கேட்டாள்.

"கோர்ட் பக்கமே போகாத அட்வகேட்" என்று நவீன் அவனைப்

பார்த்து சிரித்துக் கொண்டே பதில் சொன்னான். பின்பு திரும்பி சற்று வெற்றி பெருமிதத்துடன் ஸ்ரீகுமாரைப் பார்த்தான், செகாவ் என்றாலே எங்களுக்குப் பச்சோந்திதான் தெரியும் என்று நினைத்துக் கொண்டீர்களா? ‘என்று கேட்பதுபோல் இருந்தது அவன் பார்வை.

“புரிந்து கொள்கிறேன். ஒப்புக் கொள்கிறேன்” என்று வாய்விட்டே சொன்னார் ஸ்ரீகுமார்.

பெரிசு இன்னைக்கு ரொம்ப உற்சாகமா இருக்குது என்று நவீன் நினைத்துக் கொண்டான்.

“கண்ணன், நீங்க ஏன் சினிமா கரியரை தொடரலை?” என்றாள் முல்லை.

“பார்க்கலாம் தோழர்” அதற்கும் சிரிப்புதான்.

முல்லைக்கு அவனைப் பார்த்தவுடனேயே பிடித்துப் போய் விட்டது. நவீனிடம் சற்று இறுக்கமும், உனக்கு நான் பொறுப்பு என்ற பாங்கும் தெரியும். கண்களும், முகமும் மலரச் சிரிக்கும் இந்த இளைஞனிடம் அந்த இடைவெளியில்லை போலத் தோன்றியது.

“இப்போ” தொடங்கினான். “புரொபஸர் சாந்தலிங்கனைப் பார்க்க அப்பாயிண்மெண்ட் வாங்கி இருக்கேன். கோவலன் பொட்டலைப் பார்க்கலாம். வேறென்ன?” என்றான் கண்ணன். “டி.எஸ்.பி. ஆபிஸ் கட்டிடம் ஒரு பழைய கட்டிடம். அது பாண்டியர் கால கட்டிடம்’

“சாந்தலிங்கனா?” என்றார் ஸ்ரீகுமார்.

“உங்களுக்கு தெரியுமா சார்?”

“நல்லாத் தெரியும்” என்றார்.

“முதலில் சாப்பிடலாம். ஒரு அறை எடுக்கலாம். பிறகு போகலாம்.” என்றாள் முல்லை.

கண்ணன் தனது வண்டியை ஒரு கடையில் விட்டுவிட்டு டெம்போவில் ஏறிக் கொண்டான். முல்லையும் அவர்களோடு பின்புறத்தில் ஏறிக் கொண்டாள், “ஆயர்சேரி எங்கேயிருக்கு?”

“மதுரை கோட்டை சுவருக்கும், வைகை ஆற்றிற்கும் நடுவே

இருந்திருக்கலாம். கோட்டைச் சுவரை ஒட்டி ஒரு யாதவர் கோவில் இருக்கு. வெளியே கொஞ்சம் தள்ளிப் போனா கோனார் தெரு இருக்கு" என்றான் கண்ணன்.

முல்லை சற்று வியப்படைந்தாள்.

"உங்களுக்கு சிலப்பதிகாரத்தில் ஆர்வமுண்டா?"

"மதுரையில் இருக்கும் ஆக்டிவிஸ்ட் எல்லாரும் பழைய வரலாற்றை கொஞ்சம் தெரிந்து வைத்திருப்பாங்க. பாதிக்கூட்டங்கள் பழந்தமிழர் வரலாறு பேசும் கூட்டங்கள் தானே?"

கண்ணன் டிரைவரிடம் ஏதேதோ வழி சொல்லிக் கொண்டிருந்தான். வெந்நீரை ஊற்றியது போன்ற வெயில் உடலெல்லாம் அரிப்பெடுக்க வைத்தது. உலை கொதிப்பது போல நெரிசலாக மதுரை அந்த மதிய வேளையில் இயங்கிக் கொண்டிருந்தது. முல்லை தான் அதுவரை பார்த்த தமிழ்நாட்டு நகரங்களுக்குள் என்ன வேறுபாடு என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள், திருச்சியும், மதுரையும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருக்கின்றன. பளிச்சென்று வெளிச்சமாக. டெல்லியைச் சுற்றியிருக்கும் உத்திரப்பிரதேச நகரங்களில் தெரியும் ஒரு இருண்ட தன்மையை இங்கே காணோம். பழமையையும் காணவில்லை.

திருச்சிக்கும் மதுரைக்கும் அவளால் வேறுபாடு காணவே முடியவில்லை. கண்ணகிக்கு என்ன தோன்றியிருக்கும்? கண்ணகி காலம் வேறு. ஆயர்சேரியே அவளுக்கு புதிதாகத்தான் தோன்றியிருக்கும். விரித்த புல்வெளிகளின் நடுவே மதுரைக் கோட்டை மதில்களுக்கு அருகே அழகான, தூய்மையான ஆயர்சேரி கோகுலம் போலிருந்திருக்கும். புகாரின் கண்ணகி வீடான எழுநிலை மாடத்துக்கும், ஆயர்சேரியில் ஐயையின் குடிலுக்கும் எவ்வளவு வேறுபாடு? கண்ணகி ஒரு பண்ணை வீட்டில் இருப்பது போல உணர்ந்திருப்பாளா? குளுமையான, சாணம்மெழுகிய பளிச்சென்ற குடிசையை யாருக்குத்தான் பிடிக்காது? அதுவும் மூன்று மாத ஓய்வற்ற நடைக்குப் பின்பு?

முல்லை குளித்து உடைமாற்றி விட்டு பக்கத்து அறைக் கதவை திறந்தபோது குப்பென்று புகைமண்டலம் தாக்கியது. கண்ணனுக்கும்

நவீனுக்கும் விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீகுமார் சுவாரஸ்யமாக அதை கவனித்துக் கொண்டிருந்தார். அது விவாதம் போல இல்லை. நவீன் பேசிக்கொண்டிருந்தான். கண்ணன் கேட்டுக்கொண்டிருந்தான். ஸ்ரீகுமார் அருகில் இருந்ததால் இதில் ரகசியம் எதுவும் இல்லை என்று முல்லை முடிவு செய்து பால்கனியோரம் நின்று கொண்டாள்.

நவீன் அதுவரை நடந்தவந்த விவாதத்தை முல்லையிடம் விளக்கினான். "காங்கேயம் யாரும் கண்டு கொள்ளாத அவ்வளவு முக்கியமில்லாத பகுதி. விவசாயிகள் நஷ்டமடைந்து திருப்பூருக்கும், கோவைக்கும் இடம் பெயர்கிறார்கள். ஆனால் காங்கேயத்தில் செல்வங்கள் கொட்டி கிடக்கின்றன. எந்த ரகசியமும் இல்லாமல் வெளிப்படையாக அவற்றுக்காக உள்ளூர், வெளியூர் நிறுவனங்கள் அடித்துக் கொள்கிறார்கள், அவர்கள் சாருக்கு ஸ்பான்சர் செய்கிறார்கள். கடத்துகிறார்கள், நிழலாகத் தொடர்கிறார்கள். மக்களுக்காகப் போராடுவதாகச் சொல்லும் நாம் என்ன செய்கிறோம்? என்றாவது ஒருநாள் மக்களுடையதாகக் கூடிய செல்வங்கள் குறித்து நமக்கு என்ன புரிதல் இருக்கிறது?. ஒரு பன்னாட்டு நிறுவனம் வந்து சுரங்கம் தோண்டிய பிறகுதான் எதிர்த்துப் போராடப் போகிறோமா? ஸ்ரீகுமார் போன்றவர்களோடு நமக்கு என்ன தொடர்பு? அவர்களுக்கு நமது அரசியலை புரிய வைப்பது யார் பொறுப்பு?" முல்லைக்கு விளக்க நினைத்தவன் கேள்விகளோடு முடித்து விட்டான்.

"நீங்கள் என்றால் யார்?"

"கட்சிகளை விடுங்கள். எல்லா இடதுசாரிகளும் தான். வேறு யாரிடம் போய் இதையெல்லாம் பேச முடியும்? கேட்க முடியும்?"

"தோழர், நீங்கள் சொல்வது காங்கேயத்திற்கு பொருந்தலாம். ஆனால் மற்ற பகுதிகளில் நடப்பது உங்களுக்கு தெரியும் தானே? நமக்கு பலம் இருக்கும் இடங்களில் எதிர்த்து போராடுகிறோம். இல்லாத இடங்களில் அதுபற்றி தெரிந்து கொள்ள முயல்கிறோம். புரியாவிட்டால் புரிந்து கொள்வோம். தெரியாவிட்டால் கற்றுக்கொள்வோம்." கண்ணனின் குரலிலிருந்த மென்மை மாறவேயில்லை.

“லெனின் சொன்னது. எல்லாவற்றுக்கும் பெரியவர்கள் ஏதாவது ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இதை நீங்கள் கட்சியில் பேசுவீர்களா?”

கண்ணன் சட்டென்று சிரித்தான். “எனக்கு வேறு என்ன வேலை? நான் பேச மாட்டேன் என்று ஏன் நினைக்கிறீங்க?”

நவீன் இதோடு விட்டுவிடலாம் என்று முல்லைக்கு தோன்றியது. இதற்கு மேல் பேச என்ன இருக்கிறது. ஆனால் நவீன் விடவில்லை.

“நமது திட்டங்கள் மக்கள் பிரச்சனைகளைப் பயன்படுத்தி அமைப்பு கட்டுவதை நோக்கித்தான் இருக்கின்றனவே தவிர பிரச்சனையைத் தீர்ப்பதை நோக்கி அல்ல.”

“இரண்டும் ஒன்றுதான் தோழர். பாராளுமன்ற அரசியலில் உள்ள அமைப்புகள் தங்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் போராடுவது எளிதாக இருக்கும் என்கிறார்கள். இல்லாத அமைப்புகள் தங்கள் இயக்கத்தில் மக்கள் இணைந்தால் போராட்டம் பலமடையும், நோக்கங்கள் நிறைவேறும் என்று நினைக்கிறார்கள். அமைப்பு வலிமையடைவது மக்களுக்காகத்தானே!”

“தோழர் நீங்க தேர்ந்தெடுக்கப்பட்ட, முன்பே முடிவு செய்யப்பட்ட பதில்களைப் பேசுறீங்க....”

கண்ணன் தனது வழக்கமான சிரிப்பை உதிர்த்துவிட்டு பேசாமலிருந்துவிட்டான். நவீன் பாவம் என்று முல்லைக்குத் தோன்றியது. முதலில் இந்த மென்மையான இளைஞனை நவீன் காயப்படுத்திவிடப் போகிறான் என்று பயந்தாள். ஆனால் அவனோ மிக எளிதாக நவீனைக் கையாண்டான். அந்த மென்மையான குரலில் உருக்கைப் போன்ற உறுதி தென்பட்டதாக அவளுக்குத் தோன்றியது.

“டிரா ஆயிருச்சா?” முல்லை சிரித்தபடி இருவரையும் பார்த்துக் கேட்டாள்.

“தோழர்களுடனான விவாதத்தில் வெற்றி தோல்விக்கு என்ன வேலை தோழர். ஒவ்வொரு நாளும் கற்றுக் கொண்டே இருக்கிறோம்... இந்த மண்ணையும் மக்களையும் இன்னும் நன்றாகத் தெரிந்து

கொள்வோம்..... அதற்கு நாங்கள் எப்போதுமே தயார்...” கண்ணன் அதே மென்மையுடன் பதிலளித்தான்.

வெயில் சற்றுக் குறைந்த பிறகு அவர்கள் அவனியாபுரம் சுடுகாட்டுக்குச் சென்றனர். கோவலன் பொட்டல் என்று சொல்லப்பட்டதே தவிர அங்கு ஒரு பொட்டல் வெளியும் காணப்படவில்லை. ஒரு நெரிசலான லேயவுட் தான் சுடுகாட்டைச் சுற்றியிருந்தது. சுடுகாட்டினுள் சாலையோரக் கோவில் போல ஒரு சின்னஞ்சிறிய கட்டிடம் தென்பட்டது. உள்ளே ஒரு கல். இந்தக் கல்லின் மீதுதான் கோவலன் தலை வெட்டப்பட்டது என்று சொல்கிறார்கள் என்றான் கண்ணன். சுற்றிலும் பல பெயர்களில் எப்போதோ உயிர்விட்டவர்களின் கல்லறைகள்.

அருகில் ஒரு மேம்பாலம் பிரம்மாண்டமாக உருவாகிக் கொண்டிருந்தது. மேலிருந்து கொட்டிக் கொண்டிருந்த நீர் கீழே நின்றிருந்தவர்கள் மீது அபிஷேகம் செய்தது.

வழக்கமாகத் தொல்பொருள் ஆய்வுத்துறை வைத்திருக்கும் துருவேறிய போர்டைக் கூட காணவில்லை. இது 1800 ஆண்டுகளுக்கு முந்தைய தலைவெட்டும் கல் என்று நம்புவதற்கு எந்த அறிகுறியுமில்லை.

“கோவலன் சுடுகாட்டிலோ அல்லது தண்டனை நிறைவேற்றும் இடத்திலோ கொல்லப்படலதானே! பொற்கொல்லன் வீட்டில்தானே அவனை வெட்டிக் கொல்றாங்க. அப்புறம் எப்படி சுடுகாட்ல மரணதண்டனை நிறைவேத்தற மாதிரி இந்தக் கல்மேல வெச்சுத்தான் கோவலன் தலையை வெட்டினாங்கன்னு சொல்ல முடியும்?”. முல்லை சந்தேகத்தோடு ஸ்ரீகுமாரைப் பார்த்தாள்.

அவர் “சாந்தலிங்கனைக் கேட்டுக் கொள்ளலாம்” என்றார்.

“அடுத்தது சாந்தலிங்கன் வீட்டுக்கா?” என்றான் நவீன்.

“ஆமாம், இங்கே அவனியாபுரத்தில் தான் இருக்கிறது” கண்ணன்.

எல்லோரும் டெம்போவில் ஏறியதும் டிரைவர் கர்மசிந்தையுடன், “இப்ப எங்கே போறோம்?” என்று கேட்டார். சொல்லி வைத்தாற்போல்

மூன்று பேரும் சிரித்தார்கள்.

“சாந்தலிங்கனார் என்ற தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞர் வீட்டுக்கு” என்றார் ஸ்ரீகுமார்.

“சீன வெளியுறவுத் துறை அமைச்சர்” என்று டிரைவர் காதில் விழுந்திருக்குமோ என்று அவன் முகத்தில் தோன்றிய விசித்திரமான பாவத்தை பார்த்தவர்களுக்கு கட்டாயம் தோன்றும்.

“தமிழ் வாத்தியார்” என்றான் நவீன். டிரைவர் முகத்தை சுழித்துக்குக்கொண்டு பேசாமல் இருந்து விட்டான். போலீஸ் ஸ்டேசனுக்கு என்று இல்லாதவரை நல்லது என்று அவன் நினைத்தது போல் தோன்றியது. இவர்கள் வேண்டுமென்றே தன்னோடு விளையாடுகிறார்கள். இந்த தாடிக்காரப் பெரிசிடம் நம்ம ஆட்களுக்கு என்ன வேண்டும், எதுவுமே தெரியாமல் இப்படி போய்க் கொண்டே இருப்பது அவனுக்கு குழப்பமாகவும் இருந்தது, விளையாட்டுப் போலவும் இருந்தது.

மந்திரி வழக்கமாகத் தன்னுடன் இருக்கும் அடியாட்களை அனுப்பாமல் தன்னை ஏன் அனுப்பினார் என்று வேறு அவனுக்குப் புரியவில்லை.

வழி சொல்வதற்காக செல்போனோடு சாந்தலிங்கனே வாசலில் நின்று கொண்டிருந்தார். டெம்போவை அவர் எதிர்பார்க்கவில்லை என்று தோன்றியது.

“வாங்க காம்ரேட். என்ன விசித்திரமான பயணமாக இருக்கிறது?” என்று கண்ணனை வரவேற்றவர் பின்னால் இறங்கிய ஸ்ரீகுமாரைப் பார்த்து இன்னும் வியந்து போனார்.

“மகான்கள் தரிசனமாக இருக்குதே” என்றவர் “என்ன வண்டியிது. எங்கிருந்து இவர்களை பிடிச்சீங்க?” என்று ஒரே நேரத்தில் கண்ணனையும், ஸ்ரீகுமாரையும் கேட்டார்.

“மீனாட்சிபுரத்திலிருந்து வர்றோம். இவர்தான் எங்களுக்கு லிப்ட் குடுத்தார்” என்றார் ஸ்ரீகுமார். தமிழாசிரியர்கள், புலவர்கள் மீது அப்பா ஏற்படுத்தி வைத்திருந்த பயத்தால் முல்லை பயபத்தியுடன் சாந்தலிங்கனைப் பார்க்கும் தருணத்தை எதிர்பார்த்திருந்தாள். ஆனால்

ஸ்ரீகுமார் வருவது தெரியாமலேயே தங்களுக்காக அவர் வாயிலில் காத்திருந்ததையும், கண்ணனிடம் அவர் காட்டிய நட்பையும் பார்க்க அவளுக்கு ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. சட்டென்று இடைவெளி குறைந்து போய் இவரிடம் கூச்சமின்றிப் பேசலாம் என்று தோன்றியது.

சாந்தலிங்கனாரின் அலுவலறை, சிறியதாக, புத்தகங்கள் நிறைந்ததாக இருந்தது. நவீன் கேமராவை நிறுத்தி தயார் செய்வதைப் பார்த்து, "ஸ்ரீகுமார் தான் இருக்கிறாரே" என்றார் அவர்.

"அவரை முன்பே பேட்டி எடுத்துவிட்டோம். தினமும் எடுத்துக் கொண்டே இருக்கிறோம்" என்று முல்லை பதிலளித்துவிட்டு அது சரியான பதில்தான் என்று தனக்குத்தானே திருப்திப் பட்டுக் கொண்டாள்.

'ஸ்ரீகுமாருக்கு கடுகளவும் ஈகோ இருப்பது போல் தோன்றவில்லை. இருந்தாலும் தான் உரிய மரியாதை அளிப்பதில் தவறக் கூடாதல்லவா. ஸ்ரீகுமாருக்கு ஈகோ மட்டும்தான் தான் இல்லையா அல்லது வேறெந்த மனித உணர்ச்சியுமே இல்லையா.....'

"அப்படியே இரு முல்லை. இந்த ஸ்மைலை எடுத்துக்கிறேன்" என்றான் நவீன்.

தடுக்க நினைத்தாலும் முல்லைக்கு லேசாக வெட்கம் வரத்தான் செய்தது. முல்லை நேரடியாகப் பேட்டியைத் தொடங்கினாள்.

"சிலப்பதிகாரம் உண்மையிலேயே நடந்தகதை என்று நீங்க நினைக்கிறீர்களா?"

சாந்தலிங்கன் குழப்பத்துடன் ஸ்ரீகுமாரைப் பார்த்தார்.

"இவ்வளவு நேரடியான கேள்விகள் வேண்டாம் முல்லை, குறிப்பாக கேள்" என்றார் அவர்.

"பி.எச்.டி திரும்பவும் படிக்கும் எண்ணம் எனக்கு இல்லை" சாந்தலிங்கன் சிரித்தபடி கூறினார்.

"சரி. கண்ணகி என்ற கேரக்டர் இருந்ததற்கு வேறு ஏதாவது வரலாற்று ஆதாரம் இருக்கிறதா சார்"

"வள்ளல் பேகனின் மனைவி பெயர் கண்ணகி. அவனும்

மனைவியை விட்டு விட்டு மாதவிபோல ஒருத்தியிடம் போய்விடுகிறான். புலவர்கள் சேர்த்து வைக்கிறார்கள். நற்றிணையில் இடமுலை இழந்த ஒரு பெண் வேங்கை மரத்தின் கீழ் நின்றதாக ஒரு குறிப்பு வருகிறது. இது போன்ற ஏதாவது ஒரு சம்பவத்திலிருந்து கண்ணகி கேரக்டர் வளர்த்தெடுக்கப் பட்டிருக்கலாம்."

"மதுரை எரிந்தது அழிந்தது என்கிறார்களே அப்படி ஏதாவது நடந்திருந்தால் ஆதாரம் இருக்கும் தானே சார் ...."

"ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு மதுரை எரிந்ததற்கு என்ன ஆதாரம்... ம்ஹூம் இல்லை. தொல்பொருள், கல்வெட்டு ஆதாரங்கள் கிடையவே கிடையாது. அந்தக் காலத்தில் அதாவது சங்ககாலம் என்று சொல்லப்படும் காலத்தில் நடந்த பெரும்பாலான போர்கள், நிகழ்ச்சிகள் பற்றி புறநானூறும் மற்ற இலக்கியங்களும் சொல்லத்தான் செய்கின்றன. ஆனால் ஒரு மன்னனும் அவன் மனைவியும் இறந்து, மதுரை அழிந்ததைப் போன்ற ஒரு மாபெரும் நிகழ்ச்சி நடந்ததைப் பற்றி சிலப்பதிகாரம் தவிர வேறு எதிலும் குறிப்பிடப்படாதது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஒருவேளை சிறிய அளவில் ஏதாவது பிரச்சனை நடந்திருக்கலாம். கோவலன் கொல்லப்பட்டதும் அவள் தான் பேசுகிறாளே "சான்றோர் உண்டுகொல், பெண்டிரும் உண்டுகொல் . . .தெய்வமும் உண்டுகொல் ... அப்பாவியக் கொன்னுட்டீங்களேன்னு ஒரு....."

"அப்படி பிரச்சினை நடந்ததற்கு ஏதேனும் குறிப்பு இருக்கிறதா சார்?" முல்லை அவரை இயல்பாக சார் என்று அழைப்பது என்று முடிவு செய்துவிட்டாள். ஐயா அல்லது வேறு ஏதாவது அதி மரியாதை விளியால் அழைப்பது போலித்தனமாகத் தோன்றியது.

"அதுவும் இல்லை. போர்கள் நடந்திருக்கின்றன. ஆனால் மக்கள் எழுச்சி நடந்தது, நகரம் பாதிக்கப்பட்டது என்றெல்லாம் இலக்கியத்திலும் இல்லை, கல்வெட்டிலும் இல்லையேம்மா . . ." என்றவர் சற்று சிந்தித்து விட்டு "மதுரை நகர் அடைந்த மாறுதல் பற்றி வேறு ஒரு குறிப்பு இருக்கிறது. கூன் பாண்டியன் காலத்தில் அதாவது ஏழாம் நூற்றாண்டில்

மதுரையை வைகைக்கு வடபுறமும் விஸ்தரித்ததாகவும், மங்களாபுரம் என்ற ஒரு புது நகரை உருவாக்கியதாகவும் கல்வெட்டுக்கள் உள்ளன. அது இப்போது இருக்கும் சாத்த மங்கலமாக இருக்கலாம் என்கிறார்கள்."

முல்லையைத் தவிர எல்லோரும் சிரித்தார்கள் சாந்தலிங்கன் உட்பட. மதுரை அழிந்ததற்கு ஆதாரம் தேடும் முல்லைக்கு அது விரிந்து பரவியதற்கு ஆதாரம் கிடைக்கிறது . . .

"சிலப்பதிகாரம் நடந்தது என்று உறுதியாக நம்புபவர்கள் என்ன சொல்கிறார்கள்?" முல்லை தயக்கத்துடன் கேட்டாள்.

" மயிலை சீனி வேங்கட சாமி அரண்மனை மட்டும் எரிந்திக்கலாம் என்கிறார் "

"பாண்டியன் நெடுஞ்செழியன், பாண்டிமா தேவி...பற்றிய செய்திகள் ஏதாவது சொல்லுங்கள் சார் "

"பல நெடுஞ்செழியர்கள் இருந்தாலும் தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் தான் முக்கியமானவர்கள். இதில் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுவது ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்கிறார்கள். கல்வியின் பெருமை பற்றி இவன் பாடியதாக புறநானூற்றில் ஒரு பாடல் இருக்கிறது. தவறாக நீதி வழங்கியதால் மனமுடைந்து இறந்ததாகச் செய்தி எதுவும் இல்லை... கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, இலவஞ்சிகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன், வடக்கிருந்து மாய்ந்த கோப்பெருஞ்சோழன் . . . என்று சிலர் மரணமடைந்ததைப் பற்றி புறநானூறில் இருக்கிறது. ஆனால் சிலப்பதிகாரம் சொல்வது போல இல்லை"

"கோவலன் பொட்டல் .... அது உண்மையா சார்?"

"இது போன்ற மக்கள் கருத்தை முழுமையாக மறுக்க முடியாது. ரொம்ப நாட்களாக அப்படியொரு கருத்து நிலவித்தான் வருகிறது..."

"கண்ணகி பற்றிச் சொல்லுங்கள் சார்?"

சாந்தலிங்கனின் குரல் உயரவேல்லை. எந்த உணர்ச்சிப் பரபரப்பும்

அதில் இல்லை. ஸ்ரீகுமாரின் விட்டேத்தியான தன்மையும் இவரது நிதானமும் ஏதோ ஓரிடத்தில் இணைவது போலத் தோன்றியது.

“கிழக்கேயிருந்து ஒருத்தி கணவனோடு வந்தாள். கணவன் கொல்லப்பட்டு விட்டான். மேற்கு வாசல் வழியாக வெளியேறினாள். கொஞ்ச நாளில் இறந்து போய் விட்டாள்....அப்படி எடுத்துக் கொள்ளலாம்”

“ஏன் மேற்கே போகிறாள்? குறிப்பாக ஏதாவது காரணம் இருக்குமா?”

“இடுக்கி மாவட்டத்தைக் கடந்து சேரநாடு செல்லும் வணிக வழி அது. அங்கே ரோமானியக் காசுகள் கிடைத்திருக்கின்றன. வணிக வழியில்தான் போகிறாள். வணிக வழியோரம் சமணர்கள், வணிகர்கள் இருப்பார்கள். தன்னவர்களிடம் போகலாம் என்று போயிருக்கலாம். வெறுமனே விரக்தியில் வேறு வழிதெரியாமல் கூடப் போயிருக்கலாம்.”

“திரும்பவும் அதே பழைய கேள்வி சிலப்பதிகாரம் உண்மையில் நடந்த கதை என்பதற்கு ஏதாவது ஆதாரம் சொல்ல முடியுமா?”

“இத பாரும்மா” அவள் பேரை தேடினார்.

“முல்லை”

“ஆமாம். முல்லை. அழகான பெயர். எந்த இலக்கியமும் வானத்திலிருந்து குதிக்காது. முழுவதும் எழுத்தாளனின் கற்பனையிலிருந்தும் உதிப்பதில்லை. ஏதோ ஒரு பொறியிலிருந்துதான் உருவாகியிருக்கும். இப்படியொரு இலக்கியம் உருவாவதற்கான சமூகக் காரணியும் இருந்திருக்கும். அதைத் தேடு.” என்றார். பின்பு எப்போது வேண்டுமானாலும் இது குறித்து ஏதாவது தகவல் வேண்டுமானால் தன்னை அழைக்கலாம் என்று கூறி விடையளித்தார்.

பாண்டியர் அரண்மனையாக இருந்திருக்கலாம் என்று கண்ணன் காட்டிய டி.எஸ்.பி. அலுவலகம் முழுக்க முழுக்க காலனியாதிக்க கட்டிடக்கலையில் கட்டப்பட்ட ஒரு கட்டிடம். ஓரிடத்தில் மதுரைக் கோட்டை மதிலின் ஒரு சின்னஞ்சிறிய பகுதி மட்டும் இடிக்கப்படாமலிருந்தது. முப்பதடி உயரத்தில் ஜன்னல்கள், கதவுகள் இல்லாமல் ஒரு செங்குத்து

மலைபோல நின்றது அது. எவ்வளவு பிரம்மாண்டமான கட்டிடம்.... இதற்குள் இருந்த மனிதர்கள் எவ்வளவு பாதுகாப்புணர்வுடன் இருந்திருப்பார்கள்? ஆனால் இந்த மதில் யாரையும் தடுத்து நிறுத்தியது போலத் தெரியவில்லை. ஆங்கிலேயர்கள்தான் மதுரையைக் கைப்பற்றிவிட்டார்களே?

மதுரை தமிழகத்தின் அரசியல் தலைநகரம். யாரும் தீ வைக்காமலேயே வெயிலில் எரிந்து கொண்டிருப்பது போலிருந்தது. யாதவர் கோவில் கருங்கற்களாலான பிரம்மாண்டமான கோவில். அது பழைய மதிலுக்குள் இருந்திருக்க வேண்டும். கருங்கற்களால் ஆன பிற்காலக் கட்டடமாகவும் இருந்தது. எனவே அது சிலப்பதிகாரக் காலத்துக் கோவில் அல்ல என்று குழுவால் முடிவு செய்யப்பட்டது.

அதற்கு சற்றுத் தள்ளி நெரிசலான கோனார் தெருவில் ஒரு வளாகத்தில் ஆடுகள் நின்று கொண்டிருந்தன. அங்கே நெருக்கமாக ஓட்டுவீடுகளிருந்தன. இது ஒருகாலத்தில் மதிலுக்கும் ஆற்றுக்கும் இடைப்பட்ட புல்வெளிப்பகுதியாக இருந்திருக்கலாம். முல்லை அக்கால ஆயர் சேரியை மனதுக்குள் உருவாக்கிப் பார்க்க முயன்றாள். நிரம்பியோடும் வைகைக்கும் இவ்வளவு உயரமில்லாத மதிலுக்கும் இடையே பசேலென்ற புல்வெளிப் பிரதேசம். அங்கே மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுமாடுகள். தலையில் தயிர், பால் குடங்களோடு ஆயர் குலப் பெண்கள். . . இல்லை. நகருக்கு வெளியே காவற்காடு இருந்ததாம். அப்புறம் புறஞ்சிறை மூதூர் என்ற துறவிகள் வாழும் இடமும் இருந்திருக்கிறது. எனவே ஆயர் சேரி சற்று தள்ளிக் கூட இருந்திருக்கலாம்.

முல்லை மனதுக்குள் சிலப்பதிகாரத்தில் மதுரையில் என்ன நடக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது என்று கோர்வையாக நினைத்துப் பார்க்க முயன்றாள்.

புறஞ்சிறை மூதூரில் கண்ணகியையும் கவுந்தியடிகளையும் விட்டுவிட்டு கோவலன் நகருள் செல்கிறான். பழமையான இப்பெருநகரிலுள்ள வணிகருக்கு என் நிலையினைத் தெரிவித்து தக்க ஏற்பாட்டுடன்

வருகிறேன். அதுவரை இவளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிச் செல்கிறான்.

மதுரையின் பல்வேறு காட்சிகள் விரிவாக விவரிக்கப்படுகின்றன. அரசர் வீதி, வணிகர் வீதி, செல்வர் வீதி அனைத்தோடு இரத்தினக் கடைத் தெரு பற்றியும் சொல்லப்படுகிறது. அங்கே நால்வகை நிறங்கள் கொண்ட நன்மைதரும் ஒளி வீசும் வைரங்கள் இருக்கின்றன. பசுமை நிறைந்த உருவோடு இளங்கதிரின் ஒளிவீசும் மரகதம் விற்கும் இடங்கள், பதுமம்,
நீலம்,விந்தம், படிதம் என்னும் நால்வகை மாணிக்கக் கற்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்,பொன்னைத் தேய்த்தார் போன்ற புருடராகக் கற்கள், தேந்துளியின் நிறம் கொண்ட வைடூரிய வர்க்கம், இருளைத் தெளிய வைத்தாற்போன்ற நீலமணிகள், மஞ்சளும் சிவப்பும் கலந்தாற்போன்று விளங்கும் கோமேதகங்கள், ஒன்றுபட்ட பிறப்பினையும் ஐந்து வகையான வனப்பினையும் உடைய மாணிக்கம் . . .
ஊர்காண்காதை சிலப்பதிகாரம்

இதையெல்லாம் முல்லை முன்பு மேலோட்டமாகப் படித்துவிட்டுத் தாண்டிச் சென்றிருந்தாள். இப்போது ஸ்ரீகுமாரின் ஆய்வுகளைக் கேட்ட பிறகு இந்தக் குறிப்பிட்ட பகுதி அவளது ஆர்வத்தைத் தூண்டியது. மதுரையும் இரத்தின வணிகத்தில் ஒரு முக்கியமான மையமாக இருந்திருக்கிறது. சொல்லப்போனால் புகாரைவிட காங்கேயம், கரூருக்கு அருகில் இருப்பது மதுரைதான். பெருநகர். பாண்டிய நாட்டின் தலைநகர். எனவே இங்கே ரத்தினங்கள் கொட்டிக் கிடப்பதில் ஆச்சரியமில்லை. அதனால்தான் கோவலன் மதுரையைத் தேர்ந்தெடுத்தான் போலும்.

ஸ்ரீகுமார் சொல்வது சரிதான். பொன்கடை, துணிக்கடைகளைவிட இந்த ரத்தினக் கற்களைப் பற்றித் தான் அதிகமாகப் பேசப்படுகிறது. ரத்தின வணிகம் மிகப் பெரிய அளவிற்கு நடந்திருக்கும்தான் போலிருக்கிறது.

அப்படியென்றால் இத்தனை கடைகளை விட்டுவிட்டு கோவலன் ஏன்

சிலம்பை விற்க பொற்கொல்லனை நாடுகிறான்? இந்த வர்ணனைகளைப் பார்க்கும் போது பாண்டிய மன்னனுக்கு மாணிக்கம் அப்படியொன்றும் புதிதாக இருந்திருக்காது என்பது தெரிகிறது. ரத்தினங்கள் இறைந்து கிடக்கும் கடைவீதிக்குச் சொந்தக்காரனான மன்னன் நினைத்தால் தான் விரும்புவதைப் போல புதிதாக ஒன்றைச் செய்து கொள்ள மாட்டானா? வேறு ஒரு பெண் காலில் அணிந்ததையா வாங்குவான்? அதே போல பொற்கொல்லன் தேவியின் சிலம்பை எப்படித் திருட முடியும்? இந்த இடங்களையெல்லாம் ஓரிரு வாக்கியங்களில் இளங்கோவடிகள் கடந்து செல்கிறார்.

கோவலன் கொல்லப்படும் இடம் இன்னும் விசித்திரமாக இருக்கிறது. மன்னனுக்கு கோப்பெருந்தேவியோடு ஊடல். அவளைச் சமாதானப்படுத்தச் சென்று கொண்டிருந்தபோது பொற்கொல்லன் வந்து 'மந்திர சக்தியால் வாயிற்காப்போரை துயிலுரும்படி செய்து அரசியின் சிலம்பைத் திருடியவன் என் வீட்டருகே வந்திருக்கிறான்' என்கிறான். இது உண்மையாக இருந்தால் கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்கிறான் பாண்டியன். அரசியின் சிலம்பைத் திருடியவன் அரசனின் பொற்கொல்லன் வீட்டுக்கு வருவானா என்று மன்னன் சிந்தித்திருக்க மாட்டானா? மந்திர சக்தி கொண்ட திருடர்கள் தினமும் வருவார்களா என்ன? அப்படிப்பட்ட ஒருவனை மன்னன் பார்க்க விரும்பமாட்டானா? கோவலனைக் கொல்வதற்காக பொற்கொல்லனுடன் வரும் காவலர்கள் கோவலனைப் பார்த்து திருடன் போலத் தோன்றவில்லையே என்று சந்தேகிக்கிறார்கள். அவசர புத்திக்காரன் ஒருவன் அவனை வெட்டி வீழ்த்துகிறான். சிலப்பதிகாரத்தில் லாஜிக் இடரும் இடங்கள் இரண்டுதான். ஒன்று புகாரிலிருந்து பெற்றோர் ஏன் தேடி வரவில்லை என்பது. இன்னொன்று இந்தக் கொலை. கோவலன் கொல்லப்பட்ட பிறகு இளங்கோ கூறுகிறார். "பண்டை ஊழ்வினையானது அவ்வாறு சினந்து வந்து அவனைப் பழிதீர்த்துக் கொண்டது"

அதாவது போன பிறவியில் கோவலன் சங்கமன் நீலிக்குச் செய்த கொடுமை !.

இது போல ஏதாவது ஒரு கதை வட மொழி இலக்கியங்கள்

எதிலாவது இருக்கிறதா என்று ஸ்ரீகுமாரிடம் முல்லை கேட்டாள். அவர் உதட்டைப் பிதுக்கினார். அப்படியானால் சங்கமன் நீலி கதை இளங்கோவடிகளின் கற்பனை. இது ஏன் கோவலன் கண்ணகியின் உண்மை கதையாக இருந்திருக்கக் கூடாது? முன்பே யோசித்தது போல ஊரை விட்டு வந்த இருவரையும் யாரும் தேடி வராததும், மாடல மறையோனிடம் தனக்கு அரசனால் தீங்கு நேரலாம் என்று கருதி புகாரை விட்டு வந்ததாக கோவலன் கூறுவதும், யவனக் காவலர் அறியாமல் மதுரைக் கோட்டைக்குள் கோவலன் போவதும் சங்கமன் நீலி கதை கோவலன் கண்ணகி கதைதான் என்று நம்பத் தூண்டுகிறது. மதுரைக்கு மிக அருகில் உள்ள மோகூர் சேரன் செங்குட்டுவனால் தாக்கப் படுகிறது என்றால் அடுத்தது மதுரைதானே? எனவே ஒற்றர்களை எதிர்பார்த்து மதுரை மன்னனும் காவலர்களும் காத்திருந்திருக்கலாம்.

கோவலன் என்ற பெயர் காங்கேயம் அருகில் இருக்கும் ஒரு மலையில் வாழ்ந்த இடையர் இனத்தின் பெயர். அது செங்குட்டுவனின் ஆட்சியில் இருந்தது. கோவலன் இந்த இனத்தை சேர்ந்தவர்கள் வழிவந்தவன் என்றால் கண்ணகி மீது செங்குட்டுவன் கொண்ட அக்கறை புரிகிறது. கோவலன் மீது புகாரிலும், மதுரையிலும் சந்தேகம் வந்ததற்கான காரணமும் புரிகிறது.

எல்லாச் சந்தேகங்களுக்கும் பதில் இருக்கலாம். இந்த உத்தேச பதில்கள் அவள் மனதை குடைந்து கொண்டிருந்த மிக முக்கியமான கேள்விக்கு பதிலைத் தரவில்லை. கோவலன் ஒற்றனாக இருக்கலாம். செங்குட்டுவன் அல்லது அவனது ஆட்கள் அவனுக்காக மதுரையை எரித்திருக்கலாம். சாந்தலிங்கன் அப்படியொன்று நடந்ததற்கான ஆதாரங்கள் இல்லை என்கிறார். சரி. இருக்கலாம், இல்லாமலும் போகலாம். ஆனால் இந்த மக்கள் புகாரின் மீனவர்கள், இடுக்கியின் பழங்குடிகள், கொடுங்கலூரின் பக்தர்கள் ஏன் கண்ணகியை நினைவு வைத்திருக்கிறார்கள்? அவளிடம் அவர்கள் என்ன கண்டார்கள்?

சாந்தலிங்கனின் பேச்சுக்குப் பிறகு மீண்டும் மீண்டும் அவள் உள்ளத்தில் கண்ணகி இந்தச் சமூகத்திற்கு ஏன் தேவை என்ற எண்ணமே எழுந்து கொண்டிருந்தது. சொல்லப்போனால் அது திடீரென்று

தோன்றவில்லை. அவள் தேடியது அதைத்தான். ஆனால் வேறென்னவோ என்று அவள் நினைத்து வந்திருந்தாள். இது ஒரு வகையான தீர்த்த யாத்திரை என்று தன்னைத்தானே நம்பவைக்க முயன்று வந்தாள். ஆனால் அவள் பக்திபொங்கி யாத்திரை வரவில்லை. தேடிக்கொண்டே இருந்திருக்கிறாள். எதை? தனது தேடலின் முடிவு எதுவாக இருக்கும்?

இன்று நவீனுடனும், கண்ணனுடனும் பேச வேண்டும். சமூகத்தை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறவர்கள் கண்ணகி குறித்து என்ன சொல்கிறார்கள் என்று கேட்க வேண்டும். முல்லையின் ஆவல் இப்போது கண்ணகி கோவில் மீது திரும்பியிருந்தது.

தன்னந்தனியாக மலைகளின் மீது அவள் மேற்கொண்ட பயணம்.....தன் கேள்விகளுக்கு ஏதாவது விடை தருமா? தஞ்சைப் பெரிய கோவிலையும், ஸ்ரீரங்கத்தையும் பார்க்காமல் விட்டுவிட்டதால் முல்லை மதுரை மீனாட்சியம்மன் கோவிலைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்றாள். அவர்கள் கோவிலுக்குச் சென்றுவிட்டு பிரமிப்புடனும் கால்வலியுடனும் அறைக்குத் திரும்பினார்கள்.

இளைஞர்களைப் பேசவிட்டு விட்டு விட்டு ஸ்ரீகுமார் எங்கோ எழுந்து சென்றார்.

கண்ணன்தான் முதலில் தொடங்கினான். “ஏடறிந்த எல்லா வரலாற்றையும் நாங்கள் வர்க்கப் போராட்ட வரலாறாகத்தான் பார்க்கிறோம். வணிக வர்க்கத்துக்கும் மன்னர்களுக்குமான முரண்பாட்டில் கோவலன் கொல்லப்பட்டிருக்கலாம். கோபம் கொண்ட மக்களால் மதுரை எரிக்கப்பட்டிருக்கலாம். தவறு செய்த மன்னனைத் தண்டிக்க முடியும் என்ற முடிவே இவ்வளவு காலமாக மக்களை இந்த கதையைக் காத்துவரச் செய்திருக்கிறது”.

‘மதுரை எரிக்கப்பட்டதற்கு ஆதாரம் இல்லை என்று சாந்தலிங்க சொன்னாரே?”

“ஆளும் வர்க்கங்கள் தங்களுக்கு எதிரான விஷயங்களை பதிவு செய்து வைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. தவிர ஏதாவது ஒன்றில்

அது குறித்த விவரங்கள் இருந்தால் போதாதா? சிலப்பதிகாரம்தான் இருக்கிறதே. அது போதும்".

"கண்ணகியை ஒரு புரட்சி பெண்ணாகக் கருதுகிறீர்களா?"

"புரட்சி பழிவாங்குதல் அல்ல. அவள் கோபம் கொள்கிறாள். உயர்குடி பெண்களுக்குக் கற்பிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை உடைத்து அரச சபையில் வாதாடுகிறாள், மதுரையை எரிக்கிறாள். ஆனால் தன் கணவன் அநீதியாகக் கொல்லப்பட்டதற்காகவே இத்தனையையும் செய்கிறாள். எனவே இறுதியில் மிஞ்சுவது கண்ணகி போல் கணவன் மேல் பாசம் கொண்டால் பத்தினித் தெய்வமாகலாம் என்பதாகும். இந்த நீதியே காலங்காலமாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் போதிக்கப்பட்டு வருகிறது. இதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆணாதிக்கம் வரையறுத்த எல்லைகளுக்குள்ளேயே கண்ணகியின் கோபமும், மாதவியின் துறவும், மணிமேகலையின் துறவும் இருக்கிறது."

"கண்ணகி தீக்குளிக்கவில்லை, சமண நெறியைக் கைக் கொள்ளவில்லை. பல மரபுகளை மீறுகிறாள் என்று சொல்லப்படுகிறதே." முல்லைக்கு மேடைப்பேச்சு சீக்கிரம் வந்துவிடும் என்று நவீன் நினைத்தான்.

"திராவிட இயக்க ஆய்வாளர்களும், அரசியல்வாதிகளும் கடவுளர்களுக்கு மாற்றாக தமிழர் பெருமைக்கு கண்ணகியை முன்வைத்தனர். அவர்கள் பெரியாரியலிலிருந்து விலகிவந்தது கூட இதற்காகத்தான். பழைய உருவகங்களும், சின்னங்களுக்கும் மாற்றாக புதிய ஆளும் வர்க்கம் புதிய சின்னங்களை உருவாக்குகிறது. ரோபோஸ்பியர் கிருத்துவ மதத்திற்கு மாற்றாக அறிவுத் தேவதையை உருவாக்குவது போல.

பெரியார் சிலப்பதிகாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை ஒரு பிற்போக்கு காவியம் என்றார். தி.மு.க. அரசுதான் கண்ணகியை தனது மாற்று அடையாளமாகக் கொண்டாடியது. தமிழ் அடையாளத்தை முன்னிறுத்த இந்த வேலையைச் செய்தது. மார்க்சீயவாதிகளான நாங்கள் ஆணும், பெண்ணும் சமம் என்கிறோம். கணவனாக இருந்தாலும் சரி,

மன்னனாக இருந்தாலும் சரி, யாருடைய அடக்குமுறையும் ஏற்றுக் கொள்ள முடியாததுதான். கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனைத் தண்டித்தது உண்மையானால் அவள், தான் உட்பட, மாதவி, மணிமேகலை என்று மூவருடைய வாழ்க்கையையும் சீரழித்த கோவலனையும் தண்டித்திருக்க வேண்டும்."

முல்லை ஆச்சரியத்துடன் கண்ணனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஊசலாட்டமற்று சிந்திப்பதுதான் இது போன்ற திட்டவட்டமான முடிவுகளுக்கு வர உதவியாக இருக்கிறது போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். தனது கொள்கையில் ஊசலாட்டமற்ற பிடிவாதத்தைக் கொண்டிருக்கப் பழகிக் கொள்வதால்தான் இவர்கள் நுகர்வுக் கலாச்சாரத்தில் மூழ்கிக் போன உலகை விட்டு விட்டு முழு நேரப் புரட்சியாளர்களாகிறார்கள் போலிருக்கிறது! ஆனால் கொஞ்சம் நெளிவு சுழிவுகள் கொண்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமோ? இவ்வளவு கூர்மையான, பிசிறில்லாமல் வெட்டுவது போன்ற பேச்சுக்கள், சேர்ந்து சிந்திப்பது, விவாதிப்பது போன்றவற்றிற்கான இடத்தை ஒழித்துவிடுமோ?

அவள் யோசனையுடன் நவீனைப் பார்த்தாள். நவீன் இந்த இரண்டு மூன்று நாட்களில் மோவாயில் தலைகாட்டத் தொடங்கியிருந்த தாடியைச் சொரிந்துகொண்டான்.

"கண்ணகிக்கு வேற என்ன சாய்ஸ் இருக்கு? அவள் தீக் குளிக்க வேண்டும் அல்லது விதவைக் கோலம் பூண்டு வெறும் தரையில் உணவு கொட்டி ஒருவேளை மட்டுமே உண்டு, முக்கால் பட்டினி வாழ்க்கை வாழ வேண்டும்.

புகாராக இருந்திருந்தால் ஒரு வேளை அதைச் செய்திருப்பாள். இந்த மூன்றுமாத நடைபயணம் அவளை மாற்றியிருக்குமல்லவா? அவளை இறுகிப் போய் கடுமை கொள்ள வைத்திருக்கும்தானே? பெரு நகரங்களுக்கு வெளியே பழங்குடிகள் வாழும் வழியே வருகிறார்கள். எயினர்களையும், இடையர்களையும் பார்க்கிறார்கள். கவுந்தியடிகள் இந்த மூவர் குழுவுக்குத் தலைமை தாங்குவதைக் கண்ணகி பார்க்கிறாள்.

ஒப்பீட்டளவில் சுதந்திரமான ஷாலினி போன்ற பெண்களைப் பார்க்கிறாள். தவிர உயர் குலத்து பெண்களுக்கு கிடைக்காத பல அனுபவங்கள் அவளுக்கு கிடைக்கின்றன. பொருள் தேடச் சென்ற, பரத்தையின் பால் பிரிந்த கணவனுக்காக பெருமூச்செறிந்து காத்திருக்கிறவர்கள் கண்ணகி குலத்தைச் சேர்ந்த பெண்கள். எனவே வெளியுலகம் தெரிந்து கொண்ட அவள் அபலை போல அழிந்து போக மறுக்கிறாள். இழந்துவிட்டுத் திரும்ப கிடைத்த கணவனை திரும்பவும் பறித்துக் கொண்ட மன்னன்மீது தீராக் கோபம் கொள்கிறாள். மக்களிடம் நியாயம் கேட்கிறாள். கண்ணகியை யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அது நாம் அந்த பாத்திரத்திடமிருந்து என்ன எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது."

"சிலப்பதிகாரம் எதை வலியுறுத்துகிறது?"

"கற்பு" என்றான் கண்ணன். நவீனும் அதை தலையசைத்து ஆமோதித்தான்.

"அப்படியானால் பழி வாங்கிய பின்பு கண்ணகி ஏன் தீக்குளிக்கவில்லை?"

"தெரியவில்லை தோழர். அது பற்றி ஆய்வு இல்லை" கண்ணன் தனது வழக்கமான சிரிப்போடு சொன்னான்.

"புரட்சிகர இயந்திரம்" முல்லையும் அதேபோலச் சிரித்தாள்

அப்போதுதான் சுவரில் ஒரு காலை மடித்து வைத்துச் சாய்ந்து நின்றபடி இவர்கள் பேசுவதை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீகுமாரை அவர்கள் பார்த்தார்கள்.

"சொல்லுங்க சார்... சிலப்பதிகாரம் வலியுறுத்துவது கற்பு அதற்காகத்தான் எழுதப்பட்டது என்று நவீன் சொல்கிறான்"

"அந்தக்கால தமிழ்நாட்டைப் பார்க்கலாம், ஒரு வேளை பதில் தெரிந்தாலும் தெரியலாம்?" என்றார் அவர். இந்த இரண்டு மூன்று நாட்களில் அவர் பேசும் முறைக்கு நவீனும் முல்லையும் பழக்கப்பட்டுப்

போயிருந்தார்கள். எனவே உன்னிப்பாக அவர் முகத்தைப் பார்க்கத் தொடங்கினார்கள். ஸ்ரீகுமாரின் பேச்சில் ஏதோ ஒரு இடத்தில் தங்கள் கேள்விக்கு பதில் இருக்கும். அது எந்த இடம் என்று அவர் சொல்லப்போவதில்லை. எனவே தவறவிட்டு விட்டால் சிரமம்தான்.

"அந்தக்காலத்தில் சேர நாடு மட்டுமே அரசு என்ற சொல்லுக்கு ஏற்ப மையப்படுத்தப்பட்டதாக இருந்தது. பாண்டியநாடு ஓரளவு வளர்ச்சி பெற்றதாக இருந்தாலும் அதையும், சோழநாட்டையும் நகர அரசுகளாகத்தான் கருத முடியும். உறையூர், புகார், மதுரை, கொற்கை என்று ஒவ்வொரு நகரமும் ஒரு அரசாகத்தான் இருந்தது. நகரங்களின் சுற்றுப்புறங்கள், ஆற்றோரங்கள் தவிர மற்ற பகுதிகளில் பல்வேறு பழங்குடியின மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தப் பகுதிகளை அரசு அதிகாரம் எட்டியிருக்கவில்லை. இந்த பழங்குடியினர்களிடையே ஆண், பெண் சமத்துவம் நிலவியது. புறநானூற்றில் ஏராளமான பெண்கள் தீக்குளித்ததாகச் சொல்லப்பட்டாலும், அவர்கள் உயர்குலத்துப் பெண்கள். அப்போது தீபகற்பத்தில் இருந்த பெரும்பகுதி மக்கள் சாதி அமைப்புக்கு வெளியே இருந்த பழங்குடிமக்கள், ஏன் இன்னும் கூட தமிழகத்தில் பெரும்பான்மையான சாதிகள் மறுமணத்தை அனுமதிக்கும் அறுத்துக்கட்டும் சாதிகள் தான். எனவே தீக்குளித்தலை அவர்கள் மீது ஒரு வளர்ச்சி கால கட்டத்தில் ஒரே அடியாகத் திணித்துவிட முடியாது."

"புறநானூற்றில் ஏராளமான பெண்கள் தீக்குளித்ததாக சொன்னீர்களே?"

"புறநானூறு, சிலப்பதிகாரம் போல முழுமையான பிரச்சார இலக்கியம் அல்ல. தமிழ் கவிதை வளர்ந்த காலத்தில் கவிஞர்கள் சிலவற்றை சுவைபட கூறுகிறார்கள். மன்னர்களின் புகழ்பாடும் கவிதைகள் பெரும்பான்மையாக இருக்கின்றன. அதில் கரடுமுரடான அக்காலச் சமூகம் அப்பட்டமாக வெளிப்படுகிறது. ஆனால் சிலப்பதிகாரம் வித்தியாசமானது. "

"எந்த விதத்தில்?"

"இருபது முப்பது அடிகளுக்குள் புறநானூற்றுப் பாடல்கள்

முடிந்துவிடும். பெரும்பாலும் ஒரு செய்தியே சொல்லப்படும். ஒரு வள்ளலைத் தேடிக் கிளம்பும் பாணனின் அனுபவங்கள்தான் அடுத்து வந்த ஆற்றுபடைகள், இவற்றில் பலதரப்பட்ட மக்கள் வாழ்க்கை பேசப்படுகிறது. அடுத்த கட்டமாகத்தான் சிலப்பதிகாரம் வருகிறது. ஒரு திட்டவட்டமான மையக்கரு, பாத்திரங்கள், நோக்கம் என விரிந்து காவியமாகிறது. கதை சொல்லும் முறை நெளிவு சுளிவாக இருக்கிறது. எல்லாப் பழியையும் பொற்கொல்லன் மீது போட்டு நெடுஞ்செழியனைக் காப்பாற்ற முயல்வதைப் பாருங்கள்””

“கண்ணகி ஏன் தீக்குளிக்கவில்லை என்ற கேள்விக்கு பதில் சொல்லத் தொடங்கினீர்கள் சார்” கேட்டது கண்ணன் என்றாலும் அது மற்ற இருவரின் கேள்வியும் தான்.

“நகர அரசுகளையும், நாகரீக அரசுகளையும் சுற்றிக் கடல்போல் வாழ்ந்து வந்த பழங்குடியினங்களை நாகரீகப்படுத்தும் வேலையை சமணமும், பௌத்தமும் ஏற்றுக்கொண்டிருந்தன. எனவே ஒரு மொழிபேசும் நிலப்பரப்பு முழுவதற்கும் ஒருவிதமான இலக்கியங்கள் தேவைப்பட்டிருக்கும். பல பழங்குடியினங்கள் இரண்டாகப் பிளக்கப்பட்டு வலிமை வாய்ந்தவர்கள் ஆளும் வர்க்கத்துடனும், பெரும்பான்மையானவர்கள் தாழ்ந்த சாதியினராக உழைக்கும் மக்களாக மாற்றப்பட்டு வந்த காலமது. எனவே தீக்குளித்தலை புதிதாக உருவாக்கப்பட்ட உயர் வர்க்கங்களிடைய ஒரேயடியாக வற்புறுத்திப் புகுத்திவிட முடியாது என்று தோன்றுகிறது. ஏனெனில் அதுவரை அவர்கள் ஆண்பெண் சமத்துவமுள்ள பழங்குடிகளாக இருந்தவர்கள். அவர்களைத் தாய்மார்களையும், சகோதரிகளையும் எரிக்கச் சொல்லி உடனே வற்புறுத்திவிட முடியாது. எனவேதான் கணவனை இழந்த பெண் ஏதோ ஒருவிதத்தில் உயிர்விட்டால் போதும் என்கிற அளவில் சிலப்பதிகாரம் நிறுத்திக் கொள்கிறது. அக்காலச் சட்டப்படி கண்ணகி உயிர்விடவில்லையே தவிர வாழ்ந்தும் விடவில்லை. குறிப்பிட்ட நாட்கள் உண்ணாமல், உறங்காமல் அலைந்து திரிந்து கணவனோடு சேர்கிறாள். அதாவது இந்த உடலைத் துறந்து. இருநூறு ஆண்டுகள் பின்பு எழுதப்பட்ட மணிமேகலை இதை ஏற்றுக் கொள்ள மறுத்து கண்ணகிமேல் குற்றம் சுமத்துகிறது. ஏன் உடன்கட்டை ஏறவில்லை என்று மணிமேகலை

கேட்கிறாள். அதை கோபத்தால் செய்துவிட்டேன் என்று கண்ணகி வாயாலேயே குற்ற உணர்ச்சியுடன் பதில் கூறச் செய்து, அதனாலேயே தான் பல பிறப்புகள் எடுத்துவருவதாக, அதாவது தண்டனை அனுபவித்து வருவதாகக் கூற வைக்கிறது மணிமேகலை. இருநூறு ஆண்டுகளில் புதிதாக சாதி மாறிய மக்களிடமும் உடன்கட்டையை வலியுறுத்தும் அளவிற்கு சமூகம் முன்னேறிவிட்டது!. எனவே கண்ணகி தீப்பாயாமல் வேறு வழியில் உயிர்விட்டது மணிமேகலையில் விதிமீறலாகக் கருதப்படுகிறது."

"அதனால்தான் சிலப்பதிகாரம் வழக்கத்தில் இல்லாமல் போய்விட்டதா சார்?" என்று முல்லை கேட்டாள்.

"சமணம், சைவத்தால் உள்வாங்கப்பட்டது. சைவம் சமணத்தை வெல்வதற்காக இந்த ஊழ்வினையின் இறுக்கத்தைக் கொஞ்சம் குறைத்து சில நம்பிக்கைகளை மக்களுக்கு வழங்கியது. சர்வ வல்லமை வாய்ந்த கடவுளை, சிவனை நம்பினால் எல்லா ஊழ்வினையையும் முறியடிக்கலாம். விதியை மதியால் வெல்லலாம் என்றது. வணிகத்துக்குப் பதிலாக வேளாண்மையையும் நகரங்களுக்குப் பதில் கிராமங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்த வேறுவிதமான சமூகம் உருவாகிவிட்டது. எனவே இந்த சமண பௌத்த இலக்கியங்கள் கூறும் மதக் கருத்துக்களும், வாழ்க்கை முறைகளும் அன்னியமானவைகளாக அவசியமில்லாதவைகளாக மாறிவிட்டன. தவிர சிலப்பதிகாரம், மணிமேகலை இல்லாமலேயே கற்பை நிலைநாட்டும் அளவிற்கு, பெண்களைத் தூக்கித் தீயில் போடும் அளவிற்கு சைவம் முன்னேறிவிட்டது!. அதனால்தான் சிலப்பதிகாரம் இடையில் காணாமல் போய் திரும்பவும் வேறுவிதமான ஆட்களால், மறுகண்டுபிடிப்புச் செய்யப்பட்டது."

"அப்படின்னா சிலப்பதிகாரம் எழுதப்பட்டதற்கான காரணம் கற்பை வலியுறுத்தத்தான்னு நவீன் சொல்றதை ஒத்துக்கறீங்களா?" என்று முல்லை குறிப்பாகக் கேட்டாள்.

"கற்பை மட்டுமல்ல. ஒரு சமூக ஒழுங்கை, அதாவது மன்னனுக்கும்

மக்களுக்குமான உறவு, ஆண் பெண் உறவு, பிரச்சினைகளுக்கு மதம் சொல்லும் தீர்வு ஆகியவற்றை ஒரு மொழிபேசும் பகுதி முழுவது பிரச்சாரம் செய்யத்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்"

"ஒரு வேளை புதிதாக வந்த களப்பிர ஆளும் வர்க்கங்களுக்காக எழுதப்பட்டிருக்குமோ? சிலப்பதிகாரம் களப்பிரர் காலத்தில் எழுதப்பட்டது என்று சொல்கிறார்களே?" என்று கண்ணன்.

'கூடவே என்னுடைய கேள்விக்கும் சேர்த்து பதில் சொல்லிவிடுங்கள் சார்" என்று நவீனும் தொடங்கினான். "களப்பிரர் காலம் இருண்ட காலம்னு நீலகண்ட சாஸ்திரி, ஸ்ரீனிவாச ஐயங்கார் போன்றவங்க சொல்றாங்க. இல்லை, தமிழிலக்கியத்துக்குப் பொற்காலம், களப்பிரர் சமணர்கள், பிராமண விரோதிகள் அதனாலதான் அவர்கள் காலத்தை இருண்டகாலம்னு முத்திரை குத்திட்டாங்கன்னு சிலர் சொல்றாங்க. பெங்களூர் குணாவும் மா. செந்தமிழனும் களப்பிரர் அப்படியொண்ணும் பிராமண விரோதிகள் இல்லை. அவர்களும் பிராமணியத்தை ஆதரித்தவர்கள்தான், தீண்டாமையை வலியுறுத்தியவர்கள்தான்னு சொல்றாங்க. சதாசிவ பண்டாரத்தார்கூட களப்பிரர்கள் அன்னியர்கள், தமிழைப் புறக்கணித்தவர்கள் என்கிறார். நீங்க சொல்லுங்க சார்" என்றான்.

முல்லை ஆச்சரியப்பட்டுப் போனாள். களப்பிரர் பற்றியெல்லாம் இவர்கள் அக்கறையுடன் பேசுவர்கள் என்று அவள் நினைத்தே பார்க்கவில்லை. "என்னப்பா இது ரெண்டு பேரும் களப்பிரர் எக்ஸ்பர்ட் போல இருக்கீங்க"

"கொஞ்ச நாளைக்கு முன்னாடி களப்பிரர் மேல திடீர்க்காதல் வந்து எல்லாரும் அதைப் படிச்சாங்க தோழர்" என்றான் கண்ணன்.

ஸ்ரீகுமார் ஒருநிமிடம் அமைதியாகவிருந்தார். யாருக்கு முதலில் பதில் சொல்லலாம் என்று சிந்திப்பது போலிருந்தது.

"சிலப்பதிகாரக் காலத்திலிருந்து தொடங்கலாம். வையாபுரி பிள்ளை அது களப்பிரர் காலத்திற்குப் பிந்தியது. கி.பி. எண்ணூறில் எழுதப்பட்டது

என்கிறார். கே.கே பிள்ளை கி.பி. ஐநூறு அதாவது களப்பிரர் காலம் என்கிறார். எனக்கு இரண்டுமே சரியென்று தோன்றவில்லை.”

“ஏன்”

‘களப்பிரர் காலம் வேளாண் பொருளியல் வளர்ந்த காலம், சிலப்பதிகாரம் அதற்கு முந்தைய நகர அரசுகளைப் பற்றியும், வணிக வர்க்கத்தின் செல்வாக்கைப் பற்றியும் அதிகம் பேசுது. எனவே களப்பிரர் காலத்துக்கு முன்னால் எழுதப்பட்டிருக்கலாம். அதாவது களப்பிரர் தமிழ் நாட்டுக்கு வந்த மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்! ஆனால் மணிமேகலை நகரங்களின் சிதைவையும் அழிவையும் அங்கே நிரந்தரமாப் பரவியிருந்த பஞ்சத்தையும் விரிவாச் சொல்லுது. அதாவது நகரங்களை மையப்படுத்தாத, கிராமங்களை அடிப்படையாக் கொண்ட விவசாய சமூகம் உருவாகத் தொடங்கிருச்சுங்கறதை காட்டுது. அதனால மணிமேகலை களப்பிரர் காலத்தைச் சேர்ந்ததா இருக்கலாம்.”

“வேளாண்மைச் சமூகம் அதாவது நிலப்பிரபுத்துவம் சைவத்தையும், சமணம் வணிகத்தையும் சார்ந்து இருந்ததுன்னு நீங்க சொன்னீங்களே சார், இப்ப முரண்பாடு வருதே?” நவீனுக்கு உண்மையாகவே குழப்பமாக இருந்தது.

“என்ன முரண்பாடு?’

”களப்பிரர் காலம் வேளாண்மை வளர்ந்த காலம், ஆனால் களப்பிரர்கள் சமணர்கள் . . . “

“நீங்கள்தானே சொன்னீங்க களப்பிரர் பார்ப்பனீயத்தை ஆதரிச்சதா ஒரு கட்டுரை வந்திருக்குன்னு?’ ஸ்ரீகுமார் திருப்பிக் கேட்டார். நவீனையும் முல்லையையும் நீ என்றும் நீங்கள் என்றும் விருப்பம்போல அழைப்பது அவருக்கு வழக்கமாகிவிட்டிருந்தது.

“கொஞ்சம் முழுசா தொகுத்துச் சொல்லுங்க சார்” இப்படிக் கேட்பது மரியாதைக் குறைவாக இருந்தாலும் வேறு யாரிடம் கேட்பது என்று நவீன் நினைத்துக் கொண்டான்.

“வேள்விக்குடி பட்டயத்தில் ஒரு பார்ப்பனரின் நிலத்தை களப்பிர மன்னன் பிடுங்கிக் கொண்டதாக வருகிறது. ஆனால் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளில் களப்பிரர்கள் பிராமணர்களுக்கு நிலம் வழங்கியதாக வருகிறது. இதைத்தான் நீங்க சொன்னீர்களே . . .”

“ம. செந்தமிழன் எழுதியிருக்கிறார்”

“ஆமாம். சரிதான். களப்பிரர்கள் பிற்காலச்சோழர்களைப் போல, மொகலாயர்களைப் போல ஒரு பேரரசைச் சேர்ந்தவர்கள் அல்ல. களப்பிரர் தமிழ்நாட்டுக்கு வடக்கே வாழ்ந்த கொஞ்சம் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு பழங்குடியினம். அவர்கள் பல்லவர்களால் துரத்தப்பட்டு கீழே வந்திருக்கலாம் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளும் கருத்து. அதில் அச்சுத விக்ராந்தகன் மட்டுமே பெரிய மன்னன் என்று சொல்லக் கூடியவனாக இருந்திருக்கிறான். மற்றவர்கள் எல்லோரும் சிற்றரசர்கள். முன்னூறு ஆண்டுகாலத்தில் பல களப்பிர அரசர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை ஆண்டார்கள். அச்சுத விக்ராதகன் புத்த மதத்தை ஆதரித்ததாகச் சொல்கிறார்கள். ஐந்தாம் நூற்றாண்டில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து ஆண்ட களப்பிரர் காசுகளில் மயில்மேல் அமர்ந்த முருகன் உருவம் இருக்கிறது. களப்பிரர்கள் பிராமணர்களுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள், அவர்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கியும் இருக்கிறார்கள். சில களப்பிர மன்னர்கள் சைவர்களாகவும் வைணவர்களாகவும் இருந்திருக்கிறர்கள். அதே போல களப்பிரருக்கு முன்னும் பின்னும் இருந்த பல தமிழக மன்னர்கள் சமணர்களாகவும், சமணத்தை ஆதரித்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். கூன்பாண்டியன், மகேந்திர பல்லவன் எல்லாம் பாதிக்காலம் சமணர்களாக இருந்தவர்கள்தானே? களப்பிரர்களுக்கு முன்னும் பின்னுமிருந்த காலங்கள் பொற்காலங்கள் என்றால் களப்பிரர் காலமும் பொற்காலம்தான். இருண்டகாலம் என்றால் அதுவும் இருண்டகாலம்தான். இலக்கியங்களைப் பொருத்தவரை அது தமிழின் இயல்பான வளர்ச்சி. யார் ஆண்டிருந்தாலும் அது கட்டாயம் நடந்திருக்கும்”.

“அரசியல் பொருளாதாரத் தேவைகள்தான் அரசின் மதத்தைத் தீர்மானிக்கின்றன என்கிறீர்களா?’ என்று கண்ணன் கேட்டான்.

ஸ்ரீகுமார் பதில் சொல்லாமல் குறுநகையுடன் நவீனையும் கண்ணனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“மதம் மக்களுக்கு அபின் என்பதுதான் எங்கள் கருத்து. அது எந்த மதமாக இருந்தாலும்’ என்று நவீன் முடித்து வைத்தான்.

தனது வழக்கப்படி ஸ்ரீகுமார் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டார்.

இது குறித்து இவ்வளவு போதும் என்று தோன்றும் வகையில் பால்கனியில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினார். முல்லை கடந்த சில நாட்களாக கண்ணகி குறித்து ஏராளமாக பேசி வந்திருந்தாலும் இப்படியொரு விவாதம் அவளுக்கு தேவையாகத்தான் இருந்தது. ஈகோ இல்லாமல், ஒருவர் மேல் ஒருவர் தன் கருத்தை திணிக்காமல், கத்தி கூச்சலிடாமல் பேசியது அவளுக்கு மகிழ்ச்சியளித்தது. இந்த பயணத்தில் தொடக்கத்தில் ஆரம்ப நாட்களில் அவள் பேச வாய்ப்பே கிடைக்கவில்லை. அப்போது நவீன் சிலப்பதிகாரத்திற்குள் வரவே இல்லை.

பல துண்டுகளாக இருந்த ஸ்ரீகுமாரின் பேச்சை ஒருங்கிணைக்க இன்றைய விவாதம் அவளுக்கு உதவியாக இருந்தது. எல்லோருடைய பேச்சும் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், எழுதிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

“உங்களுடைய ஆய்வுமுறை மார்க்சியம்போலவே இருக்கிறது சார்” என்று கண்ணன் ஸ்ரீகுமாரிடம் சொன்னான்.

“நான் மார்க்சீயம் முறையாகப் படித்ததில்லை. ஆனால் இப்படி பலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.”

சற்று நேர அமைதிக்கு பிறகு “அடுத்த திட்டம் கண்ணகி கோவில்தானே ?” என்றான் நவீன்.

“ஆமாம்.”

“இந்த விவாதங்களும் ஆய்வுகளும் ஒரு ஆவணப்படத்தில் வந்தால் அற்புதமாக இருக்கும். இவை எல்லாமே படத்தில் இருக்கும்தானே?” கண்ணன் கேட்டான்.

முல்லை உற்சாகமாகத் தலையசைப்பாள் என்று நவீன் எதிர்பார்த்தான். ஆனால் அவள் மௌனமாக இருந்தாள். முகம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து இருப்பதைக் காட்டியது. கடந்த இரண்டு நாட்களாக அவள் மனதை ஒரு கேள்வி குடைந்து கொண்டிருந்தது. இதைப் பற்றிப் பேச வேண்டும் என்று அவளே நினைத்திருந்தாள். தனியாக உட்கார்ந்து திரைக்கதை எழுதும்போதோ, எடிட்டிங் மேஜையிலோ சிந்திப்பதைவிட இங்கேயே இதைப் பற்றியும் பேசிவிடுவது சரியானதாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது.

“நமது புரொபஸர் ஏன் கடத்தப் பட்டார்? அது முற்றிலும் நமது படத்திற்கும் தேடலுக்கும் சம்பந்தமே இல்லாததா?”

முல்லையின் கேள்வி படத்தை ஒரு த்ரில்லராக மாற்றும் நோக்கம் கொண்டது அல்ல என்பது நவீனுக்கும், கண்ணனுக்கும் தெளிவாகப் புரிந்தது. முல்லை அப்படி சிந்திக்கக் கூடியவள் அல்ல. வேறு என்ன நினைக்கிறாள்? வழக்கமாகப் படபடக்கும் முல்லையின் கரிய விழிகளில் காணப்பட்ட ஆழ்ந்த பாவம் மாறவேயில்லை. நவீனும் கண்ணனும் மட்டுமில்லாமல் ஸ்ரீகுமாரும் கூட அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

செவ்ரோன் அமேதியிஸ்ட்டின் மிகச் சிறந்த அற்புதமான இதயவடிவக் கற்கள்.. ஆழ்ந்த ண்ணம் கொண்டவை. செவ்ரோன் பாணியில் பால் போன்ற வெண்மை நிறம் கொண்ட குவார்ட்ஸுடன் இணைத்துத் தயாரிக்கப்பட்டவை. படைப்புத் திறனை அதிகரிக்கக் கூடியவை. தலைமைப் பண்பை வளர்க்கக் கூடியவை. அற்புதமாக உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியவை. இந்தியாவில் செய்யப்பட்டவை. மிக அழகாகக் கைகளால்
வெட்டப்பட்டுப் பட்டை தீட்டப்பட்டவை

செவ்ரோன் அமேதியிஸ்ட் ஹார்ட் ரீடெய்ல்லின் விளம்பரம்

"ஸ்ரீகுமார் சார் கடத்தப்பட்ட பிறகு நான் இந்த மாணிக்கம், மரகதம் ட்ரேட் பற்றி, யார் இந்த ஆட்கள், இது எப்படி நடக்கிறது என்பது பற்றி நிறையத் தேடினேன். நவீன் புலியூர் கேசிகனில் மூழ்கிய பிறகு லேப்டாப் எனக்குக் கிடைத்தது. 'ஹார்ட்ஸ் ஆப் டார்க்னஸ்' அதாவது 'இருண்ட இதயங்கள்' என்ற ஒரு கட்டுரை கிடைத்தது. அது தேசிய தொழிலாளர் குழு வெளியிட்ட அறிக்கை. அதைக் காட்டட்டுமா?" முல்லை லேப்டாப்பைச் சுட்டிக் காட்டினாள்.

பதிலுக்குக் காத்திராமல் அதைத் திறந்து உயிர் கொடுத்தாள். திரையில் ஒரு கருப்பு நிற இதயத்தின் பின்னணியில் வடநாட்டுக் கிராமப்புறம் போன்ற ஓரிடத்தில் சில உருவங்கள் படுத்தும் உட்கார்ந்தும் இருக்கும் காட்சி தோன்றியது. எலும்பும் தோலுமாக ஒருவர் பூச்சுவேலை செய்யப்படாத ஒரு செங்கல் சுவரருகே நீட்டிப் படுத்திருந்தார். அவரது குச்சிக் கைகள் மார்பின் மேல் மடித்து வைக்கப்பட்டிருந்தன. வாய் சற்றே திறந்திருந்தது அந்த முகத்திற்கு ஒரு சவக்களையை அளித்தது. அந்தப் புகைபடத்தின் மீது ஹரேஷ் ம◌ஃக்பட் பார்மர், 2009 ஆம் ஆண்டு ஜூன் பதினொன்றாம் தேதி இறந்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பார்மர் பதிமூன்று வயதில் ரத்தினக்கல் பட்டை தீட்டும் வேலை செய்யத் தொடங்கினார். இறக்கும் போது அவரது வயது 32. அவரது அம்மாவும் அப்பாவும் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இதே

நோயால் மரணமடைந்துவிட்டனர்.

இன்னொரு புகைப்படத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் உடல் பென்சில் போல மெலிந்திருக்க தலைமட்டும் பெரிதாகத் தெரிந்தது. முகம் ஒட்டி சுருக்கம் விழுந்திருந்தாலும் அடர்ந்த தலைமுடி அவர் இளைஞர் என்பதைக் காட்டியது. மஞ்சள் பாரித்திருந்த அந்த குழிவிழுந்த கண்கள் அளவிட முடியாத துயரத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தன. நகை முரணாக அவரது நீட்டிய கரத்தில் ஒரு பட்டை தீட்டிய நீலக்கல் இருந்தது. புகைபடத்திலிருக்கும் ராமன் லல்லுபாய் வகேலா 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் எட்டாம் தேதி மரணமடைந்தார் என்று கீழிருந்த குறிப்பு சொன்னது.

ராமன் ஒவ்வொரு நாளும் 77 கற்களுக்குப் பட்டை தீட்டினார். ஒரு வாரத்துக்கு 462 கற்கள். வருடத்திற்கு 24,000 கற்கள். இப்படி இருபது ஆண்டுகளில் ஐந்து லட்சம் கற்களுக்குப் பட்டை தீட்டினார். அவரது நுரையீரல்களை சிலிக்கா பொடி தின்றுவிட்டது. ஒருநாளைக்கு பதினான்கு மனிநேரம் தான் பணிபுரிந்த அந்த காற்றோட்டமில்லாத அறையிலேயே படுத்த படுக்கையாகவிருந்து உயிர்விட்டார். அவர் ஒருநாளைக்கு எழுபது ரூபாய் ஊதியம் ஈட்டினார். ரத்தின வியாபாரியிடம் முப்பத்தி இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். கடைசிவரை அவரால் அந்தக் கடனை அடைத்து விடுதலை பெற முடியவில்லை. அவர் மரணப்படுக்கையிலிருந்த போது இருபது ஆண்டுகளாக யாருக்காக உழைத்தாரோ, அந்த வியாபாரி ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை. ராமன் சிறந்த ஓவியரும் கூட. முதல் முதலாக பட்டை தீட்டும் தொழிலாளர்களுக்காகப் போராட முன்வந்தவர்களில் அவரும் ஒருவர்.

கூடவே தலைமுதல் கால்வரை வெள்ளைப் புழுதி படிந்த சில சிறுவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் படங்களும் வெளியிடப்பட்டிருந்தன. ஒரு குழந்தையின் தகப்பன் 'இந்த வேலையிலுள்ள ஆபத்துகள் தெரியும் ஆனால் நாங்கள் நிலமில்லாத விவசாயிகள். எங்களுக்கு வேறு வழியில்லை' என்றார் என்று அந்த அறிக்கை சொன்னது.

முல்லையின் கண்கள் சற்று நேரம் அந்தப் படங்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. ஒட்டிப் போன அந்த முகங்களில் தெரிந்த புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒரு உணர்ச்சி பார்ப்பவர்களை என்னவோ செய்தது. யாரும் எதுவும் கேட்கவில்லை. அவளே பேசட்டும் என்று காத்திருந்தனர்.

“இவர்கள் குஜராத்திலுள்ள கம்பட் நகரைச் சேர்ந்தவர்கள். சிலிகோஸிஸ் என்ற வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களில் பலர் இறந்து விட்டார்கள். மீதியுள்ளவர்கள் சீக்கிரம் . . . கம்பட் நகரில் இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயிருக்கிறார்கள். இறந்தவர்களில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் உண்டு. இவ்வளவு பேர் இந்த வியாதியால் இறப்பதற்கு என்ன காரணம் தெரியுமா?” முல்லை மற்றவர்களைப் பார்த்தாள்.

யாரும் பதில் சொல்லவில்லை.

“நமது ஸ்ரீகுமார் சார் சொல்லும் அகேட், ரூபி, ச஻ைபையர் போன்ற கற்களால் இதயங்களும், மணிகளும், டேவிட்டின் நட்சத்திரங்களும் காதணிகளும், பிரேஸ்லெட்டுகளும், வளையல்களும் செய்யும் வேலையில் ஈடுபட்டவர்கள் இவர்கள். இந்த தொழிலாளர்கள் தரையில் உட்கார்ந்து கல்லாலான சுழலும் சக்கரங்களில் இந்த கற்களை உரைப்பதன் மூலம் அதை வடிவமைக்கின்றனர். இதனால் அவர்களின் உடலெங்கும் சிலிக்கா தூசி படிகிறது. தொழிலாளர்கள் 12, 13 வயதில் வேலை செய்ய தொடங்குகின்றனர். 30 சதவீதத் தொழிலாளிகள் சிலிகோஸிஸ் நோயால் இறந்து போகின்றனர். இந்த தூசியை சுவாசிக்கும் அனைவருக்கும் இந்நோய் வருகிறது. உயிர் பிழைத்தவர்கள் எலும்பும் தோலுமாகி நடக்கமுடியாமல் தீராத மூச்சுத் திணறலால் அவதிப் படுகின்றனர். ஏழைத் தொழிலாளர்கள் இந்த கற்களை சப்ளை செய்யும் வியாபாரியிடம் கடன் வாங்குகின்றனர். அதன் மூலம் கொத்தடிமையாகின்றனர். தொழிலாளி இறந்தால் அவனது மனைவி அந்த வேலையை செய்யும்படி நிர்பந்திக்கப் படுகிறாள். அவளும் இறந்தால் அவர்களது குழந்தைகள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். குழந்தைகள் இந்த பணியில் ஈடுபடுவதை வைர வியாபாரிகளும் விரும்புகின்றனர். மலிவான சின்னஞ்சிறு கற்களையும்,

வைரங்களையும் பட்டை தீட்ட சிறுவர்களின் பிஞ்சுக் கரங்களும், கண்களும் ஏற்றவை என்று இவர்கள் கருதுகிறார்கள். வைரத் தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைகளுக்கு கண்பார்வைக் கோளாறுகளும், முதுகுவலியும் சிறுநீரக பிரச்சினைகளும் வருகின்றன.

சிலிகோஸிஸ் முற்றிலும் குணப்படுத்தக் கூடிய நோயாகும். ஆனால் தொழில் பாதுகாப்புகள் இல்லாததால் நூறு சதவீத இழப்புகள் நேரிடுகின்றன.
ஷகாப்பூர் என்ற கிராமத்தில் மட்டும் இருநூறு தொழிலாளர்கள் இந்நோயினால் மரணமடைந்துள்ளனர். காற்றோட்டமான ஜன்னல்களை ஏற்படுத்துவதன் மூலம் தூசியை குறைத்து இறப்பைத் தடுக்கலாம். இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2008ல் இந்தியா 500 கோடி ரூபாய் மதிப்புள்ள கற்களை அமெரிக்காவுக்கு மட்டும் ஏற்றுமதி செய்துள்ளது. “

நிதானமாகத் தொடங்கிய முல்லையின் குரல் வரவர கம்மிப்போனது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு தொடர்ந்தாள். “ இதுவரை இந்த கற்கள் சிறிய கம்பெனிகளாலும், சட்ட விரோதமான சுரங்கம் தோண்டுபவர்களாலும், தனி மனிதர்களாலுமே கண்டெடுக்கப்பட்டு விற்கப்பட்டு வருகின்றன. ஒரு சுரங்கம் தோண்டுவதற்கு தேவைப் படும் பல கோடி டாலர்களை செலவழிக்க இது வரை ஒரு பெரிய கம்பெனியும் முன்வரவில்லை.”

முல்லை நிறுத்திவிட்டு ஸ்ரீகுமாரை நேராகப் பார்த்து சொன்னாள். “இப்போது ஜே.கே.டைமண்ட்ஸ் அண்ட் ஜூவல்ஸை கையகப்படுத்தியுள்ள எமரால்ட் ஃபீல்டு இத்துறையில் கால் வைக்கிறது. எனவே பெரிய சுரங்கங்கள் தோண்டப்படும். இன்னும் அதிக கற்கள் கண்டுபிடிக்கப்படும். இன்னும் அதிக தொழிலாளர்கள் இந்த வேலையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.”

ஸ்ரீகுமார் பதில் பேசவில்லை. இதுவரை காணாத சுருக்கங்கள் அவர் நெற்றியில் தென்பட்டன. நவீன் வியப்பால் விரிந்த விழிகளால் முல்லையையே பார்த்து கொண்டிருந்தான். அவள் பேச்சு ஏற்படுத்திய

வேதனையும், அதே நேரம் அவளது தேடல் தந்த வியப்பும் அவனைப் பேச்சிழந்து போகச் செய்தன. புரட்சிக்காகப் பணிபுரியும் கட்சியின் ஊழியனான அவன் தயங்கி தடுமாறி நிற்க அது குறித்து எந்த கற்பனையும் இல்லாத முல்லை தயக்கமின்றி நேராக முன்னேறிச் சென்றுவிட்டாள்.

“இனி என்ன நடக்கும்?” கண்ணன் தான் முதலில் முல்லையின் பேச்சு தந்த பாதிப்பிலிருந்து மீண்டு வந்து கேட்டான்.

“ஒன்றும் நடக்காது. நமது புரொபஸரோ அல்லது வேறு யாராவதோ கை காட்டும் இடத்தில் சுரங்கம் தோண்டுவார்கள். விவசாய நிலங்கள் சூறையாடப்படும். நவீன் ஒரு முறை சொன்னான் மக்களுடையவை ஆகக் கூடிய செல்வங்கள் என்று. சென்னையில் நடைபாதைகளில் குடும்பத்துடன் குவிந்து கிடக்கும் மக்களைப் பாருங்கள், நான்கைந்து நாட்களுக்கு முன்பு திருக்கடையூரில் ஒரு கோவிலில் பிச்சைக்காரர்களைப் பார்த்தோம். தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலும் வறுமை தாண்டவமாடத்தான் செய்கிறது. மக்கள் இவ்வளவு வறுமையில் இருக்கும்போது ஏதோ வெளிநாட்டு நிறுவனங்கள் நமது மண்ணைக் கொள்ளையடிப்பது சரியா? யாரோ வெள்ளைக்காரர்கள் அணியும் ரத்தினங்களுக்காக நமது வியாபார நிலங்களும் மேய்ச்சல் வெளிகளும் சூறையாடப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியுமா?.” முல்லை சற்று நேரம் அமைதியாக இருந்தாள்.

“கண்ணகி காலில் அணிந்திருந்த அதே ரூபி, கோவலன் மரணத்திற்கு காரணமான ரூபி, தமிழகத்தில் பல யுத்தங்களுக்கும், கொலைகளுக்கும் காரணமான ரூபி….. எனக்கு ஒன்றும் புரியவில்லை. நமது பயணமும் இந்த கம்ப்பட் தொழிலாளர்களின் மரணமும், நமது மக்களின் வறுமையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையா இல்லை வேறுவேறா?” முல்லை கேட்டாள்.

“இரண்டு ஆவணப்படங்களாக எடுத்தால் என்ன?” என்றான் கண்ணன்.

முல்லை தனது இயல்புக்கு மாறான அமைதியில் முழ்கினாள். எங்கோ

ஒரு அறைக்கதவு திறந்து மூடப்படும் சத்தம், சுழலும் ஃபேன், தெருவில் விரையும் வாகனங்கள் தவிர வேறெந்த ஓசையும் இல்லை. ஸ்ரீகுமாரை தனது சொற்கள் புண்படுத்தியிருக்குமோ என்ற எண்ணம் கூட முல்லைக்குத் தோன்றவில்லை. இந்த சின்னப்பெண் தன்னை கலக்கிவிட்டது போல் ஸ்ரீகுமாரும் உணர்ந்தார். விவரங்கள் மேலும் விவரங்கள், நுணுக்கம் மேலும் நுணுக்கம் என்பது மட்டுமே ஆய்வின் மூலதத்துவம் என்று அவர் கருதியிருந்தார். இதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்ற எண்ணம் இரண்டு மூன்று நாட்களாக அவருக்கும் தோன்றிக்கொண்டுதான் இருந்தது.

கனத்துப் போன மனதின் சுமையைக் குறைக்க பால்கனியில் உலாவிய பேராசிரியர் உள்ளே திரும்பி "டெம்போவைக் காணவில்லை" என்றார். செல்போனை எடுத்து டிரைவரை அழைத்தார்.

அவனது செல்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது!

22

ஐயாவின் மனம் நிறைவாக இருந்தது. இத்தனை வருடம் அரசியல், பிசினெஸ் வாழ்க்கையில் அவர் ஏராளமானவற்றை கடந்து வந்திருந்தார், இன்னும் பலவற்றை கடக்க வேண்டியிருக்கும் என்பதும் அவருக்கு தெரியும். ஒவ்வொரு வெற்றியும் கொண்டாடப்பட வேண்டியது. வெற்றி அலட்சியப்படுத்தப்பட்டால் அடுத்த வெற்றிக்கான தயாரிப்புகளை செய்ய முடியாது.

செயற்கை அமைதியுடன் உட்கார்ந்து புகழ்மாலைகளை ஏற்றுக்கொள்வது ஒருவகைக் கொண்டாட்டம். என்ன செய்திருக்கிறேன் பார் என்று குடும்ப உறுப்பினர்களுக்கு உணர்த்துவது இன்னொரு வகை கொண்டாட்டம். புலன்களுக்கு இன்பமூட்டும் வேறுவகையான கொண்டாட்டங்களும் உண்டு. இன்று அவர் மகிழ்ச்சியுடனிருப்பதற்குக் காரணம் இருக்கிறது.

கடந்த ஒரு மாத காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் வந்துவிட்டார்கள். அவர் சிரித்துக் கொண்டார். ஒரு சின்ன குறும்பு செய்து பார்த்தார்கள். ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்ததும் வந்துவிட்டார்கள்...

பரம்பரை பரம்பரையாக அவரது குடும்பத்தினர் காங்கேயம் பகுதியில் பெரும் பண்ணையார்களாக இருந்தவர்கள். பழைய கோட்டைப் பட்டாக்காரருக்கு அடுத்து இவரது குடும்பம்தான் பெரிய குடும்பம் என்று சொல்வார்கள். ஏராளமான நிலங்கள். காங்கேயம் காளைகள். நிலங்கள் பாதி மேய்ச்சலுக்கும், கால்நடை வளர்ப்புக்கும். பட்டி மட்டுமில்லாமல் வெள்ளை வேலாமரங்கள் நிறைந்த காடும் தரைமட்டத்திற்கு அருகில் நீர் இருக்கும் வாவியும் கொண்ட பிரம்மாண்டமான மேய்ச்சல் நிலம் அவருடைய குடும்பத்திற்கு இருந்தது. ஏராளமான மாடுகளும், ஆடுகளும் அதில் சுதந்திரமாகச் சுற்றித் திரியும். தான் வளர்க்கும் கம்பீரமான காங்கேயம் காளைகள் மீது அவரது தகப்பனாருக்கு அலாதி பெருமை. சினிமாக்காரர்கள் ஜல்லிக்கட்டுக் காட்சி என்றால் அவரிடம்தான் வந்து நிற்பார்கள். உள்ளூரில் சுல்தானாக இருந்தவர், அவருக்கு அரசியல் ஒத்து வரவில்லை.

ஆனால் ஐயா அந்தக் கலையை முழுமையாக முப்பது வயதிலேயே கற்றுத் தேறிவிட்டார். ஊரில் கம்பீர நடை போட்டுவிட்டு சென்னை சென்று தலைவர் வீட்டில் கூனிக் குறுகி நிற்க அவருக்கு இயல்பாக வந்து விட்டது. தலைவர் இருக்கும் ரயில் பெட்டியின் வாயிற்படியிலேயே நின்று கொண்டு வந்தார் என்று கூடக் கதைகள் உண்டு. நாற்பதாண்டுகளுக்கு முன்பே பி.ஏ படித்தவர், ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர், பணக்காரர் என்பதால் அவருக்கு உடனே எம்.எல்.ஏ. சீட் கிடைத்தது. ஆனால் அடி உதைபட்டு முன்னேறியவர்கள், மேலிடத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களோடு அவரால் போட்டியிட முடியவில்லை. அதிகாரம் பதவிக்கான போராட்டத்திலிருந்து சற்று ஒதுங்கியே இருந்து நிலத்திலும், வியாபாரத்திலும் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

தனது நிலங்கள் தங்கச் சுரங்கங்களைவிட மேலான ஒன்றின் மீது உட்கார்ந்திருப்பதை விரைவில் கண்டு கொண்டார். நீலப் பச்சை கற்களை வெறி கொண்டு தேடத் தொடங்கினார். குவார்ட்ஸ் கல் எடுக்க லைசன்ஸ் வாங்கி சில இடங்களில் தோண்டிப் பார்க்கவும் செய்தார். இதில் சட்டப் பிரச்சினைகள் இருப்பது அவருக்குத் தெரியும். சுரங்கங்கள் தாதுக்கள் சட்டத்தின் அட்டவனை ஏ-ன் படி ரத்தினக் கற்கள் மதிப்பு வாய்ந்த தாதுக்களாகும். இவற்றுக்காகச் சுரங்கம் தோண்ட வேண்டுமென்றால் மத்திய அரசு ஒப்புதலும் வேண்டும். ஆனால் ஐயா தேடுவதையும் தோண்டுவதையும் நிறுத்தவில்லை. குஜராத், ஜெய்ப்பூர் வியாபாரிகளுக்கு அவர் ஒரு முக்கியமான வாடிக்கையாளராகிவிட்டார். வட இந்தியாவில் சுற்றி அலைந்ததில் இவர்கள் எப்படிக் கொள்ளை அடிக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டார். பின்பு கடுமையான கண்டிப்பான வாடிக்கையாளராக மாறினார். பணம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டியது. எம்.எல்.ஏ ஆனார். மந்திரி ஆனார். மந்திரிகள் ரியல் எஸ்டேட்டில் இறங்கியபோது இவரும் வெறிபிடித்தது போல நிலங்களை வாங்கிப் போட்டார். சிவன் மலைக்கு சில கிலோமீட்டர் தள்ளி கரட்டு மேட்டை சுற்றி கற்கள் இறைந்து கிடக்கும் ஏராளமான நிலங்களை வளைத்துப் போட்டார். கரூரிலும் தாராபுரம் போகும் வழியிலும் பெருந்துறையிலும் கிடைத்த இடங்களில் எல்லாம் நிலங்களைக்

கைப்பற்றினார். இதுவரை இங்கே கற்கள் கிடைக்கும் என்று தெரியாத பகுதிகளும் அதில் உண்டு. கிருஷ்ணசாமிக் கவுண்டரைப் போன்ற நிறையப் பேரை வைத்து அலைந்ததில் கற்கள் கிடைப்பதில் சிரமம் இருந்தாலும் போதுமான அளவுக்குக் கிடைக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டார். தேவை கொஞ்சம் உழைப்பும் புத்திசாலித்தனமும்தான். இந்தப் போக்கில் உள்ளூர் வியாபாரிகளுக்கு பாதுகாப்பாளராகவும் மாறினார்.

கட்சியிலும் கடந்த சில ஆண்டுகளாக அவரது நிலை ஏறு முகத்திலிருந்தது. கட்சியில் அவருக்குத் தடையாக இருந்த இருவரில் ஒருவர் கட்சிமாறி திரும்பவும் வந்து பெயரைக் கெடுத்துக் கொண்டார். இன்னொருவர் மரணமடைய ஐயாவே கட்சியில் சீனியரும், வலிமை வாய்ந்தவருமாக உருவெடுத்தார்.

அவர் பெரியதாக எதிர்பார்த்த மகன் அரசியலுக்கும் வியாபாரத்துக்கும் டாட்டா காட்டிவிட்டு பிடிவாதமாக டாக்டராகிவிட்டதல் , மகள் வயிற்றுப் பேத்தியை ஜெம்மாலஜி படிக்க அனுப்பினார். அவள் வந்த பிறகு இங்கேயே கற்களைப் பட்டை தீட்டும் யூனிட் அமைத்து ஏற்றுமதி செய்யும் திட்டம் இருந்தது. கோடிக்கணக்கான ரூபாய் கடனுக்குக் கூட ஏற்பாடு செய்துவிட்டார்.

கடந்த ஏழெட்டு வருடங்களாக இந்தியாவின் ரத்தினக்கல் வணிகத்தில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை ஐயா உன்னிப்பாக கவனித்து வந்தார். ஒரிஸ்சாவின் கலஹண்டி அருகே ஒருவருடைய நிலத்தில் கற்கள் இருப்பது தெரிய வந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் கடப்பாரை, மண்வெட்டிகளோடு அந்த நிலத்தில் கும்பல் கும்பலாகப் புகுந்து மூட்டை மூட்டையாகக் கற்களை அள்ளிச் சென்றனர். ஒரிஸ்சாவின் இன்னும் பல இடங்களில் கற்கள் கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு உள்ளூர் வெளியூர் நிறுவனங்கள் சும்மா இருக்காது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

இரண்டு ஆண்டுகளாக இந்தியாவின் தங்கம், வைரம், ரத்தினக் கற்கள் வணிகத்தில் பாதியைத் தன் கைகளில் வைத்திருக்கும் ஜே.கே

டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்சின் பங்குகள் விலை குறைந்து வந்தன. ஒரு பெரும் அரசு நிறுவனம் பெரும் தொகை கொடுத்து சரிந்துவந்த பங்குகளை வாங்கி சரிவை நிறுத்த முயன்றது பெரும் பிரச்சினையானது. ஊழல் என்று ஆங்கில ஏடுகளும், சேனல்களும் அலறின. இந்த அளவிற்கு போகிறார்கள் என்றால் பிரச்சினை பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்று ஐயாவுக்குப் பொறிதட்டியது.

போதாக் குறைக்கு ரூபாயின் மதிப்பு வேறு குறைந்து வந்ததால் தங்கம் இறக்குமதி செய்யும் இந்த நிறுவனம் ஒழிந்தால் நல்லது என்று குரல்கள் வரத் தொடங்கின. அவர் சற்று பயந்துதான் போனார். ஜே.கே டைமண்ட்ஸோடு அவருக்கு ஏராளமான கொடுக்கல் வாங்கல்கள் இருந்தன. மாற்று ஏற்பாடுச் செய்வதற்கு முன் அது ஒழிவதை அவர் விரும்பவில்லை. ஏதாவது செய்து தப்பித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தார். அவர் நினைத்தது நடந்துவிட்டது ஆனால் வேறுவிதமாக.

லண்டனைச் சேர்ந்த ஒரு பகாசுர நிறுவனம் பெரும் பங்குகளை வாங்கி நிர்வாகத்தைக் கைப்பற்றியது. எல்லாவற்றையும் மாற்ற வேண்டும், திருத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும் என்று ஒரே அல்லோலகல்லோலம். குஜராத்தில் கல் பட்டை தீட்டும் தொழிலாளர்களை மரணக் குழியில் தள்ளுகிறது என்று மனித உரிமை அறிக்கைகள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. இதுவரை 20 ஆண்டுகளில் 2000 போர் இறந்து போயுள்ளார்கள் என்று புள்ளிவிவரமும் தரப்பட்டது.

இத்தொழிலாளர்களை தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை வேறு முவைக்கப்படுகிறது. உலகம் அழிவதைக் கூட அந்தப் பன்னாட்டு நிறுவனம் விரும்பும். ஆனால் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளமும், மருத்துவ வசதியும் அளிப்பதை விரும்பாது என்பதை அவர் நன்கறிந்திருந்தார். வேறு ஏதோ திட்டம் இருக்கிறது என்று அவர் சரியாகவே சந்தேகித்தார்.

புது நிர்வாகம் சில நடவடிக்கைகளை எடுத்தது. சம்பந்தமே இல்லாத ஒரு பேராசிரியரைக் கற்களைப் பற்றி ஆய்வு செய்யத்

காங்கேயத்துக்கு அனுப்பியது. தவிர பெரிய அளவில் சுரங்கம் தோண்டி கற்களை எடுக்க, லாபி செய்ய அது முயற்சி எடுப்பதாக அரசல் புரசலான செய்திகள் வந்து கொண்டிருந்தன. அவர் இதைத் தனது சாம்ராஜியத்தின் மீதான நேரடித் தாக்குதல் என்று கருதினார். இது தன்னோடு பேரம் பேசுவதற்கும் தங்களால் வேறு ஆட்களைக் கொண்டு இயங்கமுடியும் என்று காட்டுவதற்குமான முயற்சி. புதிதாகக் கற்கள் கிடைக்கும் இடங்களாக அடையாளம் காணப்பட்ட ஒரிஸ்ஸா, மத்தியப்பிரதேசம், சட்டிஸ்கரை எல்லாம் விட்டுவிட்டு தமிழ்நாட்டுக்கு இந்த ஆட்கள் வந்து நிற்பது அவருக்கு எரிச்சலூட்டியது. இது தனக்கு இரண்டு விதமான பிரச்சினைகளை உருவாக்கும் என்று கருதினார். ஒன்று அரசு நிலங்களை அடுத்துள்ள தனது நிலங்கள் சுரங்கங்களுக்காகக் குறிவைக்கப் படலாம். இரண்டாவது கற்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் அவரது ஆதிக்கம் பாதிக்கப்படலாம். எனவே லாபமும் பாதிக்கப்படலாம். உள்ளூர் வியாபாரிகளை அழைத்துப் பேசினார். அவர்கள் பயந்து போனார்கள். அவர் கிருஷ்ணசாமி கவுண்டரை அனுப்பி ஸ்ரீகுமாரைத் தூக்கி வரச் செய்தார். நிறுவனத்தின் உள்ளூர் முகவர்களுக்குப் பேச வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

நரசிம்மனும் அவரது பன்னாட்டு நிறுவனமும் யாரை வம்புக்கு இழுக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டனர். உள்ளூர் ஆய்தக்குழுக்களைச் சமாளித்து ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் பெரிய அளவுக்கு அனுபவம் பெற்ற நிறுவனம் அது. இதெல்லாம் அதற்குப் புதிதல்ல. பார்த்துக் கொள்ளலாம். இன்னும் கொஞ்சம் போகட்டும் என்று முடிவு செய்தது. பேச்சு வார்த்தைகள் மனநிறைவு அளிப்பதாக அமைந்தன. எதுவுமே மாறவில்லை.

பேச்சுவார்த்தைகள் முடிந்ததும் நரசிம்மன் தனது தொடர்புகள் மூலம் ஒரு காவல்துறை அதிகாரியைப் பிடித்தார். இந்தியாவில் அரசியல்வாதிகள், அதிகாரிகள், நிறுவனங்களிடையே முக்கூட்டு இருப்பதையும் அதே நேரம் முரண்பாடுகள் இருப்பதையும் அவர் அறிந்திருந்தார். பிரச்சினைக்குரிய ஐயாவுடைய கட்சியில் எத்தனை

கோஷ்டிகள் இருக்கின்றன அவர் மீது எத்தனை வழக்குகள் உள்ளன, அவரது பிஸினஸ் எப்படி என்பதையெல்லாம் விசாரிக்கச் சொன்னார்.

கொங்குநாட்டுப் பொட்டல் வெளிகளில் வழக்கம்போல் வெயில் எரித்தது, விவசாயிகள் திருப்பூருக்குக் குடிபெயர்ந்தார்கள். அமெரிக்கர்கள் காதலிகளுக்கு இதய வடிவில் செதுக்கப்பட்ட மாணிக்கக் கற்களைப் பரிசளித்தார்கள். வாரத்தில் ஒவ்வொரு கிழமையும் அடுத்தடுத்து வந்தது. எதுவுமே மாறவில்லை.

“என் கருத்தில் நிறைந்த கணவனைக் கண்டபின் அல்லாது இருக்கவும் செய்யேன், நிற்கவும் செய்யேன்” என்று கூறியவளாகக், கண்ணகி கொற்றவையின் வாயிலில் தன் பொற்றொடியினைத் தகர்த்துவிட்டு, ‘கீழ்திசை வாயில் வழியாக இம்மதுரையின் என் கணவனுடனே புகுந்தேன்; மேற்றிசை வாயில் வழியாக அவனை இழந்த வறியவளாக யானும் வெளியேறுகின்றேன்’ என வருந்தியவளாக, மதுரை நகரை விட்டு வெளியேறி நடந்தனள்.

இரவும், பகலும் கருதாது மயங்கிச் செயலற்றவளாக, ஒலிக்கும் நீர் நிறைந்த வையையின் ஒரு கரைவழியாக நடந்து மேல் நோக்கிச் சென்றனள். அவள் துன்புற்றுச் செல்வதினால் பள்ளங்கள் உளவென்பது கருதவில்லை.... தன் உள்ளத்தைத் தன் கணவனோடு மேலுலகு சென்று சேர்வதிலேயே ஈடுபடுத்திச் சென்றதனால் மேடென்பதும் எண்ணவில்லை. நடந்து கொண்டே யிருந்தாள். கடலின் நடுவிடத்திக் கிழித்துக், கிரவுஞ்சம் என்னும் மலையின் நெஞ்சினைப் பிளந்து அவ்விடத்தே அவணரைப் வென்று அழித்த சுடர்கின்ற இலைபோன்ற வடிவுடைய நெடுவேலோனாகிய முருகப்பிரானின் நெடுவேள் குன்றத்திலேயும் முடிவில் அடிவைத்து ஏறினாள்”

கட்டுரைக் காதை. சிலப்பதிகாரம்

“கண்ணகி கோவில் தமிழ்நாடு, கேரளா இரு மாநிலங்களும் சொந்தம் கொண்டாடும் ஓரிடம். பெரியார் புலிகள் காப்பகத்தின் வழியாகத்தான் அதற்குச் செல்ல வேண்டும். கேரள வனத்துறை ஒவ்வொரு வருடம் சித்ரா பௌர்ணமி அன்று மட்டுமே கோவிலுக்கு விசேஷங்கள் நடத்த மக்களை அனுமதிக்கிறது. 1976-ல் தமிழக அரசு குமுளிக்குக் கீழே உள்ள ஒரு மலைக் கிராமத்திலிருந்து தமிழக வனத்துறைக்கு சொந்தமான வனங்கள் வழியாக ஒரு சாலை அமைக்க முயன்றது. ஆனால் அது பாதியில் நிறுத்தப்பட்டுவிட்டது. அதுவரை கண்ணகி கோவில் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானதாகக் கருதப்பட்டு வந்தது. பின்பு கேரள அரசு அதை கைப்பற்றிக் கொண்டது. கோவிலைத்

திறப்பதற்கும், பூஜை செய்வதற்கும்தான் அனுமதி இல்லையே தவிர பெரியார் புலிகள் காப்பகத்தைச் சுற்றிப் பார்க்கத் தேக்கடியில் இருக்கும் கானுயிர் வார்டனின் அனுமதி கிடைத்தால் கோவிலைச் சென்று பார்க்கலாம் என்று வனத்துறையில் ஒரு நண்பர் சொன்னார். இப்போது அதிர்ஷ்டம் இருந்தால் குமுளியில் இருந்து ஜீப்பில் கேரளா வழியாகக் கோவிலுக்குப் போகலாம். ஏதாவது காரணம் கூறி அனுமதிக்கப்படாமல் போகவும் வாய்ப்பிருக்கிறது. "´ என்று கண்ணன் நீளமாக விளக்கினான். அவன் மட்டுமே உள்ளூரைச் சேர்ந்தவன் என்பதால் விளக்கும் பொறுப்பைத் தன்னுடையதாக எடுத்துக் கொண்டான்.

"கண்ணகி கோவிலை இப்படி வருடம் முழுவதும் பூட்டி வைத்திருப்பது சரியா?" முல்லை மிகுந்த வருத்தத்துடன் கேட்டாள். சித்திரை மாதம் பௌர்ணமி அன்று மட்டும் தான் அங்கு பூஜைக்கு அனுமதி என்று அவளும் இணையத்தில் படித்திருந்தாள். "இதற்கு நீங்கள் எல்லாம் எதுவும் செய்ய மாட்டீங்களா!"

"செய்யலாம்தான். ஆனால் எதிரி யார் என்று நிர்ணயிப்பதிலேயே நிறைய பிரச்சனைகள் ஏற்படுகின்றது. இதை கேரள அரசின் சதி என்று நமது நண்பர்கள், தோழர்களில் பெரும்பான்மையானவர்கள் கருதுகிறார்கள். இரு மாநிலங்களுக்கு இடையே எல்லைப் பிரச்சினை இருப்பது உண்மைதான். ஆனால் மலையாளிகளும், கண்ணகி மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர்கள்தான். சொல்லப்போனால் நம்மை விட கேரளாவில் கண்ணகி வழிபாடு அதிகம். அவர்களும் கூட கண்ணகி கோயிலுக்கு அனுமதிக்கப் படுவதில்லை. பிரச்சினை வனத்துறைதான். அரசு அல்ல. கேரள அமைச்சர்களையே வனத்துறை அனுமதிக்க மறுத்த கதைகள் உண்டு. வனத்துறை வனங்களை தனது சொத்தாகக் கருதுகிறது. இந்திய நிலப்பரப்பில் 11% உள்ள வனங்களைக் கட்டியாளும் ஜமீன்தாராக வனத்துறை தன்னைக் கருதிக் கொள்கிறது என்று சி.ஆர்.பிஜாய் அடிக்கடி கூறுவார். அது காடுகளுக்குள் மக்கள் வருவதை விரும்பவில்லை. வனங்களின் புதல்வர்களான பழங்குடி மக்களையே கொஞ்சம் கொஞ்சமாக வனங்களிலிருந்து வெளியேற்றி வருகிறது. தமிழர்களும், மலையாளிகளும் அடித்துக்

கொண்டால் வனத்துறைக்கு நன்மை தானே”

‘இந்த தப்பெண்ணத்தை மாற்ற என்ன செய்திருக்கிறீர்கள்?’ என்று சூடாகக் கேட்க வேண்டுமென்று நவீன் நினைத்தான். ஆனால் கடந்த இரண்டு மூன்று நாள் அனுபவத்திலிருந்து கார்பரேட்டுகளும், உள்ளூர் தாதாக்களும், அரசியல் வாதிகளும் கொண்டுள்ள மூர்க்கமான வலைப்பின்னலை நேரில் பார்த்த பிறகு இது போன்ற கேள்விகள் அவனுக்கு முக்கியத்துவமற்றவையாகத் தோன்றின. கண்ணன் போன்ற ஒருவனை திக்குமுக்காட வைப்பதோ அல்லது எதிர்நிலையில் கொண்டு போய் தள்ளுவதோ அல்ல இப்போது செய்ய வேண்டுவது என்று தோன்றியது.

’என்ன செய்ய வேண்டும்” லெனினின் புகழ் பெற்ற புத்தகத்தின் பெயர் இது. தேவை கேள்விகள் மட்டுமே அல்ல. ஒவ்வொருவரும் தனது பங்குக்கு ஒரு செங்கல்லை எடுத்து வைப்பதுதான்’

முல்லையின் திட்டத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டு சிக்கலாகிவிட்டது. கொடுங்கலூர் பூரம்விழா ஏப்ரல் 11 ஆம் தேதி நடைபெற இருந்தது. ஏப்ரல் 14 ஆம் தேதி சித்ரா பௌர்ணமி. அன்றுதான் கண்ணகி கோவிலில் விழா நடை பெறும். எனவே இரண்டையும் பார்க்க வேண்டுமானால் கொடுங்கலூர் சென்றுவிட்டு மீண்டும் வந்த வழியே கண்ணகி கோவிலுக்குத் திரும்ப வேண்டும். ஏறக்குறைய இரண்டு மூன்று நாட்கள் வீணாகும். அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதான். ஆனால் கண்ணகி மலை மீது ஏறிய போது அந்த இடம் எப்படியிருந்ததோ அப்படியே ஒருமுறை அதைப் பார்த்துவிட முல்லை விரும்பினாள். தவிர கொடுங்கலூர் சென்றுவிட்டு திரும்பவும் கண்ணகி கோவிலுக்கு வருவதானால் ஸ்ரீகுமாரும் கண்ணனும் இல்லாமல்தான் வர வேண்டும். இதை முல்லையும் நவீனும் விரும்பவில்லை. எனவே கண்ணன் விழாவுக்கு முன்பே கண்ணகி கோவிலுக்குச் செல்ல வேறு ஏற்பாடு செய்ய முயல்வதாகக் கூறினான்.

கண்ணகி கோயில் வரை அவர்களோடு வருவதற்கும் கண்ணன்

ஒப்புக் கொண்டான். முல்லை கொடுங்கலூர் காவு தீண்டல் விழாவைப் பார்த்துவிட முடியுமா? தவறவிட வாய்ப்பில்லையே என்று ஸ்ரீகுமாரிடம் பலமுறை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டாள். "பார்த்தேதான் தீர வேண்டுமா?" ஸ்ரீகுமாரின் கண்கள் சிரித்தன.

"என்ன சார் இப்படிக் கேட்கிறீங்க?"

"அழகான இளம் பெண்கள் பார்க்கக் கூடாத விழா அது"

"அதைப் பற்றி அழகான இளம் பெண்கள் தானே கவலைப்பட வேண்டும்" என்றான் நவீன். கண்ணன் புன்னகைத்தான். முல்லை எடுத்து அடிப்பதற்கு வாகாக ஏதாவது கிடைக்கிறதா என்று தேடினாள்.

பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீகுமாரின் முகத்தில் புன்னகை அரும்பியது. மற்றவர்கள் மூவரும் அமர்ந்திருக்க அவர்மட்டும் பால்கனியோரம் நின்று கொண்டிருந்தார். இப்போதுதான் அவர்கள் மூவரையும் ஒரே கோணத்தில் பார்க்கிறார். யாரோ கிசுகிசுப்பாக ஏதோ சொல்லியிருக்க வேண்டும், கலகல வென்று சிரிப்பொலி எழுந்தது. இதுவரை அவர்களைத் தீவிரமும் பிடிவாதமும் கொண்ட இளைஞர்களாகத் தான் பார்த்திருந்தார். அறை முழுவதும் நிறைந்த சிரிப்பொலி அவர்களை இயல்பானவர்களாகக் காட்டியது. தனக்கு வயதாகிவிட்டதென்று நினைத்துக் கொண்டார். இதுவரை தனது மனதில் மூடிக்கிடந்த ஏதோ ஒன்று திறந்து கொண்டது போலிருந்தது. இப்போது ஏனோ தெருப் புழுதியில் உருண்டு புரளும் ஒரு சிறுவனைப் போன்ற உணர்வு தனக்கு ஏற்படுவதை உணர்ந்தார். அப்படியொரு சிறுவன் தன்னுள் எப்போதும் இருந்தே வந்திருக்கிறான் என்றும் தோன்றியது. இந்த நவீன் எப்போதோ சரியாகச் சொன்னான். அவன் நண்பன் யாரோ பெயர் நினைவில்லை சிறுவனைத் தான் நினைவு படுத்துவதாகச் சொன்னான். தன் மனைவிகூட தன்னை சில சமயம் மிக்கி என்றழைத்தது உண்டு.

ஸ்ரீகுமார் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார். நவீன் அவரிடம் நியாயம் கேட்டான். 'நான் சொல்றதுல ஏதாவது தப்பு இருக்கா சார்?"

“ரேஸில் ஓட முடியாத என்னை மாதிரி கிழவன்கிட்ட இப்படியெல்லாம் கேட்கக் கூடாது!”

“நான் சொன்னதைத் தான் சார் வேறு விதமாச் சொல்றார்!”

“என்னசார் நீங்களும் இவனோட சேர்ந்துட்டு!” முல்லை செல்லமாகக் கோபித்தாள்.

சிறிது நேரத்திற்குப்பிறகு ஸ்ரீகுமார் தான் கொடுங்கலூர் செல்லும் வழியில் அங்கமாலியில் இறங்கி சென்னைக்கு விமானம் பிடிக்கப் போவதாகக் கூறினார்.

அதுவரை உல்லாசமான மனநிலையிலிருந்த முல்லைக்கு மனம் கனமாகிப் போனது. ஏதோ ஒரு கட்டத்தில் அவரவர்கள் அவரவர் வழியில் செல்ல வேண்டியதுதான். ஆனால் கடந்த சில நாட்களில் தனக்கு மிகவும் நெருங்கியவர்களாகவும், மனதிற்கு உகந்தவர்களாகவும் மாறிவிட்ட இந்த மனிதர்களைப் பிரிவது அவளுக்கு வேதனையளித்தது.

அவள் முதலில் கண்ணனை கொடுங்கலூர் அழைத்தாள்.

“நீங்களும் எங்கள் ஆவணப்படத்தில் பங்கெடுத்துக் கொள்ளலாமே!” என்று ஆசை காட்டினாள்.

“வேலையிருக்கு தோழர்” என்றான் அவன் அதே சிரிப்புடன். அவள் பேச விரும்புவதையும், நட்பைப் பேண விரும்புவதையும் அவன் உணர்ந்து கொண்டது போலத் தோன்றியது. “தொலைபேசி எண் கொடுங்கள். சென்னைத் தோழர்களை வந்து பார்க்கச் சொல்கிறேன். பேஸ் புக் முகவரி கொடுங்கள்”

எந்த சென்டிமென்டையும் மிகையாக வெளிப்படுத்தாத அளந்து வைத்த சொற்கள். இவன் பலரைப் பார்ப்பவன். இவனது செயல்பாடுகளை இவன் மட்டுமே தீர்மானிப்பதில்லை. எனவே எதிர்பாராத சந்திப்புகளுக்கும், பிரிவுகளுக்கும் பழகிப் போயிருக்கிறான் என்று நினைத்துக் கொண்டாள்.

“நீங்க என்ன சினிமாவில் வரும் பாதிரியார்கள் போல

கட்டுப்படுத்தப்பட்ட உணர்ச்சிகளுடனேயே இருக்கிறீங்க?" நவீன் கண்ணனைப் பார்த்துக் கேட்டான். கண்ணன் அதற்கும் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு அமைதியாக இருந்துவிட்டான். நவீனுக்கு கண்ணனின் அடக்கத்திற்குக் காரணம் முல்லையின் அண்மை தரும் கூச்சமாகத்தானிருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. உள்ளார்ந்த மகிழ்ச்சியோடு இடிபோல மனம்விட்டுச் சிரிக்கக்கூடிய, அதே நேரம் துவண்டுவிடும் அனிச்சமலர் போன்ற உள்ளம் கொண்ட உணர்ச்சிமயமான பல முழுநேர ஊழியர்களை அவனுக்குத் தெரியும்.

"கொடுங்கலூர் அழைத்துச் செல்லுங்கள். சரியாகிவிடுவார்" என்றார் ஸ்ரீகுமார்.

'கொடுங்கலூரில் அப்படி என்னதான் சார் இருக்கிறது?"

"ஒன்னும் இல்லை. மக்கள் கடவுளை ஆபாசமாகப் பாடுவார்கள்"

"கண்ணகியையா?" கண்ணன் அதிர்ச்சியுடன் கேட்டான்.

"அவர்கள் காளி என்கிறார்கள். கண்ணகி காளி அவதாரம் என்கிறார்கள்"

முல்லை இந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. அவள் மதுரையைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள். மதுரை பலவிதங்களில் வித்தியாசமானதாக இருந்தது. டெல்லிக்கு முன்பு அது ஒரு மிகப்பெரிய கிராமம் போலத்தான் தோன்றியது. பெண்கள் பெரும்பாலும் சுடிதார் அணிந்து தவறாமல் ஷால்களுக்கு பின்குத்தி இருந்தார்கள். காதலர்களை அதிகமாக தெருக்களில் பார்க்க முடியவில்லை. ஜீன்ஸ், டீ ஷர்ட் அணிந்த பெண்களை மிக அரிதாகவே காண முடிந்தது. பெண்களும், ஆண்களும் ஏதோ வேறு வேறு கிரகத்து ஜந்துகளைப் போல நடந்து கொள்வதாகவே அவளுக்குத் தோன்றியது.

கண்ணன், ஸ்ரீகுமாரை நெருங்கினான். "நாங்கள் இந்த கற்கள் கிடைக்கும் மேற்குப் பகுதி விவசாயிகளுக்காக சங்கம் அமைப்பது போல் ஏதாவது செய்ய வாய்ப்பிருக்கிறதா?, விழிப்புணர்வை ஏற்படுத்தவோ அல்லது அரசை செயல் படத் தூண்டவோ என்ன செய்யலாம் என்று

நினைக்கிறீர்கள்?”

ஸ்ரீகுமார் சிரித்தபடி அவன் தோளைத் தட்டிக் கொடுத்தார். தனது தொலைபேசி எண்ணையும், மின்னஞ்சல் முகவரியையும் கொடுத்து அவனோடு அடிக்கடி தொடர்பு கொள்வதாக உறுதியளித்தார்.

“சென்னை சென்றதும் எங்கள் நினைவிருக்குமா சார் உங்களுக்கு?”

“நான் டிஸிப்பிளின்டு ஆளப்பா,”

அவர் சிரித்தபோது கண்களில் மின்னல் வெட்டியது. அவர் தனது வாக்கைக் காப்பாற்றுவாரோ இல்லையோ கண்ணன் அவரை விடாது தொடர்வான். தனக்குத் தேவையானவற்றை பெற்றே தீருவான் என்று முல்லை நினைத்துக் கொண்டாள்.

அவள் சிந்தனை கண்ணனை நோக்கித் திரும்பியது. தங்களை விட்டுப் பிரிந்தவுடன் இவன் எங்கே செல்வான்? என்ன சாப்பிடுவான்? யார் இவனைக் கவனித்துக் கொள்வார்கள்? ஸ்ரீகுமார் கடத்தப்பட்டது நினைவுக்கு வந்தது. அநீதிக்கு எதிராகப் போராட மக்களை அழைக்கும் ஒருவனை அரசு சும்மா விட்டுவிடுமா? இரக்கமற்ற மாபியாக்களும், அரசும், போலிஸ்காரர்களும் இருக்கும் உலகில் இந்த மென்மையான இளைஞன் என்ன செய்வான்? எப்படித் தன்னைக் காத்துக் கொள்வான். அவனுக்கு ஏதோ பெரிய ஆபத்துகளும், வேதனைகளும் காத்திருப்பதாக நினைத்துக் கொண்டு அவள் மனம் துவண்டு போனது. இந்த ஊரில் இவனுக்கு பெண் நண்பிகள் இருப்பார்களா? கவிதை எழுதும் பெண்கள் நிறைய இருந்தாலும் அவர்கள் வெளியுலகிற்கு வருவது சற்று அபூர்வம்தான் என்று எப்போதோ நவீன் சொன்னது நினைவிற்கு வந்தது. இரு பாலினரும் தங்கள் தங்கள் உலகில் அடுத்தவருக்குத் தொல்லையில்லாமல் வாழ்ந்து பழகியிருக்கிறார்கள்.

நவீனைப் பிரிய வேண்டி வரும்போது எப்படி இருக்கும்? ஏன் பிரியவேண்டும் என்ற கேள்வியும் கூடவே தோன்றியது. இரண்டு கேள்விகளையும் ஆழ்மனதின் எண்ணற்ற பகுதிகளில் ஏதோ ஒன்றில் தள்ளிப் பூட்டினாள். நவீனுக்கும் அவளுக்குமேயான ஏராளமான

தருணங்கள் இந்தப் பயணத்தில் இருந்தன. எப்போதோ நடந்தது போலிருக்கும் சென்னை புகார் பஸ் பயணம், குகையில் தங்கிய நட்சத்திரங்கள் நிறைந்த இரவு இதெல்லாம் வேறு யாருடனும் சாத்தியமில்லை என்று அவளுக்கு உறுதியாகத் தோன்றியது. கண்ணகி கோவில் வரை கண்ணன், எர்ணாகுளம் விமானநிலையம் வரை ஸ்ரீகுமார் பின்பு நவீனும் தானும் மட்டும் பயணத்தின் தொடக்கம் போலவே. . . இந்தப் பயணம் தங்களை எங்கு அழைத்துச் செல்லப் போகிறது? அவளுக்குள் இன்னும் தெளிவடையாத ஒரு திட்டம் இருந்தது. நவீனால் தன்னுடன் வரமுடியுமா என்ற சந்தேகம் அடிக்கடி ஏற்பட்டாலும் அவனில்லாமல் தான் மட்டும் தனியே தொடர்வது சாத்தியமில்லை என்று நினைத்துக் கொண்டாள்.

ஏதேதோ நினைவுகளில் மூழ்கியிருந்த நவீன் முல்லையின் பார்வையை உணர்ந்து திரும்பினான். முல்லை சட்டென்று சிரிப்புக்கு மாற முயன்றாள். ஆனால் நினைவுகளின் அழுத்தத்தால் முகம் ஒத்துழைக்க மறுக்க அந்த முயற்சி அரைகுறையாக முடிந்தது. சட்டென்று தன் கண்கள் கலங்குவதை உணர்ந்தவள் மறைத்துக் கொள்வதற்காக விரைந்து பால்கனிக்குச் சென்று கீழே வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். அருகில் நிழலாடியது. நவீன். தெரு இருண்டு கிடந்தது. மின்சாரம் இல்லை போலிருக்கிறது. லாட்ஜ்களைத் தவிர மற்ற இடங்களில் ஒரே ஒரு ட்யூப் லைட் மட்டும் தான் எரிந்து கொண்டிருந்தது. முல்லை திரும்பாமல் தெருவில் இருளைக் கிழித்துச் செல்லும் வாகனங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் வைத்த விழி வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அறையிலிருந்து வந்த வெளிச்சம் சாலையைப் பார்த்தவாறு நின்றிருந்த அவள் மீது ஒருபக்கமாக விழுந்திருந்தது. காதோரம் வளர்ந்திருந்த பூனை முடிகள் அவள் கன்னத்தையும் கழுத்தையும் இன்னும் மென்மையாகக் காட்டின. முல்லை சத்தம் வராமல் மூக்கை உறிஞ்சி கண்களைத் துடைத்துக் கொண்டாள். நவீனுக்கும் இன்ம்புரியாத வேதனை தோன்றியது. அவள் கைகளை தன் கரத்தில் ஏந்தி ஆறுதல் சொல்ல வேண்டுமென்ற அடக்கமுடியாத ஆவல்

தோன்றியது. உள்ளே ஸ்ரீகுமாரும் செந்திலும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுதில்லை. இன்னொருநாள். இன்னொரு சூழலில் . . .

மறுநாள் மதுரையிலும் கூடலூரிலும் கண்ணகி கோவில் சித்திரா பௌர்ணமி விழாவை நடத்தும் பொறுப்பாளர்களின் பேட்டிகளை முடித்துவிட்டு மிகவும் நேரங்கடந்தே அவர்கள் குமுளிக்குப் புறப்பட்டார்கள். உசிலம்பட்டி தேனி கம்பம் கூடலூர் பகுதிகளைப் பார்க்க நவீன்தான் மிகுந்த ஆர்வத்துடனிருந்தான். ஆப்கானிஸ்தானில் இயந்திரத் துப்பாக்கி போல இந்தப் பகுதியில் வீச்சரிவாள் என்ற பிம்பத்தை தமிழ் சினிமாக்கள் ஏற்படுத்தியிருந்தன. அதிமுகவின் உறுதியான ஆதரவாளர்கள் நிறைந்த தேவர் பகுதி என்று வேறு இந்த இடம் பிரபலமாகியிருந்தது. முல்லை பெரியாறு அணை, நியூட்ரினோ திட்டம் இடுக்கி.

பார்த்தால் அசப்பில் சினிமா பேனர்கள் என்று நினைக்கும் விதத்தில் பிரம்மாண்டமான கல்யாண பெண், மாப்பிள்ளை பிளெக்ஸ் பேனர்கள் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பேனரிலும் மாப்பிள்ளை பெண் படத்தைத் தவிர ஏராளமான தலைகள். . . பெயர்கள் . . சாலை ராட்சஸ நெடுசாலையாக இல்லாமல் சுத்தமாக அழகாக இருந்தது. அ.தி.மு.க. கோட்டை என்பதற்கு மாறாக அம்மா சுவரொட்டிகள் படங்களை அதிகம் காணமுடியவில்லை. டெல்டாவில் பார்த்த ஸ்டாலின் சுவரொட்டி, தட்டிகளைவிட அம்மா படங்கள் குறைவாகவே காணப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் முதல்பாதியில் காங்கிரஸுக்கு எதிராக அனைத்து பிற்பட்ட சாதிகளும் ஒன்றிணைந்தன. அப்போது படித்தவர்கள் அதிகமிருந்த பிள்ளைமார், முதலியார், நாயக்கர் போன்ற சாதிகளே தி.மு.க.வில் ஆதிக்கம் செலுத்தின. பின்பு வளர்ச்சி பெற்ற தேவர் போன்ற வேளாண் சாதிகள் ஆட்சியதிகாரத்தில் தங்கள் பங்கைப் பெற புதிதாகத் தோன்றிய அ.தி.மு.க.வை ஆதரிக்கத் தொடங்கின என்று ஒரு முறை ஜோஸப் சொல்லியிருந்தார். எந்த மக்கள் கூட்டமும் கண்மூடித்தனமான பக்தி, சினிமா போன்ற விஷயங்களால் ஒரு அரசியலை தேர்ந்தெடுப்பதில்லை. திட்டவட்டமான புறநிலை எதார்த்தத்தைக் கணக்கில் கொண்டே தங்கள் அரசியலை முடிவு செய்கிறார்கள். அதில் ஒருவேளை நேரடியாகப் பலனடையக் கூடிய வசதிபடைத்தவர்களும்

அறிவுஜீவிகளும் முன்னணியிலிருக்கலாம். இவர்கள் மற்ற மக்களின் கருத்தோட்டத்தைக் கட்டமைக்கலாம். எல்லா இடங்களிலும் சாதி அரசியல் என்பது தங்களுக்கு மேலிருக்கும் சாதிகளிடம் உரிமைகளைப் போராடிப் பெறுவதும், கீழிருக்கும் சாதிகளை மிரட்டி அடக்குவதும் தானா?

நாம் மக்களிடம் சென்ற இடங்களில் எல்லாம் நம்மையும் மக்கள் ஆதரித்தேதான் வந்திருக்கிறார்கள். தான் சந்தித்திருந்த விவசாயிகள் அமைப்புத் தோழர்களை நவீன் நினைத்துக் கொண்டான். உழைத்து உரமேறியவர்கள். நரைத்த தலை மட்டுமே வயதைக் காட்டும். வயது இத்தனை கம்பீரத்தைத் தருமா என்று அவர்களது நிமிர்ந்த நேரான முதுகுகளையும், முழக்கம் போன்ற குரலையும் பார்த்து நவீன் வியந்திருக்கிறான். இன்னொரு முறை கட்சியால் சரியான விதத்தில் மக்களைத் திரட்ட முடியுமா? அவர்களைத் தொட வேண்டிய இடத்தில் சரியாகத் தொட முடியுமா? சூடான காற்று முகத்தைத் தடவிச் சென்றது. சமவெளியை வகிர்ந்து கொண்டு பிறைவட்டமாகத் தெரிந்த மலைகளை நோக்கி சாலை சென்று கொண்டே இருந்தது. உசிலம்பட்டிக்கு அருகில் வறண்டு தெரிந்த நிலங்கள் மலைகளை நெருங்க நெருங்க பசுமை பூசத் தொடங்கின.

முல்லையின் இடத்தைக் கண்ணன் பிடித்துக் கொண்டான். அவனும் ஸ்ரீகுமாரும் ஏதோ தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். முல்லையின் நினைவுகளும் வெளியே தெரிந்த சமவெளிப் பிரதேசத்தைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்தன.

மதுரையிலிருந்து கண்ணகி கோவில் இவ்வளவு தூரத்தில் இருக்கும் என்று அவள் நினைத்திருக்கவில்லை. மீனாட்சிபுரம் குன்றுகளையும், அழகர் மலையையும் வைத்து கண்ணகி கோவிலும் மதுரைக்குப் பக்கத்தில்தான் இருக்கும் என்று என்னியிருந்தாள். ஏறக்குறைய 140 கிலோ மீட்டர் தூரம். பஸ் விரைந்து கொண்டிருந்தாலும் வெயில் பட்டு இடது தோள்பட்டையும், கையும் சூடு பட்டது போல எரிந்தன. தார்சாலை கொதித்துக் கொண்டிருந்தது. ஓரத்தில் பெரும்பாலும் மரங்களே இல்லை. கூடலூரைக் கடக்கும் போது இருள் கவியத் தொடங்கிவிட்டது. பேட்டி முடிந்ததும் கண்ணன் முல்லையிடம் வந்து சாலைக்கு இடதுபுறம்

தெரிந்த ஒரு சிகரத்தைக் கைகாட்டி இதில்தான் கண்ணகி கோவில் இருக்கிறது என்றான். குமுளி செல்லும் மலைப் பாதை நெடுக மலைச் சரிவில் ஆறு ஓடுவதைப் போன்ற சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. பகலில் வரவில்லையே என்று முல்லை வருந்தினாள். நாளை முழுவதும் நமது பயணம் மலை மேல்தானிருக்கும் என்று நவீன் அவளைத் தேற்றினான.

இதமான குளிர்ச்சியோடு குமுளி வந்தது. ஊர் முழுவதும் கலைப்பொருட்கள் விற்கும் கடைகள் நிறைந்திருந்தன. பெரியார் புலிகள் காப்பக வாயிலருகே அவர்களுக்கு அறை கிடைத்தது. முல்லைக்கு ஒதுக்கப்பட்ட சிறிய அறையின் ஒருபக்கச் சுவர் கருமையேறிய மரத்தால் அமைக்கப்பட்டிருதது. கதவு ஜன்னல்களில் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன. அறை சில்லென்று குளிர்ந்திருந்தது. வெளியே கேரள பாணியில் மரத்தால் அமைக்கப்பட்ட பால்கனியோடு மரத்தால் செய்யப்பட்ட பென்ச்சுகள் இணைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து பார்த்தால் புலிகள் காப்பகத்தின் வாயிலும் உள்ளே காடும் தெரிந்தன. கண்ணாடிபோன்ற சிலுசிலுவென்ற காற்று வருடிச் சென்றது. இங்கிருந்து பார்க்க புலிகள் காப்பகம் ஏதோ நகரத்துக்கு அருகிலிருக்கும் பூங்கா போலத்தான் இருந்ததேயொழிய யானைகள் புலிகள் இருக்கும் காடு போலத் தெரியவில்லை. உள்ளே போகப்போக அடர்ந்த காடுகளைப் பார்க்கலாம் என்று கண்ணன் சொல்லியிருந்தான். பக்கத்து பால்கனியில் நவீனும் கண்ணனும் மெல்லிய குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். கட்சி விவகாரங்களாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு முல்லை விளக்கணைத்துவிட்டுப் படுத்தாள். நாள் முழுக்க அலைந்து திரிந்ததற்கு நீட்டிப் படுப்பதுதான் எவ்வளவு சுகமாகவிருக்கிறது!.

எங்கோ சத்தமிடும் பூச்சிகளைத் தவிர எந்த ஓசையுமில்லை. சமணர் குகையிலும் இந்த அமைதி இருந்ததுதான். ஆனால் அங்கே மனதில் கப்பியிருந்த இனம் புரியாத பயம் இங்கே இல்லை. நீண்ட நாட்களாக உணராத குளிரும், பாதுகாப்புணர்ச்சியும் அவளுக்கு மிதப்பதைப் போன்ற உணர்ச்சியை அளித்தன. கம்பளியை இழுத்துப் போர்த்தியபடி ஆவணப்படத்தின் தொடக்க காட்சி எப்படியிருக்க வேண்டும் என்று

கற்பனை செய்ய முயன்றாள்.. . பூம்புகாரில் இதே போன்றதொரு இரவில் கனவில் அல்லது நனவில் வந்த அவள் சொன்னதை முல்லை முழுமையாக ஏற்றுக் கொண்டுவிட்டாள். பயணத்தை இடை நிறுத்தவில்லை. ஆனால் நீ தேடுவது கட்டடங்களையா என்று கேட்ட அவளுக்கு அது தெரியுமா? அவள் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாளா? தன்னால் இன்னொரு முறை அவளைப் பார்க்க முடியுமா? தன் பார்வை கட்டடங்களையும் சிலப்பதிகாரம் கூறும் கதையையும் கடந்து போயிருப்பது அவளுக்குப் பிடிக்குமா? இப்படி நடக்குமென்று தெரியாமலா அவள் அன்று அப்படிச் சொல்லியிருப்பாள்?

காலை சீக்கிரமே எழுந்துவிட்ட முல்லை மற்றவர்களையும் விரட்டிவிரட்டிப் புறப்பட வைத்தாள். ஸ்ரீகுமார் குளித்துக் கொண்டிருக்கும் போதே கண்ணனை ஜீப் ஏற்பாடு செய்ய அனுப்பினாள். அவள் புகைப்பிடிக்க நேரம் கொடுக்கப் போவதில்லை என்று உணர்ந்து கொண்ட நவீனும் கண்ணனோடு ஓடிவிட்டான். சாப்பிட்டு முடித்து எல்லோரும் ஜீப்பில் ஏறி உட்காரும்வரை அவள் நிலைகொள்ளாமல் பறந்து கொண்டேயிருந்தாள்.

ஜீப் காடுகளினூடாகச் சென்று கொண்டிருந்தது. காலைக் குளிர் லேசாக நடுங்க வைத்தது. பளீரென்ற உறுத்தாத வெயிலில் புற்களும் இலைகளும் பச்சைப் பசேலென்று மின்னின. திட்டுத்திட்டாக மிதந்த வெண் மேகங்களுக்கு இடையே அற்புதமான அழகோடு ஆழ்ந்த நீல வானம் தெரிந்தது. மரங்கள் சுவர்போல நெருக்கமாக இல்லாமல் இடைவெளிவிட்டு அமைந்திருந்தன. கீழே பசேலென்ற புல் வளர்ந்திருந்தது. கொஞ்சநேரம் உட்கார்ந்து விட்டுப் போனால் நன்றாகத்தானிருக்கும். ஆனால் கண்ணகி கோவிலின் நினைவு நிற்கவிடாமல் உந்தித் தள்ளியது. குமுளியிலிருந்து கோவில் பதினாறு கிலோமீட்டர் தொலைவிலிருந்தது. மேலே செல்லச் செல்ல காடுகள் பின்வாங்கி புல் மண்டிய குன்றுகள் தென்படத் தொடங்கின. சோலைக் காடுகள் என்று கண்ணன் சொல்லிக் கொண்டு வந்தான். மலையுச்சியில் புற்களும் கீழே மரங்களும் இருப்பதுதான் சோலைக் காடுகளாம். நவீன் இடையிடையே வண்டியை நிறுத்தி படம் பிடித்துக் கொண்டே வந்தான்.

ஜீப் ஓடிக் கொண்டிருக்கும் போதும் ரன்னிங் ஷாட்ஸ் எடுத்துக் கொண்டான். முல்லை எதையும் கவனிக்கும் நிலையிலில்லை. அவள் மனம் முழுவது நிறைந்திருந்தாள் கண்ணகி.

பஸ், ஜீப் பயணமே ஏறக்குறைய ஒருநாள் பிடிக்கிறது. இந்த சின்னப்பெண் எப்படி இவ்வளவு தூரம் நடந்துவந்தாள்? மழையும், வெயிலும், காடும், முள்ளும், அட்டைகளும், மிருகங்களும் நிறைந்த மலைப் பாதையில் எப்படி ஏறினாள்? பதினான்கு நாட்கள் இரவுபகல் பாராது பசி தூக்கம் பாராது நடந்தாள் என்று இளங்கோவடிகள் சொல்கிறார். பதினான்கு நாட்கள் தூங்காமலிருந்திருக்க முடியுமா? எங்காவது விழுந்து கிடந்திருப்பாள். மயக்கம் தெளிந்ததும் திரும்பவும் நடக்கத் தொடங்கியிருப்பாள். மண்மகள் அறிந்திராத அவள் மலர்ப்பாதங்கள் என்னவாகியிருக்கும்? ரத்தம் கசிந்திருக்குமா? எலும்பும் தோலுமாக ஆகியிருப்பாளா? பூம்புகாரில் எழுநிலை மாடத்தில் வாழ்ந்தவள். சாலையோரங்களில் தன்னந்தனியாக மயங்கிக் கிடந்து பின்பு எழுந்து நடக்கும் போது என்ன நினைத்திருப்பாள்? இந்த மலைகளின் மீதுதான் மரணத்தை நோக்கி தள்ளாடி நடந்து சென்றிருப்பாளா? முல்லைக்கு மனது வலித்தது. வெடித்துக் கிளம்ப முயன்ற விம்மலை அடக்கியதில் தொண்டை வலித்தது.

அவள் மனதில் என்ன தோன்றியிருக்கும்? இது அவளைப் பொறுத்தவரை மரணப் பாதை அல்லவா? இந்த அற்புதமான பேரழகு, வாழும் ஆசையை கொஞ்சம்கூடத் தூண்டியிருக்காதா? வழியில் பார்த்த ஒருவர் கூட அவளைக் கொஞ்சம் நிதானப்படுத்தி, தண்ணீர் கொடுத்து வாழத் தூண்டவில்லையா? கேடு கெட்ட நாகரீக மக்கள் மட்டுமல்ல, பழங்குடி மக்களும் ஏன் செய்யவில்லை?. கண்ணகி சாக வேண்டும் என்பது யாருடைய விருப்பம்? கண்ணகியின் விருப்பம் மட்டும்தானா அது?

ஒரு பிரம்மாண்டமான, புல் மண்டிய ஒரு மொட்டை மலை எதிரே தோன்
றியது. அகலமான மண்பாதை அதை வகிர்ந்து கொண்டு வளைந்து சென்றது. மலையில் ஒன்றிரண்டு மரங்கள் கூட இல்லை. புற்கள் பச்சையும் பழுப்புமாகத் தோன்றின. யானையின் முதுகைப் போலத்

தெரிந்த அந்த மலை தொடுவானம் வரை நீண்டு உயர்ந்திருப்பது போல, அதன் முனையில் நின்றால் வானத்தைத் தொட்டுவிடலாம் போலத் தோன்றியது.

அந்தப் பாதையோரம் பாழடைந்து சிதிலமான கோவில் கட்டடங்கள் தென்பட்டன. முன்மண்டபங்கள் எதுவுமில்லாமல் வெறும் கருவறை போலத் தோன்றியதுதான் கண்ணகி கோவில். எதிரே படுமோசமாகச் சிதைந்து போயிருந்த இன்னொரு சிறிய கோபுரம் இருந்தது. அப்புறம் ஒரு மேடை. ஓரங்களில் நீள்சதுரமாகச் செதுக்கப்பட்ட கருங்கற்கள் இறைந்து கிடந்தன. கோபுரங்களின் மேலும் கற்களுக்கு இடையே இருந்த இடைவெளிகளிலும் கத்தை கத்தையாக வளர்ந்திருந்த புற்கள் காய்ந்து மஞ்சளாக மாறியிருந்தன. கோவிலின் பின்புறக் கருங்கல் சுவர் மேலிருந்து கீழ்வரை பிளந்திருந்தது. மலைச் சரிவுக்கு அப்பால் நீல மலைகள் தெரிந்தன. கீழே கம்பம் பள்ளத்தாக்கின் விளைநிலங்கள் பச்சை, பழுப்பு வண்ணங்களில் சதுர சதுரமாகக் காணப்பட்டன.

இங்குதான் தனியாக கண்ணகி வீற்றிருந்தாளாம். ஆரங்கள் அணிந்து, ஒரு காலை மடித்தும், ஒரு காலை கீழே ஊன்றியும் அம்மன் போல உட்கார்ந்திருக்கும் கண்ணகி சிலை திருட்டுப் போய் விட்டதாம். அந்தச் சிலையும் இடுப்பளவுதான் மிஞ்சி இருந்ததாம். இப்போது ஒவ்வொரு சித்திரா பௌர்ணமி விழாவுக்கும் கீழே இருந்து கண்ணகி சிலை கோவிலுக்குக் கொண்டு வரப்படுமாம்.

“இந்தக் கோவிலின் வடிவமைப்பு பனிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அந்தக் காலத்தைச் சேர்ந்த குல சேகர பாண்டியன் கல்வெட்டு ஒன்று இந்தக் கோவிலில் இருக்கிறது. இது கண்ணகி கோவில் அல்ல என்று பேராசிரியர் நாகசாமி ஒரு கட்டுரை எழுத பெரிய பிரச்சினை ஆகிவிட்டது. கோவிந்தராசனார் இந்த விக்கிரகம் செதுக்கப்பட்ட கல் இமயமலையில் இருக்கும் கற்களை ஒத்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி விண்ணுக்குச் சென்றதாகக் கூறப்படும் இடத்தை இந்த இடம் ஒத்திருக்கிறது, எனவே இது செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோவில்தான் என்கிறார். ஆனால் இந்த விவாதம் பற்றி எதுவுமே அறியாத பழங்குடி மக்கள் இது கண்ணகி கோவில்தான் என்று நம்புகிறார்கள்.

பழங்குடி மக்களுக்குத் தங்களுக்கே உரிய தெய்வங்கள் உண்டு. ஆனால் இந்த இடுக்கி மாவட்டத்துப் பழங்குடிகளுக்கும் கண்ணகிக்கும் ஒரு உள்ளார்ந்த பிணைப்பு இருக்கிறது. இதுபற்றி முழுமையான ஆய்வு செய்யப்படவில்லை. இருப்பது எல்லாம் அரைகுறையாகக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள் மீது செய்யப்பட்ட ஊகங்கள்தான்." என்று சாந்தலிங்கன் சொல்லியிருந்தார்.

பழங்குடி மக்கள் இந்த தெய்வத்தை கண்ணகியாக வழிபட்டார்கள் என்றால் இவள் கண்ணகிதான். புகாரின் மீனவர்கள், இந்த இருண்ட வனங்களில் இருக்கும் பழங்குடிகள் . . .

நேரம் போனதே தெரியவில்லை. புறப்படலாம் என்றான் ஜீப் டிரைவர்.

"இன்னும் கொஞ்ச நேரம்" என்றாள் முல்லை. புற்களிலிருந்து கும்மென்று ஏதோ மணம் வீசியது. வானத்தில் கருமேகங்கள் தென்பட்டன. கோடை மழை வரும் வாய்ப்பு இருக்கிறது. மண்பாதை சேறாகிவிடும். ஜீப் டிரைவர் சற்று அவசரப்படுத்தினான். கொஞ்ச நேரம் இந்த மணம். . இந்த இருண்ட வானம் இன்னும் கொஞ்ச நேரம்.

"இன்னும் கொஞ்ச நேரம் என்பது எவ்வளவு நேரம்?" என்று நவீன் சிரித்தபடி கேட்டான்.

இங்கிருக்கும் ஒவ்வொரு புல்லையும், பறவையையும், பாசம் பிடித்துத் தெரியும் கல்லையும் முழுமையாக மனதில் பதித்துக் கொள்ளும் வரை என்று நினைத்துக் கொண்டாள்.

ஜீப்பில் ஏறிக் கொண்டதும் இங்கே பழங்குடி மக்கள் இருந்ததாக சிலப்பதிகாரம் சொல்கிறதே அப்படி ஏதாவது ஊர் பக்கத்தில் இருக்கிறதா என்று கண்ணனிடம் கேட்டாள்.

அவன் உதட்டைப் பிதுக்கி தோள்களைக் குலுக்கிக் கொண்டான். "இருந்திருக்கலாம். ஆனால் வனத்துறைதான் அவர்களை எப்போதும் ஏதாவது காரணம் சொல்லி வெளியேற்றி வருகிறதே? கூடலூருக்கு அருகே

மலை ஏறுமிடத்தில் இருக்கும் பழங்குடி மக்களின் காலனி கூட மலை மேல் இருப்பவர்களை வெளியேற்றிப் புதிதாகக் குடியமர்த்திய இடம்தான்.”

மழை வரும் அறிகுறியினாலோ அல்லது சீக்கிரம் போய் அடுத்த வேலையைப் பார்க்கலாம் என்று நினைத்ததாலோ டிரைவர் வேகத்தை அதிகப்படுத்தினான். வண்டி அநியாயத்துக்கு குலுங்கவும் குதிக்கவும் செய்தது.

முல்லைக்கு அப்போதுதான் நீண்ட நேரமாக ஸ்ரீகுமார் எதுவுமே பேசவில்லை என்பது உறைத்தது. “என்ன சார் பேசவே இல்லை? நீங்க இங்க மொதல்லயே வந்திருக்கீங்களா?’

அவள் சரியாகவே ஊகித்திருந்தாள். ஸ்ரீகுமார் ஆமென்று தலையசைத்தார். “ஒரு நாஸ்டால்ஜியாதான்”

முல்லை சட்டென்று திரும்பி சீட்டின் மீது மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டாள். “சொல்லுங்க சார் ப்ளீஸ். பழங்குடி மக்கள்கிட்ட கண்ணகி வழிபாடு இருக்கா? உங்க ஆய்வு என்ன?”

”ஏய் நிறுத்து” என்ற நவீன் ”வண்டியின் ஆட்டத்தில் முகமே கிடைக்க மாட்டெனென்கிறது’ என்று சொல்லிவிட்டு டிரைவரிடமும் நிறுத்தும் படி கேட்டுக் கொண்டான். அவன் வேண்ட வெறுப்பாக நிறுத்தியவுடன் அந்த பிரம்மாண்டமான யானை முதுகு மலையும் ஊடறுத்துச் செல்லும் பாதையும் தெரியும் வண்ணம் கேமராவை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு ஸ்ரீகுமாரையும், முல்லையையும் அழைத்தான்.

“எனக்கு முதுவர்களை மட்டும்தான் தெரியும். அவங்க கிட்ட கண்ணகி வழிபாடு இருக்கு”

“சொல்லுங்க”

“முதுவர்களை முடுகர்கள்னும் சொல்லுவாங்க. அவங்க திருவாங்கூர், மதுரை, கோயமுத்தூர் மலைகள்ள இருக்காங்க. அவங்க தாங்கள் மதுரையிலிருந்து ஓடி வந்ததா சொல்லிக்கறாங்க. வரும்போது மதுரை

மீனாட்சியை முதுகுல தூக்கிட்டு வந்தாங்களாம். அதனாலதான் தங்களுக்கு முதுவர்ன்னு பேர் வந்துச்சுன்னு சொல்றாங்க" ஸ்ரீகுமார் சிரித்தார்.

"கண்ணகி?"

"கண்ணகிதான் மீனாட்சின்னு முதுவர்கள் சொல்றாங்க."

"மை குட்னஸ்! மதுரை எரிஞ்சப்ப மலை மேல ஓடி வந்தவங்களா இருக்குமா சார்?"

விடிய விடிய ராமாயணம் கேட்டு என்று நவீன் நினைத்துக் கொண்டான்.

"சாத்தியமே இல்லை" என்றார் ஸ்ரீகுமார். "பாண்டிய மன்னர்கள் தெற்கே வந்த காலம் இல்லாட்டி நாயக்கர்கள் போடி நாயக்கனூரைக் கைப்பற்றிய காலத்திலதான் முதுவர்கள் மலைக்கு வந்திருக்கலாம்ன்னு எல்.ஏ.கே ஐயர் –ங்கற ஹிஸ்டாரியன் சொல்றார். இது உண்மையா இருந்தா சிலப்பதிகாரம் நடந்த கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு ரொம்பகாலம் பின்னால தான் இவங்க மலைக்கு வந்திருக்காங்க."

"எனக்கு ஐயரோட பார்வைல மாற்றுக் கருத்து இருக்கு. எல்லா மலைல இருக்கற பழங்குடிகள் கிட்டையும் தாங்கள் கீழ சமவெளிகள்ள இருந்தோம்ங்கற கதை இருக்கு. கோவைல மலைல இருக்கற இருளர்கள்கூட இப்படித்தான் சொல்றாங்க. கோவைலயும் சரி, மதுரையிலயும் சரி அவங்க மலைலயும் இருந்திருக்காங்க. கீழயும் இருந்திருக்காங்க. கீழ இருந்தவங்க தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். சிலர் ஓடி வந்திருக்கலாம். ஆனா எல்லாருமே கீழ இருந்து விரட்டப்பட்டு மேல வந்திருப்பாங்கங்கறது சரியில்லை. அப்புறம் முதுவர்களோட வாழ்க்கை முறை அந்தக் கால மதுரை மக்களோட வாழ்க்கை முறை இல்லை. அது ரொம்ப சுவாரஸ்யமா இருக்கும். முழுக்க முழுக்க பழங்குடி வாழ்க்கை முறை அது. ஒவ்வொரு கிராமத்திலயும் கொஞ்ச வருஷத்துக்கு முன்னாடி வரைக்கும் பத்து வயசுக்கு மேலான பசங்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் தனித்தனியாத் தங்கற எடம் இருக்கும். வயசு வந்தப்புறம் இஷ்டமானவங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்.

விவாகரத்தும் மறுமணமும் உண்டு. இதில எப்படி கண்ணகி?”

‘அப்புறம் ஏன் சார் கண்ணகியை கும்புடறாங்க?”

“எப்பவுமே மலைகளை தங்கள் ஆதிக்கத்துக்குக் கொண்டுவர சமவெளி அரசுகள் முயலும் போது தங்கள் மதத்தையும் தெய்வங்களையும் பரப்புவாங்க. நீலகிரி முழுக்க ரங்கநாதர் முடிகள் இருக்கு. பல பழங்குடி தெய்வங்களை ரங்கநாதருக்கு மனைவியாக்கியிருக்காங்க. அதே மாதிரி கண்ணகியையும் பரப்பியிருக்கலாம்.”

“ஓ. . .”

‘அதே மாதிரி பழங்குடி மக்களோட கண்ணகி வழிபாட்டுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுத்திடக்கூடாது. இவங்க இறந்து போனவங்களோட ஆவிகளையும், காட்டில் உலாவும் ஆவிகளையும்தான் அதிகமாக வணங்கறாங்க. பாண்டிய மன்னனை முதுகுல தூக்கிட்டு வந்ததால தங்களுக்கு முதுவர்னு பேர் வந்ததுன்னும், குழந்தைகளையும் பொருட்களையும் தலைல தூக்காம முதுகுல தூக்கறதுனால முதுவர்ன்னு பேர் வந்ததுன்னும் இவங்ககிட்டயே கதைகள் இருக்கு.”

“ஆனாலும் பழங்குடி மக்கள் தங்களிடம் பரப்பப்பட்ட எல்லாத்தையும் ஏத்துக்கவில்லைதானே? கண்ணகியை மட்டும் ஏன் ஏத்துக்கிட்டாங்க?”

”இவங்க கண்ணகியை மட்டும் வணங்குவதில்லை. விநாயகன், முருகன், மீனாட்சி, கருப்புசாமி, மாரியம்மா –ன்னு நிறைய சமவெளித் தெய்வங்களை ஏத்துக்கிட்டிருக்காங்க.” ஸ்ரீகுமார் சில வினாடிகள் சிந்தித்துவிட்டு. ‘இருந்தாலும் கண்ணகி வழிபாடு கொஞ்சம் வித்தியாசமானதுதான். தமிழ்நாட்டில் கண்ணகி இப்போது தெய்வம் இல்லைதானே. அப்படியிருக்கும் போது மீனாட்சிதான் கண்ணகி என்ற கதை எப்படி வந்திருக்கும்? இதை முல்லைதான் கண்டு பிடிக்கணும்” என்றார்.

கண்டு பிடிக்கத்தான் போகிறேன் என்று முல்லை நினைத்துக் கொண்டாள். மீனவர்கள் கண்ணகியை பாண்டியன் மகள் என்பதற்கும், முதுவர்கள் அவளை மதுரை மீனாட்சி என்பதற்கும் இடையே

அடிநாதமாக ஒரு ஒற்றுமை இழை ஓடத்தான் செய்கிறது. கொடுங்கலூர் போய்விட்டுத் திரும்பி வரும்போது முதுவர் குடியிருப்புப் பகுதிகளுக்குச் சென்று நிதானமாக மக்களிடம் பேச வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானம் செய்து கொண்டாள். எவ்வளவு நாளானாலும் சரி.

குமுளி அருகே வரவர செல்போன் டவர் கிடைக்கத் தொடங்கியது. கண்ணனின் செல்போன் கீச்கீச் சென்று அழைத்துத் தகவல் வந்திருப்பதைச் சொல்லியது. தொடர்பு கொண்ட அவன் முகத்தில் இருள் பரவியது. 'அதெப்படி, சாத்தியமே இல்ல. அவங்க தண்ணியே அடிக்க மாட்டாங்க. அப்புறம் எப்படி போதையில் ரகளை பண்ணுவாங்க?' என்று துண்டு துண்டாகக் காதில் விழுந்தது. ஏதோ சரியில்லை என்பது தெளிவாகப் புரிந்தது.

அவன் செல்பேசியை அணைத்ததும் என்ன என்றான் நவீன்.

கண்ணனின் முகத்தில் சிந்தனை ரேகைகள் இன்னும் அகலவில்லை. "நம்ம தோழர்கள் ரெண்டு பேர் தாராபுரம் தாண்டி கரூர் ரோட்ல இருக்கற ஒரு கிராமத்துக்காரங்க. மதுரைல வேல செய்யறாங்க. லீவுல ஊருக்குப் போயிருக்காங்க. நேத்து ராத்திரி பஸ்ஸைக் கல்லெடுத்து அடிச்சதா காலைல போலீஸ் கைது பண்ணிட்டாங்களாம். பொதுச் சொத்தைச் சேதப் படுத்தியதாக் கேஸ் போட்டு தாராபுரம் கோர்ட்டில் ஆஜர் படுத்தப் போறாங்களாம். அந்த ஊர்ல இருக்கற நம்ம ஆதரவாளர்கள் ரெண்டு மூணு பேரைத் தேடிட்டிருக்காங்களாம். இவங்க எதுக்கு பஸ்ஸைக் கல் எடுத்து அடிக்கணும்? அப்படிச் செய்யற ஆட்களே இல்ல. ஆளுங்க போற பஸ்ஸ எதுக்குக் காரணமே இல்லாம கல்லால அடிக்கறாங்க? ஒண்ணுமே புரியலயே?"

நவீனுக்கும் இந்த விசித்திரமான கைதுகள் ஏனென்று புரியவில்லை. முதலில் சேலம் தோழர். இப்போது இவர்கள். என்ன நடக்கிறது . . .ஏதோ தன்னால் புரிந்து கொள்ள முடியாதது தங்களைச் சுற்றி நடப்பது போலத் தெரிந்தது. "கேஸ் பொய்யா இருக்கலாம், ஆனா இந்த மாதிரி ஏடாகூடமாக நம்மாளுக சிக்கிக்கறது வழக்கம்தான்" என்ற கண்ணனின் சிரிப்பில் கொஞ்சம் கசப்பு இருப்பது போலத் தெரிந்தது. உள்ளே

இருப்பவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை என்றாலும் சொந்தக்காரர்கள் பிய்த்து எடுத்துவிடுவார்கள். தப்பி ஓடியவர்கள் கிடைக்கும் வரை சிறையிலிருப்பவர்களுக்கு ஜாமீன் கிடைக்காது. போலீஸ்காரர்கள் தீவிரவாதி, பயங்கரவாதி என்று ஏதாவது முதல் தகவல் அறிக்கையில் சொல்லித் தொலைத்திருந்தால் தப்பியவர்களுக்கு முன் ஜாமீன் உள்ளூரில் கிடைக்கவே கிடைக்காது. உயர்நீதிமன்றம்தான் போகவேண்டும். . . ஜாமீன் கிடைத்தாலும் ஐந்து பேருக்கு பேருக்கு பத்து ஜாமீன்தாரர்களை ஏற்பாடு செய்ய வேண்டும். சொத்துப் பத்திரங்கள் வேண்டும். நேரம்காலமில்லாமல் கோர்ட்டில் காத்துக் கிடக்க வேண்டும்...

ஏதோ சரியில்லை என்ற எண்ணம் நவீன் மனதைக் குளவி போலக் குடைந்து கொண்டே இருந்தது. தற்செயலாக நன்கொடை வசூலிக்கும் போதோ, சுவரொட்டி ஒட்டும் போதோ உள்ளூர் கட்சிக்காரர்களுடனோ போலீஸ்காரர்களுடனோ மோதல் ஏற்பட்டு சில்லறை வழக்குகளில் தோழர்கள் கைது செய்யப்படுவது உண்டுதான். ஆனால் இந்தக் கைதுகள் ஏதோ திட்டமிட்ட நடவடிக்கை என்ற எண்ணம் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருந்தது.

கேள்விப்பட்ட முல்லை தவித்துப் போனாள். கண்ணன் மதுரைக்கோ தாராபுரத்துக்கோ போகவே கூடாதென்றாள். அவன் சிரித்துக் கொண்டே அவளைச் சமாதானப் படுத்தினான்.

“அங்கே கிராமத்திலும் தாராபுரத்திலும் அமைப்பு இல்லை. அதனால் நான் போய்த்தான் ஆக வேண்டும் தோழர்!”

சிலரைப் போலீஸ் தேடிக்கொண்டிருக்கும் போது, எல்லோருக்கும் தெரிந்த முழுநேர ஊழியனான கண்ணன் நேரடியாகப் போனால் அவனையும் வழக்கில் சேர்க்க வாய்ப்பு இருக்கிறது. அப்படி ஏதாவது நடந்தால் கண்ணன் நிலைமை சிக்கலாகிவிடும். எப்போது முழுநேர ஊழியர்கள் பிடிபட்டாலும் அரசு அவர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலோ, குண்டர் தடைச் சட்டத்திலோ கைது செய்து மாதக்கணக்கில் சிறையில் வைத்திருக்க முயற்சி செய்கிறது. எனவே

அவன் மதுரையிலேயே இருந்து கொண்டு யாராவது வழக்குரைஞரை ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்றுதான் நவீனுக்கும் தோன்றியது. கண்ணனுக்கும் இதெல்லாம் தெரியாமலிராது. ஆனால் சொன்னால் கேட்க மாட்டான். தோழர்கள் கைது என்று தெரிந்த பிறகு உதவிக்குப் போக வேண்டாம் என்றும் சொன்னால் தன்னால் போகாமல் இருக்க முடியுமா என்ன? அதோடு தப்பிச் சென்றவர்களுக்கும் வேறு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கும்!.

குமுளி வந்து சேருவதற்குள் கோடை மழை பிடித்துக் கொண்டது. சில வினாடிகளில் ஜீப்பில் உட்கார்ந்திருந்தவர்கள் தெம்பலாக நனைந்து விட்டனர். மழை கொட்டிக் கொண்டிருக்க கண்ணன் தான் பேருந்து நிலையத்தில் இறங்கிக் கொள்வதாகவும் மற்றவர்களை லாட்ஜில் கொண்டுவிடும்படியும் ஓட்டுநரிடம் சொன்னான்.

காற்று சுழன்று சுழன்று ஜீப்பின் கண்ணாடிகளைத் தாக்கியது. மரங்கள் பேயாட்டம் ஆடின. சுற்றுப் புறங்கள் சட்டென்று இருண்டு போய்விட்டன. பேருந்து நிறுத்தத்தில் ஜீப் நின்றது. காற்று மழையின் வேகம் சற்றும் குறையவில்லை. கண்ணன் கண்களுக்கு மேல் கையை வைத்து மறைத்துக் கொண்டு இறங்கினான்.

“ஜாக்கிரதையாக இருங்க” என்று ஸ்ரீகுமார் எச்சரித்து விடையளித்தார்.

நவீன் அவன் டி ஷர்ட் பாக்கெட்டில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளைச் செருகினான். “எதுக்கு அவனுக்கு பணம் கொடுத்தாய்?” என்று நவீனின் காதருகே முல்லை சீறினாள். பணம் கொடுத்ததன் மூலம் கண்ணனை அவமானப் படுத்திவிட்டது போல அவளுக்குத் தோன்றியது.

“அவன் ஃபுல்டைமர்மா. நாமதானே பாத்துக்கணும்? கட்சியில் எவ்வளவு பணம் கொடுக்கறாங்களோ என்னவோ?” நவீன் கண்ணனின் கையைப் பிடித்தபடி உள்ளே திரும்பிக் கிசுகிசுத்தான்.

“அப்படின்னா நிறையக் கொடுக்க வேண்டியதுதானே?” என்றபடி

பர்ஸ்ஸைத் திறந்தாள்.

“அவன் வாங்க மாட்டான். அவன் என்ன கைடா?” நவீன் இதைச் சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனால் முல்லை கடும் மனத்தாங்கல் கொண்டுவிட்டாள். அவளும் கீழே இறங்க முயன்றாள். ஆனால் உக்கிரமாகத் தாக்கிய மழைத் துளிகள் கண்களைத் திறக்கவே முடியாமல் செய்யவே தலையை திரும்பவும் ஜீப்பினுள் இழுத்துக் கொண்டாள்.

சுழன்றடித்த மழையைப் பற்றிக் கவலையே படாமல் இறங்கி நின்று இந்த சிறிய நாடகத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கண்ணன் தனது வழக்கமான சிரிப்புடன் கையாட்டிவிட்டு ஓடிச் சென்று நகர்ந்து கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் தொற்றிக் கொண்டான். தாரைதாரையாக இறங்கிய மழைத் திரை பஸ்ஸினுள் இருந்த எதையுமே பார்க்கமுடியாமல் செய்துவிட்டது.

இடுக்கி மாவட்டத்தின் தேயிலைத் தோட்டங்கள், காடுகள், பள்ளத்தாக்குகளினூடே பஸ் மேற்கு நோக்கி விரைந்து கொண்டிருந்தது. சாலை ஆழமன பள்ளத்தாக்குகளை ஒட்டிச் சென்றாலும் ஓரத்தில் பாதுகாப்புக்குத் தடுப்புச்சுவரே இல்லை. அறிவிப்புப் பலகைகளயும் காணவில்லை. ஸ்ரீகுமாரும், நவீனும் கேரளத்தின் ஒதுக்குப்புறப் பகுதிகள் குறித்து ஏதோ பேசிக் சிரித்தபடி வந்து கொண்டிருந்தனர். முல்லை ஏதேதோ எண்ணங்களில் ஆழ்ந்தவளாய் மௌனமாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பஸ்ஸின் கண்ணாடி ஜன்னல்களுக்கு வெளியே மலைத் தொடர்கள் முடிவே இல்லாமல் நீண்டு கொண்டிருந்தன. சரிவுக்கு மறுபுறம் தெரிந்த வீடுகள் எங்கோ எட்டாத் தொலைவில் இருப்பது போலிருந்ததைப் பார்க்கும் போது இங்கெல்லாம் எப்படித்தான் குடியிருக்கிறார்களோ என்ற நினைவு வந்து கொண்டே இருந்தது. ஏறத்தாழ இரண்டு மணிநேர மலைப் பயணத்துக்குப் பிறகு பஸ் சமவெளிக்கு வந்து சந்து போன்ற கேரள மாநில நெடுஞ்சாலைகளில் பயணிக்கத் தொடங்கியது. தென்னை மரங்கள் சாலை மீது கவிழ்ந்திருக்கும் இடங்களில் வறண்டு தொங்கிக் கொண்டிருக்கும் தென்னை மட்டைகளும், தேங்காய்களும் மேலே விழுவதைத் தவிர்க்க பஸ் சற்று வேகமெடுத்தும், மற்ற இடங்களில் மெதுவாகவும் போய்க்கொண்டிருந்தது. அந்தக் கோடையிலும் அடிக்கடி வந்த பாலங்களுக்குக் கீழ் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது ஆச்சரியமாகவிருந்தது. பிளாஸ்டிக் குப்பைகளைக் கான முடியவில்லை. ஓரங்களில் அழகான வீடுகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. திரைப் படங்களில் பார்த்திருந்த பழைய கேரள பாணி விலாசமான ஓட்டு வீடுகளுக்குப் பதில் புதிய கான்கிரீட் வீடுகள் மரங்களடர்ந்த தோட்டங்களுக்கு இடையே காணப்பட்டன. ஆனால் ஏறக்குறைய எல்லா வீடுகளிலும் கான்கிரீட் கூரைகளை சாய்வாக அமைத்து அதன் மீது ஓடு பதித்திருந்தார்கள். பெரும்பாலான வீடுகளில் மேல் தளத்துக்கு மேல்

தகரக் கூரை போடப்பட்டிருந்தது. சாலைகளில் வெளிர்மஞ்சள் வேட்டிகட்டியிருந்த பலரைக் காண முடிந்தது.

மதுரையிலும் திருச்சியிலும் பார்க்க முடியாத பிரம்மாண்டமான கட்டடங்களோடு எர்ணாகுளத்தின் புறநகர்ப்பகுதிகள் தோன்றின. நெரிசலில் நெடுஞ்சாலையிலேயே வாகனங்கள் மெதுவாகத்தான் நகர முடிந்தது. இவ்வளவு நவீனமாகத் தோன்றிய பெருநகரத்திற்குள்ளும் பெண்கள் குறைவாகவே வாகனங்களை ஒட்டிச் செல்வது முல்லைக்கு வியப்பளித்தது. அவர்கள் அணிந்திருந்த உடைகளும் மதுரையை நினைவுபடுத்தியது.

முல்லையும் நவீனும் அவரவர் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தனர். முல்லையின் மனச்சோர்வு தீரவேயில்லை. ஸ்ரீகுமார் தான் ஏற்கனவே சொன்னபடி அங்கமாலியில் இறங்கி கொண்டார். கையை வீசியாட்டியவர் பஸ் நகரத் தொடங்கியதும் பாக்கெட்டில் கைவிட்டு சிகரெட்டை எடுத்தபடி அருகில் தெரிந்த ஒரு ஆட்டோவை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

விடைபெறும் போது அவரது கண்கள் பனிக்கும் என்றோ, என் மகள் போல என்பது போன்ற வசனங்கள் பேசப்படும் என்றோ முல்லை நிச்சயம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் மிக இயல்பாக ஒரு இலை உதிர்வதைப்போல, ஜன்னலருகே வந்த ஒரு பறவை காணாமல் போவதைப் போல நடந்த இந்தப் பிரிவு அவளுக்கு வருத்தமளித்தது. தொண்டை அடைத்துக் கொண்டது. நவீனுக்குத் தான் அழுவது தெரியக்கூடாது என்பதற்காக முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இவர்கள் யாரும் ஆழமான நட்பைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் அல்ல என்று நினைத்துக் கொண்டாள். ஆண்கள் தான் நட்பைப் பேணுவார்கள் என்பதும், பெண்கள் எளிதில் மறந்து விடக் கூடியவர்கள் என்பதும் எவ்வளவு பெரிய பொய்?

ஸ்ரீகுமாரோடு சரியான முறையில் விடை பெற்றுக் கொள்ள முடியவில்லை. உணவுக்காக ஒரு ஹோட்டலின் முன் பஸ் நின்றபோது கிடைத்த பத்து நிமிடத்தை அவர்கள் ஏதேதோ பேசி வீணடித்துவிட்டார்கள்.

நவீன் மலையாளிகளுக்கு பழமையை விட முடியாது போலிருக்கிறது என்று ஓடு பதித்த கான்கிரீட் வீடுகளைக் காட்டிச் சொன்னான். ஸ்ரீகுமார் மங்களூர் ஓடுகள் கேரளக்கட்டடக்கலையே கிடையாது என்றார். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு பாதிரியார்கள் ஒரு ஓடு தயாரிக்கும் நிறுவனம் தொடங்கியபோதுதான் கேரளாவில் இந்த ஓடுகள் பிரபலமாகின என்றார். வயல் வரப்புகளில் நடக்கும் போது வேட்டியில் சகதி படக்கூடாது என்பதற்காக மலையாளிகள் வேட்டி துணியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நடப்பார்களாம். அந்தப் பழக்கத்தில் தமிழ்நாடு வந்தாலும் அவர்கள் வேட்டிநுனியைப் பிடித்துக் கொண்டுதான் நடக்கிறார்கள் என்று கிண்டலடித்தார்.

முல்லை கேரள அரிசியோடு போராடிக் கொண்டிருந்தாள். எதிலுமே காரம் இல்லை. ஊறுகாய், பொரியல் எதுவும் உருப்படியாக இல்லை. பஸ் கிளம்புவதற்குள் எவ்வளவு அரிசி என்று எண்ணிவிடுவாயா என்று அவள் சோற்றுக்குள் தேடுவதைப் பார்த்து நவீன் கேட்டான். பத்து நிமிடம் ஓடிவிட்டது. தங்களைப் பற்றி ஸ்ரீகுமார் என்ன நினைக்கிறார், அவரது எழுத்துக்கள் எங்கே கிடைக்கும், சென்னையில் அவரைப் பார்க்கலாமா? முல்லைக்கு ஒரு நூறு கேள்விகள் இருந்தன. ஓரிடத்தில் பஸ் நின்றது. ஸ்ரீகுமார் அவள் தோளைத் தட்டி விமான நிலையம் போக இங்கே இறங்க வேண்டும் என்றார். சிரித்தபடி இருவரிடமும் கை குலுக்கினார். அவள் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியைப் பார்த்து போன் செய்கிறேன், தொடர்பில் இருக்கிறேன் என்றார். அவ்வளவுதான். அதற்குத்தான் நேரம் இருந்தது.

அவர் நவீனிடமும், கண்ணனிடமும் கூட இதே முறையில் தான் விடைபெற்றுக் கொண்டார் என்றாலும் இந்த மூவரையும் இணைக்கும் மையப்புள்ளி தானே என்று அவள் நினைத்து வந்ததால் தன்னிடம் சொல்ல உணர்வு பூர்வமாக அவரிடம் ஏதோ இருக்கும் என்று எதிர்பார்த்திருந்ததாள். அதனால் அவளுக்கு ஸ்ரீகுமார் மீது இனம்புரியாத கோபமும் தோன்றியது.

நவீன் அவ்வப்போது திரும்பி அவளது கலங்கிய முகத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஸ்ரீகுமார் இறங்கிச்

சென்றதும் “பெரிசு லைஃப் ஆஃப் பைல வர்ற புலி மாதிரி இறங்கி போயிருச்சு!” என்று சிரித்தான்.

அவள் பதில்பேசாமல் இருப்பதைப் பார்த்து “நீ மூடு அவுட்டாக இருப்பதற்கு நான் காரணம் இல்லைதானே?” என்றான்.

“நீயும்தான். எல்லோரும்தான்!”
“கண்ணகியுமா?”
“ஆமாம்”
“கடைசியில் முல்லையும் சென்டிமெண்டுக்கு பலியாகிவிட்டாள்”
“கொஞ்சம் அப்படித்தான்”

நவீன் சற்று நேரம் எதுவும் பேசவில்லை. “பயணம் முடிந்துவிட்டது. கொடுங்கலூர் தேவையற்ற நீட்சி போலிருக்கிறது” என்றான். அவன் பேச்சை மாற்ற விரும்புவது போலிருந்தது.

“கொடுங்கலூர் தேவையற்ற நீட்சியா இருக்கலாம். ஆனால் பயணம் முடியவில்லை.” என்றாள் முல்லை.

“எப்படி?”
“அப்படித்தான்”
“கொஞ்சம் விளக்கு முல்லை”
“ஸ்ரீகுமாருக்கும், கண்ணனுக்கும் நமது பதில் என்ன? ஸ்ரீகுமாருக்கு ஒரு பை. கண்ணனுக்கு ஒரு இருநூறு ரூபாய் அவ்வளவு தானா?”
நவீனுக்கு ஏதோ புரிவது போலிருந்தது.”மை குட்னெஸ் இதெல்லாம் நான் பேச வேண்டிய பேச்சு அல்லவா?”
“நீதான் பேசவில்லையே. அல்லது என்னிடம் பேச வேண்டியதில்லை என்று நினைக்கிறாயா?
“உன் பேச்சு ஆர்வத்தைத் தூண்டுது. நான் சண்டைக்கு வரவே மாட்டேன். அரசியல் பேசுவதை விட எனக்குப் பிடித்தது வேறொன்றும் இல்லைதானே?” பேசலாம் முல்லை’
“பேசலாம்....”

சொன்னாளே தவிர அவர்கள் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. நவீன் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். கேரளத்தின் அழகிய வீடுகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. இந்தக் கோடையிலும் வாய்க்கால்களிலும், ஆறுகளிலும் தண்ணீர் இருந்தது. கண்ணனைப் பற்றிய கவலை அவன் மனதை குடைந்து கொண்டே இருந்தது. ஏன் ஒன்றுமே செய்யாத தோழர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மொத்தக் கட்சியுமே தாக்குதலுக்குள்ளாகப் போகிறதா? நவீனுக்குத் தெரிந்த தோழர்களின் முகங்கள் நினைவுக்கு வந்தன. முன்பு கூட ஒரு முறை இப்படி நடந்திருக்கிறது. ஒரு மாநாடு தடை செய்யப்பட்டதும் கைதுகள் தொடங்கி ஜுரவேகத்தில் நடந்து கொண்டே இருந்தன.

..அப்படி ஏதாவது மனித வேட்டை தொடங்கப்போகிறதா? அப்போதாவது ஒரு மாநாடு நடக்க இருந்தது. இப்போது என்ன?. இந்த ஒரு பத்துப் பதினைந்து நாட்களில் நடப்பது எல்லாமே விசித்திரமாக இருக்கிறது.

ஸ்ரீகுமார் கடத்தல். கைதுகள் . . . மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறோம் என்று தோன்றினாலும் அந்த எண்ணம் தீவிரமாக நவீனின் மனதுக்குள் புகுந்து விட்டது. அப்படியும் இருக்கலாமோ? அவன் ஸ்ரீகுமாருக்குப் போன் செய்தான். அவர் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்துவிட்டிருந்தார். “என்ன நவீன் என்ன அதுக்குள. . .’

‘சார் நாமக்கல் பக்கத்தில் நீங்கள் சொன்ன ஜாதிக் கற்கள் கிடைக்குதா?”

“ஆமாம் ஏன் . . . “

“தாராபுரம் கரூர் ரோட்டில்?”

“ வாய்ப்பிருக்கு . . . “

“சரி சார். விரிவா மெய்ல் அனுப்பறேன்” என்று சட்டென்று முடித்துக் கொண்டவனை முல்லை ஆச்சரியத்துடன் பார்த்த்தாள்.

“அவர்கள் செயல்படத் தொடங்கிவிட்டார்கள்”

“யார்?”

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரத்தினக் கற்களுக்காகத்

தமிழ்நாட்டை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தவர்கள்”

முல்லை திகைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நவீனுக்கு என்னவோ ஆகிவிட்டது. அவன் கண்கள் இப்படி காய்ச்சல் கண்டவனைப் போல ஒளிர்வதை அவள் இப்போதுதான் பார்க்கிறாள். அவனுக்கு மூச்சிறைப்பது போலக் கூடத் தோன்றியது. உண்மையில் நவீன் உணர்ச்சிவசப்பட்டிருந்தான். மிகவும் சிரமப்பட்டுத்தான் அவனால் தன்னை நிதானப்படுத்திக் கொள்ள முடிந்தது. முல்லையை பயப்படுத்திவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

“ஜே.கே.டைமண்ட்ஸ் அண்ட் ஜெம்ஸ் நிறுவனத்தை ஒரு பன்னாட்டு நிறுவனம் வாங்கியிருக்கிறது. அது ஜெம்ஸை பிரபலப்படுத்த ஸ்ரீகுமாரைப் பயன்படுத்த முயல்கிறது. அதே நேரம் இதனால் தங்கள் வியாபாரம் பாதிக்கப்படும் என்று நினைப்பவர்கள் ஸ்ரீகுமாரைக் கடத்தினார்கள். நிறுவனம் ஸ்ரீகுமாரை கைவிட்டு விட்டது. அவர்கள் கடத்தியவர்களுடன் சமாதானமாகியிருப்பார்கள். ஆனால் தோழர்கள் கைது செய்யப்படுகின்றனர். நாமக்கல்லிலும், தாராபுரம் அருகிலும் கைது செய்யப்பட்ட மூவருமே ரத்தினக் கற்கள் கிடைக்கும் பகுதியைச் சேர்ந்தவர்கள். என்னை விசாரித்த அதிகாரி இங்கு இருக்கும் ஒரு ரகசியமான தோழரைத் தெரிந்து வைத்திருந்தார். எனவே ஜாதிக்கற்கள் கிடைக்கும் பகுதியில் இருக்கும் அரசியல் உணர்வாளர்களை அவர்கள் அடையாளம் கண்டு வைத்திருக்கிறார்கள். முதலிலேயே மிரட்டிப் பயப்படுத்திவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். இப்படி எல்லா அரசியல் சக்திகளையும் முளையிலேயே கிள்ளி ஒடுக்கிவிட்டால் இந்தப் பகுதி தங்கள் வேட்டை காடாகிவிடும் என்று நினைக்கிறார்கள்”

முல்லை வாயடைத்துப் போனாள். அவளால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. எங்கோ ஏதோ நடக்கிறது என்றாலும் தான் ஒரு விசித்திரமான அரசியல் சுழலில் சிக்கிக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது. ஸ்ரீகுமார் இதில் சம்பந்தப் பட்டிருந்தார். கண்ணனும் நவீனும் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். எனவே தானும் . . .

ஒரு பிரம்மாண்டமான அரசியல் பொருளாதார சதுரங்கம் தன்னைச் சுற்றி நடப்பது அவளுக்குள் இனம்புரியாத பரபரப்பையும் ஆர்வத்தையும் உண்டுபண்ணியது. பத்திரிக்கையாளர்களுக்கேயுரிய நுண்ணுர்வு விழித்துக் கொண்டது போலும்!.

நவீன் ஜோஸப்பை செல்பேசியில் அழைத்தான். பதிலில்லை. ஒரு வினாடி அவனை பீதி ஆட்கொண்டது. வேறு யாரை அழைக்கலாம் என்று யோசிப்பதற்குள் கட்சிக்காரர்களுக்கு மட்டும் என்று அவன் வைத்திருந்த எண்ணுக்கு அழைப்பு வந்தது. ஜோஸப்தான்.

"சொந்தக்காரங்க சும்மா சுத்தி சுத்தி வந்திட்டிருந்தாங்க. ஏன்னு தெரியல. ஏதோ பிரச்சினைன்னு தோணுச்சு. எல்லோரும் ரூம்லிருந்து எஸ் ஆயிட்டோம்." என்றார். சொந்தக்காரர்கள் என்று அவர்கள் போலீஸைக் கிண்டலாகக் குறிப்பிடுவார்கள்.

நவீனுக்கு அவரைக் கட்டித் தழுவ வேண்டும் போலிருந்தது.

"தோழர் நல்ல காரியம் செஞ்சீங்க. . ." என்றவன் எல்லாவற்றையும் ஒரேமூச்சில் கொட்டித் தீர்த்தான். முக்கியமாக கண்ணனை உடனே எச்சரியுங்கள் என்றான். செண்ட்ரல் மானிடரிங் சிஸ்டம் நடைமுறையில் இருக்கிறது. அரசு எழுநூறு கோடி ரூபாய் ஒதுக்கி எல்லா தொலைபேசி உரையாடல்களையும் ப்திவு செய்கிறது. எப்போது தேவைப்பட்டாலும் எடுத்துக் கொள்ளலாம். இதையெல்லாம் செல்லில் பேசுவது சரியல்ல என்றாலும் வேறு வழியில்லை. மறு முனையில் நீண்ட அமைதி நிலவியது. கேட்டதை எல்லாம் ஜீரணிக்க அவருக்கு நேரம் தேவைப்பட்டது போலும்.

"ஓ இதுதான் காரணமா . . . ரொம்ப சரி. முன்பே கண்டு கொண்டது நல்லதுதான். இந்த முறை அவர்களால் நமக்கு அதிர்ச்சியளிக்க முடியாது. அற்புதமான விஷயம். உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் தோழர்" ஜோஸப் நிதானமாகப் பேசினாலும் உணர்ச்சிவசப்பட்டிருப்பதை அவரால் மறைக்க முடியவில்லை.

"கண்ணகிதான் காரணம். அவளுக்கு நன்றி சொல்லுங்கள் " என்றான் நவீன்.

தோழர் மறு முனையில் சிரித்தார். “கண்ணகிக்கு ஆயிரம் கோடி நன்றிகள்”.

தான் உடனே வரவேண்டுமா என்று கேட்டதற்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். என்ன செய்வதென்று சிந்தித்து முடிவு செய்ய அவகாசம் தேவைப்படுகிறது. அதுவரை அவரவர்கள் அங்கங்கே இருப்பதுதான் சரி. எடுத்த வேலையைச் சரியாக முடியுங்கள் என்றார்.

நவீனுக்கு மனம் லேசானது. எல்லோரும் உரிய நேரத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுவிட்டார்கள். அவர்கள் இது போன்ற நிலைமைகளைச் சமாளித்து அனுபவம் வாய்ந்தவர்கள். பார்த்துக் கொள்வார்கள். செல்லை பாக்கெட்டில் வைத்து விட்டுத் திரும்பியவன் முல்லை தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவள் இமைக்கவுமில்லை. சிரிக்கவுமில்லை. அந்த விழிகளில் பயமும் தென்படவில்லை. அவை சீற்றத்தால் சுடர்விட்டன.

‘நீ என்ன செய்யப் போகிறாய்?”

“கொடுங்கலூர் போய்விட்டு சென்னை . . . “

“சென்னை சென்று நீயும் ஓடி ஒளிந்து கொள்ளப் போகிறாயா?”

“அவர்கள் வெறுமனே ஓடி ஒளிந்து கொள்ளப் போவதில்லை”

“அது எனக்குத் தெரியும். அவர்கள் என்ன செய்கிறார்களோ அதைச் செய்யட்டும். நீ என்னோடு வா. நாம் படத்தை முடிக்கலாம்.”

“அதில் சந்தேகமே இல்லை முல்லை. கொடுங்கலூர் வந்துவிட்டுத்தான் . . . .”

‘கொடுங்கலூரோடு படம் முடிகிறது என்று யார் சொன்னது? எந்த சிலம்பைக் கொண்டு, மாணிக்கப் பரல்களைக் கொண்டு, கண்ணகி நீதியை நிலைநாட்டினாளோ அதே மாணிக்கம் இப்போது ஏழை மக்களை என்ன பாடு படுத்துகிறது என்பதைக் காட்ட வேண்டாமா? இந்த பன்னாட்டு நிறுவனங்களின் உண்மை முகங்களைக் காட்ட வேண்டாமா? பல ஆயிரம் மக்கள் வாழ்வை நிலங்களை இழப்பதற்கான சூழல்

இருக்கும் போது, மக்களுக்காகச் செயல்படுபவர்கள் வேட்டையாடப் படும் போது, கண்ணகி உண்மையில் இருந்தாளா இல்லையா என்று ஒரு ஆவணப்படம் எடுப்பதா நமது நோக்கம்?"

நவீன் புல்லரித்துப் போய் அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான். "ஜெய்ப்பூருக்கும், குஜராத்துக்கும், காங்கேயத்துக்கும் போகப் போகிறோமா?" அவனுக்கு அவள் கரத்தை விடத் தோன்றவில்லை. சிறியதாக, நீளவிரல்களுடன் மெத்தென்றிருந்த அந்தக் கரத்தை இருகைகளாலும் பற்றிக் கொண்டு அவள் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இது புது முல்லை. இந்தப் பயணம் முழுவதும் எல்லா முடிவுகளையும் அவளே எடுத்து வந்திருக்கிறாள். நவீன் அழும் குழந்தைக்கு மிட்டாய் வாங்கிக் கொடுக்கும் தோரணையிலேயே அவளைத் தொடர்ந்து வந்திருக்கிறான். இப்போதோ அறிவுபூர்வமாகச் சிந்திப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் அவனை, உணர்வுபூர்வமாகச் செயல்படும் அவள் எளிதாகக் கடந்து சென்று விட்டாள். இதை அவனல்லவா சொல்லியிருக்க வேண்டும்? உண்மையில் செயல்படும் நேரம் வந்த போது சென்னைக்கு ஓடிப்போய் மற்றவர்களோடு சேர்ந்து தன்னைத்தானே வதைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியதே தவிர சாத்தியமான வழிகளில் எதிர்த்துப் போராட வேண்டும் என்று தோன்றவில்லை.

முல்லை சொல்வதுதான் சரி. பன்னாட்டு நிறுவனம் வலுவாகக் காலூன்றும் முன் அது அம்பலப்படுத்தப்பட வேண்டும். ஒரே நேரத்தில் களத்திலும், கருத்தியல் தளத்திலும் போராட்டம் நடைபெற வேண்டும். இந்தப் பயணமும், கைதுகளும் தொடங்குமுன் தான் கட்சியோடு விவாதித்துக் கொண்டிருந்தது, சம்பவங்களின் பின் ஓடாமல் வருவதை முன்பே ஊகித்துணர்ந்து அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதைத்தானே? இப்போது அது போன்ற அவகாசத்தோடு சரியான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தன்னைப் போலீஸ்காரர்கள் தேடி வரவில்லை. அழைப்பு எதுவும் வரவில்லை. ஏதோ மீடியா விவகாரத்தில் இறங்கிவிட்டதாகக் கேள்விப்பட்டிருப்பார்கள். எனவே தான் இப்போது சந்தேக வளையத்திற்கு உள்ளே இல்லை. இதுவும் ஒரு நல்ல

விஷயம்தான். சர்வ வல்லமை வாய்ந்த ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராட அதற்கு ஓரடி முன்னே இருக்க வேண்டும் என்பதை நடை முறையில் செயல்படுத்திக் காட்டலாம்.

நவீனுக்கு முல்லையைப் பார்த்து வியப்படையாமலிருக்க முடியவில்லை. பழம் பெருமை மீது ஆர்வம் கொண்டு பயணத்தைத் தொடங்கியவள் எப்படித் தன்னை வளர்த்துக் கொண்டு விட்டாள்!. நிலங்களை இழக்கும் சாத்தியமுள்ள விவசாயிகளுக்காகவும், சென்னையிலும் புகாரிலும் பார்த்த ஏழை மக்களுக்காகவும், உயிரை விட்டுக் கொண்டிருக்கும் வட மாநிலத் தொழிலாளர்களுக்காகவும் போராட எவ்வளவு இயல்பாகத் தன்னை தயார்படுத்திக் கொண்டுவிட்டாள். கண்ணகி மீது அவள் கொண்டிருந்த பற்றுக்குப் பின்னிருந்த ஆழ்ந்த மனித நேயத்தைப் புரிந்து கொள்ளத் தான்தான் தவறிவிட்டோம் என்று நவீனுக்குத் தோன்றியது. முல்லை மட்டுமல்ல ஸ்ரீகுமார், கடற்கரையில் பார்த்த மீனவர்கள் . . . எல்லோருமே சக தோழர்களாகக் கூடியவர்கள்தான். தேவை கொஞ்சம் திறந்த மனமும், உண்மையும், நேர்மையுமிக்க உரையாடலும் தான்.

“என்ன யோசனை? கம்பட்டுக்கு வர்றததானே?” முல்லை அவன் சிந்தனையைக் கலைத்தாள்.

“எங்கே கூப்பிட்டாலும் பின்னால் வரத் தயார்” என்றான் அவன் சிரிப்புடன்.

“என்ன ஆச்சு? இப்பத்தான் ஏதோ உலகமே இடிஞ்ச மாதிரி சீரியஸ்ஸா இருந்த . . . இப்ப கிண்டல் .. .”

நவீன் திரும்பவும் ஆழ்ந்த பாவத்துக்கு மாறினான். “முல்லை நான் உன்னை எவ்வளவு அட்மையர் பண்றேன்னு தெரியுமா?’ முன் சீட்டில் கைவைத்து அவள் விழிகளுக்குள் உற்று நோக்கினான்.

“போச்சுடா”

“சரி கண்ணகி டாக்குமெண்டரி காங்கேயம் கல்லா மாறுதா?”

“அதெப்படி மாறும்? கண்ணகிதான் மையம். அநீதிக்கெதிரான எல்லாப் போராட்டங்களிலும் அவள் இருக்கத்தான் செய்வாள்.”

அவர்கள் திருச்சூரில் இறங்கிக் கொண்டனர். கொடுங்கலூரில் விழா நடந்து கொண்டிருப்பதால் அறை கிடைக்காமல் போக வாய்ப்பிருக்கிறது என்று ஸ்ரீகுமார் எச்சரித்திருந்தார். விலாசமான நவீனமான எர்ணாகுளத்தைப் போலலாமல் திருச்சூர் இன்னொரு மதுரை போலத்தானிருந்தது. எர்ணாகுளத்தைக் கடந்து வரும் போதே இருவரும் ஒன்றை கவனித்திருந்தார்கள். பெண்கள் குடைபிடித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத்தான் எவ்வளவு நீளக் கூந்தல்!. பெண்கள் பெரும்பாலும் இருசக்கர வாகனங்கள் ஓட்டுவதை காணமுடியவில்லை. முல்லை கேரளா கல்வியில் முதலிடத்தில் இருப்பதால் அது எல்லாத்துறைகளிலும் முன்னேறியிருக்கும் என்று நினைத்திருந்தாள். டெல்லிப் பெண்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம். உடையிலும் பாவனைகளிலும். . . இவர்கள் பெரும்பாலும் சேலையும் சுடிதாரும்தான் அணிந்திருந்தார்கள். . . பெரிதாகக் கத்திப் பேசிச் சிரிக்கவில்லை. . .

இரண்டு அறைகள் எடுத்த போது லாட்ஜ் மேனேஜர் விசித்திரமாகப் பார்த்தான். பத்திரிக்கையாளர்கள் என்றதும் ஏதோ புரிந்து கொண்டது போலத் தோன்றியது.

ஓட்டல் சிப்பந்திகளிடம் நவீன் விழா பற்றி விசாரித்த போது அவர்கள் முகத்தைச் சுழித்தார்கள். நாகரீகமானவர்கள் அங்கே போக மாட்டார்கள். நல்ல களி இருக்கும், எல்லாக் கெட்டவார்த்தையையும் கேட்கலாம் என்று இன்னொருவன் சொன்னான். நவீன் இதை சொன்ன போது முல்லையும் ஆமோதித்துத் தலையாட்டினாள் “ஆமாம் இதைப் பத்தி கொஞ்சம் விசித்திரமான செய்திகள்தான் நெட்ல இருக்கு”

“அந்தக் காலத்திலேயே கோவிலுக்குள்ள தலித்துகளை விடுவாங்களாம். கோவில்ல பிராமணர்கள் இல்லையாம். இங்கே சிவனே முக்கியமான கடவுள். தேவியை கொடுங்கலூர் தேவின்னும், பகவதின்னும், காளின்னும் சொல்றாங்க. காளிதான் கண்ணகியாக

அவதாரம் எடுத்தாள்ன்னு ஒரு கதை இருக்கு. காளி பாண்டியன் மகள், அவ கண்ணகியாகப் பிறந்து தன் கணவன் கோவலனைக் கொன்ன பாண்டியனைப் பழிவாங்கினா. அப்புறம் கன்னியாகுமரி அட்டுக்கல் பகவதி அம்மன் கோவில் இருக்கற எடத்துக்குப் போய் ஓய்வெடுத்துட்டு, இங்கே அதாவது கொடுங்கலூர் வந்தாள். அவளோட கோபத்தைத் தணிப்பதற்காகத்தான் இந்த ஆபாசப் பாட்டுக்கள்னு ஒரு கதை. அப்புறம் தேவர்களை அடிமைப்படுத்திய தாருகன்ங்கற அரக்கனை வெல்ல சிவன் பார்வதியை அனுப்பினார். பார்வதி காளியாகப் போய் தருகனோடு போர்புரிந்து அவனைக் கொல்றா. போரில் காளி காயமடைந்து கடும் கோபத்தோட இருந்ததால அவளை அமைதிப் படுத்த பக்தர்கள் இப்படிப் பாட்டுப் பாடுறாங்கன்னும் ஒரு கதை சொல்றாங்க.

மலையாள கும்பா மாதத்தில் பரணி தினத்தில் இருந்து மீன மாதத்தில் பூயம் தினம் வரை இந்த விழா நடக்குமாம். விழா ரேவதி, அசுவதி, பரணி தினங்களில் உச்சகட்டத்தை அடையுமாம். பரணியின் போது காவு தீண்டல் நிகழ்ச்சி நடக்கும். அப்போ வெளிச்சப்பாடுகள்ன்னு சொல்லப்படற பக்தர்கள் பாட்டுக்கள் பாடுவாங்க. இதைத்தான் ஆபாசப்பாட்டு என்கிறார்கள். அதோட விழா முடிஞ்சுடும். பின்பு ஒரு வாரம் கோவில மூடிட்டு சுத்தப்படுத்திட்டு திறப்பாங்க. இந்த விழால பங்கெடுத்துட்டு ஆடிபாடுறவங்க பாலக்காடு, திரிச்சூர், வயநாட்டைச் சேர்ந்த தலித்துகள். இந்த விழாவை நிறுத்த வைதீக நாகரீக மலையாளிகள் ரொம்ப கஷ்டப்படறாங்களாம்.”

“ஆமாம். ஓட்டல்ல வேலை செய்யற நாயர், மேனன்களுக்கு இதைப் பிடிக்கல” என்றான் நவீன். அவர்கள் இருவரும் இரவு நெடுநேரம் வரை இணையத்தில் தேடியும் அவர்களால் இதற்கு மேல் பூரம் பாட்டு தொடர்பாக ஒரு விவரத்தையும் கண்டு பிடிக்க முடியவில்லை. காலையில் நேராகப் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள். காவு தீண்டல் மாலை சுமார் நான்கு மணிக்குத் தொடங்கும் என்று கேள்விப்பட்டதால் அவசரமில்லாமல் நிதானமாகக் கிளம்பினர்.

பஸ் திரிச்சூரைக் கடந்து கொஞ்சம் தூரம் போனதும் வயல்களோரம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக சுமார்

முப்பது பேர் கொண்ட செவ்வாடை அணிந்த ஒரு கூட்டம் பஸ்ஸில் ஏறியது. அவர்களில் இளைஞர்கள் இருந்தாலும் இளம் பெண்களைக் காண முடியவில்லை. கண்டக்டர் இதை விரும்பவில்லை போலத் தெரிந்தது. அவன் நடவடிக்கைகளில் ஒரு சிடுசிடுப்பு தொற்றிக் கொண்டது. அவர்கள் நீளநீளமாக ஏதோ ஒன்றை மஞ்சள் துணியில் சுற்றி வைத்திருந்தனர். ஆண்கள் பெரும்பாலும் போதையிலிருந்தனர். ஆனாலும் வழக்கமான குடிகாரர்கள் போலில்லாமல் ஏதோ மோன நிலையிலிருப்பது போலிருந்தனர். அவர்கள் கண்கள் எங்கோ நிலைகுத்தியிருந்தன. பெண்கள் உழைத்து உரமேறி இறுகிப் போனவர்களாகத் தெரிந்தனர். அவர்கள் குடித்திருக்க வில்லை. ஆனால் ஆண்களைப் போலவே அவர்களும் ஏதோ கனவுலகில் சஞ்சரிப்பவர்கள் போல நடுங்கிக் கொண்டுமிருந்தனர். உதடுகள் சந்தத்தோடு எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

பஸ்ஸில் இருந்தவர்கள் கிசுகிசுப்பாகப் பேசிக்கொண்டனர். வெளிச்சப்பாடுகள், காவுதீண்டலுக்குப் போகுன்னு என்பது மட்டும் புரிந்தது.

அவர்கள் கொடுங்கலூர் வந்து சேர்ந்தபோது வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. பஸ்ஸைவிட்டு இறங்கிய இரண்டு மூன்று நிமிடங்களில் வேர்த்து வழியத் தொடங்கியது. சுற்றிலும் வந்து நின்ற பேருந்துகளிலிருந்தும், மற்ற வாகனங்களிலிருந்தும் வெளிச்சப்பாடுகள் இறங்கி நடந்து கொண்டிருந்தனர். அப்போதுதான் அவர்கள் விசித்திரமாக உடையணிந்திருப்பதை முல்லையும், நவீனும் நன்றாகப் பார்த்தார்கள். ஆண்கள் செவ்வாடைகளைச் சேலைபோலக் கட்டியிருந்தார்கள். பலர் நீளமுடி வளர்த்திருந்தார்கள். அது கலைந்து கிடந்தது. ஆண்களும் பெண்களும் பூ மாலைகளும், பலவிதமான நகைகளும், ஆரங்களும் அணிந்திருந்தனர். ரவிக்கை மட்டும் அணிந்து மாலைகளும், கழுத்தணிகளும் பூண்டிருந்த ஓரிரு திருநங்கைகளையும் காண முடிந்தது.

எல்லோர் கண்களும் சொல்லி வைத்தது போல இலக்கில்லாமல் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. வழக்கமாக கண்களில் தெரியும் படபடப்பையும், அலைபாய்தலையும் காணவே முடியவில்லை. நடக்க

நடக்க அவர்கள் மஞ்சள் நிறத்திலும், நீலநிறத்திலுமிருந்த துணி உறைகளைப் பிரித்து அதிலிருந்த மணிகள் கோர்க்கப்பட்ட கொடுவாள்களையும், கம்பிகளையும் கையில் ஏந்தி கொண்டனர். அந்த வாட்கள் வித்தியாசமாக இருந்தன. கைப்பிடி மிக மிக நீளமாக இருக்க வளைவுப்பகுதி சிறியதாக அரை வட்டமாக இருந்தது. அந்த வாளைக் கையில் பிடித்து உயர்த்தியதுமே சிலருக்கு சாமி வந்தது. சற்றுத் தொலைவில் கோவிலின் செம்பாலான நீண்ட கூரைகள் கண்ணுக்குத் தெரிந்ததும் கட்டை குட்டையாக இருந்த ஒரு பெண் உடலதிர ஏதோ உரத்த குரலில் பாடத்தொடங்கினார். சுற்றிலுமிருந்தவர்களும் பாடத் தொடங்கினர்.

கொடுங்கலூர் பகவதிக்கு

கொடிக்கம்பம் போலொரு கம்பம் வேணும் . . .

அதிரும் உடல்களும், காற்றில் உயர்ந்த வாட்களும், செவ்வாடைகளும் வெயிலும், மின்சாரம் பாய்ச்சியது போன்ற உணர்வை ஏற்படுத்தின. அவர்கள் கால்களில் கனமான சலங்கைகள் அணிந்திருந்தனர். இடுப்பைச்சுற்றி மணிகள் கோர்த்த கயிறுகளைக் கட்டியிருந்தனர். தாளலயத்திலான உச்சஸ்தாயிலான பாட்டும் சலங்கையொலியும், எங்கிருந்தோ வந்த காதை கிழிக்கும் ஜண்டையும் சுற்றுப் புறத்தையே மறக்கச் செய்தன.

எவ்வளவு தூரம் இந்த ஊர்வலம் நடந்தது என்பதை மெய்மறந்து தொடர்ந்து கொண்டிருந்த நவீனும் முல்லையும் உணரவில்லை. வெள்ளையாக உயரமாக இருந்த ஒரு போலீஸ்காரன் வெளிச்சப்பாடுகளை தடுத்து நிறுத்திய போதுதான் இருவரும் சுயநினைவுக்கு வந்தனர். போலீஸ்காரர் வெளிச்சப்பாடுகளை விரல் நீட்டி மிரட்டிக் கொண்டிருந்தான். கோவிலுக்கு வெளியே பாடக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தான் போலிருக்கிறது. வெளிச்சப்பாடுகளால் திடீரென்று சுயநினைவுக்கு வர முடியவில்லை. அவர்கள் திகைத்து தடுமாறி நின்றனர். போலீஸ்காரன் அவர்களைச் சாலையோரம் உட்காரச் சொன்னான்.

நவீன் முன்னே சென்று அவரிடம் ஏன் இவர்களைத் தடுக்கிறீர்கள் என்று ஆங்கிலத்தில் கேட்டான். முல்லைக்கு உண்மையில் போலீஸ்காரனின் முகத்தையும் விழிகளையும் பார்த்தால்தான் குடிகாரன் போலவும், அச்சமூட்டுபவன் போலவும் தோன்றியது. போலீஸ்காரன் தட்டுத் தடுமாறி ஆங்கிலத்தில் பேசினான். "சிங்கிங் பேட் சாங்க்ஸ். லேடிஸ், சில்ட்ரென் இருக்குன்னு . . ." அதற்குள் ஜிப்பா அணிந்திருந்த இன்னொரு பத்திரிக்கையாளரும் வந்து விட்டார். "எல்லாக் கோவில்லயும் ஆபாசப் படம்தான இருக்கு. எல்லாப் பாட்டும் ஆபாசப்பாட்டுதானே இவர்களை மட்டும் ஏன் தடுக்கிறீர்கள்?" என்றார். அவர் மலையாளத்தில் பேசினாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

வெளிச்சப்பாடுகள் திரும்பவும் பாடத் தொடங்கினர். இந்த முறை பாட்டில் போலீஸ்காரே போலீஸ்காரே என்ற சொல் அடிக்கடி கேட்டது. தாங்களே இட்டுக் கட்டிப் பாடுகிறார்கள் போலிருக்கிறது. தெருவில் சென்றவர்கள் சிரித்தனர். மேலும் பல வெளிச்சப்பாடுகள் சேர்ந்து கொண்டனர். பாட்டில் தெரிந்த சந்தத்தையும், தாள லயத்தையும் கேட்டு முல்லை வியந்து போனாள். போலீஸ்காரன் மற்ற காவலர்களை அழைக்கலாமா என்று யோசித்தான். ஏற்கெனவே அதிக வேலையால் நொந்து போயிருக்கும் அவர்களுக்கு இது இன்னும் சுமையாகத்தானிருக்கும். பிரச்சினை ஆகாத வரையில் மிரட்டி அனுப்பிவிடலாம். இதோ கோவில் அருகில்தானிருக்கிறது என்று முடிவு செய்தான். இனிமேல் பாடக்கூடாது என்று மிரட்டி வெளிச்சப்பாடுகளை அனுப்பிவிட்டு, முண்டு உடுத்தி அடக்கமே உருவாக நடந்து வந்து கொண்டிருந்த பெண்களை இந்தப் பக்கம் போக வேண்டாம், வெளிச்சப்பாடுகள் அசிங்கமாகப் பாடுகிறார்கள் என்று திசைமாற்றி விடத் தொடங்கினான். "நல்லது. இதைச் செய். உங்கள் ஆட்களை இங்கே வராமல் பார்த்துக் கொள்" என்றார் உடன் வந்த பத்திரிக்கையாளர். "இந்தப் போலீஸ்காரன் பரவாயில்லை. வேறு இடங்களில் கைது செய்கிறார்கள்" என்றார்.

வெளிச்சப்பாடுகள் நகரத் தொடங்கியதும் நவீன் " ஏன் இப்படி" என்று அவரிடம் கேட்டான். "ஆபாசப் பாட்டுப் பாடி தெருவில் சுற்றக்

கூடாது என்று கொடுங்கலூர் தொடர்பாக ஒரு சுப்ரீம் கோர்ட் உத்தரவு இருக்கிறது. அதை அரசு கோவிலுக்கு வெளியே உறுதியாகச் செயல்படுத்திவருகிறது. ஏறக்குறைய கோவிலுக்கு வெளியே மக்கள் பாடுவதை நிறுத்திவிட்டார்கள். இங்கே வருபவர்கள் பெரும்பாலும் சமூகத்தில் கீழ் நிலையில் உள்ள மக்கள். தலித்துகள் மட்டுமல்ல வேறு பல விவசாயக் கூலிகளும், ஈழவரும் இருக்கிறார்கள். சுவாமி பூமணாணந்தா என்பவரும், இந்து நவோதன் ப்ரதிஸ்தன் என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்களும் இந்த வழிபாடு முறையை நிறுத்த முயற்சித்து வருகின்றனர். மேல் சாதிகளைச் சேர்ந்தவர்கள் இந்த பூரப்பட்டு, தெரிப்பாட்டு, காவுத்தீண்டல் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை. பகுத்தறிவு வாதிகளும் இது மூடநம்பிக்கையின் உச்சம் என்று கூறி வருகின்றனர். ஆனால் இப்போது இந்த விழா தலித் அடையாளமாக சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் முன்னிறுத்தப்படுகிறது. எதுவாக இருந்தாலும் இது இந்தக் கோவிலின் தனி அடையாளம் அல்லவா? இந்தப் பாரம்பரியத்தில் பழங்கால வாழ்க்கை முறை போன்ற எத்தனையோ விஷயங்கள் இருக்கலாம். இதை முற்றிலுமாகத் தடை செய்து எல்லாவற்றையும் ஒன்று போலவே ஆக்கிவிடுவது என்ன நியாயம்?"

முல்லையும் பேச்சில் கலந்துகொண்டாள். "இந்தக் கோவில் பற்றி ஆர்க்கியாலஜிகல் விவரங்கள் எதுவுமே கிடைக்க மாட்டெனென்கிறது. இது சேரன் செங்குட்டுவனால் கண்ணகி நினைவாகக் கட்டப்பட்டது என்று மட்டுமே சொல்கிறார்கள். இந்த விழாவுக்குப் பின்னுள்ள தத்துவம், அரசியல் பற்றி எதுவுமே கண்டுபிடிக்க முடியவில்லை"

பத்திரிக்கையாளரும் தலையசைத்தார். "ஆமாம் இந்தக் கோவில் சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்டது. இந்த விழா ஏன் என்று தெரியவில்லை. பிராமணர் வருகைக்கு முந்தைய தலித் கோவிலாக இருக்கலாம்."

"ஏதாவது பழங்குடி மக்களின் கோவிலாக இருந்திருக்கலாம். அந்தப் பழங்குடியினம் அடிமைப்படுத்தப்பட்டு தலித்துகளாக மாற்றப்பட்டதும் இந்த சடங்குகள் மட்டும் நிறுத்தப்படாமல் தொடரப்பட்டிருக்கலாம். ஏதாவது காரணத்தால் ஆட்சியாளர்களும், ஆதிக்க சாதியினரும் இதை

நிறுத்துமளவிற்கு பலமானவர்களாக இல்லாமலிருந்திருக்கக் கூடும்." என்றான் நவீன்.

"இத்தனை ஆண்டுகளில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக கோவிலின் தன்மையையே மாற்றி வருகின்றனர். இது கண்ணகிக்கு எடுக்கப்பட்ட கோவில் என்று சொல்வதை அவர்கள் விரும்பவில்லை. நவராத்திரியின் போது தேவியின் பெயர் சரஸ்வதி, தலப்பலி விழாவின் போது மகாலட்சுமி, மீனாபரணி விழாவின் போது துர்கா மற்ற நேரங்களில் கொடுங்கலூர் அம்மா. . . ஆனால் இது கண்ணகி கோவில் என்பதை மறக்கடிக்க இவர்களால் முடியவில்லை. அது தொடர்ந்து கொண்டேதான் வருகிறது."

"நீங்கள் நம்புகிறீர்களா?" நவீனுக்கு அவர் நம்புவார் என்றே தோன்றியது.
"நம்பாமல் . . . தேவியின் கையில் சிலம்பு இருக்கிறதே... "

"தமிழகத்திலும், இந்தியா முழுவதிலும் இப்படித்தான். தாய்த் தெய்வங்களை சிவன், விஷ்ணுவுக்கு மனைவியாக்கும் வழக்கம், ஆடு மாடு பலி கொடுப்பது உள்ளிட்ட பழைய சடங்குகளை நிறுத்தி பார்ப்பனிய மயமாக்கும் வழக்கம்....எல்லாம் தமிழ்நாட்டிலும் இருக்கிறது" என்றான் நவீன்.

"இங்கேயும் கேரளாவின் ஏழு பெண் தெய்வங்களில் ஒன்றான சாமுண்டி இருக்கிறது. வழக்கமாக கோவிலில் காணப்படும் கொடிமரம், நந்தி, துவாரபாலகர் இங்கே இல்லை"

ஸ்ரீகுமார் வேறு ஒரு விளக்கம் சொல்லியிருந்தது முல்லை நினைவுக்கு வந்தது. இது ஒரு பௌத்தக் கோவிலாக இருந்திருக்கும். புத்த பிட்சுகளையும் பிட்சுணிகளையும் ஆபாசமாகப் பாடி அடித்து விரட்டியதைத்தான் திரும்பத் திரும்ப நிகழ்த்திக் காட்டுகிறார்கள். அதுதான் இந்த தெரிப்பாட்டு என்றார் அவர். முல்லைக்கு முதல்முதலாக ஸ்ரீகுமார் கருத்தோடு உடன்பாடு ஏற்படவில்லை. இவர்களைப் பார்த்தால் வெற்றி விழா கொண்டாடுபவர்களாகத் தோன்றவில்லை. சாந்தலிங்கன் இது செழுமைத் திருவிழாவாக இருக்கலாம் என்று சொல்லியிருந்தார். அது

சரியாக இருக்கும் என்று தோன்றியது. பழங்குடி மக்கள் ஆண்களும் பெண்களும் ஒன்று கூடும் திருவிழா செழுமைத் திருவிழா. அது இனப்பெருக்கம் தொடர்புடையது. நன்கு விளைச்சல் கிடைக்க, கால்நடைகள் பெருக வயல்களில் குறிப்பிட்ட காலங்களில் கலவி நிகழ்த்துவார்கள். அது பின்பு பல கோவில்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. அதன் மிச்ச மீதமாக இருக்கலாம். இதில் கண்ணகி எங்கே வந்தாள்? அவளது பாத்திரம் என்ன? ஏன் இந்த மக்கள் அவளை மறக்காமல் நினைவு வைத்திருக்கிறார்கள்?

இதற்குள் அவர்கள் கோவிலை நெருங்கிவிட்டனர். கொடுங்கலூர் பகவதியம்மன் கோவில் அவர்கள் நினைத்ததை விட பிரம்மாண்டமாக இருந்தது. பிரம்மாண்டமான பிரகாரத்திற்கு நடுவே ஓட்டுக்கூரை போடப்பட்ட கட்டடம் தெரிந்தது. கூரை செம்புத்தகடுகளால் வேயப்பட்டிருந்தது. வெளியிலிருந்து உள்ளே செல்லும் வழியில் பெரும் மண்டபம் இருந்தது. கோவிலைச் சுற்றி பரந்துவிரிந்த ஒரு மைதானமிருந்தது. ஓட்டுக்கூரையும், குத்துவிளக்குகளும் பழமையையும், ஸ்பீக்கர்கள் புதுமையையும் ஒருங்கே பரப்பிக் கொண்டிருந்தன. கோவில் வளாகத்தில் எல்லா இடங்களிலும் கடல் போல வெளிச்சப்பாடுகள் குவிந்திருந்தனர். வெக்கை தாங்காமல் பலர் சட்டைகளை கழற்றி விட்டிருந்தனர். யாரும் ஓரிடத்தில் நிற்கவில்லை. அருவாட்களிலும், கைகளிலும் கால்களிலும் இருந்த சலங்கைகளும், ஜண்டையும் காதைப் பிளக்கும் வண்ணம் ஒலிக்க லேசாக ஆடியபடியே அசைந்து கொண்டிருந்தார்கள். சாதாரண உடையிலிருந்த பல பக்தர்களும் அங்கே நடமாடிக் கொண்டிருந்தனர். டெல்லியிலும், சென்னையிலும் முல்லை பார்த்திருந்த மலையாளிகளைப் போல் இவர்கள் வெள்ளை வெளேரென்றோ, சந்தன நிறத்திலோ இல்லை. பெரும்பாலானவர்கள் கருப்பாகவும், மாநிறமாகவும் இருந்தார்கள். உழைத்து உரமேறிய உடல்கள் வியர்வையில் மினுமினுக்க ஈட்டி மரத்தைப் போலிருந்தார்கள்.

இங்கே ஒலித்த பாடல் சற்று வேறுவிதமாக இருந்ததை சற்று நேரம் கழித்தே முல்லையும் நவீனும் உணர்ந்தனர். இயல்பாக மக்களின்

அடிமனதிலிருந்து பொங்கி வந்த பாட்டுபோல இல்லாமல் வளர்ச்சியடைந்த மெட்டாகத் தோன்றியது. அதன் பின்னணி இசையும் பல நிபுணர்கள் சேர்ந்து உருவாக்கியது போலிருந்தது. “இது தெரிப்பாட்டு அல்ல. காலாபவன் மணி பாடிய பாட்டு. ” என்றார் புது நண்பர்.

கோவிலின் கூரையைப் பார்த்தால் கொஞ்சம்கூட பழமை தெரியவில்லை. சுவர்களும் நேர்த்தியாக புதிதாகத் தோன்றின. பூம்புகாரின் பழம் கட்டுமானங்களைப் பார்த்தவர்களுக்கு இதுவும் அந்தக் காலத்தைச் சேர்ந்தது என்று நம்பவே முடியவில்லை. சேரன் செங்குட்டுவன் இதைக் கட்டியிருக்க வாய்ப்பே இல்லை என்று தோன்றியது. ஒருவேளை செங்குட்டுவன் கட்டி பின்னால் வளர்த்தெடுக்கப் பட்டிருக்கவேண்டும். தமிழ் நாடாக இருந்திருந்தால் தொல் பொருள் ஆய்வுத் துறை நிபுணர்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் பெரிய சண்டை நடந்திருக்கும். ஒவ்வொரு தூணையும் ஆய்வு செய்து அது எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பது குறித்து இரண்டு மூன்று ஆய்வுகள் வந்திருக்கும். இங்கே இணையத்தில் எல்லாப் பதிவுகளும் கோவில் சேரன் செங்குட்டுவன் கட்டியது என்றே வந்தது. விக்கிபீடியா மட்டும் இது புத்த மடாலயமாக இருந்திருக்கலாம் என்றது. ஒருவேளை மலையாளத்தில் படித்தால் அதெல்லாம் இருக்குமோ என்னமோ? என்னவாக இருந்தாலும் இது உழைக்கும் மக்களின் கோவிலாக, தலித்துகளின் கோவிலாக இருக்கிறது.

பிளெக்ஸ் போர்டில் இருந்த அம்மன் உருவம் பல கரங்களுடன் சிவந்த நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு உக்கிர தேவதையாக நின்றிருந்தது. ஒவ்வொரு கையும் ஒவ்வொரு ஆயுதத்தை ஏந்தியிருக்க ஒரு கையில் மட்டும் சிலம்பு இருந்தது.

மாரியம்மன், காளி சிலைபோல் அலங்காரங்களுடன் காணப்பட்ட அந்த உருவம் அன்னியமாகத் தெரிந்தது. இத்தனை நாட்களாக பிரியாமல் கூட வந்து கொண்டிருந்த இளங்கோவடிகளின் கண்ணகி பிம்பமாக அது இல்லை. பழிவாங்கும் உக்கிர காளி. அவள் பாதம் மண்ணில் படாதவளா? வாய் பேசாதவளா? மதுரையை எரிப்பதற்கு முன் அவள் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். மக்களுக்குத் தேவை

பழிக்குப் பழிவாங்கும், சிம்மாசனங்களைச் சாய்க்கும் இந்த வடிவம் தான் போலிருக்கிறது என்று முல்லை நினைத்துக் கொண்டாள்....

கோவிலைச் சுற்றி இரண்டு மூன்று கால்பந்து மைதானங்கள் அளவுக்கு காலியிடம் இருந்தது. அதில் வளர்ந்திருந்த மிகப்பெரிய மரங்களைச் சுற்றி மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. நவீனும் முல்லையும் நின்றிருந்த இடத்துக்கு அருகிலிருந்த மேடை மீது பளிச்சிடும் கத்திரிப்பூ நிறத்தில் வேட்டிகளும், சிவப்பு மேலாடைகளும் அணிந்திருந்த சில வெளிச்சப்பாடுகள் சாமியாடிக் கொண்டிருந்தனர். ஒல்லியாகக் குள்ளமாக இருந்த ஒரு பெண் குனிந்து கையிலிருந்த வாளைத் தரையைக் கொத்துவது போல ஊன்றியநிலையில் அசையாமலிருந்தாள். முல்லை அனிச்சையாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். வாளின் கூர்முனை நிலத்தில் பதிந்தும் பின்புறம் அந்தப் பெண்ணின் முகத்தை நோக்கியும் இருந்தது. அவள் தரையில் வாளை வைத்து ஏதோ கோடு கிழிக்கப்போகிறாள் போலிருக்கிறது என்று முல்லை நினைத்தாள். அந்தப் பெண் சட்டென்று நிமிர்ந்து வாளின் பின்புறத்தால் நெற்றியில் மோதிக் கொண்டாள். குச்சி முறிவது போன்ற வறண்ட ஒரு ஒலி கேட்டது. மளமளவென்று அவள் முகத்தில் ரத்தம் வழியத் தொடங்கியது. அவள் திரும்பவும் வாளால் நெற்றியில் மோதினாள். முல்லைக்கு சர்வாங்கமும் நடுங்கியது. அந்த இடத்தைவிட்டு நகர முடியவில்லை. அருகிலிருந்த ஒரு நரைத்த தாடிக்காரர் அலட்சியமாக நடந்து வந்து எதுவுமே நடக்காதது போல மஞ்சளையும், குங்குமத்தையும் அவள் நெற்றியில் அள்ளிப் பூசினார்.

வேறு சிலரும் அதே போல படார் படாரென்று வாளால் நெற்றியில் அடித்துக் கொண்டனர். நெற்றியிலிருந்து வழிந்த ரத்தம் மஞ்சள் குங்குமத்தோடு கலந்து திட்டுத் திட்டாக ஒழுகியது.

சட்டை அணியாத சிலர் கூட்டமாக முள் முள்ளாகச் செதுக்கப்பட்ட வெள்ளை நிறக் கோல்களை தாளலயத்துடன் அடித்து ஆடிக் கொண்டிருந்தனர். கோவில் கூரையின் மீது வீசப்பட்டிருந்த கோழி ஒன்று நடந்து தென்னையோலைப் பந்தல் மீது வந்துவிட்டது. பல பக்தர்கள் பந்தலுக்குப் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளைத் தாவிப் பற்றி ஏறி

ஓலைகளைப் பிய்த்து கோழியை விரட்ட முயன்றனர். கனம் தாங்காமல் கம்பி வளைந்தது. அது இப்போது உடைந்துவிடும், கிழே விழுந்துவிடும் என்று தோன்றியது. . .

பிரகாரத்தின் ஒரு ஓரத்தில் பெரும் கூச்சல் எழுந்தது. விழாவை துவக்கி வைக்க வேண்டிய மன்னர் உடல்நிலை சரியில்லாததால் வரவில்லை. அவர் வந்ததாகக் கருதப்பட்டு சிவப்பு குடை விரிக்கப்பட்டது. அந்த கணத்தில் ஏற்கெனவே இருந்த இரைச்சல் பலமடங்கு அதிகமாகி உடலை அதிரச் செய்தது.

ஏற்கெனவே சாமியாடிக்கொண்டும், பாடிக்கொண்டும், உடல் நடுங்கிக் கொண்டும் இருந்த வெளிச்சப்பாடுகள் வெறி கொண்டு கோவிலைச் சுற்றி ஓடத் தொடங்கினர். மணிகள் சலசலக்கும் வாட்களைக் காற்றில் வீசினர். உக்கிரமான வேகத்துடன் கோவிலின் விட்டங்களையும் அதில் இருந்த குமிழ்களையும் தடிகொண்டு தாக்கினர். கோழிகளையும் ,மஞ்சளையும், குங்குமத்தையும் கோவில் கூரை மீது வீசினர்.

பெருங்கூச்சல், வெறிவேகம், கண்மண் தெரியாத உக்கிரம் முல்லையின் கண்முன் சிவப்பு ஆடையணிந்த கரும்பழுப்பு உருவங்கள் மின்னல் போலத் தோன்றி மறைந்தன. ஒரு பேரலை போல கூட்டம் பெருங்கூச்சலுடன் ஆரவாரத்துடன் அவளைக் கடந்து சென்றது. நவீன் ஓடி ஓடி படமெடுத்துக் கொண்டிருந்தான். முல்லை இன்னும் ஒதுங்கிப் போய்விடலாம் என்று நினைத்தாள். கடந்து சென்று கொண்டிருந்த கூட்டத்தின் வசீகரம் கவர்ந்து இழுக்க கூச்சலும், உக்கிரமும் விலகிப் போகத் தூண்டின. அவள் பின்னால் நகர்ந்துமிருப்பாள். இன்னொரு பேரலை. முல்லை கூட்டத்தின் நடுவிலிருந்தாள். நவீன் என்று கத்தினாள். அவளது கூச்சல் சுற்றிலும் அலையலையாக எழுந்த பாடல்களில் அமுங்கிப் போய்விட்டது. அவளைச் சுற்றி முதுகுகள் உயர்ந்து உயர்ந்து தாழ்ந்தன. எல்லாப் புறங்களிலும் இருந்து விடாமல் கேட்ட சலங்கைகளின் ஒலியில் அவளுக்குத் தலை சுற்றியது. கத்திக் கொண்டும்,கையில் உள்ள குச்சிகளை கோவில் விட்டத்தில் அடித்துக் கொண்டும், வாட்களைத் தலைக்குமேல் ஆட்டிக் கொண்டும் பாய்ந்து சென்று கொண்டிருந்த ஆட்கள் தடுமாறி நின்ற முல்லையின் மீது மோதித்

தள்ளிக் கொண்டு ஓடினர். புழுதி படலம் படலமாக எழுந்து கண்களிலும், மூக்கிலும், வாயிலும் அப்பியது. கண்களைத் திறக்க முடியாமல் தடுமாறிய முல்லை தான் இலைபோல அலைப்புறுவதை உணர்ந்தாள். எப்படியாவது வெளியேறிவிட வேண்டுமென்று முயன்றாள். கையெட்டும் தூரத்தில்தான் மற்றவர்கள் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நவீனின் முகம் மறைந்து விட்டது. வெறித்த கண்களும், அவிழ்ந்து விரிந்த கூந்தலும் ரத்தம் வழியும் முகங்களுமாக உருவங்கள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. பாய்ந்தோடிக் கொண்டிருந்த கூட்டத்தை குறுக்கே கடக்க முயன்றவளை இடிக்காமல் விலகியோட வெளிச்சப்பாடுகளால் முடியவில்லை. இப்படியொருத்தி குறுக்கே வரும் உணர்வே அவர்களுக்கு இல்லை. பின்னிருந்து ஓடி வந்த ஒருவர் தோள்பட்டையில் மோத முல்லை தடுமாறிச் சுழன்று முன்னால் ஓடிக்கொண்டிருந்தவரின் கழுத்தைக் கட்டிக் கொள்ள முயன்றாள். குச்சியை வீசியாட்டிக் கொண்டிருந்த அவரது முழங்கை அவள் முகத்தில் இடிபோல மோதியது. முல்லை தடுமாறினாள். அவளுக்கு தலை சுற்றியது. மூக்கில் ரத்தம் வழிவது போலத் தோன்றியது. கண்களில் பொறி பறந்தது. வெளியில் கேட்டுக் கொண்டிருந்த பேரிரைச்சல் தலைக்குள் இடம் மாறிவிட்டது போலிருந்தது. இனிச் சமாளிக்க முடியாது. கீழே மட்டும் விழுந்துவிடக் கூடாது என்ற எண்ணம் தோன்றி கொண்டே இருக்கத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளப் போராடினாள். . விழுந்தால் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்தில் தன் கதி அவ்வளவுதான். நினைவுகள் துண்டுதுண்டாக ஒரு குழம்பலாக மாறிக் கொண்டிருந்தன. ஒருவினாடி சுழித்தோடும் ஆற்றில் மிதப்பது போலத் தோன்றியது. அடுத்த வினாடி மனது வெறுமையாகி ஸ்தம்பித்து நின்றது. ஏதேதோ சிக்கலான புரிந்துகொள்ள முடியாத நினைவுகள் அலையலையாகத் தாக்கின. இனம்புரியாத பீதி முல்லையை ஆட்கொண்டது. தான் நினைவிழப்பதை உணர்ந்தாள். இனி அவ்வளவுதான். . .

இரும்பை போன்ற உறுதியும், மலரைப் போன்ற மென்மையும் கொண்ட ஒரு கரம் முல்லையின் கரத்தைப் பற்றியது. இந்தப் பாய்ந்தோடும் மனித அலையில் தன் கையைக் கண்டுபிடித்துப்

பிடிப்பவர் யார்? இப்போது நினைவு தவறிவிடும் தான் தரையில் இழுபடப் போகிறோம் என்று தோன்றியது. ஆனால் நினைவு தப்பவில்லை. தானும் ஒரு அலைபோல கூட்டத்தோடு கூட்டமாக நகர்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். இல்லை மிதந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். தன்னைப் பிடித்த கரம் விலகவில்லை. அது தன்னை இறுகப்பற்றி இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது. அதனால்தான் தான் விழவில்லை. நினைவிழக்கவில்லை. இந்தக் கூட்டத்தில் சுயநினைவோடு தன் கையைப் பற்றி அழைத்துச் செல்வது யார் என்று பார்த்தாள். அந்த முகத்தை அரைகுறையாகத்தான் பார்க்க முடிந்தது. எங்கோ பார்த்த முகம். அந்தப் பெண் வாளை வீசியாடியது கூட தன்னை மறந்து அல்ல. மாறாக தன்மீது மோத வருபவர்களை மிரட்டி விலக்கத்தான் என்பது புரிந்தது.

அவள் தன்னை இழுத்துச் செல்லவில்லை. தன்னோடு இணைத்துக் கொண்டு மிதந்து செல்வது போலத்தோன்றியது. எவ்வளவு நேரம் எவ்வளவு தூரம் எதுவும் முல்லைக்கு நினைவில்லை. எல்லையற்ற பரந்த வெளியில் மனிதப் பேரலையோடு தானும் ஒரு இலையாக அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருப்பதாக, முடிவே இல்லாமல் மிதந்து கொண்டே இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இது இரவா பகலா, இது எந்த ஊர், என்ன மொழி, தான் யார், எதற்கு இங்கு வந்திருக்கிறோம் எதுவும் அவளுக்கு நினைவில்லை. நவீனை, தன்னை, அப்பாவை, அம்மாவை, தங்கையைக் கூட மறந்தாள் அவள். தன்மீது அபிஷேகமாகப் பொழிந்த மஞ்சளும், குங்குமமும் மனதில் ஒட்டவேயில்லை. அவள் நினைவிலிருந்தது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். புகாரில் கனவில் தோன்றினவே அந்த சோகம் ததும்பும் கண்கள், அவற்றை இப்போது முல்லை இங்கே கண்டாள். இல்லை உடலின் ஒவ்வொரு அணுவைக் கொண்டும் உணர்ந்தாள். அவையேதான். அந்த கன்னங்கரிய விழிகள் வானத்தையும், பூமியையும் நிறைத்து நிற்பது போலத் தோன்றியது. தானும் மக்களோடு மக்களாக கத்திக் கொண்டிருப்பதையும், கைகளை வீசியாடுவதையும் உணர்ந்தாள். தொண்டை கட்டி குரல் கரகரப்பாகிவிட்டது தெரிந்தது. இவ்வளவு நேரமாகவா கத்திக் கொண்டிருக்கிறோம்?

முல்லைக்கு சட்டென்று சுயநினைவு வந்தது. தான் கூட்டத்திற்கு

வெளியே நின்று கொண்டிருப்பது தெரிந்தது. சற்று தொலைவில் நவீன் தலையை நீட்டி இன்னும் ஓடிக்கொண்டிருந்த கூட்டத்தில் அவளைத் தேடிக் கொண்டிருந்தான். தன் கரத்தைப் பிடித்திருந்த கரம் மெல்ல விலகுவதை உணர்ந்தாள். யார் அவள்? செவ்வாடை அணிந்திருந்த அவளது கண்களில் கனவு இல்லை. வெறித்த பார்வை இல்லை. கன்னங்கரிய அந்த விழிகள் அவளைப் பட்டுப் போல வருடின. பேச வேண்டியதைப் பேசிவிட்டு, கேட்க வேண்டியதைக் கேட்டு விட்டு, சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு கணநேரத்தில் மாயமாக மறைந்தன அந்த விழிகள்.

முல்லை மெதுவாக நவீனை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

மறுநாள் காலை லேசான மேக மூட்டம் இருந்ததால் வெயில் அவ்வளவாக உறைக்கவில்லை. முல்லையும், நவீனும் வரிசையாகத் தென்னை மரங்கள் நிறைந்த ஆளரவமற்ற குறுகலான கடற்கரையில் உட்கார்ந்திருந்தார்கள்.

ஏறக்குறைய பூம்புகாரிலும் இதே போன்ற மேகமூட்டம் தான் இருந்தது. எல்லையற்றதாக நீண்ட ஒரு வாரம்.

“நவீன் “ என்றழைத்தாள் முல்லை. அவள் தொண்டை இன்னும் சரியாகவில்லை.

“என்ன?” நவீன் முல்லையைப் பார்த்து முறுவலித்தான்.

“சாந்தலிங்கன் மதுரையில் ஒன்று சொன்னாரே நினைவிருக்கிறதா? கண்ணகி இந்த மக்களுக்கு ஏன் வேண்டும் என்று கண்டுபிடி என்றார்”

“ஆமாம். . . “

“புகாரின் மீனவர்களிலிருந்து இந்த கொடுங்கலூர் வெளிச்சப்பாடுகள் வரை எல்லோருமே சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள். நாகரீக சமூகத்தின் பெண்ணடிமைத்தனத்தையும், விதவைத்தன்மையையும் அறியாதவர்கள். இவர்களை மரபுரீதியிலான

மதத்தையும், ஆணாதிக்கத்தையும் ஏற்றுக் கொள்ள வைக்க இவர்களிடம் கண்ணகி கதையை மற்றவர்கள் பரப்பியிருக்க வேண்டும். கண்ணகி மதுரையை எரிப்பதற்கு முன்பே அவளை எயினர்கள் வணங்கிப் பாராட்டியதாக சிலப்பதிகாரத்தில் வருகிறது. ஒரு மீனவப் பெண்ணோ, பழங்குடி மகளோ, வெளிச்சப்பாடோ தன் கணவன் கோவலன் போல இன்னொருத்தி பின்னால் சென்றால் கையில் கிடைத்ததை எடுத்து அடிப்பாள். ஆனால் அவர்கள் கண்ணகியிடமிருந்து கற்றுக் கொண்டது வேறு. . . அநீதிகளுக்கு பழிவாங்கும் உக்கிர தேவதையின் வடிவம் கண்ணகி. காலங்காலமாக தங்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு விடிவாக, நம்பிக்கையாக அவர்கள் இவளைப் பார்க்கிறார்கள். நினைவில் வைத்திருக்கிறார்கள். கண்ணகி பலருக்கு பலவிதமாகப் பயன்பட்டு வந்திருக்கிறாள். ஆனால் நமக்குத் தேவை இந்த மக்களின் நம்பிக்கைதான். . . “ சொல்லிவிட்டு முல்லை கண்கூசவைக்கும் ஒளியில் வெளிறித் தெரிந்த கடலைப் பார்த்தாள். நவீனின் விழிகளும் தொடுவானத்தில் நிலைகுத்தியிருந்தன.

“வங்காள விரிகுடாவில் தொடங்கி அரபிக் கடலில் நமது ஆவணப்படத்தை முடிப்பது நன்றாகத்தான் இருக்கும். ஆனால் நமக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை.

ஜெய்ப்பூருக்கும், காங்கேயத்துக்கும் கண்ணகி நம்மை அழைத்துச் செல்வாள், எந்த மாணிக்கப் பரல்களைக் கொண்டு அவள் பாண்டியனைப் பழிவாங்கினாளோ, எந்த மாணிக்கப் பரல்களுக்காக தமிழகம் ரத்தக் களரியானதோ, எந்த மாணிக்கப் பரல்களுக்காக ஜெய்ப்பூர், குஜராத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்வை இழந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களை எல்லாம் தேடிச்செல்ல வேண்டும். அதே கற்களுக்காக நடத்தப்படும் சதிகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

ராஜஸ்தான் தொழிலாளர்களையும், காங்கேயம் விவசாயிகளையும், ஸ்ரீகுமாரையும், கண்ணனையும், முல்லையையும், நவீனையும் ,பழமையையும் புதுமையையும் இணைக்கும் புள்ளியாக இந்த ஆவணப்படம் இருக்க வேண்டும்... புகாரிலிருந்து கொடுங்கலூர் வரை லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் எதற்காக கண்ணகியை நினைவில்

வைத்திருக்கிறார்களோ அந்த நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். இருக்கும்....'

ஈரமாகிப் போன ஆடைகளில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டு அவர்கள் எழுந்தனர். சற்று தொலைவில் மணல் வெளியின் நடுவே கருப்பு ரிப்பனைப் போலத் தெரிந்த தார்ச்சாலையை நோக்கி நடக்கையில் முல்லை திரும்பிக் கடலைப் பார்த்தாள்.

புகாரில் தனிமை நிறைந்த ஒரு இரவில் நீ தேடி வந்தது என்ன என்று சோகம் ததும்பும் விழிகளால் கேட்ட அந்தப் பெண் தனக்குக் கையாட்டி விடையளிப்பது போலத் தொன்றியது.

விடையளிக்கிறாளா? அல்லது உடன் வருகிறேன் என்று உறுதியளிக்கிறாளா?

முல்லை தன்னையறியாமல் கையசைத்தாள்.

யார்....அவள்?

வேறு யார் காளியாக, கொற்றவையாக, அம்மனாக.... காலங்கள் கடந்து நிற்கும் அவள்தான்.